Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு :23-3-2015 Issued:23-3-2015

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

புதன்கிழமை, ஜூலை 30, 2014—தொகுதி 69—எண் 1

Wednesday, the 30th July 2014—Volume 69—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

11-359

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைக் குறிப்புகள்
தொகுதி 59 (எண் 1), நாள் 30–7–2014
பிழைத் திருத்தச் சீட்டு

வ. எண்	பக்க எண்	பிழை	திருத்தம்
1.	உள்ளடக்கம் (i) கடைசி வரி	மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 514–526	மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 514–518
2.	உள்ளடக்கம் (iii) 6–வது வரி	*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் 537, 540, 548–555, 589–592, 601, 603–606, 616–617, 620–624, 627–628, 641–644, 666–686	*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் 537, 540, 548, 550–555, 589–592, 601, 603–606, 616–617, 620–624, 627–628, 641–644, 666–686
3.	உள்ளடக்கம் (iv) 7–வது வரி	*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி 572, 615–616	*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி 562, 572, 615–616
4.	உள்ளடக்கம் (iv) 12–வது வரி	*திரு. ந. நஞ்சப்பன் 595–607	*திரு. ந. நஞ்சப்பன் 595–608
5.	உள்ளடக்கம் (v) 6–வது வரி	திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 540, 543, 547, 615	திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 540, 543, 547, 615–622

6.	உள்ளடக்கம் (v) 7–வது வரி	திரு. அ. அஸ்லம் பாஷா 538, 542, 543–546	திரு. அ. அஸ்லம் பாஷா 538, 542–543, 545–546
7.	உள்ளடக்கம் (v) 9–வது வரி	*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 535–536, 634	*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 634
8.	பக்கம் 548 அடிக்குறிப்பு	@705 முதல் 754 வரையிலான	@695 முதல் 744 வரையிலான
9.	பக்கம் 549 அடிக்குறிப்பு	@755 முதல் 816 வரையிலான	@ 745 முதல் 806 வரையிலான
10.	பக்கம் 695 2–வது வரி	(557 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)	(548 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)
11.	பக்கம் 726 2–வது வரி	(557 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)	(548 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)
12.	பக்கம் 745 2–வது வரி	(558 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)	(549 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

30-7-2014

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	vii-xii
Governor and Council of Ministers	xiii-xvii
பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xix-xxii
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxiii-xxxiii
1. வினாக்கள்-விடைகள்—	
(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்	1-49
(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 2 முதல் 7 வரை)	50-510
2. சிறப்புக் கவன ஈர்ப்பு—	
நெல்லுக்கான ஊக்கத் தொகையை மாநில அரசு வழங்குதல் தொடர்பான மத்திய அரசின் சுற்றறிக்கை	511-518
*திரு. சி.எச். சேகர்	511-512
*திரு. க. பாலகிருஷ்ணன்	512
திரு. சு. குணசேகரன்	512-513
திரு. என்.ஆர். ரெங்கராஜன்	513
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா	513
மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா	514-526

பக்கங்கள்

3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்—

(அ) பள்ளிக் கல்வித் துறையில் ஆசிரியர் நியமனம், கட்டட வசதி மற்றும் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் புதிய திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 518-[illegible]

(ஆ) மாவட்ட விளையாட்டு வளாகங்களைப் புனரமைத்தல், முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது உருவாக்குதல், விளையாட்டு மற்றும் உடற்கல்வி பல்கலைக்கழகத்திற்குக் கட்டட வசதி, மாநில இளைஞர் கொள்கை வகுத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை 523-526

4. பள்ளிக் கல்வித் துறையில் ஆசிரியர் நியமனம் மற்றும் புதிய திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி—

திரு. கே. கோபிநாத் 526-527

5. கவன ஈர்ப்பு—

அரூர், பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டுதல் 527-533

திரு. ப. டில்லி பாபு 527, 529-530

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் 528-533

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா 532

6. தகவல் கோரல்—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 533-535

7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—

தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2014 535, 536

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 535-536

பக்கங்கள்

8. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 10 - வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 11 - முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) — 536-690

(இ) கோரிக்கை எண் 9 - பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் — 537, 540, 548-555, 589-592, 601,603-606, 616-617, 620-624, 627-628, 641-644, 666-686

*மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம் — 544, 549 556-558, 560,564, 580-584, 586-587, 599-600, 618-619, 625-626, 628 630, 636, 639-640, 645-666

பக்கங்கள்

8. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 10 - வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 11 - முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) — 536-690

(இ) கோரிக்கை எண் 9 - பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

திரு. ஏ.கே.டி. ராஜா — 549-567

*மாண்புமிகு திருமதி பா. வளர்மதி — 572, 615-616

திரு. சோழன் சித. பழனிச்சாமி — 567-579

*திரு. க. பீம்ராவ் — 579-594

செல்வி கே. பாலபாரதி — 594

திரு. என்.ஆர். ரெங்கராஜன் — 594

*திரு. ந. நஞ்சப்பன் — 595-607

*மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் — 597-598

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார் — 607-608, 633-634

*திரு. ப. தன்சிங் — 609-615

பக்கங்கள்

8. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 10 - வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 11 - முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(இ) கோரிக்கை எண் 9 - பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்

தொடர்ச்சி

திரு. ஜே.ஜி. பிரின்ஸ் 540, 543, 547, 615

திரு. அ. அஸ்லம் பாஷா 538, 542, 543-546 622-633

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 629

*மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி 535-536, 634

*திரு. பி.வி. கதிரவன் 538, 541, 544-545, 634-645

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி 637

*திரு. அ. சவுந்தரராசன் 686

திரு. சு. குணசேகரன் 687

திரு. அ. கணேஷ்குமார் 687

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 547,687-688

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 691-694

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆளுநரும் அமைச்சரவையும்
ஆளுநர் – முனைவர் கோ. ரோசய்யா
அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் ..	மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:
	பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல் மற்றும் உள் துறை
2. நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் ..	மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்:
	நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள், கடவுச் சீட்டுகள், பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்
3. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் ..	மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:
	மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு
4. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ..	மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:
	வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்
5. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் ..	மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:
	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்

6. ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. ப. மோகன்:**
		குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள், தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு
7. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்	..	**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**
		மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்
8. உயர் கல்வித் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:**
		தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்
9.கூட்டுறவுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:**
		கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்
10.உணவுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**
		உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

11. தொழில் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. பி. தங்கமணி: தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்
12. போக்குவரத்துத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்
13. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி
14. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்
15. வேளாண்மைத் துறை அமைச்சர்	..	மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

16. நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் இலஞ்ச ஒழிப்பு

17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:

கால்நடை பராமரிப்பு

18. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:

கைத்தறி மற்றும் துணிநூல்

19. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

20. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்:

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

21. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

22. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

23. மீன் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:

மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

24. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்:

தகவல் தொழில்நுட்பம்

25. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:

வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு

26. செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் மற்றும் தேர்தல் அறிக்கை செயலாக்கம்

27. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:

பள்ளிக் கல்வி, தொல்பொருளியல், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு

28. வனத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:

வனம்

29. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ்.டி. வெங்கடாச்சலம்:

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு

30. கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி:

கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராம தானம்

31. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், வக்ஃபு உள்ளிட்ட சிறுபான்மையினர் நலன்

32. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR – Dr. K. ROSAIAH

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister	..	The Hon. Selvi J Jayalalithaa:
		Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home
2. Minister for Finance and Public Works	..	The Hon. Thiru O. Panneerselvam:
		Finance, Planning, Legislative Assembly, Elections and Passports, Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works
3. Minister for Electricity & Prohibition and Excise	..	The Hon. Thiru Natham R. Viswanathan:
		Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses
4. Minister for Housing and Urban Development	..	The Hon. Thiru R. Vaithilingam:
		Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority
5. Minister for Highways & Minor Ports	..	The Hon. Thiru Edappadi K. Palaniswami:
		Highways & Minor Ports

6. Minister for Rural Industries and Labour	..	**The Hon. Thiru P. Mohan:** Rural Industries including Cottage Industries and Small Industries, Labour, Population, Employment and Training, Newsprint Control, Census and Urban & Rural Employment
7. Minister for Social Welfare and Nutritious Noon Meal Programme	..	**The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms and Nutritious Noon Meal Programme
8. Minister for Higher Education	..	**The Hon. Thiru P. Palaniappan:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology
9. Minister for Co-operation	..	**The Hon. Thiru Sellur K. Raju:** Co-operation, Statistics and Ex-Servicemen Welfare
10. Minister for Food	..	**The Hon. Thiru R. Kamaraj:** Food, Civil Supplies, Consumer Protection and Price Control
11. Minister for Industries	..	**The Hon. Thiru P. Thangamani:** Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives

12. Minister for Transport	..	**The Hon. Thiru V. Senthil Balaji:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act
13. Minister for Milk and Dairy Development	..	**The Hon. Thiru V. Moorthy:** Milk and Dairy Development
14. Minister for Commercial Taxes and Registration	..	**The Hon. Thiru M.C. Sampath:** Commercial Taxes & Registration and Stamp Act
15. Minister for Agriculture	..	**The Hon. Thiru Agri S.S. Krishnamoorthy:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development
16. Minister for Municipal Administration, Rural Development, Law, Courts and Prisons	..	**The Hon. Thiru S.P. Velumani:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Laws, Courts and Prisons, Personnel and Administrative Reforms and Prevention of Corruption
17. Minister for Animal Husbandry	..	**The Hon. Thiru T.K.M. Chinnayya:** Animal Husbandry
18. Minister for Handlooms & Textiles	..	**The Hon. Tmt. S. Gokula Indira:** Handlooms & Textiles

19. Minister for Sports and Youth Welfare	..	**The Hon. Dr. S. Sundararaj:** Youth Welfare and Sports Development Department
20. Minister for Hindu Religious and Charitable Endowments	..	**The Hon. Thiru P. Chendur Pandian:** Hindu Religious and Charitable Endowments
21. Minister for Tourism	..	**The Hon. Thiru S.P. Shunmuganathan:** Tourism, Tourism Development Corporation
22. Minister for Adi Dravidar & Tribal Welfare	..	**The Hon. Thiru N. Subramanian:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour
23. Minister for Fisheries	..	**The Hon. Thiru K.A. Jayapal:** Fisheries and Fisheries Development Corporation
24. Minister for Information Technology	..	**The Hon. Thiru N. Subramanian:** Information Technology
25. Minister for Revenue	..	**The Hon. Thiru R.B. Udhaya Kumar:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies

26. Minister for Information and Special Programmes Implementation	..	**The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press and Implementation of Special Programmes and Implementation of the Election Manifesto
27. Minister for School Education	..	**The Hon. Thiru K.C. Veeramani:** School Education, Archaeology, Tamil Official Language and Tamil Culture
28. Minister for Forests	..	**The Hon. Thiru M.S.M. Anandan:** Forests
29. Minister for Environment	..	**The Hon. Thiru N.D. Venkatachalam:** Environment and Pollution Control
30. Minister for Khadi and Village Industries	..	**The Hon. Thiru T.P. Poonachi:** Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan
31. Minister for Backward Classes and Minorities Welfare	..	**The Hon. Thiru S. Abdul Rahim:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees and Evacuees and Minorities Welfare including Wakf
32. Minister for Health	..	**The Hon. Dr. C. Vijayabaskar:** Health, Medical Education and Family Welfare

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. ப. தனபால்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

மாற்றுத் தலைவர்கள்*

திரு. அ. பாப்பா சுந்தரம்
திரு. ஓ.கே. சின்னராஜ்
திரு. கே.பி. அன்பழகன்
திரு. ஆர். சின்னசாமி
திரு. பி.ஜி. நாராயணன்
திரு. சு. குணசேகரன்

செயலாளர்

திரு. அ.மு.பி. ஜமாலுதின்

---

* 31—1—2014 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. கூடுதல் செயலாளர்
திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. நா. வீரராகவன், எம்.ஏ., எம்.பி.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ.	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர்
திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல்.	.. இணைச் செயலாளர்
திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. ம.சு. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. தி.ஜெ. ஸ்ரீதர், பி.எஸ்சி.	.. குழு அலுவலர்
திரு. வே. ரவிசங்கர், எம்.ஏ., பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. கி. சீனிவாசன், எம்.ஏ., பி.எஸ்.சி., பி.ஜி.எல்.,	.. பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர்
திரு. து. கணேசன், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. இரா. சந்திரசேகரன், பிகாம்., பி.ஜி.எல்., டி.சி.பி.	.. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர்
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. அ. வீரராஜேந்திரன், எம்.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி க. செந்தாமரை, பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. இராம.சோ. கிரிதரன், பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி சி. சகுந்தலா, பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.ஏ.	.. துணைச் செயலாளர்
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. மா. கோபாலகிருஷ்ணன், பி.ஏ.	.. குழு அலுவலர்
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்
திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. வெ. கலைராஜன், எம்.ஏ., பி.எட்., பி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. மு. ஆதிசேஷன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	.. சார்புச் செயலாளர்

திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல்.. .. தலைமை நிருபர்

திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்.சி., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திருமதி சொ. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி., .. தலைமை நிருபர்

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. .. கலசப்பாக்கம்
2. அசோக், திரு. எம்.கே. .. வேளச்சேரி
3. அண்ணாதுரை, திரு. இரா. .. மதுரை தெற்கு
4. அப்துல் ரஹீம், திரு. எஸ். .. ஆவடி
5. அரங்கநாதன், திரு. ஆக. .. கீழ்பெண்ணாத்தூர்
6. அருண் சுப்பிரமணியன், திரு. மு. .. திருத்தணி
7. அருண் பாண்டியன், திரு. செ. .. பேராவூரணி
8. அருள்செல்வன், திரு. ஆர். .. மயிலாடுதுறை
9. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், திரு. .. சேலம் வடக்கு
10. அழகுவேலு, திருமதி க. .. கள்ளக்குறிச்சி (செ.வ.)
11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. .. திருச்செந்தூர்
12. அன்பழகன், திரு. க. .. கும்பகோணம்
13. அன்பழகன், திரு. கே.பி. .. பாலக்கோடு
14. அன்பழகன், திரு. ஜெ. .. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி
15. அஸ்லம் பாஷா, திரு. அ. .. ஆம்பூர்
16. ஆறுக்குட்டி, திரு. வி.சி. .. கவுண்டம்பாளையம்
17. ஆறுமுகம், திரு. எம். .. வால்பாறை (செ.வ.)
18. ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம். .. திருப்பூர் வடக்கு
19. இந்திராகாந்தி, திருமதி த. .. துறையூர் (செ.வ.)

20. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்
21. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி
22. இராமலிங்கம், திரு. கே.வி. .. ஈரோடு மேற்கு
23. இராஜி, திரு. வி.எஸ். .. செய்யூர் (செ.வ.)
24. இராஜேந்திரன், திரு. இரா. .. குறிஞ்சிப்பாடி
25. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
26. உதயகுமார், திரு. ஆர்.பி. .. சாத்தூர்
27. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
28. எடப்பாடி கே. பழனிசாமி, திரு. .. எடப்பாடி
29. கடம்பூர் ராஜூ, திரு. .. கோவில்பட்டி
30. கணிதா சம்பத், திருமதி எஸ். .. மதுராந்தகம் (செ.வ.)
31. கணேசன், திரு. பா. .. உத்திரமேரூர்
32. கணேஷ்குமார், திரு. அ. .. செஞ்சி
33. சுதிரவன், திரு. பி.வி. .. உசிலம்பட்டி
34. சந்தன், திரு. கே.பி. .. சோழிங்கநல்லூர்
35. கருணாநிதி, திரு. மு. .. திருவாரூர்
36. கருப்பசாமி, திரு. ஏ.ஏ. .. அவினாசி (செ.வ.)
37. கருப்பையா, திரு. பழ. .. துறைமுகம்
38. கருப்பையா, திரு. மு.வீ. .. சோழவந்தான் (செ.வ.)
39. கலை அரசு, திரு. ம. .. அணைக்கட்டு
40. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்
41. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்
42. காமராஜ், திரு. என்.வி. .. வேதாரண்யம்

43. காமராஜ், திரு. செ. . திருஷ்ணராயபுரம் (செ.வ.)

44. கார்த்திக் தொண்டைமான், திரு. . புதுக்கோட்டை

45. கிட்டுசாமி, திரு. ஆர்.என். . மொடக்குறிச்சி

46. கிருஷ்ணசாமி, டாக்டர் க. . ஓட்டப்பிடாரம் (செ.வ.)

47. கிருஷ்ணமூர்த்தி, திரு. கொ.ச. . பர்கூர்

48. கிருஷ்ணன், திரு. கு.ப. . ஆலங்குடி

49. கிருஷ்ணன், திரு. சி. . ஓமலூர்

50. குணசீலன், திரு. வே. . வந்தவாசி (செ.வ.)

51. குணசேகரன், திரு. சு. . சிவகங்கை

52. குணசேகரன், திரு. ம. . மானாமதுரை (செ.வ.)

53. குப்பன், திரு. கே. . திருவொற்றியூர்

54. குமரகுரு, திரு. இரா. . உளுந்தூர்பேட்டை

55. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. . ஜெயங்கொண்டம்

56. கோகுல இந்திரா, திருமதி எஸ். . அண்ணா நகர்

57. கோபால்சாமி, திரு. க. . ராஜபாளையம்

58. கோபிநாத், திரு. கே. . ஓசூர்

59. சக்கரபாணி, திரு. அர. . ஒட்டன்சத்திரம்

60. சக்தி, திருமதி ம. . சீர்காழி (செ.வ.)

61. சண்முகநாதன், திரு. எஸ்.பி. . ஸ்ரீவைகுண்டம்

62. சண்முகம், திரு. சி.வி. . விழுப்புரம்

63. சண்முகவேலு, திரு. சி. . மடத்துக்குளம்

64. சந்திரகுமார், திரு. வி.சி. . ஈரோடு கிழக்கு

65. சந்திரசேகர், திரு. ஆர். . மணப்பாறை

66. சம்பத், திரு. எம்.சி. - கடலூர்

67. சம்பத்குமார், திரு. கோவி. - வாணியம்பாடி

68. சம்பத்குமார், திரு. ப. - திருச்செங்கோடு

69. சரத்குமார், திரு. ரா. - தென்காசி

70. சரோஜா, திருமதி பெ. - ஏற்காடு (ஆவா.)

71. சவுந்தரராசன், திரு. அ. - பெரம்பூர்

72. சாந்தி, திருமதி ஆர். - சேந்தமங்கலம் (ஆவா.)

73. சாமி, திரு. ஆர். - மேலூர்

74. சிவக்கொழுந்து, திரு. ப. - பண்ருட்டி

75. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - குன்னம்

76. சிவசுப்பிரமணியன், திரு. எம்.பி.எஸ். - நெய்வேலி

77. சிவபதி, திரு. என்.ஆர். - முசிறி

78. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்

79. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்

80. சின்னையா, திரு. டி.கே.எம். - தாம்பரம்

81. சீனிவாசன், திரு. ஆர். - ஆற்காடு

82. சுந்தரம், திரு. பி.எல். - பவானிசாகர் (செ.வ.)

83. சுந்தரராஜ், டாக்டர் ச. - பரமக்குடி (செ.வ.)

84. சுந்தர்ராஜன், திரு. ஆர். - மதுரை மத்தி

85. சுபா, திருமதி ர. - கெங்கவல்லி (செ.வ.)

86. சுப்பிரமணியன், திரு. ந. - செய்யாறு

87. சுப்பையா, திரு. இ. - அம்பாசமுத்திரம்

88. சுப்ரமணியன், திரு. ந. - கந்தர்வகோட்டை (செ.வ.)

89. சுரேஷ்குமார், திரு. டி. .. செங்கம் (செ.வ.)

90. செங்குட்டுவன், திரு. டி. .. வேப்பனஹள்ளி

91. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்

92. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை

93. செந்தில்குமார், திரு. எஸ். .. திருவெறும்பூர்

94. செந்தில்பாலாஜி, திரு. வி. .. கரூர்

95. செந்தூர் பாண்டியன், திரு. பூ. .. கடையநல்லூர்

96. செல்லப்பாண்டியன், திரு. சி.த. .. தூத்துக்குடி

97. செல்லூர் கா. ராஜு, திரு. .. மதுரை மேற்கு

98. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

99. செல்வராஜு, திரு. எம்.கே. .. சேலம் தெற்கு

100. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

101. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (செ.வ.)

102. சேகர், திரு. சி.எச். .. கும்மிடிப்பூண்டி

103. சோமசுந்தரம், திரு. வி. .. காஞ்சிபுரம்

104. சோழன் சித. பழனிச்சாமி, திரு. .. காரைக்குடி

105. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி

106. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)

107. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்

108. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி

109. தங்கவேலன், திரு. சுப. .. திருவாடனை

110. தங்கவேல், திரு. கே. .. திருப்பூர் தெற்கு

111. தமிழரசன், திரு. கா. .. மதுரை கிழக்கு

112. தமிழரசன், முனைவர் செ.கு. .. கிழ்வைத்தினான்குப்பம் (செ.வ.)
113. தமிழழகன், திரு. க. .. திட்டக்குடி (செ.வ.)
114. தமிழ்ச்செல்வன், திரு. இரா. .. பெரம்பலூர் (செ.வ.)
115. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி
116. தனபால், திரு. ப. .. ராசிபுரம் (செ.வ.)
117. தனியரசு, திரு. உ. .. பரமத்தி வேலூர்
118. தன்சிங், திரு. ப. .. பல்லாவரம்
119. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
120. திராவிடமணி, திரு. மு. .. கூடலூர் (செ.வ.)
121. தினகரன், திரு. க. .. சூலூர்
122. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்
123. துரைசாமி என்கிற சேலஞ்சர் துரை, திரு. ரா. .. கோயம்புத்தூர் தெற்கு
124. துரைமுருகன், திரு. .. காட்பாடி
125. துரையப்பா, டாக்டர் ச. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
126. நஞ்சப்பன், திரு. ந. .. பெண்ணாகரம்
127. நடராஜ், திரு. என்.எஸ்.என். .. காங்கேயம்
128. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்
129. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
130. நல்லதம்பி, திரு. கு. .. எழும்பூர் (செ.வ.)
131. நாகராஜன், திரு. கே.பி. .. மயிலம்
132. நாகைமாலி, திரு. வீ.பி. .. கீழ்வேளூர் (செ.வ.)
133. நாஞ்சில் முருகேசன், திரு. அ. .. நாகர்கோவில்
134. நாராயணன், திரு. ஆ. .. நாங்குநேரி

135. நாராயணன், திரு. பி.ஜி. - பவானி

136. நீலகண்டன், திரு. வ. - திரு.வி.க. நகர் (செ.வ.)

137. பச்சைமால், திரு. கே.டி. - கன்னியாகுமரி

138. பரஞ்ஜோதி, திரு. மு. - திருச்சிராப்பள்ளி மேற்கு

139. பரமசிவம், திரு. கே.பி. - பல்லடம்

140. பவுன்ராஜ், திரு. சு. - பூம்புகார்

141. பழனிசாமி, திரு. கே.சி. - அரவக்குறிச்சி

142. பழனிச்சாமி, திரு. ச. - வேடசந்தூர்

143. பழனியப்பன், திரு. பி. - பாப்பிரெட்டிப்பட்டி

144. பன்னீர்செல்வம், திரு. ஓ. - போடிநாயக்கனூர்

145. பாண்டியராஜன், திரு. க. - விருதுநகர்

146. பாபு முருகவேல், திரு. ர.ம. - ஆரணி

147. பாப்பா சுந்தரம், திரு. அ. - குளித்தலை

148. பார்த்தசாரதி, திரு. ப. - விருகம்பாக்கம்

149. பார்த்திபன், திரு. எஸ்.ஆர். - மேட்டூர்

150. பாலகிருஷ்ணன், திரு. க. - சிதம்பரம்

151. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்

152. பாஸ்கர், திரு. அ. - தருமபுரி

153. பாஸ்கர், திரு. கே.பி.பி. - நாமக்கல்

154. பிரபாகர், திரு. ஜே.சி.டி. - வில்லிவாக்கம்

155. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. - குளச்சல்

156. பீம்ராவ், திரு. க. - மதுரவாயல்

157. புத்திசந்திரன், திரு. - உதகமண்டலம்

158. புஷ்ப லீலா ஆல்பன், டாக்டர் (திருமதி) .. பத்மநாபபுரம்

159. பூனாட்சி, திரு. தோ.பெ. .. மணச்சநல்லூர்

160. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்

161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

162. பெருமாள், திரு. இரா. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

163. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. உடுமலைப்பேட்டை

164. பொன்னுசாமி, திரு. கே. .. தாராபுரம் (செ.வ.)

165. பொன்னுப்பாண்டி, திரு. வெ. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.)

166. போஸ், திரு. ஏ.கே. .. மதுரை வடக்கு

167. மணிமாறன், திரு. இரா. .. பூந்தமல்லி (செ.வ.)

168. மணிவேல், திரு. துரை. .. அரியலூர்

169. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் வடக்கு

170. மனோகரன், திரு. ஆர். .. திருச்சிராப்பள்ளி கிழக்கு

171. மனோகரன், திரு. க. .. திருப்போரூர்

172. மனோகர், திரு. பி.ஆர். .. சோளிங்கர்

173. மனோரஞ்சிதம், திருமதி .. ஊத்தங்கரை (செ.வ.)

174. மாதேஸ்வரன், திரு. சு. .. ஆத்தூர் (செ.வ.)

175. மார்க்கண்டேயன், திரு. கு.வ. .. விளாத்திகுளம்

176. முத்துகருப்பண்ணசாமி, திரு. எம்.கே. .. பொள்ளாச்சி

177. முத்துக்குமார், திரு. வி. .. விருத்தாசலம்

178. முத்துசெல்வி, திருமதி ச. .. சங்கரன்கோவில் (செ.வ.)

179. முத்துராமலிங்கம், திரு. ம். - திருமங்கலம்

180. முருகன், திரு. மு. - முதுகுளத்தூர்

181. முருகுமாறன், திரு. என். - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

182. முருகேசன், திரு. து. - செங்கல்பட்டு

183. முனுசாமி, திரு. கே.பி. - கிருஷ்ணகிரி

184. முஹம்மத்ஜான், திரு. அ. - இராணிப்பேட்டை

185. மூர்த்தி, திரு. வி. - மாதவரம்

186. மைக்கேல் ராயப்பன், திரு. சி. - ராதாபுரம்

187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை

188. மோகன், திரு. ப. - சங்கராபுரம்

189. ரமணா, திரு. பி.வி. - திருவள்ளூர்

190. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - அந்தியூர்

191. ரமேஷ், திரு. கா.கோ. - திருப்பத்தூர்

192. ரவி, திரு. சு. - அரக்கோணம் (செ.வ.)

193. ராமசாமி, திரு. ஆ. - நிலக்கோட்டை (செ.வ.)

194. ராமச்சந்திரன், திரு. கா. - குன்னூர்

195. ராமமூர்த்தி, திரு. ஆர். - விக்கிரவாண்டி

196. ராஜநாயகம், திரு. மு. - அறந்தாங்கி

197. ராஜலட்சுமி, திருமதி ஆர். - மயிலாப்பூர்

198. ராஜா, திரு. ஏ.கே.டி. - திருப்பரங்குன்றம்

199. ராஜா, திரு. டி.ஆர்.பி. - மன்னார்குடி

200. ராஜா, திரு. பொன். - பொன்னேரி (செ.வ.)

201. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. .. சிவகாசி

202. ரெங்கசாமி, திரு. எம். .. தஞ்சாவூர்

203. ரெங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை

204. ரெத்தினசாமி, திரு. மு. .. திருவையாறு

205. லாசர், திரு. ஏ. .. பெரியகுளம் (செ.வ.)

206. லிங்கமுத்து, திரு. கு. .. குடியாத்தம் (செ.வ.)

207. வளர்மதி, திருமதி பா. .. ஆயிரம் விளக்கு

208. விஜயகாந்த், திரு. .. ரிஷிவந்தியம்

209. விஜயதரணி, திருமதி எஸ். .. விளவங்கோடு

210. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை

211. விஜயலட்சுமி பழனிசாமி, திருமதி ப. .. சங்ரி

212. விஜய், டாக்டர் வி.எஸ். .. வேலூர்

213. வீரமணி, திரு. கே.சி. .. ஜோலார்பேட்டை

214. வெங்கடாச்சலம், திரு. என்.டி. .. பெருந்துறை

215. வெங்கடாஜலம், திரு. கோ. .. சேலம் மேற்கு

216. வெங்கடேசன், திரு. எல். .. திருக்கோவிலூர்

217. வெங்கட்ராமன், திரு. வி.என்.பி. .. ஆலந்தூர்

218. வெற்றிவேல், திரு. பு. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

219. வேணுகோபாலு, திரு. கேஎஸ்என். .. பழனி

220. வேதாச்சலம், திரு. எஸ். .. அம்பத்தூர்

221. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை

222. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்

223. வைகைச்செல்வன், முனைவர் .. அருப்புக்கோட்டை

224. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு

225. வைரமுத்து, திரு. பி.கே. .. திருமயம்

226. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. இராமநாதபுரம்

227. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்

228. ஜானகிராமன், திரு. ஐ. .. வானூர் (செ.வ.)

229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

230. ஜெயசுதா, திருமதி எல். .. போளூர்

231. ஜெயபால், திரு. கே.ஏ. .. நாகப்பட்டினம்

232. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஸ்ரீரங்கம்

233. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்

234. ஹரிதாஸ், டாக்டர் த. .. திண்டிவனம் (செ.வ.)

235. நான்சி ஆன் சிந்தியா பிராண்சிஸ், டாக்டர் (திருமதி) .. நியமனம்

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஏ.எல். சோமையாஜி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஐய, ஆடி 14, திருவள்ளுவர் ஆண்டு–2045

2014 ஜூலை 30, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை"

பொருள் வரும் வழிகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளத்தை ஏற்படுத்தி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவரே செயல்புரிய ஏற்றவராவார்.

1. வினாக்கள்–விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 270, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆக. அரங்கநாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

270—

தரம் உயர்த்துதல்

*32387—திரு. ஆக. அரங்கநாதன்:

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கீழ்பெண்ணாத்தூரிலுள்ள 33 K.V. துணை

[2014 ஜூலை 30

மின் நிலையத்தை 110 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கீழ்பெண்ணாத்தூருக்கு அங்குள்ள 33/11 K.V. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது. இத்துணை மின் நிலையத்தில் 8 M.V.A. திறன் கொண்ட இரண்டு மின்மாற்றிகள் இயங்கி வருகின்றன. பெருகிவரும் மின்பளுவைக் கருத்தில் கொண்டு, கீழ்பெண்ணாத்தூர் 33/11 K.V. துணை மின் நிலையத்தை 110/33/11 K.V. திறன் கொண்ட துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த 12-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு, தற்பொழுது துணை மின் நிலையத்தில் இருக்கின்ற 3.867 ஏக்கர் நிலமே போதுமானதாகும். நிருவாக அனுமதி பெறப்பட்டவுடன், கீழ்பெண்ணாத்தூர் 33/11 K.V. திறன் கொண்ட துணை மின் நிலையத்தை 110/33/11 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தும் பணிகள் துவங்கப்பட்டு, அடுத்த நிதியாண்டில் பணிகள் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன் அவர்கள்.

திரு. ஆ.க. அரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வெற்றிமேல் வெற்றி வந்து எங்களைச் சேரும்; அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் அம்மா உங்களையே சாரும்'. (மேசையைத் தட்டும் ஒலி)

2011-ல் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் வரலாறு காணாத வெற்றி; அதன் தொடர்ச்சியாக உள்ளாட்சி மன்றத் தேர்தலில் சரித்திர வெற்றி; நடந்து முடிந்த இடைத் தேர்தல் அனைத்திலும் வெற்றி; கூட்டுறவுச் சங்கத் தேர்தலிலும் மாபெரும் வெற்றி; 2014-ல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இமாலய வெற்றி;

2014 ஜூலை 30]

(மேசையைத் தட்டும் ஒலி) காவேரி நதி நீர் ஆணையத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்ததிலும் வெற்றி; முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்த உச்ச நீதிமன்றத்தில் போராடி அதிலும் வெற்றி; N.L.C.-யிலும் வெற்றி; வெற்றிமேல் வெற்றியைத் தேடித் தந்து, தமிழக மக்களுக்கு எண்ணற்ற திட்டங்கள் பல தந்து, அம்மா திட்டம் தந்து, அம்மா உணவகம் தந்து, அம்மா மருந்தகம் தந்து, அம்மா குடிநீர் தந்து, அம்மா உப்பு தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் அன்றாடம் வணங்கும் கழகத்தின் காவல் தெய்வம், கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித மலர்ப்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சியில் பெருகிவரும் மக்கள்தொகையைக் கருத்தில் கொண்டும், விவசாயிகளின் நலன் கருதியும் தற்போது இயங்கிவரும் 33/11 K.V. துணை மின் நிலையத்தை 110/11 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கான பதிலிலேயே தெரிவித்திருக்கிறேன். 12-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கீழ்பெண்ணாத்தூர் 33/11 K.V. துணை மின் நிலையத்தை 110/33/11 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முடிவு செய்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தற்போது உள்ள 33/11 K.V. துணை மின் நிலையத்திலேயே 3.867 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த நிலமே 110/33/11 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தப் போதுமானது என்பதால், நிலப் பிரச்சினையே இல்லை. ஆகவே, 33/11 K.V. துணை மின் நிலையத்தை 110/33/11 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்துகின்ற பணி விரைவிலே எடுக்கப்பட்டு, நிருவாக அனுமதி பெறப்பட்டு; அந்தப்

[2014 ஜூலை 30

பணிகள் விரைந்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது கீழ்பெண்ணாத்தூர் துணை மின் நிலையம் 8 M.V.A. திறன் கொண்ட இரண்டு மின்மாற்றிகளுடன் இயங்கி வருகிறது. 16 M.V.A. திறன் கொண்ட மின் பளு அங்கே இருக்கிறது. தற்போது அங்கே தேவையும், அதற்கு இணையாக 15.71 எம்.வி.ஏ. திறனுள்ள மின் பளுவும் இருக்கிறது. ஆகவே தேவைக்கும், அங்கே இருக்கிற மின் வசதிக்கும், ஏறத்தாழ சரிசமமாக இருக்கிறது.

முற்பகல் 10-05

ஆண்டுக்கு 0.27 சதவிகிதம் எம்.வி.ஏ. திறனுள்ள மின் பளு கீழ்பெண்ணாத்தூர் பகுதிக்கு அதிகரித்துக்கொண்டே வருகிறது. அதைக் கருத்தில்கொண்டுதான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல் அந்தத் துணை மின் நிலையத்தை 110/33/11 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால், இப்போது இருக்கிற அந்தப் பணிகள் முடிவடைவதற்கு ஓர் ஆண்டுக் காலமாகும் என்று எதற்காகச் சொல்கிறேன் என்றால், திருவண்ணாமலையிலிருந்து விழுப்புரத்திற்கு E.H.T. (Extra High Tension)-மிக உயரழுத்த 110 கே.வி.ஏ. மின் பாதை செல்கிறது. அந்த 110 கே.வி.ஏ. மின் பாதையிலிருந்துதான் 12 கிலோ மீட்டர் தூரமுள்ள கீழ்பெண்ணாத்தூருக்கு புதிய மின் பாதையை அமைக்க வேண்டும். ஆகவே, 12 கிலோ மீட்டர் தூரத்திற்கு அங்கே உயரழுத்த மின் கோபுரங்கள் அமைக்கும் பணிகள் செயல்படுத்தப்பட வேண்டியிருப்பதால், ஏறத்தாழ ஓர் ஆண்டுக் காலம் ஆகும். 14 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவிலே கீழ்பெண்ணாத்தூரில் இந்த ஆண்டு பணி தொடங்கப்பட்டு, வருகின்ற நிதியாண்டிலே அனைத்துப் பணிகளும் முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆக. அரங்கநாதன் அவர்கள்.

திரு. ஆ.க. அரங்கநாதன்: நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, மேலும் ஒரு துணைக் கேள்வியைக் கேட்கிறேன். கீழ்பெண்ணாத்தூர் புறவழிச் சாலையில் கடந்த 2013 ஆம் ஆண்டு 400/230 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, 80 நபர்களிடம் கிரயம் பெற்று, அதிலே 13 நபர்கள் அரசின் விலை குறைவாக இருக்கிறது என்பதால் இடம் கொடுக்க மறுத்து, மேலும் ஒன்றரை மடங்கு அதிகமாகக் கொடுக்க முன் வந்தவர்களிடம் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். எனவே, இடம் வழங்கப்பட்டவுடன், அந்தப் பகுதியிலே 400/230 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தை 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாகத் தரமுயர்த்த வேண்டுமென்று மூலக் கேள்வியில் கேட்டார். தற்போது அந்தப் பகுதியிலே 400/230 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டுள்ளார். ஆதலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியான கீழ்பெண்ணாத்தூரைச் சார்ந்த அந்தப் பகுதியின் மின் தேவையைக் கருத்தில்கொண்டு, ஆய்வுகள் செய்யப்பட்டு, தேவை ஏற்படின், மின்சார வாரியத்தின் நிதிநிலைமைக்கேற்ப உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 271, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஜூலை 30

271—

புறவழிச் சாலை

***47821—திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய நெடுஞ்சாலை 208-ல் ராஜபாளையம் முதல் திருவில்லிபுத்தூர் வரை ஒருங்கிணைந்த புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேசிய நெடுஞ்சாலை எண் 208-ல் ராஜபாளையம் முதல் திருவில்லிபுத்தூர் வரை ஒருங்கிணைந்த புறவழிச் சாலை அமைக்கும் பணிக்கு நில எடுப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நில எடுப்புப் பணிகள் முடிந்தவுடன், புறவழிச் சாலை அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.

திரு. க. கோபால்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாட்சிமை தாங்கிய, தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். விருதுநகர் மாவட்டத்தில் ராஜபாளையம் மிகப் பெரிய தொழில் நகரமாகும். தினந்தோறும் நூற்றுக்கணக்கான கன்டெய்னர் லாரிகள் ஊருக்குள் வந்து செல்கின்றன. இதனால், மிகப் பெரிய அளவுக்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. மேலும், தேசிய நெடுஞ்சாலை எண் 208 இல் திருவில்லிபுத்தூர், ராஜபாளையத்தைக் கடந்துதான் பிரசித்தி பெற்ற ஆண்டாள் கோயிலுக்கும், சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கும் பக்தர்கள் செல்ல வேண்டியிருக்கிறது. குற்றால சீசனில் தமிழகம் முழுவதிலுமுள்ள அதிகப்படியான சுற்றுலாப் பயணிகள் குற்றாலம்

2014 ஜூலை 30]

செல்வதற்கு இந்தச் சாலையைத்தான் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, நில ஆர்ஜிதப் பணிகளைக் கூடிய விரைவில் முடித்து, மக்கள் பயன்பாட்டிற்காக, தேசிய நெடுஞ்சாலை எண் 208-ல் ராஜபாளையம் முதல் திருவில்லிபுத்தூர் வரை விரைவில் ஒருங்கிணைந்த புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை எண் 208-ல் கொல்லம்-தென்காசி-திருமங்கலம் சாலையில், ராஜபாளையம் முதல் திருவில்லிபுத்தூர் வரை 25.7 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஒருங்கிணைந்த புறவழிச் சாலை அமைக்க மைய அரசு ரூ.13.17 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கியதன்பேரில், நில ஆர்ஜிதம் செய்வதற்கு 2 சிறப்பு நிலம் கையகப்படுத்தும் அலகுகள் மற்றும் ஒரு திட்ட அலகு ஆகியவை அமைக்கப்பட்டு, நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்புறவழிச் சாலைக்கு மொத்தம் 160.63 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். ராஜபாளையம் தாலுகாவில் 8 கிராமங்களிலும், திருவில்லிபுத்தூர் தாலுகாவில் 9 கிராமங்களிலும் நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பணி முடிந்தவுடன், புறவழிச் சாலை அமைக்கின்ற பணி தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.

திரு. க. கோபால்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

[2014 ஜூலை 30

திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக, குடியாத்தம் மையப் பகுதியில் ஓடுகின்ற கவுண்டன்யா ஆற்றின் கரைமீது புறவழிச் சாலை அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன். சென்ற கூட்டத் தொடரில் நான் கேட்ட துணைக் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வில் உள்ளது என்று கூறினார்கள். அந்த ஆய்வு எந்த நிலையில் உள்ளது என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடியாத்தத்திற்கு புறவழிச் சாலை அமைப்பது குறித்த ஆய்வு எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புவதாகக் கூறியுள்ளார்கள். தேசிய நெடுஞ்சாலை எண் 234, காட்பாடி-குடியாத்தம்-பேரணாம்பட்டு சாலையில் குடியாத்தம் நகருக்கு புறவழிச் சாலை அமைக்க ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. இந்த ஆய்வு தேசிய நெடுஞ்சாலை அலகு மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 272, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

272—

சொந்தக் கட்டடம்

***45956—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், சமயபுரம் மற்றும் கே.புதுக்குளத்திலுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், சமயபுரம் அங்கன்வாடி மையம், சமுதாயக் கூடத்திலும், கே.புதுக்குளம் அங்கன்வாடி மையம், பஞ்சாயத்து யூனியன் துவக்கப் பள்ளியிலும் செயல்பட்டு வருகின்றன. இந்த இரு மையங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவிதைகள் பல கொண்ட கலைவாணியே, பாரிஜாத திறன் கொண்ட பராசக்தியே, இலட்சியங்கள் பல கண்ட அஷ்டலட்சுமியே, மக்களைக் காக்கப் பிறந்த பராசக்தியே, தமிழகத்தைக் காக்கும் கருமாரியே, தொண்டர்களின் துயரைத் தீர்க்கும் துர்க்கையே, வாழும் வள்ளலே, மனித தெய்வமே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை வணங்குகிறேன்.

மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், கட்டிகுளம் ஊராட்சி, சமயபுரத்திலும், குலவைவேலி ஊராட்சி, கே.புதுக்குளத்திலும் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு கட்டடப் பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, தற்போது தமிழகத்தில் எத்தனை அங்கன்வாடி மையங்கள் இயங்கி வருகின்றன, எத்தனை அங்கன்வாடி மையங்களுக்கு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன, எத்தனை அங்கன்வாடி மையங்கள் பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

[2014 ஜூலை 30

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 54,439 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதிலே பழுதடைந்த, வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்ற 15,313 அங்கன்வாடி மையங்களைச் சீர்படுத்தவும், சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நிதி ஆதாரங்களை ஒருங்கிணைத்துக் கட்ட வேண்டும் என்று ஆணையிட்டிருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் இந்தப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 273, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

273—

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி

***33875—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2014 ஜூலை 30]

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் ஆகும். தொடர்ந்து வறட்சிக்கு உள்ளாகின்ற பகுதி. கல்வியறிவிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற அந்தப் பகுதியினுடைய நிலை கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசிலனை செய்து, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க ஆவன செய்வார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, தருமபுரி மாவட்டம் கல்வியிலே பின்தங்கிய மாவட்டம், அது வறட்சியான மாவட்டம் என்று தெரிவித்து, அங்கே பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று ஒரு கோரிக்கையை இங்கே வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற பின்பு, தருமபுரி மாவட்டம் கல்வியிலே பின்தங்கிய மாவட்டமாக இருந்ததை மாற்றி, முன்னேறிய மாவட்டமாக வர வேண்டும் என்ற நோக்கத்தோடுதான், எந்த மாவட்டத்திற்கும் இல்லாத அளவிற்கு நான்கு கல்லூரிகளை அந்த மாவட்டத்திற்குத் தந்து பெருமை சேர்த்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஒரு பொறியியல் கல்லூரியைத் தந்து அந்த மாவட்டத்தைப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், பெண்களுக்கென்று காரியமங்கலத்திலே கலை மற்றும் அறிவியல்

[2014 ஜூலை 30

கல்லூரியைக் கொடுத்திருக்கிறார்கள். அரூர் சட்டமன்றத் தொகுதியில் ஒரு கல்லூரி, பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் ஒரு கல்லூரி, ஆக நான்கு கல்லூரிகளைத் தந்து, அந்த மாவட்டம் கல்வியிலே மேன்மை பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியைப் பொறுத்தவரையில், தருமபுரி மாவட்டத்தில் ஏற்கெனவே ஒரு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி இருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் 18, ஆக மொத்தம் 19 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. இவற்றில் 7,350 இடங்களில் மாணவர்களைச் சேர்ப்பதற்கான வாய்ப்பிருக்கிறது. ஆனால், கடந்த ஆண்டு 3,910 மாணவர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். ஆக, பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியில் மாணவர்கள் சேர்ந்து படிக்க வேண்டுமென்று சொன்னால், போதிய இடங்கள் தருமபுரி மாவட்டம், அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியிலேயே இருக்கிறது. ஆகவே, இதனை அடிப்படையாக வைத்து, கல்லூரியை இந்த ஆண்டு தொடங்குவதற்கு வாய்ப்பில்லை என்ற பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் வட்டத்தில், பெண்ணாகரம் ஒன்றியம், புதிதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த ஏரியூர் ஒன்றியம் ஆகிய இரு ஒன்றியங்கள் இருக்கின்றன. இந்த இரு ஒன்றியங்களிலிருந்து மாணவர்கள் வெளி மாவட்டத்திற்குச் சென்று படிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. தற்போது இருக்கின்ற கல்லூரி தருமபுரி தேசிய நெடுஞ்சாலையில், கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிறது. ஆக, பெண்ணாகரம் பகுதியிலிருந்து கல்லூரிகள் தொலைவில் இருக்கின்றன. இரண்டாவதாக, பல மாணவர்களுக்கு கடந்த ஆண்டுகூட இடம் கிடைக்காத சூழ்நிலையும் ஏற்பட்டது. இங்கிருக்கின்ற மாணவர்கள் கோவை மாவட்டத்திற்கும், ஈரோடு மாவட்டத்திற்கும், நாமக்கல் மாவட்டத்திற்கும் சென்று

2014 ஜூலை 30]

படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆக, இந்த நிலையைக் கருத்தில் கொண்டு, வருகின்ற காலத்திலாவது பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியை அமைக்க தமிழக அரசு மறுபரிசீலனை செய்து, ஆவன செய்யுமா என தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஏரியூர் பகுதியிலிருந்து மாணவர்கள் வெளி மாவட்டங்களுக்கு செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக தருமபுரி மாவட்டம் இப்பொழுது கல்வியிலே முன்னேறிய மாவட்டமாக வளர்ந்து வருகிறது. அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, தருமபுரி மாவட்டத்திலேயே ஒன்று இருக்கிறது. அதிலே மாணவர்கள் படிப்பதற்குப் போதுமான இடங்கள் இருக்கின்றன. இன்றைக்கு மாநில அளவிலே பார்த்தால், 2 இலட்சத்து 32 ஆயிரம் இடங்கள் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் இருக்கின்றன. சென்ற ஆண்டு ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 795 மாணவர்கள்தான் சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, ஏரியூரிலிருந்து தருமபுரி மாவட்டத்திற்கு வருவதற்கு தூரமாக இருந்தால்கூட, பக்கத்திலே சேலம் மாவட்டத்திலே பலவகை தொழில்நுட்பக் கல்லூரி இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, எதிர்காலத்தில் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாக வருகின்றபோது, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 274, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஜூலை 30

274—

தேங்காய் கொள்முதல் நிலையம்

***29371—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ரி தொகுதி, தேவூர் பகுதியில் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ரி சரகம், தேவூர் கிராமத்தில் 540 ஹெக்டேர் நிலப்பரப்பில் நெற்பயிரும், 17.2 ஹெக்டேர் நிலப்பரப்பில் தென்னையும் சாகுபடி செய்யப்படுகிறது. ஒரு ஹெக்டேர் நிலப்பரப்பில் 175 தென்னை மரங்கள்வீதம், ஒரு மரத்திற்கு 10 கிலோ தேங்காய் கொப்பரை உற்பத்தி செய்ய வாய்ப்புள்ளது. இதன்படி, 17.2 ஹெக்டேரில் தோராயமாக 36 டன் தேங்காய் கொப்பரை உற்பத்தி செய்ய வாய்ப்புள்ளது. இப்பகுதியில் விளைவிக்கப்படும் தேங்காயில் 50 சதவிகிதம் உள்ளூர் தேவைக்கே போதுமானதாக உள்ளது. எனவே, தேவூர் பகுதியில் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைக்க தற்போது வாய்ப்புகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என்னுடைய துணை வினாவினை எழுப்புகிறேன். மாண்புமிகு

2014 ஜூலை 30]

அமைச்சர் அவர்கள் இங்கு பதில் கூறுகின்ற நேரத்தில், தேவூர் பகுதியில் மட்டும் 17.2 ஹெக்டேர் நிலப்பரப்பில் தேங்காய் விளைவிக்கப்படுவதாகக் கூறினார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவூர் சுற்றுவட்டாரப் பகுதிகளான தேவூர், புள்ளாக்கவுண்டம்பட்டி, செட்டிப்பட்டி, குள்ளம்பட்டி, கல்வடங்கம், வெள்ளரிவெள்ளி, சித்தூர், கோனேரிப்பட்டி, காவேரிப்பட்டி அக்ரஹாரம், நெடுங்குளம், பக்கநாடு, ஆடையூர், நங்கவள்ளி, ஜலகண்டாபுரம் ஆகிய பகுதிகளிலெல்லாம் தேங்காய் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகவே, தேவூரில் அல்லது அப்பகுதியின் மையப் பகுதியில் ஏதாவது ஓரிடத்தில் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் 14,476 ஹெக்டேர் நிலப்பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. தேவூர் பகுதியில் மிகக் குறைந்த அளவில், அதாவது, 17.2 ஹெக்டேர் நிலப்பரப்பில் மட்டுமே தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. இது அம்மாவட்டத்தின் தென்னை சாகுபடி செய்யப்படும் மொத்தப் பரப்பில் 0.11 சதவிகிதம் மட்டுமே ஆகும். மேலும், வருடத்திற்கு தோராயமாக 3,61,200 தேங்காய் மட்டுமே இந்தப் பகுதியில் மகசூல் செய்யப்படுகிறது. இத்தத் தேங்காய் மகசூல் உள்ளூர் தேவைகளுக்குப் போதுமானதாக இருக்கிறது. எனவே அப்பகுதியில் தேங்காய் கொள்முதல் செய்வதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக இருக்கின்றன.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவூர் பகுதிக்கு அருகில் உள்ள பல்வேறு கிராமங்களில் தேங்காய் சாகுபடி செய்யப்படுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம், சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் கிளையின் துணை மையமான ஜலகண்டாபுரத்தில் கொப்பரை வெளிச்சந்தை ஏல மையம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க 2013 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டு, வெளிச்சந்தை ஏலம் நடத்தப்பட்டு

வருகிறது. எனவே, அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகள் அந்த ஏல மையத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அந்தச் சந்தை வாரத்தில் செவ்வாய்க்கிழமைதோறும் நடத்தப்படுகிறது. அங்கு 12,000 கிலோ கிராம் முதல் 15,000 கிலோ கிராம் வரை தேங்காய் கொப்பரை ஏலம் விடப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூடுதலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, தற்சமயம் தேவூர் பகுதியில் தேங்காய் கொள்முதல் மையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறு இருக்காது. எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, அப்பகுதியில் தேங்காய் அதிகளவில் உற்பத்தியாகும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அப்பகுதியில் இருக்கும் அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்யப்பட்டு, அதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பது குறித்து ஆராயப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இருந்தால் நிச்சயம் பரிசிலனை செய்து, ஆய்வு செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, மேட்டூர் கிழக்குக்கரை கால்வாய்ப் பகுதியில் அமைந்துள்ள தேவூர் சுற்றுவட்டாரத்தில் நெல் மற்றும் தேங்காய் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. குள்ளம்பட்டி, புள்ளாக்கவுண்டம்பட்டி, மைலம்பட்டி, கோனேரிப்பட்டி, செட்டிப்பட்டி, கல்வடங்கம், காவேரிப்பட்டி அக்ரஹாரம் ஆகிய பகுதிகளில் அதிகளவில் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேவூரில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கான கட்டமைப்பு வசதிகள் அப்பகுதியில் இருக்கும்பட்சத்தில் அல்லது அப்பகுதி மக்களுடைய தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் அதற்கான சாத்தியக்கூறுகள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதுபோல், அந்தப் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கு அப்பகுதியிலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கூடன் சங்கங்கள்மூலம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

மு.ப.கல் 10-25

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள கடுமையான வறட்சியில் ** விலைக்கு வாங்குவது என்பது சிரமமாக இருக்கிறது. ஆகவே, (குறுக்கீடு) நான் கேள்வியைத்தான் கேட்கிறேன், குற்றமாகச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, கேள்வியைக் கேளுங்கள். குற்றச்சாட்டு மாதிரி வேண்டாம். (குறுக்கீடு) குற்றச்சாட்டு மாதிரி வேண்டாம். (குறுக்கீடு) தேங்காய் கொள்முதலைப்பற்றி மட்டும் கேளுங்கள். (குறுக்கீடு) குற்றச்சாட்டு மாதிரி சொன்னதனால், அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள். குற்றச்சாட்டு மாதிரி வேண்டாம்.

செல்வி கே. பாலபாரதி: ** விலைக்கு வாங்க முடியவில்லை. ஆகவே, தேங்காய் உள்ளிட்ட காய்கறிகளை சிறப்புக் கூட்டுறவு அங்காடிகள் மூலமாக மலிவு விலைக்கு விற்பதற்கு இந்தத் துறை முன்வந்தால், பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2014 ஜூலை 30

ஆகவே, அதைப் பரிசிலிப்பீர்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள், ** என்று கூறினார்கள். பண்ணை பசுமைக் காய்கறி கடைக்கு வாருங்கள், அற்புதமான காய்கறிகளை குறைந்த விலைக்கு நீங்கள் நிறைந்த மனதோடு வாங்கிச் செல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் பொற் கரங்களால் தொடங்கப்பட்ட பண்ணை பசுமைக் காய்கறி கடையில் ஏறத்தாழ 11 கோடி ரூபாய்க்கு காய்கறி மட்டும் விற்பனையாகி உள்ளது; தங்கம் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி மற்றும் பல்வேறு உறுப்பினர்கள் இங்கே தேங்காய் கொள்முதல் செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். இதற்கு துறைரீதியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, குழு அமைப்பதற்கு பரிந்துரை செய்யப்படும். தேங்காய் கூடிய சீக்கிரத்தில் கெட்டுப் போய்விடக்கூடியது, அழுகிப் போய்விடக்கூடியது. இதிலிருந்து எண்ணெய் உற்பத்தி செய்யலாமா அல்லது வேறு பொருள் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா; அதன் சாத்தியக்கூறுகள் என்ன என்பது குறித்து ஆராயப்படும். விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் எந்த வகையில் அது உபயோகமாக இருக்கும் என்பதை ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் எடுத்துச்சென்று, அதற்கான ஆணை பெறப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், தற்போது பண்ணை பசுமைக் காய்கறி கடைகளில் தேங்காய் கொள்முதல் செய்யப்படுகிறது. இன்னும் கூடுதலாகச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு தேங்காய்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2014 ஜூலை 30]

உற்பத்தி குறைவாக இருக்கின்றது. இதனால் வெளி மார்க்கெட்டில் தேய்காய் அதிக விலைக்குப் போகிறது. இருப்பினும், மக்கள் தேவைக்கு அதிகமாக வாங்கிச் செல்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு நல்ல இலாபமும் கிடைக்கிறது. அதேநேரத்தில், குறைந்த விலைக்கு வேண்டுமானால் எங்கள் கடைக்கு வாருங்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் தொடங்கியிருக்கிற கடைக்கு வாருங்கள். நிச்சயமாக உங்களுக்குக் கிடைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தேங்காய் உற்பத்தி அதிகமாக இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து. இன்றைக்கு மைய அரசு கொப்பரைத் தேங்காயினுடைய விலையை ஒரு கிலோ ரூ.52.50 காசு என்று நிர்ணயித்திருக்கின்றது. ஆனால், வெளி மார்க்கெட்டில் ஒரு கிலோ கொப்பரை 90 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை விலைக்குப் போகிறது. எனவே, விலைவாசி இன்றைக்குக் கூடியிருக்கிறது. மைய அரசு கொடுத்திருக்கிற ஆதார விலையைக் காட்டிலும், விவசாயிகளுக்கு வெளி மார்க்கெட்டில் அதிகமாக இலாபம் தரக்கூடியதாக இருப்பதனால், இன்றைக்கு யாரும் கொள்முதல் செய்ய வருவது இல்லை. எனவே, தேங்காய் கொள்முதலை சங்கங்கள்மூலமாக வாங்குவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக துறைரீதியாக ஒரு குழு அமைக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அதற்கு எந்த வகையில் சாத்தியக் கூறுகள் இருக்கும் என்பதை கருத்தில் கொண்டு, விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 275, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

275—

விரிவுபடுத்துதல்

***20105—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தை விரிவாக்கம் செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தை 17.9 ஹெக்டேர் அளவிற்கு விரிவாக்கம் செய்திட மத்திய அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.*

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தைச் சுற்றிலும் உள்ள பகுதியை மத்திய அரசின்* Burn Standard Company, *தற்போது* SAIL, control-*லில் எடுத்திருக்கிறது.*

அதேபோல, டால்மியா மேக்னசைட், TATA Belpahar Refractories *போன்ற தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன. மேக்னசைட்டை இப்போது சீனாவிலிருந்து நிறைய இறக்குமதி செய்கிறார்கள். சேலத்தில் நல்ல கனிம வளம் இருக்கிறது. அதை இன்னும் விரிவாக்கம் செய்வதற்கு நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கின்றது. டால்மியாகூட அந்தக் காலத்தில் 1,400 ஏக்கர் வாங்கியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். நிறைய இடங்களில்* mining *செய்யாமல் இருக்கிறார்கள். 100 ஏக்கரை மட்டும் அரசுக்குத் திருப்பி கொடுத்துவிட்டு, அதற்குமேல் mining செய்வதில்லை. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் மூலமாக அந்த இடத்தில் விரிவாக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டைடல் பார்க் அமைப்பதற்கு,* Burn Standard Company-*யிடமிருந்து 136 ஏக்கர் வாங்கினார்கள். ஆனால் 50, 56 ஏக்கருக்கு மேல் சரியான வரவேற்பு இல்லை என்பதால், 80 ஏக்கருக்கு மேல் திருப்பிக் கொடுத்து விட்டார்கள். அந்த இடம் மிகுந்த கனிம வளம் நிறைந்த பகுதி. உள்ளூர் அமைச்சர் அவர்களுக்கு*

2014 ஜூலை 30]

அதுகுறித்து நன்கு தெரியும், அங்கு இருக்கிற கனிம வளங்கள் எப்படிப் போனது என்று. அதனால் அந்த இடத்திலும் அரசுமூலமாக மேக்னசைட் கற்களை வெட்டியெடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல ELCOT நிறுவனத்திற்கு 164 ஏக்கர் கொடுத்திருந்தார்கள். அதில் 54 ஏக்கர் போக, 110 ஏக்கர் வருவாய்த் துறையிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த 54 ஏக்கரில் டைடல் பார்க் கட்டுகின்றபோது வேண்டுமானால் தவறு நடந்திருக்கலாமேயொழிய மாண்புமிகு அம்மா அவர்களது அரசில் தவறு நடக்கவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாவதாக, மேக்னசைட் நிறுவனத்தைச் சுற்றி forest land இருக்கிறது. அதனால் மத்திய அரசின் அனுமதியைப் பெறவேண்டும். மாநில அரசினுடைய அனுமதியைப் பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறைக்கு அனுமதிக்காக அனுப்பியிருக்கின்றது. இப்போதைக்கு 17.9 ஹெக்டேர் அளவிற்கு விரிவாக்கம் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்மொழிவு அனுப்பியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறு நடக்கவில்லை என்று சொன்னார்கள். நானும் தவறு நடக்கிறது என்று சொல்லவில்லை. நிறைய கனிம வளம் இருக்கிறது. அந்த இடம், தேசிய நெடுஞ்சாலையையொட்டி இருப்பதால், போக்குவரத்து வசதியுள்ள பகுதி. கனிம வளமுள்ள செட்டிச்சாவடி, ஏற்காடு அடிவாரப் பகுதியில் உள்ளது. இது சாலையோரமாக இருப்பதனாலே, அரசு மூலமாக கனிமங்கள்

[2014 ஜூலை 30

வெட்டியெடுக்கப்படுமா என்பதைத்தான் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்கு அரசு உரிய நடவடிக்கையை எடுக்குமா என தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். சுற்றி வனத் துறைப் பகுதி இருக்கின்ற காரணத்தினால், கனிம வளத் துறையைவிட வனத் துறையால் அதிகப் பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது. ஆகவே, நாங்களே உள்ளே செல்லவேண்டுமென்றால்கூட, வனத் துறையினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் செல்லமுடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் கனிம வளம், எந்தக் காலத்திலும் நம்மை விட்டுப் போகாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கையில் கிராபைட் ஆலை விரிவாக்கத் திட்டமும், உபதொழில் தொடங்கப்படுகிற திட்டமும் அரசிடம் இருக்கிறதா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், தென் மாவட்டங்களுக்கென்று தனிச் சலுகை அறிவிக்கின்றபொழுது சிவகங்கை மாவட்டத்தில் கிராபைட் தொழிற்சாலை அமைக்கப்படுமென்று சட்டமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதை, நிச்சயமாக கிராபைட் தொழிற்சாலை சார்ந்த தொழில்கள் வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 276, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

276—

புதிய பேருந்து

***37322—திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவிலிலிருந்து கோழிக்கோடு வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக தடம் எண் 284-ல் செங்கோட்டையிலிருந்து கோழிக்கோடுக்கு இயங்கி வந்த இரண்டு பேருந்துகள், சங்கரன்கோவில் பகுதி மக்கள் நலன் கருதி, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க சங்கரன்கோவில் வழியாக 3-3-2014 முதல் இயக்கப்பட்டு வருகிறது. மேலும், சங்கரன்கோவிலிலிருந்து கோழிக்கோடுக்கு முன்பதிவு செய்து பயணம் மேற்கொள்ள வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி. ச. முத்துசெல்வி அவர்கள்.*

திருமதி ச. முத்துசெல்வி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா என்னும் மூன்றெழுத்து மந்திரத்தைக் கொண்டு, தமிழக மக்களுக்கு விதி 110-ன்கீழ் தரும் திட்டங்கள் ஏராளம், தாராளம். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டங்களை அடுக்கி, அடுக்கி வைத்தால், இமயம் கூடக் குட்டையாகும், பூமிகூடத் தட்டையாகும். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறோம்', அது அண்ணா அவர்களின் வாக்கு. இன்று தமிழக மக்களின் சிரிப்பில் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக்*

[2014 ஜூலை 30

கண்டுகொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்காக நான், மக்களால் நான் என்று வாழும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டுப் பணிவுடன் வணங்கி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைப்படி, சங்கரன்கோவிலிலிருந்து கோழிக்கோடுக்குப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. அதற்காகப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மேலும், சங்கரன்கோவிலிலிருந்து பேருந்தை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவோடு, இரண்டு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அந்த இரண்டு பேருந்துகளிலும் பயணிகளின் எண்ணிக்கை 86.92 சதவிகிதம் மட்டுமே இருக்கிறது. பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கும்போது, இரண்டு மாநிலங்களுடைய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, அதற்குரிய ஆய்வுகள் செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

திருமதி ச. முத்துசெல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவிலிலிருந்து கோழிக்கோடுக்கு பேருந்து வசதி வேண்டுமென்று அங்குள்ள மக்கள் நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்து வருகின்றனர். அதைப்போல, சங்கரன்கோவிலிலிருந்து கூடலூருக்கு கோயம்புத்தூர் வழியாக பேருந்து இயக்க வேண்டும் என்பதும் அங்குள்ள மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை. இந்த இரண்டு பேருந்துகளும்

2014 ஜூலை 30]

செங்கோட்டையிலிருந்து பல பகுதிகளுக்குச் சென்று வருகின்றன. ஆனால், அந்தப் பேருந்துகள் சங்கரன்கோவிலிலிருந்து செல்ல வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை. எனவே, வருங்காலத்தில் சங்கரன்கோவிலிலிருந்து பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதிக்குட்பட்ட ஓதியடிகாடு, பத்தனங்காடு ஆகிய கிராமங்களுக்கு பேருந்து வசதி இல்லையென்று, இந்த ஆட்சி அமைந்தபோது, முதல் கூட்டத்திலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டிருந்தேன். 'விரைவிலே ஆவன செய்வோம்' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருந்தார்கள். ஆனால், இதுவரை அந்தப் பேருந்து வசதி ஏற்படுத்தப்படவில்லை. எனவே, மறு ஆய்வு செய்து, அந்தப் பகுதிக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுடைய தேவைகளை அறிந்து, தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மட்டும், மூன்றாண்டுகளில் 44 புதிய வழித்தடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மக்களுடைய பயன்பாட்டுக்காக வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய வழித்தடங்கள் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வு செய்யப்பட்டபோது, அந்த வழித்தடங்களில் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகமாக இல்லை; மிகக் குறைவாக இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்திக் கூறுவதன் காரணமாக, மாண்புமிகு அம்மா

[2014 ஜூலை 30

அவர்களுடைய உத்தரவைப் பெற்று, அந்த வழித்தடம் மீண்டும் ஆய்வு செய்யப்படும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, பயணிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப, அந்த வழித்தடங்களில் பேருந்து இயக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 277, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

277—

நவின மின் தகன மேடை

***9708—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சி பேரூராட்சியில் நவீன மின் தகன மேடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) செஞ்சி பேரூராட்சியில் மொத்தமுள்ள எட்டு இடுகாடு மற்றும் சுடுகாடுகளுள், மூன்று சுடுகாடுகளை இந்துக்களும், மூன்று இடுகாடுகளை முஸ்லிம் இனத்தவரும், இரண்டு இடுகாடுகளை கிறிஸ்தவர்களும் பயன்படுத்தி வருகின்றனர். செஞ்சி பேரூராட்சியில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், நவீன மின் மயானம் அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாகச் சொல்லப்போனால், செஞ்சி பேரூராட்சியில் இந்துக்கள் பயன்படுத்துகின்ற சுடுகாடுகள், இரண்டு பிரிவுகளாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதில் என்.ஆர்.பேட்டை, பீரங்கிமேடு, சக்கராபுரம், எம்.ஜி.ஆர். நகர் போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய சுடுகாடுகள், தேசிய நெடுஞ்சாலையில் உள்ளன. சக்கராபரணி ஆற்றின் மேலேயே அதற்கான எரிமேடை அமைக்கப்பட்டுள்ளது. அந்த வழியாக வாகனங்கள் செல்லும்போது, அதனுடைய புகையானது வாகனங்கள் செல்லும் வழியை மறைக்கக்கூடிய வகையில் இருக்கின்றது. சக்கராபரணி ஆற்றின் அருகில், கலவாய் சாலையில், ஆற்றுப் படுகையின் மேலேயே நிலம் இருப்பதாக பேரூராட்சியால் கண்டறியப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு நவீன மின்தகன மேடை அமைத்துத் தருவதற்கு முன்வந்தால், பேரூராட்சிமூலம் அந்த இடத்தை ஒதுக்கித் தருவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் நவீன மின் தகன மேடை அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி பேரூராட்சியினுடைய மொத்த மக்கள்தொகை 24,750 ஆகும். இப்பேரூராட்சியில் 18 வார்டுகள் உள்ளன. இப்பேரூராட்சியில் மொத்தம் எட்டு இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகள் உள்ளன. இதில் சக்கராபரணி ஆற்றங்கரை-கலவாய் சாலை, சக்கராபரணி ஆற்றங்கரை-திண்டிவனம் சாலை, சிறுகடும்பூர் காலனி ஆகிய இடங்களில் இந்துக்களுக்கான மூன்று சுடுகாடுகள் அமைந்துள்ளன. செஞ்சி, மந்தைவெளி, தேசூர்பேட்டை சாலை, சந்தைத்தோப்பு ஆகிய இடங்களில் இஸ்லாமியர்களுக்கான மூன்று இடுகாடுகள் அமைந்துள்ளன. திண்டிவனம் சாலை மற்றும் புனித மிக்கேல் ஆலயம் அருகில் அமைந்துள்ள இரண்டு இடங்களில் கிறிஸ்தவர்களுக்கான

[2014 ஜூலை 30

இடுகாடுகள் உள்ளன. இவை அனைத்தும், பிரதான சாலையில், நல்ல தார்ச் சாலையில் அமைந்துள்ளன.

மேலும், செஞ்சி பேரூராட்சிக்கு அருகில் விழுப்புரம், திண்டிவனம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய நகராட்சிகளில் நவீன மின் மயானங்கள் செயல்பட்டு வருகின்றன. பேரூராட்சி நிருவாகம் அளித்துள்ள விவரங்களின்படி, தற்போது செஞ்சி பேரூராட்சியில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், நவீன மின் மயானம் அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சக்கராபரணி ஆற்றங்கரையில் கலவாய் சாலை செல்கின்ற இடத்தில், நேரில் சென்று பார்த்தபோது ஆற்றங்கரைக்கு இரண்டு பகுதிகளிலும் நிலம் கண்டறியப்பட்டது. பேரூராட்சி நிலம் ஒதுக்கித் தரும் பட்சத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நவீன மின் மயானம் அமைத்துத் தருவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீன மின் தகன மேடை அமைக்க துறையின் மூலமாக நிலம் கேட்டபோது, அந்தப் பகுதியில் நிலம் இல்லையென்றுதான் பேரூராட்சியால் பதில் சொல்லப்பட்டுள்ளது. இப்போது தனியார் நிலத்தில் நவீன மின் தகன மேடை பல இடங்களில் அமைக்கப்பட்டு வருகிறது. அதுபோன்று தனியார் நிலம் எடுப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி செய்தால், அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சி, செவ்வாய்ப்பேட்டையில் உள்ள சந்தைப்பேட்டை பகுதியில் இருக்கின்ற மயானத்தில், நவீன மின் தகன மேடை அமைப்பதற்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, இதுவரை பணிகள் ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த இடத்தை ஆய்வு செய்து, உடனடியாக அங்கு நவீன மின் தகன மேடை அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பார்களா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் மயான மேடை அமைப்பதைப் பொறுத்தவரையில், பல பிரச்சினைகள் அங்கு வரும் என்று மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அந்தப் பகுதியில் இருக்கின்ற சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, துறையின் அதிகாரிகளிடம் பேசி, அந்த இடத்தை ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, தத்தனேரியில் மின் தகன மயானம் செயல்பட்டு வருகிறது. அந்த மயானத்தின் தெற்குப் பகுதியில் சடலங்களைப் புதைக்கக்கூடிய வகையில், 14 ஏக்கர் சுற்றளவில் 8 அடி உயரத்திற்கு சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இறந்தவர்களின் உடலைப் புதைப்பதற்காக வருகின்றவர்கள் உட்காருவதற்கும், இறப்பைப் பதிவு செய்வதற்கும் அறைகள் கட்டப்பட்டுள்ளன. இவை இரண்டுமே தற்போது பயன்பாட்டிற்கு வரவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதை மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை

[2014 ஜூலை 30

எடுப்பார்களா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உட்பட 12 மாநகராட்சிகளில் இதுபோன்ற பிரச்சினைகள் எதுவும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பொருளைக் குறித்து மதுரை மாநகராட்சி அதிகாரிகளிடம் எடுத்துச்சொல்லி, உடனடியாக பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 278, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

278—

ஜவுளிப் பூங்கா

***35183—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, பள்ளியாடியில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, பள்ளியாடியில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என

2014 ஜூலை 30]

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் கோரியுள்ளார்கள். கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, பள்ளியாடியில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை. எனினும், அப்பகுதியில் உள்ள தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், நடைமுறையில் உள்ள ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின்படி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜவுளித் தொழில் செய்பவர்களுக்கு இலவசமாக உபகரணங்கள் வழங்கினால், இன்னும் அதிகமாக அந்தத் தொழிலை விருத்தி செய்ய ஊக்குவிக்க முடியும். மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில், குளச்சல் சட்டமன்றத் தொகுதியில், 4,000-க்கும் அதிகமான குடும்பங்கள், அந்தத் தொழிலை நம்பியிருக்கின்றார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக 20,000 குடும்பங்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

முன்பு இருந்த அரசு, அவர்களுக்குத் தேவையான உபகரணங்களை வழங்கி, உதவிகளைச் செய்து, அந்தத் தொழிலைப் பெருக்க முயற்சி செய்யாத காரணத்தால், அந்தத் தொழில் வீழ்ச்சி அடைந்தது. கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்தத் தொழிலை மேலும் வலுவடையச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்தால், அதிகமாக வளர வாய்ப்புகள் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், குளச்சல் தொகுதிக்குட்பட்ட கஞ்சிக்குழி என்ற ஊரில் கைத்தறி நிறுவனத்திற்குச் சொந்தமான தொழிற்கூடம் காலியாக உள்ளது. அந்தக் கட்டடத்தில் Yarn Sizing Unit அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? கைத்தறி

[2014 ஜூலை 30

மற்றும் துணிநூல் துறை வளர்ச்சிக்காக, அனைத்து அரசு ஊழியர்களும், வாரம் ஒரு முறை கைத்தறி துணி அணிய அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வினா. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைய கேள்விகளைக் கேட்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூறிக்கொள்வதெல்லாம், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசு கூட்டுறவு நூல் நூற்பு தொழிற்சாலைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், சுமார் 20 கோடி ரூபாய் வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா? இல்லையென்றால், அவர் நேரடியாகச் சென்று பார்வையிடும்படி கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் நெசவாளர்களுக்காக ஒரே நேரத்தில் 10,000 பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. நெசவாளர்களுக்காக குடும்ப ஓய்வூதியம் 550 ரூபாய் என்று இருந்ததை மாதம் 1,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான்.

முற்பகல் 10-45

ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வு செய்ய கடந்த 10-7-2014 அன்று 'தொழில் முனைவோர் ஆலோசனைக் கூட்டம்' மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், அவருடைய தலைமையில் நாகர்கோவிலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தொழில் முனைவோர், கைத்தறித் துறை அதிகாரிகள், நெசவாளர் பிரதிநிதிகள் உள்ளிட்டோர்

2014 ஜூலை 30]

கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் பூங்கா அமைப்பதற்குத் தேவைப்படும் நிலம், தொழில் முனைவோரால் வாங்கப்பட வேண்டும்; திட்ட மதிப்பீட்டில் 51% அவர்களுடைய பங்களிப்பு இருக்க வேண்டும்; மீதமுள்ள 49%-ல், மாநில அரசின் பங்காக 9% அவர்களுக்கு மானியமாக வழங்கப்படும்; 40% மத்திய அரசால் மானியமாக வழங்கப்படும் என்பது போன்ற நிபந்தனைகளையெல்லாம் தெரிவித்தபோது, அதற்கு இசைவு தெரிவித்து, தொழில் முனைவோர் வரவில்லை என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஜவுளிப் பூங்கா அமைப்பது என்பது நேரடியாக அரசு ஆரம்பிப்பது அல்ல; தனியார் முன்வர வேண்டும். தனியார், 50 ஏக்கர் நிலத்தை தேர்வு செய்து தர வேண்டும்; 25 கைத்தறி நெசவாளர்கள் சிறு, சிறு கூடம் அமைக்க வேண்டும். ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு முதலில் இடம் தேர்வு செய்யப்பட்டு, தொழில் முனைவோரின் முதலீடு மற்றும் பங்களிப்பிற்குப் பின்னர், மத்திய, மாநில அரசுகள் தங்களது பங்களிப்பினை மானியமாக வழங்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் 'நெசவாளர்கள் வளமாக இருக்கின்றார்கள்' என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த காங்கிரஸ், தி.மு.க. ஆட்சியைப் பற்றி இன்னமும் நினைத்துக்கொண்டு, 'நலிவுற்று இருக்கின்றார்கள், நலிவுற்று இருக்கின்றார்கள்' என்று சொல்லியிருக்கின்றார்கள். அது உண்மையல்ல. அந்த வார்த்தை இருந்தால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பார்த்துவிட்டு சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட துணைக் கேள்வி, Yarn Sizing Unit ஒன்று அமைக்க வேண்டும் என்பதுதான். எனது தொகுதிக்குட்பட்ட கஞ்சிக்குழி பகுதியில் அரசுக்குச் சொந்தமான கட்டடம் இருக்கின்றது. இந்தத் துறையை வலிமைப்படுத்துவதற்கு, சிறப்புச் சேர்ப்பதற்கு, அங்கே Yarn Sizing Unit அமைப்பதற்கு முன்வருவீர்களா என்ற கேள்விதான் கேட்டிருக்கின்றேன்.

[2014 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தொகுதிக்குட்பட்ட கஞ்சிக்குழி பகுதியில் உள்ள நூற்பாலையை இன்னும் விரிவுபடுத்த முடியுமா என்று கேட்டிருக்கின்றார்கள். அங்கு, நேரடியாகச் சென்று, துறை அதிகாரிகளோடு ஆய்வு செய்துவிட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 279, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

279—

குடமுழுக்கு

***35992—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், மேலூர் அருள்மிகு திருவுடையம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கலை மகளாய், அலை மகளாய், மலை மகளாய், மூன்றும் ஒருங்கிணைந்த தெய்வத் திருமகளாய் தமிழகத்தை வழிநடத்தி வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 5,351 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்கு நடைபெற்றுள்ளன என்பதனை இங்கே மகிழ்ச்சியுடன் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

2014 ஜூலை 30]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள திருக்கோயில் குடமுழுக்கு திருப்பணிகள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளன. மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே வழங்கிய உறுதிமொழியினைத் தொடர்ந்து, இராஜகோபுரம் கட்டுவதற்கு உபயதாரர்கள் கண்டறியப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் திருக்கோயில் நிருவாகத்தால் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள அருள்மிகு திருவுடையம்மன் திருக்கோயில் குடமுழுக்கு மிக விரைவில் நடைபெற, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

திரு. பொன். ராஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் 17 இலட்சம் உறுப்பினர்கள் கொண்ட கழகத்தை விட்டுச்சென்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக வரலாற்றிலே உடைந்த கழகத்தை ஒன்று சேர்த்து ஒன்றரை கோடி தொண்டர்தனைக் கொண்ட மாபெரும் இயக்கமாக மாற்றினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய தேசத்திலேயே 3-வது கட்சியாக சரித்திர சாதனை படைத்து, இந்திய தேசமே பின்பற்றும் தொலைநோக்குத் திட்டங்களைத் தந்திட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நிகர் அம்மா அவர்களே என்று மாபெரும் சரித்திர சாதனைகளைப் படைத்திட்ட, நான் அனுதினமும் வணங்கும், மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதி, மேலூர், அருள்மிகு திருவுடையம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய முன்வந்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும்

[2014 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இத்திருக்கோயில் மிகவும் பிரசித்திபெற்ற கோயிலாகும். திருவொற்றியூரில் இருக்கின்ற வடிவுடையம்மன், மேலூரிலிருக்கின்ற திருவுடையம்மன் மற்றும் திருமுல்லைவாயிலிலிருக்கின்ற கொடியிடையம்மன் இம்மூன்று கோயில்களையும் ஒரே தினத்திலே வழிபட்டால் நல்ல பலன்கள் கிடைக்கும் என்பது ஐதீகம். மற்ற இரண்டு கோயில்களுக்கும் இராஜகோபுரங்கள் இருக்கின்றன. இந்தக் கோயிலுக்கு 5 நிலைகள் கொண்ட இராஜகோபுரம் அமைப்பதற்கு உபயதாரர்கள் தற்போது காலதாமதம் செய்துவருகிறார்கள். ஆகையால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, துறையின்மூலமாக அங்கு இராஜகோபுரம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், பேரவைத் தலைவர் வந்துவிட்டேன்.

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், மேலூரில் அருள்மிகு திருவுடையம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலின் பசலி வருவாய் ரூ.4,56,274/-. இத்திருக்கோயிலுக்கு புதிய கொடிமரம், மடப் பள்ளி அலுவலகம் ஆகியவை கட்டப்பட்டுள்ளன. திருக்கோயிலின் சுற்றுப்புறத்தில் கருங்கல் தளம் அமைத்தல் மற்றும் ஐந்து நிலை இராஜகோபுரம் கட்டுதல் போன்ற பணிகளுக்காக உபயதாரர்கள் கண்டறியப்படும் பணியினைக் கோயில் நிருவாகம் மேற்கொண்டு வருகிறது.

2014 ஜூலை 30]

வாழும் கர்ணனாக இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் இத்திருக்கோயிலின் பிற புனரமைப்புப் பணிகளுக்காக 18-வது நிதிக் குழுவிலிருந்து ரூ.30 இலட்சம் ஒதுக்கியுள்ளார்கள். தெய்வம் சக மனிதரின்மூலம்தான் நமக்கு உதவி செய்கிறது என்கிற வார்த்தைக்கு அடையாளமாகத் திகழும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு, மிக விரைவில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, குடமுழுக்கு நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 280, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

280—

சமுதாய நலக் கூடம்

*22078—**திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, நாகநல்லூர் கிராமத்தில் சமுதாய நலக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், துறையூர் தொகுதி, துறையூர் வட்டம், உப்பிலியாபுரம் ஒன்றியம், நாகநல்லூர் கிராமத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவு பெற்று, ஆதி திராவிட சமுதாய மக்களுக்கு சமுதாய நலக் கூடம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். எனது துறையூர் தொகுதிக்குட்பட்ட உப்பிலியாபுரம் ஒன்றியம், நாகநல்லூர் பகுதியில், 2,000-க்கும் மேற்பட்ட ஆதி திராவிடர்கள் மற்றும் அருந்ததியர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கை இது. அந்தப் பகுதி மக்களுக்கு சமுதாய நலக் கூடம் அமைத்துத் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கண்ணனூர் பகுதியிலும் அதிகப்படியான மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதி மக்களும் நீண்டநாட்களாக சமுதாய நலக் கூடம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் நாகநல்லூர் கிராமத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, புதிய சமுதாயக் கூடம் கட்டவிருப்பதால், ஒரே சட்டமன்றத் தொகுதியில் இன்னொரு சமுதாயக் கூடம் கட்ட இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 281, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 30]

281—

வட்டத்தை மூன்றாகப் பிரித்தல்

***5850—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வட்டத்தினை கிணத்துக்கடவு, ஆனைமலை, பொள்ளாச்சி என மூன்று வட்டங்களாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொள்ளாச்சி வட்டத்தினைப் பிரித்து புதிய கிணத்துக்கடவு வட்டம், தாயுள்ளம் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண் 406, வருவாய்த் துறை, நாள் 21-11-2012 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், உத்தேசிக்கப்படும் ஆனைமலை வட்டம், அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003 இன்படி, புதிய வட்டம் உருவாக்க நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களில் வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கையை நிறைவு செய்யவில்லை. எனவே, புதிய ஆனைமலை வட்டம் உருவாக்கும் நிலை தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி அவர்கள்.

திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லரசு இந்தியாவை உருவாக்க, நல்வழிகாட்டும் நல்லரசு நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பொள்ளாச்சி வட்டத்தைப் பிரித்து, கிணத்துக்கடவு வட்டத்தை புதிய வட்டமாக அறிவித்து, அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தந்த மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப்

[2014 ஜூலை 30

பாதங்களுக்கு அந்தப் பகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானு கோடி நன்றி மலர்களை முதற்கண் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி வட்டத்திலிருந்து கிணத்துக்கடவு வட்டத்தைப் பிரித்தாலும், பொள்ளாச்சி வட்டம் 96 வருவாய்க் கிராமங்களைக் கொண்ட பெரிய வட்டமாகவே இருக்கின்றது. இதையும் பிரித்து ஆனைமலையை மையமாகக்கொண்டு புதிய வட்டம் அமைத்தால், அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சாதனைகளின் புதிய சகாப்தமாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் புனித ஆட்சியிலேதான், 2012-2013 ஆம் நிதியாண்டில் கோயம்புத்தூர் மாவட்டத்திலே கிணத்துக்கடவு மற்றும் அன்னூர் வட்டங்களும், 2013-2014 ஆம் நிதியாண்டில் பேரூர் மற்றும் மதுக்கரை வட்டங்களும் ஆக 4 வட்டங்கள் உருவாக்கப்பட்டு, மொத்தம் 10 வட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. பொள்ளாச்சியிலிருந்து கிணத்துக்கடவு வட்டத்தினைப் பிரிப்பதற்கு முன்பு, பொள்ளாச்சி வட்டத்தில் இருந்த வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை 131 ஆகவும், மக்கள்தொகை 5,73,478 ஆகவும், பரப்பளவு 1,01,041.11 சதுர கிலோ மீட்டராகவும் இருந்தது. கிணத்துக்கடவு வட்டம் பிரிக்கப்பட்ட பின்னர், பொள்ளாச்சி வட்டத்தில் உள்ள வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை 96 ஆகவும், மக்கள்தொகை 4,69,598 ஆகவும், பரப்பளவு 742.64 சதுர கிலோ மீட்டராகவும் உள்ளது.

உத்தேச ஆனைமலை வட்டத்தின் பரப்பளவு 312.02 சதுர கிலோ மீட்டராகவும், மக்கள்தொகை 1,61,464 ஆகவும் கணக்கிடப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்படும் ஆனைமலை வட்டத்தில், ஆனைமலை, ஒடையகுளம், வேட்டைக்காரன்புதூர் மற்றும் கோட்டூர் ஆகிய நகர பஞ்சாயத்துகள் ஒன்றிணைந்து 19 வருவாய்க்

2014 ஜூலை 30]

கிராமங்கள் மட்டுமே உள்ளடக்கியதாக இருப்பதால், அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003 இன்படி, வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கையினை நிறைவு செய்யாத காரணத்தால், பொள்ளாச்சி வட்டத்தினை இரண்டாகப் பிரித்து, ஆனைமலையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்கும் நிலை தற்போது எழவில்லை. இருப்பினும், உத்தேசிக்கப்படுகின்ற ஆனைமலை வட்டம் உருவாக்கப்பட்டால், அந்தப் பகுதி மக்களுக்கு ஏற்படக்கூடிய பயன்களை ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி வட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆனைமலையைத் தலைமையிடமாகக் கொண்டு, ஆனைமலை வட்டத்தினை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்தக் கேள்வி கேட்கப்பட்டுள்ளது. வால்பாறை சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்டிருக்கக்கூடிய ஆனைமலை ஒன்றியம் என்பது, பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்தையும் சேர்த்து, 28 பஞ்சாயத்துக்கள், 4 பேரூராட்சிகளை உள்ளடக்கியதாகும். டாப்சிலிப் மற்றும் இன்னும் இருக்கக்கூடிய பல்வேறு பகுதிகளிலிருந்து, பொள்ளாச்சிக்கு நீண்டதூரம் வரவேண்டிய சூழ்நிலை உள்ளது. புதிய வட்டத்தினை உருவாக்குவதற்கு அங்கு போதிய எண்ணிக்கையில் வருவாய்க் கிராமங்கள் இல்லை என்கின்ற கருத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். நீண்ட தொலைவிலிருந்து மக்கள் பொள்ளாச்சிக்கு வருவது சிரமமாக உள்ள காரணத்தினாலும், பொள்ளாச்சியில் இருக்கக்கூடிய ஒரு பகுதியை ஆனைமலையோடு இணைத்து, ஆனைமலையைத் தலைமையிடமாகக் கொண்டு வட்டாட்சியர் அலுவலகத்தை உருவாக்கினால், அரசினுடைய நலத் திட்டங்களை மக்களுக்கு உடனடியாகக் கொண்டு செல்வதற்கு

[2014 ஜூலை 30

வசதியாக இருக்கும். எனவே, அந்த அடிப்படையில், ஆனைமலையைத் தலைமையிடமாகக் கொண்டு வட்டாட்சியர் அலுவலகத்தை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே அனுமதியைப் பெற்று, அங்கு புதிய வட்டாட்சியர் அலுவலகத்தை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் சேவையை மேம்படுத்தவும், மக்களுக்கு விரைவான சேவையை அளிக்கவும், வருவாய்த் துறையை மக்கள் எளிதில் அணுகவும், முன்மாதிரியான நடவடிக்கைகளைத் தாயுள்ளம் கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது. பொதுமக்கள் வருவாய்த் துறையை எளிதில் அணுகிட, மக்கள்தொகை மற்றும் நிலப்பரப்பின் அடிப்படையில், வட்டங்கள் மற்றும் வருவாய்க் கோட்டங்கள் பிரிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்கள், கோட்டங்கள் மற்றும் வட்டங்களைப் பிரிப்பது தொடர்பாக, மக்கள்தொகை, பரப்பளவு மற்றும் வருவாய்க் கிராமங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003-ல் அளவுகோல் நிர்ணயிக்கப்பட்டு, ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இருப்பினும், தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள், சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் அளித்த அறிக்கையில் அறிவித்தவாறு, அரசாணை (2-D) எண் 176, வருவாய்த் துறை, நாள் 15-6-2012-ல், 4 இலட்சத்திற்கும் மேல் மக்கள்தொகை கொண்ட வருவாய் வட்டங்களைப் பிரிக்கவும், இதனை நிறைவேற்றும் பொருட்டு, தமிழகத்திலுள்ள வருவாய் வட்டங்களின் மக்கள்தொகை, பரப்பளவு, வருவாய்க் கிராமங்கள் ஆகியவற்றினைக் கணக்கிலே கொண்டு அரசுக்குப் பரிந்துரை அளிக்க, முதன்மைச் செயலாளர்-வருவாய் நிருவாக ஆணையர், முதன்மைச் செயலாளர்-நில நிருவாக ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர்-நிலச் சீர்திருத்த ஆணையர் ஆகிய மூன்று உயர் அலுவலர்களைக் கொண்டு அலுவலர் குழு ஒன்று

2014 ஜூலை 30]

அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், புதிதாக வட்டங்களை உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்களின் புனித அரசால் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, 2012-2013 ஆம் நிதியாண்டில் 9 வட்டங்கள், 2013-2014 ஆம் நிதியாண்டில் 25 வட்டங்கள் என, மொத்தம் 34 புதிய வட்டங்களை உருவாக்கி, வரலாறு படைத்திருப்பவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம், தாயுருவ தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 282, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

282—

சீரமைத்தல்

***8809—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் அரசு மேல்நிலைப் பள்ளி வகுப்பறைக் கட்டடத்தினைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்து, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

[2014 ஜூலை 30

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் அரசு மேல்நிலைப் பள்ளி வகுப்பறைகளைச் சீரமைக்க, 2012-2013 ஆம் ஆண்டிற்கான கட்டடப் பராமரிப்பு நிதியிலிருந்து, ரூ.5.50 இலட்சம் பொதுப் பணித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருந்தமிழ்நாட்டின் அரசியல் வசந்தமே! அரசியல் புழுதிகளை அகற்றிய புயல் காற்றே! (மேசையைத் தட்டும் ஒலி) தன் தோளில் தமிழகத்தைத் தாங்குகிற இதயமே! தன் திறமையால் தமிழ் மண்ணைத் தழைத்தோங்க வைக்கும் சிகரமே! புறநானூற்றுப் புரட்சியே! புதுமைகளின் எழுச்சியே! (மேசையைத் தட்டும் ஒலி) கணக்குப் போட்டு, அன்னைத் தமிழகத்தைத் தட்டியெழுப்புகிற கண் துஞ்சா உழைப்பே! வாரிக் கொடுக்கிற வள்ளல் மனமே! வற்றாத அறிவுற்றே! மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கி மகிழ்கிறேன்.*

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட வள்ளியூரில் இருக்கும் பள்ளிக் கட்டடத்தைச் சீரமைக்க நிதி ஒதுக்கி, பணிகளை முடித்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். எனது தொகுதியில் உள்ள சமூகரெங்கபுரம், கூடங்குளம், செட்டிகுளம் ஆகிய பகுதிகளிலுள்ள பள்ளிகளுக்கும் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், பழவூர் மேல்நிலைப் பள்ளியில் 2010 ஆம் ஆண்டு நபார்டு வங்கித் திட்டத்தின்கீழ் சுமார் 82 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டன. ஆனால், ஏதோ காரணத்தினால் அந்தப் பணிகள் இன்றுவரை நிறைவு பெறாமல் இருக்கின்றன. அதற்குரிய விளக்கம் கேட்டு பொதுப் பணித் துறை மூலமாக கடிதம் எழுதியதற்கு, பணியைச் செய்த ஒப்பந்தக்காரர் வழக்கு

2014 ஜூலை 30]

தொடர்ந்திருப்பதால், அந்தப் பணிகள் நடைபெறாமல் இருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. எனவே, அந்தப் பணிகளைச் செய்து, உடனடியாக வகுப்பறைகளைக் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகரெங்கபுரம் மேல்நிலைப் பள்ளி, கூடங்குளம் மற்றும் செட்டிகுளம் ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இதுகுறித்து ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பழவூர் பள்ளியில் நபார்டு வங்கித் திட்டத்தின்மூலம் கட்டப்பட்ட கட்டடப் பணிகள் நிலுவையில் உள்ளன என்ற கருத்தைத் தெரிவித்திருக்கின்றார். அந்தப் பணிகளையும் ஆய்வு செய்து, அங்கு கட்டடங்கள் கட்டி முடிக்கப்படாமல் நிலுவையில் இருந்தால், உடனடியாக அந்தக் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 283, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

283—

மலைவாழ் மக்களுக்கு வீடு கட்டுதல்

***27709—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) அந்தியூர் தொகுதி, தொட்டகோம்பையிலுள்ள மலைவாழ் மக்களுக்கு வனத் துறையின் மூலமாக வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அந்தியூர் தொகுதி, தொட்டகோம்பையிலுள்ள மலைவாழ் மக்களுக்கு வீடுகள் கட்ட சம்பந்தப்பட்ட துறையின் அனுமதி பெற்று, தேவையான நிதியை வனத் துறைக்கு ஒதுக்கும்பட்சத்தில், வனச் சட்டங்கள் மற்றும் விதிகளின்படி ஆய்வு செய்து வீடுகள் கட்டும் பணிகளை மேற்கொள்ள ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமறை கண்ட வேதியின் அறிவும், பின்வரும் காலத்தை அறியும் வள்ளுவர் அறிவும், எதிரிலே இருப்பவர் சிந்தையை அறியும் ஞானியின் அறிவும், கோள்களின் இயக்கத்தைக் கணித்துக் கூறும் ஜோதிடர் அறிவும், சோதனைக் காலத்தையும் வெற்றிக் காலமாக மாற்றும் வியத்தகு அறிவும் (மேசையைத் தட்டும் ஒலி) வேண்டுவோர் மனதை ஊடுருவி அறியும் வள்ளலின் அறிவும் ஒருங்கே பெற்று, ஏற்றமிகு தமிழகத்தை இந்தியாவிற்கே வழிகாட்டியாக உருவாக்கியிருக்கும் எங்கள் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் தொட்டகோம்பை என்னும் மலை கிராமம் உள்ளது. இப்பகுதியில் 85 குடும்பங்களைச் சார்ந்த சுமார் 300 மலைவாழ் மக்கள் வசிக்கின்றனர். இவர்கள்

2014 ஜூலை 30]

ஆடுகள் மேய்த்தும், வனத்தில் விளையும் பொருட்களைச் சேகரித்தும் தங்கள் வாழ்க்கையை நடத்திவருகின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் சிரிய திட்டத்தின்கீழ் விலையில்லா ஆடுகள் மற்றும் இரைண்டர், மிக்சி, மின் விசிறி போன்ற அனைத்துப் பொருட்களும் இங்குள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும், இங்கு ஓர் அரசுப் பள்ளி இருக்கிறது. அதில் 2 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்தப் பள்ளியில் 50 குழந்தைகள் படிக்கின்றனர். இவர்கள் வசிப்பதற்கு போதிய வீடுகள் இல்லாத காரணத்தினால், இவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்களைக்கூட பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் 35 குடும்பங்களுக்கு ஓடுகள் வேய்ந்த வீடுகள் கட்டித் தரப்பட்டன. அந்த வீடுகள் அனைத்தும் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளன. இந்த நிலையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, இந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதற்கு தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 284, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

284—

காலிப் பணியிடங்கள்

***34516—திரு. ஆர். ராமமூர்த்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள மருத்துவர், செவிலியர் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை பணிவோடு வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 229 மருத்துவர் பணியிடங்களில் 190 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு அவர்கள் பணிபுரிந்துவருகின்றனர். மேலும், ஒப்பளிக்கப்பட்ட 250 செவிலியர் பணியிடங்களில் 250 பணியிடங்களும் முழுவதுமாக நிரப்பப்பட்டு, அவர்கள் பணியாற்றிவருகின்றனர். இதுதவிர, ஒப்பளிக்கப்பட்ட 85 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களில் 60 பணியிடங்கள் நிரப்பப்பட்டு அவர்கள் பணியாற்றிவருகின்றனர். காலியாக உள்ள மருத்துவர் மற்றும் பணியாளர்களின் பணியிடங்களை நிரப்பிட விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ராமமூர்த்தி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள ஸ்டான்லி மருத்துவமனை, ராஜீவ் காந்தி மருத்துவமனை போன்றவற்றில் இருக்கிற நெருக்கடியையும், நோயாளிகளின் அடர்த்தியையும் குறைப்பதற்காகத்தான் புறநகர் மருத்துவமனைகள் கட்டப்பட்டன. அப்படி கட்டப்பட்ட பெரியார் நகர் புறநகர் மருத்துவமனை மருத்துவக் கல்வித் துறையின்கீழ் இருந்தது. அப்போது முதுகலை படிக்கக்கூடிய மாணவர்களும், பயிற்சி மருத்துவர்களும் அங்கே வந்து சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், இப்போது மருத்துவ சேவைத் துறைக்கு அந்த மருத்துவமனை மாற்றப்பட்டு

2014 ஜூலை 30]

விட்ட காரணத்தினால், போதுமான மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் ஊழியர்கள் இல்லை என்கிற நிலை இருக்கின்றது. ஏற்கெனவே, இதுகுறித்து அவையில் பேசியுள்ளேன். ஆகவே, மீண்டும் மருத்துவக் கல்வித் துறைக்கு பெரியார் நகர் மருத்துவமனையை மாற்றி, மருத்துவர்கள், செவிலியர்கள், இதர ஊழியர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் அண்ணா நகர், தண்டையார்பேட்டை, கே.கே. நகர், பெரியார் நகர் ஆகிய நான்கு இடங்களில் Peripheral hospitals இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் பெரியார் நகர் மருத்துவமனை மட்டும் D.M.S. control-வில் இருக்கின்றது. அதனை விரைவில் D.M.E. control-வில் கொண்டு வருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆய்வில் இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு இதனைக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவர்கள், செவிலியர்கள் போதுமான அளவில் இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை 17 ஆகும். 17 மருத்துவர்களும் முழுமையாகப் பணியில் இருக்கின்றார்கள். அதேபோன்று, செவிலியர்கள் எண்ணிக்கை 19 ; 19 பணியிடங்களிலும் செவிலியர்கள் முழுமையாக பணியில் இருக்கின்றார்கள். Para-medical பணியிடங்கள் 17 ஆகும். அந்த 17 பணியிடங்களிலும் முழுமையாக அவர்கள் பணியில் இருக்கின்றார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2014 ஜூலை 30

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 2 முதல் 7 வரை)@

பட்டியல் 2

1—

தங்கும் விடுதி கட்டுதல்

வினா எண் 32805—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் ஆய்வாளர் மாளிகையை உலக வங்கித் (IAMWARM) திட்டத்தின் மூலமாக விடுதியாகக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* நீர்வள நிலவளத் திட்டத்தில் தங்கும் விடுதி கட்டுவதற்கு திட்ட மதிப்பீட்டில் வழிவகை ஏதும் செய்யப்படவில்லை. இந்நிதி வாயிலாக வாய்க்கால், ஏரிகள் மற்றும் அணைக்கட்டு புனரமைப்புக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

2—

சார்நிலைக் கருவூலம் இடம் மாற்றம்

வினா எண் 37472—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

2014 ஜூலை 30]

குளச்சல் தொகுதி, திங்கள் நகரிலுள்ள இரணியல் சார்நிலைக் கருவூலத்தை மாற்றி வசதியான இடத்தில் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

இரணியல் சார் நிலைக் கருவூலத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3—

குடிநீர் கைப்பம்பு

வினா எண் 14949—திரு. கு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 34-வது வார்டிலுள்ள உப்பரபாளையம் 2-வது குறுக்கு தெருவில் உள்ள குடிநீர் கைப்பம்பை உயர்த்தி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் 34-வது வார்டிலுள்ள உப்பரபாளையம் 2-வது குறுக்கு தெருவில் உள்ள குடிநீர் கைப்பம்பு உயர்த்தி அமைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

[2014 ஜூலை 30

4—

குப்பைத்தொட்டிகள் அமைத்தல்

வினா எண் 15827—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சியில் அனைத்துத் தெருக்களிலும் குப்பைத் தொட்டிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பேரூராட்சியில் சேகரம் ஆகும் குப்பைகள் தினந்தோறும் மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என சுகாதார பணியாளர்கள்மூலம் வீடுதோறும் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இந்நடைமுறை, அனைத்துப் பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருவதால், மானாமதுரை பேரூராட்சியில் அனைத்துத் தெருக்களிலும் தனியே குப்பைத் தொட்டிகள் வைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

5—

ஷைட்ராலிக் வண்டி அளித்தல்

வினா எண் 18181—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகராட்சியில் தெரு விளக்குகள் (சோடியம் மற்றும் குழல்) அமைக்கவும்,

2014 ஜூலை 30]

இவ்விளக்குகளை பழுதுபார்க்க ஹைட்ராலிக் வண்டியும் அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேவகோட்டை நகராட்சியில், தெரு விளக்குகள் பராமரிப்புப் பணிகளை தனியார்மூலம் மேற்கொள்வதால் தற்போது ஹைட்ராலிக் வண்டி தேவைப்படவில்லை.

6—

கொசு ஒழிப்பு நடவடிக்கை

வினா எண் 28563—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை, திருப்புவனம், இளையான்குடி ஆகிய 3 பேரூராட்சிகளிலும் கொசு ஒழிப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை, திருப்புவனம் மற்றும் இளையான்குடி பேரூராட்சிகளில் தலா 18 வார்டுகள் உள்ளன. இதில் சுழற்சி முறையில் தினந்தோறும் தலா 9 வார்டுகளில் 2 புகைபோக்கி இயந்திரம் மற்றும் ஒரு

[2014 ஜூலை 30

கைத்தெளிப்பான்மூலம் கொசு மருந்துகள் தெளிக்கப்பட்டு வருகிறது. இதில் தலா ஒவ்வொரு பேரூராட்சியிலும் 6 சுகாதாரப் பணியாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், இப்பேரூராட்சிகளில் உள்ள வடிகால்களில் சுழிவுநீர் தேங்காதவாறு, ஒவ்வொரு பேரூராட்சியிலும் தலா 10 சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு வடிகால்கள் சுத்தம் செய்யப்பட்டு கொசு உற்பத்தியை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7—

பூங்கா மற்றும் நீரூற்று பராமரிப்பு

வினா எண் 29126—திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழும்பூர் தொகுதி, 78-வது வட்டம், சூளை கண்ணப்பர் திடல் மூன்று வழிச்சாலையின் மத்தியில் உள்ள பூங்கா மற்றும் நீரூற்று ஆகியவற்றை பழுதுபார்த்து பராமரித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எழும்பூர் தொகுதி, 78-வது வட்டம், சூளை கண்ணப்பர் திடல் மூன்று வழிச்சாலையின் மத்தியில் உள்ள பூங்கா மற்றும் நீரூற்று ஆகியவற்றை பழுதுபார்த்து பராமரித்திட நடப்பு நிதியாண்டில், பராமரிப்புப் பணிக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்ததாரர் நியமனம் செய்து, மேற்கொண்ட பணியினை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2014 ஜூலை 30]

8—

தெரு விளக்கு அமைத்தல்

வினா எண் 29642—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி, 12-வது வார்டிலுள்ள 4, 5-வது தெருவிற்கு தெரு விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேனி, அல்லிநகரம் நகராட்சி, 12-வது வார்டிலுள்ள 4 மற்றும் 5-வது தெருக்களில் (IUDM) 2011-2012 ஆம் ஆண்டு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மின் விளக்கு அமைக்க மின் வாரியத்திற்கு மதிப்பீடு தொகை செலுத்தப்பட்டு, மின் விளக்கு பொருத்தப்பட்டுள்ளது.

9—

குளியலறை வசதி

வினா எண் 29993—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி நகராட்சிப் பகுதி, ஆசாத் நகர் ஆதி திராவிடர் குடியிருப்பு பெண்களுக்கு தனி கழிவறை மற்றும் குளியலறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி நகராட்சிப் பகுதி, ஆசாத் நகர் ஆதி திராவிடர் குடியிருப்பில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு தனித் தனியாக கழிவறை மற்றும் குளியலறை வசதி செய்யப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

10—

சிறு மின் விசை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 30580—திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, ஆரணி 9-வது வார்டு, தந்தை பெரியார் தெருவில் உள்ள கை இறைப்பானை சிறு மின் விசை நீர்த் தேக்கத் தொட்டியாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி நகராட்சி, ஆரணி 9-வது வார்டு, தந்தை பெரியார் தெருவில் உள்ள கை இறைப்பானை சிறு மின் விசை நீர்த்தேக்கத் தொட்டியாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

2014 ஜூலை 30]

11—

மாவட்ட விரைவு நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 32855—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வழக்குகளை விரைவாக நடத்த மாவட்ட விரைவு நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

வழக்குகளை விரைவாக நடத்த மாவட்ட விரைவு நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

12—

குப்பையை அகற்றுதல்

வினா எண் 35491—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, கொடுங்கையூர், எழில் நகர் கால்வாயில் உள்ள குப்பையை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, கொடுங்கையூர், எழில் நகர் கால்வாயில் சென்னை மாநகராட்சி மழைநீர் வடிகால் துறைமூலம் இருபக்க சுவர்கள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

[2014 ஜூலை 30

அப்பணி முடிந்தவுடன் கால்வாயில் உள்ள மண் மற்றும் குப்பைகள் எடுக்கப்பட்டு தரைப்பகுதி முழுவதும் காங்கிரீட் படுக்கையாக மாற்றி சீரமைக்கப்படும்.

இப்பணி முடியும் வரை தற்பொழுது அவ்வப்பொழுது தற்காலிகமாக சேரும் குப்பைகள் அகற்றப்பட்டு வருகின்றன.

13—

தகுதி வயதை மாற்றியமைத்தல்

வினா எண் 38111—திரு. க. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் குரூப்-1 தேர்வு எழுதும் தகுதி வயதை பொதுப் பிரிவினருக்கு 40 என்றும் மற்ற பிரிவினருக்கு வயது 45 என்றும் மாற்றி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தொகுதி-1 தேர்வில் அடங்கியுள்ள எட்டு பணியிடங்களுக்கும் பொதுப் பிரிவினருக்கு அதிகபட்ச வயது வரம்பு 30 எனவும், இதர பிரிவினருக்கு 35 எனவும் ஒரே மாதிரியான உச்ச வயது வரம்பு கொண்டு வரப்பட்டு நடைமுறையில் உள்ளது. மேற்படி வயது வரம்பினை உயர்த்துவது என்பது அரசின் கொள்கை முடிவு. தற்போது உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை.

14—

மழைநீர் வடிகால் அமைக்கும் பணி

வினா எண் 39833—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) சென்னை, மயிலாப்பூர் பாலகிருஷ்ணா தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியை துரிதப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) சென்னை மாநகராட்சி, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மழைநீர் தேங்கும் இடங்களில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிகளை செயல்படுத்தி வருகிறது. இதன்கீழ் மயிலாப்பூர் பாலகிருஷ்ணா தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) வரும் டிசம்பர், 2013 இறுதிக்குள் மழைநீர் வடிகால்வாய் கட்டி முடிக்கப்படும்.

15—

ஜவ்வரிசி தொழிலாளர்களை பாதுகாத்தல்

வினா எண் 2306—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜவ்வரிசி தொழில் செய்யும் தொழிலாளர்களை பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜவ்வரிசி தொழிலானது சிறு தொழில் அமைப்பின்கீழ் வருகின்றது. அனைத்து ஜவ்வரிசி ஆலைகளும் தனியார்வசமே உள்ளன. இத்தொழிலானது, பெரும்பாலும்

[2014 ஜூலை 30

பருவகால அடிப்படையில் இயங்கி வருகிறது. இத்தொழிலில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களுக்கு தொழிற்சாலை சட்டம் மற்றும் தொழில் சம்பந்தப்பட்ட சட்டங்கள் பொருந்தும். இத்தொழிலில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களுக்கு, ஆலை அதிபர்களால் அவர்களுடைய ஊதியம் நீங்கலாக கீழ்க்காணும் வசதிகள் செய்து தரப்படுகின்றன:

1. இலவச இருப்பிடம்
2. தண்ணீர் வசதி
3. மின்சார வசதி
4. வீட்டுக்குத் தேவையான மளிகைப் பொருட்கள்
5. அவசர மருத்துவத் தேவைகள் மற்றும் செலவினங்கள்
6. காப்பீட்டு வசதி (ஒரு சில பெரிய ஆலைகளில்)
7. ESI வசதி (நிரந்தர தொழிலாளர்களுக்கு)

2. தொழில் வணிகத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் 'சேகோசர்வ்' சங்கத்தில் நாளது தேதியில் 364 ஜவ்வரிசி மற்றும் மாவு உற்பத்தியாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். ஒவ்வொரு ஜவ்வரிசி ஆலையிலும் சுமார் 50 தொழிலாளர்களும், மாவு ஆலைகளில் சுமார் 15 தொழிலாளர்கள் வீதமும் வேலை செய்து வருகின்றனர். இந்த பாரம்பரியத் தொழிலில் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும், தொழிலாளர்களின் வேலைப் பளுவினை எளிமையாக்கும் பொருட்டும், ஆலைகளில் நிறுவப்படும் நவீன இயந்திரங்களுக்கு அவற்றின் மதிப்பில் 50 சதவீதம், அதிகபட்சமாக ரூ.4 இலட்சம் வரை அரசு மானியம் வழங்குகிறது.

16—

கூட்டுறவு சேகோ பேக்டரி அமைத்தல்

வினா எண் 6789—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) தருமபுரி மாவட்டம், அரூரில் மரவள்ளிக்கிழங்கு விவசாயிகளுக்கு அரசே கூட்டுறவு சேகோ பேக்டரி அமைக்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதியில் சுமார் 12,300 ஹெக்டேர் நிலப்பரப்பளவில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்யப்பட்டு, வருடத்திற்கு 1,98,000 மெட்ரிக் டன் மரவள்ளிக் கிழங்கு கிடைத்து வருகிறது. அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் சுமார் 31 நிறுவனங்கள் மரவள்ளிக் கிழங்கை மூலப்பொருளாகக் கொண்டு ஸ்டார்ச்சு உற்பத்தி செய்து வருகின்றன. மேற்படி நிறுவனங்களுக்கு அதன் அரவைத்திறன் அடிப்படையில் தேவைப்படும் மரவள்ளிக் கிழங்கின் அளவு சுமார் 42,000 மெட்ரிக் டன் ஆகும். மூலப்பொருள் பற்றாக்குறையின் காரணமாக சுமார் 5 மாத காலம் மட்டுமே உற்பத்தித் தொழிலில் இந்நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. ஆகவே, அரசால் கூட்டுறவு சேகோ ஆலை அமைத்திடும் சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தருமபுரி மாவட்டத்தில் ஐவ்வரிசி கூட்டுறவுத் தொழில் நிறுவனங்கள் அமைக்க முன்வருவார்களேயானால், அவர்கள் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மதிப்பில் 25% அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் முதலீட்டு மானியம், உற்பத்தி தொடங்கிய முதல் 36 மாதங்களுக்கு குறைந்தழுத்த மின் மானியம் 20%320 KVA திறனுள்ள மின்னாக்கிகளுக்கு மின்னாக்கி மானியம், தொடர்ந்து 25 நபர்களுக்கு வேலைவாய்ப்பு 3 ஆண்டுகளுக்கு மேல் வழங்கப்பட்டால் கூடுதல் 5% மானியம் மற்றும் வேலைவாய்ப்பு பெருக்க மானியம் உள்ளிட்ட சலுகைகளும், மேலும், அரசினால் செயல்படுத்தப்படும் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டம் புதிதாக தொழில் துவங்குவோர்களுக்கு வழங்கப்படும்.

[2014 ஜூலை 30

17—

கலைப்பொருட்கள் உற்பத்தி

வினா எண் 25403—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் மர சிற்பம் மற்றும் மரத்தாலான கலைப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிலை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், கள்ளக்குறிச்சியில் மர சிற்பங்கள் உற்பத்திக்கான பிரத்தியேக உற்பத்தி நிலையம் இயங்கி வருகிறது. எனவே, மானாமதுரை தொகுதியில் மர சிற்பம் மற்றும் மரத்தாலான கலைப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிலை உருவாக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

18—

அழகு கலைப்பொருட்கள் உருவாக்குதல்

வினா எண் 25408—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் வேளாண் உபகரணங்கள் மற்றும் குத்துவிளக்குகள் போன்ற அழகு கலைப் பொருட்கள் உருவாக்கும் தொழில் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு கைத்திறத்தொழில்கள் வளர்ச்சிக் கழகம், விளக்குகள் உற்பத்திக்காக நாச்சியார்கோவில், மதுரை மற்றும் வாகைகுளம் ஆகிய இடங்களில் உற்பத்தி நிலையங்களை இயக்கி வருகிறது. எனவே, மானாமதுரை தொகுதியில் குத்துவிளக்குகள் போன்ற அழகு கலைப் பொருட்கள் உருவாக்கும் தொழில் அமைப்பதற்கான திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

19—

சேகோசர்வ் உற்பத்தி

வினா எண் 35474—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேகோ உற்பத்தியை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் 359 உறுப்பினர்களைக் கொண்ட 99 சேகோசர்வ் ஆலைகளுக்கு நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டமைக்கு அரசின் பங்களிப்பாக 50 சதவீதமும், சேகோசர்வ் பங்களிப்பாக 50 சதவீதமும் கீழ்க்கண்டவாறு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

[2014 ஜூலை 30

(ரூ. இலட்சத்தில்)

ஆண்டு	அரசின் பங்களிப்பு	சேகோசர்வின் பங்களிப்பு	மொத்த மானியம்
2006-07	50,000	50,000	100,00
2007-08	15,146	15,146	30.290
2008-09	49.716	49,716	99,430
2009-10	–	–	–
2010-11	–	–	–
2011-12	–	–	–
மொத்தம்	114.862	114.862	279.720

மேலும், 2012–2013 ஆம் ஆண்டில் 34 ஆலைகளுக்கு நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

20—

தாய்கோ வங்கிக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 37240—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி தாய்கோ வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழிற்கூட்டுறவு வங்கி என்பது வணிகப் பெயராக "தாய்கோ வங்கி" என்று அழைக்கப்பட்டு

2014 ஜூலை 30]

தொழில் ஆணையரை செயற்பதிவாளராகக் கொண்டு தொழில் வணிகத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் கூட்டுறவு வங்கியாகும். இவ்வங்கி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்டு அவற்றிற்கு காசுக் கடன் மற்றும் காலக் கடன் போன்ற நிதியுதவிகளைச் செய்து செயல்பட்டு வருகிறது. மேலும், பொது மக்களுக்கான வீட்டு அடமானக் கடன், அதிக பற்றுக் கடன், நகைக் கடன் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்களுக்கான தமிழக அரசின் புதிய தொழில் முனைவோர்—தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டம் (Needs) போன்ற திட்டங்களுக்கு கடன் வசதி செய்து தருகிறது. இதன் தலைமையகம் சென்னையிலும், தமிழ்நாடு முழுவதும் 44 கிளைகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இவற்றில் தலைமையகம், எழும்பூர் கிளை மற்றும் ராஜா அண்ணாமலைபுரம் கிளை ஆகியவை மட்டுமே சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன மேலும், காரைக்குடியில் தாய்கோ வங்கி கிளைக்காக சொந்தக் கட்டடம் கட்டுவது பற்றிய பரிசிலனை ஏதும் அரசிடம் இல்லை.

21—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 38656—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், கணபதிபாளையம் கிராம ஊராட்சி, கவுண்டம்பாளையத்தில் உள்ள சிட்கோ தொழிற்பேட்டையில் தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: (அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், கணபதிபாளையம் கிராம ஊராட்சி, கவுண்டம்பாளையத்தில் செயல்பட்டு வரும் சிட்கோ தொழிற்பேட்டையில் தெரு

[2014 ஜூலை 30

விளக்குகள் அமைப்பதற்கு சிட்கோ நிறுவனம்மூலம் கணபதிபாளையம் சிட்கோ தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் விருப்பத்தைத் தெரிந்துகொண்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உதவியுடன் உடனடியாக தெரு விளக்குகள் அமைத்துத் தரப்படும். தெருவிளக்குகள் அமைத்துக் கொடுத்தால், அதற்கான பராமரிப்பு செலவு தொழிற்கூட உரிமையாளர்களிடம் வசூல் செய்யப்படும் என்ற நிபந்தனையுடனும், கணபதிபாளையம் சிட்கோ தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் ஏற்புதலுடனும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உதவியுடன் தெரு விளக்குகள் அமைத்துத்தர சிட்கோமூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

22—

திருமண உதவித் தொகை

வினா எண் 17262—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வழங்கும் திருமண உதவித் தொகையை அனைத்து பெண்களுக்கும் சீராக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* சமூக நலத் துறையின்கீழ் கீழ்க்காணும் ஐந்து திருமண நிதியுதவித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்.
2. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம்.
3. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண நிதி உதவித் திட்டம்.

2014 ஜூலை 30]

4. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம்.

5. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம்.

இத்திட்டங்களின்கீழ் விண்ணப்பிக்கும் பயனாளிகளுக்கு கல்வித் தகுதியின் அடிப்படையில் ரூ.25,000/- மற்றும் ரூ.50,000/- நிதியுதவியும், 4 கிராம் (22 காரட்) தங்க நாணயமும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி அனைத்து சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கும்பட்சத்தில், விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, தகுதியின் அடிப்படையில் பயனாளிகளுக்கு திருமண நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, அனைத்து திருமண நிதியுதவித் திட்டங்களின்கீழ், கல்வித் தகுதியின் அடிப்படையில் அனைத்து பயனாளிகளுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

23—

வேலையில்லா பட்டதாரிகளுக்கு கல்விக் கடன் சலுகை

வினா எண் 27543—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்விக் கடன் பெற்ற வேலையில்லா பட்டதாரிகளுக்கு கடன் தொகையில் 40% மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) கல்விக் கடன், மத்திய அரசின் திட்டத்தின்கீழ் அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளின் வாயிலாக உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. எனவே, கல்விக் கடன் பெற்ற வேலையில்லா பட்டதாரிகளுக்கு கடன் தொகையில் 40% மானியம் வழங்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

[2014 ஜூலை 30

24—

கட்டட கட்டுமான பயிற்சியளித்தல்

வினா எண் 27557—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொறியியல் கல்லூரிகள் மூலமாக கட்டட கட்டுமான வேலையினை பயிற்றுவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) அரசு பொறியியல் கல்லூரிகளில் அமைப்பியல் (Civil Engineering) பாடப் பிரிவு நடத்தப்பட்டு வருகின்றது. ஆனால், அப்பொறியியல் கல்லூரிகள் மூலமாக கட்டட கட்டுமான வேலையினை பயிற்றுவிக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

25—

ஆராய்ச்சிப் படிப்பிற்கான உதவித் தொகை

வினா எண் 27559—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆராய்ச்சிப் படிப்பிற்கான உதவித் தொகையை பகுதி நேர ஆராய்ச்சி மாணவர்களுக்கும், தனியார் தொழிற்கல்வி பயில்வோருக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) அண்ணா பல்கலைக்கழகத்தில் முழுநேர ஆராய்ச்சி பயிலும் 50 மாணவ, மாணவிகளுக்கு Anna Centenary Research Fellowship *வழங்கப்படுகிறது. பகுதிநேர ஆராய்ச்சி மாணவர்களும், தனியார் தொழிற்கல்வி பயில்வோரும் ஏற்கெனவே வருவாய் ஈட்டுவதால், அவர்களுக்கு ஆராய்ச்சிப் படிப்பிற்கான உதவித் தொகையை வழங்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

(ஆ) எழுவில்லை.

26—

அரசு பொறியியல் கல்லூரி தொடங்குதல்

வினா எண் 31535—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், செட்டிக்கரையில் அரசு பொறியியல் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், செட்டிக்கரையில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்க அரசாணை (நிலை) எண் 11, உயர் கல்வி (ஜே2) துறை, நாள் 30-1-2013-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

[2014 ஜூலை 30

27—

காற்றாலை பொறியியல் படிப்பு உருவாக்குதல்

வினா எண் 34415—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவிலில் தொழில்நுட்பக் கல்லூரி, பொறியியல் கல்லூரியில் காற்றாலை பொறியியல் படிப்பு (Wind Energy Generation Technology Course Dip. & Degree) உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) நாகர்கோவிலில் தொழில்நுட்பக் கல்லூரி, பொறியியல் கல்லூரியில் காற்றாலை பொறியியல் படிப்பு (Wind Energy Generation Technology Course Dip. & Degree) உருவாக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

28—

கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களின் எண்ணிக்கை

வினா எண் 37540—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2011-2012 மற்றும் 2012-2013 ஆம் கல்வி ஆண்டுகளில் பல்வேறு பட்டப் படிப்புகளில் உள்ள மொத்த இடங்களில் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்கள் எத்தனை இடங்களைப் பெற்று கல்வி பயின்று வருகின்றார்கள்?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பல்வேறு பட்டப் படிப்புகளில் உள்ள மொத்த இடங்களில் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

வருடம்	பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களின் எண்ணிக்கை	
	ஆண்கள்	பெண்கள்
2011-2012	2,453	2,610
2012-2013	2,444	2,604

29—

மாணவியர் சேர்க்கைக்கான குழு

வினா எண் 39933—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு உதவி பெறும் கல்லூரிகளில் மாணவியர் சேர்க்கைக்கான குழு செயல்பட நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை (1டி) எண் 93, உயர் கல்வி (ஜி 1) துறை, நாள் 31-5-2013-ன்படி தமிழ்நாட்டில் அரசு/அரசு உதவி பெறும்/சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையின்போது கல்லூரி முதல்வர் மற்றும் இரு முதுநிலை இணைப் பேராசிரியர்கள் கொண்ட குழுவினை அமைத்து அக்குழுவின் வழிகாட்டுதலின் பேரிலேயே மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

[2014 ஜூலை 30

30—

ஆசிரியர்கள் பணி நிரந்தரம்

வினா எண் 41385—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 10 ஆண்டுகளாகப் பணிபுரியும் ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 10 ஆண்டுகளாகப் பணிபுரியும் பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

31—

விவசாயிகளுக்கு பயிற்சி

வினா எண் 9741—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பகுதியில் பூச்சி நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறையில் நெல் சாகுபடி செய்வது குறித்து விவசாயிகளுக்கு அறிவுறுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைத் துறையில், பூச்சி நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகளுக்கு பயிற்சிகள், விழிப்புணர்ச்சி முகாம்கள் மற்றும் விளம்பரங்கள் மூலமாக ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. பூச்சி நோய் தாக்குதல் பொருளாதார சேத நிலையைக் கடக்கும்போது அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு, ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறையைக் கையாண்டு, தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், ஐசோப்பாம் திட்டம் மற்றும் பருத்தி தொழில்நுட்பக் குழுமம் ஆகியவற்றின் கீழ் 50% மானியமும் மற்றும் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 100% மானியமும், நெல், பயறு பருத்தி, எண்ணெய்வித்து, மக்காச் சோளம் போன்ற பயிர்களுக்காக வேளாண்மைத் துறையின் மூலம் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் மற்றும் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

32—

விவசாயிகளை ஊக்குவித்தல்

வினா எண் 30659—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் பயறு வகைகள், நிலக்கடலை மற்றும் சுத்திரி பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். பயறு வகைகளை பயிரிட தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தில் (பயறு) 50 சதவிகித மானியத்தில் இடுபொருட்கள் வழங்கி விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

[2014 ஜூலை 30

நிலக்கடலை பயிரிட எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டத்தின் கீழ் 50 சதவிகித மானியத்தில் இடுபொருட்கள் வழங்கி விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

2013-2014 ஆம் ஆண்டில் மானாமதுரை தொகுதியில் 80 எக்டர் பரப்பளவில் கத்திரி பயிர் சாகுபடிக்கு எக்டருக்கு ரூ.15,000/- மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட கண்மாய் ஆயக்கட்டு விவசாயிகளுக்கு மட்டும் மானியம் வழங்கப்பட உள்ளது. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 20 எக்டர் பரப்பில் சாகுபடி செய்ய ஏதுவாக கத்திரி விதைகள் 50% மானியத்தில் விநியோகப்பட உள்ளன. கத்திரி சாகுபடியில் ஆர்வம் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் இத்திட்டத்தின் மூலம் மானியம் வழங்கப்பட உள்ளது.

33—

விவசாயிகளுக்கு மானியம்

வினா எண் 33007—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் தென்னை நாற்றங்கால் அமைத்து விவசாயிகளுக்கு மானியத்துடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில், சதுர்வேதி மங்கலத்தில் அரசு தென்னை நாற்றுப் பண்ணையும், திருப்புவனத்தில் தென்னை ஒட்டுசேர்ப்பு மையமும் இயங்கி வருகின்றன. சிவகங்கை மாவட்டத்தின் தென்னங்கன்றுகள் தேவை, இவ்விரு மையங்களால் பூர்த்தி செய்யப்படுகிறது. திருப்புவனத்தில் தென்னையில் ஒட்டுசேர்ப்பு பணிகள் செய்யப்பட்டு நெட்டை x குட்டை தென்னை நெற்றுகள் கொள்முதல் செய்யப்பட்டு

2014 ஜூலை 30]

சதுர்வேதிமங்கலத்தில் உள்ள அரசு தென்னை நாற்றுப் பண்ணைக்கு அனுப்பப்பட்டு அங்கு தென்னங்கன்றுகளாக உற்பத்தி செய்து சிவகங்கை மாவட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் வழங்கப்படுகிறது. நெட்டை கன்றுகளுக்கு, கன்று ஒன்றுக்கு ரூ.7.50/- வீதமும் மற்றும் நெட்டை X குட்டை கன்றுகளுக்கு ரூ.15.00 வீதமும் மானியம் வழங்கப்படுகிறது.

கடந்த 2012-2013 ஆம் ஆண்டில் சதுர்வேதிமங்கலத்தில் 8,000 நெட்டை நெற்றுகளும், திருப்புவனத்தில் 20,750 நெட்டை X குட்டை நெற்றுகளும் கொள்முதல் செய்யப்பட்டு இம்மாவட்டத்தில் 7,175 நெட்டை கன்றுகளும், 13,660 நெட்டை X குட்டை கன்றுகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

எனவே, சிவகங்கை மாவட்ட தென்னங்கன்றுகள் தேவையை இவ்விரு மையங்களும் பூர்த்தி செய்துவருவதால் புதியதாக மேலும் ஒரு தென்னை நாற்றுப்பண்ணையை மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் தோற்றுவிக்க வேண்டிய சூழ்நிலை எழவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

34—

ஆழ்குழாய்க் கிணறு

வினா எண் 35283—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதியில் விவசாயிகளுக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) வேளாண்மைப் பொறியியல் துறையினால் அரசு செலவிலோ அல்லது அரசின் மானியத்திலோ தென்காசி தொகுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்படுவதில்லை.

(ஆ) எழவில்லை.

[2014 ஜூலை 30

35—

பருத்தி ஆராய்ச்சி மையம் அமைத்தல்

வினா எண் 39740—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் பருத்தி ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* பருத்தி பற்றிய ஆராய்ச்சி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் திருவில்லிபுத்தூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் உள்ள பருத்தி ஆராய்ச்சி நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விவசாயிகள் தெரிவிக்கும் இடர்பாடுகளை நீக்க கோவில்பட்டி மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களிலும் அவ்வப்போது தேவைக்கேற்ப பருத்தி பற்றிய ஆராய்ச்சிகள் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர் பெருக்கம் மற்றும் மரபியல் மையத்தின் (CPBG) பருத்தித் துறையிலும் அதிக விளைச்சலைத் தரும் வீரிய பருத்தி ரகங்கள் மற்றும் விளைச்சலை அதிகரிக்கும் வழிமுறைகள் பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தால் (ICAR) செயல்படுத்தப்படும் கோவை மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம் (CICR) ஒன்று விவசாயிகளின் பருத்தி சாகுபடி பற்றிய சந்தேகங்களை நிவர்த்தி செய்வதுடன், பருத்தியில் அதிக உற்பத்தி செய்வதற்கேற்ற புதிய ரகங்கள் மற்றும் மேலாண்மை முறைகள் பற்றிய ஆராய்ச்சி செய்து வருகின்றது. ஆகையால், இந்த ஆராய்ச்சி நிலையங்களில் கண்டறியப்படும் தொழில்நுட்பங்கள் தமிழ்நாடு முழுவதற்கும் பயன் தருவதால், மானாமதுரை தொகுதியில் பருத்தி ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்க வேண்டிய அவசியமில்லை.

2014 ஜூலை 30]

36—

பயனாளிகள் எண்ணிக்கை

வினா எண் 3482—திரு. ஆர். கந்தர்ராஜன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கிகளின்மூலம் கடன் பெற்ற பயனாளிகள் எத்தனை பேர்?

(ஆ) நில அடமான கடன் எவ்வளவு வழங்கப்பட்டது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வழங்கிய கடன் விவரம் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை கீழே அளிக்கப்படுகிறது:

(i) பயிர்க் கடன்

(ரூ. கோடியில்)

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் ஆண்டு	பயனாளிகளின் எண்ணிக்கை	தொகை
2010-2011	*899685*	*2778.54*
2011-2012	*915674*	*3280.42*
2012-2013	*1020845*	*4069.44*
2013-2014 (செப்டம்பர் வரை)	*461864*	*2038.88*

[2014 ஜூலை 30

(ii) முதலீட்டுக் கடன்கள்

(ரூ. கோடியில்)

ஆண்டு	பயனாளிகள்	கடன் தொகை
2010-2011	41502	145.07
2011-2012	67071	281.24
2012-2013	65195	278.67
2013-2014 (செப்டம்பர் வரை)	17681	84.23

(iii) நகைக் கடன்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் ஆகியன வழங்கிய நகைக் கடன்கள் பின்வருமாறு:

(ரூ. கோடியில்)

ஆண்டு	பயனாளிகள்	தொகை
2010-2011	8745263	23049.93
2011-2012	8767277	28665.68
2012-2013	8449684	33372.95
2013-2014 (செப்டம்பர் வரை)	3385039	11933.93

2014 ஜூலை 30]

(iv) பண்ணை சாராக் கடன்கள்

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் வழங்கியுள்ள பண்ணைசாராக் கடன்கள் விவரம் பின்வருமாறு:

(ரூ. கோடியில்)

ஆண்டு	பயனாளிகள்	தொகை
2010-2011	45659	228.05
2011-2012	35368	211.38
2012-2013	39839	224.68
2013-2014 (செப்டம்பர் வரை)	20002	123.60

(v) சுய உதவிக் குழுக் கடன்கள்

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் ஆகியன வழங்கியுள்ள சுய உதவிக் குழுக் கடன்கள் விவரம் பின்வருமாறு:

(ரூ. கோடியில்)

ஆண்டு	பயனாளிகள்	தொகை
2010-2011	55082	448.63
2011-2012	95233	482.70
2012-2013	56524	493.73
2013-2014 (செப்டம்பர் வரை)	19975	187.14

[2014 ஜூலை 30

(vi) சிறு வணிகக் கடன்கள்

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் ஆகியன வழங்கிய சிறு வணிகக் கடன்கள் விவரம்:

(ரூ. கோடியில்)

ஆண்டு	பயனாளிகள்	தொகை
2010-2011	229536	166.44
2011-2012	160103	140.24
2012-2013	153835	141.32
2013-2014 (செப்டம்பர் வரை)	69301	65.67

(vii) பணிபுரியும் மகளிருக்கான கடன்கள்

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் ஆகியன வழங்கிய பணிபுரியும் மகளிருக்கான கடன்களின் விவரம்:

(ரூ. கோடியில்)

ஆண்டு	பயனாளிகள்	தொகை
2010-2011	8325	25.45
2011-2012	8695	30.91
2012-2013	9341	37.29
2013-2014 (செப்டம்பர் வரை)	4535	18.33

2014 ஜூலை 30]

(viii) மகளிர் தொழில்முனைவோர் கடன்கள்

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் ஆகியன வழங்கிய மகளிர் தொழில்முனைவோருக்கான கடன்கள்:

(ரூ. கோடியில்)

ஆண்டு	பயனாளிகள்	தொகை
2010-2011	9198	29.14
2011-2012	10127	32.98
2012-2013	11556	43.73
2013-2014 (செப்டம்பர் வரை)	5573	20.00

(ix) மாற்றுத் திறனாளிகளுக்கான கடன்கள்

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் ஆகியன வழங்கிய மாற்றுத் திறனாளிகளுக்கான கடன்கள் விவரம்:

(ரூ. கோடியில்)

ஆண்டு	பயனாளிகள்	தொகை
2010-2011	3783	9.79
2011-2012	6053	17.53
2012-2013	5445	17.55
2013-2014 (செப்டம்பர் வரை)	2495	8.92

[2014 ஜூலை 30

2. கூட்டுறவு வங்கிகளில் நில அடமானக் கடன் தற்போது வழங்கப்படவில்லை. அரசாணை (நிலை) எண் 49, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிசி1) துறை, நாள் 16-4-2012-ன்படி., வீட்டு அடமானக் கடன் திருப்பிச் செலுத்தும் காலம் 10 ஆண்டுகளாக அதிகரிக்கப்பட்டு, கடன் உச்சவரம்பு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக நிர்ணயித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் கீழ்க்கண்டவாறு வீட்டு அடமானக் கடன்கள் வழங்கியுள்ளன:

(ரூ. கோடியில்)

ஆண்டு	பயனாளிகள்	தொகை
2010-2011	13494	200.68
2011-2012	11666	202.33
2012-2013	11606	227.25
2013-2014 (செப்டம்பர் வரை)	6019	126.21

37—

கூட்டுறவு வங்கிக்கு கட்டடம்

வினா எண் 36275—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசபாக்கம் தொகுதி, ஏட்டிமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு சொந்த அலுவலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

ஏட்டிமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்குப் புதிய அலுவலகக் கட்டடம் கட்ட அனுமதி வேண்டி பதிவாளருக்கு 27-7-2009-ல் முன்மொழிவு பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏட்டிமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு ரூ.14.60 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்குக் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து நிதி உதவி வழங்குமாறு பதிவாளர் கடிதம் ந.க. 8907/2012 வேகதி 3, நாள் 9-4-2012-ல் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத் தனி அலுவலருக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. மேற்கண்ட திட்ட மதிப்பீடு ரூ.14.60 இலட்சத்தில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் மானியமாகவும், திருவண்ணாமலை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிமூலம் மத்திய காலக் கடனாக ரூ.4.60 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.14.60 இலட்சம் நிதி உதவி 2-1-2013 இல் சங்கத்திற்கு வீடுவிக்கப்பட்டுள்ளது. 12-5-2013-ல் கட்டுமானப் பணி துவக்கப்பட்டு, தற்போது கட்டுமானப் பணி நிறைவு பெற்றுள்ளது.

38—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 37179—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, மத்தளம்பாறை ஊராட்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்தளம்பாறை ஊராட்சி, எண் 0324 மத்தளம்பாறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன்

[2014 ஜூலை 30

சங்கத்தின் விவகார எல்லைக்குட்பட்ட ஒரு பகுதியாகும். மத்தளம்பாறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் 31-7-2013-ல் 1,421 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 823 உறுப்பினர்கள் கடன் பெற்று பயனடைந்து வருகின்றனர். தற்போது புதியதாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்கக் கோரும் மத்தளம்பாறை ஊராட்சியில் மக்களில் 425 பேர் மட்டுமே மத்தளம்பாறை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர் மத்தளம்பாறை கிராமத்திற்கும், மத்தளம்பாறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கும் இடையே உள்ள தூரம் 1/2 கிலோ மீட்டர் மட்டுமே. மத்தளம்பாறை கிராமத்தின் நிலப்பரப்பு 234 ஹெக்டேர் ஆகும். இதில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 185 ஹெக்டேர் ஆகும்.

மத்தளம்பாறை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் 2011-2012 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையின் படி ரூ. 735 இலட்சம் குவிந்த நட்டத்தில் இயங்குகிறது. மத்தளம்பாறை ஊராட்சியில் தனியாக தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்க விவகார எல்லையிலிருந்து மத்தளம்பாறை ஊராட்சியைப் பிரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இந்நிலையில் அச்சங்கத்தினைப் பிரித்து மத்தளம்பாறை ஊராட்சியில் புதிய சங்கம் அமைத்தால் மேலும் நட்டமடைந்து நலிவடைய வாய்ப்புள்ளது.

30-10-2006 நாளிட்ட அரசாணை (டி.) எண் 376-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி, பரிசீலிக்கையில் மத்தளம்பாறை ஊராட்சியில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

39—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 37182—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, குத்துக்கல்வலசை ஊராட்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எண் 0.629 பண்பொழி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் விவகார எல்லைக்குட்பட்ட பகுதியில் குத்துக்கல்வலசை ஒரு வருவாய்க் கிராமம் ஆகும். இக்கிராமத்துடன் பண்பொழி, வடகரை மற்றும் கணக்கபிள்ளைவலசை ஆகிய கிராமங்களும் இச்சங்கத்தின் விவகார எல்லையில் உள்ளன. 0.629 பண்பொழி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 31-7-2013-ல் 4,843 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 1023 உறுப்பினர்கள் கடன் பெற்று பயனடைந்து வருகின்றனர், தற்போது புதிதாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்கக் கோரும் குத்துக்கல்வலசை கிராம மக்களில் 120 பேர் மட்டுமே பண்பொழி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். குத்துக்கல்வலசை கிராமத்திற்கும், பண்பொழி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கும் இடையே உள்ள தூரம் 7 கிலோ மீட்டர் மட்டுமே. குத்துக்கல்வலசை கிராமத்தின் மொத்த நிலப்பரப்பு 250 ஏக்கர் ஆகும். இதில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 150 ஏக்கர் ஆகும் தற்போது சங்க விவகார எல்லையில் 710 ஏக்கர் மட்டுமே பயிரிடக்கூடிய நிலப்பரப்பு உள்ளது.

மேலும், பண்பொழி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் 2011-2012 ஆண்டு தணிக்கை அறிக்கையின்படி ரூ36.36 இலட்சம் குவிந்த நட்டத்தில் இயங்குகிறது. குத்துக்கல்வலசை கிராமத்தில் புதியதாக தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்கவேண்டுமானால் பண்பொழி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்க விவகார எல்லையிலிருந்து குத்துக்கல்வலசை கிராமத்தைப் பிரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஏற்கெனவே நட்டத்தில் இயங்கிகொண்டு இருக்கும் பண்பொழி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தினைப் பிரித்து குத்துக்கல்வலசை கிராமத்தில் புதிய சங்கம் அமைத்தால் மேலும் நட்டமடைந்து நலிவடைய வாய்ப்புள்ளது.

புதியதாக தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி.) எண் 376 கூட்டுறவு, உணவு

[2014 ஜூலை 30

மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-10-2006-ல் கீழ்க்கண்டவை நிபந்தனைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன:

1) குறைந்தபட்சம் 2,000 ஹெக்டேர் அல்லது 4,950 ஏக்கர் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு அதன் விவகார எல்லையில் இருக்க வேண்டும்.

2) மொத்த உறுப்பினர்களில் குறைந்தபட்சம் 80% கடன்பெறும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

3) புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் பயிர்க் கடன் மட்டுமல்லாது அவை வழங்கப்படும் கடன்களை பன்முகப்படுத்த வேண்டும்.

4) ஓராண்டிற்கு குறைந்தபட்சம் ரூ.2 கோடி அளவிற்கு அனைத்து வகை கடன்கள் வழங்கினால்தான் குறைந்தபட்சம் ரூ.5 இலட்சம் வட்டி வருவாய் ஈட்ட இயலும்.

ஆனால், மேற்கண்ட நிபந்தனைகளின்படி பரிசீலிக்கையில், குத்துக்கல்வலசை கிராமத்தில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 150 ஏக்கர் மட்டுமே உள்ளது. மேலும், ஓராண்டிற்கு குறைந்தபட்சம் ரூ.2 கோடி அளவிற்கு அனைத்து வகை கடன்களும் வழங்க வழிவகை இல்லாத நிலையில், குத்துக்கல்வலசை கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

40—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 38058—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, அரியப்பபுரம் ஊராட்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி எண் 0-1640 நாகல் குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் பணிப்பகுதியில் அரியப்பபுரம், நாகல்குளம், பெத்தநாடார்பட்டி., ஆண்டிப்பட்டி., ஆவுடையானூர், முத்துகிருஷ்ணபேரி ஆகிய கிராமங்கள் உள்ளன. 31-7-2013 தேதியில் நாகல்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 3,154 உறுப்பினர்களில் 514 உறுப்பினர்கள் கடன் பெற்று பயனடைந்து வருகின்றனர். தற்போது புதிதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்கக் கோரும் அரியப்பபுரம் கிராம மக்களில் 100 பேர் மட்டுமே நாகல்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர், அரியப்பபுரம், கிராமத்திற்கும், நாகல்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக், கடன் சங்கத்திற்கும் இடையே உள்ள தூரம் 5 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளது. அரியப்பபுரம் கிராமத்தின் மொத்த நிலப்பரப்பான 1,200 ஹெக்டேரில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 720 ஹெக்டேர் ஆகும்.

மேலும், நாகல்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் 2011-2012 ஆம் ஆண்டின் தணிக்கை அறிக்கையின்படி ரூ. 52.10 இலட்சம் குவிந்த நட்டத்தில் இயங்குகிறது. அரியப்பபுரம் கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வேண்டுமானால் நாகல்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்க விவகார எல்லையிலிருந்து அரியப்பபுரம் கிராமத்தை பிரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் ஏற்கெனவே நட்டத்தில் இயங்கிக் கொண்டு இருக்கும் நாகல்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தினைப் பிரித்து அரியப்பபுரம் கிராமத்தில் புதிய சங்கம் அமைத்தால், மேலும் நட்டமடைந்து நலிவடைய வாய்ப்பு உள்ளது.

புதியதாக தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி.) எண் 376, கூட்டுறவு, உணவு, மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள், 3-10-2006-ல் தெரிவிக்கப்பட்டுள்ள சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும். அதில் முக்கியமாக குறைந்தபட்சம் 2,000 ஹெக்டர் அல்லது 4,950 ஏக்கர் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு அதன் விவகார எல்லையில் இருக்க வேண்டும் என உள்ளது.

[2014 ஜூலை 30

ஆனால், அரியப்பபுரம் கிராமத்தில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 720 ஹெக்டேர் மட்டுமே உள்ளது. ஓராண்டிற்கு குறைந்தபட்சம் 2 கோடி அளவிற்கு அனைத்து வகை கடன்களும் வழங்க வழிவகை இல்லாத நிலையில், அரியப்பபுரம் கிராமத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

41—

கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்தல்

வினா எண் 38406—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, பாட்டாக்குறிச்சி ஊராட்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, எண் 0322 மேலகரம் வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் விவகார எல்லையில் பாட்டாக்குறிச்சி மேலகரம், குற்றாலம், காசிமேஜர்புரம், இலஞ்சி தென்காசி ஆயிரப்பேரி, பாட்டப்பத்து, கீழ்ப்புலியூர், சுந்தரபாண்டியபுரம் மற்றும் தட்டான்குளம் ஆகிய கிராமங்கள் உள்ளன. மேலகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 31-7-2013-ல் 9,562 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 1,456 உறுப்பினர்கள் கடன் பெற்று பயனடைந்து வருகின்றனர். தற்போது புதியதாக தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்கக்கோரும் பாட்டாக்குறிச்சி கிராம மக்களில் 140 பேர் மட்டுமே மேலகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். பாட்டாக்குறிச்சி கிராமத்திற்கும், மேலகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கும் இடையே உள்ள தூரம் 6 கிலோ மீட்டர் மட்டுமே. பாட்டாக்குறிச்சி கிராமத்தின் மொத்த நிலப்பரப்பு 270 ஏக்கர் ஆகும். இதில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 250 ஏக்கர் ஆகும்.

2014 ஜூலை 30]

மேலும், மேலகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் 2011-2012 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையின்படி ரூ.48.79 இலட்சம் குவிந்த நட்டத்தில் இயங்குகிறது. பாட்டாக்குறிச்சி கிராமத்தில் புதியதாக தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க வேண்டுமானால், மேலகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க விவகார எல்லையிலிருந்து பாட்டாக்குறிச்சி கிராமத்தைப் பிரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஏற்கெனவே நட்டத்தில் இயங்கிக் கொண்டு இருக்கும் மேலகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தினைப் பிரித்து பாட்டாக்குறிச்சி கிராமத்தில் சங்கம் அமைத்தால் மேலும் நட்டமடைந்து நலிவடைய வாய்ப்புள்ளது.

புதியதாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி.) என் 376 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-10-2006-ல் கீழ்க்கண்டவை நிபந்தனைகளாக குறிப்பிடப்பட்டுள்ளன:

1) குறைந்தபட்சம் 2,000 ஹெக்டேர் அல்லது 4,950 ஏக்கர் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு அதன் விவகார எல்லையில் இருக்க வேண்டும்.

2) மொத்த உறுப்பினர்களில் குறைந்தபட்சம் 80% கடன் பெறும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

3) புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் பயிர் கடன் மட்டுமல்லாது அவை வழங்கப்படும் கடன்களை பன்முகப்படுத்த வேண்டும்.

4) ஓராண்டிற்கு குறைந்தபட்சம் ரூ.2 கோடி அளவிற்கு அனைத்து வகை கடன்கள் வழங்கினால்தான் குறைந்தபட்சம் ரூ.5 இலட்சம் வட்டி வருவாய் ஈட்ட இயலும்.

மேற்கண்ட நிபந்தனைகளின்படி பரிசீலிக்கையில், பாட்டாக்குறிச்சி கிராமத்தில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 260 ஏக்கர் மட்டுமே உள்ளது. மேலும், ஓராண்டிற்கு குறைந்தபட்சம் ரூ.2 கோடி அளவிற்கு அனைத்து வகை கடன்களும் வழங்க வழிவகை இல்லாத நிலையில், பாட்டாக்குறிச்சி கிராமத்தில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

[2014 ஜூலை 30

42—

பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்குதல்

வினா எண் 36967—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், குத்துக்கல்வலசை மற்றும் பாட்டபத்து ஊராட்சிகளில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) படித்து, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, எவ்வித வேலைவாய்ப்பும் கிடைக்காமல் காத்திருக்கும் இளைஞர்களின் துயர் துடைக்கும் வகையில், அரசாணை (நிலை) எண் 72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை, நாள் 25-8-2006-ன்மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து ஐந்தாண்டுகளுக்கு மேல் உயிர் பதிவேட்டில் காத்திருக்கும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது:

1. *குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.*
2. *கல்வி நிறுவனங்களில் நேரடியாகக் கல்வி பயில்பவராக இருத்தல் கூடாது.*
3. *எந்த ஒரு நிறுவனத்திலும் பணிபுரிபவராக இருத்தல் கூடாது.*
4. *ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின பயனாளிகள் 45 வயதையும், இதர பயனாளிகள் 40 வயதையும் கடந்தவராக இருக்கக் கூடாது.*

2014 ஜூலை 30]

மேற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்ட வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப பின்வருமாறு உதவித் தொகை தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு அவர்களின் வங்கி சேமிப்புக் கணக்கில் ஒவ்வொரு காலாண்டிலும் வரவு வைக்கப்படுகிறது:

1. பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாதவர்களுக்கு மாதம் ரூ.100/-
2. பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.150/-
3. மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.200/-
4. பட்டதாரிகள் மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.300/-

மேற்கூறிய திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் செயல்படுத்தப்படுவதைப் போன்று திருநெல்வேலி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் உயிர் பதிவேட்டில் காத்திருக்கும் அனைத்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உதவித் தொகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தென்காசி தொகுதி, குத்துக்கல்வலசை மற்றும் பாட்டப்பத்து ஊராட்சிகளில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளும் இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெற மேற்கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில், அவர்கள் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை அணுகி உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து, தொடர்புடைய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கும் நேர்வில் அவர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

43—

நலிவடைந்த தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்

வினா எண் 41239—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நலிவடைந்த தொழிலாளர் குடும்பத்தினருக்கு ஓய்வூதியம் வழங்கும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற 60 வயது நிறைவடைந்த தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.1000/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. நலிவடைந்த தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஏதுமில்லை.

44—

முழுநேர நியாய விலைக் கடை

வினா எண் 28234—திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஒன்றியம், கடக்கத்தூர் ஊராட்சி, கடக்கத்தூர் நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்ற அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரி ஒன்றியம், கடக்கத்தூர் முழுநேர நியாய விலைக் கடை 976 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே செயல்பட்டுவரும் நிலையில், கடக்கத்தூர் நியாய விலைக் கடையை முழுநேரக் கடையாக மாற்றும் நோ்வு எழவில்லை.

45—

நிலத்தடி நீர் பாதிப்பைத் தடுத்தல்

வினா எண் 37495—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் வட்டம், பசியாபுரம், கீழடி பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளினால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, திருப்புவனம் வட்டத்திற்குட்பட்ட பரியாபுரம் மற்றும் கீழடி பகுதிகளில் நிலத்தடி நீர் மாசுபடுவதாக இதுவரை எவ்வித புகாரும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் பெறப்படவில்லை. இருப்பினும், இப்பகுதிகளில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆய்வு மேற்கொண்டபோது பொது மக்கள் நிலத்தடி நீரில் இயற்கையாகவே கடினத்தன்மை (Natural Hardness) இருப்பதாகவும், ஆகவே, நிலத்தடி நீரை காய்ச்சி உபயோகப்படுத்துவதாகவும் தெரிவித்தனர்.

மேலும், இப்பகுதிகளில் ஒரு ப்ளாஸ்டிக் பைப் தொழிற்சாலையும், ஒரு இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையும், ஒரு இன்ஜினியரிங் தொழிற்சாலையும் மற்றும் இரண்டு அகர் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் அமைந்துள்ளன. இவற்றில் ப்ளாஸ்டிக் பைப் மற்றும் இன்ஜினியரிங் தொழிற்சாலைகளில் எவ்வித செய்முறை கழிவுநீரும் உருவாகுவது இல்லை. இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையின் செயல்முறையில் உருவாகும் கழிவுநீர் சூரிய ஒளியின் வெப்பத்தின் மூலம் ஆவியாக்கப்படுகிறது. கூல்பாகியிலிருந்து அகர் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் தங்களது கழிவுநீரை முறையாக சுத்திகரித்து விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்றன. இருப்பினும் இத்தொழிற்சாலைகளை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

48—

உறைவிந்து குச்சிகள் உற்பத்தி

வினா எண் 15474—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள ஜெர்சி பொலிகாளை பண்ணையில் காங்கேயம், உம்பளாச்சேரி, பர்கூர், ஓங்கோல்,

[2014 ஜூலை 30

தார்பார்கர் போன்ற நாட்டின மாடுகளின் உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிந்தி, காங்கேயம், புலிகுளம் மற்றும் பர்கூர் இன பொலிகாளைகள் அவற்றின் பூர்வீக வாழ்விடங்களிலிருந்து தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலம் பெறப்பட்டு, ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையிலும், உம்பளாச்சேரி பொலிகாளைகள் ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்குப் பண்ணையிலும் வைத்து பராமரிக்கப்பட்டு அவற்றிலிருந்து உறைவிந்து சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. தற்பொழுது 8 சிந்தி இன பொலிகாளைகளும், 3 காங்கேயம் இன பொலிகாளைகளும், 4 புலிகுளம் இன பொலிகாளைகளும் மற்றும் 3 பர்கூர் இன பொலிகாளைகளும் ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் உறைவிந்து சேகரிப்பதற்காக பராமரிக்கப்பட்டு வருகின்றனை. ஒரு உம்பளாச்சேரி பொலிகாளை தற்பொழுது உறைவிந்து சேகரிக்கும் பணிக்காக ஈச்சங்கோட்டை கால்நடைப் பண்ணையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேலும், நமது மாநில கால்நடை இனப்பெருக்க கொள்கையின்படி, மேற்கண்ட இன பொலிகாளைகளை மட்டுமே உறைவிந்து பணிக்காக பராமரிக்க இயலும் என்பதால் ஓங்கோல் மற்றும் தார்பார்கள் இன பொலிகாளைகளை இத்துறையின் பண்ணைகளில் பராமரிப்பதில்லை. மேலும், இத்துறையின்கீழ் வரும் நீலகிரி மாவட்ட கால்நடைப் பண்ணை அமைந்துள்ள பகுதியின் தட்பவெப்ப நிலை, உள்நாட்டின பொலிகாளைகளை வைத்து பராமரிக்க ஏதுவானதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும், உள்நாட்டின கால்நடைகளின் எண்ணிக்கை மற்றும் தரத்தை மேம்படுத்திட மேற்கண்டவாறு உரிய நடவடிக்கைகளை இத்துறை எடுத்து வருகிறது.

(ஆ) எழவில்லை.

2014 ஜூலை 30]

47—

கால்நடை ஆய்வாளர் பணியிடம் நிரப்புதல்

வினா எண் 37087—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ கால்நடை ஆய்வாளர் காலிப் பணியிடங்களை நிரப்பும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ அரசாணை (நிலை) எண் 10, கால்நடை பராமரிப்பு, பால் வளம் (ம) மீன் வளத் (காபா) துறை, நாள் 27-1-2012-ன்மூலம் 2011-2012, 2012-2013, 2013-2014 ஆம் ஆண்டுகளுக்கு வருடந்தோறும் 350 நபர்களுக்கு கால்நடை ஆய்வாளர் பயிற்சியளிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாணையின்படி முதலாவதாக 2011-2012 ஆம் ஆண்டுக்கு கால்நடை ஆய்வாளர் பயிற்சி 11 மாதங்கள் வழங்கப்பட்டு தேர்வில் தேர்ச்சி பெற்ற 289 நபர்களுக்கு காலியாக உள்ள கால்நடை நிலையங்களில் கால்நடை ஆய்வாளர் நிலை-2 ஆக பணி நியமனம் மாண்புமிகு முதலமைச்சரால் 11-9-2013-ல் வழங்கப்பட்டது. மேலும், 2012-2013 ஆம் ஆண்டுக்கு 350 நபர்களை கால்நடை ஆய்வாளர் பயிற்சிக்கு தேர்வு செய்திடும் பணிகள் தற்போது நடவடிக்கையில் உள்ளன. தேர்வு செய்யப்படும் பயிற்சியாளர்களுக்கு 11 மாத கால கால்நடை ஆய்வாளர் பயிற்சியளித்து, தேர்வில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு கால்நடை ஆய்வாளர் நிலை-2 ஆக பணி நியமனம் வழங்கப்படும்.

48—

விலையில்லா ஆடு, மாடுகள் வழங்குதல்

வினா எண் 37503—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ அரசு மக்களுக்கு வழங்கும் விலையில்லா ஆடு, மாடுகளை பேரூராட்சிகளுக்கும் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஊரகப் பகுதிகளில் வாழும் வறிய நிலையிலுள்ள ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்பொருட்டு இலவசமாக வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின்மூலம் ஊரகப் பகுதிகளில் வசித்து வரும் நிலமற்ற 7 இலட்சம் ஏழை எளிய குடும்பங்களுக்கு இலவசமாக 4 வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் 5 ஆண்டுகளில் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, 2011-2012 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுகளில் இதுவரை 2,50,000 பயனாளிகளுக்கு இலவசமாக 10 இலட்சம் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் இலவச வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.

இதேபோன்று ஊரகப் பகுதிகளில் வாழ்கின்ற 60,000 ஏழைக் குடும்பங்களுக்கு 5 ஆண்டு காலத்தில் ஒவ்வோர் ஆண்டும் இலவசமாக 12,000 கலப்பின ஜெர்சி பசுக்கள், இலவச கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தில் வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

இதனைத் தொடர்ந்து 2011-2012 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுகளில் இதுவரை 24,000 பயனாளிகளுக்கு இலவசமாக 24,000 கறவைப் பசுக்கள், இலவச கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளன.

கிராமப்புறத்தில் கறவைப் பசு மற்றும் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகளுக்குத் தேவையான பசுந்தீவனம் கிடைக்கும். பேரூராட்சி, நகராட்சிகளில் பசுந்தீவனம் கிடைக்கும் வாய்ப்பு குறைவு, விளை நிலங்களும் குறைவு.

எனவே, இலவச வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் மற்றும் கறவை பசுக்கள் வழங்கும் திட்டங்கள் மூலமாக தமிழக அரசு

2014 ஜூலை 30]

மக்களுக்கு வழங்கும் ஆடு, மாடுகளை பேரூராட்சிகளுக்கும் வழங்குவது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

49—

தொழிற்பூங்கா அமைத்தல்

வினா எண் 39471—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டத்தில் தொழிற்பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள தென்மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை அதிகரிக்கவும், அங்குள்ள மக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்தும் நோக்கத்திலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற விதி 110-ன் கீழ் அறிவித்துள்ளபடி, சிப்காட் நிறுவனம், திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 1,500 ஏக்கர் நிலப்பரப்பில் பொறியியல் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் உருவாக்குவதற்காக ஒரு தொழிற்பூங்காவினை அமைக்கவுள்ளது. இதன் தொடர்பாக நிலம் கையகப்படுத்தும் பணிக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

50—

தொழிற்பூங்கா அமைத்தல்

வினா எண் 39473—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டத்தில் தொழிற்பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிப்காட் நிறுவனம், மீளவிட்டான் கிராமம், தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி மாவட்டத்தில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் 1,033 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்கெனவே ஒரு தொழில் வளாகத்தை உருவாக்கி, மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளை, தொழில் முனைவோருக்கு பல்வேறு தொழில் துவங்க வழங்கியுள்ளது. சுமார் 8.5-க்கும் மேற்பட்ட பல்வேறு தொழில் நிறுவனங்கள் தற்பொழுது இயங்கி வருகின்றன.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள தென்மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை அதிகரிக்கவும், அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்கத்திலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற விதி 110-ன்கீழ் அறிவித்துள்ளபடி, சிப்காட் நிறுவனம், தூத்துக்குடி மாவட்டத்தில் சுமார் 6,000 ஏக்கர் நிலப்பரப்பில் கடல்சார் தொழிற்சாலைகள், கப்பல் கட்டும் மற்றும் பராமரிக்கும் தொழிற்சாலைகள், கனரக மற்றும் இரசாயன உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்காக தொழிற்பூங்கா ஒன்று அமைக்கவுள்ளது. இதன் தொடர்பாக நிலம் கையகப்படுத்தும் பணிக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

51—

நெசவாளர்களுக்கான உதவித் தொகை வழங்குதல்

வினா எண் 32402—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெசவாளர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை காலதாமதமின்றி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் குடும்ப ஓய்வூதியத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ்

2014 ஜூலை 30]

கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் அரசின் உதவித் தொகை அவ்வப்போது விடுவிக்கப்பட்டு, சரக அளவில் மாதந்தோறும் கணக்கிடப்படும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

52—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 33859—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, கண்டனூர் பேரூராட்சி, அழகுநாச்சியம்மன் கோயில் ஊருணியைச் சுற்றிலும் 300 மீட்டர் தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், கே. அழகாபுரி அருள்மிகு அழகுநாச்சியம்மன் திருக்கோயில், துறை கட்டுப்பாட்டில் உள்ள சிவகங்கை நிருவாகத்திற்குட்பட்ட பரம்பரை அறங்காவலரால் நிருவகிக்கப்பட்டு வரும் திருக்கோயிலாகும். திருக்கோயிலின் ஒட்டுமொத்த ஆண்டு வருமானம் ரூ.2,50,65,762/- ஆகும். இத்திருக்கோயிலின் தனிப்பட்ட ஆண்டு வருமானம் ரூ.31,827/- ஆகும்.

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான ஊருணியில் பங்குனி மாதம் நடைபெறும் உற்சவத்தின்போது சுவாமி சகடையில் வீதி உலா வருவது வழக்கம் எனவும், வீதி உலாவில் சகடை ஊருணி கரைகளில் தார்ச்சாலை அமைக்க வேண்டியது அத்தியாவசியமாக உள்ளதாலும் திருக்கோயிலில் போதிய நிதிவசதி இல்லாததால் ஊரணி கரைகளைச் சுற்றிலும் 300 மீட்டர் தார்ச்சாலை அமைக்கும் பணியினை திருக்கோயில் பாத்தியதை கணக்குக்குப் பங்கம் ஏற்படா வண்ணம், ஊராட்சி நிதி அல்லது ஊராட்சி

[2014 ஜூலை 30

ஒன்றிய நிதி அல்லது கிராமப்புற நெடுஞ்சாலை நிதி அல்லது சட்டமன்ற உறுப்பினர் நிதி ஏதாவது கிடைக்கப்பெறின், அதன்மூலம் தார்ச்சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

இத்திருக்கோயிலைச் சுற்றி காலியிடமாக தேரோடும் வீதி 4.53 சென்ட் உள்ளது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

53—

வயோதிகர்களுக்கு சக்கர நாற்காலி வசதி

வினா எண் 33905—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமேஸ்வரம், இராமநாதசுவாமி கோயிலில் வயோதிகர்களுக்கு சக்கர நாற்காலி வசதியும், புனித நீராட வரும் பக்தர்களுக்கு கூடுதல் வசதியும் செய்துதர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு வருகின்ற வயோதிகர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்குப் பயன்படும் வகையில் 10 சக்கர நாற்காலிகள் புதியதாக கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. புனித நீராட வரும் பக்தர்களுக்கு கூடுதல் வசதியாக நிழற்பந்தல்கள் அமைக்கப்பட்டும், தீர்த்தம் நீராடச் செல்லும் வழிகளில், வழுக்கல் ஏற்படாத வகையில் தரைவிரிப்புகள் அமைக்கப்பட்டும், தீர்த்தக் கிணறுகளுக்கு எளிதாகச் செல்லும் வகையில் வழிகாட்டிப் பலகைகள் அமைக்கப்பட்டும், தீர்த்தம் நீராடும் பகுதிகளில், கூடுதல் மின்விளக்கு வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

54—

திருக்கோயிலுக்கு கூடுதல் வசதிகள்

வினா எண் 36187—திரு. பொன். ராஜா: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

பொன்னேரி தொகுதி, பொன்னேரி, திருஆயர்பாடி ஸ்ரீஹரிகிருஷ்ணபெருமாள் திருக்கோயிலுக்கு உள்பகுதி தரை மாற்றும், திருக்குளத்திற்கு படியுடன் கூடிய தடுப்புச் சுவர் மற்றும் 16 கால் மண்டப வாயில் பாதுகாப்பு ஆகியவற்றை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் மற்றும் நகர், திருஆயர்பாடி, அருள்மிகு ஸ்ரீஹரிகிருஷ்ணபெருமாள் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிருவாகம் செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் உட்பகுதியில் தரைதளம் ஏற்கெனவே அமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. திருக்குளம் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பொன்னேரி பேரூராட்சி நிருவாகத்தால் புனரமைக்கப்பட்டுள்ளது. திருக்குளத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்கவும், 16 கால் மண்டபத்தின் பாதுகாப்பை முன்னிட்டு இரும்பு கிரில் கேட் அமைக்கவும் திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

55—

திருக்கோயிலுக்கு கூடுதல் வசதிகள்

வினா எண் 35188—திரு. பொன். ராஜா: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, பொன்னேரி, அருள்மிகு ஸ்ரீ அகத்தீஸ்வரர்சுவாமி ஆலயத்திற்கு சுற்றுச் சுவர், திருக்குளத்திற்கு தடுப்புச் சுவர், யாகசாலை, தேர் வடிவமைப்பு, 16 கால் மண்டப வாயில் பாதுகாப்பு ஆகியவற்றை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் மற்றும் நகர், அருள்மிகு ஸ்ரீ அகத்தீஸ்வரர்சுவாமி திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிருவாகம் செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் உட்புறச் சுவர் நல்ல நிலையில் உள்ளது. வெளிப்பிரகார சுற்றுச் சுவரை சீரமைக்கவும், குளத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்கவும், 16 கால் மண்டபத்தின் பாதுகாப்பை முன்னிட்டு இரும்பு கிரில் கேட் அமைக்கவும், புதிதாக யாகசாலை மண்டபம் கட்டவும் திட்டமிடப்பட்டு பொதுமக்கள் பங்களிப்புடன் இப்பணிகளை மேற்கொள்ள திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு ஏற்கெனவே மரத்தேர் ஏதும் இல்லாத நிலையில் புதியதாக மரத்தேர் செய்திட வழிவகையில்லை.

56—

கோயில் குளம் சீரமைத்தல்

வினா எண் 39044—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, திருவல்லிக்கேணி, திருவேட்டீஸ்வரர் கோயில் குளத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை திருவல்லிக்கேணி, திருவேட்டீஸ்வரன்பேட்டை, அருள்மிகு திருவேட்டீஸ்வரர் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ்

2014 ஜூலை 30]

கொண்டுவரப்பட்டு, சட்டப் பிரிவு 46(ii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிலை-3 செயல் அலுவலர் நிலையிலும், அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில் துணை ஆணையர்/செயல் அலுவலர் தக்கார் நிலை பொறுப்பிலும் நிருவகிக்கப்பட்டு வரும் திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் பசலி 1421-ன் உதவித்தொகை நிர்ணய வருமானம் ரூ.24,08,597/- ஆகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக்குளத்தை மராமரத்துப் பணி செய்து சீரமைக்க ஏதுவாக பட்டய பொறியாளர் கொண்டு மதிப்பீடு தயார் செய்யும் பணி நடவடிக்கையில் உள்ளது. மேலும், பட்டயப் பொறியாளர் மதிப்பீடு தயார் செய்து அங்கீகாரம் பெறப்பட்டதும், விரைவில் பணி துவங்கி, செய்து முடிக்க ஏதுவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

57—

தெப்பக்குளம் சீரமைத்தல்

வினா எண் 39278—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, வடபழனி முருகன் கோயில் தெப்பக்குளத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, வடபழனி அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள சட்டப் பிரிவு 46(11)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட பட்டியலைச் சார்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் துணை ஆணையர்/செயல் அலுவலர் நிலையிலும், மேற்படி திருக்கோயில் துணை ஆணையரை தக்கார் நிலை பொறுப்பிலும் நிருவகிக்கப்பட்டுவரும் திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் பசலி 1422-ன் உதவித்தொகை நிர்ணய வருமானம் ரூ.7,02,58,127/- ஆகும்.

[2014 ஜூலை 30

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக கிழக்கு கோபுரம் எதிரே திருக்குளம் ஒன்று உள்ளது. இத்திருக்குளம் 226 அடி நீளமும் 226 அடி அகலமும் 16 அடி ஆழமும் கொண்டது. திருக்குளத்தின் பரப்பளவு 1.16 ஏக்கர் ஆகும். திருக்குளம் நடுவில் நீராழி மண்டபம் அமைந்துள்ளது. திருக்குளத்தில் மழைநீர் சேமிப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்சமயம் போதுமான மழை இல்லாத நிலையில் திருக்குளத்தில் தண்ணீர் இல்லை. திருக்குளம் நல்ல நிலையில் அமைந்துள்ளது. திருக்குளத்தைச் சுற்றிலும் 4 அடி உயரத்தில் சுற்றுச்சுவரும் அதற்கு மேல் 6 அடி உயரத்தில் இரும்பு வேலி அமைத்து பாதுகாக்கப்பட்டும், சுற்றுச்சுவரில் மாணிக்கப்பட்டைகள் அடித்தும், 4 பகுதிகளிலும் இரும்பு கேட் பொருத்தப்பட்டுள்ளது. அவ்வப்போது சிறு, சிறு மராமத்துகள் திருக்குளத்திற்கு திருக்கோயில் நிதிமூலம் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. திருக்குளத்தின் படிக்கட்டுகளில் உள்ள இடைவெளியில் சிமெண்ட் கலவை கொண்டு பாயிண்டிங் பணி மேற்கொள்ளப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளது.

58—

நில வழிகாட்டி மதிப்பு

வினா எண் 31603—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நில வழிகாட்டி மதிப்பை உயர்த்தாமல் தற்போதுள்ளபடியே அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு முத்திரை (சொத்துகளின் சந்தை மதிப்பு வழிகாட்டி மதிப்பிடுதல், வெளியிடுதல் மற்றும் திருத்தம்

2014 ஜூலை 30]

செய்தல் ஆகியவற்றிற்க்கான மதிப்பீட்டுக் குழு ஏற்படுத்துதல்) விதிகள், 2010-ல் ஆண்டுதோறும் வழிகாட்டி மதிப்பு திருத்தத்திற்கு வழிவகை செய்யப்பட்டிருப்பினும், 1-4-2012 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வழிகாட்டி மதிப்புகள் அதற்குப் பின்னர் உயர்த்தப்படாமல் தற்போதுள்ளபடியே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

59—

கல்வி ஊக்கத் தொகை

வினா எண் 34474—திரு. ஆர். ராமமூர்த்தி: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர் நல வாரியத்தில் முதியோர் ஓய்வூதியத் தொகை, கல்வி ஊக்கத் தொகை ஆகியவற்றை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மீனவர் நல வாரியம் 2007-ல் துவக்கப்பட்டு, இதுவரை கல்வி உதவித் தொகையாக 18,629 பயனாளிகளுக்கு ரூ.3,10,82,550/- வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீனவர் நல வாரிய சட்டத்தின்படி முதியோர் ஓய்வூதியம் ரூ.400/- மாதம் ஒன்றுக்கு வழங்கப்படவேண்டும். ஆனால், இதுநாள் வரையில் முதியோர் ஓய்வூதியம் கேட்டு விண்ணப்பங்கள் எதுவும் மீன் துறை உதவி இயக்குநர்களின் மூலம் பெறப்படவில்லை. வருவாய்த் துறையின்மூலம் கொடுக்கப்படும் முதியோர் ஓய்வூதியத் தொகை மாதம் ரூ.1,000/- என்பதால் மீனவர் நல வாரியத்தில் உறுப்பினராகவுள்ள 65 வயது முடித்த உறுப்பினர்களுக்கு அந்தந்த மாவட்ட மீன் துறை உதவி இயக்குநரின் பரிந்துரையுடன் வருவாய்த் துறையினரின்மூலம் முதியோர் ஓய்வூதியம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

[2014 ஜூலை 30

60—

பனை மரங்களைப் பாதுகாத்தல்

வினா எண் 17181—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அழிந்து வரும் பனை மரங்களைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வனத் துறையைப் பொறுத்தமட்டில், பனை மரக்காடுகள் வளர்க்கும் திட்டம் ஏதுமில்லை. எனினும், காப்புக் காடுகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாகவும் மற்றும் எல்லையோரங்களிலும் இயற்கையாக வளர்ந்துள்ள பனை மரங்கள் (Borassus Flabelifer) வனப் பாதுகாப்பு பணியாளர்களைக் கொண்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பனை மரங்கள் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருவதாக துறையில் அண்மையில் தகவல்கள் எதுவும் பெறப்படவில்லை.

பொதுவாக, மாநிலம் முழுவதும் வனப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு திருட்டு, வெட்டுகள் நிகழாவண்ணம் வனப் பணியாளர்கள் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இதில் பனை மரப் பாதுகாப்பும் அடங்கும்.

61—

இலவச மரக் கன்றுகள் வழங்குதல்

வினா எண் 17657—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேக்கு, வேங்கை, மருது போன்ற விலையுயர்ந்த மரக் கன்றுகளை இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, பெருமளவு மரம் நடும் திட்டத்தின்கீழ் 2011-2012 மற்றும் 2012-2013 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில் 64 இலட்சம் மரக் கன்றுகள் ரூ.27.22 கோடி செலவில், மாவட்டத்தோறும் 2 இலட்சம் மரக் கன்றுகள் என்ற வீதத்தில் தேக்கு, வேங்கை உள்ளிட்ட மரக் கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. அதேபோல், 2012-2013 முதல் 2014-2015 வரையான மூன்றாண்டுகளில் ரூ.43.55 கோடி செலவில் 30-9-2013 வரையான காலத்தில் 20.27 இலட்சம் மரக் கன்றுகள் நடவு செய்யப்பட்டு திட்டம் தொடர்ந்து செயலாக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு உயிரிபன்மைப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின்கீழ் தனியார் நிலங்களில் மரம் நடும் திட்டத்தின் கீழ், 2012-2013 ஆம் ஆண்டில் 93.00 இலட்சம் மரக் கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. அதேபோல், 2013-2014 ஆம் ஆண்டிலும் 2 கோடி மரக்கன்றுகள் தனியார் விவசாய நிலங்களில் நடவு செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ளன. இவற்றில் தேக்கு, வேங்கை போன்ற மரக் கன்றுகளும் அடங்கும். இது தவிர, இலவசமாக மரக் கன்றுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் 2012-2013 ஆம் ஆண்டில் ரூ. 32.19 இலட்சங்கள் செலவில், 5 இலட்சம் மரக் கன்றுகள் பள்ளிகள், தொழிற்சாலைகள், பொதுமக்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 2013-2014 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ், ரூ.92.72 இலட்சங்கள் செலவில், 9,76,000 மரக் கன்றுகள் இலவசமாக வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளன.

62—

படைக்கலம் வழங்குதல்

வினா எண் 1773§—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனத் துறையில் உள்ள வனப் பாதுகாவலர்களுக்கு படைக்கலம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வனத் துறையில் உள்ள பணியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உட்பட அனைத்து நிலைகளிலும் உள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு படைக்கலன்கள் அரசாணை ஆணை எண் 689, வனம் & மீன் துறை, நாள்: 21-6-1988-ன்படி கீழ்க்கண்டவாறு ஏற்கெனவே வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

* Range Officer and above	:	9 mm Pistol
* Forester and FG	:	DBBL Double Rifle
* Rifle (Sandal wood & Elephant poaching area) to frontline staff		

மேலும், வன அலுவலர்களுக்கு கீழ்க்கண்ட நவீன படைக்கலன்கள் வழங்கப்பட்டுள்ளன:

(1) 410 மஸ்கட்	- 149 எண்ணிக்கை
(2) 0.12 போர் டிபிபிஎல்.	- 224 எண்ணிக்கை
(3) .315 ரைபிள்	- 143 எண்ணிக்கை
(4) 7.62 போல்ட் ஆக்ஷன் ரைபிள்	- 500 எண்ணிக்கை
(5) க்ளாக் 17 பிஸ்டல்	- 186 எண்ணிக்கை
(6) ரிவால்வர்	- 06 எண்ணிக்கை
(7) .303	- 10 எண்ணிக்கை
(8) .32	- 22 எண்ணிக்கை
(9) எம்.சி.வி. 90 பேனட்ஸ்	- 01 எண்ணிக்கை
(10) எஸ்.பி.பி.எல்.	- 20 எண்ணிக்கை
(11) 9 எம்.எம். க்ளாக் பிஸ்டல்	- 12 எண்ணிக்கை
(12) ஏர் கன்	- 01 எண்ணிக்கை

2014 ஜூலை 30]

மேலும், 13-வது நிதிக் குழுமம் ஒதுக்கீட்டின்படி 2010-2011 முதல் 2014–2015 வரையிலான காலங்களில் படைகலன்கள் கொள்முதல் செய்ய ரூ.150 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

63—

நாட்டு கருவேல மரங்கள் வளர்த்தல்

வினா எண் 25984—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், எஸ். காரைக்குடி கண்மாயில் நாட்டுக் கருவேல மரங்கள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், எஸ். காரைக்குடி கண்மாய் பொதுப் பணித் துறைக்கு சொந்தமானது. பொதுப் பணித் துறைக்கு சொந்தமான கண்மாய்களில் கருவேல மரங்கள் நட தடை உத்தரவு உள்ளதால், மேற்கண்ட இடங்களில் கருவேல மரக் கன்றுகளை நட சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

64—

கருவேல மரங்களைப் பராமரித்தல்

வினா எண் 25985—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மாரநாடு கண்மாயில் கருவேல மரங்கள் நட்டு, பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், மாரநாடு கண்மாய் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானது. பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கண்மாய்களில், கருவேல மரங்கள் நட தடை உத்தரவு உள்ளதால், மேற்கண்ட இடங்களில் கருவேல மரக் கன்றுகளை நட சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

65—

பயன்தரும் மரங்களை வளர்த்தல்

வினா எண் 25987—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ அரசுக்குச் சொந்தமான இடங்களில் முள் மரங்களை அகற்றி, நல்ல பலன் தரும் மரங்களை நட்டு, பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசிற்குச் சொந்தமான ஒதுக்குக் காடு, அரசு பொது நிலங்கள், பள்ளி மற்றும் கல்லூரி வளாகங்கள், சாலையோரங்கள், தொழிற்சாலை நிறுவன வளாகங்கள் ஆகிய இடங்களை சுத்தம் செய்து நல்ல பயன் தரும் மரங்களை, சிவகங்கை மாவட்டம் உட்பட மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 64 மற்றும் 65-வது பிறந்தநாளையொட்டி செயல்படுத்தப்பட்டு வரும் மாபெரும் மரம் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 2011-2012 மற்றும் 2012-2013 முதல் 2014-2015 ஆம் ஆண்டுகளுக்கான 64 மற்றும் 65 இலட்சம் தரமான மரக் கன்றுகள் முறையே நட்டும் மற்றும் நடவு செய்தும் பராமரிக்கும் பணிகள்

2014 ஜூலை 30]

நடைபெற்று வருகின்றன. இது மட்டுமல்லாமல், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த தேர்வு செய்யப்பட்ட கண்மாய்களில் பரவலாகக் காணப்படும் முள்வேலி மரங்களை அகற்றிவிட்டு, அவ்விடங்களில் கருவேல தோட்டங்கள் எழுப்பும் பணியும் தற்போது 22 மாவட்டங்களில், 4,000 எக்டர் பரப்பளவில் நடைபெற்று வருகிறது.

66—

கோயில் நிலங்களில் மரங்கள் வளர்த்தல்

வினா எண் 25989—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ கோயில் நிலங்களை குத்தகைக்கு எடுத்து, மரங்கள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அறநிறுவனங்களின் சொத்துகள் இளவல்களின் சொத்துகளாக (Minor's property) கருதப்படுகின்றன. எனவே, அறநிலையங்கள் மற்றும் கோயில் நிலங்களை அரசு நிலங்களாக கருதி, பல்வேறு திட்டங்களுக்கு வழங்கிட இயலாதென்பதாலும், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் பெரும்பாலும் குத்தகை / வாடகைக்கு விடப்பட்டுள்ளதென்பதாலும், கோயில் நிலங்களை குத்தகைக்கு எடுத்து, வனத் துறை மூலம் மரங்கள் வளர்ப்பதற்கு சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

67—

பயிர் சேதாரங்களுக்கு இழப்பீடு வழங்குதல்

வினா எண் 29147—திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) விவசாய பயிர்களுக்கு யானைகளால் ஏற்படும் அழிவு மற்றும் பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். அரசாணை (நிலை) எண் 98, சுற்றுச் சூழல்-வனத் (வ.உ) துறை, நாள் 17-8-2011-ன்படி யானைகளால் அல்லது பிற வன உயிரினங்களால் ஏற்படும் பயிர் சேதாரங்களை நில உரிமையாளர்களின் பட்டாவின்படி தணிக்கை செய்து, வருவாய் அலுவலரின் மதிப்பீட்டின்படி அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு ரூ.25,000/- வரை நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது.

68—

"லெண்டானா" களைச் செடிகளை அகற்றுதல்

வினா எண் 31547—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், முதுமலையில் வளரும் "லெண்டானா" களைச் செடிகளை நிரந்தரமாக அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) "லெண்டானா" களைச் செடிகளை நிரந்தரமாக அகற்ற புலிகள் பாதுகாப்புத் திட்ட அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது (பத்தி எண் 7.2.2) மேலும், 2013-2014-ம் நிதியாண்டில் கீழ்க்கண்ட திட்டங்களில் "லெண்டானா" களைச் செடிகளை அகற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது:

2014 ஜூலை 30]

புலிகள் திட்டம்	–	450 எக்டேர்
மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்	–	300 எக்டேர்
புலிகள் பாதுகாப்பு அறக்கட்டளை	–	170 எக்டேர்
தீவன உற்பத்தித் திட்டம்	–	65 எக்டேர்
நீலகிரி பல்லுயிர் திட்டம்	–	10 எக்டேர்
		995 எக்டேர்

மேலும், இப்பணிகள் நிருவாக கொள்ளளவு, வன உயிரினங்களுக்கு இடையூறு ஏற்படாமை, வேலை ஆட்கள் குறைபாடு மற்றும் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் சுருத்தில்கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

69—

படர் தாவரத்தை அகற்றுதல்

வினா எண் 32225—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் காடுகளை அழிக்கும் படர் தாவரத்தை அகற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் குலசேகரம் மற்றும் களியல் சரகங்களில் காடுகளை அழிக்கும் படர் தாவரம், 2010-2011 மற்றும் 2011-2012 ஆகிய ஆண்டுகளில் மொத்தம் 95 ஹெக்டேர் பரப்பளவில் வனத் துறைமூலம் அகற்றப்பட்டது.

70—

கடுப்பணை கட்டுதல்

வினா எண் 32478—திரு. கி. சண்முகவேலு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை மற்றும் அமராவதி வனச் சரகங்களில் மரங்கள் மற்றும் மிருகங்களுக்கான குடிதண்ணீருக்கு தேவையான இடங்களில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் கோட்டத்திற்குட்பட்ட உடுமலை மற்றும் அமராவதி சரகங்களில் 2007-2008 ஆம் ஆண்டு முதல் 20-12-2013 வரை 5 கசிவுநீர்க் குட்டைகளும், 6 தடுப்பணைகளும் கட்டப்பட்டுள்ளன. இவை தவிர, 2 தடுப்பணைகளுக்கு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் (2013-2014) ஆசிய யானைகள் திட்டத்தின்கீழ் 2 தடுப்பணைகளுக்கு மேம்பாட்டுப் பணிகள் செய்யவும், புலிகள் திட்டத்தின்கீழ் ஒரு தடுப்பணை கட்டவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அவசியம் ஏற்படும் பகுதிகளில் கூடுதலாக தடுப்பணைகள் மற்றும் கசிவுநீர்க் குட்டைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

71—

யானைகள் புகா அகழிகள் அமைத்தல்

வினா எண் 32485—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வனச் சரகம் மற்றும் அமராவதி வனச் சரகங்களில் யானைகள் பாதுகாப்பு அகழியினை தோண்டும் பணியினை முழுமையாக நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருப்பூர் கோட்டத்திற்குட்பட்ட உடுமலை மற்றும் அமராவதி வனச் சரகங்களில் 7 கி.மீ. தூரத்திற்கு

2014 ஜூலை 30]

யானைகள் புகா அகழி அமைக்க அரசாணை (டி) எண் 324, சுற்றுச்சூழல்—வனத் (வ.5) துறை, நாள். 26-9-2013-ல் ரூ.31.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு யானைகள் புகா அகழி அமைப்பதற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், ஆசிய யானைகளால் ஏற்படும் இழப்பீடுகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் என்ற திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டுக்கு, ரூ.10.44 கோடியில் பணிகள் மேற்கொள்ள அரசாணை (D) எண் 332, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வ. 5) துறை, நாள் 3-10-2013-ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதில், ஆனமலை புலிகள் காப்பகத்திற்கு யானை புகா அகழிகளை சீரமைக்க 2 கி.மீ. தூரத்திற்கு ரூ.0.484 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

72—

காட்டுப் பன்றியால் சேதம் அடைவதைத் தடுத்தல்

வினா எண் 32439—திரு. கி. சண்முகவேலு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை மற்றும் அமராவதி வனச் சரகங்களில் காட்டுப் பன்றியால் பயிர்கள் சேதம் அடைவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விளைநிலங்களில் காட்டுப் பன்றிகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த காட்டுப் பன்றி விளைநிலங்களுக்கு வந்து தொல்லை கொடுக்கும்போது அவற்றை விவசாயிகளே கையாளும் வகையில் காட்டுப் பன்றியை வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972-ன் அட்டவணை 3-லிருந்து அட்டவணை 5-க்கு மாற்ற மைய அரசின் ஆணைக்கு பிரேரணை அனுப்பப்பட்டது. அதன்பேரில் மைய அரசு பயனீட்டாளர்கள் மற்றும் அறிவியல்

[2014 ஜூலை 30

நிறுவனங்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டு காட்டுப் பன்றிகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த மற்றும் தொல்லை விளைவிக்கின்ற குறிப்பிட்ட காட்டுப் பன்றிகளை இனம் கண்டு பரிந்துரை செய்வதன்மூலம் தலைமை வன உயிரினக் காப்பாளருக்கு வன உயிரின (பாதுகாப்பு) சட்டம் 1972-ன் பிரிவு 11-ன்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் இக்காட்டுப் பன்றிகளை நீக்கி இப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என குறிப்புரை வழங்கியது.

மண்டல தலைமை வனப் பாதுகாவலர்கள் பல்வேறு கூட்டங்களை மண்டல வாரியாக நடத்தி பயனீட்டாளர்களுடன் கலந்தாய்வு செய்ததில் விவசாயிகள் மேற்காணும் கருத்துக்களைத் தெரிவித்தனர்:

(1) வனங்களின் எல்லையில் கம்பி வலையை நிலத்தில் தேவையான ஆழம் மற்றும் நிலத்திற்கு மேலே தேவையான உயரம் உள்ளவாறு அமைத்தல்

(2) தேவையான இடங்களில் சூரிய மின்வேலி அமைத்தல்

(3) போதுமான ஆழம் மற்றும் அகலத்துடன் பள்ளம் வெட்டுதல்

(4) விளைநிலங்களில் வந்து சுற்றும் குறிப்பிட்ட காட்டுப் பன்றிகளை இனம் கண்டு நீக்குதல்.

மைய அரசின் குறிப்புரைப்படி இப்பொருள் பற்றி வன உயிரின பணி சார்ந்தவர்கள், விவசாயம் மற்றும் கால்நடை பணி சார்ந்த வல்லுநர்களைக் கொண்டு அறிவியல் ரீதியாக தீர்வு காண வேண்டி அரசாணை (நிலை) எண் 234, சுற்றுச்சூழல்—வனத் (வ.5) துறை, நாள் 9-10-2012-ல் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை செயலாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தொடர் நடவடிக்கை மேற்கொண்டு காட்டுப் பன்றி மற்றும் மயில்களால் விவசாய நிலங்களில் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், அவற்றை களையும் வழிமுறைகள் குறித்தும் ஆய்வு செய்து வருகிறது. ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2014 ஜூலை 30]

73—

மரங்களைப் பாதுகாக்க கம்பி வேலி

வினா எண் 34400—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் நடப்படும் மரங்களைப் பாதுகாக்க கம்பி வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வனத் துறையின் மூலமாக சமூகக் காடு தோட்டங்கள் உற்பத்திப் பணி, ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக் குளங்களில் 4,000 எக்டர் நிலப்பரப்பளவில் மகாத்மா காந்தி வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பயன்பெறும் வேலை அட்டைதாரர்மூலம் உருவாக்கப்பட்டு வருகின்றது. மேற்படி தோட்டங்கள் எழுப்பும் பணி 22 மாவட்டங்களில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறையின் ஒத்துழைப்புடன் தற்போது மேற்கொள்ளப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நடப்படும் மரங்களைப் பாதுகாக்க, கம்பி வேலி அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதுமில்லை.

74—

மரங்களை சுய உதவிக் குழுமூலம் பராமரித்தல்

வினா எண் 34401—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் சாலையோரங்களில் நடப்படும் மரங்களை மகளிர் சுய உதவிக் குழுமூலம் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் சாலையோரங்களில் மரங்கள் நடப்படும் பணி வனத் துறையின்

[2014 ஜூலை 30

மூலம் தற்போது எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 64 மற்றும் 65-வது பிறந்தநாளையொட்டி மாபெரும் மரம் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சாலையோரங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு, அம்மரக்கன்றுகள் அந்தந்தப் பகுதியிலுள்ள உள்ளூர் மக்கள், பள்ளி மற்றும் கல்லூரிகள்/நிறுவனங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக பராமரிக்கப்பட்டு வருகின்றன. எனவே, சாலையோரங்களில் நடப்படும் மரங்களைப் பராமரிக்கும் பணிகளை மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலமாகச் செயல்படுத்தும் முறை எதுவும் அரசிடம் இல்லை.

75—

யானைகளின் நடமாட்டம் குறித்த தகவல்

வினா எண் 34403—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனங்களில் யானைகள் நடமாட்டத்தை செயற்கைக்கோள் மூலம் விவசாயிகளுக்கு தகவல் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வனங்களில் யானைகள் நடமாட்டத்தை செயற்கைக்கோள்மூலம் கண்காணிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. இருப்பினும், 180 நிலைகளில் யானை வருவதை முன்னதாக எச்சரிக்கும் கருவி (Early warning System elephant alert indicators) "ஆசிய யானைகளால் ஏற்படும் இழப்புகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்" திட்டத்தின்கீழ் 2012-2013 ஆம் ஆண்டில் 6 மண்டலங்களில் கருவி ஒன்றுக்கு ரூ.5.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 30.00 இலட்சம் செலவில் 6 கருவிகள் பொருத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், மின் தண்டிப்பு முறையில் யானைகள் வருவதை அறியும் வண்ணம் எச்சரிக்கை மணியை ஒலிக்கும் கருவி (Trip wire alarm system) திட்டத்தின்கீழ், மண்டல வாரியாக

2014 ஜூலை 30]

ரூ.1.10 இலட்சம் வீதம் ரூ.20.90 இலட்சம் செலவில் 19 உபகரணங்கள் 6 மண்டலங்களில் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவை தவிர, வனத் துறை களப் பணியாளர்கள்/வேட்டை தடுப்புக் காவலர்கள் மூலமாக யானைகளின் நடமாட்டம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

76—

குளங்களில் கருவேல மரங்கள் நடுதல்

வினா எண் 35603—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தில் குளங்களில் வனத் துறைமூலம் கருவேல மரங்கள் நடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டில், 4,000 எக்டேர் பரப்பளவில், மொத்தம் 22 மாவட்டங்களில் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய குளங்களை ஒட்டியுள்ள பகுதிகளில், ரூ.9.80 கோடி செலவில் கருவேல தோட்டங்கள் உற்பத்தி செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகையில், 18 விழுக்காடுகள் தொகையினை மூலப்பொருட்கள் வாங்கிக் கொள்ளவும், மீதமுள்ள 82 விழுக்காடு தொகையினை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் - அதாவது 100 நாட்கள் வேலைத் திட்டம்மூலம் உறுப்பினர் அட்டை உள்ள தொழிலாளர்களைக் கொண்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாகச் செயல்படுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டத்தில் கருவேல மரத் தோட்டங்கள் வளர்க்க உகந்த குளங்கள் இருக்குமானால் அவற்றைக் கண்டறிந்து கருவேல மரங்கள் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

[2014 ஜூலை 30

77—

மெட்டல் சாலை அமைத்தல்

வினா எண் 35628—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, வீரை ஊராட்சி, வேலாயுதபட்டணம் முதல் புலியடித்தம்பம் வழியாக உள்ள பிரதான சாலையிலிருந்து நடுவீரை புதூர் வழியாக ஐயனார் கோயில் செல்லும் மண் சாலையை வனத் துறை அனுமதி பெற்று மெட்டல் சாலையாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், காரைக்குடி தொகுதி, வீரை ஊராட்சி, வேலாயுத பட்டணம் முதல் புலியடித்தம்பம் வழியாக உள்ள பிரதான சாலையிலிருந்து நடுவீரை புதூர் வழியாக ஐயனார் கோயில் செல்லும் மண் சாலை 64.45 எக்டர் பரப்பினைக் கொண்ட நெடுங்குளம் தெற்கு காப்புக்காட்டில் வருகிறது. இக்காப்புக்காட்டின் நீளம் 4,087 லிங்ஸ் (822.30 மீ.) மற்றும் அகலம் 100 லிங்ஸ் (20.20மீ.) என்ற வழி உரிமைகளின்படி உள்ள இச்சாலை சிவகங்கை வட்டத்திலுள்ள ஆவாரங்குடி கிராமத்தை இணைக்கிறது. இந்த மண் சாலையை மெட்டல் சாலையாக மாற்றம் செய்வதால் வன உயிரினங்களுக்கோ, மரங்களுக்கோ சேதாரம் ஏதுமில்லை என்பதால், மேற்படி சாலையை மெட்டல் சாலையாக மாற்றம் செய்ய சம்பந்தப்பட்ட பயனீட்டாளர் துறையினர், அங்கீகரிக்கப்பட்ட பாதையாக மாற்றம் செய்யாமலும், அனுமதிக்கப்பட்ட அகலத்திற்கு மிகாமலும் நடைமுறையில் உள்ள வனச் சட்டங்களுக்கு உட்பட்டு மேம்படுத்த அனுமதி கோரும் பட்சத்தில் அரசு விதிகளுக்குட்பட்டு வனத் துறையின்மூலம் அனுமதி வழங்கப்படும்.

78—

தரிசு நிலங்களில் சமூக நலக் காடுகள்

வினா எண் 37492—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) மானாமதுரை தொகுதியிலுள்ள அரசு தரிசு நிலங்களில் சமூக நலக் காடுகளை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநிலத்தின் பசுமைப் போர்வையினை அதிகரிக்கும் நோக்குடன், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு, மாபெரும் மரம் நடும் திட்டத்தின்கீழ் 2012-2013 ஆம் ஆண்டில் மானாமதுரை தொகுதி, பணிக்கனேந்தல் அரசு தரிசு நிலங்களில் 17,000 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. மேலும், 2013-2014 ஆம் ஆண்டில் மானாமதுரை தொகுதி, மானாமதுரை வனச் சரகப் பகுதியில் 12,650 பல இன மரக்கன்றுகள் நடவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

79—

சாலை அமைப்பதற்கு அனுமதி

வினா எண் 37511—திரு. துரை. மணிவேல்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, தா.பழூர் ஒன்றியம், மணகெதி ஊராட்சி, மேலக்கொல்லையிலிருந்து குமிழியம் செல்லும் சாலைக்கு வனத் துறைமூலம் அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

அரியலூர் மாவட்டம், அரியலூர் சட்டமன்றத் தொகுதி, மணகெதி ஊராட்சி, மேலக்கொல்லையிலிருந்து குமிழியம் வரை செல்லும் சாலை மணகெதி காப்புக்காட்டில் அமைந்துள்ளது. 25,43.4 மீ. நீளமும் 4 மீ. அகலமும் கொண்ட இப்பாதையை வண்டிப் பாதையாகப் பயன்படுத்த மணகெதி காப்புக்காடு அறிவிக்கையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனை தார்ச்

[2014 ஜூலை 30

சாலையாக அமைப்பதனால் வன உயிரினங்களுக்கு சேதமோ, மரங்கள் வெட்டப்படுவதற்கான சூழ்நிலையோ ஏற்பட வாய்ப்பு இல்லை என்பதால் அனுமதிக்கப்பட்ட வண்டிப் பாதையினை 4 மீ. அகலத்திற்கு மிகாமலும், நடைமுறையில் உள்ள வனச் சட்டங்களுக்கு உட்பட்டும் சம்பந்தப்பட்ட பயனீட்டாளர் துறையினர் அனுமதி கோரும் பட்சத்தில் இப்பாதையினை சாலையாக மேம்படுத்த வனத் துறைமூலம் அனுமதி வழங்கப்படும்.

80—

வனச் சாலை அமைத்தல்

வினா எண் 37512—திரு. துரை. மணிவேல்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, தத்தனூர் ஊராட்சி, ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் திருச்சி—சிதம்பரம் சாலையிலிருந்து பரணம் செல்லும் சாலை, ஜெயங்கொண்டம்—செந்துரை செல்லும் தார்ச் சாலையை இணைக்கும் இணைப்புச் சாலைக்கு இடையிலுள்ள வனத் துறைக்குச் சொந்தமான சாலையை வனத் துறையினர் அமைக்க அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

அரியலூர் தொகுதி, தத்தனூர் ஊராட்சி, ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் திருச்சி—சிதம்பரம் சாலையிலிருந்து பரணம் செல்லும் சாலை, ஜெயங்கொண்டம்—செந்துரை செல்லும் தார்ச் சாலையை இணைக்கும் இணைப்புச் சாலைக்கு இடையிலுள்ள வனத் துறைக்குச் சொந்தமான சாலை, அரியலூர் வனக் கோட்ட ஆளுகைக்குட்பட்ட உடையார்பாளையம் கஸ்பா காப்புக்காட்டின் எல்லைக்குள் 1,314 மீ. நீளமும், 4 மீ. அகலமும் கொண்ட பரணம்—தத்தனூர் கிராமங்களை இணைக்கும் இவ்வண்டிப்பாதை காப்புக்காடு அறிவிக்கையில் அனுமதிக்கப்பட்ட வண்டிப்பாதையாகும். வண்டிப் பாதையினை சாலையாக மாற்றம் செய்ய சம்பந்தப்பட்ட பயனீட்டாளர் துறையினர், அங்கீகரிக்கப்பட்ட பாதையை மாற்றம் செய்யாமலும், 4 மீ. அகலத்திற்கு மிகாமலும், சாலையாக

2014 ஜூலை 30]

மேம்படுத்த வனச் சட்டங்களுக்கு உட்பட்டு அனுமதி கோரும் பட்சத்தில் வனத் துறையின்மூலம் அனுமதி வழங்கப்படும்.

82—

பட்டா வழங்குதல்

வினா எண் 16993—திருமதி ர. கமலா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி மற்றும் ஒன்றியம், பச்சமலை, வேப்படிபாலக்காடு பகுதியில் வாழும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி ஒன்றியம், பச்சமலை, வேப்படிபாலக்காடு ஆகிய கிராமங்களில் மறு நிலஅளவைப் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணி முடிந்து ஆவணங்கள் நில அளவைத் துறையினரால் ஒப்படைக்கும்பொழுது பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

83—

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 20255—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, சங்ககிரி புகைவண்டி நிலையம் முஸ்லிம் மக்களுக்கும், பாறைவளவு, சங்ககிரி மேற்கு செங்கல்காடு புதுவளவு ஆகிய கிராம மக்களுக்கும் இலவச வீட்டுமனை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி வட்டம் சங்கரி புகைவண்டி நிலையம் முஸ்லிம் மக்களுக்கும், பாறைவளவு மற்றும் சங்கரி மேற்கு செங்கல்காடு புதுவளவு ஆகிய பகுதிகளில் மக்கள் வசிக்கும் புல எண் 406/1A2 விஸ். 0.47.5 ஏர்ஸ். நிலம் புல எண் 406/1பி விஸ். 0.22.0 ஏர்ஸ் நிலங்கள் ரயில்வே புறம்போக்கு நிலங்களாகும், மேலும், புல எண் 405/1பி விஸ். 100.0 ஹெக்டேர் நிலம் இந்தியா சிமென்ட் ஆலைக்கு செல்லும் இருப்புப் பாதை நிலமாகும். இதனைத் தொடர்ந்து சிறிது தொலைவில் புல எண் 407/3 விஸ். 0.88.0 ஏர்ஸ் நிலம், உயரமான பாறைகள் உள்ள கல்லாங்குத்து புறம்போக்கு நிலமாகும். இந்த கல்லாங்குத்து நிலம் வீடுகள் கட்ட தகுதியான நிலமாக இல்லை. மேலும், இந்த நிலத்திற்குச் செல்ல புறம்போக்கு பாதை வசதியில்லை. எனவே, மேற்கண்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

84—

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 22290—திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகரம், ரபீக் நகர், சலாவுதீன் நகர் பகுதியில் வசிக்கின்ற குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ரபீக் நகர், வார்டு 'A', பிளாக் 9 நகர நில அளவை எண் 20, இராணுவ முகாம் எனவும், சலாவுதீன் நகர், வார்டு 'A', பிளாக் 9, நகர நில அளவை எண் 17, கால்வாய் எனவும், 'அ' பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளதால் மேற்படி இராணுவ முகாம் மற்றும் நீர்நிலைப் புறம்போக்கு

2014 ஜூலை 30]

ஆட்சேபகரமான புறம்போக்கு என்பதால் மேற்படி இடத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

85—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 25314—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, சின்னாக்கவுண்டனூர் கிராமம், வரதம்பட்டி கிராமம் மற்றும் நாடார் தெருவிற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ.வே. கம்பன், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், சின்னாக்கவுண்டனூர் கிராமம், வரதம்பட்டி கிராமம் மற்றும் நாடார் தெரு ஆகிய பகுதி நிலமானது ஓடை புறம்போக்கு வகைப்பாடு நிலமாகும். மேற்படி நிலம் ஆட்சேபணைக்குள்ள நீர்நிலைப் புறம்போக்கு நிலம் என்பதால், அப்பகுதி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது தெரிவித்துக்கொள்கிறேன்.

86—

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 25320—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, மோரூர் கிழக்கு தாசநாயக்கன்பாளையம், அருந்ததியர் தெரு மக்களுக்கு இலவச வீட்டுமனை மற்றும் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கிரி வட்டம், மோரூர் கிழக்கு தாசநாயக்கன்பாளையம், சர்வே எண் 428/7 மற்றும் 432/1 கிராம நத்தத்தில் வீடுகட்டி குடியிருக்கும் 15 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

87—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 25476—திரு. சு. ரவி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 6-வது வார்டு, காமராஜ் நகரில் வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேற்படி நகரம் 6-வது வார்டு, காமராஜ் நகரில் வசிக்கும் மக்கள் "ஏரி நீர்ப்பிடிப்பு" என வகைப்படுத்தப்பட்ட இடத்தில் வசித்து வருகின்றனர். மேற்படி நபர்கள் வாழும் இடம் நீர்நிலைப் புறம்போக்கு என்பதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

88—

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 29296—திரு. சு. ரவி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2014 ஜூலை 30]

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், தணிகைப்போளூர் ஊராட்சி, 73 தணிகைப்போளூர் நரிக்குறவர் காலனியில் வசிக்கும் 40 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், தணிகைப்போளூர் ஊராட்சி, 73 தணிகைப்போளூர் நரிக்குறவர் காலனியில் வசிக்கும் 40 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா 19-10-2000-ல் வழங்கப்பட்டுள்ளது.

89—

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 29444—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சேலம் கோட்டம் எண்கள் 6,10,12,15,27,28,35,36 ஆகிய பகுதிகளிலும், கன்னங்குறிச்சி வார்டு 9,13 பகுதிகளிலும், ஆதி திராவிடர் மற்றும் மிகவும் பின்தங்கிய மக்கள் குடியிருக்கும் அரசு புறம்போக்கு நிலத்திற்குப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் கோட்டம் எண்கள் 6,10,12,15,27,28,35 மற்றும் 36 ஆகிய பகுதிகளிலும், கன்னங்குறிச்சி வார்டு எண்கள் 9 மற்றும் 13 ஆகிய பகுதிகளிலும் ஆதி திராவிடர் மற்றும் மிகவும் பின்தங்கிய மக்கள் குடியிருக்கும் நிலம் அரசு

[2014 ஜூலை 30

புறம்போக்கு நிலமாகும். இந்நிலத்திற்கு வீட்டுமனைப் பட்டா கோரப்பட்ட பகுதி, மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ளதால், மாநகராட்சிக்கு உட்பட்ட நிலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க தடையாணை உள்ளதால், சம்பந்தப்பட்ட நிலத்திற்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது.

90—

சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 32937—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, தளி பேரூராட்சியில் உடுமலைப் பேட்டை—திருமூர்த்தி நகர் செல்லும் சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, தளி பேரூராட்சியில் உடுமலைப்பேட்டை-திருமூர்த்தி நகர் செல்லும் சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நெடுஞ்சாலைத் துறையினர் எல்லைகளை அளந்து கொடுக்க கோரியதன்பேரில், நில அளவைப் பணி நிலுவையில் உள்ளது. நில அளவைப் பணி முடிவுற்றதும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும்.

91—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 35519—திரு. சு. ரவி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) அரக்கோணம் தொகுதி, கும்மினிப்பேட்டை அஞ்சல், பாலகிருஷ்ணாபுரம் கிராமம், மந்தைவெளி புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டி வாழ்ந்து வரும் சுமார் 11 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ.வே. கம்பன், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் வட்டம், தெ.73, தணிகைப்போளூர், மதுரா பாலகிருஷ்ணாபுரம் கிராமம், புல எண் 23, விஸ்தீரணம் 0.21.0 ஏர்ஸ் மந்தவெளி புறம்போக்கு இடத்தில் குடியிருப்பு வீடுகள் ஏதுமில்லை. ஆடு, மாடுகள் அடைக்கும் பட்டி மட்டுமே உள்ளது. வீடு கட்டி குடியிருப்பு இருந்தால் மட்டுமே பட்டா வழங்க இயலும். மேற்படி புறம்போக்கு இடத்தில் வீடுகள் ஏதும் இல்லாத நிலையில், பட்டா வழங்க இயலாது.

92—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 35640—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், எர்ணாபுரம் கிராமம், பாட்டப்பன் நகரில் சர்வே எண் 96 மற்றும் 97-ல் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ.வே. கம்பன், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி வட்டம், எர்ணாபுரம் குறு வட்டம், எர்ணாபுரம் கிராமத்தில் புல எண் 96/1 விஸ்தீரணம் 2.35.5 ஹெக்டேர் மற்றும் புல எண் 97 விஸ்தீரணம் 6.04.0 ஹெக்டேர்

[2014 ஜூலை 30

நிலங்கள் அனைத்தும் ஓடை புறம்போக்கு நிலம் என கிராம கணக்கில் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலம் வனத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, எர்ணாபுரம் கிராம தடையாணைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புல எண் 96/1-ல் 3 வீடுகளும் (2 கூரை வீடுகள் மற்றும் ஒரு அட்டை வீடு) புல எண் 97-ல் 33 வீடுகளும் (30 கூரை வீடுகள் மற்றும் 3 அட்டை வீடுகள்) உள்ளன. மேற்கண்ட வீடுகள் அனைத்தும் நீர்வழிப் புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளன. எனவே, மேற்படி புலத்தில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

94—

வக்ஃபு வாரிய சொத்துக்களை மீட்டல்

வினா எண் 20701—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வக்ஃபு வாரிய சொத்துகளை மீட்க அரசு அவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு வக்ஃபு வாரிய சொத்துக்களில் 1335 ஆக்கிரமிப்புகள் இருப்பது கண்டறியப்பட்டு, வக்ஃபுச் சட்டம், 1995 பிரிவு 54-ன்கீழ் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, 829 இனங்களில் வக்ஃபு சொத்துக்களை சம்பந்தப்பட்ட வக்ஃபு நிறுவனத்திடம் ஒப்படைக்குமாறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 590 இனங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை வக்ஃபு சட்டம் 1995 பிரிவு 55-ன்படி அகற்றித் தருமாறு வருவாய் கோட்டாட்சியர்கள்/ வட்டாட்சியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு வக்ஃபு வாரிய சொத்துகளில் உள்ள தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2014 ஜூலை 30]

95—

புத்தக வடிவில் நலத் திட்ட விவரங்கள்

வினா எண் 22402—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் நலத் திட்டங்களை அச்சிட்டு புத்தக வடிவில் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள், அதற்கான தகுதிகள், தொடர்பு அலுவலர் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் ஆண்டுதோறும் அச்சிடப்பட்டு மக்கள் சாசனம் (Citizen Charter) வெளியிடப்படுகிறது. மக்கள் சாசனம் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களும் இத்துறையின் நலத் திட்டங்களைத் தெரிந்து கொண்டு பயன்பெற வழிவகை உள்ளது.

96—

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட உதவி

வினா எண் 27593—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட உதவிகளை நிர்க்குறவர் சமுதாயத்தினருக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நரிக்குறவர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் இனத்தவராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர். எனவே மிகப் பிற்படுத்தப்பட்டோர் இனத்தவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை, மாணவ, மாணவியர்கள் தங்கிப் பயிலும் விடுதிகள், கிராமப்புற மாணவிகளுக்கான ஊக்கத்தொகை, வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள், அரசு/ அரசு உதவி பெறும் பள்ளிகளில் +1, +2 பயிலும் மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்குதல், விலையில்லா சலவைப் பெட்டி வழங்குதல் விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்குதல், விலையில்லா வீட்டுமனைப் பட்டா வழங்குதல் போன்ற நலத் திட்ட உதவிகள் நரி குறவர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. மேலும், நரிக்குறவர் வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கு பிரத்தியேகமாக நரிக்குறவர் நல வாரியத்தின் மூலம் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, மூக்குக் கண்ணாடி செலவுத் தொகை, முதியோர் ஓய்வூதியம், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு செலவிற்கான உதவித் தொகை, விபத்தினால் மரணம்/ ஊனம் ஏற்பட்டால் உதவித் தொகை தனிநபர் தொழில் மானியம், உறுப்பினர்கள் குழுக்களாகச் சேர்ந்து தொழில் தொடங்க மானியம் ஆகியவை வழங்கப்படுகின்றன பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட உதவிகளை நரிக்குறவர் சமுதாயத்தினருக்கு வழங்க வழிவகை இல்லை.

97—

கடன் வழங்கும் திட்டம்

வினா எண் 28770—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் ஆட்டோ தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் ஆட்டோ வாங்குவதற்கு கடன் வழங்கும் திட்டத்தில் கிறிஸ்துவ இளைஞர்களையும் சேர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் ஆட்டோ தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஆட்டோ வாங்குவதற்கு கடன் வழங்கும் திட்டத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழும் சிறுபான்மையினர் இனத்தவர்களாகிய இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர் மற்றும் பார்சியர்கள் ஆகியோருக்கு ஏற்கெனவே கடன் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) கிறிஸ்துவ இளைஞர்களுக்கு ஏற்கெனவே இத்திட்டத்தின்கீழ் கடன் வழங்கப்பட்டு வருவதால், இவ்வினா எழாது.

98—

கூடுதல் இட வசதி

வினா எண் 34774—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், அந்தியூர் பகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதியில் கூடுதலாக மாணவியர் தங்குவதற்கு உரிய இடவசதி செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

அந்தியூர் பகுதியில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையை விட கூடுதலாக 10 மாணவியர்கள் மட்டுமே தங்குவதற்கு போதுமான இடவசதி உள்ளது. மேலும், மனுக்கள் அதிக அளவில் நிலுவையில் இல்லாத காரணத்தால் தற்போது கூடுதலாக மாணவியர்கள் தங்குவதற்கு இடவசதி செய்துதர வேண்டிய தேவை எழவில்லை.

[2014 ஜூலை 30

99—

விடுதியில் மாணவ/மாணவியரின் எண்ணிக்கையை உயர்த்துதல்

வினா எண் 37110—திரு. மு. முருகன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, கமுதி வட்டம், நீராவி பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதியில் மாணவ, மாணவியரின் எண்ணிக்கையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், நீராவி பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதிக்கு கடந்த 5 ஆண்டுகளில் 10%-க்கும் அதிகமாகவும், பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதிக்கு 60%-க்கும் அதிகமாகவும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டுள்ளதால், தற்போதைய சூழலில் மேற்படி விடுதிகளில் மாணவ, மாணவியர் எண்ணிக்கையை உயர்த்த வேண்டிய அவசியம் ஏதும் எழவில்லை.

100—

மாணவியர் விடுதிக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 38434—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியம், பேர்பெரியான்குப்பத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியம், பேர்பெரியான்குப்பத்தில் இயங்கி வரும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும், அவ்விடுதியில் சூரிய எரிசக்தி கருவிகள் நிறுவுவதற்கும் அரசாணை (நிலை) எண் 77, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிநி)த் துறை, நாள் 15-6-2012-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

(பேவைத் கூட்டத் தொடர் முடியும்வரை தொடர்புடைய உறுப்பினர்கள் நீக்கம் செய்யப்பெற்றுள்ளதால் வரிசை எண்கள் 81, 93 தொடர்புடைய வினாக்கள்—விடைகள் இப்பட்டியலில் இடம்பெறவில்லை.)

பட்டியல் 3

1—

விழிப்புணர்வு

வினா எண் 26482—திரு. ஏ. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் கட்டண மையங்களில் கடைசி நாட்களில் கூட்ட நெரிசலைத் தவிர்க்க இணையதளத்தின் வாயிலாக மின் கட்டணம் செலுத்தும் முறை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மின் கட்டண மையங்களில் இணைய தளத்தின் வாயிலாக மின் கட்டணம் செலுத்தும் முறை நடைமுறையில் உள்ளது. இது குறித்து பொதுமக்களுக்கு விளம்பரப்

[2014 ஜூலை 30

பலகை, துண்டுப் பிரசுரம், தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் விளம்பரம் செய்ய முதன்மைப் பொறியாளர்கள் மற்றும் வங்கிகளுக்கு தக்க அறிவுரைகள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் வழங்கப்பட்டுள்ளன.

2—

இணைப்புப் பாலம்

வினா எண் 2315—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகர், திருமணிமுத்தாற்றின் குறுக்கே குண்டு போடும் தெரு-திருச்சி ரோடு இணைப்புப் பாலத்தை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி (கோட்டம் எண் 31, 45 இணையும் இடத்தில்) திருமணிமுத்தாற்றின் குறுக்கே குண்டுபோடும் தெரு-திருச்சி ரோடு இணைக்கும் உயர்மட்டப் பாலத்தின் இருபுறமும் கனரக வாகனம் எளிதாகச் செல்லும் வகையில் (குண்டுபோடும் தெரு-திருச்சி மெயின் ரோடு) இருபுறமும் புதியதாக அணுகுசாலை ரூ.87.35 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. மேற்படி பணிகளை நிறைவேற்றி பொது மக்களின் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

3—

நீதிமன்றங்களுக்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 3762—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) தனியார் கட்டடங்களில் இயங்கும் நீதிமன்றங்களுக்கு அரசு நிலத்தில் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தனியார் கட்டடங்களில் இயங்கும் நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்டுவது குறித்து, உயர் நீதிமன்றம் அனுப்பும் முன்னுரிமை பட்டியலில் இடம்பெறும் நேர்வுகளின் நிதிச் செலவீடு, உகந்த நிலம் கிடைத்தல் மற்றும் இதர காரணங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசு வெளியிடும் அறிவிப்புகள் வாயிலாக நடவடிக்கை எடுக்கப்படும்.

4—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 3852—திரு. சி. ஜைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் இரக்கானும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், தனக்கர்குளம் ஊராட்சி, கோலியான்குளம் ஊரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஒன்றியம், தனக்கர்குளம் ஊராட்சி, கோலியான்குளம் குடியிருப்பின் மக்கள் தொகைக்கேற்ப ஆழ்துளைக் கிணற்றினை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடிய தனி மின்விசைத் நிட்டங்கள் 1995 மற்றும் 2006 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன. இவை தவிர இக்குடியிருப்பு, நான்குநேரி-

[2014 ஜூலை 30

திசையன்விளை பேரூராட்சிகள் மற்றும் 297 வழியோர கிராம குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, கோவியான்குளம் குடியிருப்பிற்கு மக்கள் தொகைக்கேற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பயனில் உள்ளதால், வாரிய விதிமுறைகளின்படி கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

5—

நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம்

வினா எண் 6468—திரு. ஆர். சீனிவாசன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, ஆற்காடு நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு நீதிமன்றத்திற்கு நீதிமன்றக் கட்டடம் கட்டுவது குறித்த உயர் நீதிமன்றத்தின் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் நிலுவையில் இல்லை. அத்தகைய செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளரிடமிருந்து பெறப்படும் முன்னுரிமை பட்டியலில் இடம்பெறும் பட்சத்தில், உகந்த நிலம் கிடைத்தல் மற்றும் செயற்குறிப்பின் நிதிச் செலவீடு ஆகியவற்றிற்கேற்ப அரசு பரிசீலனை செய்யும்.

6—

வழக்கறிஞர்கள் ஓய்வறை கட்டுதல்

வினா எண் 7972—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை நீதிமன்ற வளாகத்திற்குள் வழக்கறிஞர்கள் ஓய்வறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்கள் ஓய்வறை கட்டுவது குறித்த உயர் நீதிமன்றத்தின் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் நிலுவையில் இல்லை. அத்தகைய செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளரிடமிருந்து பெறப்படும் முன்னுரிமை பட்டியலில் இடம் பெறும்பட்சத்தில், உகந்த நிலம் கிடைத்தல் மற்றும் செயற்குறிப்பின் நிதிச் செலவீடு ஆகியவற்றிற்கேற்ப அரசு பரிசீலனை செய்யும்.

7—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 11962—திரு. கு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, செய்யூர் ஊராட்சி, அவினாசி கண்டிகையில் கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் ஒன்றியம், செய்யூர் ஊராட்சி, அவினாசிகண்டிகை குடியிருப்பில், 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்

[2014 ஜூலை 30

தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் பயனில் உள்ளது. வாரிய விதிமுறைப்படி இக்குடியிருப்பில் உள்ள மக்கள் தொகைக்கேற்ப பயனிலுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி போதுமானதாக உள்ளதால், கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

8—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 12897—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கிழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியம், மிட்டாளம் இராமத்தில் அருந்ததியர் காலனியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியம், மிட்டாளம் ஊராட்சியில் அருந்ததியர் காலனி, மிட்டாளம் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பிற்கு ஏற்கெனவே 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் பயனில் உள்ளது. வாரிய விதிமுறைகளின்படி இக்குடியிருப்பிலுள்ள மக்கள் தொகைக்கேற்ப பயனில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியே போதுமானதாக உள்ளதால், கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2014 ஜூலை 30]

9—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 12898—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, மாரப்பட்டு ஊராட்சியில், 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், மாதனூர் ஒன்றியம், செங்கிலிக்குப்பம் ஊராட்சிக்குட்பட்ட மாரப்பட்டு குடியிருப்பில், 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் பயனில் உள்ளது. வாரிய விதிமுறைகளின்படி இக்குடியிருப்பிலுள்ள மக்கள் தொகைக்கேற்ப பயனில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கொள்ளளவு போதுமானதாக உள்ளதால், கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க தேவை இல்லை.

10—

ஆழ்துளைக் கிணறு மற்றும் குடிநீர்த் தொட்டி அமைத்தல்

வினா எண் 16823—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 30-வது வார்டு, காந்திசாலை, பிள்ளையார் கோயில் பின்புறம் ஆழ்துளைக் கிணறு

[2014 ஜூலை 30

அமைத்து, சின்டெக்ஸ் தொட்டி அமைத்து, குடிநீர் வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம், 30-வது வார்டு, காந்திசாலை, பிள்ளையார் கோயில் பின்புறம் ஆழ்துளைக் கிணறும், சின்டெக்ஸ் தொட்டியும் அமைக்கப்பட்டு, குடிநீர் நல்லமுறையில் வழங்கப்பட்டு வருகிறது.

11—

சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல்

வினா எண் 16835—திரு. கு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 21-வது வார்டு, ஜீவானந்தம் தெரு, திலகர் தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைத்து, 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 21-வது வார்டு, ஜீவானந்தம் தெரு மற்றும் திலகர் தெருவில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைத்து, கைப்பம்புகள்

2014 ஜூலை 30]

பொருத்தி நல்ல முறையில் பொதுமக்கள் பயன்பாட்டிலுள்ளது என்பதால், புதிதாக 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

12—

குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வசதிகள்

வினா எண் 19193—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வசதிகளைச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாநகராட்சி மற்றும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் தினசரி நபர் ஒன்றுக்கு 108 லிட்டர் வீதம் குடிநீர் 5 முதல் 12 நாட்கள் கால இடைவெளியில் வழங்கப்பட்டு வருகிறது என்றும், குடிநீர் விநியோகம் செய்யும் கால இடைவெளியினைக் குறைக்க புதிய மேல்நிலை குடிநீர்த் தொட்டிகள் கட்டுதல் மற்றும் கூடுதல் விநியோகக் குழாய்கள் பதித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன என்றும், இப்பணிகளைச் செய்ய புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி நடைபெற்று வருகிறது என்றும், திட்ட அறிக்கை இடைக்கப் பெற்றவுடன் மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படும். பணிகள் முடிவுற்றவுடன் மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளிலும் குறுகிய கால இடைவெளியில் சீரான குடிநீர் வழங்கப்படும் என்றும், மேலும் விரிவுப்படுத்தப்படாத திருப்பூர் மாநகராட்சிப் பகுதியில் புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் 119 கி.மீ. நீளத்திற்கு

[2014 ஜூலை 30

பாதாள சாக்கடைத் திட்டம் முடிக்கப்பட்டுள்ளது என்றும், அரசின் நிதிமூலம் 17 கி.மீ. நீளத்திற்கு பாதாள சாக்கடைத் திட்டம் முடிவெடுக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் விடுபட்ட பகுதிகளிலும், புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்தினால் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட மதிப்பீடு கிடைக்கப் பெற்றவுடன் விடுபட்ட பகுதிகளிலும் மற்றும் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

13—

ஆழ்துளைக் கிணறு சீரமைத்தல்

வினா எண் 25229—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 16-வது வார்டுக்குட்பட்ட கலைவாணர் தெருவில் வள்ளுவர் பள்ளியின் பின்புறம் உள்ள ஆழ்துளைக் கிணறு பிளாட்பாரம் மற்றும் பால் சொஸைட்டி சுப்பிரமணி தெருவில் ஆழ்துளைக் கிணறு தலைப்பாகம் பழுதடைந்துள்ளதை சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண் 16, கலைவாணர் தெருவில் ஆழ்துளைக் கிணறு பிளாட்பாரம் நல்ல நிலையில் உள்ளதால் தற்போது புதியதாக அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. பால் சொஸைட்டி சுப்பிரமணி தெருவில் ஆழ்துளைக் கிணறு தலைப்பாகம் சீரமைக்கப்பட்டு நல்ல நிலையில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

2014 ஜூலை 30]

14—

குடிநீர் கைப்பம்பு அமைத்தல்

வினா எண் 25458—திரு. கு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 26-வது வார்டு, மஸ்தி தெரு மற்றும் அம்மன் கோவில் தெருவில் புதியதாக ஆழ்துளைக் கிணறு அமைத்து குடிநீர் கைப்பம்பு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சியில் 26-வது வார்டு, மஸ்தி தெரு மற்றும் அம்மன் கோவில் தெருவில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, கைப்பம்பு பொருத்தி பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

15—

புதிய குடிநீர்க் குழாய் மற்றும் மின் மோட்டார் பொருத்துதல்

வினா எண் 27389—திரு. கு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 30-வது வார்டு, பழனிப்பேட்டை, காந்தி சாலையில் அங்காளம்மன் கோயில், பிள்ளையார் கோயில் இடையே ஆழ்துளைக் கிணறு அமைக்கவும், பிள்ளையார் கோயில் தெரு மற்றும் அங்காளம்மன் கோயில் இடையே புதிய குடிநீர்க் குழாய் அமைக்கவும் மற்றும்

[2014 ஜூலை 30

குருசாமி தெருவில் உள்ள ஆழ்துளைக் கிணற்றில் மின் மோட்டார் பொருத்தவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரில் 30-வது வார்டு, பழனிப்பேட்டை, காந்தி சாலையில் அங்காளம்மன் கோவில் மற்றும் பிள்ளையார் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. குருசாமி தெருவிலும் ஆழ்துளைக் குழாய்க் கிணறு கையிறைப்பான் நல்ல நிலையில் பொதுமக்கள் பயன்பாட்டில் இருப்பதால் மின் மோட்டார் அமைக்க அவசியம் எழவில்லை.

16—

புதிய ஆழ்துளைக் குழாய் அமைத்தல்

வினா எண் 27392—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 26-வது வார்டு, மஸ்தி தெரு, அம்மன் கோயில் தெரு, அம்பேத்கர் தெரு, பாரதிதாசன் தெரு மற்றும் மின் வாரிய சாலையில் புதிய ஆழ்துளைக் குழாய் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சியில் 26-வது வார்டு, மஸ்தி தெரு, அம்மன் கோயில் தெரு, அம்பேத்கர் தெரு, பாரதிதாசன் தெரு மற்றும் மின் வாரிய சாலை

2014 ஜூலை 30]

ஆகிய பகுதிகளில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள்மூலம் நல்ல முறையில் குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், புதிதாக ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

17—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 28587—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, நெறிஞ்சிப்பட்டி ஒன்றியம், ஆதி திராவிடர் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், வாராப்பூர் ஊராட்சி, நெறிஞ்சிப்பட்டி குடியிருப்பின் மக்கட்தொகை 393 ஆகும். இக்குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு தற்சமயம் மக்கள் பயன்பாட்டில் உள்ளது. மக்கள்தொகைக்கேற்ப தற்போதுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியே போதுமானதாகும். எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

18—

ஊரக தேர்வு மையம் அமைத்தல்

வினா எண் 29000—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) சென்னை, திருவான்மியூரில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் 10, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அரசு தேர்வு மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம், மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) சென்னை, திருவான்மியூரில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வு மையம் வருவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இரண்டு ஆண்டுகளில், 2014-2015 ஆம் கல்வி ஆண்டிற்குள் தேர்வு மையம் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

19—

வாகன நிறுத்துமிடம் அமைத்தல்

வினா எண் 29431—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க ஆனந்தா பாலம்-அப்சரா தியேட்டர் வரை திருமணிமுத்தாற்றின் இரு கரைகளிலும் இரண்டு சக்கர, நான்கு சக்கர வாகனங்களை நிறுத்த வாகன நிறுத்த, மேடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆனந்தா பாலம் முதல் அப்சரா தியேட்டர் வரை திருமணிமுத்தாற்றின் இரு கரைகளை ஒட்டி குடியிருப்பு

2014 ஜூலை 30]

பகுதிகளாக உள்ளதால் இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை நிறுத்த, வாகன நிறுத்த மேடை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

20—

அடுக்குமாடி கார் நிறுத்தத் திட்டம்

வினா எண் 29828—திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை பழைய செண்ட்ரல் கடை வீதி பகுதியில் அடுக்குமாடி கார் நிறுத்தத் திட்டத்தை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சுற்றுலாத் துறை நிதியுதவியுடன் அடுக்குமாடி கார் நிறுத்துமிடம் பணி ஆரம்பிக்கப்பட்டு, பணிகள் நடைபெறும்போது தனி நபர் ஒருவரால் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் வழக்கு ஒன்று தொடரப்பட்டு, மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் தடை உத்தரவு (O.S.No. 121/2011) பெறப்பட்டுள்ளது. நீதிமன்ற தடை உத்தரவு நீக்கிய பின் பணிகள் மேற்கொள்ளப்படும்.

21—

ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

வினா எண் 30002—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) குற்றாலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் மேலகரம், குற்றாலம் காசிமேஜர்புரம், தென்காசி நகராட்சிக்கு குடிநீர் வழங்கும் சேமிப்புக் குளத்தை 10 அடி ஆழப்படுத்தவும், ஆழ்குழாய்க் கிணறு அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) தென்காசி-குற்றாலம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக தென்காசி நகராட்சி, இலஞ்சி மற்றும் மேலகரம் பேரூராட்சிகளுக்கும் மற்றும் காசிமேஜர்புரம் குடியிருப்புகளுக்கு நாள்தோறும் 24.81 இலட்சம் லிட்டர் தன்விசை குழாய்கள் (Gravity main) மூலம் வழங்குமாறு வடிவமைக்கப்பட்டு, மீதமுள்ள தண்ணீர் கோடைக்கால நீர்த்தேக்கத்தில் சேகரிக்கப்பட்டு வருகிறது. தண்ணீர் வரத்து குறைவாக இருக்கும்பொழுது, நேரடியாக கோடைக்கால நீர்த்தேக்கத்தில் தண்ணீர் சேகரிக்கப்படும். நீர் சேகரிப்பு கிணறு மற்றும் நீர் சேகரிப்பு தொட்டி வாயிலாக, மின்விசை நீர் இறைப்பான்மூலம் நீர் உந்தப்பட்டு மேற்கண்ட பயனாளிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. கோடைக்கால நீர்த்தேக்கம், சுமார் 36 ஏக்கர் பரப்பளவில், 3792 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்டதாக உள்ளது. இந்த நீர்த்தேக்கம் உள்பகுதியில் அமைந்துள்ள நீர் சேகரிப்பு கிணறு அருகே 20 அடி ஆழமும் மற்றும் படிப்படியாக தரைமட்டம் உயர்ந்து வெளிப்புறத்தில் ஆழம் குறைவாகவும், இயற்கையாகவே தன்விசைமூலம் நீர்வரத்து நீர் சேகரிப்பு கிணற்றில் வருமாறு அமைந்துள்ளதால் போதுமான கொள்ளளவு கொண்டதாகவும், இயற்கையாக நீர் வரத்து தன்விசைமூலம் நீர் சேகரிப்பு கிணற்றில் சேருமாறும் அமைந்துள்ளது. எனவே, இந்த நீர்த்தேக்கத்தை மேலும் ஆழப்படுத்தவோ ஆழ்குழாய்க் கிணறு அமைக்கவோ திட்டம் தேவை இல்லை.

2014 ஜூலை 30]

22—

ஆழ்துளைக் கிணறு மற்றும் சிறிய மின் இறைப்பான் அமைத்தல்

வினா எண் 30461—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி நகராட்சி, 31-வது வட்டத்தில் இருக்கும் ஆர்.சி. மற்றும் சி.எஸ்.ஐ. கல்லறை தோட்டத்தில் ஆழ்துளைக் கிணறு மற்றும் சிறிய மின் இறைப்பான் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி நகராட்சி, 31-வது வட்டத்தில் இருக்கும் ஆர்.சி. மற்றும் சி.எஸ்.ஐ. கல்லறை தோட்டத்தில் ஆழ்துளைக் கிணறு மற்றும் சிறு மின்விசை இறைப்பான் அமைக்க கோரும் கல்லறை பகுதி தனியாருக்குச் சொந்தமானது. எனவே, மேற்படி இடத்தில் ஆழ்துளைக் கிணறு அமைக்க வழிவகை இல்லை. மேலும், 31-வது வட்டத்தில் சி.எஸ்.ஐ. கல்லறை தோட்டத்தை ஒட்டினாற்போல் ஏற்கெனவே இருந்த கையிறைப்பானை அகற்றி நகராட்சியால் சிறிய மின்விசை பம்பு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதால் ஆழ்துளைக் கிணறு மற்றும் சிறிய மின் இறைப்பான் அமைக்க அவசியம் எழவில்லை.

23—

நவீன மீன் மற்றும் காய்கறி அங்காடி

வினா எண் 30915—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) மதுரை மாநகராட்சியில் நவீன மீன் அங்காடி மற்றும் காய்கறி அங்காடி ஏற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரையில் ஏற்கெனவே மூன்று இடங்களில் மீன் அங்காடிகள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இவற்றினை நவீன முறையில் மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மதுரை மாநகரில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும்பொருட்டு, மையப் பகுதியிலிருந்த சென்ட்ரல் மார்க்கெட் தற்காலிகமாக மாட்டுத்தாவணி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்திற்கு அருகில் மாற்றியமைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

24—

நவீன மீன் மற்றும் காய்கறி அங்காடி

வினா எண் 30917—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் நவீன மீன் அங்காடி மற்றும் நவீன காய்கறி அங்காடி ஏற்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட உக்கடம் பகுதியில் நவீன முறையில் மீன் அங்காடி கட்டும் பணி

2014 ஜூலை 30]

ரூ. 3.24 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. மேலும், கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதியில் ஏற்கெனவே உள்ள காய்கறி அங்காடிகளை நவீனப்படுத்தி விரிவுபடுத்த மதிப்பீடுகள் தயார் செய்து நடவடிக்கையில் உள்ளது.

25—

நவீன மீன் மற்றும் காய்கறி அங்காடி

வினா எண் 30921—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் நவீன காய்கறி அங்காடி மற்றும் நவீன மீன் அங்காடி ஏற்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி சூரமங்கலம், வார்டு அலுவலகத்தில் தற்பொழுது மீன் அங்காடி கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை வார்டு அலுவலகம், வ.உ.சி. மார்க்கெட் பகுதியில் நவீன காய்கறி மார்க்கெட் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

26—

நவீன மீன் மற்றும் காய்கறி அங்காடி

வினா எண் 30929—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) ஈரோடு மாநகராட்சியில் நவீன மீன் அங்காடி மற்றும் நவீன காய்கறி அங்காடி ஏற்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாநகராட்சியில் நேதாஜி தினசரி சந்தையில் தினசரி காய்கறி மார்க்கெட் நடைமுறையில் உள்ளது. நவீன மீன் அங்காடி அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

27—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 31394—திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், இலங்குளம் ஊராட்சி, காமராஜர் நகருக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், இலங்குளம் ஊராட்சியைச் சார்ந்த காமராஜர் நகர் குடியிருப்பில் ஆழ்துளைக் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலமும், தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட தனி மின்விசைத் திட்டம் மூலமும் தற்போது குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் நாங்குநேரி-இசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் 2002 ஆம் ஆண்டு

2014 ஜூலை 30]

முதல் விஜயநாராயணம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தினமும் சராசரியாக 5,200 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், இலங்குளம் ஊராட்சியைச் சார்ந்த காமராஜர் நகர் குடியிருப்பிற்கு போதுமான குடிநீர் தனி மின்விசைத் திட்டம் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

28—

குப்பைகள் கொட்டுவதற்கு மாற்று இடம்

வினா எண் 31578—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லவபுரம் நகராட்சி, பல்லவபுரம் பெரிய ஏரியில் கொட்டப்படும் குப்பைகளை மாற்று இடத்தில் கொட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

பல்லவபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகள் பல்லவபுரம், கணபதிபுரம் பகுதிகளில் உள்ள பெரிய ஏரியில் கொட்டுவது நிறுத்தப்பட்டு, பல்லவபுரம் நகராட்சிப் பகுதியில் பொது சுகாதாரம் பாதிப்படையாமல் இருக்கும் வகையில், பம்மல் நகராட்சி குப்பை கொட்டுமிடத்தில் கொட்டப்படுகிறது.

29—

நில ஆபகரிப்பு வழக்கு நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 32864—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

நாகர்கோவிலில் தலைமை நீதிமன்ற வளாகத்தில் நில அபகரிப்பு வழக்கு நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

நாகர்கோவிலில் தலைமை நீதிமன்ற வளாகத்தில் நில அபகரிப்பு வழக்கு நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

30—

தனி நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 32888—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் விபத்து வழக்குகளை நடத்த தனி நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் விபத்து வழக்குகளை நடத்த தனி நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

31—

தனி நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 32895—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

கன்னியாகுமரி மாவட்டத்தில் காசோலை மோசடி வழக்குகளுக்கு தனி நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் காசோலை மோசடி வழக்குகளுக்கு தனி நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

32—

மழைநீர் கால்வாய்ப் பணி மேம்படுத்துதல்

வினா எண் 35335—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மழைநீர் கால்வாய்ப் பணியை விரைந்து மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) சென்னை மாநகராட்சி, மழைநீர் வடிகால் துறை, மழைநீர் வடிகால்வாய் பணியை மிக விரைவில் முடிக்க கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது:

- முதன்மைச் செயலர் / ஆணையர் அவர்கள் தலைமையில் மாதம் இருமுறை மழைநீர் வடிகால் துறை அனைத்து பொறியாளர்கள் மற்றும் இப்பணிகளைச் செய்து வரும்

[2014 ஜூலை 30

அனைத்து ஒப்பந்ததாரர்கள் ஆகியோருடன் நடைபெறும் கலந்தாய்வுக் கூட்டத்தில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு பணிகளை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- மழைநீர் வடிகால் துறையில் பணிகள் தொய்வு ஏற்படாமல் இருப்பதற்கு இணை ஆணையர் (பணிகள்) அவர்கள் தலைமையில் மாதம் இருமுறை ஒருங்கிணைந்த துறையான சென்னை குடிநீர் மற்றும் கழுவுநீர் அகற்று வாரியம், தமிழ்நாடு மின்சாரத் துறை மற்றும் போக்குவரத்து காவல் துறைகளுடன் கலந்தாலோசித்து மழைநீர் வடிகால்வாய் பணிகள் துரிதமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- ஒப்பந்ததாரர்களுக்கு எவ்வித இடர்பாடுமின்றி பணிகளை மேற்கொள்வதற்கு வழிவகை செய்வதற்கு வாரந்தோறும் சனிக்கிழமை நடைபெறும் கலந்தாய்வுக் கூட்டத்தில் பணிகள் குறித்தும், பணி முன்னேற்றம் குறித்தும் அனைத்து மண்டல அலுவலர்கள், செயற் பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் தலைமைப் பொறியாளர்களுடன் முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்கள்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- இணை ஆணையர் (பணிகள்) அவர்களின் அறிவுறுத்தலின்படி அனைத்து மண்டலங்களிலும் உள்ள மழைநீர் வடிகால்வாய்கள் ஒப்பந்ததாரர்களால் தூர் வாரப்பட்டு வருகின்றன

  வரும் மழைக்காலத்திற்கு முன்னதாகவே அனைத்து மண்டலங்களிலும் வெள்ள பாதிப்பு உள்ள பகுதிகளில் விரைவாகப் பணிகளை முடிக்க முன் செய்யப்பட்ட காங்கிரீட் கால்வாய் (Precast) பணி நடைபெற்று வருகிறது.

(ஆ) ஆம். மழைநீர் வடிகால்வாய் பணிகள் துரிதமாக செயல்படுத்தப்பட்டு மார்ச், 2014-ல் முடிக்கப்படும்.

2014 ஜூலை 30]

33—

போக்குவரத்து இடையூறுகளைக் குறைத்தல்

வினா எண் 35408—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை சென்ட்ரல் மற்றும் வ.உ.சி. சாலைப் பகுதிகளில் மாடுகள் சுற்றித் திரிவதை தடுத்து, போக்குவரத்து இடையூறுகளைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சுற்றித் திரியும் மாடுகள் பிடிக்கப்பட்டு, மூன்று நாட்களுக்கு ரூ. 1,550/- தண்டனை தொகையாக வசூலிக்கப்பட்டது. மேலும், சென்னை சென்ட்ரல், வ.உ.சி. சாலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றித் திரியும் மாடுகள் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பகுதிகளில் கடந்த ஆகஸ்ட் மாதம் 8 மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன. கடந்த 2013 ஜனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரை மொத்தம் 62 மாடுகள் பிடிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

34—

சாலைகளில் விளக்குகள் அமைத்து பராமரித்தல்

வினா எண் 35418—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 ஜூலை 30

(அ) சென்னை, மாதவரம் பகுதியிலுள்ள சாலைகளில் விளக்குகள் அமைத்து பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) சென்னை மாநகராட்சி, மாதவரம், மண்டலம் 3-ல் உள்ள சாலைகளில் விளக்குகள் அமைத்து பராமரிப்புப் பணி நடைபெற்று வருகிறது.

(ஆ) மாதவரம் பகுதியுள்ள 22 முதல் 33 வரை வார்டுகளில் நடப்பு நிதியாண்டில் (2013-2014) சுமார் 3,768 தெரு விளக்குக் கம்பங்கள் நடும் பணி நடைபெற்று வருகிறது.

35—

புறநகர் பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 35433—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திண்டுக்கல்வில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல்வில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்க உத்தேசம் ஏதுமில்லை.

2014 ஜூலை 30]

36—

இரு சக்கர வாகன நிறுத்துமிடம் அமைத்தல்

வினா எண் 35848—திரு. சோழன் சிது. பழனிச்சாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி நகர் பகுதியில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம் மற்றும் கல்லுக்கட்டி ஆகிய பகுதிகளில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் ஏற்கெனவே இயங்கி வருகிறது.

37—

பூங்காக்களை சீரமைத்தல்

வினா எண் 37682—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வடக்கு தொகுதி, வார்டு எண்கள் 45 மற்றும் 33-ல் உள்ள அண்ணா நகர் பூங்கா மற்றும் புதூர் பகுதியில் உள்ள பூங்காக்களை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான பூங்காக்கள் மாநகராட்சிமூலம் முறையாக பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், தனியார் நிறுவனங்கள் மேற்படி பூங்காக்களை பராமரிக்க விருப்பம் தெரிவித்து கோரியதனால், முதற்கட்டமாக அறு பூங்காக்கள் தேர்வு செய்யப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், அண்ணா நகர் பகுதியிலுள்ள பூங்காக்கள் மாநகராட்சி மூலம் முறையாக பராமரிக்கப்பட்டு வருகின்றன. அண்ணா நகர் மற்றும் புதூர் பகுதிகளில் பூங்காக்களைப் பராமரிக்க தனியார் நிறுவனங்கள் முன்வருமாயின், சம்பந்தப்பட்ட நிறுவனத்தின்மூலம் பராமரிக்கப்படும்.

38—

கால்வாயில் தூர்வாரும் பணியினைத் துரிதப்படுத்துதல்

வினா எண் 38943—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை மாம்பலம், நந்தனம் மற்றும் வியாசர்பாடி கால்வாயில் தூர் வாரும் பணியினைத் துரிதப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) சென்னை மாநகராட்சியின் மழைநீர் வடிகால் துறை மூலம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புறத் புனரமைப்பு

2014 ஜூலை 30]

திட்டத்தின்கீழ் பல்வேறு பகுதிகளில் மழைநீர் வடிகால்வாயில் தூர் வாரும் பணி நடைபெற்று வருகிறது. அதில் மாம்பலம் மற்றும் நந்தனம், வியாசர்பாடி கால்வாயில் தூர் வாரி, கால்வாயின் இருபக்கமும் காங்கிரீட் சுவர் அமைத்து, கால்வாயின் தரையை காங்கிரீட் கொண்டு அமைக்கும் பணி முடிக்கப்பட்டு செயல்பாட்டில் இருந்து வருகிறது. ஒரு சில இடங்களில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடிக்க, துறையின்மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு விரைவில் முடிக்கப்படும்.

(ஆ) இக்கால்வாயின் பணி வரும் மார்ச் 2014-க்குள் முடிக்கப்படும்.

39—

கால்வாய் சீரமைப்புப் பணியைத் துரிதப்படுத்துதல்

வினா எண் 38949—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கேப்டன் காட்டன் கால்வாய் சீரமைப்புப் பணியைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) கேப்டன் காட்டன் கால்வாயை சீரமைத்து, வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது.

(ஆ) சென்னை கேப்டன் காட்டன் கால்வாய் சீரமைப்புப் பணிகள் வரும் மார்ச் 2014-க்குள் முடிக்கப்படும்.

[2014 ஜூலை 30

40—

கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைத்தல்

வினா எண் 39469—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டத்தில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:—

(அ) ஆம்.

(ஆ) தூத்துக்குடி மாவட்டத்தில் 100 மில்லியன் லிட்டர் குடிநீர் திறனுடைய கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளவும், விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுமதி வழங்கி, அரசாணை (நிலை) எண் 132, நநி. (ம) குவ. (குவ2) துறை, நாள் 6-9-2013-ல் வெளியிடப்பட்டுள்ளது.

41—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 39768—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பேராவூரணி, பெருமகளூர், அதிராம்பட்டினம் பேருராட்சிகள் மற்றும் பட்டுக்கோட்டை, சேதுபாவாசத்திரம், பேராவூரணி, மதுக்கூர், பாபநாசம், திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, திருவோணம் ஆகிய 9 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 1,153 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றினை ரூ.495.70 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நிருவாக ஒப்புதல் வழங்கி, அரசாணை (நிலை) எண் 158/ந.நி(ம)சுவ (குவ4) துறை, நாள்; 19-10-2013-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

42—

தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின் தற்போதைய நிலை

வினா எண் 1600—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின்மூலம் செயல்படுத்தப்படும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின் தற்போதைய நிலையை அரசு தெரிவிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின்மூலம் 44,870 குடியிருப்புகள் ரூ.243.16 கோடி செலவில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற சீரமைப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளின் தற்போதைய நிலை பின்வருமாறு:

[2014 ஜூலை 30

வ. எண்	திட்டப் பகுதியின் பெயர்	மொத்த குடியிருப்புகள்	திட்ட செலவினம் (ரூ. கோடி)
அ.	முடிவுற்றவை		
	மதுரை-இராஜாக்கூர் பெரியார் நகர்	1566	47.76
	மொத்தம் (அ)	1566	47.76
ஆ.	முடிவுறும் நிலையில் உள்ளவை		
	சென்னை		
	ஒக்கியம் துரைப்பாக்கம்	6000	228.60
	எழில் நகர் பெரும்பாக்கம்	3936	175.36
	பெரும்பாக்கம் பகுதி-1	2064	135.47
	கோவை		
	அம்மன்குளம்	792	23.44
	உக்கடம்	1840	85.85
	மொத்தம் (ஆ)	14632	648.72
இ.	முன்னேற்றத்தில் உள்ளவை		
	சென்னை		
	பெரும்பாக்கம் பகுதி-1	8388	550.56
	பெரும்பாக்கம் பகுதி-2	5988	444.23
	கூடப்பாக்கம்	1024	71.44
	கோவை		
	காந்தி நகர்	1280	62.40
	அண்ணா நகர்	832	40.78
	மாலை நகர்	224	10.97
	மொத்தம் (இ)	17736	1180.38

2014 ஜூலை 30]

வ. எண்	திட்டப் பகுதியின் பெயர்	மொத்த குடியிருப்புகள்	திட்ட செலவினம் (ரூ. கோடி.)
ஈ.	தொடங்கப்படவுள்ளவை		
	நாவலூர்	2048	142.11
	மொத்தம் (ஈ)	2048	142.11
உ.	ஒப்பந்தப்புள்ளி நிலை		
	அகில இந்திய வானொலி நிலம்-திருவொற்றியூர்	416	27.84
	கோவை		
	மலுமிச்சம்பட்டி நகர்-பகுதி-I	1296	71.27
	மலுமிச்சம்பட்டி நகர் பகுதி-II	144	7.92
	மொத்தம் (உ)	1856	107.03
ஊ.	மதிப்பீடு தயாரிப்பு நிலை		
	கோவை		
	சுகுணாபுரம் பகுதி-I	840	46.52
	சுகுணாபுரம் பகுதி-II	224	12.43
	சுகுணாபுரம் பகுதி-III	88	4.89
	விவேகானந்தர் ஸ்கொயர்	224	12.17
	அண்ணா நகர் பகுதி-II	128	6.84
	மொத்தம் (ஊ)	1504	82.85
எ.	நிலங்கள் கண்டறியப்பட வேண்டியவை	5528	222.31
	ஆக மொத்தம் (அ+ஆ+இ+ஈ+உ+ஊ+எ)	44870	2431.16

[2014 ஜூலை 30

43—

குடிசைப்பகுதி மாற்று வாரிய விடுகள் கட்டுதல்

வினா எண் 16036—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் இராஜீவ் காந்தி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இராஜீவ்காந்தி வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 2017 ஆம் ஆண்டிற்குள் 1.00 இலட்சம் வீடுகள் ரூ.7500.00 கோடி செலவில் கீழே கூறப்பட்டுள்ள நகரங்களில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது:

1. சென்னை	6. திருச்சி
2. மதுரை	7. திருநெல்வேலி
3. கோவை	8. தூத்துக்குடி
4. சேலம்	9. வேலூர்
5. ஈரோடு	10. திருப்பூர்

மைய அரசின் அறிவுரைக்கிணங்க, முதற்கட்டமாக, மேற்கூறப்பட்டுள்ள நகரங்களில் விரிவான சமூகப் பொருளாதார கணக்கெடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தூத்துக்குடி நகரில் கணக்கெடுப்புப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

2014 ஜூலை 30]

இத்திட்டப் பணிகளுக்கான நிதி ஆதாரம் பின்வருமாறு:

மைய அரசு	-	50%
மாநில அரசு	-	40%
பயனாளிகள் பங்கு	-	10%

கணக்கெடுப்புப் பணிகள் முடிவுற்றவுடன், குடிசைப்பகுதிகளற்ற நகரத்திற்கான செயல்திட்ட பிரேரணைகள் தயாரிக்கப்பட்டு, மாநில அரசின் ஒப்புதல் பெற்று மைய அரசுக்கு அனுப்பப்படும். மைய அரசின் ஒப்புதல் பெற்றவுடன், பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முதற்கட்டமாக, இத்திட்டத்தின்கீழ் வீடுகள் அமைக்கும் பணிகள் 2013-2014 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

44—

வீடுகள் கட்டி பயனாளிகளிடம் ஒப்படைத்தல்

வினா எண் 16050—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜீவ் காந்தி புனரமைப்புத் திட்டம் 2-ன்கீழ் கன்னியாகுமரி, இராமநாதபுரம், தூத்துக்குடி, நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம், திருவள்ளூரில் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்

(ஆ) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் இராஜீவ் காந்தி புனரமைப்புத் திட்டம்-2-ன்கீழ் கீழ்க்கண்ட மாவட்டங்களில் வீடுகள் அமைத்து முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்ட/ஒப்படைக்கப்படவுள்ள விவரம் பின்வருமாறு:-

[2014 ஜூலை 30

வ. எண்	மாவட்டத்தின் பெயர்	அமைத்து முடிக்கப் பட்ட குடியிருப் புகள்	பயனாளி களிடம் ஒப்படைக் கப்பட்ட குடியிருப் புகள்	அமைத்து முடிக்கப் பட்டு பயனாளி களிடம் 15-9-2013 அன்று ஒப்படைக் கப்பட உள்ள குடியிருப் புகள்	மீத முள்ள குடியி யிருப் புகளின் பணி முடிவும் தருவா யில் உள்ளது. பணிகள் முடிவுற் றவுடன் 30-9-2013 அன்று பயனா ளிகளிடம் ஒப்படைக் படும்	பயனாளி களிடம் ஒப்படைக் கப்பட்ட விவரம்
1.	திருவள் ளூர்	357	357	—	—	11/2010 முதல் 8/2011 வரை
2.	விழுப் புரம்	276	220	18	38	3/2010 முதல் 4/12/2011 வரை
3.	கடலூர்	1003	634	192	177	12/2009 முதல் 4/2012 வரை
4.	இராமா நாதபுரம்	1027	1027	—	—	3/2010 முதல் 9/2011 வரை

2014 ஜூலை 30]

5.	நாகப்பட்டினம்	266	266	—	—	1/2009 முதல் 5/2010 வரை
6.	கன்னியாகுமரி	988	988	—	—	8/2009 முதல் 5/2012 வரை
7.	தூத்துக்குடி	1454	1454	—	—	6/2009 முதல் 10/2010 வரை

45—

விவசாய நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதற்குத் தடை

வினா எண் 35331—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாய நிலங்களை வீட்டு மனைகளாக மாற்றுவதை தடை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

மாநிலத்தின் முழுமைக்கும், நஞ்சை விளைநிலங்களை குடியிருப்பு போன்ற இதர உபயோகங்களுக்கு மாற்றுவதற்கு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971-ன் பிரிவு 47ஏ-ன்படி பொதுவான தடை உள்ளது. குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தைப்

[2014 ஜூலை 30

பொறுத்தமட்டில், மாவட்டத்தின் மொத்த 1672 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் நாகர்கோவில் நகராட்சி, தெங்கம்பட்டு, உத்தரம், கணபதிபுரம், சுசீந்திரம், ஆலூர், பேரூர் என ஆறு பேரூராட்சிகள் மற்றும் 20 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய 176 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு நாகர்கோவில் உள்ளூர் திட்டக் குழுமத்தில் அடங்கும். நஞ்சை நிலமோ அல்லது புஞ்சை நிலமோ, உள்ளூர் திட்டப் பகுதிக்குள் அமைந்தால் அதனை குடியிருப்பு போன்ற வேறு உபயோகங்களுக்கு மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவராகக் கொண்ட உள்ளூர் திட்டக் குழுமத்தால் பரிந்துரை செய்யப்பட்ட பின்னர் அரசின் அனுமதி வழங்கப்படும். நாகர்கோவில் உள்ளூர் திட்டப் பகுதியைத் தவிர கன்னியாகுமரி மாவட்டத்தின் எஞ்சிய திட்டமில்லா பகுதியைப் பொறுத்தமட்டில், நஞ்சை விளை நிலங்களை வேறு பயன்பாட்டுக்கு மாற்றம் செய்ய வேண்டுமெனில், தொடர்ந்து நீண்ட காலத்திற்கு அந்நிலம் பயிரிடப்படாமல் உள்ளதை உறுதி செய்த பின்னரும், அந்த நிலத்தை மாற்றம் செய்வதால் சுற்றியுள்ள விளை நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படாது எனும்போதும், இதனால் பாசன வாய்க்கால்களில் தண்ணீர் செல்வது ஏதும் தடைப்படாது என்பதை உறுதி செய்த பின்னரும் நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 பிரிவு 47ஏ-ன்படி மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதி பெற்ற பின்னர் நகர் ஊரமைப்புத் துறையில் அபிவிருத்திகளுக்கு அனுமதி வழங்க பரிசீலிக்கப்படும்.

எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், உள்ளூர் திட்டப் பகுதியாக இருந்தாலோ அல்லது திட்டமில்லா பகுதியாக இருந்தாலோ நஞ்சை விளை நிலங்களை வேறு உபயோகத்திற்கு மாற்றுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்னனுமதி தேவை.

நகர் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவுகள் 56 மற்றும் 57-ன்கீழ் அனுமதியற்ற மனைப்பிரிவு/கட்டுமானங்களைக் கண்டறிந்து உரிய அறிவிப்புகள் வழங்கியும், அதன்மீது தொடர் நடவடிக்கைகளை இத்துறையின் சார்நிலை அலுவலகங்களான மண்டல துணை இயக்குநர் அலுவலகம் மற்றும் கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம் ஆகியவை மேற்கொண்டும் விவசாய நிலங்களைப் பாதுகாக்க வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

2014 ஜூலை 30]

46—

அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 36001—திரு. அக்ரி எஸ்.எஸ். விருத்தாசலம்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம், புதுப்பாளையம், ஜமுனாமரத்தூர் ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம், புதுப்பாளையம், ஜமுனாமரத்தூர் ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின்மூலம் திட்டம் செயல்படுத்த தேவையான நிலம் எதுவும் கைவசம் இல்லை. எனவே, மேற்படி இடங்களில் வாரியத்தால் திட்டம் செயல்படுத்த இயலாத நிலை உள்ளது.

47—

அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 36033—திரு. கு. ஏழில்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரில் ஏற்கெனவே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அரக்கோணம் புறநகர் திட்டத்தின்கீழ் 542 தனி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. தற்போது அரக்கோணம் நகரில் வாரியம்வசம் நிலங்கள் எதுவும் இல்லை. எனவே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் திட்டம் தற்பொழுது செயல்படுத்திட இயலாத நிலை உள்ளது.

(ஆ) வினா எழாது.

48—

சுயநிதி திட்டத்தின்கீழ் குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 39036—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டத்தில் சுயநிதி திட்டத்தின்கீழ் வீடுகள், வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் சுயநிதி திட்டத்தின்கீழ் வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட, சென்னிமலை சாலை, முத்தம்பாளையம் பகுதி-3-ல் 356 அடுக்குமாடி வீடுகள் சுமார் ரூ.4487.00 இலட்சம் செலவில் கட்ட நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பொது

2014 ஜூலை 30]

மக்களிடமிருந்து போதிய கேட்பு பெறப்படாததால் திட்டம் நிறைவேற்றப்படாமல் உள்ளது.

(ஆ) பொது மக்களிடமிருந்து போதிய கேட்பு பெறப்பட்டவுடன், இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

49—

பன்னடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 39037—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சோழிங்கநல்லூரில் பன்னடுக்கு மாடி வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சென்னை சோழிங்கநல்லூரில் 3662 அலகுகள் கொண்ட பன்னடுக்கு மாடி குடியிருப்புகள் புதிய தொழில்நுட்பத்துடன் கட்டும் திட்டத்திற்கு திட்ட செயலாக்கம் நடைபெற்றுக்கொண்டுள்ளது. முதல் கட்டமாக புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி (முன்கட்டுமான தொழில்நுட்பம்) 1500 பன்னடுக்கு மாடி குடியிருப்புகள் சோழிங்கநல்லூரில் கட்டுவதற்கு நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

50—

வணிக வளாகத்தைப் புனரமைத்தல்

வினா எண் 39042—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) சென்னை வேளச்சேரி வீட்டுவசதி வாரியக் குடியிருப்புப் பகுதியில் உள்ள வணிக வளாகத்தைப் புனரமைத்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை வேளச்சேரி வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் உள்ள வணிக வளாகத்தை பொது மக்கள் யாரும் ஏலத்தில் எடுக்க முன்வராத காரணத்தால், மிகவும் சிதிலமடைந்து புனரமைக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே, புதியதாக வணிக வளாகம் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டுவதற்காக, சிதிலமடைந்துள்ள கட்டடத்தை இடிப்பதற்கான பிரேரணை தயார் செய்யப்பட்டு வருகின்றது.

மேலும், இதுகுறித்து CMDA மற்றும் சென்னை மாநகராட்சி ஆகியவற்றின் ஒப்புதல்கள் பெறப்பட்டு, பின்னர் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் புதிதாக வணிக வளாகம் கட்டுவதற்கான திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

51—

புதிய கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35423—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவண செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7-ல், வாடகைக்

2014 ஜூலை 30]

கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களை புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் திருவண்ணாமலை மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 235.80 சதுர மீட்டரும், முதல் தளம் 265.90 சதுர மீட்டரும், மொத்தம் 501.70 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உட்பட) அளவும் கொண்ட புதிய கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தை துவக்கி வைத்தார்கள். ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட அனுமதிகள் பெறப்பட்டுள்ளன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 16-5-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

52—

புதிய கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35424—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7-ல், வாடகைக்

[2014 ஜூலை 30

கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களை புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் தேனி மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 855.00 சதுர மீட்டரும் முதல் தளம் 265.90 சதுர மீட்டரும், மொத்தம் 501.70 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) அளவும் கொண்ட புதிய கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். ரூ.150.00 இலட்சம் மதிப்பிட்டில் புதிய கட்டடம் கட்ட அனுமதிகள் பெறப்பட்டுள்ளன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 25-4-2013 அன்று முதல் பொதுப் பணித் துறை மூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

53—

புதிய கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35425—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7-ல், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில்

2014 ஜூலை 30]

மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களை புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் திருவாரூர் மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 235.80 சதுர மீட்டரும், முதல் தளம் 265.90 சதுர மீட்டரும், மொத்தம் 501.70 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) அளவும் கொண்ட புதிய கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட அனுமதிகள் பெறப்பட்டுள்ளன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 25-4-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

54—

புதிய கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35426—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7-ல், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை

[2014 ஜூலை 30

புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களைப் புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் விழுப்புரம் மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 235.80 சதுர மீட்டரும், முதல் தளம் 265.90 சதுர மீட்டரும், மொத்தம் 501.70 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) அளவும் கொண்ட புதிய கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட அனுமதிகள் பெறப்பட்டுள்ளன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 25-4-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

55—

புதிய கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35427—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7-ல், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை

2014 ஜூலை 30]

புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களைப் புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அரியலூர் மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 235.80 சதுர மீட்டரும், முதல் தளம் 265.90 சதுர மீட்டரும், மொத்தம் 501.70 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) அளவும் கொண்ட புதிய கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட அனுமதிகள் பெறப்பட்டுள்ளன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 25-4-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

56—

புதிய கட்டடங்கள் கட்டுதல்

வினா என் 35428—திரு. ரா. சுரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7-ல், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில்

[2014 ஜூலை 30

இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களைப் புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் கரூர் மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 235.80 சதுர மீட்டரும், முதல் தளம் 265.90 சதுர மீட்டரும், மொத்தம் 501.70 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) அளவும் கொண்ட புதிய கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட அனுமதிகள் பெறப்பட்டுள்ளன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 25-4-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

57—

புதிய கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35429—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7-ல் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களைப் புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/-

2014 ஜூலை 30]

ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் பெரம்பலூர் மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 235.80 சதுர மீட்டரும், முதல் தளம் 265.90 சதுர மீட்டரும், மொத்தம் 501.70 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) அளவும் கொண்ட புதிய கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட அனுமதிகள் பெறப்பட்டுள்ளன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

58—

புதிய கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35430—திரு. ரா. சந்திரகுமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கிழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத் தொழில் மையத்திற்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7-ல் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களைப் புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நாமக்கல்

[2014 ஜூலை 30

மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 235.80 சதுர மீட்டரும், முதல் தளம் 265.90 சதுர மீட்டரும், மொத்தம் 501.70 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) அளவும் கொண்ட புதிய கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட அனுமதிகள் பெறப்பட்டுள்ளன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 22-4-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

59—

புதிய கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35431—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7-ல் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களை புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நாகப்பட்டினம்

2014 ஜூலை 30]

மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 235.80 சதுர மீட்டரும், முதல் தளம் 265.90 சதுர மீட்டரும், மொத்தம் 501.70 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) அளவும் கொண்ட புதிய கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட அனுமதிகள் பெறப்பட்டுள்ளன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 13-5-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

60—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35439—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்கு புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7-ல் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களை புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் கிருஷ்ணகிரி

[2014 ஜூலை 30

மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 197.80 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போது உள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 3-7-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

61—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35440—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7-ல் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களைப் புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2014 ஜூலை 30]

அவ்வகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் மதுரை மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 197.80 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போது உள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 24-5-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

62—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35441—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7-ல் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களைப் புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/-

[2014 ஜூலை 30

ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் கடலூர் மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 197.80 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போது உள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் சுட்டும் கட்டுமானப் பணி 20-6-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

63—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35442—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7-ல் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களைப் புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களைப்

2014 ஜூலை 30]

புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் தருமபுரி மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 197.80 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போது உள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கூடுதல் கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 20-6-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

64—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35443—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7-ல் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களைப் புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத்

[2014 ஜூலை 30

தொழில் மையங்களைப் புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் வேலூர் மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 197.80 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போது உள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டிடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 19-6-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

65—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35444—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7-ல் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து

2014 ஜூலை 30]

32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களைப் புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் விருதுநகர் மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 197.80 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போது உள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 20-6-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

66—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் **35445**—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை (நிலை) எண் 7-ல் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களைப்

[2014 ஜூலை 30

புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களைப் புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் கன்னியாகுமரி மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 197.80 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போது உள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 20-6-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

67—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35446—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை நிலை எண் 7-ல், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கி

2014 ஜூலை 30]

வரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களைப் புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் காஞ்சிபுரம் மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 197.80 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போதுள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 11-6-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

63—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35447—திரு. ஈ. சந்தகுமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் மேற்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை நிலை எண் 7-ல், வாடகைக்

[2014 ஜூலை 30

கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களைப் புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் ஈரோடு மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 197.80 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போதுள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 10-6-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

69—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35448—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை நிலை எண் 7-ல், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களைப் புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் திண்டுக்கல் மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 197.80 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போதுள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 5-6-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

70—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35449—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை நிலை எண் 7-ல், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களை புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் திருவள்ளூர் மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 197.80 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போதுள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 20-6-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

71—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35450—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தூத்துக்குடி மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை நிலை எண் 7-ல், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களை புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் தூத்துக்குடி மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 1980 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போதுள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 20-6-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

72—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35451—திரு. ஏ. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை நிலை எண் 7-ல், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களை புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் திருநெல்வேலி மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 197.80 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போதுள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 20-6-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

73—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35452—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை நிலை எண் 7-ல், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களை புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் தஞ்சாவூர் மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 197.80 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போதுள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தை துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 20-6-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

74—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35453—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை நிலை என் 7-ல், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களை புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் சிவகங்கை மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 197.80 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உட்பட) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போதுள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 20-6-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

75—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35454—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை நிலை எண் 7-ல், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களை புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் சேலம் மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 1978.0 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போதுள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 14-6-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

76—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 35455—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை நிலை எண் 7-ல், வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களை புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் நீலகிரி மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 1978.80 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்த 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உடன்) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போதுள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 20-6-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

77—

கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 36967—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 17-1-2013 நாளிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் அரசாணை நிலை எண் 7-ல் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 11 மாவட்டத் தொழில் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டவும், சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் 21 மாவட்டத் தொழில் மையங்களை புனரமைப்பு செய்தல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் என மாநிலத்தின் அனைத்து 32 மாவட்டங்களிலும் உள்ள மாவட்டத் தொழில் மையங்களை புனரமைத்தலுக்காக ரூ.50,00,00,000/- ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவரும் திருச்சிராப்பள்ளி மாவட்டத் தொழில் மையத்திற்கு, தரைதளம் 1978.80 சதுர மீட்டரும், முதல் தளம் 143.40 சதுர மீட்டரும், மொத்தம் 341.20 சதுர மீட்டர் (23 சதுர மீட்டர் போர்டிகோ உட்பட) கூடுதல் கட்டடம் கட்டவும் மற்றும் தற்போதுள்ள கட்டடத்தைப் புனரமைப்புச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 19-2-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சிமூலம் இத்திட்டத்தை துவக்கி வைத்தார்கள். கூடுதல் கட்டடம் கட்ட ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிலும், பழைய கட்டடத்தை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்க அனுமதிகள் பெறப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) கட்டடம் கட்டும் கட்டுமானப் பணி 20-6-2013 அன்று முதல் பொதுப் பணித் துறைமூலம் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

78—

முந்திரி ஏற்றுமதி

வினா எண் 17381—திரு. ர. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், பண்ருட்டியில் ஏற்படுத்தியுள்ள முந்திரி ஏற்றுமதி மண்டலம்மூலம் 2011-2012 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட முந்திரியின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) ஏற்றுமதியை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) கடலூர் மாவட்டத்தில் ஏற்படுத்தியுள்ள முந்திரி வேளாண் ஏற்றுமதி மண்டலமான சத்துவா அக்ரோ எக்ஸ்போ (பி) லிமிடெட் 2011-2012 ஆம் ஆண்டில் பதப்படுத்துவோர்கள் ஏற்றுமதியாளர்கள் கொண்டுவந்த 1006 மெட்ரிக் டன் முந்திரியினைப் பதப்படுத்தும் பணியினை மட்டும் மேற்கொண்டு (Cashew Processing on job basis) ரூ.32.24 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளனர்.

2011-2012 ஆம் நிதியாண்டில் இந்நிறுவனத்தால், விவசாயிகளிடமிருந்து நேரடியாக முந்திரி கொள்முதல் செய்யப்படவில்லை. முந்திரி ஏற்றுமதி எதுவும் செய்யப்படவில்லை

(ஆ) கடலூர் மாவட்டத்தில் கடந்த 30-12-2011 அன்று வீசிய தானே கடும் புயலினால், மாவட்டத்தில் முந்திரி பயிரிடப்பட்ட சுமார் 32,000 ஹெக்டேர் பரப்பளவு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள முந்திரி விவசாயிகளின் வாழ்வாதாரம் அடியோடு முடக்கப்பட்டுள்ளதால், தமிழக அரசு கடலூர் மாவட்டத்தில் தானே நிவாரணப் பணிகளை கண்காணிக்கக் கூடுதல் ஆட்சியர், தானே புயல் மறுவாழ்வு திட்டம் தலைமையில் திட்ட மேலாண்மை அலகு (PMU) ஒன்றினை ஏற்படுத்தி, சம்பந்தப்பட்ட துறைகள்மூலம் நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டு தீவிரமாகக் கண்காணித்து வருகின்றது.

அதனடிப்படையில் தானே புயலினால் பாதிக்கப்பட்ட முந்திரி விவசாயிகளுக்கு, பாதிக்கப்பட்ட மரங்களை வெட்டி, வெற்றி உழவுப் பணிகள் செய்து தரவும், முந்திரி மரங்கள் அகற்றப்பட்ட இடத்தில் உயர்விளைச்சல் வி.ஆர்.ஜ 3 ரக முந்திரிக் கன்றுகளை சாதாரண முறை மற்றும் அடர் நடவு முறையில் நடவு செய்யவும் தற்போது நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேலும், முந்திரி விவசாயிகளைக் கொண்ட கூட்டு பொறுப்புக் குழு (Joint Liability Group) அமைத்து சமுதாய ஆழ்குழாய்க் கிணறு அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

2014 ஜூலை 30]

எனவே, கடலூர் மாவட்டத்தில் தானே புயலினால் முந்திரி பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. நிலையான முந்திரி உற்பத்தி கொண்டுவரப்பட்டவுடனும், சத்துவா அக்ரோ எக்ஸ்போ (பி) லிமிடெட் நிறுவனம் பணியினை முடித்தவுடனும், முந்திரி விளைபொருள் குழுக்கள்மூலம் முந்திரி ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

79—

கத்தரிக்காய் விவசாயத்தை ஊக்கப்படுத்துதல்

வினா எண் 36813—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதியில் சாக்கோட்டை ஒன்றியம், பெரிய கோட்டைப் பகுதியில் நாட்டுக் கத்தரிக்காய் விதை உற்பத்தியை அதிகரிக்கவும், மற்ற பகுதிகளில் நாட்டுக் கத்தரிக்காய் விவசாயத்தை ஊக்கப்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதியில் 70 எக்டர் பரப்பளவில் கத்தரி சாகுபடி செய்யப்படுகிறது. இதில் சாக்கோட்டை ஒன்றியத்தில் பெரியகோட்டை நாட்டுக் கத்தரிக்காய் 55 எக்டேர் பரப்பளவிலும், பிற நாட்டுக் கத்தரி 10 எக்டர் பரப்பளவிலும், உயர் ரக கத்தரி 5 எக்டேர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்படுகிறது.

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆலோசனைப்படி 2012-2013-இல் பெரியகோட்டை நாட்டுக் கத்தரிக்காய் ரகத்தை மேம்படுத்தி அதை உற்பத்தி செய்ய செட்டிநாடு மானாவாரி வேளாண் ஆராய்ச்சி நிலையத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் 2012-2013-இல், விதை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் விதைகள் முளைப்புத் திறன் இல்லாததால் மேலும் உற்பத்தி செய்யப்படவில்லை. விவசாயிகள்

நாட்டு ரக சாகுபடிக்குத் தேவையான விதைகளை தாங்களே உற்பத்தி செய்து பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, காரைக்குடி தொகுதியில் சாக்கோட்டை ஒன்றியம், பெரியகோட்டை பகுதியில் கத்தரிக்காய் விதை உற்பத்தியை அதிகரிக்க தற்போது அரசின் திட்டங்கள் ஏதுமில்லை.

கத்தரி விவசாயத்தை ஊக்கப்படுத்த சாக்கோட்டை ஒன்றியத்தில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் போன்றவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 5 எக்டேர் கத்தரிக்காய் புதிய பரப்பு விரிவாக்கத்திற்கு 50% மானியத்தில் விதைகள் விநியோகிக்கப்படுகின்றன.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் துல்லிய பண்ணைத் திட்டத்தில் விஸ்வாஸ் வீரிய ரக விதைகள் 6 எக்டேரில் புதிய பரப்பு விரிவாக்கத்திற்கு 1.4 கிலோ முழு மானியத்தில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

நடப்பு 2013-2014 ஆம் ஆண்டில் காரைக்குடி தொகுதிக்கு உட்பட்ட கல்லல் ஒன்றியத்தில் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின்கீழ் வீரிய கத்தரி 5 எக்டேர் பரப்பளவில் பயிரிட எக்டேருக்கு ரூ.15,000/- மானியம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

80—

வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்தல்

வினா எண் 38393—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சிற்றம்பலம் ஊராட்சியானது பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கென அறிவிக்கையிடப்பட்ட பகுதியாகும். இங்குள்ள விவசாயிகளின் விளைபொருட்களுக்கு வியாபாரிகளிடமிருந்து அதிக விலை பெற இயலாது என்பதால், இப்பகுதி விவசாயிகள் திருச்சிற்றம்பலம் ஊராட்சியிலிருந்து 5 கி.மீ. தூரமேயுள்ள உலர்களம் மற்றும் முழுக் கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தனியாக திருச்சிற்றம்பலம் ஊராட்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கத் தேவையில்லை.

81—

வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்தல்

வினா எண் 40254—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, திப்பணம்பட்டி ஊராட்சியில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திப்பணம்பட்டி ஊராட்சியானது பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கென அறிவிக்கையிடப்பட்ட பகுதியாகும். இங்குள்ள விவசாயிகளின் விளைபொருட்களுக்கு வியாபாரிகளிடமிருந்து அதிக விலை பெற இயலாது என்பதால், இப்பகுதி விவசாயிகள் திப்பணம்பட்டி ஊராட்சியிலிருந்து 3 கி.மீ. தூரமேயுள்ள உலர்களம் மற்றும் முழுக் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினைப்

[2014 ஜூலை 30

பயன்படுத்திக் கொள்ளலாம். தனியாக இவ்வூராட்சிக்கென்று ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க இயலாது.

82—

வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்தல்

வினா எண் 40258—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, குலசேகரப்பட்டி ஊராட்சியில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குலசேகரப்பட்டி ஊராட்சியானது பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கென அறிவிக்கப்பட்ட பகுதியாகும். இங்குள்ள விவசாயிகளின் விளைபொருட்களுக்கு வியாபாரிகளிடமிருந்து அதிக விலை பெற இயலாது என்பதால், இப்பகுதி விவசாயிகள் குலசேகரப்பட்டி ஊராட்சியிலிருந்து 3 கி.மீ. தூரமேயுள்ள உலர்களம் மற்றும் முழுக் கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினைப் பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே, குலசேகரப்பட்டி ஊராட்சிக்கென்று தனியாக வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க இயலாது.

83—

கூடுதல் கிடங்கு கட்டுதல்

வினா எண் 40469—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஒன்றிய வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு கூடுதல் கிடங்கு கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஒன்றிய வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு கிடங்கு பழுதுபார்க்கும் பணிக்கென 2013-2014 ஆம் ஆண்டில் ரூ.7 இலட்சம் வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், விதை சேமிப்புக் கிடங்கு கட்ட ரூ.100 இலட்சம் மாநில திட்டக் குழுவின் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

84—

சிப்பி காளான் வளர்ப்புத் தொழில்

வினா எண் 40756—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிப்பி காளான் வளர்ப்புத் தொழிலை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிப்பிகாளான் வளர்ப்புத் தொழில் தோட்டக்கலைத் துறைமூலம் தற்போது ஊக்குவிக்கப்படுகிறது. தோட்டக்கலைத் துறைமூலம் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் காளான் வளர்ப்பு (சிப்பி காளான், பட்டன் காளான், பால் காளான் என்ற அனைத்து நுகரக்கூடிய காளான் வகைகள்) மேற்கொள்ள மானிய உதவி கீழ்க்காணுமாறு அளிக்கப்படுகிறது:

ஒருங்கிணைந்த காளான் உற்பத்திக் கூடம் அமைக்க, அதாவது காளான் உற்பத்தி, காளான் விதை உற்பத்தி, மக்கு மர உற்பத்தி மற்றும் பயிற்சி உள்ளிட்ட அனைத்து செயல்பாடுகளையும் உள்ளடக்கிய காளான் உற்பத்திக் கூடம் அமைக்க அதிகபட்ச

[2014 ஜூலை 30

திட்டச், செலவினம் ரூ.50 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டு, அதில் உட்கூட்டமைப்புகளை நிறுவுவதற்கான 50 சத மானியமாக, ரூ.25.00 இலட்சம் வரை கடன் இணைந்த பின்னேற்பு மானியமாக அளிக்கப்படுகிறது.

காளான் விதை உற்பத்திக் கூடம் அமைக்க, அதிகபட்ச திட்டச் செலவினமான ரூ.15.00 இலட்சத்தில் 50 சத மானியம் கடன் இணைந்த பின்னேற்பு மானியமாக அளிக்கப்படுகிறது.

மக்கு உர உற்பத்திக் கூடம் அமைக்க, அதிகபட்ச திட்டச் செலவினமான ரூ.20.00 இலட்சத்தில் 50 சதம் கடன் இணைந்த பின்னேற்பு மானியமாக வழங்கப்படுகிறது. ஆர்வமுள்ள விவசாயிகள் / தொழில் முனைவோர் தங்களது விரிவான திட்ட அறிக்கையினை உரிய படிவத்தில் (http://tnhorticulture/tn.gov.in) தயாரித்து, வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்மூலம் மாவட்ட தோட்டக்கலைத் துணை இயக்குநருக்கு அனுப்பலாம். அக்கருத்துரு மாவட்ட தோட்டக்கலை இயக்கக் குழுவின் ஒப்புதலோடு மாநில தோட்டக்கலை இயக்கத்திற்கு அனுப்பப்பட்டு, மாநில அளவிலான செயற்குழுவில் வைத்து ஒப்புதல் பெறப்பட்டவுடன், மத்திய அரசின் தேசிய தோட்டக்கலை இயக்க அதிகாரக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். அங்கே ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன், காளான் வளர்ப்புக் கூடம் கருத்துருவில் குறிப்பிட்டவாறு நிறுவப்பட்டுள்ளதா என்பது கூட்டு ஆய்வுக் குழுவின்மூலம் இறுதி ஆய்வு செய்யப்பட்டு, மானியத் தொகை, கடன் வழங்கிய வங்கி/ நிறுவனத்திற்கு விடுவிக்கப்படும்.

85—

சாம்பார் பூசணி பயிரிடும் விவசாயிகளை ஊக்குவித்தல்

வினா எண் 41475—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் சாம்பார் பூசணி பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், கோணண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் சாம்பார் பூசணி சாகுபடியை ஊக்குவிக்க தோட்டக்கலைத் துறைமூலமாக பல்வேறு அரசு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் விதைகள் மற்றும் இதர இடுபொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும், விவசாயிகளுக்கு சாம்பார் பூசணி சாகுபடி குறித்த பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

2010-2011 ஆம் ஆண்டில் பரீட்சார்த்த முறையில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட கோ 1 இரக சாம்பார் பூசணி விதை 1,800 கிராம், கீழ்நெட்டூர், சீவலாதி, நெஞ்சத்தூர், மேலாயூர், தெற்கு சமுத்திரம், திருவள்ளூர், நத்தபிரக்கி, வெள்ளிக்குறிச்சி மற்றும் பீசர்பட்டினம் கிராம முன்னோடி விவசாயிகள் 12 பேருக்கு 50 சதவீத மானிய விலையில் வழங்கப்பட்டு, சாம்பார் பூசணி சாகுபடி செய்து பயன்பெற்று வருகின்றனர்.

2012-2013 ஆம் ஆண்டில் சாம்பார் பூசணி விளைச்சலை உயர்த்திட வீரிய ஒட்டு ரகமான நுஜி 09 என்ற ரகம் 1 கிலோ விதை, ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தெற்குசந்தனூர், கிருங்காகோட்டை, தீர்த்தான்பேட்டை, வாகுடி, வேதியரேந்தல், புக்குழி மற்றும் ஏனாதிசெங்கோட்டை கிராமங்களில் 12 முன்னோடி விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டு உரிய சாகுபடி தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கி ஊக்குப்படுத்தப்பட்டது. இதன்மூலம் சாம்பார் பூசணி சாகுபடி செய்த விவசாயிகள் அதிக இலாபம் அடைந்துள்ளனர்.

மானாமதுரை தொகுதியில் இளையான்குடி மற்றும் திருப்புவனம் ஒன்றிய தோட்டக்கலை உதவி இயக்குநர்களால் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் 2012-2013 இன்கீழ் நடத்தப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சியின்மூலம் 25 முன்னோடி விவசாயிகளுக்கு சாம்பார் பூசணி சாகுபடி தொழில்நுட்பங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன.

[2014 ஜூலை 30

2013-2014 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கோ 2 என்ற ரகம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு பகைவரைவென்றான், முனைவென்றி, கீழாபூர், திருவள்ளூர், சாத்தனூர், குஞ்சுகாரனேந்தல், மாங்குளம், சூரக்குளம், கீழகொம்புகாரனேந்தல் கிராமங்களைச் சேர்ந்த 13 விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் விதைகள் வழங்கப்பட்டு, பயிரிடப்பட்டுள்ளது.

2013-2014 ஆம் ஆண்டில் பரளையாறு உபவடிநிலப் பகுதி நீர்வள, நிலவள திட்டத்தின்கீழ் பெரும்பச்சேரி மற்றும் அரிமண்டபம் கிராமங்களில் காய்கறி சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சியளிக்க செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதில் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் விவசாயிகளுக்கு சாம்பார் பூசணி சாகுபடி செய்ய பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

86—

பயிர்கள் மற்றும் தானிய ஈட்டுக் கடன் தொகை

வினா எண் 18319—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011-2012 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயிர்க் கடன் மற்றும் தானிய ஈட்டுக் கடன் தொகை எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

2011-2012 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக பயிர்க் கடன் 9,15,674 விவசாயிகளுக்கு ரூ.3,280.42 கோடியும், தானிய ஈட்டுக் கடன் 11,052 விவசாயிகளுக்கு ரூ.105.99 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

2014 ஜூலை 30]

87—

தானிய ஈட்டுக் கடன்

வினா எண் 18374—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2011-2012 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள்மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தானிய ஈட்டுக் கடன் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

2011-2012 ஆம் ஆண்டில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக தானிய ஈட்டுக் கடன் 11,052 விவசாயிகளுக்கு ரூ.105.99 கோடி வழங்கப்பட்டுள்ளது.

88—

விவசாயக் கடன்கள் வழங்குதல்

வினா எண் 37755—திரு. ஜே.ஜி பிரின்ஸ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உழவர் அடையாள அட்டை உள்ளவர்களுக்கு வங்கிகள்மூலம் விவசாயக் கடன்கள் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் (நபார்டு) உருவாக்கப்பட்ட கிசான் கடன் அட்டை (Kisan Credit Card) திட்டத்தை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள்மூலம் செயல்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. இந்தத்

[2014 ஜூலை 30

திட்டத்தின்கீழ் விவசாயிகள் விவசாய இடுபொருட்களான விதைகள், உரம், பூச்சித்கொல்லி மருந்து ஆகியவற்றை உடனடியாகப் பெற இயலும். மேலும், உற்பத்திச் செலவிற்கு உடனடியாக பணமும் பெற முடியும். மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களும் விவசாயி கடன் அட்டை திட்டத்தை தற்போது செயல்படுத்தி வருகின்றன. 31-10-2013 தேதிவரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் 5,83,725 விவசாயிகளுக்கு ரூ.2,58533 கோடி அளவிற்கு கடன் வழங்கியுள்ளன.

89—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம்

வினா எண் 38402—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, சில்லரைப்புரவு ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) எண் 0324 மத்தளம்பாறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் விவகார எல்லையில் மத்தளம்பாறை மற்றும் சில்லரைப்புரவு ஆகிய வருவாய்க் கிராமங்கள் உள்ளன. மத்தளம்பாறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் 31-7-2013 இல் 1,421 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் 821 உறுப்பினர்கள் கடன் பெற்று பயனடைந்து வருகின்றனர். தற்போது புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்கக் கோரும் சில்லரைப்புரவு ஊராட்சி மக்களில் 425 பேர் மட்டுமே மத்தளம்பாறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். சில்லரைப்புரவு ஊராட்சிக்கும், மத்தளம்பாறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு

2014 ஜூலை 30]

கடன் சங்கத்திற்கும் இடையே உள்ள தூரம் 0.5 கிலோ மீட்டர் மட்டுமே. சில்லரைப்புரவு கிராமத்தின் மொத்த நிலப்பரப்பு 140 ஹெக்டேர் ஆகும். இதில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 85 ஹெக்டேர் ஆகும்.

மேலும், மத்தளம்பாறை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் 2011-2012 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கையின் படி ரூ735 இலட்சம் குவித்த நட்டத்தில் இயங்குகிறது. இந்நிலையில் அச்சங்கத்தினைப் பிரித்து சில்லரைப்புரவு ஊராட்சியில் சங்கம் அமைத்தால் மேலும் நட்டமடைந்து நலிவுடைய வாய்ப்புள்ளது.

புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-10-2006-ல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளைப் பரிசிலிக்கையில், சில்லரைப்புரவு ஊராட்சியில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

90—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை செயல்படுத்துதல்

வினா எண் 40278—திரு. கோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கானரக்குடி தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், கள்ளிவயலை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை மீண்டும் கள்ளிவயல் ஊராட்சியில் செயல்படுத்த அரசு ஆவண செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பூசலாக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் விவகார எல்லையில் கள்ளிவயல் உட்பட 101 கிராமங்கள் உள்ளன. தற்போது புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்கக்கோரும்

[2014 ஜூலை 30

கள்ளிவயல் கிராம மக்களில் 313 பேர் மட்டுமே பூசலாக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். பூசலாக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க விவகார எல்லைக்குட்பட்ட கள்ளிவயல் ஊராட்சியில் 28-9-1973-ல் கள்ளிவயல் இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கப்பட்டு 7-4-1976 இல் கலைக்கப்பட்டுள்ளது. கள்ளிவயல் கிராமத்தில் மொத்த நிலப்பரப்பு 515 ஏக்கர் ஆகும். இதில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 427 ஏக்கர் ஆகும்.

பூசலாக்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் 2009-2010 ஆம் ஆண்டின் தணிக்கை அறிக்கையின்படி ரூ.61.53 இலட்சம் குவிந்த நட்டத்தில் இயங்குகிறது. இந்நிலையில் இச்சங்கத்தினைப் பிரித்து கள்ளிவயல் கிராமத்தில் புதிய சங்கம் அமைத்தால் மேலும் நட்டமடைந்து நலிவடைய வாய்ப்புள்ளது.

புதியதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைப்பதற்கு அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-10-2006 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பரிசீலிக்கையில், கள்ளிவயல் கிராமத்தில் பயிரிடக்கூடிய நிலப்பரப்பு 427 ஏக்கர் மட்டுமே உள்ளது. ஓராண்டிற்கு குறைந்தபட்சம் ரூ.2 கோடி அளவிற்கு அனைத்து வகைக் கடன்களும் வழங்க வழிவகை இல்லாத நிலையில், கள்ளிவயல் ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் அமைக்க வாய்ப்பு இல்லை.

91—

பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 11331—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, டி. கல்லுப்பட்டி ஒன்றியம், ஜாரி உசிலம்பட்டி கிராம நியாய விலைக் கடையைப் பிரித்து கரையாம்பட்டியிலும் மற்றும் லட்சுமிபுரம் நியாய விலைக் கடையைப் பிரித்து இராவுத்தான்பட்டியிலும் பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் தொகுதி, டி. கல்லுப்பட்டி ஒன்றியம், ஜாரி உசிலம்பட்டி கிராம நியாய விலைக் கடையைப் பிரித்து கரையாம்பட்டி கிராமத்தைச் சார்ந்த 112 குடும்ப அட்டைகள் சேர்ந்து 229 குடும்ப அட்டைகளுடனும் கரையாம்பட்டி குடும்ப அட்டைதாரர்கள் ஜாரி உசிலம்பட்டி நியாய விலைக் கடையிலும், இராவுத்தான்பட்டி குடும்ப அட்டைதாரர்கள் லெட்சுமிபுரம் நியாய விலைக் கடையிலும் எவ்வித சிரமமுமின்றி குடிமைப் பொருட்கள் பெற்று வருகின்றனர். பகுதிநேரக் கடையில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளாவது இருக்க வேண்டும் மற்றும் பகுதிநேர நியாய விலைக் கடையைப் பிரித்த பின்பு தாய்க் கடையில் குறைந்தபட்சம் 500 குடும்ப அட்டைகளாவது இருக்க வேண்டும் என்ற அரசாணையின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத காரணத்தினால் கரையாம்பட்டியிலும், இராவுத்தான்பட்டியிலும் புதிய பகுதிநேர நியாய விலைக் கடைகள் திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

92—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 2478—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, வாரச்சந்தை அருகே நியாய விலைக் கடை துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசிராமணி பேரூராட்சி, வாரச்சந்தை (சந்தைப்பேட்டை) பகுதியில் 76 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ள நிலையில், அரசிராமணி பேரூராட்சி, வாரச்சந்தை அருகே புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2014 ஜூலை 30

93—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 27159—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி ஒன்றியம், மூலக்கரைப்பட்டி பேரூராட்சி, 10-வது வார்டில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மூலக்கரைப்பட்டி 10-வது வார்டில் ஏற்கெனவே பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வரும் நிலையில், வேறு பகுதிநேரக் கடை அமைக்கும் அவசியம் எழவில்லை.

94—

இணையதளம்மூலம் குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்தல்

வினா எண் 28519—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இணையதளம் மூலமாகவே தேவையான ஆவணச் சான்றுகளை சமர்ப்பித்து குடும்ப அட்டைக்கு விண்ணப்பிக்கும் முறையை அமல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இணையதளம் வாயிலாக குடும்ப அட்டைகளுக்கு மனு மற்றும் இதர ஆவணங்களை வழங்கி குடும்ப அட்டை பெறும் வசதி தற்போது நடைமுறையில் இல்லை. பொது விநியோகத் திட்டம் முழு கணினிமயமாக்கப்படும்போது குடும்ப அட்டை விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக வழங்குவதற்கும், குடும்ப அட்டைகளில் கோரும் மாற்றங்களை இணையதளம் வாயிலாக பதிந்து கோருவதற்கும் மின்பணிகள் (E-Service) வழங்க செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

95—

நியாய விலைக் கிளைக் கடை அமைத்தல்

வினா எண் 29093—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, புல்லுகாட்டுவலசையிலுள்ள (DP021) நியாய விலைக் கடையைப் பிரித்து முப்புலியூரில் கிளைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உத்தேசிக்கப்பட்ட பகுதிநேரக் கடையில் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் தாய்க்கடைக்கும், உத்தேசிக்கப்பட்ட பகுதிநேரக் கடைக்கும் இடையே 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், முப்புலியூரில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

[2014 ஜூலை 30

96—

காலிப் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 29434—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வணிக வரித் துறையிலுள்ள காலிப் பணியிடங்களை நிரப்பிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வணிக வரித் துறையில் 2013-2014 ஆம் ஆண்டில் பல்வேறு பணிநிலைகளில் உள்ள அனைத்து காலிப் பணியிடங்களையும் நடைமுறையில் உள்ள பணி நியமன விதிகளின்படி பதவி உயர்வின் வாயிலாகவும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் நேரடி பணி நியமனத்தின் வாயிலாகவும், சில பணியிடங்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் நேரடி பணி நியமனத்தின் வாயிலாகவும் நிரப்பிட துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

97—

நில மோசடி திருத்தல்

வினா எண் 33486—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நிலம் தொடர்பான கிரயப்பத்திரம் பதிவு செய்யப்பட்ட சில நாட்களிலேயே வருவாய் ஆவணத்தில் பெயர் மாற்றம் செய்யவும், பத்திரப் பதிவுத் துறையில் நில மோசடியைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

நிலம் தொடர்பான கிரயப் பத்திரம் பதிவு செய்யப்பட்டவுடன் வருவாய்த் துறை பதிவேடுகளில் எழுதிப் பெறுபவரின் பெயரில் சொத்து உரிமை மாற்றம் செய்யும் பொருட்டு ஆவணச் சொத்தின் விவரங்கள் மற்றும் பட்டா மாற்றப் படிவங்களுடன் வருவாய் பதிவுருக்களில் குறிப்புகள் செய்ய வேண்டி வருவாய்த் துறைக்கு பதிவுத் துறையால் உடனே அனுப்பப்படுகிறது. இதனால் நில மோசடி தடுக்கப்படுகிறது.

98—

சோதனைச் சாவடி அமைத்தல்

வினா எண் 34251—திருமதி எஸ். விஜயதாரணி: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, விளவங்கோடு வட்டம், படந்தாலுமூடு சோதனைச் சாவடி அலுவலகம் புதிதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் தற்போது மாநிலத்திற்குள்ளான வணிக வரி சோதனைச் சாவடிகள் அமைக்கும் முறையானது நடைமுறையில் இல்லை. இடைமாநில பரிவர்த்தனைகளைக் கண்காணிக்கும் பொருட்டு, மாநில எல்லைகளில் அமைந்த சோதனைச் சாவடிகள் மட்டும் தற்போது வணிக வரித் துறையால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டத்தில், களியக்காவிளை என்ற இடத்தில் தமிழ்நாடு-கேரள மாநில எல்லையில் வணிக வரி

[2014 ஜூலை 30

சோதனைச் சாவடி ஏற்கெனவே இயங்கி வருவதால், அதே வட்டத்தில் படந்தாலுமூடு என்ற இடத்தில் சோதனைச் சாவடி அமைப்பதற்கு வழிவகைகள் இல்லை.

(ஆ) எழவில்லை.

99—

கால்நடை மருந்தகம் கட்டும் பணி

வினா எண் 1915—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், திருவேலம்பலாபுரத்தில் புதிய கால்நடை மருந்தகம் கட்டும் பணி முடிவுற்று பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், திருவேலம்பலாபுரத்தில் புதிய கால்நடை மருந்தகம் கட்டும் பணி முடிவுற்று, 1-11-2011 முதல் புதிய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

100—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 20321—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ரி தொகுதி, கண்டலர்குலமாணிக்கம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பாரமரிப்புத் துறை அமைச்சர்:

சங்கரி தொகுதி, கண்டலர்குலமாணிக்கம் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. அங்கு ஒரு கால்நடை உதவி மருத்துவர் பணி புரிந்து வருகிறார். எனவே, கால்நடை மருத்துவமனை அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

பட்டியல் 4

1—

மின் உற்பத்தியைத் தொடங்குதல்

வினா எண் 16091—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்பாக்கம் பி.எப்.பி.ஆர். அணு மின் நிலையத்தின் உற்பத்தியை 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கல்பாக்கம் பி.எப்.பி.ஆர்., மத்திய அரசின் திட்டம். இந்தத் திட்டம் இந்திய அணு மின் கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், மத்திய அரசிடம் வலியுறுத்தித் தொடங்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2—

மின் கம்பியாளர் நியமனம்

வினா எண் 34823—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், சருகனி ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஊராட்சி பகுதிகளுக்கு ஒரு மின் கம்பியாளரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், சருகனி ஊராட்சிப் பகுதி, சிவகங்கை மின் பகிர்மான வட்டத்தில் உள்ள காளையார்கோவில் பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியாகும். அப்பகுதியில் களப்பணி உதவியாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு வாரியப் பணிகளை தொய்வில்லாமல் செய்து வருகிறார். தற்பொழுது காலியாக உள்ள களப்பணியாளர் பதவிகளை நிரப்ப 4,000 கள உதவியாளர் (ITI Helper) பதவிகளுக்கான நேரடி நியமனத்திற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. எனவே, நேர்முகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர்களைக் கொண்டு காலியாக உள்ள காளையார்கோவில் பிரிவில் உள்ள கள உதவியாளர் பதவிகள் போதுமான அளவு நிரப்பப்படும்.

3—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 35038—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், வெட்டிவயல் ஊராட்சிக்குட்பட்ட சொக்கநாதபுரம், உவர்குளம், கடம்பாகுடி, செங்கற்கோவில் ஆகிய கிராமங்களில் புதிய மின் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், வெட்டிவயல் ஊராட்சிக்குட்பட்ட சொக்கநாதபுரம், உவர்குளம் ஆகிய கிராமங்களில் புதிய மின் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிலிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், கடம்பாகுடி, செங்கற்கோவில் ஆகிய கிராமங்களில் 2013-2014 தாய் திட்டத்தில் 3 எண்ணம் புதிய தெரு விளக்குகள் அமைக்க அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

4—

மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 35044—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், பனங்குளம் ஊராட்சிக்குட்பட்ட வாரியன்வயல் கீழமொன்னி அய்யனார் கோயிலருகிலும், பனங்குளம் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் அருகிலும், சேந்தனி காலனி செல்லும் வழி, மேலமொன்னி பிள்ளையார் கோயில் அருகிலும் மற்றும் கீழமொன்னி கிராமத்தில் அய்யனார் கோயில் அருகிலும் புதிய மின்கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், பனங்குளம் ஊராட்சிக்குட்பட்ட வாரியன்வயல்

[2014 ஜூலை 30

கீழமொன்னி அய்யனார் கோயிலருகிலும், பனங்குளம் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் அருகிலும், சேந்தனி காலனி செல்லும் வழியிலும் மேலமொன்னி பிள்ளையார் கோயில் அருகிலும் மற்றும் கீழமொன்னி கிராமத்தில் அய்யனார் கோயில் அருகிலும் புதிய மின்கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிலிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

5—

மின் கம்பத்தை சீரமைத்தல்

வினா எண் 39260—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பாடி, மதியழகன் நகர், காந்தி தெருவில் உள்ள மின் கம்பத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை பாடி, மதியழகன் நகர், காந்தி தெருவில் உள்ள பழுதடைந்த 24 அடி மின் கம்பம் 1-6-2013 அன்று மாற்றப்பட்டுவிட்டது.

6—

விரைவு நீதிமன்றங்கள் அமைத்தல்

வினா எண் 20017—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) தமிழ்நாட்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ள விரைவு நீதிமன்றங்களில் மீதமுள்ள விரைவு நீதிமன்றங்களையும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை நிலை எண் 1320, உள் (நீ.ம-2) துறை, நாள் 11-9-2007-ன்படி 50 விரைவு நீதிமன்றங்கள் குற்றவியல் நீதிபதி பதவித் தரத்தில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ஆணை வெளியிடப்பட்டது. இதில், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்திலுள்ள ஒரு விரைவு நீதிமன்றம் குற்றவியல் நடுவர் நீதிமன்றமாக மாற்றியமைக்கப்பட்டது. மீதமுள்ள 49 விரைவு நீதிமன்றங்களில், 39 விரைவு நீதிமன்றங்கள் அரசாணை நிலை எண் 595, உள் (நீ.ம.-2) துறை, நாள் 29-6-2010-ன்படி அறிவிக்கை செய்யப்பட்டு தற்போது அனைத்தும் செயல்பட்டு வருகின்றன. மேலும், மேற்கூறிய 49 நீதிமன்றங்களில் அறிவிக்கை செய்யப்பட்ட 39 நீதிமன்றங்கள் தவிர மீதமுள்ள 10 விரைவு நீதிமன்றங்கள், ஏற்கெனவே மாவட்ட நீதிபதி தரத்தில் இயங்கும் மகளிர் நீதிமன்றங்கள் அமைந்துள்ள இடங்களில் தலா ஒன்று வீதம் அரசாணை நிலை எண் 586, உள் (நீ.ம.-2) துறை, நாள் 30-7-2012-ன்படி கூடுதல் மகளிர் நீதிமன்றங்களாக மாற்றம் செய்யப்பட்டு, ஆணை வெளியிடப்பட்டு, அரசாணை நிலை எண் 88, உள் (நீ.ம.-2) துறை, நாள் 5-2-2013-ன்படி அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. இதில், தற்போது 8 நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள இரண்டு நீதிமன்றங்களைச் செயல்படுத்த உயர் நீதிமன்றம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

7—

நீதிமன்றத்திற்குக் கட்டடம்

வினா எண் 20109—திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 ஜூலை 30

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிக்கான குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.1,77,66,347/- வழங்கி அரசாணை (நிலை) எண் 415, உள் துறை, நாள் 8-6-2012-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

8—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 23346—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், சூரமங்கலம் காவல் நிலையம் முதல் புகைவண்டி நிலையம் வரை உள்ள சாலையை அகலப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம், சூரமங்கலம் காவல் நிலையம் முதல் புகைவண்டி நிலையம் வரை உள்ள சாலையை அகலப்படுத்திட சேலம் மாநகராட்சியில் திட்டம் ஏதும் இல்லை.

2014 ஜூலை 30]

9—

புதிய குடிநீர்க் குழாய்கள் அமைத்தல்

வினா எண் 25220—திரு. கு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 26-வது வார்டு, குடிநீர்க் குழாய் பைப்லைன்களை மாற்றி புதிய குடிநீர் பைப்லைன் அமைக்கவும், 27-வது வார்டு, 7-வது தெருவில் ஆழ்துளைக் கிணற்றின் பைப்லைனை மாற்றி அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண் 26-வது பகுதியில் குடிநீர் நல்ல முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருவதால் புதியதாக குடிநீர் பைப்லைன் அமைக்க வேண்டியது இல்லை. மேலும், வார்டு எண் 27-ல் 7-வது தெருவில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு கைப்பம்பு நல்ல நிலையில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதால், தற்போது புதியதாக பைப்லைன் அமைக்கும் அவசியம் எழுவில்லை.

10—

ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

வினா எண் 27387—திரு. கு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 30-வது வார்டு, குருசாமி தெருவிற்கும், காந்தி சாலை பின்புறமும்

[2014 ஜூலை 30

ஆழ்துளைக் கிணறு அமைக்கவும் மற்றும் குருசாமி தெருவில் உள்ள கழிவுநீர்க் கால்வாயை அகலப்படுத்திடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி அரக்கோணம் நகரம், 30-வது வார்டு குருசாமி தெருவிற்கும், காந்தி சாலை பின்புறமும் தற்போது ஆழ்துளைக் குழாய்க் கிணறு கையிறைப்பான் நல்ல நிலையில் பொதுமக்கள் பயன்பாட்டில் இருப்பதால் ஆழ்துளைக் கிணறு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. நகராட்சியில் தற்போது பாதாள சாக்கடைத் திட்டம் செயல்பட உள்ளதாலும், தற்போதுள்ள கால்வாய் நல்ல நிலையில் உள்ளதாலும், தற்சமயம் கழிவுநீர்க் கால்வாயை அகலப்படுத்த அவசியம் எழவில்லை.

11—

கலையரங்கம் கட்டுதல்

வினா எண் 27393—திரு. கு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரில் கலையரங்கம் கட்டவும்; மகாலட்சுமி நகர் பத்திரகாளியம்மன் கோயில் அருகே குடிநீர் கையிறைப்பான் அமைத்துத் தரவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகராட்சியில் கலையரங்கம் கட்ட போதிய நிதி ஆதாரம் இல்லை. மேலும், பத்திரகாளியம்மன்

2014 ஜூலை 30]

கோயில் அருகில் குடியிருப்புகள் இல்லாததனால், தற்சமயம் குடிநீர் கையிறைப்பான் அமைக்க உத்தேசம் ஏதுமில்லை.

12—

சுரங்க நடைபாதை அமைத்தல்

வினா எண் 29445—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், எம்.ஜி.ஆர். மத்திய பேருந்து நிலையப் பகுதியில் சுரங்க நடைபாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். மத்திய பேருந்து நிலையத்தின் முன்புறம் ஓமலூர் சாலையின் குறுக்கே நகர் மற்றும் ஊரமைப்பு திட்டப் போக்குவரத்து மேலாண்மைத் திட்டம் நிதியுதவியுடன் ரூ.1.5 கோடி மதிப்பீட்டில் சுரங்க நடைபாதை அமைக்கும் பணிக்கு 10-10-2013-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி நடவடிக்கையில் உள்ளது.

13—

புதிய நீரோடை

வினா எண் 29449—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) சேலம், எம்.ஜி.ஆர். மத்திய பேருந்து நிலையம், 28-வது கோட்டம், சாமிநாதபுரம் வரை உள்ள நீரோடையை புதியதாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம், எம்.ஜி.ஆர். மத்திய பேருந்து நிலையம், 28-வது கோட்டம், சாமிநாதபுரம் வரை உள்ள நீரோடையை புதியதாகக் கட்ட தற்போதைய நிலையில் திட்டம் ஏதும் இல்லை.

14—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 29452—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் கோட்டம், 6, 7, 8 மற்றும் 12 ஆகிய பகுதிகளின் கழிவுநீர்க் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, கால்வாயினை அகலப்படுத்தி, அனைமேடு பகுதியில் கொண்டு செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண் 6, 7, 8 மற்றும் 12 ஆகிய பகுதிகளில் செல்லும் கால்வாயில் உள்ள அடைப்புகள் யாவும் இயந்திரங்கள்மூலம் நீக்கம் செய்யப்பட்டு, தங்குதடையின்றி

2014 ஜூலை 30]

நீர் செல்ல வகை செய்யப்பட்டுள்ளது. நில அளவையர் கொண்டு அளந்து, ஆக்கிரமிப்புகளை அகற்றச் செய்திடவும், கால்வாயை அகலப்படுத்திடவும் மாவட்ட வருவாய்த் துறை உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

15—

சந்தைக்கான இடத்தினை பராமரித்தல்

வினா எண் 29453—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், குரங்குசாவடி சந்தைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தினை பராமரிப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம், குரங்குசாவடி சந்தைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் திறந்த வெளியில் வாரம் ஒரு நாள் மட்டும் கடைகள் வைக்கப்பட்டு சந்தை நடைபெற்று வருகிறது. மேற்காணும் சந்தை திறந்தவெளியில் நடைபெற்று வருவதால் சிறு கடைகள் கூட்டுவதற்கு பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

16—

பேருந்து நிலையம், பொதுக் கழிப்பிடங்களைப் பராமரித்தல்

வினா எண் 29454—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) சேலம் மாநகரின் மத்தியில் அமைந்துள்ள நகரப் பேருந்து நிலையம் மற்றும் பொதுக் கழிப்பிடங்களைப் பராமரிப்பு செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகரின் மத்தியில் அமைந்துள்ள நகரப் பேருந்து நிலையத்தில் மொத்தம் 2 பொதுக் கழிப்பிடங்களை பராமரிப்பு செய்திட ரூ.8.80 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டது. அதில் ஆண்கள் கழிப்பிடத்தின் பணிகள் முடிக்கப்பட்டும், பெண்கள் கழிப்பிடத்தின் பணிகள் முடியும் தருவாயிலும் உள்ளன.

17—

உரம் தயாரித்தல்

வினா எண் 32233—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், செட்டிச்சாவடி பகுதியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் மூலமாக உரம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் தினந்தோறும் சேகரிக்கப்படும் குப்பைகள் சேலம் மாநகராட்சி செட்டிச்சாவடி பகுதியில் செயல்பட்டுவரும் திடக்கழிவு மேலாண்மை திட்ட செயலாக்கத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. மேற்படி திட்டத் செயலாக்கம் நவீன அறிவியல் முறையில் திடக்கழிவுகளை தரம்

2014 ஜூலை 30]

பிரித்து உரமாகவும், RDF எரிபொருளாகவும், பிளாஸ்டிக் மூலப் பொருள்கள் தயாரிக்கவும், எஞ்சிய செயல் திறனற்ற திடக்கழிவுகளை, பாதுகாப்பான முறையில், நிலத்தடி நீர் மாசுபடாத வகையில் நிரப்புவதற்கு உரிய நிரப்பு கலன், சுத்திகரிப்பு நிலையம் போன்றவற்றை கட்டி, இயக்கி, உரிமம் மாற்றுதல் முறையில் (BOOT Basis) செய்ய ஒப்பந்ததாரர் திருவாளர்கள், குஜராத் என்விரோ புரொடெக்சன் இன்ப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட், சூரத், குஜராத் நிறுவனத்திற்கு 20 ஆண்டுகளுக்கு கட்டி இயக்கி செயல்படுத்த 27-2-2009-ல் பணி வழங்கப்பட்டு திட்ட செயலாக்கம் சோதனை ஓட்ட முறையில் நடைபெற்றுக் வருகிறது.

18—

மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றக் கட்டடம்

வினா எண் 32893—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குழித்துறையில் அமர்வு நீதிமன்றத்தினை தரம் உயர்த்தவும், மாவட்ட செஷன்ஸ் நீதிமன்ற கிளை நீதிமன்றம் கட்டவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

குழித்துறையில் உள்ள சார்பு நீதிமன்றத்தின் தரம் உயர்த்தவும், மாவட்ட செஷன்ஸ் நீதிமன்ற கட்டடம் கட்டுவது தொடர்பாகவும் செயற்குறிப்பு ஏதும் உயர் நீதிமன்றத்திடமிருந்து பெறப்படவில்லை.

19—

பூங்கா அமைத்தல்

வினா எண் 35412—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை துரைப்பாக்கம், ஆனந்தா நகரில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். பணி நடைபெற்று வருகிறது. இன்னும் 6 மாதங்களில் பணி முடிவடையும்.

20—

சாலையோர மின் விளக்குகளை பராமரித்தல்

வினா எண் 35420—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை வியாசர்பாடி, பாரதி நகர் மற்றும் பெரம்பூர் தொகுதி, மகாகவி பாரதியார் நகரில் உளள சாலையோர மின் விளக்குகளை சீர் செய்து பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வார்டு எண்கள் 36, 37, 44, 45 மற்றும் 46 ஆகியவற்றை உள்ளடக்கிய சென்னை வியாசர்பாடி, பாரதி நகர் மற்றும் பெரம்பூர் மகாகவி பாரதியார் நகரில் 6,293 தெருவிளக்குகளில் 6,097 (97%) விளக்குகள் எரிகின்றன. எரியாமல் உள்ள 220 எண்ணிக்கையினுடைய 3 விழுக்காடு தெருவிளக்குகளை எரிய வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தெரு விளக்கு பராமரிப்பை மேம்படுத்த 120 தெருவிளக்கு கம்பங்கள் அமைக்க சுமார் ரூ.57.93 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் 3.90 கி.மீ. நீளத்திற்கு பழுதடைந்த புதை மின் கம்பியை மாற்ற சுமார் ரூ.12.60 இலட்சம் மதிப்பீட்டிலும் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2014 ஜூலை 30]

21—

அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மற்றும் மின்னாக்கியை செயல்படுத்துதல்

வினா எண் 35670—திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை, 67-வது வார்டு, திரவியம்பிள்ளை தாயுமானவர் மகப்பேறு மருத்துவமனையில் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மற்றும் செயல்படாத மின்னாக்கியை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திரவியம்பிள்ளை தாயுமானவர் மகப்பேறு மருத்துவமனையில் 20-6-2013 முதல் ஸ்கேன் அறையில் மராமத்து பணி நடந்து வந்ததால், ஸ்கேன் பார்ப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பின்னர், 7-8-2013 முதல் மீண்டும் ஸ்கேன் வசதி பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மகப்பேறு மருத்துவமனையில் பொருத்தப்பட்டுள்ள மின்னாக்கி 30-4-2010 முதல் இன்று வரை மின் தடை ஏற்படும் நேரத்தில் தொடர்ந்து உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

22—

கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துதல்

வினா எண் 35877—திரு. பொன். ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், கடல் சார்ந்த பகுதிகளுக்கு குடிநீர் வழங்கிட ஆரணி ஆறு மற்றும் கொசத்தலை ஆற்றின் படுகைகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

ஆரணி மற்றும் கொசத்தலை ஆற்றுப் படுகைகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், மீஞ்சூர் ஒன்றியத்திலுள்ள கடல் சார்ந்த குடியிருப்புப் பகுதிகளுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்கும் பொருட்டு நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் திறனுள்ள "கடல்நீரைக் குடிநீராக்கும் கலன்" (Desalination Plant) ஒன்றினை பழவேற்காடு பகுதியில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் பயனுக்கு வரும்போது மீஞ்சூர் ஒன்றியத்திலுள்ள கடல் சார்ந்த குடியிருப்புப் பகுதி மக்கள் பயன்பெறுவார்கள்.

23—

அணுகுசாலையை செயல்பாட்டுக்குக் கொண்டுவருதல்

வினா எண் 35880—திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகர், வைகைக் கரை ஓரத்தில் உள்ள அணுகு சாலையை செயல்பாட்டுக்குக் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காமராஜர் சாலை முதல் குருவிக்காரன் சாலை வரை வைகையாற்றின் இரு கரைகளிலும் சாலை அமைக்கப்பட்டு பொதுமக்கள் மற்றும் போக்குவரத்தின் பயன்பாட்டில் உள்ளது.

2014 ஜூலை 30]

24—

நதியில் கழிவுகள் கலப்பதைத் தடுத்தல்

வினா எண் 37039—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி நதியில் கழிவுகள் கலப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் 1-4-2007 முதல் செயல்படுத்தப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டத்தில் விடுபட்ட நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் இத்திட்டத்தினை செயல்படுத்திட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நகராட்சி நிருவாக ஆணையர் அவர்களால் 28-8-2011-ல் அனுமதி வழங்கப்பட்டதின்படி, மேற்படி பணிக்கு கலந்தாலோசகராக M/s. Infra En Consulting Private Limited, Bangalore நிறுவனத்திற்கு 27-12-2011-ல் வேலை ஆணை வழங்கப்பட்டு, மேற்படி நிறுவனத்தினரால் இறுதி விரிவு திட்ட அறிக்கை (Final DPR) தயாரிக்கப்பட்டு 21-5-2013-ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது, மேற்படி நிறுவனத்தினரால் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையின்படி, பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.490.00 கோடியினை ஒருங்கிணைந்த நகர்ப்புற சிறிய மற்றும் நடுத்தர நகர வளர்ச்சித் திட்டத்தின் (UIDSSMT) கீழ் மேற்கொள்வதற்கு மாமன்ற தீர்மான எண் 85, நாள் 30-5-2013) தீர்மானம் பெறப்பட்டு, மேற்படி திட்டத்திற்கு தேவையான நிதி ஆதாரத்திற்கு KfW or JICA நிதியின் கீழ் வழங்குமாறு தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை

[2014 ஜூலை 30

நிறுவன (TNUIFSL) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் 20-9-2013-ல் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். திருநெல்வேலி மாநகராட்சியில் விடுபட்ட அனைத்து பகுதிகளுக்கும் இந்த உத்தேச பாதாள சாக்கடைத் திட்டப் பணி செயல்பாட்டிற்கு வரும்போது தாமிரபரணி நதிநீர் மாசுபடுவதைத் தடுக்க முடியும்.

25—

மழைநீர் வடிகால் அமைத்தல்

வினா எண் 37683—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வடக்கு தொகுதி, 8-வது வார்டு செல்லூர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செல்லூர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு, 31-3-2014-க்குள் பணிகள் முடிக்கப்படும்.

26—

பூங்காவை மேம்படுத்துதல்

வினா எண் 38469—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம் நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) சென்னை கோட்டூர் தோட்டம், நான்காவது பிரதான சாலையில் உள்ள தாத்தா பாட்டி பூங்காவை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். சென்னை கோட்டூர் தோட்டம், நான்காவது பிரதான சாலையில் உள்ள தாத்தா பாட்டி பூங்காவை பராமரிக்க திட்ட மதிப்பீடு தயார் செய்து உடனடியாக மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

27—

நடமாடும் கழிப்பிடங்கள் அமைத்தல்

வினா எண் 38477—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் நடமாடும் கழிப்பிடங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) சென்னையில் நடமாடும் கழிப்பிடங்கள் அமைக்கக்கோரும் செயற்குறிப்பு, சென்னை மாநகராட்சி சார்பாக அரசுக்கு ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) சென்னை மாநகராட்சியில் தற்பொழுது 8 நடமாடும் கழிப்பிடங்கள் பயன்பாட்டில் உள்ளன. அவை பொதுமக்கள் கூடும் விழாக்களுக்கும் மற்றும் அரசு விழாக்களுக்கும் உபயோகப்படுத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

28—

வட்டித் தள்ளுபடி ஆணைகள் வெளியிடுதல்

வினா எண் 16046—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டு வசதி வாரிய மனைகள்/அடுக்குமாடிக் குடியிருப்புகள்/வீடுகளின் ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரங்களை வழங்க, வட்டி தள்ளுபடிக்கான ஆணைகள் வெளியிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மனைகள்/அடுக்குமாடிக் குடியிருப்புகள்/வீடுகளின் ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப் பத்திரங்களை வழங்க, வட்டி சலுகைக்கான ஆணைகள் வெளியிடப்பட்டு 30-11-2013 வரை இச்சலுகை நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலும், 8,451 விற்பனைப் பத்திரங்கள் இதுவரை பொதுமக்களால் பெறப்பட்டு, வட்டிச் சலுகைக்கான பயன் அடைந்துள்ளனர்.

29—

பி.டி. பருத்தியின் விதைகள் குறித்த ஆய்வு

வினா எண் 24725—திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பி.டி. பருத்தியின் விதைகள் குறித்து தமிழக அரசு ஆய்வு செய்ய முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூடந்த 12-8-2011 அன்று சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் அறிவித்தவாறு வேளாண்மைத்

2014 ஜூலை 30]

துறையால் பி.டி. பருத்தி சாகுபடி பரவலாக்கம் செய்யப்படுவதில்லை. அதை ஊக்குவிப்பதும் இல்லை. ஆனால், பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள் தாங்களே ஆர்வத்துடன் பி.டி. பருத்தியை பயிரிடுவதால் பி.டி. பருத்தி விதைகளின் தரம் மற்றும் சாகுபடி, வேளாண்மைத் துறை மற்றும் விதைச் சான்று துறைமூலம் கண்காணிக்கப்படுகிறது.

30—

புதிய தடுப்பணைகள் கட்டுதல்

வினா எண் 30656—திரு. ஒ.கே. சின்னராஜ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதியில் வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் சிறிய தடுப்பணைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2012-2013 இல் மேட்டுப்பாளையம் தொகுதியில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் சிறிய தடுப்பணை ஏதும் கட்டப்படவில்லை. மேலும், 2013-2014 ஆம் ஆண்டும் சிறிய தடுப்பணை கட்டும் திட்டம் ஏதும் இல்லை. எனினும் மேட்டுப்பாளையம் தொகுதியில், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், 2013-2014 ஆம் ஆண்டில், தோளாம்பாளையம் கிராமத்தில் ரூ.18.300 இலட்சத்திற்கு மூன்று தடுப்பணைகளும், கெம்பராம்பாளையம் கிராமத்தில் ரூ.17.100 இலட்சத்திற்கு நான்கு தடுப்பணைகளும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.35.400 இலட்சத்திற்கு ஏழு தடுப்பணைகள் அமைத்திட ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

31—

மானியம் வழங்குதல்

வினா எண் 30881—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மழைக்காலங்களில் பாசனக் கிணறுகளில் மழைநீர் சேமிப்புத் திட்டத்தை மீண்டும் முனைப்பாகச் செயல்படுத்த மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியில் பண்ணைக் குட்டை முதலான மழைநீர் சேகரிப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதால், மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டம் 2013-2014 ஆம் ஆண்டு முதல் தனி மாநில திட்டமாக செயல்படுத்தப்படவில்லை. எனவே, மழைக்காலங்களில் பாசனக் கிணறுகளில் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை முனைப்பாகச் செயல்படுத்த மானியம் வழங்குவதற்கான திட்டம் ஏதுமில்லை.

32—

விவசாயிகளுக்கான புதிய திட்டம்

வினா எண் 32498—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள விவசாயிகளின் பாதிப்பை மாற்றியமைக்க புதிய திட்டம் அறிவிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மாநிலத்தில் வறட்சி ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை

2014 ஜூலை 30]

நிலைப்படுத்தும் வகையிலும், அரசாணை (நிலை) எண் 48, வருவாய் [பே.மே.3(1)] துறை, நாள் 13-2-2013-ன்படி, டெல்டா பகுதிகளில், நெல் சாகுபடி செய்த விவசாயிகளில் வறட்சியால் 50 விழுக்காட்டிற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 5,000 ரூபாய் உட்பட பயிர் காப்பீட்டு நிவாரணம் மற்றும் காவேரி சிறப்பு கூடுதல் நிவாரணமாக ஏக்கர் ஒன்றுக்கு மொத்தம் 15,000 ரூபாய் வழங்க ஆணையிடப்பட்டு, அதன்படி, 3,61,000 ஏக்கர் நிலப்பரப்பிற்கு ரூ.54,204.16 இலட்சம் இதுவரை ஒப்பளிப்பு செய்யப்பட்டு, இதில் ரூ.52 425.81 இலட்சம் கூட்டுறவு வங்கிமூலம் பாதிக்கப்பட்ட 3,52,613 டெல்டா விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் அரசாணை (நிலை) எண் 123 வருவாய்த் [பே.மே.3(1)] துறை, நாள் 25-4-2013-ன்படி சென்னை நீங்கலாக டெல்டா அல்லாத பகுதிகளில் வறட்சியால் 50 விழுக்காட்டிற்கு மேல் பாதிப்படைந்த பாசன ஆதாரமுள்ள நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிருக்கு ரூ.5,000/- வீதமும், இதர பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.4,000/- வீதமும், பாசன ஆதாரமற்ற நிலங்களில் சாகுபடி செய்யப்பட்ட அனைத்து பயிர்களுக்கும் ரூ.3,000/- வீதமும், வழங்க ஆணையிடப்பட்டு, 22,88,918.01 ஏக்கர் நிலப்பரப்பிற்கு ரூ.83,520.55 இலட்சம் இதுவரை ஒப்பளிப்பு செய்யப்பட்டு, இதில் ரூ.79,801.44 இலட்சம் கூட்டுறவு வங்கியின்மூலம் 17,16,403 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2. மேலும், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்காக டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்க, விவசாயிகள் தேர்வு வேளாண்மைத் துறையில் மேற்கொள்ளப்படுகிறது. இதில் டெல்டா மாவட்டங்களில் 22,197 விவசாயிகள், டெல்டா அல்லாத பிற மாவட்டங்களில் 49,477 விவசாயிகள் ஆக மொத்தம் 71,674 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும் டெல்டா மாவட்டங்களில் 19,050 விவசாயிகள் மற்றும் டெல்டா அல்லாத பிற மாவட்டங்களில் 15,023 விவசாயிகள் ஆக மொத்தம் 34,073 விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர்மூலம் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. பண்ணைக் குட்டைகள் பணி ஆரம்பிக்கப்பட்டு டெல்டா பகுதிகளில் 8,941-ம் டெல்டா அல்லாத பிற பகுதிகளில் 2,181-ம் ஆக மொத்தம் 11,122 பண்ணைக் குட்டைகளில் பணிகள் முடிவடைந்துள்ளன.

[2014 ஜூலை 30

33—

வேளாண் உதவியாளர் குடியிருப்பு

வினா எண் 32636—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, வேளாண்மை உதவியாளர் தங்கும் கட்டடத்தைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மடத்துக்குளம் வட்டாரத்தில் துங்காவி, கணியூர் மற்றும் சங்கராமநல்லூர் (தெற்கு) ஆகிய இடங்களில் உள்ள வேளாண்மை உதவி அலுவலர் குடியிருப்புகளை பழுது பார்ப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

34—

நெற்பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்பைத் தடுத்தல்

வினா எண் 34377—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாஞ்சில் நாடு பகுதியில் அழகிய பாண்டியபுரம், பூதப்பாண்டி, இறச்சகுளம், புத்தேரி பகுதிகளில் பறவைகளால் நெற் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்பைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* கன்னியாகுமரி மாவட்டம், நாஞ்சில் நாடு பகுதியில் அழகியபாண்டியபுரம், பூதப்பாண்டி, இறச்சகுளம்,

2014 ஜூலை 30]

புத்தேரி பகுதிகளில் பறவைகளால் நெற் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்கான திட்டம் ஏதும் அரசால் செயல்படுத்தப்படவில்லை. தோவாளை வட்டாரத்தைச் சேர்ந்த மேற்கண்ட பகுதிகளில் இளம் பயிர்கள் (நடவு செய்த 25-50 நாட்கள்) பறவைகளால் பாதிக்கப்படுகின்றன. இதனைத் தடுக்க, விவசாயிகள், மண்வெட்டி, உலோகத்தால் தட்டி சப்தமெழுப்பி பறவைகளை விரட்டவும், சிறிய அளவில் பட்டாசுகள் வெடிக்கச் செய்து பறவைகளை விரட்டவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள பரிந்துரைக்கப்படுகிறது.

35—

வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்தல்

வினா எண் 37296—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், குத்துக்கல்வலசை ஊராட்சியில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குத்துக்கல்வலசை ஊராட்சியானது தென்காசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கென அறிவிக்கையிடப்பட்ட பகுதியாகும். இங்குள்ள விவசாயிகளின் விளைபொருட்களுக்கு வியாபாரிகளிடமிருந்து அதிக விலை பெற இயலாது என்பதால், இப்பகுதி விவசாயிகள் குத்துக்கல்வலசை ஊராட்சியிலிருந்து 2 கி.மீ. தூரமேயுள்ள உலர்களம் மற்றும் முழு கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தென்காசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினை பயன்படுத்திக்கொள்ளலாம். தனியாக குத்துக்கல்வலசை ஊராட்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கத் தேவையில்லை.

36—

வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்தல்

வினா எண் 38391—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, ஆயிரப்பேரி ஊராட்சியில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆயிரப்பேரி ஊராட்சியானது தென்காசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கென அறிவிக்கையிடப்பட்ட பகுதியாகும். இங்குள்ள விவசாயிகளின் விளைபொருட்களுக்கு வியாபாரிகளிடமிருந்து அதிக விலை பெற இயலாது என்பதால், இப்பகுதி விவசாயிகள் ஆயிரப்பேரி ஊராட்சியிலிருந்து 6 கி.மீ. தூரமேயுள்ள உலர்களம் மற்றும் முழு கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தென்காசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினை பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, ஆயிரப்பேரி ஊராட்சியில் தனியாக வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டத் தேவையில்லை.

37—

தென்னை விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை

வினா எண் 39760—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க அரசு முன்வருமா?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 123, வருவாய்த் [பே.மே.3(1)] துறை, நாள் 25-4-2013-ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி, 50 விழுக்காட்டிற்கு மேல் மகசூல் பாதித்துள்ள தென்னை உள்ளிட்ட நீண்டகாலப் பயிர்களை சாகுபடி செய்த அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.4,000/- என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருவாய்த் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்த தென்னை சாகுபடி பரப்பில் 50 சதவீதத்திற்கு மேல் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு, வருவாய் மற்றும் வேளாண்மைத் துறையினரால் இணைந்து மதிப்பீடு செய்யப்பட்டு, 'E' படிவத்தில் இடம்பெற்ற விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியரிடம் பரிந்துரை செய்து அனுப்பப்படும் முன்மொழிவின் அடிப்படையில், அப்பரிந்துரை வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு உரிய ஆணை பெற்று வருவாய்த் துறைமூலம் நிவாரணம் வழங்கப்படுகிறது.

38—

வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்தல்

வினா எண் 40255—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, மேலப்பாவூர் ஊராட்சியில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேலப்பாவூர் ஊராட்சியானது பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கென அறிவிக்கையிடப்பட்ட

[2014 ஜூலை 30

பகுதியாகும். இங்குள்ள விவசாயிகளின் விளைபொருட்களுக்கு வியாபாரிகளிடமிருந்து அதிக விலை பெற இயலாது என்பதால், இப்பகுதி விவசாயிகள் மேலப்பாவூர் ஊராட்சியிலிருந்து 4 கி.மீ. தூரமேயுள்ள உலர்களம் மற்றும் முழு கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினை பயன்படுத்திக்கொள்ளலாம். இதற்கென்று தனியாக மேலப்பாவூர் ஊராட்சியில், மற்றுமொரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்திட இயலாது.

39—

வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்தல்

வினா எண் 40257—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, இனாம்வெள்ளக்கால் ஊராட்சியில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* இனாம்வெள்ளக்கால் ஊராட்சியானது பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கென அறிவிக்கையிடப்பட்ட பகுதியாகும். இங்குள்ள விவசாயிகளின் விளைபொருட்களுக்கு வியாபாரிகளிடமிருந்து அதிக விலை பெற இயலாது என்பதால், இப்பகுதி விவசாயிகள் மேலப்பாவூர் ஊராட்சியிலிருந்து 8 கி.மீ. தூரமேயுள்ள உலர்களம் மற்றும் முழு கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினை பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, தனியாக இனாம்வெள்ளக்கால் ஊராட்சியில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க இயலாது.

2014 ஜூலை 30]

40—

குடியிருப்புகளை புனரமைத்தல்

வினா எண் 41438—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, சாலையூர், கொங்கலகுறிச்சி, கணபதிபாளையம், ருத்தராபாளையம், துங்காவி மற்றும் கணியூரிலுள்ள துணை வேளாண்மை அலுவலர்களின் குடியிருப்புகளை புனரமைப்பு செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் வட்டாரத்தில் சாலையூர், கொங்கலகுறிச்சி, கணபதிபாளையம், ருத்தராபாளையம், துங்காவி மற்றும் கணியூரில் உள்ள துணை வேளாண்மை அலுவலர்களின் குடியிருப்புகளை புனரமைப்பு செய்வது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

41—

விலையில்லா விதைப் பயறுகள் வழங்குதல்

வினா எண் 41474—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் துவரை, உளுந்து பயிரிடும் விவசாயிகளுக்கு விலையில்லா விதைப் பயறுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பயறு வகைகள் சான்று விதைகளுக்கு, உற்பத்தி மானியமாக கிலோ ஒன்றுக்கு ரூ.15/-, பயறு உற்பத்தியைப் பெருக்க

உயர்த்தப்பட்ட மானிய திட்டத்தின்மூலமாகவும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்மூலமாகவும் வழங்கப்படுகிறது. மேலும், பயறு விதியோக மானியம், சான்று விதைகளுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.22/- அல்லது ரூ.12/-, தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாகவும், கிலோ ஒன்றுக்கு ரூ.8/- பயறு உற்பத்தியைப் பெருக்க உயர்த்தப்பட்ட மானிய திட்டத்தின்மூலமாகவும், வழங்கப்படுகின்றது. விலையில்லா சிறுதளைகள் 50 எக்டர்/100 எக்டர் பரப்பளவு தொகுப்பு செயல்விளக்கங்கள் அளிக்கப்படுகின்றது. அவ்வாறு தொகுப்பு செயல்விளக்கம் செய்வதற்குரிய பயறு பரப்பு மானாமதுரை தொகுதியில் (50 எக்டர்/100 எக்டர் பரப்பளவு கொத்தாக) இருந்தால், வரும் வருடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு விலையில்லா பயறு வகை சிறுதளைகள் வழங்கப்படும்.

42—

செம்புள்ளி நோயைக் கட்டுப்படுத்துதல்

விளா எண் 41483—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் நெற்பயிரைத் தாக்கும் செம்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதியில் நெற்பயிரைத் தாக்கும் செம்புள்ளி நோய் தாக்கம் இல்லை. எனினும் மாநிலத்தில் இந்நோய் தாக்குதலை கண்காணித்திட வேளாண்மைத் துறையானது கண்காணிப்பு தளைகள் அமைத்து ஆண்டு முழுவதும் கண்காணித்து வருகிறது. மேலும், அத்துறையில் செம்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்படும் கீழ்க்காணும் வழிமுறைகள் கையாளப்படுகின்றன:

(1) கேப்டன்/திரம் என்ற பூஞ்சான் கொல்லியை 2 கிராம்/கிலோ விதைக்கு விதைநேர்த்தி செய்து பயன்படுத்துதல்.

2014 ஜூலை 30] .

(2) மேங்கோசெப் என்ற பூஞ்சான் கொல்லியை 80 கிராம் வீதம் 8 சென்ட் நாற்றங்காலுக்கும், ஒரு கிலோ வீதம் ஒரு எக்டர் நடவு வயலுக்கும் தெளிப்பதன்மூலம் நோயைக் கட்டுப்படுத்துதல்.

(3) சூடோமோனாஸ் ஃபுளோரோசன்ஸ் என்ற உயிர்கட்டுப்பாடு காரணியை 10 கிராம் வீதம் ஒரு கிலோ விதையுடன் விதை நேர்த்தி செய்தல்; அதனைத் தொடர்ந்து ஒரு எக்டேருக்கு 2.5 கிலோ வீதம் 100 லிட்டர் நீருடன் கலந்து 30 நிமிடங்கள் நாற்றுகளை நனைத்து நடவு செய்தல்.

(4) ஆரியோ பங்கின் என்ற மருந்தினை பயன்படுத்துவதன் மூலம் நோயின் தாக்கத்தைக் குறைத்தல்.

43—

சட்டம் இயற்றுதல்

வினா எண் 28288—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாட்டில் வேலை அளிப்பதாக தமிழகத்தில் செய்தித்தாள், இணையதளம் மற்றும் தொலைக்காட்சிமூலம் விளம்பரம் செய்வதற்கு, மாவட்ட காவல் அதிகாரி, மாவட்ட ஆட்சியாளர், மாநில காவல் இயக்குநர் மற்றும் முதன்மைச் செயலாளரின் அனுமதி பெற்ற பின்னரே விளம்பரம், தேர்வு மற்றும் நியமனம் செய்ய வேண்டுமென சட்டம் இயற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மட்டுமே வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான பணிகளைச் செய்திட தகுதியுடையவர் ஆவர். சென்னை அசோக் நகரில் உள்ள இந்திய அரசின் குடிபெயர்வோர் அதிகாரியின், முன்னனுமதி பெற்றுத்தான் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பாக செய்தித்தாள், இணையதளம் மற்றும் தொலைக்காட்சிமூலம் விளம்பரம் செய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எழாது.

[2014 ஜூலை 30

44—

தொழிற்பிரிவுகளைத் துவக்குதல்

வினா எண் 29310—திரு. சு. ரவி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் வரைவாளர் (கட்டடம்), நில அளவையாளர், ஓவியர், மின் கம்பியாளர் மற்றும் குழாய்ப் பணியாளர் ஆகிய பிரிவுகளைத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வரைவாளர் (கட்டடம்), நில அளவையாளர், ஓவியர், மின் கம்பியாளர் மற்றும் குழாய்ப் பணியாளர் ஆகிய தொழிற்பிரிவுகள் அரக்கோணம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு அருகிலுள்ள அம்பத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் செயல்பட்டு வருகின்றன. எனவே, இத்தொழிற் பிரிவுகளை அரக்கோணம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

45—

தொழிற்கல்வி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்

வினா எண் 29451—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கணினி பாடப்பிரிவினருக்கு மட்டும் வழங்கப்படும் மடிக்கணினியை மற்ற தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவச மடிக்கணினி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக அரசால் ரூ.41.25 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

46—

புதிய பாலம் அமைத்தல்

வினா எண் 38206—திரு. மு. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, வேதியரேந்தல் அருகிலுள்ள செங்கோட்டைக்குச் செல்லும் வழியில் உள்ள கால்வாயில் புதிய பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, வேதியரேந்தல் அருகிலுள்ள செங்கோட்டைக்குச் செல்லும் வழியில் உள்ள கால்வாயில் புதிய பாலம் அமைக்கக் கோருமிடம் ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். மேலும், பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கால்வாயில் பாலம் கட்ட கோரப்பட்டுள்ளதால், பொதுப் பணி மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளின் தடையின்மைச் சான்றுகளைப் பெற்று, அரசின் நிதி நிலைமைக்கேற்ப, நபார்டு வங்கியின் கடனுதவியுடன் செயல்படுத்தும் திட்டத்தில் சேர்க்க ஆய்வு செய்யப்படும்.

47—

உப்பாற்றில் தரைப் பாலம் அமைத்தல்

வினா எண் 40701—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை முருகப்பாஞ்சான் அருகே உப்பாற்றில் தரைப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை முருகப்பாஞ்சான் அருகே உப்பாற்றில் தரைப் பாலம் அமைக்கக் கோருமிடம் ஊராட்சி ஒன்றியச் சாலை என்பதால், ஊரக வளர்ச்சித் துறையின் தடையின்மைச் சான்றினைப் பெற்று, அரசின் நிதி நிலைமைக்கேற்ப, நபார்டு கடனுதவியுடன் செயல்படுத்தும் திட்டத்தில் சேர்க்க ஆய்வு செய்யப்படும்.

48—

முத்திரைத்தாள் தட்டுப்பாட்டைப் போக்குதல்

வினா எண் 32872—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் முத்திரைத் தாள் தட்டுப்பாட்டைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து சார்பதிவகங்களிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தற்போது முத்திரைத் தாள் தட்டுப்பாடு இல்லை.

2014 ஜூலை 30]

49—

தமிழக நாய் இனங்களுக்கு பண்ணை அமைத்தல்

வினா எண் 21308—திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தின் ராஜபாளையம், கன்னி, சிப்பிப்பாறை ஆகிய நாய் இனங்களுக்கு பண்ணை அமைத்து, பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் சென்னையில் (சைதாப்பேட்டை) நாய் வளர்ப்புப் பிரிவு ஏற்கெனவே தனியாக இயங்கி வருகிறது. அப்பிரிவில் ராஜபாளையம், கன்னி, சிப்பிப்பாறை ஆகிய நாய் இனங்களுக்கு இனப் பெருக்க மையம் நிறுவப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

50—

பசு மாடு மற்றும் எருதுகளுக்கு இலவச சிகிச்சை

வினா எண் 22547—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளின் பசு மாடு மற்றும் எருதுகளுக்கு இலவச சிகிச்சை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கால்நடை பராமரிப்புத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் கால்நடை நிலையங்களான பன்முக மருத்துவமனை,

[2014 ஜூலை 30

கால்நடை மருத்துவமனை, நடமாடும் கால்நடை மருந்தகம், கால்நடை மருந்தகம் ஆகியவற்றின்மூலம் விவசாயிகளின் பசுமாடு மற்றும் எருதுகளுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

51—

கால்நடைகளுக்கு மழைக்காலங்களில் வரும் நோய்களைத் தடுத்தல்

வினா எண் 25959—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைகளுக்கு மழைக்காலங்களில் வரும் நோய்களை முன்கூட்டியே தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் பருவ நிலைக்கேற்றவாறு நோய்க் கிளர்ச்சி கண்டறியப்பட்டு, அதற்குத் தகுந்தவாறு ஒவ்வொரு பருவகாலத்திலும் கால்நடைகளைத் தாக்கக்கூடிய நோய்களுக்கு தடுப்பூசி போட அனைத்து மாவட்டங்களுக்கும் முன்கூட்டியே உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு, தடுப்பூசி மருந்துகளும் வழங்கப்பட்டு பணிகள் உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

52—

கடக்நாத் கருங்கோழிகள் குறித்த விழிப்புணர்வு

வினா எண் 30346—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் புரதச் சத்துமிக்க மருத்துவ குணம் உடைய கடக்நாத் கருங்கோழிகள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கடக்நாத் கருங்கோழிகளின் மரபு குணாதிசயங்கள் பற்றிய பகுப்பாய்வு, வெப்பத்தைத் தாங்கும் திறன் மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் பற்றிய ஆய்வு, மேலும் பண்ணையாளர்களுக்குத் தேவையான கடக்நாத் கோழிக்குஞ்சுகளை உற்பத்தி செய்யும் நோக்கில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மையத்தின்கீழ் இயங்கும் கோழியின ஆராய்ச்சி நிலையம் ஒரு திட்டத்தைத் தயாரித்து, மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறைக்கு சமர்ப்பித்துள்ளது.

53—

கோழி அம்மை நோய்த் தடுப்பு மருந்து

வினா எண் 35815—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டுக்கோழிகளைத் தாக்கும் அம்மை நோயினைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் 31-03-1997-க்குப் பிறகு Fowl Pox Vaccine & Pigeon Pox Vaccine தயாரிப்பு நிறுத்தப்பட்டுவிட்டது. அதற்குப் பதிலாக திசுவளர்ப்பு முறையில் தயாரிக்கப்படும் கோழி அம்மை நோய்

[2014 ஜூலை 30

தடுப்பு மருந்து (Cell Culture FPV) மருந்தின் தயாரிப்பு உரிமம் (Drug Manufacturing License) Drug Control Authority-யினரால் 2000 ஆம் ஆண்டில் திரும்பப் பெறப்பட்டதால் அதன் உற்பத்தி நிறுத்தப்பட்டது. தற்போது GMP தரத்தில் உள்ள கோழி நோய் தடுப்பு மருந்து தயாரிக்கும் கட்டடம் மேலும் விரிவுபடுத்தப்படும். பின்னர் தர உரிமம் பெற்று கோழி நோய் தடுப்பு மருந்து தயாரிக்கும் பணி துவங்கப்படும். கட்டடப் பணி முடிவடைந்து தர உரிமம் பெறப்பட்டதும், கோழி நோய் தடுப்பு மருந்து தயாரிக்கும் பணி துவங்கப்படும்.

54—

கால்நடை ஆய்வாளர் பயிற்சியை பட்டயப் பயிற்சியாக துவக்குதல்

வினா எண் 37088—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கால்நடை ஆய்வாளர் பயிற்சியை பட்டயப் பயிற்சியாக கால்நடை மருத்துவக் கல்லூரியில் துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கால்நடை ஆய்வாளர் பயிற்சி தற்பொழுது அப்பணிக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு மட்டும் தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத் துறையால் வழங்கப்பட்டு வருகிறது. கால்நடை, பராமரிப்பு குறித்து பல்வேறு தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் தற்சமயம் பல்கலைக்கழகத்தால் துவங்கப்பட்டுள்ளன. எனவே, கால்நடை ஆய்வாளர் பயிற்சியை பட்டயப் பயிற்சியாக கால்நடை மருத்துவக் கல்லூரியில் துவங்க வாய்ப்பு இல்லை.

55—

நெசவாளர்களுக்கான பரிசுத் தொகையை உயர்த்தி வழங்குதல்

வினா எண் 10215—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) புதிய வடிவமைப்பை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையை முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக முறையே ரூ.20,000/-, ரூ15,000/-, ரூ.10,000/- என்று உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிறந்த வடிவமைப்புடன்கூடிய கைத்தறி துணி வகைகளை உற்பத்தி செய்யும் கைத்தறி நெசவாளர்களைத் தேர்ந்தெடுத்து பரிசு வழங்கும் திட்டம் 1993 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்திற்குத் தேவையான நிதியுதவி தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து பெறப்படுகிறது. துறையின் மூலம் ஒவ்வொரு வருடமும் கீழ்க்காணும் இனங்களில் சிறந்த வடிவமைப்புடன்கூடிய துணி வகைகளை உற்பத்தி செய்யும் நெசவாளரைத் தேர்வு செய்து ஒவ்வொரு இனத்திற்கும் (variety) முதல் பரிசாக ரூ.5000/-, இரண்டாம் பரிசாக ரூ.3000/- மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.2000/-மும் வழங்கப்பட்டு வருகிறது:

1. பட்டுப் புடவைகள்
2. பருத்தி இரகங்கள்
3. வீட்டு உபயோகத் துணி வகைகள்
4. திரைச் சீலைகள்
5. கலப்பினத் துணி வகைகள்
6. ஆடவர் உடைகள்/பெண்கள் உடைகள்

புதிய வடிவமைப்பை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் பரிசுத் தொகையிலிருந்து முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக முறையே ரூ.20,000/-, ரூ.15,000/-, ரூ.10,000/- என்று உயர்த்தி வழங்குவதற்கு அரசிடம் கருத்துரு எதுவும் இல்லை.

[2014 ஜூலை 30

56—

மின்கலத்துடன்கூடிய மின் விளக்குகள் வழங்குதல்

வினா எண் 10246—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரில் பெரும் கைத்தறி வளர்ச்சிக் குழும நெசவாளர் வீடுகளுக்கு தானியங்கி மின் விளக்கு வழங்கும் திட்டத்தின் தற்போதைய நிலையினைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தின்கீழ் விருதுநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் நெசவாளர்களுக்கு பயனளிக்கும் வகையில் 2009-2010 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் "விருதுநகர் கைத்தறி பெரும் குழுமத் திட்டம்" ரூ.87.68 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. விருதுநகர் பெரும் கைத்தறி குழுமத் திட்டத்தின்கீழ் முதல் மற்றும் இரண்டாம் தவணை மானியம், மத்திய மற்றும் மாநில அரசுகளால் விடுவித்து வழங்கப்பட்டுள்ளது. 1-1-2013 முதல் 15-11-2013 முடிய 7,390 தறியுடன் கூடிய நெசவாளர்களுக்கு 7,390 மின்கலத்துடன்கூடிய மின்விளக்குகள் ரூ.173.04 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்து நெசவாளர்களுக்கு அவர்களுக்குண்டான பங்குத் தொகையினை வசூலித்து நடப்பு நிதியாண்டில் வழங்கப்பட்டுள்ளது.

57—

நெசவாளர்களுக்கு பெடல் தறிகள் வழங்கும் திட்டம்

வினா எண் 10247—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

விருதுநகரில் பெரும் கைத்தறி வளர்ச்சிக் குழுமம் நெசவாளர்களுக்கு பெடல் தறிகள் வழங்கும் திட்டத்தின் தற்போதைய நிலையினை, தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் க. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

ஒருங்கிணைந்த கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தின்கீழ் விருதுநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் நெசவாளர்களுக்கு பயனளிக்கும் வகையில், 2009-2010 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டு "விருதுநகர் கைத்தறி பெரும் குழுமத் திட்டம்" ரூ.87.68 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டமானது ரூ.70.00 கோடி மத்திய அரசின் பங்களிப்பாகவும், ரூ.12.94 கோடி மாநில அரசு/பயனாளிகளின் பங்களிப்பாகவும், மீதமுள்ள ரூ.4.73 கோடி முனைவோர் (Promoter) பங்களிப்பாகவும் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மத்திய, மாநில அரசுகள் விடுவித்துள்ள நிதியுதவியினைக் கொண்டு தமிழ்நாடு ஒப்பந்த மற்றும் சட்ட விதிகளைப் பின்பற்றி முதற்கட்டமாக 1,640 பெடல் தறிகள் விருதுநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள விருதுநகர் குழும நெசவாளர்களுக்கு முகமை அமைப்பான தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் வழங்கியுள்ளது. இரண்டாம் பருவத்தில் (II phase) 15-11-2013 முடிய 598 பெடல் தறிகள் வழங்கப்பட்டுள்ளன.

மூன்றாம் கட்டமாக தறி மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கோருவதற்காக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

58—

அரசு அலுவலக வளாகம் அமைத்தல்

வினா எண் 13524—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் உள்ளிட்ட இதர அரசு அலுவலக வளாகம் அமைத்திட நிருவாக அனுமதி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் வட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகம் கட்ட நிருவாக அனுமதி வழங்கியும், ரூ.2.02 கோடி நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசாணை (நிலை) எண் 430, வருவாய்த் [வ.நி.2(1)] துறை, நாள் 30-10-2013-ல் அரசாணை வெளியிட்டுள்ளது.

59—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 21954—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி, 1-வது வார்டு, எம்.ஜி.ஆர். நகரில் சுமார் 40 ஆண்டுகளாக குடியிருந்து வரும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், நெல்முடிக்கரை குரூப் மற்றும் கிராமம், புல எண். 16-6, விஸ்தீரணம் 0.660 ஏர்ஸ் நிலம், கிராமக் கணக்குகளில் சந்தை என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பிரஸ்தாப இடம், எம்.ஜி.ஆர். நகர் என்று அழைக்கப்படுகிறது. பிரஸ்தாப இடம் தொடர்பாக சிவகங்கை தேவஸ்தானத்திற்கும், சமஸ்தானத்திற்கும், எதிர்மனுதாரர்களான இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் திருப்புவனம் பேரூராட்சிக்கும் அசல் வழக்கு 143/1970 இல் வழக்கு நடைபெற்று, திருப்புவனம் புவனேஸ்வரர் ஆலயத்திற்கு சாதகமாக

2014 ஜூலை 30]

தீர்ப்புரை வரப்பெற்றதன்பேரில், பிரஸ்தாப இடத்தில் வசித்துவரும் நபர்களிடம் ஒரு குறிப்பிட்ட தொகையினை கோயில் நிருவாகம் வசூல் செய்து வருகிறது. மேலும், மேற்படி இடத்தில் வசித்துவரும் நபர்களில் ஒரு சிலர் சாதகமான-பாதகமான தீர்ப்பினைப் பெற்றுள்ளனர். பிரஸ்தாப இடம், நகரின் மையப் பகுதியில் உள்ளதாலும், அரசின் பிற்காலத் தேவைக்குப் பயன்படும் என்பதாலும், பட்டா வழங்க பல்வேறு தரப்பினர் ஆட்சேபனை செய்வதாலும் பட்டா வழங்க இயலாது.

60—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 29742—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வே.கள்ளிபாளையம் கிராம ஊராட்சி, துத்தாரிபாளையத்தில் 1984 ஆம் ஆண்டு 30 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தோராய பட்டாவினை அசல் பட்டாவாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டம், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், வே.கள்ளிபாளையம் கிராம ஊராட்சி, துத்தாரிபாளையத்தில் 1984 ஆம் ஆண்டு 30 பயனாளிகளுக்கு நத்தம் நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட 30 தோராய பட்டாக்களும் அசல் பட்டாக்கள் ஆகும்.

61—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 29844—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரடிவாவி கிராம ஊராட்சியில் கரடிவாவிபுதூர் வண்டித்தடத்தில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டம், கரடிவாவி கிராம ஊராட்சி, கரடிவாவிபுதூர் வண்டித்தடம், இதர புறம்போக்குத் துறை நிலங்களில் குடியிருப்போருக்கு நத்தமாக மாற்றி பட்டா வழங்கும் அரசாணை, காலக்கெடு முடிவடைந்துவிட்டபடியால் தற்பொழுது பட்டா வழங்க இயலாது.

62—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 29894—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், காட்டூர் கிராம ஊராட்சி, செம்மடப்பாளையம் ஆதி திராவிட காலனியிலுள்ள வீடுகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டம், பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம், காட்டூர் கிராம ஊராட்சி, செம்மடப்பாளையம் ஆதி திராவிட காலனியிலுள்ள வீடுகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நத்தம் காலியிடம் ஏதுமில்லை. எனவே, வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

2014 ஜூலை 30]

63—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 29911—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், வடுகபாளையம்புதூர் கிராம ஊராட்சி, ராஜீவ் காந்தி நகர் மற்றும் நாசுவம்பாளையம் புதுக்காலனி ஆகிய பகுதிகளில் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியம், வடுகபாளையம்புதூர் கிராம ஊராட்சி, ராஜீவ் காந்தி நகர் ஆகிய இடங்கள் வண்டிப்பாதை புறம்போக்காகும். இதர புறம்போக்குகளில் குடியிருப்போருக்கு நத்தமாக மாற்றி பட்டா வழங்கும் அரசாணை, காலக்கெடு முடிவடைந்துவிட்டபடியால் தற்பொழுது பட்டா வழங்க இயலாது. நாசுவம்பாளையம் புதுக்காலனி, மந்தைப் புறம்போக்கு என்பதால் பட்டா வழங்க இயலாது.

64—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32265—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், உடுமலை ஒன்றியப் பகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் கிராமம், புல எண்கள் 490, 491/ஏ, 492 மற்றும் 508 முதல் 518 வரையுள்ள புலங்கள் முறையே ராஜவாய்க்கால் மற்றும் இராமகுளம் வாய்க்கால் என கிராம ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புலங்கள் நீர்வழிப் புறம்போக்கு என்பதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

65—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32266—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கிழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், மைவாடி, கடத்தூர் ஆகிய இடங்களில் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், மைவாடி-1 கிராமம், புல எண் 141/5-இல் 1042, 1404, 1405 மற்றும் 1414 ஆம் பசலியில் 163 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதில் 70 நபர்கள் இடம் மாறியும், 93 நபர்கள் வீடு கட்டாமலும் உள்ளனர். கடத்தூர் கிராமம், நத்தம் புல எண் 669/19-இல் 90 நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) வீட்டுமனைப் பட்டா பெற்று இடம் மாறி வீடு கட்டியுள்ள 70 நபர்களுக்கு திருத்திய மனைப் பட்டா வழங்கவும், வீடு கட்டாமல் உள்ளவர்களிடம் விளக்கம் கேட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2014 ஜூலை 30]

66—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32268—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, கொமரலிங்கம் கிழக்கு கிராமத்தில் ஒரு போகம் களத்து அருகில் உள்ள 2 ஏக்கர் இடத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், கொமரலிங்கம் கிழக்கு கிராமம், புல எண் 163/1ஏ1, தீர்வை ஏற்படாத தரிசு கல்லாங்குத்து புறம்போக்கில் 1.16 ஏக்கர் நிலம் திடக்கழிவு மேம்பாட்டுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இடம் பாறை மற்றும் மேடு பள்ளமாக உள்ளது.

(ஆ) திடக்கழிவு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுவதாலும், மீதமுள்ள இடம் பாறை மற்றும் மேடு பள்ளமாக உள்ளதாலும், திடக்கழிவு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுவதால் சுற்றுச்சூழல், மக்கள் வசிப்பதற்கு ஏற்றதாக இல்லாததாலும் மேற்படி இடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

67—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32269—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலை வட்டம், தளி பேரூராட்சி, திருமூர்த்தி நகர் பகுதியில் உள்ள கல்வித் துறைக்கு

[2014 ஜூலை 30

சம்பந்தப்பட்ட பயன்படாத நிலத்தை தளி மக்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி நகர் கிராமம், புல எண் 385 இல் 1.31.0 எக்டேர் நிலம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்காக கல்வித் துறைக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மேற்படி நிலம் கல்வித் துறையின் எதிர்கால பயன்பாட்டிற்குத் தேவைப்படும் என்பதால், வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

68—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32273—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலை வட்டம், எரிசனம்பட்டி, சர்க்கார் புதூர், சின்னபாப்பனூத்து ஆகிய கிராம ஆதி திராவிடர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) நிலம் வழங்க முன்வரும் நில உடமையாளர்களிடம் நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் நிலம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு

2014 ஜூலை 30]

வருகிறது. நிலமெடுப்பு செய்யப்பட்ட பின், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

(ஆ) தனியார் நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் நிலம் கிரயம் பெற விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

69—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32275—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், சடையபாளையம், ராகல்பாலி, வெளப்பட்டி, தளபதிபாளையம் ஆகிய கிராம ஆதி திராவிடர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) நிலம் வழங்க முன்வரும் நில உடைமையாளர்களிடம் நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் நிலம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலமெடுப்பு செய்யப்பட்ட பின், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

(ஆ) தனியார் நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் நிலம் கிரயம் பெற விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

70—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32278—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், எரிசனம்பட்டி, அந்தியூர் பூலாங்கிணறு, வாளவாடி, ராகல்பாவி ஆகிய கிராம ஊராட்சியிலுள்ளவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், எரிசனம்பட்டி, அந்தியூர் பூலாங்கிணறு, வாளவாடி, ராகல்பாவி ஆகிய ஊராட்சிகளிலுள்ளவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நத்தம் புறம்போக்கில் போதுமான நிலங்கள் ஏதும் இல்லை.

(ஆ) பட்டா கோரும் மேற்கண்ட ஊராட்சிகளில் உள்ளவர்களுக்கு மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் நிலம் ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

71—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32281—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், ஆண்டியகவுண்டனூர் கிராமம், கிளுவங்காட்டூரில் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆண்டியகவுண்டனூர் கிராமம், புல எண் 136-ல் வண்டிப்பாதை புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வந்த 91 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

2014 ஜூலை 30]

72—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32290—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளம் வட்டம், மைலாடி கிராமம், நரசிங்காபுரத்தில் ஆதி திராவிடர் காலனிக்கு நில ஆர்ஜிதம் செய்து பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) நிலம் வழங்க முன்வரும் நில உரிமையாளர்களிடம் நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் நிலம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலமெடுப்பு செய்யப்பட்ட பின், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

(ஆ) தனியர் நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் நிலம் கிரயம் பெற விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

73—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32299—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, திருமூர்த்தி நகர் பகுதியில் குடியிருந்து வருகிற 67 குடியிருப்புதாரர்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தளி கிராமம், புல எண்கள் 422, 424/ஏ2, 425/2, 430/2 இல் பெருந்திட்ட பணிகளுக்காக பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே, ஆக்கிரமிப்பு செய்து வீடுகட்டி குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

(ஆ) திருமூர்த்தி அணை கட்டும் பெருந்திட்ட பணிக்காக நில எடுப்பு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் மேற்படி நிலம் உள்ளதால், ஆக்கிரமிப்புதாரர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

74—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32318—திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகுளம் தொகுதி, கெங்குவார்பட்டி பேரூராட்சி, கோட்டார்பட்டி சர்வே எண் 3041-ல் உள்ள 3.50 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தை வீடு இல்லாத மக்களுக்கு அளித்து வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெங்குவார்பட்டி பிட்-II கிராமம், சர்வே எண் 3041 இல் 160.0 எக்டேர் நிலம் பெரியாண்டித் தேவர் மகன் ரவிச்சந்திரன் பெயரில் உள்ள பட்டா நிலமாகும். எனவே, இந்நிலத்தில் பட்டா வழங்க இயலாது.

2014 ஜூலை 30]

75—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 33144—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தளி கிராமம், 2 இல் திருமூர்த்தி நகர் பொதுப் பணித் துறை இடத்தில் குடியிருப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தளி கிராமம், புல எண்கள் 422, 424/ஏ2, 425/2, 430/2 இல் பெருந்திட்ட பணிகளுக்காக பொதுப் பணித் துறையால் நில எடுப்பு செய்யப்பட்டு பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே, ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

(ஆ) திருமூர்த்தி அணை கட்டும் பெருந்திட்ட பணிக்காக நில எடுப்பு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் மேற்படி நிலம் உள்ளதால், ஆக்கிரமிப்புதாரர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

76—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 36378—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி அணை பூச்சிமேடு ராஜவாய்க்கால் கரையோரம் குடியிருக்கும் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் கிராமம், புல எண்கள் 490, 491/ஏ, 492 மற்றும் 508 முதல் 518 வரையுள்ள புலங்கள் முறையே ராஜவாய்க்கால் மற்றும் இராமகுளம் வாய்க்கால் என கிராம ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புலங்கள் நீர்வழிப் புறம்போக்கு என்பதால், வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

77—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 36380—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் கிராமம், வடக்குத் தெரு வனத் துறை பங்களா இடத்தில் குடியிருப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் கிராமம், புல எண் 400/H வனத் துறை பங்களா என்ற இடத்தில் ஆக்கிரமித்து குடியிருந்து வந்த 27

2014 ஜூலை 30]

நபர்களுக்கு வகைப்பாடு மாற்றம் செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

78—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 41222—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் நகரம், சான்றோர்குப்பம் தேசிய நெடுஞ்சாலை அருகிலுள்ள குடியிருப்புகள் சாலை விரிவாக்கத்தால் அகற்றப்படும் போது வேறு பகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் வட்டம், சான்றோர்குப்பம் தேசிய நெடுஞ்சாலை அறுவழிச் சாலை விரிவாக்கத்தின்போது அரசு புறம்போக்கு நிலத்தில் வீடுகட்டி ஆக்ரமணம் செய்திருந்த நபர்களுக்கு மாற்று இடம் வழங்க சான்றோர்குப்பம் கிராமத்தில் தகுதியுள்ள அரசு புறம்போக்கு நிலம் இல்லை என்பதால், வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

79—

நிவாரண உதவி வழங்குதல்

வினா எண் 44108—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்தரகாண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போன தமிழர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவி வழங்க அரசு முன்வருமா?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

உத்தரகாண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட கடும் மழை மற்றும் வெள்ளத்தின் காரணமாக தமிழ்நாட்டிலிருந்து புனித யாத்திரை சென்று உயிரிழந்த 14 நபர்களின் குடும்பத்தினருக்கு உத்தரகாண்ட் மாநிலத்தின் சார்பாக தலா ரூ.3,50,000/-மும், தமிழக அரசின் சார்பாக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து [அரசாணை (டிடி) எண் 445, வருவாய், நாள் 3-12-2013] தலா ரூ.3,50,000/-மும் ஆக மொத்தம் தலா ரூ.7,00,000/- வீதம் மொத்தம் ரூ.98,00,000/- (ரூபாய் தொண்ணூற்றெட்டு இலட்சம் மட்டும்) தமிழக முதலமைச்சர் அவர்களால், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நேரடியாக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

80—

பட்டா நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டம்

வினா எண் 12384—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பெய்யும் மழையின் அளவை அதிகரிக்க வனத்தில் இயற்கையாக உள்ள ஐந்தடுக்கு மரம் முறையை பட்டா நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டத்தில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இயற்கை காடுகளில் புற்பூண்டுகள், செடி கொடிகள், சிறு மரங்கள் மற்றும் உயரமாக வளரும் மரங்கள் என ஐந்து அடுக்குகளில் செழித்து வளர்ந்திருக்கும் காடுகளில் மக்களுக்குத் தேவையான தடி மரங்கள், சிறு வனப் பொருட்கள், கால்நடைத் தீவனங்கள் போன்ற நேரடிப் பயன்களும், மறைமுகமாக; பசுமையான சூழலும், மழைக் காலங்களில் மழைநீரை ஈர்த்துவிடும் தன்மையும் போன்ற

2014 ஜூலை 30]

பயன்களைக் கொண்டவையாகும். ஆனால், தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கும் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் தனியார் நிலங்கள் காடு வளர்த்தல் எனும் உபதிட்டத்தின்கீழ் வளர்க்கக்கூடிய மர வகைகள் விவசாயிகளுக்கு வருமானம் மற்றும் சிறுவனப் பொருட்களைக் கொடுக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளன. இதன் அடிப்படையில் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் விவசாயிகளின் நிலங்களில் மரம் நடும் பணி மூன்று வகைகளாக முறையே வரப்பு ஓரங்களிலும், ஊடு பயிராகவும் மற்றும் தொகுப்பு தோட்டங்களாகவும் உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நடவுப் பணிகள், விவசாயிகளின் தரிசு நிலங்களில் பயிரிடப்பட்டு வருகின்றன. எனவே, இயற்கை காடுகளில் காணப்படுவதுபோல் ஐந்தடுக்கு மரம் வளர்ப்பு எனும் நிலையினை உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

81—

சமூக நலக் காடுகள் வளர்த்தல்

வினா எண் 17658—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊருணிகளில் சமூக நலக் காடுகள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு வனத் துறையின் மூலமாக சமூகக் காடுகளை வளர்க்கும் பணி ஊராட்சி கண்மாய் மற்றும் ஊராட்சி ஒன்றிய குளங்களில், 4,000 எக்டர் நிலப்பரப்பளவில் மகாத்மா காந்தி வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பயன்பெறும் வேலை அட்டைதாரர்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி சமூக நலக் காடுகள் திட்டத்தில் கருவேல் தோட்டங்கள் எழுப்பும் பணிகள், 22 மாவட்டங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் ஒத்துழைப்புடன் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

83—

சமூக நலக் காடுகள் வளர்த்தல்

வினா எண் 25684—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாலையோரங்களில் சமூக நலக் காடுகள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநிலத்தின் பசுமைப் போர்வையினை அதிகரிக்கும் நோக்குடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 65-வது பிறந்த நாளையொட்டி, மாபெரும் மரம் நடும் திட்டத்தின்கீழ் 2012-2013 ஆம் ஆண்டில் சாலை ஓரங்களில் மரக் கன்றுகள் நட்டு செய்யப்பட்டு வருகின்றபடியால், சாலையோரங்களில் சமூகக் காடுகள் வளர்க்க சாத்தியக்கூறுகள் எதுவுமில்லை.

84—

வேப்ப மரங்களை வளர்த்தல்

வினா எண் 25986—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் வேப்ப மரங்களை வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை சமூக வனக் கோட்டம் மூலமாக மானாமதுரை சரகப் பகுதிகளில், 2013-2014 ஆம் ஆண்டில் மாபெரும் மரம் நடும் திட்டத்தின்கீழ், அக்டோபர், 2013 முதல்

2014 ஜூலை 30]

15,000 வேப்ப மரக் கன்றுகள் நடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

85—

புறம்போக்கு நிலங்களில் மரம் நடுதல்

வினா எண் 26025—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு புறம்போக்கு நிலங்களில் மரம் நடுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநிலத்தின் பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் நோக்குடன் 2011-2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 64-வது பிறந்த நாளையொட்டி, 32 மாவட்டங்களில் ரூ.29.44 கோடி மதிப்பீட்டில், 64 இலட்சம் மரக் கன்றுகள் அரசு மற்றும் தனியார் கல்லூரிகள், பள்ளிகள், அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் நடவு செய்யும் "மாபெரும் மரம் நடும் திட்டம்" செயல்படுத்தப்பட்டுள்ளது. 2012-2013 முதல் 2014-2015 வரையிலான மூன்றாண்டு காலத்தில் 32 மாவட்டங்களில் 65 இலட்சம் மரக் கன்றுகள் நடுவதற்கு ரூ.43.55 கோடி ஒப்பளிக்கப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிலையில் அரசு புறம்போக்கு நிலங்களில் மரம் நடுவதற்கென தனி திட்டம் ஏதும் இல்லை.

86—

மரக் கன்றுகளை இலவசமாக வழங்குதல்

வினா எண் 32442—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் நிலங்களில் நடுவதற்கு மரக் கன்றுகளை இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன மரக்கன்றுகள் வழங்கப்படும்?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தனியார் நிலங்களில் மரங்கள் நடவு செய்தலை தமிழக அரசு ஊக்குவித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் விரும்பி முன்வரும் விவசாயிகளின் நிலங்களில், வனத் துறை மரக் கன்றுகளை இலவசமாக நட்டுத் தருகின்றது. இந்நோ்வில், 2007-2008 ஆம் ஆண்டு முதல் 2011-2012 ஆம் ஆண்டு வரை மாநில நிதியின்கீழ் 5.45 கோடி மரக் கன்றுகள் 84,099 விவசாயிகளின் நிலங்களில் நட்டு தரப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாடு உயிர்ப்பன்மைப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் தனியார் நிலங்களில் மரம் வளர்த்தல் எனும் உபதிட்டத்தின்படி, 2012-2013 முதல் 2016-2017 வரை ஐந்து ஆண்டுகளில் 5,000 கிராமங்களில் உள்ள விவசாயிகளின் தரிசு நிலங்களில் 10 கோடி மரங்கள் நடப்பட உள்ளன. 2012-2013 ஆண்டில் 1,000 வருவாய்க் கிராமங்களில் 1 கோடி மரக் கன்றுகள் எழுப்பப்பட்டு, விவசாயிகளின் நிலங்களில் இலவசமாக நடவு செய்து கொடுக்கப்பட்டுள்ளன. 2013-2014 ஆம் ஆண்டில் 1,000 கிராமங்களில் 2 கோடி மரங்கள் நட்டுத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், இத்திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்குப் பொருளாதாரப் பயன் அளிக்கக்கூடிய தேக்கு, குமிழ், பூவரசு, புங்கன், மகாகனி, செம்மரம், பெருமரம், புளி, பலா, நாவல், நெல்லி, கொன்றை, வேங்கை, மலைவேம்பு, சில்வர்ஓக் போன்ற நீண்டகாலம் வளரக்கூடிய மர வகைகளும் மற்றும் குறுகிய காலத்தில் பயன்தரும் சவுக்கு, தீக்குச்சி மரம் போன்ற மர வகைகளும், விவசாயிகளின் விருப்பத்திற்கு ஏற்பவும், நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறும் இலவசமாகவே நட்டுத் தரப்படுகின்றன. சிறு, குறு விவசாயிகளுக்கும், சுய உதவிக் குழுக்களுக்கும் முன்னுரிமை அடிப்படையிலும், பெரு விவசாயிகளுக்கு 5 ஹெக்டர் எனும் வரையறையுடனும், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

87—

மின் விளக்கு அமைத்தல்

வினா எண் 41086—திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2014 ஜூலை 30]

(அ) ஆத்தூர் தொகுதி, மல்லியகரை சன்னாசிவரதன் மலைக்கோயிலுக்கு மின் விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, மல்லியகரை கிராமம், சன்னாசிவரதன் மலைக்கோயில் அமைந்துள்ள மலைக்குன்று, மல்லியகரை கிராம 'அ' பதிவேட்டின்படி (சர்வே எண் 1/1) தீர்வை ஏற்படாத தரிசு நிலம். இதன் மொத்தப் பரப்பு 909.22.5. ஹெக்டேர். இம்மலைக்குன்று பகுதியில் சன்னாசிவரதன் மலைக்கோயில் அமைந்துள்ள நிலம், தீர்வை ஏற்படாத தரிசு, குன்று என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதே மலைப் பகுதியில் நாமக்கல் வனக்கோட்டம், புளியஞ்சோலை காப்புக்காட்டில் 5.50 ஹெக்டேர் பரப்பில் கொல்லிமலை நீர்மின் திட்டத்திற்காகவும் மற்றும் மேட்டூர் வட்டம், பாலமலையில் 1.60 ஹெக்டேர் பரப்பில் நீர்மின் திட்டம் அமைக்கவும் வழங்கப்பட்ட வன நிலத்திற்கு ஈடுகட்டும் நிலமாக மல்லியகரை கிராமத்தில் வழங்கப்பட்ட 14.17 ஹெக்டேர் பரப்பு நிலமும் உள்ளது. இந்நிலம் தமிழ்நாடு வனச் சட்டம், 1882 பிரிவு 4-ன்கீழ் அறிவிக்கை செய்ய மாவட்ட வன அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சன்னாசிவரதன் மலைக்கோயிலுக்குச் செல்லும் பாதை இந்த ஈட்டு நிலம் வழியாக ஒற்றையடிப்பாதையாக சுமார் 180 மீட்டர் வரை செல்கிறது. ஈட்டு நிலமாகப் பெறப்பட்ட இடம் வன ஈட்டு தோட்டம் எழுப்ப மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். எனவே, தற்போது மல்லியகரை கிராமம், சன்னாசிவரதன் மலைக்கோயிலுக்கு மின் விளக்கு அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

88—

பினாஸ்டிக் பைகளில் உணவுப் பொருட்கள் விற்பதைத் தடுத்தல்

வினா எண் 16540—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) பிளாஸ்டிக் பைகளில் உணவுப் பொருட்கள் விற்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய சுற்றுச்சூழல் துறை, 4-2-2011-ம் நாளிட்ட அறிவிக்கை எண் S.O. 249 (E)-ல் பிளாஸ்டிக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2011-ஐ வெளியிட்டது. அவ்விதிகளில் விதி 5-ன்படி பிளாஸ்டிக் பைகள் 40 மைக்ரான் தடிமனுக்குக்கீழ் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதுடன், மறு சுழற்சி செய்யப்பட்ட அல்லது மக்கக்கூடிய (Compostable) பிளாஸ்டிக் பைகளில் உணவுப் பொருட்களைச் சேமித்தல், எடுத்துச் செல்லுதல், விநியோகித்தல் மற்றும் அடைத்து வைத்தல் ஆகியவையும் தடை செய்யப்பட்டுள்ளன. இவ்விதியினை நடைமுறைப்படுத்த மாநில அரசும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

89—

சாயப் பட்டறைகள் இயக்கத்தைக் கட்டுப்படுத்துதல்

வினா எண் 31978—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்தில் சாயப் பட்டறைகள் இயக்கத்தைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் 294 சலவை மற்றும் சாயப் பட்டறைகள் உள்ளன. அவற்றில் சென்னை உயர் நீதிமன்ற

2014 ஜூலை 30]

உத்தரவின்பேரில் வாரிய அனுமதி பெறாத 154 சாய மற்றும் சலவைப் பட்டறைகள் மூடப்பட்டுள்ளன. மேலும், சேலம் பகுதியில் இயங்கும் சாய மற்றும் சலவைப் பட்டறைகள் அனைத்தும் சிறிய அளவில் நடத்தப்படுபவையாகும். கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை பராமரித்து, இயக்கத் தேவையான ஆள் பலம் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை இல்லாத காரணத்தால் முறையாக இயக்கப்படுவதில்லை, இதனால் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் வாய்க்கால்களிலும், ஓடையிலும் அவ்வப்போது வெளியேற்றப்படுகிறது. அவ்வாறு சாயக் கழிவுகளை வெளியேற்றப்படுவது பற்றி பெறப்பட்ட புகார் தொடர்பாக அனைத்து சாய மற்றும் சலவைப் பட்டறை தொழிற்சாலைகளும் வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்டு, முகாந்திர கடிதம் அனுப்பப்பட்டு, பிறகு கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் அனைத்து சாய மற்றும் சலவைப் பட்டறைகளும் இணைந்து பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவ ஆவன செய்யும்படி அறிவுறுத்தப்பட்டது. அதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு, சாயப்பட்டறை உரிமையாளர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் வழங்கி வருகிறது. எனவே, சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து சாய மற்றும் சலவைப் பட்டறை தொழிற்சாலைகளுக்கு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தால் கழிவுநீர் வெளியேற்றம் முற்றிலும் நிறுத்தப்படும்.

மேலும், வாரிய அனுமதி பெற்று இயங்கிவரும் சாய மற்றும் சலவைப் பட்டறைகள், தொழிற்சாலை கழிவுநீரை சுத்திகரிப்பு நிலையத்தில் சரியாக சுத்திகரிப்பு செய்யப்படுகின்றனவா என்று கண்காணிக்கப்படுகின்றன. தவறு செய்யும் தொழிற்சாலைகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வாரிய அனுமதி பெறாமல் இயங்கும் சாய மற்றும் சலவைப் பட்டறைகள் கண்டறியப்பட்டால், தொழிற்சாலையினை மூடுவதற்கும், மின் இணைப்பைத் துண்டிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

90—

ஒருங்கிணைந்த தச்சு வளாகம் அமைத்தல்

வினா எண் 23304—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) காரைக்குடி தொகுதி, அமராவதி புதூரில் ஒருங்கிணைந்த தச்சு வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தோ.பெ. பூனாட்சி, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்:

(அ) காரைக்குடி தொகுதி, அமராவதி புதூரில் ஒருங்கிணைந்த தச்சு வளாகம் அமைக்க அரசிடம் தற்போது எந்தவித செயற்குறிப்பும் இல்லை. அரசுக்குத் தேவையான தச்சு தளவாடச் சாமான்களை உற்பத்தி செய்ய கீழ்க்கண்ட ஏழு தச்சுக் கொல்லு அலகுகள் இயங்கி வருகின்றன:

1. வீரராகவபுரம், சென்னை
2. பள்ளிகொண்டா, வேலூர்
3. அரக்கோணம், காஞ்சிபுரம்
4. திருப்பூர், திருப்பூர் மாவட்டம்
5. நாஞ்சிக்கோட்டை, தஞ்சாவூர்
6. நாகமலை-புதுக்கோட்டை, மதுரை
7. பேட்டை, திருநெல்வேலி

மேலும், ஒரு தச்சுக்கூடம் காரைக்குடி தொகுதி, அமராவதி புதூரில் அமைப்பது தேவையற்ற செலவினத்தை ஏற்படுத்தும்.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

91—

விடுதிகளில் கூடுதல் குளியலறை மற்றும் கழிவறைகள்

வினா எண் 32646—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதிகளில் கூடுதலாகக் குளியலறை மற்றும் கழிவறைகள் கட்ட அரசு முன்வருமா?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 9-3-2013 ஆம் நாளிட்ட அறிக்கையின் அடிப்படையில், அரசுக் கட்டடங்களில் இயங்கும் 575 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு பொதுப் பணித் துறைமூலம் பராமரிப்புப் பணி மேற்கொள்ள ஒரு முறை ஒதுக்கீடாக ரூ.25.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை (நிலை) எண் 96, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 22-10-2013 இல் ஆணையிடப்பட்டு, அதன்படி பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவ, மாணவியர் விடுதிகளில் போதுமான கழிவறை மற்றும் குளியலறை கட்டுவதற்கு பொதுப் பணித் துறைமூலம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

92—

விடுதியில் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்

வினா எண் 39736—திரு. மு. முருகன்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, கமுதி வட்டம், நீராவி கிராமத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியர் விடுதியில் கூடுதலாக மாணவ, மாணவியர் தங்கிப் படிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 115, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

[2014 ஜூலை 30

சிறுபான்மையினர் நலத் (பிந1) துறை, நாள் 16-12-2011-ன்படி ஒவ்வொரு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் கூடுதலாக 10 விழுக்காடு இடங்களை தேவையின் அடிப்படையில் பரிசீலித்து சேர்த்திட அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இராமநாதபுரம் மாவட்டம், நீராவி பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவ, மாணவியர் விடுதியில் ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையை, தற்போதைய சூழலில் மேற்கொண்டு உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை.

93—

விடுதிகளில் கூடுதல் இடங்கள் உருவாக்குதல்

வினா எண் 41608—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரிலுள்ள பள்ளி மாணவ, மாணவியரின் பிற்பட்டோர் நல விடுதிகளில் தங்குவதற்கு கூடுதல் இடங்களை உருவாக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 115, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 16-12-2011-ன்படி அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் கூடுதலாக 10 சதவிகிதம் மாணவ, மாணவிகளைச் சேர்த்திட அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிலையில், புதுக்கோட்டை நகரிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மாணவ, மாணவியர்கள் தங்க கூடுதல் இடங்கள் உருவாக்கிட வேண்டிய தேவை எழவில்லை.

2014 ஜூலை 30]

94—

கிராம சுகாதார செவிலியரை பணியமர்த்துதல்

வினா எண் 17203—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், மேலாயூர் கிராமத்திற்கு ஒரு கிராம சுகாதார செவிலியரை பணியமர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாயமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட மேலாயூர் துணை சுகாதார நிலையத்திற்கு திருமதி காணிக்கை மேரி என்பவர் கிராம சுகாதார செவிலியர் பணி மாறுதல் பெற்று, அங்கு 5-8-2013 முதல் பணிபுரிந்து வருகிறார்.

95—

மருந்தகம் நடத்துவதைத் தடை செய்தல்

வினா எண் 20268—திரு. அ. ஜோஸ்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர்கள் தனியாக மருந்தகம் வைத்து நடத்துவதைத் தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை.30

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் நன்னடத்தை விதிகள் 1973-ல் விதி 8(1)(அ)-ன்படி எந்த ஒரு அரசுப் பணியாளரும் அரசின் அனுமதியின்றி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தத் தொழிலும் செய்யக்கூடாது. எனவே, அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்கள் அரசுப் பணியாளராக இருப்பதால் அவர்கள் மருந்தகம் நடத்த முடியாது.

96—

அடிப்படை வசதிகள் மற்றும் குளிர்சாதன வசதிகள் செய்தல்

வினா எண் 30300—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அரசு மருந்தகத்தில் கழிப்பிடம், குடிநீர் வசதி, காற்றோட்டமான சன்னல், பாம்புகள் நுழையாத சுற்றுப்புறம், குளிர்சாதன வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அரசு மருந்தகத்தில் கழிப்பிட, குடிநீர் வசதிகளும், காற்றோட்டமான சன்னல்களும் உள்ளன. இவை பொதுப் பணித் துறையினரால் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், எலிகள், பாம்புகள் நுழையாத வண்ணம் சன்னல் கதவுகள் அமைக்கவும், குளிர்சாதன வசதி செய்வதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

2014 ஜூலை 30]
97—

மருத்துவமனையில் தண்ணீர் வசதி

வினா எண் 30415—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை அரசு பொது மருத்துவமனையில் வார்டுகளிலும், கழிவறைகளிலும் போதுமான தண்ணீர் வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்ட தலைமை மருத்துவமனையாகச் செயல்பட்டுவரும் பத்மநாபபுரம் (தக்கலை) அரசு பொது மருத்துவமனை 158 படுக்கைகள் கொண்ட மாவட்ட அரசு மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு 900 முதல் 1,100 வரை வெளிநோயாளிகளும், 130 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் மாதம் ஒன்றிற்கு 100 பெரிய மற்றும் 25 சிறிய வகை அறுவை சிகிச்சைகளும் நடந்து வருகின்றன. இம்மருத்துவமனையில் மருத்துவம், மருத்துவம் சாரா பணியாளர்கள் அனைவரும் பணியில் உள்ளதுடன், அப்பகுதி ஏழை எளிய மக்களுக்கு சிறப்பாக மருத்துவ சேவை செய்யப்பட்டு வருகிறது. மேலும், இம்மருத்துவமனையில் மாதம் ஒன்றிற்கு சுமார் 70 முதல் 80 பிரசவங்களும், 7,000 ஆய்வகப் பரிசோதனைகளும் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் இம்மருத்துவமனையில் பொது மருத்துவம், அறுவை சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு பிரிவு, குழந்தைகள் நலப் பிரிவு, எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு, கண், காது, மூக்கு, தொண்டைப் பிரிவு, தோல் சிகிச்சைப் பிரிவு மற்றும் காசநோய் பிரிவுகள்மூலம் உரிய சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட அரசு மருத்துவமனையில் குளிர்சாதன வசதியுடன்கூடிய மூன்று அறுவை அரங்குகள் மற்றும் பிணவறை வசதி உள்ளது. நோயாளிகள் மற்றும் பொது மக்கள் நலன் கருதி கழிப்பிட வசதிகள் செய்யப்பட்டு, மருத்துவமனை சுகாதார

[2014 ஜூலை 30

பணியாளர்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருவதுடன் இம்மருத்துவமனையில் கிணறு மற்றும் நகராட்சிமூலம் தேவையான குடிநீர் மற்றும் வார்டுகள், கழிப்பறைகள் மற்றும் இதர தேவைகள் அனைத்திற்கும் போதுமான அளவு தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

98—

சிகிச்சை அளித்தல்

வினா எண் 30675—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், நேத்தம்பாக்கம் பகுதி பொதுமக்களுக்கும் எஸ்.வி.நகர் ஆரம்ப சுகாதார மையத்தில் சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, நேத்தம்பாக்கம் கிராமம், ஆரணி ஒன்றியத்தினைச் சார்ந்தது. எஸ்.வி. நகரம் ஆரம்ப சுகாதார நிலையம், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக 30 படுக்கைகளுடன் செயல்பட்டு வருகிறது. நேத்தம்பாக்கம் கிராம மக்கள் தொகை, 1,118. அக்கிராமத்திலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் எஸ்.வி. நகரம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகின்றது. நேத்தம்பாக்கம் கிராமம் உள்பட தினசரி 367 வெளிநோயாளிகளும், பிரதிமாதம் ஏறத்தாழ 53 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுவதுடன், பிரதிமாதம் ஏறத்தாழ 20 தாய்மார்களுக்கும் பிரசவம் பார்க்கப்படுகிறது. மேலும், எஸ்.வி. நகரம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் நேத்தம்பாக்கம் பொதுமக்களுக்குத் தேவைப்படும் சிகிச்சை 24 X 7 மணி நேரமும் அளிக்கப்பட்டு வருகிறது.

2014 ஜூலை 30]

100—

சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல்

வினா எண் 34370—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, புதுவயல் பேரூராட்சியிலுள்ள சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் கி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை சுகாதாரப் பகுதி மாவட்டம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் புதுவயல் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. 2013-2014 பழுதுபார்ப்புப் பணிகளுக்காக அளிக்கப்பட்ட அரசு நிதி ஒதுக்கீட்டில் ரூ.26.75 இலட்சம் புதுவயல் சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(பேரவைக் கூட்டத் தொடர் முடியும் வரை தொடர்புடைய உறுப்பினர்கள் நீக்கம் செய்யப்பெற்றுள்ளதால் வரிசை எண்கள் 82, 99 தொடர்புடைய வினாக்கள்-விடைகள் இப்பட்டியலில் இடம்பெறவில்லை.)

பட்டியல் 5

1—

மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31211—திரு. ரா.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், முள்ளிப்பட்டு எம்.ஜி.ஆர். நகரிலுள்ள 1, 3 மற்றும் 4-வது தெருக்களில் புதிய மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், முள்ளிப்பட்டு எம்.ஜி.ஆர். நகரிலுள்ள 3 மற்றும் 4-வது தெருக்களில் 8 குழல் விளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2—

மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31252—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், ஆகாரம் காமராஜ் நகர், அன்னை இந்திரா நகர், ஜெ.ஜெ. நகர் ஆகிய பகுதிகளில் புதிய மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், ஆகாரம் காமராஜ் நகரில் 5 எண்ணிக்கை கையடக்க குழல் விளக்குகள், அன்னை இந்திரா நகரில் மூன்று கையடக்க

2014 ஜூலை 30]

விளக்குகள் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ளன. ஜெ.ஜெ. நகரில் நான்கு கையடக்க குழல் விளக்குகள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31451—திரு. ர.உ. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு பெரியார் நகர், வ.உ.சி. தெரு, காளியம்மன் கோயில் தெரு, காமராஜர் தெரு, அறிஞர் அண்ணா தெரு மற்றும் ராஜாஜி தெரு ஆகிய தெருக்களில் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு பெரியார் நகர், வ.உ.சி. தெரு, காளியம்மன் கோயில் தெரு, காமராஜர் தெரு, அறிஞர் அண்ணா தெரு மற்றும் ராஜாஜி தெரு ஆகிய தெருக்களில் ஏற்கெனவே 14 எண்ணிக்கை குழல் விளக்குகள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31465—திரு. ர.உ. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், வேலப்பாடி ஊராட்சி, சிவசக்தி நகரிலுள்ள முதல் தெரு, இரண்டாவது தெரு, மூன்றாவது தெரு, சீத்தாராமன் தெரு, பவானி அம்மன் கோயில் தெரு, முஸ்லிம் தெரு மற்றும் வந்தவாசி சாலை ஆகிய பகுதிகளில் கம்பங்களுடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், வேலப்பாடி ஊராட்சி, சிவசக்தி நகரிலுள்ள முதல் தெரு, இரண்டாவது தெரு, மூன்றாவது தெரு, சீத்தாராமன் தெரு, பவானி அம்மன் கோயில் தெரு, முஸ்லிம் தெரு மற்றும் வந்தவாசி சாலை ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே 21 எண்ணிக்கை குழல் விளக்குகள் மற்றும் 7 எண்ணிக்கை கையடக்க குழல் விளக்குகள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31472—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், வேலப்பாடி ஊராட்சி, புனலப்பாடியில் பிள்ளையார் கோயில் தெரு, மாரியம்மன் கோயில் தெரு, ஒத்தவாடைத் தெரு, தருமராஜா கோயில் தெரு ஆகிய தெருக்களில் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், வேலப்பாடி ஊராட்சி, புனலப்பாடியில் பிள்ளையார் கோயில் தெருவில் 12 குழல் விளக்குகளும், மாரியம்மன் கோயில் தெருவில் 5 குழல் விளக்குகளும், ஒத்தவாடைத் தெருவில் 8 குழல் விளக்குகளும், தருமராஜா கோயில் தெருவில் 10 குழல் விளக்குகளும், ஏற்கெனவே அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31476—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், வேலப்பாடி கல்லித்தாங்கல் நடுத்தெரு சந்து, நடுத்தெரு, சின்னத்தெரு மற்றும் பஜனை கோயில் தெரு ஆகிய தெருக்களில் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், வேலப்பாடி கல்லித்தாங்கல் நடுத்தெரு சந்து, நடுத்தெருவில் நான்கு குழல் விளக்குகளும், மூன்று கையடக்க விளக்குகளும், சின்னத்தெருவில் இரண்டு குழல் விளக்குகளும், இரண்டு கையடக்க விளக்குகளும் மற்றும் பஜனை கோயில் தெருவில் இரண்டு கையடக்க

விளக்குகளும் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31488—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், வேலப்பாடி தோப்பு தெரு, டேங்க் தெரு, சாலைத் தெரு மற்றும் பாரதியார் தெரு ஆகிய தெருக்களில் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், வேலப்பாடி தோப்பு தெருவில் 4 குழல் விளக்குகளும், 2 கையடக்க விளக்குகளும், டேங்க் தெருவில் 7 குழல் விளக்குகளும், 4 கையடக்க விளக்குகளும், 2 மெர்குரி விளக்குகளும், சாலைத் தெருவில் 3 கையடக்க விளக்குகளும், 7 குழல் விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், பாரதியார் தெருவில் 1 கையடக்க விளக்கும், 5 குழல் விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31495—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், வேலப்பாடி வள்ளுவர் காலனி, அபிராமி கோயில் தெரு மற்றும் இலங்கை அகதிகள் முகாமில் தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், வேலப்பாடி வள்ளுவர் காலனியில் ஐந்து குழல் விளக்குகளும், ஏழு கையடக்க விளக்குகளும், அபிராமி கோயில் தெருவில் இரண்டு குழல் விளக்குகளும், நான்கு கையடக்க விளக்குகளும் மற்றும் இலங்கை அகதிகள் முகாமில் இரண்டு குழல் விளக்குகளும் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9—

கூடுதல் மின் உற்பத்தி செய்தல்

வினா எண் 31993—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள 14 அணைகளிலும் முறைப்படி தூர் வாரி அதிக அளவில் நீர் தேக்கி, கூடுதல் மின் உற்பத்தி செய்ய அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள 14 அணைகளிலும் முறைப்படி தூர் வாரி அதிக அளவில் நீர் தேக்கி, கூடுதல் மின்

[2014 ஜூலை 30

உற்பத்தி செய்ய தூர்வாரும் பணிகளை உலக வங்கியின் நிதி உதவியுடன் அணை பாதுகாப்பு மறு சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2014-2015 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டுகளில் நிலை-II-ன்கீழ் மேற்கொள்ளப்படும்.

10—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் **32064—திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பையூர் காலனி, பஜனை கோயில் தெரு, சிவானந்தம் அரிசி ஆலை அருகில் அரியப்பாடி காலனி, சாலைத் தெரு, அரியப்பாடி புதிய காலனி, 3-வது குறுக்குத் தெரு ஆகிய பகுதிகளில் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பையூர் காலனி, பஜனை கோயில் தெரு, சிவானந்தம் அரிசி ஆலை அருகில் அரியப்பாடி காலனி, சாலைத் தெரு, அரியப்பாடி புதிய காலனி 3-வது குறுக்குத் தெரு ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே 7 குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகளை அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11—

மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 32096—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், பல்லாந்தாங்கல் மதுரா பெரியன்னநல்லூருக்கு புதிய கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், பல்லாந்தாங்கல் மதுரா பெரியன்னநல்லூரில் பத்து கையடக்க குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12—

மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 32142—திரு. ரா.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், எம்.எஸ். மங்கலத்திலிருந்து கருக்கந்தாங்கல் பாதையில் எம்.எஸ். மங்கலம் ராபனஞ்சேரியிலிருந்து திருமணி செல்லும் ஏரிக்கரை சாலை மற்றும் பில்லாந்திக்கு ஆவணியாபுரம் கூட்ரோடு வரை மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், எம்.எஸ். மங்கலத்திலிருந்து கருக்கந்தாங்கல் பாதையில்

[2014 ஜூலை 30

எம்.எஸ். மங்கலம் ராபனஞ்சேரியிலிருந்து திருமணி செல்லும் ஏரிக்கரை சாலை மற்றும் பில்லாந்திக்கு ஆவனியாபுரம் கூட்ரோடு வரை மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைக்கக் கோரி, ஊராட்சியிலிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

13—

செய்யூர் அனல் மின் திட்டப் பணி

வினா எண் 32206—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் அனல் மின் திட்டப் பணி முடிவடைந்து விட்டதா என்பதைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

செய்யூர் அனல் மின் திட்டப் பணிக்கு ரூபாய் 18,000 கோடி செலவில் செய்யூரில் மிக உய்ய அனல் மின் திட்டத்தை உருவாக்க தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஒரு சிறப்பு குறிக்கோள் நிறுவனமாக, கோஸ்டல் தமிழ்நாடு பவர் லிமிடெட் என்ற நிறுவனத்தை உதவி செய்யும் நிறுவனமாக மின்னாற்றல் நிதிக் கழகம் அமைத்துள்ளது. தமிழக அரசு இத்திட்டத்திற்கான நிலம் மற்றும் சாம்பல் குட்டையைப் பெறவும் மற்றும் தண்பயன் துறைமுகம் அமைப்பதற்காகவும் அனுமதி அளித்துள்ளது. மின் நிலையம், சாம்பல் குட்டை மற்றும் துறைமுகத்திற்கான நிலத்திற்கு பிரிவு 3(2)-ன் கீழ் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இன்றைய தேதியில் தேவையான 623 ஏக்கர் தனியார் நிலத்தில், 591 ஏக்கருக்கான நிலத்திற்கு, பிரிவு 3(1)-ன்கீழ் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தேவையான 463.95 ஏக்கர் பரப்புள்ள அரசு நிலத்தின் நில உடமை மாற்றத்திற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. தானாக வளர்ந்த வன மரங்களை வெட்டுவதற்கான அனுமதி உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது. மத்திய

2014 ஜூலை 30]

சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம் வன நிலங்களுக்கான முதல் நிலை அனுமதியை வழங்கியுள்ளது. கூடலோர ஒழுங்குமுறை மண்டலத்திற்கான வல்லுனர் மதிப்பீட்டுக் குழுமம், தன்பயன் துறைமுகத்திற்கான கூடலோர ஒழுங்குமுறை மண்டலத்தின் அனுமதிக்கு பரிந்துரை செய்துள்ளது. மத்திய சுற்றுச்சூழல் நிபுணர் குழுவின் கூட்டங்களில் இத்திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டு, இறுதியாக சுற்றுச்சூழல் குறித்து அனுமதி வழங்க மத்திய சுற்றுச்சூழல் (ம) வனத் துறை அமைச்சகத்துக்கு பரிந்துரை செய்ய முடிவெடுத்து உள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான படிநிலை போட்டிக்கான ஆவணங்களை (Standard Bidding Document) மைய எரிசக்தி அமைச்சகத்திடம் வேண்டியுள்ளது. மேலும், முன் தகுதி ஒப்பந்தக்காரர்களைக் கோரும் (Request for Qualification) அறிக்கை, மைய எரிசக்தி அமைச்சகத்தின் வழிகாட்டுதல்படி. வெளியிடப்படும். 2018-2019 ஆம் ஆண்டு முதல் அலகு பயன்பாட்டிற்கு வர உள்ளது.

14—

தாழ்வான மின் கம்பிகளை சீரமைத்தல்

வினா எண் 32442—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியப் பகுதிகளில் தாழ்வான மின் கம்பிகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கீழ்க்கண்ட பகுதிகளில் திருப்புவனம், கிளதரி, கீழடி, பிரமனூர், மணலூர், அகரம், கோட்டைபூவந்தி, காஞ்சிரங்குளம், எருக்கலைவெல்லூர் மற்றும் பாட்டம் ஆகிய கிராமங்களில் தாழ்வாக தொங்கிய மின் கம்பிகள் சரிசெய்யப்பட்டுள்ளன. மேலும் தாழ்வாகத் தொங்கும் மின் கம்பிகள் கண்டறியப்பட்டு, விரைவில் சரிசெய்வற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

15—

புதிய மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 32671—திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதி, பெருங்குடி முனியன்கோயில் அருகில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருமயம் தொகுதி, பெருங்குடி முனியன்கோயில் பகுதிக்கு பெருங்குடி SS II மின்மாற்றியின் திறன் போதுமானது என்பதால் புதிதாக மின்மாற்றி அமைக்க வேண்டிய தேவை தற்போது எழவில்லை.

16—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 33927—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், எழுவன்கோட்டை ஊராட்சி, ஈகரை மற்றும் கோட்டவயல் கிராமங்களில் புதிய மின்கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், எழுவன்கோட்டை ஊராட்சி, ஈகரை மற்றும் கோட்டவயல் கிராமங்களில் ஏற்கெனவே 24 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

17—

கூடுதல் மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 34455—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகரம், அருப்புக்காரத் தெரு, பாம்பூரணியில் கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகரம், அருப்புக்காரத் தெரு, பாம்பூரணியில் R-APDRP திட்டத்தின்கீழ் நடப்பு நிதி ஆண்டிற்குள் கூடுதல் மின்மாற்றி அமைக்க ஆவன செய்யப்படும்.

18—

கூடுதல் மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 34456—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஒன்றியம், பள்ளமோர்குளம் பகுதியில் கூடுதல் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஒன்றியம், பள்ளமோர்குளம் பகுதியில் ஓர் எண்ணம் 100 கே.வி.ஏ. மின்மாற்றி உள்ளது. அப்பகுதியில் உள்ள மின் பளுவிற்கு தற்பொழுதுள்ள மின்மாற்றியின் திறனே போதுமானது. எனவே, கூடுதல் மின்மாற்றி அமைக்கத் தேவையில்லை.

19—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 35595—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அடங்கார்குளம் ஊராட்சி, அழகநேரி சாலையில் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அடங்கார்குளம் ஊராட்சி, அழகநேரி சாலையில் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2014 ஜூலை 30]

20—

மின் கம்பிகளை புதை மின்வடங்களாக அமைத்தல்

வினா எண் 37509—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் டவுன்ஷிப் பகுதிகளிலுள்ள மின் கம்பிகளை புதை மின்வடங்களாக அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் டவுன்ஷிப் பகுதிகளிலுள்ள மின் கம்பிகளை புதை மின்வடங்களாக அமைக்கும் திட்டம் எதுவும் தற்பொழுது இல்லை.

21—

மின் கம்பி வடங்களை பூமிக்கடியில் பதித்தல்

வினா எண் 37543—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் மின் கம்பிவடங்களை பூமிக்கடியில் பதிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொதுவாக சென்னை போன்ற பெருநகரங்களில் மட்டுமே மேல்நிலை மின்பாதைகளை புதைவடங்களாக மாற்றும் வழக்கம் நடைமுறையில் உள்ளது. மேலும், இயற்கைச் சீற்றங்களால் அடிக்கடி பாதிக்கப்படும் கடலோர நகரங்களான கடலூர், நாகப்பட்டினம் மற்றும் வேளாங்கண்ணி

[2014 ஜூலை 30

ஆகியவற்றில் மட்டும் உள்ள மேல்நிலை மின்பாதைகளை புதைவடமாக மாற்றுவது பற்றிய திட்டத்திற்கான கருத்துரு உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்த பரிசீலனையில் உள்ளது.

22—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 37707—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, அரியப்பபுரம் ஊராட்சிக்கு மின்கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, அரியப்பபுரம் ஊராட்சிக்கு மின்கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால் தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

23—

உயர் அழுத்த மின்கம்பியை மாற்றி அமைத்தல்

வினா எண் 37722—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வடக்கு தொகுதி, கேபூதூர், காந்திபுரம் பகுதிகளில் தாழ்வாகச் செல்லும் உயர் அழுத்த மின் கம்பியை அகற்றி தெரு ஓரமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை வடக்கு தொகுதிக்குட்பட்ட கேபுதூர் மற்றும் காந்திபுரம் பகுதிகளில் உள்ள உயர் அழுத்த மின் கம்பிகள் மிகவும் குறுகலான பாதையில் கடந்து செல்கின்றது. மேலும், இப்பகுதிகளில் உள்ள வீடுகள் அனைத்தும் இருபுறமும் பாலதைகளை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளன. ஆகவே மேற்சொன்ன ஆக்கிரமிப்புகளை அகற்றினால் மட்டுமே உயர் அழுத்த மின்கம்பிகளை பங்களிப்பு வைப்புத் தொகை திட்டத்தின் (DCW) கீழ் மாற்றி அமைக்க இயலும். தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பு 57—ன்படி மின் இணைப்புதொடர், கூட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முன்கூட்டியே முழுமையாகக் கட்டி விட வேண்டும். அத்தொகை கட்டப்பட்ட பிறகே இடமாற்றப் பணி தொடங்கப்படும். எனவே, இந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட பிறகு, உயர் அழுத்த மின்கம்பிகளை இடம் மாற்றம் செய்ய விண்ணப்பம் அளித்து, பங்களிப்பு வைப்புத் தொகை திட்டத்தின் (DCW) கீழ் மதிப்பீட்டுத் தொகையைச் செலுத்தும் பட்சத்தில், தொழில்நுட்ப சாத்தியகூறுகளுக்குட்பட்டு மின்கம்பிகள் இடம் மாற்றம் செய்து தரப்படும்.

24—

மின் கம்பங்களை மாற்றியமைத்தல்

வினா எண் 38340—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் மேற்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, சின்னக்கரை மின்வாரிய அலுவலகத்தைச் சார்ந்த என்.எஸ்.கே. நகரில், முத்துச்சாமி வீடு அருகிலும், SC, 759 சரவணன் வீடு அருகிலும், முத்துவடிவு வீடு அருகிலும் மற்றும் மாரிமுத்து வீடு அருகிலும் பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, சின்னக்கரை மின் வாரிய அலுவலகத்தைச் சார்ந்த என்.எஸ்.கே. நகரில், திரு. முத்துச்சாமி வீடு அருகிலும், திரு. மாரிமுத்து வீடு அருகிலும் உள்ள இரண்டு 30 அடி உழுதடைந்த மின்கம்பங்கள் கடந்த 20-7-2013 அன்று மாற்றப்பட்டன. மின் இணைப்பு எண் 759 திரு. சரவணன் வீடு அருகிலுள்ள 27 அடி உழுதடைந்த ஒரு மின்கம்பம் 30-9-2013 அன்று மாற்றப்பட்டது. மேலும், திரு. முத்துவடிவு வீடு அருகிலுள்ள 30 அடி மின்கம்பம் நல்ல நிலையிலுள்ளது என ஆய்வின்போது தெரியவந்தது.

25—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 41143—திரு. கு. ரவி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், கணபதிபுரம் ஊராட்சிக்கு கூடுதலாக ஒரு 100 கே.வி. திறனுடைய மின்மாற்றி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், கணபதிபுரம் ஊராட்சிப் பகுதிக்கு கணபதிபுரம் மின்மாற்றி III-100 KVA மற்றும் மின்மாற்றி XVII-100 KVA-மூலம் மின் விநியோகம் செய்யப்படுகின்றது. இவற்றில் இணைக்கப்பட்டிருக்கும் மின்பளுக்களுக்கு மேற்படி மின்மாற்றிகளின் திறனே போதுமானது. மேலும், மின்மாற்றிகளின் கடைநிலை மின்னழுத்தம் 230V என ஆய்வின்போது கண்டறியப்பட்டுள்ளது. எனவே, கணபதிபுரம் பகுதிக்கு தற்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருவதால் அப்பகுதிக்கு கூடுதலாக 100 KVA மின்மாற்றி அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

2014 ஜூலை 30]

26—

சொந்தக் கட்டடம்

வினா எண் 7547—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் குற்றவியல் நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.சி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டுவதற்காக ரூ.206.51 இலட்சம் வழங்கி, அரசாணை (நிலை) எண் 495, உள் துறை, நாள் 12-7-2013-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் குறித்து பொதுப் பணித் துறையினரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

27—

ஆழ்துளைக் கிணறு அமைத்தல்

வினா எண் 13600—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 7-வது வார்டு, அருணாச்சலம் 2-வது தெருவின் மையப் பகுதி, காவனூர் தோல் ஷாப் பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் 7-வது வார்டு, அருணாச்சலம் 2-வது தெருவின் மையப் பகுதி மற்றும் காவனூர் ரோடு, தோல் ஷாப் பகுதியில் ஆழ்துளை குழாய்க் கிணறு மற்றும் கைப்பம்பு பொருத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

28—

தனி நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 20008—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போதை மருந்துகள் மற்றும் தடுப்புச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிக்க திருநெல்வேலியில் தனி நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போதை மருந்துகள் மற்றும் தடுப்புச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிக்க திருநெல்வேலியில் தனி நீதிமன்றம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

29—

கழிவுநீர் வெளியேறுவதைத் தடுத்தல்

வினா எண் 20792—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2014 ஜூலை 30]

இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரை பழைய குத்பா பள்ளி, ஆடு அறுத்தான் தெரு, தச்சர் தெரு, பனியக்கார தெரு உட்பட பல தெருக்களில், கழிவுநீர்க் கால்வாய் மூடி சேதமடைந்து, கழிவு நீர் வெளியேறுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரை பழைய குத்பா பள்ளி, ஆடு அறுத்தான் தெரு, தச்சர் தெரு, பனியக்கார தெரு உட்பட பல தெருக்களில், கழிவுநீர்க் கால்வாய் மூடி சேதமடைந்து, கழிவு நீர் வெளியேறுவதைத் தடுக்க, 2012-2013 ஆம் ஆண்டு பொது நிதி திட்டத்தில் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் வடிகால்கள் சேதமடைந்ததை சரி செய்து, அவற்றிற்கு மூடிகள் அமைக்கும் பணி செய்ய 28-6-2012 அன்று டெண்டர் கோரப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் அனைத்தும் முடிவுற்று மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

30—

பூங்காவைச் சீரமைத்தல்

வினா எண் 21360—திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 44-வது வட்டம், சத்தியவாணிமுத்து நகர், சுப்பிரமணியம் தெரு, பன்னீர்செல்வம் தெரு சந்திப்பில் உள்ள பூங்காவை சீர்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

பெரம்பூர் தொகுதி, 44-வது கோட்டம், சத்தியவாணிமுத்து நகர், சுப்பிரமணியம் தெரு மற்றும் பன்னீர்செல்வம் தெரு சந்திப்பிலுள்ள பூங்காவை சீர்படுத்த 2011-2012-ல் ரூ.30,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி முடிக்கப்பட்டு விட்டது. சத்தியவாணிமுத்து நகர், சுப்பிரமணியம் தெரு மற்றும்

[2014 ஜூலை 30

பன்னீர் செல்வம் தெரு சந்திப்பிலுள்ள பூங்காவின் பரப்பளவு 950 சதுர மீட்டர் ஆகும். பூங்காவின் ஆண்டு பராமரிப்பிற்காக தனியாக ஒப்பந்தம் கோரப்பட்டு, ஒப்பந்ததாரர் திரு. முருகன் என்பவரால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

31—

குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கட்டடம்

வினா எண் 22482—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, திங்கள் நகரில் உள்ள இரணியல் குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், இரணியலில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ.265.43 இலட்சம் வழங்கி அரசாணை (நிலை) எண் 132, உள் துறை, நாள் 23-2-2011-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் குறித்து பொதுப் பணித் துறையால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

32—

காவேரி குடிநீர்க் குழாய் அமைத்தல்

வினா எண் 23209—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, கிழக்கு ஒலப்பாளையம், செங்காளிகாடு, சாமேடு பகுதிகளுக்கு காவேரி குடிநீர்க் குழாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, அரசிராமணி பேரூராட்சி, கிழக்கு ஒலப்பாளையம் பகுதியின் மக்கள் தொகை 112 ஆகும். இப்பகுதியில் சுமார் 30 வீடுகள் உள்ளன. இப்பகுதிக்கு அரசிராமணி குடிநீர்த் திட்டத்தின்கீழ் காவேரி குடிநீர் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை சீராக வழங்கப்பட்டு வருகிறது. அரசிராமணி பேரூராட்சியைச் சார்ந்த செங்காளிகாட்டில் 5 வீடுகளும், சாமேடு பகுதியில் 2 வீடுகளும் உள்ளன. இங்குள்ள மக்கள் சொந்தக் கிணற்றில் நீர் எடுத்து வருகின்றனர். காட்டு வளைவில் வசித்து வருவதாலும், இப்பகுதிக்குச் செல்ல பொதுவான பாதை ஏதும் அமைக்கப்படாததாலும், பேரூராட்சியிலிருந்து இப்பகுதிகளுக்கு குழாய் இட்டிப்பு செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.

33—

பூங்கா அமைத்தல்

வினா எண் 25226—திரு. கு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 3-வது வார்டுக்குட்பட்ட கணேஷ் நகர் பகுதியில் குப்பைகளை அகற்ற துப்புரவுத் தொழிலாளர்களை நியமனம் செய்யவும், சோமசுந்தரம் விநாயகர் கோவில் அருகில் பூங்கா அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் 36 துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. அதில் 6 பணியிடங்களுக்கு கருணை அடிப்படையில் நியமனம் செய்திட நகராட்சி நிருவாக மண்டல இயக்குநர் உத்தரவு பிறப்பித்துள்ளார். மேலும், மீதம் உள்ள 30 பணியிடங்களுக்கு அரசு வேலைவாய்ப்பகத்திலிருந்து பணியிழந்த பணியாளர்களுக்கு பணியிடம் வழங்க முன்னுரிமை அளிக்க அரசு முன்வந்து 17-5-2013 அன்று ஐந்து அரசு நிறுவனங்களிடம் தடையின்மைச் சான்று கோரப்பட்டு, இதில் இரண்டு நிறுவனங்களில் பணியிழந்தோர் பட்டியல் வரப்பெற்று, 20-6-2013-ல் நேர்முகத் தேர்வு நடந்தேறியது. மீதம் இரண்டு நிறுவனங்களிடமிருந்து தடையின்மைச் சான்று வரப்பெற்றுள்ளது. மீதம் ஒரு நிறுவனத்தில் தடையின்மைச் சான்று வரப்பெற்றவுடன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பட்டியல் கோரப்பட்டு, பணியிழந்தோருக்கு வழங்கிய துப்புரவுப் பணியிடங்கள் தவிர்த்து மீதம் உள்ள துப்புரவுப் பணியிடங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் நிரப்பப்படும்.

விநாயகர் கோயில் அருகில் பூங்கா அமைக்க, வரும் நிதியாண்டில் நிதி நிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

34—

குடிநீர்க் குழாய்கள் பொருத்துதல்

வினா எண் 25453—திரு. க. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 1-வது வார்டு, அண்ணா தெரு விரிவாக்கம், கன்னியப்பன் 5 தெருக்களிலும் மற்றும் 19-வது வார்டு சீனிவாசன் தெருவிலும் குடிநீர்க் குழாய்கள் பொருத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண் 1, அண்ணா தெரு விரிவாக்கம், கன்னியப்பன் 5 தெருக்களிலும் மற்றும் 19-வது வார்டு சீனிவாசன் தெருவிலும் குடிநீர் பைப்லைன் பொருத்தப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

35—

குடிநீர்க் குழாய்கள் பொருத்துதல்

வினா எண் 25457—திரு. க. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 6-வது வார்டு, வேணுகோபால் நகர், காமராஜர் நகர் பகுதிகளில் குடிநீர்க் குழாய்கள் பொருத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண் 6 வேணுகோபால் நகர், காமராஜர் நகர் பகுதிகளில் குடிநீர் பைப்லைன் அமைக்கப்பட்டு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

36—

குடிநீர் கைப்பம்பு அமைத்தல்

வினா எண் 25462—திரு. க. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 ஜூலை 30

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 1-வது வார்டு, அவில்தார் முனுசாமி தெருவில் ஆழ்துளைக் கிணறு அமைத்து குடிநீர் கைப்பம்பு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேபி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண் 1, அவில்தார் முனுசாமி தெருவில் ஏற்கெனவே ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளதால், தற்போது குடிநீர் கைப்பம்பு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

37—

நவீன எரிவாயு தகனமேடை அமைத்தல்

வினா எண் 27860—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, தேனி நகராட்சியிலுள்ள மின் மயானத்தினை செயல்பாட்டிற்குக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேபி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேனி, அல்லி நகரம் நகராட்சியில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி முழுமையாக முடிவுற்றுள்ளது. மேற்கண்ட எரிவாயு தகனமேடை அல்லி நகரம் கிராம கமிட்டி தொண்டு நிறுவனம்மூலம் மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டு 27-7-2013 முதல் பயன்பாட்டில் உள்ளது.

2014 ஜூலை 30]

38—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 28090—திரு. ஈ. ரவி: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், விண்டர்பேட்டையில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடத்தில் 10.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேபி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ரூ.1,295 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படவுள்ள வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் அரக்கோணம் நகராட்சியில் உள்ள புதிய பேருந்து நிலையத்தின் அருகில் 6.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், விண்டர் பேட்டையில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடத்தில் 9.35 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியும், அசோக் நகரில் 4.75 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு தரைமட்ட நீர்தேக்கத் தொட்டியும் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், ஜனவரி 2015-ல் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

39—

பணி நியமனம்

வினா எண் 28303—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2014 ஜூலை 30

இந்திய கம்பெனி சட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ள அனைத்து விதமான தனியார் மற்றும் பொது கம்பெனிகளையும் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-ல் உட்படுத்தி, தகவல் அதிகாரிகளை மாவட்ட அளவில் நியமனம் செய்திட அரசு ஆவன செய்திடுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேபி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

பொது கம்பெனிகளைப் (PSUs) பொறுத்தவரை, தொழில் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் அனைத்து பொது நிறுவனங்களிலும் (TIDCO, SIPCOT, TNPL, TIIC, TANSALT, TAMIN, TANMAG, TIEL, TASCO, TANCEM & GUIDANCE Bureau-Advisory body) தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன்படி பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

ஆனால், தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 2 (h)-ன்படி தனியார் கம்பெனிகளை தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன்கீழ் உட்படுத்த வழிவகை ஏதுமில்லை.

40—

புதிய பாடப் பிரிவுகளைத் துவக்குதல்

வினா எண் 29275—திரு. க. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பி.ஏ., பி.எல்., பாடப் பிரிவைப் போல பி.காம்., பி.எல்., பி.எஸ்.சி., பி.எல்., மற்றும் பி.பி.ஏ., பி.எல்., போன்ற பாடப் பிரிவுகளைத் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் 2013-2014 ஆம் கல்வியாண்டு முதல் பி.காம்., பி.எல்., (ஹானர்ஸ்) பாடப் பிரிவு தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அரசு சட்டக் கல்லூரிகளில் பி.காம்., பி.எல்., பி.எஸ்.சி., பி.எல்., மற்றும் பி.பி.ஏ., பி.எல்., போன்ற பாடப் பிரிவுகளைத் தொடங்கிடும் எண்ணம் அரசுக்கு தற்போது இல்லை.

(ஆ) அவசியம் எழவில்லை.

41—

உயர் கோபுர விளக்கு அமைத்தல்

வினா எண் 29552—திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, தருமபுரி 18-வது வார்டு தேர் நிலையத்தில் உயர் கோபுர விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

தருமபுரி நகராட்சிக்குட்பட்ட 18-வது வார்டில் தெரிவிக்கப்பட்ட சாலை மிகவும் குறுகிய சாலையாக உள்ளதால், அப்பகுதியில் உயர் மின் கோபுர விளக்கு அமைக்க இயலாது.

42—

கட்டமைப்பு வசதியை மேம்படுத்துதல்

வினா எண் 30933—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 ஜூலை 30

(அ) சென்னை மாநகராட்சியின்கீழ் செயல்படும் மருத்துவமனைகளில் தேவையான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேபி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். சென்னை மாநகராட்சி, 2013-2014 நிதிநிலை அறிக்கையின்படி சென்னை மாநகராட்சியின்கீழ் ஏற்கெனவே செயல்படும் மருத்துவமனைகளிலும் மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட மண்டலங்களில் உள்ள மருத்துவமனைகளிலும் தேவையான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

43—

புதிய கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 31557—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் மாவட்ட நீதிமன்றத்திலுள்ள பழைய கட்டடங்களை மாற்றி புதிய கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேபி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள்

2014 ஜூலை 30]

கட்டுவதற்காக ரூ.15,50,47,033/- வழங்கி, அரசாணை (நிலை) எண் 809, உள் துறை, நாள் 8-10-2013-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் குறித்து பொதுப் பணித் துறையினரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

44—

ஒருங்கிணைந்த நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 32892—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள நீதிபதிகளுக்கு ஒருங்கிணைந்த நீதிமன்றக் குடியிருப்புகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூ.15,50,47,038/- வழங்கி, அரசாணை (நிலை) எண் 809, உள் துறை, நாள். 8-10-2013-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் குறித்து பொதுப் பணித் துறையினரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

45—

தெரு விளக்குகளை மாற்றுதல்

வினா எண் 33999—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகராட்சி, அழகாபுரி நகர், இராம்நகர் மற்றும் அண்ணாசாலை ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள தெரு விளக்குகளை மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேவகோட்டை நகரில் இராம் நகர், அழகாபுரி நகர் மற்றும் அண்ணாசாலை பகுதிகளில் பழுதடைந்த தெரு விளக்குகள் சரிசெய்யப்பட்டுள்ளன.

46—

சைக்கிள் நிறுத்துமிடம் அமைத்தல்

வினா எண் 34108—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகரம், தேவகோட்டை, இராம்நகர் பகுதிகளில் சைக்கிள் நிறுத்துமிடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேவகோட்டை மற்றும் இராம் நகர் பகுதிகளில் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் அமைக்க நகராட்சிக்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லை. எனவே, இவ்வசதி அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

2014 ஜூலை 30]

47—

மேற்கூரை அமைத்தல்

வினா எண் 34109—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகரம், தினசரி சந்தையில் மேற்கூரை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேவகோட்டை நகரில் தினசரி சந்தையில் மேற்கூரை அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

48—

கால்வாய் சரி செய்தல்

வினா எண் 34216—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகரம் தினசரி சந்தைப் பகுதியில் உள்ள கால்வாயை சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் நகரம் தினசரி சந்தைப் பகுதியில் உள்ள கால்வாய்கள் சீர்செய்யப்பட்டு கழிவு மண் அப்புறப்படுத்தப்பட்டு, கழிவு நீர் தேங்காவண்ணம் சீராகச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

49—

பயணியர் நிழற்குடை அமைத்தல்

வினா எண் 35479—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சீட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள பள்ளிக்கரணை குளம் பேருந்து நிறுத்தத்தில் பயணியர் நிழற்குடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். சென்னை, வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள பள்ளிக்கரணை குளம் பேருந்து நிறுத்தத்தில் பயணிகள் நிழற்குடை அமைக்க பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்காணும் இடத்தில் பேருந்து நிறுத்த நிழற்குடை விரைவில் அமைக்கப்படும்.

50—

இருசக்கர வாகன நிறுத்துமிடம்

வினா எண் 35849—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகரில் இருசக்கர வாகன நிறுத்துமிடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேவகோட்டை நகரில் இருசக்கர வாகன நிறுத்துமிடம் நகராட்சி அலுவலக வளாகத்தின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

51—

பூங்காவை சீரமைத்தல்

வினா எண் 37885—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை, புதுவண்ணாரப்பேட்டை, தந்தை பெரியார் பூங்காவை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தந்தை பெரியார் பூங்காவானது குறுக்குத் தெரு மற்றும் ஏ.இ. கோயில் தெரு சந்திப்பில் சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, கோட்டம் 40-ல் அமைந்துள்ளது. இப்பூங்காவானது 3,628 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டது. இப்பூங்காவில் 2012-2013 ஆம் ஆண்டில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ரூ.8,06,699/- செலவிடப்பட்டு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இப்பூங்காவில் பசுமை புற்கள், நடைபாதை வசதிகள், சிறுவர் விளையாட்டுத் திடல் மற்றும் பொது மக்கள் அமருவதற்கு இருக்கை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதிவாழ் பொதுமக்கள் அல்லது குடியிருப்போர் சங்கம் தேவையான மேலும் அபிவிருத்திப் பணிகளை கோரினால், நடப்பு நிதியாண்டில் (2013-2014) மதிப்பீடுகள் தயாரித்து, அங்கிகாரம் பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும்.

52—

கால்நடைகளை முறைப்படுத்துதல்

வினா எண் 38472—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலைச் சுற்றியுள்ள கால்நடைகளை முறைப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரத் துறையினரால் கடந்த 12 ஆண்டுகளுக்கு மேல் மாடு பிடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், சென்னை, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலைச் சுற்றியுள்ள மாடுகள் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பகுதியில் கடந்த ஆகஸ்டு மாதம் 10 மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன. கடந்த ஜனவரி 2013 முதல் ஆகஸ்டு 2013 வரை 64 மாடுகள் பிடிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

53—

மழலையர் பள்ளிகள் அமைத்தல்

வினா எண் 38478—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சிமூலம் மழலையர் பள்ளிகள் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை. வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 2013-2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சென்னை மாநகராட்சியில் உள்ள 10 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் இவ்வாண்டு மழலையர் பிரிவுகள் தொடங்கப்படும் என அறிவித்தார்கள். அதன்படி 10 தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் மழலையர் பிரிவுகள் இக்கல்வி ஆண்டில் தொடங்கப்பட்டு, சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அனைத்து தரப்பிலிருந்தும் வரவேற்பைப் பெற்றுள்ள இந்த 10 மழலையர் பிரிவுகளில் மட்டும் 725 பேர் சேர்ந்து கல்வி பயின்று வருகின்றனர்.

5.4—

பூங்காவினை மேம்படுத்துதல்

வினா எண் 39953—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, இராயபுரம் பூங்காவினை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். சென்னை மாநகராட்சி, வார்டு-52, பகுதி-12, மண்டலம்-5 சென்னை, இராயபுரம் பகுதியில் உள்ள அண்ணா பூங்காவில் கடந்த 3 மாதங்களில் கீழ்க்காணும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. *ரூ.5.20 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணா பூங்கா உட்புறம் பெண்கள் நவீன கழிப்பிடம் கட்டும் பணி.*

[2014 ஜூலை 30

2. ரூ.8.02 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணா பூங்காவில் தடுப்பு வேலி அமைத்தல் மற்றும் பூங்காவில் பசுமைப்படுத்தும் பணி.

3. ரூ.6.40 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணா பூங்காவில் குழந்தைகள் விளையாட்டுத் திடல் அமைக்கும் பணி.

4. ரூ.7.20 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்பு வேலி அமைத்தல் மற்றும் திறந்தவெளிக் கிணறு அமைத்தல் மற்றும் இதர மேம்பாட்டுப் பணிகள்.

5. ரூ.8.40 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணா பூங்காவில் தண்ணீர் வசதி செய்து தருதல் மற்றும் நடைபாதைகளில் மேற்கூரை அமைத்தல் மற்றும் எப்.ஆர்.சி. இருக்கைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

55—

மே தினப் பூங்காவை சீரமைத்தல்

வினா எண் 39480—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, கே.கே. நகரில் உள்ள எம்.ஜி.ஆர். பூங்கா, கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் அனுகுசாலை ஓரம் உள்ள பூங்கா மற்றும் சென்னை சிந்தாதிரிப்பேட்டை "மே" தினப் பூங்காக்களை சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்ட மண்டலம்-10, வார்டு-131, கே.கே. நகர், எம்.ஜி.ஆர். பூங்காவானது கடந்த 2009 ஆம் ஆண்டு ரூ.90 இலட்சத்தில் புதுப்பிக்கப்பட்டது.

2014 ஜூலை 30]

2013 ஆண்டு மேலும், ரூ.40 இலட்சத்தில் புதுப்பிக்கப்பட்டு தற்போது நன்றாக பாரமரிக்கப்பட்டு வருகிறது.

மண்டலம்-5, வார்டு-62-ல் உள்ள சிந்தாதிரிப்பேட்டை "மே" தினப் பூங்காவின் சில பகுதிகளில் சென்னை மெட்ரோ இரயில் பணி நடைபெற்று வருகிறது. அப்பணி முடிந்து, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தினர் சென்னை மாநகராட்சியிடம் அந்த இடத்தை ஒப்படைத்த பின்பு பூங்கா முழுவதும் சென்னை மாநகராட்சிமூலம் சீரமைக்கப்படும்.

56—

கட்டணக் கழிப்பிடம் அகற்றுதல்

வினா எண் 33919—திருமதி க. முத்துசெல்வி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதி, சங்கர நாராயணர் திருக்கோயிலின் தெற்கு மாடவீதி பாதையினைத் தடுத்து நகராட்சிமூலம் கட்டப்பட்டுள்ள கட்டணக் கழிப்பிடத்தை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

சங்கரன்கோவில் தொகுதி, சங்கர நாராயணர் திருக்கோயிலின் தெற்கு மாடவீதியில் உள்ள கட்டணக் கழிப்பிடம் சங்கர நாராயணர் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு கழிப்பிட வசதி செய்து கொடுக்கும் பொருட்டு நகராட்சியால் கட்டப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த நவீன கட்டணக் கழிப்பிடத்தை இடிப்பதால் பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும், பொது சுகாதாரத்திற்கும் இடையூறு ஏற்படும். மேலும், அது பாதையை ஆக்கிரமித்து கட்டப்படவில்லை என்பதால், அதனை அகற்றும் உத்தேசம் ஏதும் இல்லை.

[2014 ஜூலை 30

57—

புதிய கட்டடம் கட்டுதல்

வினா எண் 43032—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் பழைய கட்டடத்தில் செயல்பட்டுவரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு வட்டாட்சியர் அலுவலகம் அருகே புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடியில் நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டுவதற்காக ரூ.174.40 இலட்சம் வழங்கி அரசாணை நிலை எண் 495, உள் துறை, நாள் 12-7-2013-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் குறித்து பொதுப் பணித் துறையினரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

58—

தொழிற்சாலைகள் குறித்த விழிப்புணர்வு

வினா எண் 28263—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2012-2013 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் குறித்தும், யு.ஒய்.இ.ஜி.பி. (வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்) குறித்தும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டன. மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 2012-2013 நிதியாண்டில் யுஒய்இஜிபி. திட்டத்தின்கீழ் மாவட்ட அளவிலான கருத்தரங்கு 30-10-2012 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் ரோட்டரி சமுதாயக்கூடம், நாகர்கோவிலில் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் 220 நபர்கள் கலந்து கொண்டார்கள்.

மேலும், வட்டார அளவிலான விழிப்புணர்வு முகாம்கள் கீழ்க்கண்டவாறு நடத்தப்பட்டன:

வ. எண்	நாள்	வட்டாரம்	கலந்து கொண்ட நபர்கள்
1.	25-9-2012	இரணியல் (தக்கலை)	43
2.	8-11-2012	கன்னியாகுமரி (அகஸ்தீஸ்வரம்)	49
3.	9-11-2012	குளச்சல் (குருந்தன்கோடு)	45
4.	20-11-2012	களியக்காவிளை (மேல்புறம்)	53
5.	21-11-2012	அருமனை	61
6.	27-11-2012	முன்சிறை	39
7.	29-11-2012	கிள்ளியூர்	45
8.	30-11-2012	ஆசாரிப்பள்ளம்	51
9.	30-11-2012	தோவாளை	43

[2014 ஜூலை 30

(அ) 2012-2013 நிதியாண்டிற்கு மாவட்ட அளவிலான கருத்தரங்கிற்கு ரூ.36,000/-ம், வட்டார அளவிலான விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் திட்ட விளம்பரங்களுக்கு ரூ.64,846/-ம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, நடத்தப்பட்டது.

(ஆ) 2013-2014-ல் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (UYEGP) கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் வட்டார அளவிலான விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவதற்கு ரூ.14,410/-ம், மாவட்ட அளவிலான கருத்தரங்கு நடத்துவதற்கு ரூ.36,000/-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

59—

காலிப் பணியிடம் நிரப்புதல்

வினா எண் 5436—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டத்தில் வேளாண்மைத் துறையின்கீழ் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 269, வேளாண்மைத் (வே.நி.4) துறை, நாள் 23-11-2009-ன்படி, கீழ்க்கண்ட பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன:

வ. எண்	பதவி	ஒப்பளிக்கப் பட்ட மொத்த பணியிடங்கள்	பணியில் உள்ள அலுவலர்கள் விவரம்	காலிப் பணியிடம்
1.	வேளாண்மை இணை இயக்குநர்	1	1	—
2.	வேளாண்மை துணை இயக்குநர்	2	2	—

2014 ஜூலை 30]

வ. எண்	பதவி	ஒப்பளிக்கப் பட்ட மொத்த பணியிடங்கள்	பணியில் உள்ள அலுவலர்கள் விவரம்	காலிப் பணியிடம்
3.	ஆட்சி அலுவலர்	1	1	—
4.	வேளாண்மை உதவி இயக்குநர்	13	12	1
5.	வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு)	1	0	1
6.	உதவி கணக்கு அலுவலர்	1	1	—
7.	கண்காணிப்பாளர்	3	2	1
8.	உதவியாளர்	10	9	1
9.	வேளாண்மை அலுவலர்	24	24	—
10.	துணை வேளாண்மை அலுவலர்	12	11	1
11.	உதவி விதை அலுவலர்	13	11	2
12.	உதவி வேளாண்மை அலுவலர்	72	53	19
13.	ஆய்வக உதவியாளர்	3	2	1
14.	இளநிலை உதவியாளர்	8	7	1
15.	தட்டச்சர்	11	10	1
16.	சுருக்கெழுத்துத் தட்டச்சர் (தரம்-2)	2	—	2
17.	கிடங்கு மேலாளர் (தரம்-I)	2	2	—

வ. எண்	பதவி	ஒப்பளிக்கப் பட்ட மொத்த பணியிடங்கள்	பணியில் உள்ள அலுவலர்கள் விவரம்	காலிப் பணியிடம்
18.	இடங்கு மேலாளர் (தரம்—2)	12	2	10
19.	இடங்கு மேலாளர் (தரம்—3)	12	11	1
20.	பளு வாகன ஓட்டுநர்	1	0	—
21.	இலகு வாகன ஓட்டுநர்	8	4	4
22.	பதிவறை எழுத்தர்	2	—	2
23.	விற்பனை உதவியாளர்	9	1	8
24.	திரைப்படக் கருவி இயக்குபவர்	1	1	—
25.	அலுவலக உதவியாளர்	16	3	13
26.	இரவுக் காவலர்	30	11	19
27.	மஸ்தூர்	1	1	—
	மொத்தம்	271	182	89

காலிப் பணியிடம் நிரப்பிட எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம்

உதவி வேளாண்மை அலுவலர்

19 உதவி வேளாண்மை அலுவலர் காலிப் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் நிரப்பப்படும்.

கிடங்கு மேலாளர் (தரம் 2)

கிடங்கு மேலாளர் (தரம் 2) பணியிடங்கள் பதவி உயர்வின் மூலம் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2014 ஜூலை 30]

விற்பனை உதவியாளர்

விற்பனை உதவியாளர் பணியிடங்கள் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அலுவலக உதவியாளர்

அரசிடமிருந்து பணியாளர் குழு ஒப்புதல் பெறப்பட்டதும் நிரப்பப்படும்.

இரவுக் காவலர்

அரசாணை (நிலை) எண். 243, வேளாண்மைத் (வேநி 4) துறை, நாள் 10-12-2013-ன்படி காலிப் பணியிடங்களை நிரப்பிட வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

60—

கையடக்கக் கருவிகள் வழங்குதல்

வினா எண் 13115—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தினைப் பெருமளவில் பயன்படுத்த வேளாண் விரிவாக்கப் பணியாளர்களுக்கு கையடக்கக் கருவிகளை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

வேளாண் தகவல் சேவை வலைதளத்தின்கீழ் பண்ணைப் பயிர் மேலாண்மை முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இம்முறையின்கீழ் அனைத்து விவசாயிகளுக்கும் தனிப்பட்ட பண்ணைப் பயிர் திட்டம், சம்பந்தப்பட்ட விவசாயிகளின் பங்கேற்புடன் ஓராண்டு தயாரித்து அளிக்கப்படுகிறது. இப்பண்ணைப் பயிர் திட்டம் சம்பந்தப்பட்ட விவசாயிகளின் நிலத்தின் மண் வளம், தட்ப வெப்பநிலை மற்றும் நீர் ஆதாரங்களின் அடிப்படையில் அறிவியல் ரீதியாக தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் இதுகாறும் இருந்து வந்த மகசூல் இடைவெளி

[2014 ஜூலை 30

குறைக்கப்பட்டு, உயர் மகசூல் மற்றும் வருவாய் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை வயல்வெளி அளவில் செயல்படுத்துவதற்காக வேளாண் களப் பணியாளர்களுக்கு 837 கையடக்க கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இக்கருவிகள்மூலம் களப்பணியாளர்கள் சம்பந்தப்பட்ட விவசாயிகளின் நிலங்களுக்கு சென்று பயிர் வளர்ச்சியை முறையாகக் கண்காணித்து தேவையான வேளாண் தகவல்களை உடனுக்குடன் வழங்கி வருகின்றனர்.

இத்திட்டம் பரீட்சார்த்த முறையில் திருச்சிராப்பள்ளி, திருவாரூர், கோயம்புத்தூர், ஈரோடு, வேலூர், விருதுநகர் ஆகிய 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மீதமுள்ள மாவட்டங்களில் பணிபுரியும் அனைத்து களப் பணியாளர்களுக்கும் 1,482 கையடக்க கணினிகள் (Tablet PCs) வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

61—

விவசாயிகள் குறித்த விவரம்

வினா எண் 15794—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி, மோகனூர், சின்னமனூர் மற்றும் ஸ்ரீவைகுண்டம் ஆகிய இடங்களில் வாழைக்கென கட்டப்பட்டுள்ள பழுக்க வைக்கும் கூடத்தில் 2011-2012 ஆம் ஆண்டில் பயன் அடைந்த விவசாயிகள் குறித்த விவரம் என்ன?

(ஆ) இதற்காக விவசாயிகளிடம் கட்டணம் வசூலிக்கப்படுகிறதா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) திருச்சியில் 1,725 ச.அ. பரப்பளவில் ரூ.50.00 இலட்சம் மதிப்பில் 20 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட வாழை பழுக்க வைக்கும் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப பணியாளர் நியமனம் செய்யப்பட்டவுடன் கூடம் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

2014 ஜூலை 30]

மோகனூர் உழவர் சந்தையில் 1,250 ச.அ. பரப்பளவில் ரூ.50 இலட்சம் மதிப்பில் 20 மெடன் கொள்ளளவு கொண்ட வாழை பழுக்க வைக்கும் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. கூடுதல் உபகரணங்கள் பெறப்பட்டவுடன் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

தேனி-இன்னமனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 1,714 ச.அ. பரப்பளவில் ரூ.50.00 இலட்சம் மதிப்பில் 20 மெடன் கொள்ளளவு கொண்ட வாழை பழுக்க வைக்கும் கூடம் அமைக்கப்பட்டு 19-4-2013 முதல் செயல்பாட்டில் உள்ளது. இதுவரை 16 விவசாயிகள் இதனைப் பயன்படுத்தி, பல்வேறு தருணங்களில் 42 மெடன் வாழை சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 195 ச.மீ. பரப்பளவில் ரூ.50.00 இலட்சம் மதிப்பில் 20 மெடன் கொள்ளளவு கொண்ட வாழை பழுக்க வைக்கும் கூடம் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

(ஆ) ஜி9 ரக வாழைக்கு 0.90 பைசா கட்டணமும், மற்ற ரகங்களான ரஸ்தாளி, பூவன், கற்பூரவல்லி மற்றும் ஏலரசி வாழைகளுக்கு 0.80 பைசா கட்டணமும் வசூலிக்கப்படும்.

62—

கசிவுநீர்க் குட்டை தடுப்பணை

வினா எண் 24605—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, செட்டிப்பட்டி ஊராட்சி, செட்டிப்பட்டியில் உள்ள கோணப்பன் குட்டையில் கசிவுநீர்க் குட்டை தடுப்பணை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செயற்கை முறை செறிவூட்டும் திட்டம் ஏதும் தற்போது செயல்பாட்டில் இல்லாததால், அரூர் தொகுதி, செட்டிப்பட்டி ஊராட்சி, செட்டிப்பட்டியில் உள்ள கோணப்பன் குட்டையில் கசிவுநீர்க் குட்டை தடுப்பணை அமைக்கும் செயற்குறிப்பு இல்லை.

63—

குளம் அமைத்தல்

வினா எண் 28777—திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, பாப்பான்குளம், விதைப் பண்ணை நிலத்தில் குளம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் 460 வருவாய் (நி.மு5(1)) துறை, நாள் 24-7-2008-ன்படி கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலை வட்டம், பாப்பான்குளம் கிராமம், புல எண் 405(3-ல் உள்ள பாப்பான்குளம் அரசு விதைப் பண்ணைக்குச் சொந்தமான 44.26 ஏக்கர் நிலத்தில் 14.89 ஏக்கர் நிலத்தை கிராமத்தின் குடிநீர் பயன்பாட்டிற்காகவும், விதைப் பண்ணை நிலத்தின் நிலத்தடி நீர் பெருகுவதற்கும், குளமாக மாற்ற பாப்பான்குளம் ஊராட்சிக்கு முன்னுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் அரசாணைப்படி, பாப்பான்குளம் விதைப் பண்ணையில் 200 X 200 X 2மீ. அளவில் குளம் அமைக்க திட்டமிடப்பட்டு, குளம் தோண்டும் போது வெட்டி எடுக்கப்படும் மண் அளவு மற்றும் அதன் மதிப்பு மிகவும் அதிகமாக உள்ள காரணத்தால், திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி, வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, ஊரக வளர்ச்சித் துறை,

2014 ஜூலை 30]

பொதுப் பணித் துறை ஆகிய துறைகள் சார்ந்த அலுவலர்களைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. குழு ஆய்வினைத் தொடர்ந்து பாப்பான்குளம் அரசு விதைப் பண்ணை நிலத்தில் மண் அள்ளும் பணி விரைவில் தொடங்கப்பட்டு குடிநீர் குளம் வெட்டும் பணி முடிக்கப்படும்.

64—

உர மானியம் வழங்குதல்

வினா எண் 29082—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ரப்பர் பயிரிடும் விவசாயிகளுக்கு உர மானியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ரப்பருக்காக தனியாக வாரியம் அமைந்துள்ளதால், ரப்பர் பயிருக்கான உர மானியம் தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறைமூலம் வழங்கப்படுவதில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்தில், ரப்பர் வாரியம் மூலமாக சிபாரிசுப்படி உரமிடுதல், களையெடுத்தல் உள்ளிட்ட சாகுபடி செலவினங்களுக்காக புதிய பரப்பில் ரப்பர் நடவு செய்யும் விவசாயிகளுக்கும், வயது முதிர்ந்த மரங்களை வெட்டி மறுபடியும் நடவு செய்யும் விவசாயிகளுக்கும், எக்டருக்கு ரூ.19,500 வீதம் 2 எக்டர் வரை மானியம் ஆறு தவணைகளாக வழங்கப்படுகிறது.

மேலும், 35 சென்ட் பரப்பில் ரப்பர் சாகுபடி செய்யும் விவசாயிகள், 60 நபர்கள் சேர்ந்து ரப்பர் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கி, உறுப்பினர்களாக உள்ள விவசாயிகளுக்கு கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

[2014 ஜூலை 30

(i) சாகுபடி மேலாண்மைத் திட்டத்தில் மழை காப்புப்பட்டி ஏப்ரல், மே மாதங்களில் செய்யப்படுகிறது.

(ii) மண் ஆய்வு மற்றும் ரப்பர் இலை ஆய்வு முடிவுப்படி உரமிடுதல்.

(iii) கந்தகம் தெளித்தல்/தூவுதல்-டிசம்பர் மாதத்தில் செய்யப்படுகிறது.

(iv) ஒரு ஆண்டுக்கு மரத்தில் எந்த அளவு பால் வடித்தல் செய்ய வேண்டும் என்பதைக் குறியிடுதல், சீரமைத்தல் போன்ற தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பதற்காக ஒரு எக்டருக்கு ரூ.12,500/- மானியம் வழங்கப்படுகிறது.

மேற்சொன்ன அனைத்துத் திட்டங்களிலும் மாளியத் தொகையின் அளவு, ரப்பர் வாரிய முடிவுப்படி மாறுதலுக்குட்பட்டது.

65—

விளைநிலங்களை மீட்டல்

வினா எண் 30184—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உரிய அங்கீகாரமின்றி வீட்டுமனைகளாகப் பிரிக்கப்படும் விளைநிலங்களை மீட்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* வேளாண்மை அல்லாத பிற பயன்பாட்டிற்காக வேளாண் விளைநிலங்கள் மாற்றப்படுவதைத் தடுக்கவும், தமிழ்நாட்டிலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற நிலங்களின் மேம்பாடு மற்றும் பயன்பாட்டினை திட்டமிடுவதற்காகவும், அரசால் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971 (தமிழ்நாடு சட்டம் 35/1972) (Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972) இயற்றப்பட்டது.

2014 ஜூலை 30]

பின்னர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (UD4-I) அரசாணை நிலை எண். 302, நாள் 29-12-2010-ன்படி இச்சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு திருத்திய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 2010 (தமிழ்நாடு சட்டம் 46/2010) (Town and Country (Planning Amendment) Act, 2010 (Tamil Nadu Act 46 of 2010) அமல்படுத்தப்பட்டது. இதன்படி., விவசாய நிலங்கள் இதரப் பயன்பாட்டிற்கு மாற்றப்படும் முன், வேளாண்மைக்கு உகந்ததல்ல என்பதை உறுதி செய்து முடிவெடுக்க மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாய நிலங்கள் இதர பயன்பாட்டிற்கு மாற்றப்படுவதனைத் தடுத்து, பண்ணை அளவில் திட்டங்களை உருவாக்குவதுடன், வேளாண் துறைக்கு புத்துயிரூட்டவும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும், உழவர்கள் வேளாண்மையில் தீவிரமாக ஈடுபடவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

86—

வேளாண் கருவிகளை மானியத்துடன் வழங்குதல்

வினா எண் 33209—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை அமராவதி வனச் சரகத்திலுள்ள மலைவாழ் மக்களுக்கு விதைகள், நாற்று இடுபொருள்கள், வேளாண்மைக் கருவி 100% மானியத்துடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை அமராவதி வனச் சரகத்தை உள்ளடக்கிய திருப்பூர் மாவட்டத்தில் இடுபொருட்களான உரங்கள், உயிர்க்கொல்லி மருந்துகள், நுண்ணுயிர் உரங்கள், நுண்ணூட்டச்சத்துக்கள் ஆகியவை சோளம் பயிரில் தொகுப்பு செயல்விளக்கங்கள் அமைக்க 2 எக்டர் வரை 100 சதவீத மானியத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்

கீழ் வழங்கப்படுகின்றது. மேலும், சோள விதை சிறுதளைகள் ஒரு எக்டர் செயல்விளக்கத்தில் ஒரு ஏக்கருக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது.

இது தவிர ஐசோபாம் மக்காச்சோளம் திட்டத்தில் மக்காச்சோளம் பயிரில் 5 எக்டரில் செயல்விளக்கம் அமைக்கத் தேவையான இடுபொருட்கள் ரூ.800 மதிப்புள்ளவை இலவசமாக வழங்கப்படுகின்றன. நீர் எடுத்துச் செல்லும் குழாய்க் கருவிகள் ஒரு எண்ணிற்கு ரூ.15,000/- வீதம் மானியத்தில் வழங்கப்படுகின்றன.

மேலும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் நெல் விதைகள் ஒரு கிலோவிற்கு ரூ. 5 என்ற மானியமும், திருந்திய நெல் செயல் விளக்கங்கள் அமைக்க ஒரு எக்டருக்கு ரூ.1500 மதிப்புள்ள முக்கிய இடுபொருட்கள் மானியத்திலும் வழங்கப்படுகின்றன. தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தட்டைப்பயிறு விதைகளும், அசோஸ்பைரில்லம், டிரைசோபியம், பாஸ்போபாக்டீரியா முதலிய உயிர் உரங்கள், விதை கிராம திட்டத்தின்கீழ் சோள விதைகளும் 50% மானியத்தில் விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும், அமராவதி வனச் சரகத்தில் உள்ள மலைவாழ் மக்களுக்கு 100 சதவீத மானியத்தில் திட்டங்கள் ஏதும் செயல்படுத்தப்படவில்லை.

67—

வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம்

வினா எண் 33266—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரத்திலுள்ள வேளாண் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

வேளாண்மைத் துறை மறு சீரமைப்பிற்குப் பின் 1-1-2008 முதல் வேளாண்மை உதவி இயக்குநர், பெண்ணாகரம் அலுவலகம்,

2014 ஜூலை 30]

வேளாண்மை விரிவாக்க மையம், பெண்ணாகரம் அலுவலகக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. எனவே, தருமபுரி மாவட்டம், சாலைக்குள்ளாத்திரம்பட்டியில் காவியாகவுள்ள வேளாண்மை உதவி இயக்குநர், பெண்ணாகரம் அலுவலகத்தில் உயிரியல் கட்டுப்பாட்டு அலுவலகத்தை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

68—

தரமான விதைகள் மற்றும் உரங்கள் விநியோகித்தல்

வினா எண் 33517—திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, மானாவாரி விவசாயிகளுக்குத் தரமான விதைகள் மற்றும் உரங்களை அரசு நேரடியாக விநியோகம் செய்திட அவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மானாவாரி பயிர்களோடு அனைத்துப் பயிர்களுக்கும் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம், தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் விதைகள், நுண்ணூட்டச்சத்து, உயிர் உரங்கள் முதலியன மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. இரசாயன உரங்களைப் பொறுத்தமட்டில், அனைத்து விவசாயிகளுக்கும் மத்திய அரசு, மானிய விலையிலேயே வழங்கி வருகிறது. சத்துக்கள் அடிப்படையிலான மானிய திட்ட நடைமுறையினால், உரங்களின் விலை அதிகரிப்பதைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு மதிப்புக் கூட்டப்பட்ட வரியிலிருந்து விலக்கு அளித்துள்ளது. மேலும், மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயிர் சாகுபடி திட்டத்திற்கென 25 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. இது தவிர மண்புழு உர மையம் அமைப்பதற்கென 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. அதாவது ஒரு மையத்திற்கு ரூ.15,000/- மானியமாக வழங்கப்படுகிறது. மானாவாரி பகுதியில் ஈரப்பதத்தை சேமிப்பதற்கென கோடை உழவு செய்யும் விவசாயிகளுக்கு ரூ.2,500/- எக்டேருக்கு மானியம்

வழங்கப்படுகிறது. மானிய விலையில் தார்ப்பாலின்களும் வழங்கப்படுகின்றன. இதற்கான மானியத் தொகை தனி நபருக்கு ரூ.4,000/- வழங்கப்படுகிறது. மேலும், தரமான விதைகள் மற்றும் உரங்கள் விநியோகம் செய்வதை உறுதிசெய்திடும் வகையில் விதை ஆய்வாளர்கள் மற்றும் உர ஆய்வாளர்களால் மாதிரிகள் எடுக்கப்பட்டு, தரம் உறுதி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

69—

கதிரடிக்கும் களம் அமைத்தல்

வினா எண் 34864—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தெண்ணீர்வயல் ஊராட்சி, தெண்ணீர்வயலில் கதிரடிக்கும் களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

காரைக்குடி தொகுதி, தெண்ணீர்வயல் ஊராட்சி, தெண்ணீர் வயலில், கதிரடிக்கும் களம் அமைக்க ஏதுவான நிலம் கிடைக்கும் பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் கதிரடிக்கும் களம் அமைக்கப்படும்.

70—

உலர் நெற்களங்கள் அமைத்தல்

வினா எண் 35721—திரு. வி.எஸ். இராஜி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, இலத்தூர் மற்றும் சித்தாமூர் ஒன்றியங்களில் உலர் நெற்களங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

செய்யூர் தொகுதி, இலத்தூர் மற்றும் சித்தாமூர் ஒன்றியங்களில் உலர்களம் அமைக்க ஏதுவான நிலம் கிடைக்கும் பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் உலர்களம் அமைக்கப்படும்.

71—

வெங்காய விவசாயத்தைப் பாதுகாத்தல்

வினா எண் 35732—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெங்காய விவசாயத்தைப் பாதுகாக்க வேளாண் துறை மூலம் சிறப்புத் திட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வெங்காய விவசாயத்தைப் பாதுகாக்க அரசு பல்வேறு நலத் திட்டங்களை தோட்டக்கலைத் துறை மூலமாக செயல்படுத்தி வருகிறது. இத்துறையின் முக்கிய திட்டங்களான ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம் மற்றும் தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் மூலமாக விதை மற்றும் இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுவதினால், வெங்காய சாகுபடி ஊக்குவிக்கப்பட்டு அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், தேசிய நுண்ணீர்ப் பாசன இயக்கத்தின்கீழ் வெங்காய பயிருக்கு சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளதின்மூலம் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் இதுவரை 422.25 கிலோ வீரிய இரக விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு சுமார் 6.50

[2014 ஜூலை 30

இலட்சம் ரூபாய் வெங்காய சாகுபடிக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் வெங்காயம் சாகுபடியை ஊக்குவிக்க 50 சத மானியமாக ஒரு எக்டருக்கு ரூ.12,500/- வரை மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் கடந்த 2011-2012 ஆம் நிதியாண்டில் 430 எக்டர் பரப்பு விரிவாக்கம் செய்யப்பட்டு 53.75 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. வெங்காய சாகுபடி பரப்பினை மென்மேலும் அதிகரிக்க, வரும் நிதியாண்டிற்கான ஆண்டு செயல்திட்டத்தில் 5,000 எக்டர் பரப்பில் சாகுபடி செய்ய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தேசிய நுண்ணீர்ப் பாசன இயக்கத்தின்கீழ் வெங்காய உற்பத்தித் திறனை அதிகரிக்க 146.12 எக்டர் பரப்பளவில் சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம் அமைப்பதற்காக 45.63 இலட்சம் ரூபாய் மானியமாக 194 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் ஒரு எக்டர் வெங்காய சாகுபடிக்கு ரூ.15,000/- மதிப்புள்ள விதை மற்றும் இதர இடுபொருட்கள் மானியமாக வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆறு ஆண்டுகளில் மொத்தம் 1,545 எக்டர் பரப்பளவில் வெங்காயம் சாகுபடி செய்ய ரூ.231.36 இலட்சம் மதிப்பிலான விதைகள், உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 438 எக்டர் பரப்பளவில் ரூ. 65.70 இலட்சம் செலவில் பரப்பு விரிவாக்கம் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 200 எக்டரில் வெங்காயம் சாகுபடி செய்ய ரூ.29.40 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

72—

உலர்களம் அமைத்தல்

வினா எண் 36718—திரு. சு. ரவி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் தொகுதி, கீழ்ப்பாக்கம் ஊராட்சியில் உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

அரக்கோணம் தொகுதி, கீழ்ப்பாக்கம் ஊராட்சியில் உலர்களம் அமைக்க ஏதுவான நிலம் கிடைக்கும்பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் உலர்களம் அமைக்கப்படும்.

73—

உலர்களம் அமைத்தல்

வினா எண் 37771—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், குறிச்சி கிராமத்தில் உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், குறிச்சி கிராமத்தில் உலர்களம் அமைக்க ஏதுவான நிலம் கிடைக்கும்பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் உலர்களம் அமைக்கப்படும்.

74—

கதிரடிக்கும் களம் அமைத்தல்

வினா எண் 37772—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், அளவிடங்கான் கிராமத்தில் கதிரடிக்கும் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், அளவிடங்கான் கிராமத்தில் கதிரடிக்கும் களம் அமைக்க ஏதுவான நிலம் கிடைக்கும் பட்சத்தில் முன்னுரிமை அடிப்படையில் கதிரடிக்கும் களம் அமைக்கப்படும்.

75—

வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

வினா எண் 38069—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்தில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் விற்பனைக் குழுவின் கட்டுப்பாட்டில் திருப்புவனம் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 1-1-1974 முதல் வாடகைக் கட்டடத்தில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும், தற்போது சொந்தக் கட்டடம் கட்ட ஏதுவாக அரசு புறம்போக்கு நிலம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. நிலம் கையகப்படுத்தியவுடன் அலுவலகம் மற்றும் கிட்டங்கிகள் ஆகியன கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

76—

வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

வினா எண் 38392—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2014 ஜூலை 30]

(அ) தென்காசி தொகுதி, குணராமநல்லூர் ஊராட்சியில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குணராமநல்லூர் ஊராட்சியானது பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கென அறிவிக்கையிடப்பட்ட பகுதியாகும். குணராமநல்லூரில் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு வியாபாரிகளிடமிருந்து அதிக விலை பெற இயலாது என்பதால், இப்பகுதி விவசாயிகள் குணராமநல்லூர் ஊராட்சியிலிருந்து 6 கி.மீ. தூரமேயுள்ள உலர்களம் மற்றும் முழு கூட்டமைப்பு வசதிகளுடன்கூடிய பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினை பயன்படுத்திக்கொள்ளலாம்.

77—

வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

வினா எண் 40256—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழவெள்ளக்கால் ஊராட்சியில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கீழவெள்ளக்கால் ஊராட்சியானது பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கென அறிவிக்கையிடப்பட்ட பகுதியாகும். இங்குள்ள விவசாயிகளின்

[2014 ஜூலை 30

விளைபொருட்களுக்கு வியாபாரிகளிடமிருந்து அதிக விலை பெற இயலாது என்பதால் இப்பகுதி விவசாயிகள் கீழவெள்ளக்கால் ஊராட்சியிலிருந்து 5 கி.மீ. தூரமேயுள்ள உலர்களம் மற்றும் முழு கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய பாவூர்சத்திரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினை பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, தனியாக கீழவெள்ளக்கால் ஊராட்சிக்கென்று வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க தேவையில்லை.

78—

விவசாயிகளை காப்பீட்டுத் திட்டத்தில் சேர்த்தல்

வினா எண் 40631—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பயிர்களுக்கு காப்பீடு வழங்கும் திட்டத்தை விரிவாக்கி அனைத்து விவசாயிகளையும் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் தற்போது வட்டாரம் மற்றும் பிர்கா (குறுவட்டம்) அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மத்திய அரசு கடித எண் 13015/02/2012 கிரடிட்-II, நாள் 1-11-2013-ல் மாற்றியமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீடுத் திட்டம் விரிவுபடுத்த நிருவாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வந்த 3 மாவட்டங்களைத் தவிர (கடலூர், நாமக்கல் மற்றும் சிவகங்கை) அனைத்து 28 மாவட்டங்களுக்கும் இத்திட்டம் தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் கிராம அளவில் பயிர் காப்பீடு செய்யப்படுவதால், விவசாயிகளுக்கு அதிக பயன்கள் கிடைக்கப்பெறும். இத்திட்டம் ரபி 2013-2014 முதல் செயல்படுத்தப்பட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ரபி 2013-2014 பருவத்திற்கு மட்டும் 20 ஹெக்டேர் பயிர் பரப்பு மற்றும் அதற்கு மேலுள்ள கிராமங்களை அறிவிக்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், விவசாயிகள் அதிக பயனடைவர் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

2014 ஜூலை 30]

79—

கேழ்வரகு பயிரிடும் விவசாயிகளை ஊக்குவித்தல்

வினா எண் 40751—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் கேழ்வரகு பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநில அரசு திட்டமான விதை பெருக்குத் திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் சிவகங்கை மாவட்டத்திற்கு 2,000 கிலோ கேழ்வரகு உற்பத்தி செய்வதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண் 180, வேளாண்மைத் (வே.உ.2) துறை, நாள் 30-8-2013-ன்படி உற்பத்தி செய்யப்படும் சிறுதானிய ஆதார விதைகளுக்கு ஒரு கிலோவிற்கு ரூ.4/-ம், சான்றுபெற்ற விதைகளுக்கு ஒரு கிலோவிற்கு ரூ.3/-ம் ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது. கொள்முதல் செய்த விதைகள் விதை கிராமத் திட்டத்தின்மூலம் 50% மானியத்தில் விநியோகம் செய்யப்படுகின்றன.

80—

புதிய கட்டடம் கட்டுதல்

வினா எண் 41438—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தினை ஆய்வு செய்து சீரமைக்க அல்லது புதிய கட்டடம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

81—

விவசாயிகளுக்கு விலையில்லா விதைகள் வழங்குதல்

வினா எண் 41473—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் கம்பு, சாமை, குதிரைவாளி, கேழ்வரகு, வரகு போன்ற சிறுதானியங்கள் மற்றும் துவரை, உளுந்து பயிரிடும் விவசாயிகளுக்கு விலையில்லா விதைகளும் பயறு வகை விதைகளும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2013-2014 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தீவிர சிறுதானிய சாகுபடிமூலம் ஊட்டச்சத்து பாதுகாப்பினை ஏற்படுத்துதல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சிறுதானிய பயிர்களான சோளம், கம்பு, கேழ்வரகு, பயிர்களுக்கு 1,000 எக்டரும், வரகு, பனிவரகு, தினை மற்றும் சாமை பயிர்களுக்கு 200 எக்டரும் செயல் விளக்க தளை தொகுப்புகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கான இடுபொருட்கள் மற்றும் விதைகள் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களுக்கு விலையின்றி வழங்கப்படுகிறது. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி மானாமதுரையை உள்ளடக்கிய சிவகங்கை மாவட்டம் மேற்கூறிய திட்டத்தைச் செயல்படுத்த தேர்தெடுக்கப்படும் பட்சத்தில் இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2014 ஜூலை 30]

82—

பயறு மகசூலை அதிகரித்தல்

வினா எண் 42857—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் பயறு மகசூலை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மானாமதுரை தொகுதியில், நடப்பு ஆண்டில் (2013-2014) இதுவரை 31 எக்டரில் பயறுவகை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சராசரி மகசூல் ஒரு எக்டரில் 647 கிலோ ஆகும். பயறு வகைகளின் மகசூலை அதிகரிக்க கீழ்க்காணும் வகைகளில் விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்:

(1) விதைப் பண்ணை அமைக்கும் விவசாயிகளுக்கு கொள்முதல் மானியம் வழங்கப்படுகிறது.

(2) துவரை நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு மானியம் ரூ.7,500/- வழங்கப்படுகிறது.

(3) தேசிய உணவுப் பாதுகாப்பு (பயறு) திட்டத்தின்மூலம் பயறு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உளுந்து, தட்டைப் பயறு பயிரிடுவதற்குத் தேவையான இடுபொருட்கள் 50% மானிய விலையில் வழங்கப்படுகிறது.

83—

பகுத்தாள் உரம் தயாரித்தல்

வினா எண் 42858—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) மானாமதுரை தொகுதியில் இயற்கை வழி பசுந்தாள் உரம் தயாரிக்கும் விவசாயிகளை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பசுந்தாள் உரப் பயிர்களின் பயன்பாட்டினை அதிகரிக்கும் பொருட்டு விவசாயிகளுக்கு பசுந்தாள் உரப் பயிர்களின் பண்புகள் மற்றும் பயன்கள் குறித்த விளக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் தமிழகத்தில் 250 மெட்டன் பசுந்தாள் உரவிதைகள் ரூ.100 இலட்சம் செலவில் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் சுமார் 5,000 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், பசுந்தாள் உரம் தயாரிக்க மானியத் திட்டம் ஏதும் தற்போது மானாமதுரை தொகுதியில் செயல்படுத்தப்படவில்லை.

84—

நெல் விவசாயத்தினை மேம்படுத்துதல்

வினா எண் 43185—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நெல் விவசாயத்தினை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 2013-2014 ஆம் ஆண்டிற்கு நெல் விவசாயத்தினை மேம்படுத்த தேசிய வேளாண் வளர்ச்சித் திட்ட நிதியின்கீழ் நெல் இயக்கம் ரூ.11.50 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் தரமான சான்று விதைகள் ஒரு கிலோவிற்கு ரூ.5/- என்ற மானியத்திலும், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்ப செயல் விளக்கத்திற்காக ஒரு எக்டேருக்கு ரூ.1,500/- மதிப்புள்ள

2014 ஜூலை 30]

இடுபொருட்கள் மானியத்திலும், ரூ.1,500/- பின்னேற்பு நடவு மானியமும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இம்மாவட்டத்தில் 1,000 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி செயல்விளக்கம் ரூ.12 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

85—

நிலுவைப் பணப் பயன்கள் கிடைத்தல்

வினா எண் 20799—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, டெக்ஸ்டைல் மில்லில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய நிலுவைப் பணப் பயன்கள் கிடைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் நிறுவனத்தைக் கலைக்க உத்தரவிடப்பட்டு, உயர் நீதிமன்றம் நியமித்த மத்திய அரசின் நிறுவனங்கள் பொதுத் துறை அலுவலர், கலைத்தல் அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிறுவனம் அமைந்துள்ள நிலத்தினை மீண்டும் ஏலத்திற்கு விட நடவடிக்கை எடுத்து வருவதாக கலைப்பு அதிகாரி தெரிவித்துள்ளார். நிறுவனத்திற்கென உள்ள நிலத்தை ஏலத்தில் விற்பதால் அல்லது வேறு வகையில் பயன்படுத்துவதால் பெறும் தொகையைக் கொண்டே தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய தொகைகளை வழங்க வழிவகையுள்ளது.

86—

தமிழில் விலைப் பட்டியல் வைத்தல்

வினா எண் 25424—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) தமிழகத்தில் பலசரக்குக் கடைகள் மற்றும் வணிக வளாகங்களில் தமிழில் விலைப் பட்டியல் வைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழில் விலைப் பட்டியல் வைக்காத நிறுவனங்களின்மீது நடவடிக்கை தொடர சட்டமுறை எடையளவு சட்டம், 2009 மற்றும் சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள் 2011-ன்கீழ் வழிவகை இல்லை. கடைகள் மற்றும் நிறுவனச் சட்டத்தின்கீழ் தமிழில் பெயர்ப் பலகை வைக்காத வணிக நிறுவனங்களின்மீது மட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் உள்ள பலசரக்குக் கடை மற்றும் வணிக வளாகங்களில் தமிழில் விலைப் பட்டியல் வைப்பது தொடர்பாக இப்பொழுது உள்ள சட்டம்/விதிகளின்படி நடவடிக்கை தொடர இயலாத நிலை உள்ளது.

88—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 37344—திரு. செ. காமராஜ்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, வீரராக்கியம் முடக்கு சாலை முதல் புலியூர் காந்தி கிராமம் மற்றும் கரூர் வரை உள்ள சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, வீரராக்கியம் முடக்கு சாலை முதல் புலியூர் காந்தி கிராமம் மற்றும் கரூர்

2014 ஜூலை 30]

வரை உள்ள சாலையில் கி.மீ.203/530-213/9 வரை உள்ள பகுதியை 2013-2014 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சீரமைக்க ரூ.14.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பணி விரைவில் துவங்கப்படும்.

89—

குடும்ப அட்டையில் மாற்றம்

வினா எண் 2117—ஆ—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எந்த பொருளும் பெற விருப்பமில்லாத குடும்ப அட்டைதாரர்கள் உடனடியாக வகை மாற்றம் செய்து கொள்ளும் முறையினை நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

எப்பொருளும் வேண்டாத "N" குடும்ப அட்டைகளையும் (வெள்ளைநிறம்) இருப்பிட ஆதாரமாகப் பெறப்படும் "N" விரைவு (தக்கல்) குடும்ப அட்டைகளையும், (மஞ்சள் நிறம்) மீண்டும் பொருள் பெறும் குடும்ப அட்டையாக மாற்ற இயலாது என ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி குடும்ப அட்டைகள் மனுதாரர்களின் விருப்பத்தின் பேரில்தான் வழங்கப்படுகின்றன. இந்த குடும்ப அட்டைகளைப் பயன்படுத்தி நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருள்கள் பெற முடியாது. இருப்பிட ஆதாரத்திற்கான ஆவணமாக மட்டுமே பயன்படுத்த முடியும். இத்தகைய குடும்ப அட்டைகளைப் பயன்படுத்தி பிற இடங்களில் அத்தியாவசியப் பொருள்கள் பெறத்தக்க அரிசி/சர்க்கரை விருப்ப குடும்ப அட்டைகளைப் பெற முடியாது. மேலும், இத்தகைய குடும்ப அட்டைகளைப் பயன்படுத்தி பின்னர் அத்தியாவசியப் பொருள்கள் பெறத்தக்க குடும்ப அட்டையாக மாற்ற இயலாது என்ற நிபந்தனைகளின் அடிப்படையில்தான் மேற்படி குடும்ப அட்டை வழங்கப்படுகிறது.

90—

உணவுப் பொருட்கள் விற்பனை

வினா எண் 16918—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் கடைகளை பதிவு செய்த பிறகு விற்பனைக்கு அனுமதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் வாயிலாக இயங்கி வருகின்ற அனைத்து அமுதம் சில்லரை அங்காடிகளும் மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடிகளும் முறைப்படி பதிவு செய்யப்பட்டு உணவுப் பொருள் பாதுகாப்பு மற்றும் தரச் சட்டம் 2006-ன்கீழ் உரிமம் பெறுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் அவற்றின் உரிமங்கள் (License) புதுப்பிக்கப்பட்டு வருவதால், உணவுப் பொருட்களை விற்பனை செய்திட அனுமதிக்கப்பட்டு, விற்பனை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

91—

மதிப்புக் கூட்டு வரியை திருப்பி வழங்குதல்

வினா எண் 44076—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், தோல் மற்றும் தோல் பொருள் தொழிற்சாலைகளால் செலுத்தப்பட்ட மதிப்புக் கூட்டு வரியை திருப்பி தொழிற்சாலைகளுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தோல் மற்றும் தோல் பொருள் தொழிற்சாலைகளால் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு கொள்முதலில் செலுத்தப்பட்ட மதிப்புக் கூட்டு வரி, உரிய சட்ட விதிகளின்படி, Form-W மூலம் கோரிய வணிகர்களுக்கு திருப்பி வழங்கப்படுகிறது. மேலும், வேலூர் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட தோல் தொழிற்சாலைகளுக்கு 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.41.37 கோடியும், 2013-2014 ஆம் ஆண்டில் ரூ.18.01 கோடியும் திருப்புத் தொகை வழங்கப்பட்டுள்ளது. தற்போது ரூ.48.09 கோடிக்கான நிலுவையில் உள்ள Form-W மனுக்கள் தொடர்பாக அனுப்பப்பட்ட தாக்கீதுமீது வணிகர்கள் உரிய பதில் அளிக்கும்பட்சத்தில், நிலுவையிலுள்ள மனுக்கள் தொடர்பான தொகை மார்ச் 2014-க்குள் உரிய சட்ட விதிகளின்படி திரும்ப வழங்கப்படும்.

92—

கால்நடை தீவனப் பயிர்கள் வளர்ப்பு குறித்த ஆலோசனை

வினா எண் 1557—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதியில் கால்நடை தீவனப் பயிர்கள் வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். 2011-2012 தீவன உற்பத்தி விரைவுபடுத்தும் திட்டத்தின்கீழ் சிவகங்கை மாவட்டத்தில் 15 விவசாயிகளுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்மூலம் தீவனப் பயிர்

[2014 ஜூலை 30

வளர்ப்பு பற்றி சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாநிலம் முழுவதும் 300 விவசாயிகள் பயிற்சி பெற்றுள்ளனர். மேலும், 2012-2013-ல் மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சிவகங்கை மாவட்டத்தில் 1,003 விவசாயிகளுக்கு தீவனப் பயிர் வளர்ப்புப் பற்றி ஆலோசனை மற்றும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாநிலம் முழுவதும் 44,363 விவசாயிகள் பயிற்சி பெற்றுள்ளனர்.

93—

அசோலா தீவனம் குறித்த ஆலோசனை

வினா எண் 20595—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைகளுக்கு அசோலா தீவனத்தைப் பயன்படுத்துவது பற்றி விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 7,934 விவசாயிகளுக்கும், மாநில தீவன அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 44,363 விவசாயிகளுக்கும், அசோலாவை கால்நடைகளுக்கு தீவனமாகப் பயன்படுத்துவது குறித்தும், அதன் பயன்பாடு குறித்தும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

94—

கற்றுச் சுவர் கட்டுதல்

வினா எண் 27689—திரு. சு. ரவி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் மற்றும் தக்கோலம் கால்நடை மருந்தகங்களுக்கு நபார்டு திட்டத்தின்மூலம் சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் கால்நடை மருந்தகம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு இயங்கி வருகிறது. தக்கோலம் கால்நடை மருந்தகம் நபார்டு ஆர்.ஐ.டி.எப். XVII திட்டத்தின்கீழ் ரூ.26.66 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்டு வருகிறது, மேலும், 2013-2014 ஆம் ஆண்டுக்கு புதிய திட்டத்தின்கீழ் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறப்படும்போது அரக்கோணம் மற்றும் தக்கோலம் கால்நடை மருந்தகங்களுக்கு சுற்றுச் சுவர் கட்ட பரிசீலிக்கப்படும்.

95—

தொற்றுநோய் பாதுகாப்பு மற்றும் ஈட்டுப்படி

வினா எண் 37090—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கால்நடை ஆய்வாளர்கள் அனைவருக்கும் தொற்றுநோய் பாதுகாப்பு ஈட்டுப் படி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கால்நடை மருத்துவமனைகளில் கால்நடை உதவி மருத்துவர்களுடன் பணிபுரியும் கால்நடை ஆய்வாளர்களுக்கு தொற்றுநோய் பாதுகாப்பு ஈட்டுப் படிக்கு நிகரான ஆபத்து ஈட்டுப் படி வழங்கப்பட்டு வருகிறது.

[2014 ஜூலை 30

96—

பர்கூர் இன கால்நடைகளைப் பாதுகாத்தல்

வினா எண் 39285—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் இன கால்நடைகளைப் பாதுகாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஆம். பர்கூர் இன கால்நடைகளை அழிந்து விடாமல் பாதுகாக்கும் பொருட்டு 3 எண்ணிக்கை பர்கூர் இன பொலிகாளைகள் ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் பராமரிக்கப்பட்டு, அக்காளைகளில் இருந்து விந்துகள் சேகரிக்கப்பட்டு உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பர்கூர் இன கால்நடைகள் அதிகம் உள்ள ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் பர்கூர் இன உறைவிந்து குச்சிகள்மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், பருஇ இரண்டு திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் உள்நாட்டினங்களைப் பாதுகாக்க ரூ10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் பர்கூர் கால்நடைகளும் அடங்கும். இக்கால்நடை வளர்க்கும் விவசாயிகளை ஊக்குவிக்கவும், அவ்வினத்தைப் பற்றி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், அதன் சிறப்புகளை விளக்க, விளம்பரம் மற்றும் கால்நடை கண்காட்சிகள் நடத்த கால்நடை பராமரிப்புத் துறை திட்டமிட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழாது.

2014 ஜூலை 30]

97—

வெண் பன்றிகள் வளர்த்தல்

வினா எண் 42301—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் வெண் பன்றிகள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மானாமதுரை தொகுதி அமைந்துள்ள சிவகங்கை மாவட்டத்தில் வெண் பன்றி வளர்ப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு, செட்டிநாட்டில் அமைந்துள்ள அரசு மாவட்ட கால்நடைப் பண்ணையில் வெண் பன்றிகள் வளர்க்கப்பட்டு, விருப்பமுள்ள, ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு வெண் பன்றி வளர்க்கத் தேவையான வெண் பன்றிகள் அரசு நிர்ணயித்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

(ஆ) எழாது.

98—

ஆலம்பாடி வகை மாடுகளைப் பாதுகாத்தல்

வினா எண் 42992—திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலம்பாடி வகை மாடுகளைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசு, பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் 2014-2015 ஆம் ஆண்டில் ரூ.29 இலட்சம் செலவில் கருத்தரங்கம் மற்றும் கால்நடை கண்காட்சி நடத்த முன்மொழியப்பட்டுள்ளது. அதில், ஆலம்பாடி வகை கால்நடைகளும் உள்ளடங்கும். ஆலம்பாடி மாடு வளர்க்கும் விவசாயிகளை ஊக்குவிக்கவும், அவ்வினத்தைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அதன் சிறப்புகளை விளக்க, விளம்பரம், கால்நடை கண்காட்சி, கருத்துப் பட்டறைகள் நடத்த கால்நடை பராமரிப்புத் துறை திட்டமிட்டுள்ளது.

99—

மின் விளக்குகள் சீரமைத்தல்

வினா எண் 34482—திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தைச் சுற்றியுள்ள மின் விளக்குகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் உபகோயிலான மதுரை நகர், தெப்பக்குளம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலின் அருகில் உள்ள தெப்பக்குளத்தில் மிக விமர்சையாக தெப்பத் திருவிழா நடைபெறும். தெப்பக்குளத்தினைச் சுற்றி சுற்றுலா நிதிமூலம் மின் விளக்குகள் மதுரை மாநகராட்சியினரால் அமைக்கப்பட்டு

2014 ஜூலை 30]

அவர்கள் பராமரிப்பில் தற்போது சீரமைக்கப்பட்டு, விளக்குகள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

100—

திருக்குளத்தைச் சுத்தம் செய்தல்

வினா எண் 34844—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி நகரிலுள்ள முத்தாளம்மன்கோவில் திருக்குளத்தின் நான்கு கரைகளுக்கும் தடுப்புச் சுவர் அமைத்து திருக்குளத்தைச் சுத்தம் செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகர், அருள்மிகு முத்தாளம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக்குளத்தின் நான்கு கரைகளுக்கும் தடுப்புச்சுவர் அமைத்தல் உள்ளிட்ட சீரமைப்புப் பணிகளைச் செய்திட திருக்கோயிலில் போதிய நிதி வசதியில்லை. எனவே, இப்பணியை உபயதாரர்கள்மூலம் மேற்கொள்ள திருக்கோயில் நிருவாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

(பேரவைத் கூட்டத் தொடர் முடியும்வரை தொடர்புடைய உறுப்பினர்கள் நீக்கம் செய்ப்பெற்றுள்ளதால் வரிசை எண் 87 தொடர்புடைய வினா-விடைகள் இப்பட்டியலில் இடம் பெறவில்லை.)

[2014 ஜூலை 30

பட்டியல் 6

1—

மணல் எடுப்பதைத் தடுத்தல்

வினா எண் 35272—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், வைப்பாற்றில் மணல் எடுப்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) விருதுநகர் வைப்பாறு வடிநிலக் கோட்ட நிருவாக வரம்பில் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் மற்றும் எட்டையபுரம் வட்டங்களில் அமைந்துள்ள வைப்பாற்றில் சட்டத்திற்குப் புறம்பாக மணல் எடுப்பதைத் தடுக்க காவல் துறை, வருவாய்த் துறை அலுவலர்களின் ஒத்துழைப்புடன் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

2—

மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 32095—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், புதுக்கோட்டை மதுரா செங்கம்பூண்டியில் அமைந்துள்ள குறவர் காலனிக்கு புதிய மின் கம்பங்களுடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், புதுக்கோட்டை மதுரா செங்கம்பூண்டியில் அமைந்துள்ள குறவர் காலனிக்கு புதிய மின் கம்பங்களுடன்கூடிய மின் விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

3—

மின்விளக்குகள் அமைத்தல்

வினா எண் 32139—திரு. ஏ.எ. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், புதுக்கோட்டை மதுரா ஓட்டர் காலனி அனைத்துப் பகுதிகளிலும், புதுக்கோட்டை ஊராட்சி, புதுக்கோட்டை காலனி, சடந்தாங்கல் கூட்ரோட்டு, முதல் புதுக்கோட்டை வரை மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், புதுக்கோட்டை மதுரா ஓட்டர் காலனி அனைத்துப் பகுதிகளிலும் 3 குழல் விளக்குகளும், புதுக்கோட்டை ஊராட்சி, புதுக்கோட்டை காலனியில் 16 குழல் விளக்குகளும், சடந்தாங்கல் கூட்ரோடு முதல் புதுக்கோட்டை வரை 21 குழல் விளக்குகளும் ஏற்கெனவே அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி, பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2014 ஜூலை 30

4—

மின் கம்பங்களை மாற்றியமைத்தல்

வினா எண் 32434—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், கடற்கரையோரமாக உள்ள மின் கம்பங்களை மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், கடலோர கிராமங்களில் பழுதடைந்துள்ள 54 மின் கம்பங்கள் ஏப்ரல் 2013 முதல் மாற்றப்பட்டுள்ளன. மேலும், அவ்வப்போது பழுதடையும் மின் கம்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு, உடனுக்குடன் மாற்றப்பட்டு வருகின்றன.

5—

தெரு விளக்கு அமைத்தல்

வினா எண் 33868—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், சருகணி ஊராட்சி, சருகணி-கோபாலபுரம் இடையே கண்மாய் கரையில் மின் கம்பத்துடன்கூடிய தெரு விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், சருகணி ஊராட்சி, சருகணி-கோபாலபுரம் இடையே கண்மாய் கரையில் மின் கம்பத்துடன்கூடிய தெரு விளக்கு அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை.

2014 ஜூலை 30]

விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

6—

தெரு விளக்கு அமைத்தல்

வினா எண் 33923—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், காவதுகுடி ஊராட்சிக்குட்பட்ட விரிசூர் கிராமத்தில் கொத்தன் வீடு மற்றும் முனீஸ்வரர்கோயில் அருகிலும், ஆண்டிவயல் மற்றும் நக்கனிகரை சாலையிலுள்ள தர்மமுனீஸ்வரர் கோயில் அருகிலும், காவதுகுடி அய்யனார் கோயில் அருகிலும் புதிய மின் கம்பத்துடன் கூடிய தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், காவதுகுடி ஊராட்சிக்குட்பட்ட விரிசூர் கிராமத்தில் கொத்தன் வீடு மற்றும் முனீஸ்வரர்கோயில் அருகிலும், ஆண்டிவயல் மற்றும் நக்கனிகரை சாலையிலுள்ள தர்மமுனீஸ்வரர் கோயில் அருகிலும், காவதுகுடி அய்யனார் கோயிலுக்கு அருகிலும் புதிய மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

மின் கம்பியாளர் நியமனம்

வினா எண் 34459—மு.னைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஒன்றியம், காஞ்சிரங்குடி ஊராட்சி பகுதிக்கு மின் கம்பியாளரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்புல்லாணி ஒன்றியத்தில் உள்ள காஞ்சிரங்குடி கிராமம், இராமநாதபுர ஊரக உபகோட்டத்தின்கீழ் இயங்கிவரும் இராமநாதபுரம் ஊரகப் பிரிவிற்கு உட்பட்டதாகும். மேற்படி பகுதிக்கு அப்பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட களப்பணியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு, அப்பகுதியில் வாரிய களப்பணிகளை திறம்பட செய்து வருகிறார். எனவே, காஞ்சிரங்குடி பகுதிக்கு மேலும் ஒரு புதிய மின்கம்பியாளரை நியமிக்க அவசியம் எழவில்லை.

8—

மின்கம்பங்களை மாற்றியமைத்தல்

வினா எண் 34809—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், மேல கோட்டை கிராமம் மற்றும் தளுதனூர் ஆதி திராவிடர் காலனியில் பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், தளுதனூர் ஆதி திராவிடர் காலனியில் பழுதடைந்த 2 எண்ணம் மின் கம்பங்கள் 27-7-2013 அன்று மாற்றப்பட்டுவிட்டன. மேலும், காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம்,

2014 ஜூலை 30]

மேலகோட்டை கிராமத்தில் பழுதான மின் கம்பங்கள் தொடர்பாக, இடத்தினை ஆய்வு செய்து, மதிப்பீடு தயார் செய்து, பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9—

மின் கம்பிகளை சீரமைத்தல்

வினா எண் 37706—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் அருகிலுள்ள கோழியாளம் ஊராட்சியில் பம்பைபட்டு, மதுரை காலனி ஆகிய கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களில் மின் கம்பிகள் தாழ்வாகச் செல்வதை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் அருகிலுள்ள கோழியாளம் ஊராட்சியில் பம்பைபட்டு மற்றும் மதுரை காலனி ஆகிய கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களில் மின் கம்பிகள் தாழ்வாகச் செல்லும் இடங்கள் கண்டறியப்பட்டு, சீர்செய்யப்பட்டன. மதுரை காலனியில் இரண்டு இடங்களில் அதிக தூரம் இடைவெளி விட்டு அமைக்கப்பட்ட மின் கம்பங்களுக்கு இடையில் புதிய மின் கம்பங்கள் நடப்பட்டு இடைவெளி குறைத்து மின் கம்பிகள் தாழ்வாகச் செல்வதை இழுத்து சீர்செய்து முடிக்கப்பட்டது. மேலும், பம்பைபட்டு என்ற இடத்தில் மூன்று இடங்களில் தாழ்வாகச் சென்ற மின் கம்பிகளை இழுத்து உயரத்தில் அமைத்து சீர்செய்து முடிக்கப்பட்டுவிட்டது.

10—

மின் கம்பத்தை மாற்றியமைத்தல்

வினா எண் 36114—திருமதி ர. சுபா: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) கெங்கவல்லி தொகுதி, சதாசிவபுரம் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர் காலனிப் பகுதியில் நடுவீதியில் உள்ள மின் கம்பத்தை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், சதாசிவபுரம் ஆதி திராவிடர் காலனிப் பகுதியில் நடுவீதியில் இருந்த மின் கம்பம் பொதுமக்களுக்கும், சாலை போக்குவரத்திற்கும் இடையூறாக இருந்தது கண்டறியப்பட்டது. எனவே, 12-8-2013 அன்று மேற்படி கம்பம் சாலை ஓரத்தில் மாற்றியமைக்கப்பட்டுவிட்டது.

11—

குழல் அல்லது சோடியம் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 38139—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, குணராமநல்லூர் ஊராட்சிக்கு மின் கம்பத்துடன்கூடிய குழல் விளக்குகள் அல்லது சோடியம் விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, குணராமநல்லூர் ஊராட்சிக்கு மின் கம்பத்துடன்கூடிய குழல் விளக்குகள் அல்லது சோடியம் விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத்

2014 ஜூலை 30]

தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

12—

மின் கம்பங்களை மாற்றியமைத்தல்

வினா எண் 38351—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, கணபதிபாளையம் மின் வாரியம், குன்னாங்கல்பாளையம் இறிஸ்டியன் காலனியில் பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, கரைப்புதூர் ஊராட்சி, கணபதிபாளையம் மின் வாரியம், குன்னாங்கல்பாளையம் இறிஸ்டியன் காலனியில் உள்ள மின் கம்பங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அவை நல்ல நிலையிலுள்ளன.

13—

மின் கம்பிகளை மாற்றியமைத்தல்

வினா எண் 38365—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கணபதிபாளையம் ஊராட்சி, குங்குமம்பாளையம் விநாயகர் நகரில் வீட்டுக் கூரைகளின்மீது செல்லும் மின் கம்பிகளை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கணபதிபாளையம் ஊராட்சி, குங்குமம்பாளையம் விநாயகர் நகரில் வீடுகளுக்கு மேல் செல்லும் தாழ்வழுத்த மும்முனை மின்பாதையானது சுமார் இருபது வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்டதாகும். அதன் பின்னர்தான், அப்பகுதியில் வீடுகள் கட்டப்பட்டன. தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித் தொகுப்பு 57-ன்படி மின்னிணைப்புமின்தொடர் இடமாற்றுவதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முன்கூட்டியே முழுமையாகக் கட்டி விட வேண்டும். அத்தொகை கட்டப்பட்ட பிறகே, இடமாற்றப் பணி தொடங்கப்படும். எனவே, வீட்டுக் கூரைகளின்மீது செல்லும் மின் கம்பிகளை மாற்றியமைக்க, குடியிருப்போர் உரிய விண்ணப்பம் அளித்து, மதிப்பீட்டுத் தொகையை செலுத்தும்பட்சத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14—

மின் இணைப்புக்கான வைப்புத் தொகை

வினா எண் 41397—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதிய கட்டுமானப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் மின் இணைப்புக்கு வைப்புத் தொகை ரூ.50,000/- என்பதை மாற்றி, 1 யூனிட்டிற்கு 5 ரூபாய் என்ற அளவில் வசூலிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், வைப்புத் தொகை வசூலிப்பதை அரசு கைவிட நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மின்சாரம் சட்டம் 2003, பிரிவு 62-ன்படி புதிய கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் மின் இணைப்புக்கு மின் கட்டணம் நிர்ணயம் செய்யும் அதிகாரம்

2014 ஜூலை 30]

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் உள்ளது. தாழ்வழுத்த வகையைச் சார்ந்த புதிய கட்டுமானப் பணிகளுக்கு மின் கட்டண வைப்புத் தொகையானது மற்ற வகை உபயோகிப்பாளர்களிடம் வசூல் செய்யும் அளவான ஒருமுனை மின் இணைப்புக்கு ரூ.200/- மற்றும் மும்முனை இணைப்புக்கு ரூ.600/- கிலோ வாட் வீதம் என்கிற அளவில் மட்டுமே வசூல் செய்யப்படுகிறது. எனவே, ரூ.50,000/- என்கிற ஒரே அளவில் வைப்புத் தொகை வசூல் செய்யப்படுவதில்லை. ஆனால், மின் கட்டணமாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி யூனிட் ஒன்றுக்கு ரூ.0.50 வீதம் வசூல் செய்யப்படுகிறது.

15—

மின் கம்பத்தை மாற்றியமைத்தல்

வினா எண் 42997—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், மங்களம் கிராம ஊராட்சியில் மலைக்கோவில் இணற்றின் அருகேயுள்ள இரண்டு பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், மங்களம் கிராம ஊராட்சி மலைக்கோவில் இணற்றின் அருகேயுள்ள ஒரு பழுதடைந்த மின் கம்பம் 27-1-2014 அன்று மாற்றப்பட்டுவிட்டது. மற்ற கம்பங்கள் நல்ல நிலையில் உள்ளன.

16—

மின் கம்பத்தை மாற்றியமைத்தல்

வினா எண் 43002—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஒன்றியம், இருவாய் ஊராட்சி, இருவாயிலிருந்து சீரணம்பாளையம் சாலை, கிருஷ்ணமூர்த்தி வீடு அருகிலுள்ள பழுதடைந்த மின் கம்பத்தை மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஒன்றியம், இருவாய் ஊராட்சி, இருவாயிலிருந்து சீரணம்பாளையம் சாலை, கிருஷ்ணமூர்த்தி வீடு அருகிலிருந்த பழுதடைந்த மின் கம்பம் 21-1-2014 அன்று மாற்றப்பட்டுவிட்டது.

17—

இடுகாட்டுக்கு மின் விளக்கு

வினா எண் 13971—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, காஜிவாடையிலுள்ள முகமதியர்கள் இடுகாட்டுக்கு மின் விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி நகரம், காஜிவாடை பகுதியில் உள்ள முகமதியர்கள் இடுகாடு, அப்பகுதியில் உள்ள மசூதியின் உட்பகுதியில் அமைந்துள்ளது. மேலும், இது இஸ்லாமிய மக்களின் சுட்டுப்பாட்டில் (தனியார்) உள்ளதால், அவ்விடத்தில் நகராட்சியின் மூலம் மின் விளக்கு அமைக்க இயலாது.

2014 ஜூலை 30]

18—

தனி நீதிமன்றம் அமைத்தல்

வினா எண் 20007—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் மற்றும் குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை விசாரிக்க அனைத்து மாவட்டங்களிலும் தனி நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டம், 1989 மற்றும் குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955 ஆகிய சட்டங்களின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் 8 மாவட்டங்கள் மற்றும் 3 காவல் ஆணையரகங்களை அதிகார எல்லையாகக் கொண்டு செயல்படுகின்றன. அரசாணை (நிலை) எண் 793, உள்(நீ.ம-2), நாள் 7-10-2013-ன்படி மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் இரு சிறப்பு நீதிமன்றங்கள் விழுப்புரம் (கடலூருடன் சேர்த்து) மற்றும் சிவகங்கை (இராமநாதபுரத்துடன் சேர்த்து) அமைப்பதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இதர மாவட்டங்களில், அந்தந்த மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றங்களில் மேற்குறிப்பிட்ட சட்டங்களின் கீழ் வரும் வழக்குகளில் விசாரணை மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் சட்டங்களின்கீழ் பதிவாகும் வழக்குகளை விசாரிக்க, மேற்குறிப்பிட்ட மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங்களில் தனி நீதிமன்றங்கள் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

19—

சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல்

வினா எண் 25231—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 8-வது வார்டுக்குட்பட்ட ஜெகஜீவன்ராம் ரோடு பிரதான சாலையிலும், 36-வது வார்டு முனுசாமித் தெரு கோயில் அருகிலும் ஒரு ஆழ்துளைக் கிணறு மற்றும் மின் மோட்டார் அமைத்து, ஒரு சின்டெக்ஸ் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகராட்சியில் வார்டு எண் 8 ஜெகஜீவன்ராம் ரோடு பிரதான சாலையிலும், 36-வது வார்டு, முனுசாமித் தெரு கோயில் அருகிலும் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, கைப்பம்பு பொருத்தப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளதால், தற்போது மின் மோட்டார் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

20—

குடிநீர் இணைப்பு

வினா எண் 25267—திரு. சு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 27-வது வார்டு, புதுப்பேட்டை ரோடு, இரயில் நிலையம் செல்லும் வழியின் இடதுபுறம் உள்ள குடிநீர் பைப்லைனில் குடிநீர் இணைப்பு ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரம், 27-வது வார்டு, புதுப்பேட்டை ரோடு, இரயில் நிலையம் செல்லும் வழியில் இடதுபுறம் உள்ள குடிநீர் பைப்லைனில் இணைப்புகள் வழங்கப்பட்டு, குடிநீர் சீராக முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

21—

புதிய ஊராட்சி

வினா எண் 35004—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, முட்டம் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, கடியப்பட்டணம் என்ற புதிய ஊராட்சியை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மூலமாக தீர்மானம் உள்ளிட்டவை இயற்றப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையுடன் அரசிடம் கிடைக்கப்பெறும் பட்சத்தில், அக்கருத்துருக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். குளச்சல் தொகுதி, முட்டம் ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, கடியப்பட்டிணம் என்ற புதிய ஊராட்சியை உருவாக்க கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2014 ஜூலை 30

22—

மழைநீர் வடிகால் பணி

வினா எண் 39511—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, புளியந்தோப்பு, அம்பேத்கர் சாலையில் மழைநீர் வடிகால் பணியை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, புளியந்தோப்பு, டாக்டர் அம்பேத்கர் சாலையில் 2.50 மீ. மற்றும் 1.50 மீ. அளவுள்ள ஆர்.சி.சி. பெட்டக வடிவமைப்பு கொண்ட மழைநீர் வடிகால்வாய் சுமார் 300 மீட்டர் நீளத்திற்கு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது தற்போது நல்ல பயன்பாட்டில் இருந்து வருகின்றது.

23—

கழிவுநீர் விடப்படுவதைத் தவிர்த்தல்

வினா எண் 39802—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, திருவேற்காடு பகுதியில் உள்ள ஆற்றுப் பாலத்தின் அடியில் கழிவுநீர் விடப்படுவதைத் தவிர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவேற்காடு நகராட்சிப் பகுதியில் கழிவுநீர் அகற்றும் வாகனம் பயன்படுத்தும் அனைத்து உரிமைதாரர்களையும் அழைத்து, மேற்படி கழிவுநீரை ஆற்றுப் பாலத்தில் விடுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும், கோயம்பேடு பகுதியில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மேற்படி கழிவுநீரை விட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. எனவே, தற்போது ஆற்றுப் பாலத்தில் கழிவுநீர் விடப்படுவதில்லை.

24—

படித்துறை அமைத்தல்

வினா எண் 41876—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சி, 21-வது வார்டு, நைனாரி குளத்திற்கு படித்துறை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சி, 21-வது வார்டு, நைனாரி குளத்தில் பழைய படிக்கட்டுகள் போதுமானதாகவும், திருப்திகரமாகவும் உள்ளதால், புதிதாக படித்துறை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

25—

விவசாயிகள் கூட்ட அரங்கு

வினா எண் 36279—திரு. கூ. ரவி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரில் விவசாயிகள் கூட்ட அரங்கு (Farmers Meeting Hall) அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் நகரில் விவசாயிகள் கூட்ட அரங்கு (Farmers Meeting Hall) அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

26—

உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம்

வினா எண் 36266—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு நெடுஞ்சாலைத் துறை உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு உதவிக் கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

2014 ஜூலை 30]

27—

சாலையை சீரமைத்தல்

வினா எண் 42873—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், இளையான்குடி இந்திரா நகரிலிருந்து சிறுபாலை வரையுள்ள சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், இளையான்குடி இந்திரா நகர்—சிறுபாலை வரையுள்ள சாலைப் பகுதியானது, நெடுஞ்சாலைத் துறை, சிவகங்கை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டப் பராமரிப்பிலுள்ள மாநில நெடுஞ்சாலை எண் 34 ஆன இராமநாதபுரம்-நயினார்கோவில்-அண்டக்குடி-இளையான்குடி-சிவகங்கை-மேலூர் சாலை கி.மீ.30/200-41/800, கி.மீ.43/800-74/072 மற்றும் கி.மீ76/072-89/896 வரையிலான சாலையாகும். இச்சாலையில் சட்டமன்ற உறுப்பினர் கோரிய பகுதி கி.மீ.37/4-41/8 வரையுள்ள 4.40 கி.மீ. நீள சாலைப் பகுதியாகும். இச்சாலையின் கி.மீ.37/4-39/2, 54/2-58/0 மற்றும் 73/2-74/2 வரையிலான பகுதிகளை ரூ.344.00 இலட்சத்தில் மேம்பாடு செய்யும் பணி 2012-2013 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணி முடிவடைந்துள்ளது. மேலும், கி.மீ.40/0—41/8 வரையிலான பகுதிகள் 2012-2013 ஆம் ஆண்டின் சிறப்புப் பழுதுபார்த்தல் திட்டத்தில் ரூ.62.50 இலட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணி நிறைவு பெற்றுள்ளது. எஞ்சிய பகுதியான கி.மீ.39/2-40/0 (0.80 கி.மீ.) நல்ல நிலையில் உள்ளது. எனவே, இளையான்குடி தாலுகா, இந்திரா நகர் முதல் சிறுபாலை வரையுள்ள சாலை தற்போது மேம்பாடு செய்யப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

[2014 ஜூலை 30

28—

பால் உபபொருட்கள் தொழிற்சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 9003—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூரில் பால் உபபொருட்கள் தொழிற்சாலையை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அம்பத்தூர் பால் பண்ணை வளாகத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க, புதிய பால் உபபொருட்கள் தொழிற்சாலை பணி மேலும் விஸ்தரிக்கப்பட்டு, பால் உபபொருட்களின் உற்பத்தியை மேலும் அதிகரிக்கும் விதமாக ரூ.11.51 கோடியில் திட்டம் செயல்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் கட்டடப் பணிக்காக ரூ.4.46 கோடியும், இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களுக்காக ரூ.7.05 கோடியும் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு, ரூ.11.51 கோடிக்கு நிருவாக இயக்குநர், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், சென்னை-51 அவர்களுக்கு ஆணையரின் அனுமதி வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

29—

தாது உப்புக் கலவை உற்பத்தி

வினா எண் 15475—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி, ஈரோடு, திருச்சி, விழுப்புரம் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களிலுள்ள தாது உப்புக் கலவை நிலையங்கள் மூலமாக தமிழக கால்நடைகளுக்குத் தேவையான தாது உப்புக் கலவை உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

2014 ஜூலை 30]

(ஆ) ஆம் எனில், பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தனியாருக்கும் விற்பனை செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் நிதியுதவி பெறப்பட்டு, திருநெல்வேலி, ஈரோடு, திருச்சி மற்றும் விழுப்புரம் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் தாது உப்புக் கலவை ஆலைகள் நிறுவப்பட்டு, தேவைப்படும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு தாது உப்புக் கலவை விநியோகிக்கப்பட்டு வருகிறது. தாது உப்புக்கலவை சங்கத்திற்கு பால் வழங்கும் உறுப்பினர் அல்லாத பிற பால் உற்பத்தியாளர்களுக்கு (தனியாருக்கு) விற்பனை செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லை.

30—

நிதி உதவி அளித்தல்

வினா எண் 15477—திரு. ஈ. சரத்குமார்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) "கூட்டுறவுகளுக்கு உதவுதல்" புனரமைப்புத் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு தேசிய பால் வள வாரியம்மூலம் நிதி உதவி அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) "கூட்டுறவுகளுக்கு உதவுதல்" புனரமைப்புத் திட்டத்தின்கீழ், திண்டுக்கல் மாவட்டத்திற்கு இத்திட்டத்தைச் செயல்படுத்த கருத்துரு அனுப்பப்பட்டு, திண்டுக்கல் ஒன்றியத்திற்கு ரூ.133 இலட்சத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு

[2014 ஜூலை 30

ஒப்புதல் அளித்துள்ளது. இதில் மத்திய அரசின் பங்கு ரூ.66.50 இலட்சமும், மாநில அரசின் பங்கு ரூ.66.50 இலட்சமும் ஆகும். இத்திட்டத்தின் காலம் 2 ஆண்டுகள் ஆகும்.

மேற்கண்ட தொகையில், கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சங்கத்திற்கு பால் பணப் பட்டுவாடா நிலுவை ரூ39.00 இலட்சம், நகர்த்தக்கூடிய குளிர்சாதனம் ரூ.13.00 இலட்சம், மின்மாற்றி ரூ.8.00 இலட்சம், 30,000 லிட்டர் பால் சேகரிப்பு மையம் ரூ.12.00 இலட்சம், துருவுறா பால் சேகரிப்பு கலன்கள் ரூ.0.40 இலட்சம், துருவுறா பால் கேன்கள் ரூ.0.96 இலட்சம், புத்தக பாரங்கள் ரூ.0.08 இலட்சம், மேசை நாற்காலிகள் ரூ.0.16 இலட்சம், மின்னணு பால் பரிசோதனைக் கருவி ரூ.2.40 இலட்சம், ஆக மொத்தம் ரூ.76.00 இலட்சம் மதிப்பீட்டில் பொருட்கள் வாங்கப்பட்டு, மின்மாற்றி நிறுவும் பணி தவிர மற்ற பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

31—

பத்திரப் பதிவுக் கட்டணம்

வினா எண் 43401—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏழை மக்களின் நலன் கருதி, 20 சென்ட் நிலம் வரை வாங்குபவர்களுக்கு சொத்துப் பத்திரப் பதிவுக் கட்டணத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

அரசாணை எண் 93, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 4-7-2012 மூலம் சந்தை மதிப்பில் ரூ.25,000/-க்கு மிகாமல் வாங்கும் சொத்துகளுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்கு அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்நிலையில் 20 சென்ட் நிலம் வரை வாங்குபவர்களுக்கு ஆவணப் பதிவின்போது முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் குறைக்கும் நிலை எழவில்லை.

2014 ஜூலை 30]

32—

கால்நடை மருத்துவமனைகளை சீரமைத்தல்

வினா எண் 17188—திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதியிலுள்ள கால்நடை மருத்துவமனைகளை சீரமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதியிலுள்ள 5 கால்நடை மருத்துவமனைகள் 2011-2012 ஆம் நிதியாண்டில் சீரமைக்கப்பட்டுள்ளன. மேலும், 2011-2012 ஆம் ஆண்டு ESVHD திட்டத்தின்மூலம் சோழவந்தான் கால்நடை மருந்தகத்திற்கு ரூ.6.00 இலட்சத்திலும், சிறுபுதூர் கால்நடை மருந்தகத்திற்கு ரூ.3.00 இலட்சத்திலும், டி.வாடிப்பட்டி கால்நடை மருந்தகத்திற்கு ரூ.4.00 இலட்சத்திலும், அலங்காநல்லூர் கால்நடை மருந்தகத்திற்கு ரூ.1.00 இலட்சத்திலும், பாலமேடு கால்நடை மருந்தகத்திற்கு ரூ.4.00 இலட்சத்திலும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, சீரமைப்புப் பணிகள் முடிவடைந்துள்ளன.

33—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா எண் 20322—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, தேவூர் புள்ளாக்கவுண்டன்பட்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி தொகுதி, சங்ககிரி ஊராட்சி ஒன்றியம் தேவூர் புள்ளாக்கவுண்டன்பட்டி ஊராட்சிக்கு அருகில் தேவூர், கத்தேரி ஆகிய இரண்டு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாலும், தேவூர் புள்ளாக்கவுண்டன்பட்டி மற்றும் அக்கிராமத்தினைச் சுற்றியுள்ள கால்நடை அலகுகள் மிகக் குறைவாக உள்ளதாலும், (அதாவது 2424 அலகுகள்) தேவூர் புள்ளாக்கவுண்டன்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை/ கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, விவசாயிகள் அருகில் செயல்பட்டுவரும் கால்நடை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக்கொள்ளலாம்.

34—

கால்நடை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 21572 திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், விளாத்துறை ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள விளாத்துறை கிராமத்தில் ஏற்கெனவே பார்வைக் கிளை நிலையமும், கொல்லால் ஊரக கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருவதால், விளாத்துறை ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்கும் நிலை

2014 ஜூலை 30]

தற்போது எழவில்லை. மேலும், பார்வை கிளை நிலையத்தில் உள்ள கால்நடைகளுக்கு புதுக்கடை கால்நடை உதவி மருத்துவரால் வாரத்திற்கு மூன்று நாட்கள் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

35—

காலிநடைகளை கடந்தூபவர்கள் மீது நடவடிக்கை

வினா எண் 25643—திரு. **ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைகளைக் கேரளாவிற்கு கடத்துபவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் பசுவதைச் சட்டம் அரசாணை (நிலை) எண் 715, வேளாண்மைத் துறை, நாள்: 30-8-1976-ன்படி ஏற்கெனவே அமல்படுத்தப்பட்டுள்ளது. பிராணிகள் வதைத் தடுப்பு சட்டம், 1960 மற்றும் கால்நடை போக்குவரத்து விதிகள் 1978-ன்படி கால்நடைகளை போக்குவரத்தின்போது கையாள வேண்டிய முறைபற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும், காவல் துறை கண்காணிப்பாளர்களுக்கும் கால்நடைகளை போக்குவரத்தின்போது கையாளும் முறை குறித்து விழிப்புணர்வும் மற்றும் காவல் அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு முகாம் அந்தந்த மாவட்டங்களில் நடத்தவும், பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம், 1960 மற்றும் கால்நடை போக்குவரத்து விதிகள் 1978—ஐ மீறுபவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. விதிகளை புறக்கணிப்பவர்கள்மீதும் வாகன உரிமையாளர்மீதும் வழக்குப் பதிவு செய்யவும், அவர்களை குற்றவாளிகள் என அறிவிக்கவும் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[2014 ஜூலை 30

36—

கால்நடை மருந்தகம் அமைத்தல்

வினா எண் 34832—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பீர்க்கணிக்காடு கால்நடைத் துணை மருத்துவமனையில் கால்நடை மருந்தகம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பீர்க்கணிக்காடு கிராமத்தில் ஏற்கெனவே கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது.

37—

குளத்தைத் தூர் வாரி சீரமைத்தல்

வினா எண் 35547—திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் திருவண்ணாமலை ஸ்ரீவெங்கடாஜலபதி திருக்கோயில் அருகில் உள்ள குளத்தைத் தூர் வாரி மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், திருவண்ணாமலை அருள்மிகு ஸ்ரீனிவாசப்பெருமாள் திருக்கோயில்

2014 ஜூலை 30]

இந்து சமய அறநிலையங்கள் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயிலின் உபகோயிலாகும். இத்திருக்கோயிலின் நிருவாகம் செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான குளத்தில் தற்போது தண்ணீர் உள்ளது. தண்ணீர் வற்றியவுடன் குளத்தினை சீரமைத்திட திருக்கோயில் நிருவாகத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

38—

குடிநீர் வசதி செய்தல்

வினா எண் 3561—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் திருமுக்குளத்திற்குத் தண்ணீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில் இந்து சமய அறநிலையங்கள் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக்குளம் சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. கடும் வறட்சி மற்றும் மழையின்மை காரணமாக திருக்குளத்தில் தற்போது தண்ணீர் இல்லை. இக்குளத்தினைத் தூர்வாரி ஆழ்துளைக் கிணறு அமைத்து, அதன் மூலம் தண்ணீர் நிரப்புவதற்கு உத்தேசமாக ரூ.95 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணியை உபயதாரர்கள் மூலம் மேற்கொள்ள திருக்கோயில்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2014 ஜூலை 30

39—

செட்டிநாடு பேக் டூர் திட்டத்தில் கோயில்களை இணைத்தல்

வினா எண் 40760—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், செட்டிநாடு பேக் டூர் திட்டத்தில் புகழ்பெற்ற கோயில்களை இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம் செட்டிநாடு பேக் டூர் திட்டத்தில் 2012-2013 ஆம் நிதி ஆண்டில் புதிய சுற்றுலாக்கள் அறிமுகத் திட்டத்தின்கீழ் அரசாணை வெளியிடப்பட்டு "நகரத்தார்கள் கோயில்கள் சுற்றுலா" என்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டம் நடைமுறையில் உள்ளது.

40—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 8102—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, குமாரபாளையம் கத்தேரி கிராமத்தில் வசிக்கும் குலாள சமுதாயத்திற்கு குடியிருப்புப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ரி வட்டம், கத்தேரி கிராமம் ச.எண்.293/3 விஸ்தீரணம் 0.59.5 அரசு புறம்போக்கு இடத்தில் இந்து—குலாளர் சமுதாயத்தைச் சேர்ந்த சுமார் இருபது குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மேற்குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தில் ஆக்கிரமிப்புக்களை ஒழுங்குபடுத்தி, வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு அருகில் உள்ள பாரதி நகர், கே.கே. நகர், கணபதிபாளையம் பகுதிகளில் உள்ள சுமார் 1,000 வீடுகளில் வசிப்போர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர் மேற்குறிப்பிட்டுள்ள புறம்போக்கு நிலம் அப்பகுதிவாழ் மக்களின் பொதுத் தேவைகளான பொதுக் கழிப்பிடம், நியாய விலைக் கடை, தண்ணீர்த்தொட்டி, சத்துணவுக் கூடம் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்காகத் தேவைப்படுவதால், அந்நிலத்தை குலாளர் தெரு மக்களுக்கு பட்டா வழங்கக் கூடாதென்று சங்ரி சார்பு நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண்115/2011-ல் வழக்குத் தொடர்ந்துள்ளனர். அவ்வழக்கு, தற்போது நிலுவையில் உள்ளதால், வழக்கு முடிவுக்கு வந்த பின்னர்தான் இந்நேர்வு குறித்து பரிசீலிக்க இயலும்.

41—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 15196—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, முள்ளிப்பட்டு காலனியில் உள்ள வீடுகளுக்கு பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முள்ளிப்பட்டு கிராமத்தில் ஆதி திராவிட காலனி கிராம நத்தம் ச.எண். 85/2, மொத்தப் பரப்பு 5.340 ச.மீ.

[2014 ஜூலை 30

இதில், வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ள வீடுகள், பொது வழி, பொதுத் தெரு ஆகியவை அடங்கிய பரப்பு 4,854 ச.மீ. மீதமுள்ள 486 ச.மீ. இடம் காலியாக உள்ளது. காலியாக உள்ள இடத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

42—

ஆதிவாசியல்லாதோர் நிலம் வாங்குவதைத் தடை செய்தல்

வினா எண் 22287—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிவாசி இன மக்களின் நிலங்களை ஆதிவாசியல்லாதோர் வாங்குவதையும், விற்பதையும் தடை செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

வருவாய் நிலையாணை எண் 15-41-ன்படி ஆதிவாசிகள்/பழங்குடியினருக்கு வழங்கப்பட்டுள்ள நிலங்களை பிற இனத்தவர்கள் வாங்குவதோ/விற்பதோ விதி மீறிய செயல் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய சட்டம், 2006 மலைவாசிகளின் உரிமை பாதுகாப்புச் சட்டத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்படுத்தவும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

43—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 22509—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, வேடகட்டமடுவு ஊராட்சி, மேல்செங்கப்பாடி, டி.ஆண்டியூர் பகுதி ஆதி திராவிடர், இருளர் மக்களுக்கு டி. ஆண்டியூர் கி.எண் 238-ல் 5/7-ல் உள்ள நிலத்தை கையகப்படுத்தி, வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) டி.ஆண்டியூர் கிராம புல எண் 5/7 விஸ்தீர்ணம் 3.42.0-ல் கிராமக் கணக்குகளில் அரசு புஞ்சை தரிசு என தாக்கலாகியுள்ளது. மேற்படி நிலம் தீர்வை விதிக்கப்பட்ட புஞ்சைக்குரியதாக உள்ளதால், ஆதி திராவிடர் நலத் துறைமூலம் அரசுக்கு கையகப்படுத்த வேண்டிய கேள்வி எழவில்லை. மேற்படி நிலத்தினை கிராம நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்த பின்னர், தகுதியான நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

44—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 23149—திருமதி ர. சுபா: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஒன்றியம், சிறுவாச்சூர் ஊராட்சியில் உள்ள சக்தி நகர், அருந்ததியர் தெருவில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், சிறுவாச்சூர் தெற்கு கிராமம் பட்டா எண் 510, ச. எண் 459-ல் சக்தி நகரைச் சார்ந்த அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் மேற்கண்ட இடத்தில் வசித்து வருவதாகவும், மேற்படி இடமானது கிராமக் கணக்குகளில் நில குடியேற்ற சங்கத்தின் பெயரில் பட்டா தாக்கலாகியுள்ளதால், மேற்படி நபர்களுக்கு பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

45—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 23203—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, கத்தேரி கிராமம், வட்டமலை அடிவாரத்தில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், கத்தேரி கிராமம் ச.எண் 293/3 விஸ்தீரணம் 0.59.5 அரசு புறம்போக்கு இடத்தில் இந்து-குலாளர் சமூகத்தைச் சேர்ந்த சுமார் இருபது குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மேற்குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தில், ஆக்கிரமிப்புகளை ஒழுங்குபடுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு அருகில் உள்ள பாரதி நகர், கே.கே. நகர், கணபதிபாளையம் பகுதிகளில் உள்ள சுமார் 1,000 வீடுகளில் வசிப்போர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். மேற்குறிப்பிட்டுள்ள புறம்போக்கு நிலம் அப்பகுதிவாழ் மக்களின் பொதுத் தேவைகளான பொதுக் கழிப்பிடம், நியாய விலைக் கடை, தண்ணீர்த்தொட்டி, சத்துணவுக் கூடம் மற்றும் வழிப்பாட்டுத் தலங்களுக்காகத் தேவைப்படுவதால், அந்நிலத்தில், குலாளர் தெரு மக்களுக்கு பட்டா வழங்கக் கூடாதென்று சங்கரி சார்பு நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண். 115/2011-ல் வழக்குத் தொடர்ந்துள்ளனர். அவ்வழக்கு, தற்போது நிலுவையில் உள்ளதால், வழக்கு முடிவுக்கு வந்த பின்னர்தான் இந்நேர்வு குறித்து பரிசீலிக்க இயலும்.

46—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 25316—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) சங்ககிரி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்டர்குலமாணிக்கம் கிராம வார்டு எண் 35/3ஏ, கனககிரி ஊராட்சி, பழமாண்டி அம்மன்கோவில் காட்டில் வசித்து வரும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்டர்குல மாணிக்கம் கிராமம், ச.எண் 35/3ஏ நிலமானது மந்தைவெளி புறம்போக்கு நிலமாகும். மேற்படி நிலம் ஆட்சேபணையுள்ள புறம்போக்கு என்பதால், அப்பகுதி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது.

47—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 25318—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, எடங்கணசாலை பேரூராட்சி, 12-வது வார்டு, கரட்டூர் மற்றும் எழுமாத்தூர் சர்வே எண் 659/4 நிலத்தை அருந்ததியர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், எடங்கணசாலை பேரூராட்சி, 12-வது வார்டு, கரட்டூர் மற்றும் எழுமாத்தூர் ச.எண் 659/4-ல் உள்ள ஆதி திராவிடர் புறம்போக்கு

[2014 ஜூலை 30

நிலம் குறித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண். ஓ.எஸ். 219/88 நிலுவையில் உள்ளதால், இவ்வழக்கு முடிவு பெற்ற பின் வரப்பெறும் தீர்ப்பின் அடிப்படையில், அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

48—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 25322—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ரி தொகுதி, தேவூர் பேரூராட்சி, தேபுதுப்பாளையம், அருந்ததியர் தெரு, 13-வது வார்டில் இலவச வீட்டுமனைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ரி வட்டம், தேவூர் பேரூராட்சி, தேபுதுப்பாளையம், அருந்ததியர் தெரு, 13-வது வார்டு, தேவூர் கிராமம் சர்வே எண்கள் 708, 709, 712 மற்றும் 713 நத்தம் புறம்போக்கில் 40 வீடுகளுக்கு ஏற்கெனவே இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும், தகுதியான நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

49—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 25323—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) சங்ககிரி தொகுதி, தேவண்ணகவுண்டனூர் ஊராட்சி, வரதங்காட்டானூர் அருந்ததியர் தெரு மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், தேவண்ணகவுண்டனூர், வரதங்காட்டானூர் அருந்ததியர் தெருவில் வீடு கட்டி குடியிருக்கும் அனைவருக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பகுதிகளில் குடியிருப்பவர்களின் மக்கள் திருமணமாகி ஒரே வீட்டில் கூட்டுக் குடும்பமாக வசித்து வருகிறார்கள். இவ்வாறான சூழ்நிலையில், எவரும் அரசுப் புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டி அனுபவம் செய்து வரவில்லை என்பதால், வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

50—

இல்வச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 2826—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் வட்டம், கரைப்புதூர் கிராமம், ஆதி திராவிடர் காலனியிலுள்ள வீட்டுமனை இல்லாத ஏழை ஆதி திராவிட குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) பல்லடம் வட்டம், கரைப்புதூர் கிராமத்தில் சுமார் 60 ஆதி திராவிட இன மக்கள் நத்தம் புறம்போக்கில் கூட்டுக் குடும்பமாக வசித்து வருகிறார்கள். மேற்படி குடும்பங்களுக்கு பட்டா வழங்க ஆதி திராவிடர் நத்தத்தில் காலியிடம் ஏதும்

[2014 ஜூலை 30

இல்லை. எனவே, தனியார் பேச்சு வார்த்தைமூலம் நிலம் கிரயம் பெற்று, வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) தனியார் நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் நிலம் கிரயம் பெற்று, பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

51—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 28973—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட திருக்கோகர்ணம் யானைமால் வீதியில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரம், பிளாக் எண் 102, யானைமால் வீதியில் குடியிருக்கும் நபர்கள் மனைப் பட்டா கோரியது தொடர்பாக, கிராம/நகர கணக்குகளுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு நத்தம் புறம்போக்கில் 5 நபர்கள் குடியிருந்து வருகின்றனர். மேற்கண்ட நத்தம் புறம்போக்கில் குடியிருந்து வரும் நபர்களுக்கு மனைப் பட்டா வழங்கவும், பாறை புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கு நத்தமாக வகைமாற்றம் செய்து மனைப் பட்டா வழங்கவும், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

52—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 29843—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரடிவாவி கிராம ஊராட்சியில் குட்டை புறம்போக்கு கூ.எ.எண் 68/2-ல் உள்ள குடியிருப்புகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரடிவாவி கிராமம், கூ.எ.எண் 68/2-ல் உள்ள நிலம் குட்டை புறம்போக்கு (நீர்நிலைப் புறம்போக்கு). எனவே, சென்னை உயர் நீதிமன்ற ஆணைப்படி, பட்டா வழங்க இயலாது.

53—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 29881—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், பருவாய் கிராம ஊராட்சி, பருவாயிலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியம், பருவாய் கிராம ஊராட்சி, பருவாயிலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச

[2014 ஜூலை 30

வீட்டுமனைப் பட்டா வழங்க, மேற்படி கிராமத்தில் நத்தம் காலியிடம் ஏதுமில்லை. எனவே, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

54—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 29868—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், புளியம்பட்டி கிராம ஊராட்சி, வண்டிப்பாதை புறம்போக்கிலுள்ளவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் வட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியம், புளியம்பட்டி கிராம ஊராட்சி, வண்டிப்பாதை புறம்போக்கிலுள்ளவர்களுக்கும், இதர புறம்போக்கு நிலத்தில் குடியிருப்போருக்கும் நத்தமாக மாற்றி பட்டா வழங்கும் அரசாணையின் காலக்கெடு முடிவடைந்து விட்டபடியால், தற்பொழுது பட்டா வழங்க இயலாது.

55—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 30575—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி நகராட்சி, 13-வது வட்டம், சபாஷ்காள் தெரு மற்றும் கண்ணப்பன் தெருவில் உள்ள 150 வீடுகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) ஆரணி வட்டம் மற்றும் நகரம், கண்ணப்பன் தெரு மற்றும் சபாஷ்கான் தெருவில் வீடுகட்டி வசிப்பவர்கள் வீட்டுமனைப் பட்டா கோரும் F/7 Block T.S. No. 3-ல் 04937.5 ச.மீ. மற்றும் F/7 Block T.S. No. 4-ல் 06715.5 ச.மீ. ஆகிய இடங்கள் ஆரணி நகர L.R. "அ" பதிவேட்டின்படி முறையே அனுமந்தராயர் கோயில் குளம் மற்றும் அனுமந்தராயர் கோயில் இடம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) நீர்நிலைப் புறம்போக்கு மற்றும் கோயில் புறம்போக்குகளில் வீட்டுமனைப் பட்டா வழங்க தடை உத்தரவு உள்ள காரணத்தினால், மேற்படி இடத்திற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

56—

அம்மா திட்டம் விரிவுபடுத்துதல்

வினா எண் 31120—திரு. ஏ. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் "அம்மா" திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) "அம்மா" என்ற சிறப்புத் திட்டமானது அரசாணை (நிலை) எண் 70, வருவாய்த் [வ.நி.3(2)] துறை, நாள் 4-3-2013-ன்படி 24-2-2013 அன்று வருவாய்த் துறைமூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. "அம்மா" திட்டத்தின் முதல் கட்டத்தில் மாநிலத்திலுள்ள 16,671 கிராமங்களில் நடைபெற்ற முகாம்களில் 33,13,792 மனுக்கள் பெறப்பட்டு, 18,41,694 மனுக்கள்

[2014 ஜூலை 30

ஏற்கப்பட்டும், 14,72,098 மனுக்கள் நிராகரிக்கப்பட்டும் உள்ளன. அம்மா திட்டம் இரண்டாம் சுற்று, கடந்த 4-10-2013 முதல் துவங்கப்பட்டு, 4-10-2013 முதல் 31-1-2014 வரை நடைபெற்ற இரண்டாம் கட்ட முகாம்களில் 4,81,880 மனுக்கள் பெறப்பட்டு, 4,05,038 மனுக்களின்மீது உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது "அம்மா" திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

57—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 32262—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, காரத்தொழுவு கிராமத்திலுள்ளவர்களுக்கு மடத்துக்குளம் ஒன்றியத்தில் தடையில்லா சான்றிதழ் அளித்து பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், காரத்தொழுவு கிராமம், புல எண் 656/E6, சந்தைக்காக பாரதினம் செய்யப்பட்டு, ஆணையாளர் மடத்துக்குளம் என்ற பெயரில் சந்தை ஏதும் நடைபெறாமல், நிபந்தனை மீறப்பட்டுள்ள நிலத்தை மீளப்பெற்று, 22 நபர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி இடத்தில் பட்டா வழங்க ஆட்சேபித்து, உடுமலைப்பேட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ. எண் 399/12 மற்றும் இடைக்கால மனு எண் 14/12-ன்படி வழக்கு நிலுவையில் உள்ளது.

(ஆ) மேற்படி பட்டா வழங்க ஆட்சேபித்து தொடரப்பட்ட வழக்கின் முடிவு அறிந்த பின்னர், மேற்கண்ட நபர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2014 ஜூலை 30]

58—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32264—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, தளி பேரூராட்சி, திருமூர்த்தி பகுதியில் உள்ள பொதுப் பணித் துறை நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தளி கிராமம், புல எண்கள் 422, 424/ஏ2, 425/2, 430/2-ல் பெருந்திட்ட பணிகளுக்காக பொதுப் பணித் துறையால் நில எடுப்பு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டில் உள்ளன. எனவே, ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

59—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32274—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள கொடுங்கியம், வல்லக்குண்டாபுரம் பகுதி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கொடுங்கியம், வல்லக்குண்டாபுரம் கிராம நத்தத்தில்

[2014 ஜூலை 30

போதிய இடம் இல்லாததால், வல்லக்குண்டாபுரம் கிராமத்தில் மாவட்ட ஆதி திராவிடர் நலத் துறைமூலம் புல எண் 291/ஈ1-ல், 4.00 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, 105 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

60—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32276—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், 18 செட்டில்மென்டு பகுதி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆனைமலைக் குன்றுகள் பகுதியில் குடியிருக்கும் மலைவாழ் மக்களுக்கு, அவர்களின் வனத் துறைக்குச் சொந்தமான பகுதி குடியிருப்புகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

(ஆ) சமவெளிப் பகுதியில் வீட்டுமனைப் பட்டா கேட்டு ஆனைமலைக் குன்றுகள் பகுதியில் குடியிருக்கும் மலைவாழ் மக்கள் விண்ணப்பிக்கும்பட்சத்தில், வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

61—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32286—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், போயர் சமுதாயம் அதிகம் உள்ள ஆலாம்பாளையம் பகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், போயர் சமுதாயம் அதிகம் உள்ள ஆலாம்பாளையம் பகுதியில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினைச் சார்ந்த மக்களுக்கு இடம் தேர்வு செய்து, தகுதி முன்னுரிமை அடிப்படையில், விலையேதுமில்லா வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

62—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32292—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி, பள்ளப்பாளையம், சந்தனக் கருப்பனூர், ஓரைக்கல்லூர், கொங்களக்குறிச்சி ஆதி திராவிடர் இன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) நிலம் வழங்க முன்வரும் நில உடைமையாளர்களிடம் நேரடிப் பேச்சு வார்த்தைமூலம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலமெடுப்பு செய்யப்பட்ட பின் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

(ஆ) தனியர் நேரடிப் பேச்சு வார்த்தைமூலம் நிலம் கிரயம் பெற விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2014 ஜூலை 30

63—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 32294—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி, கிராமம், தினைக்குளம் கிராமத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்தும், இதுவரை பயனாளிகளுக்கு பட்டா கொடுக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி கிராமம், க.ச.120/பி2 மற்றும் 107/பி1 சாலையில் உள்ள ஆதி திராவிடர் நத்தம் புலத்தில் காலியாக உள்ள மனையிடங்களில் தகுதியுள்ள ஆதி திராவிடர் மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

உடுமலைப்பேட்டை வட்டம், தென்பூதிநத்தம் கிராமம், மஜரா தினைக்குளம் க.ச.568/பி2 ஆதி திராவிடர் நத்தம்புலத்தில் ஆதி திராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கு ஆதி திராவிடர் மக்களில் சொந்த வீடோ, நிலமோ இல்லாதவர்களிடமிருந்து மனுக்கள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மனுக்களைப் பெற்று விரைவில் பட்டா வழங்கப்படும்.

(ஆ) விண்ணப்பங்கள் பெற்று, பரிசீலனை செய்து, விரைவில் பட்டா வழங்கப்படும்.

64—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 32317—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) பெரியகுளம் தொகுதி, கெங்குவார்பட்டி ஊராட்சி, ஸ்ரீராம் நகரில் கண்மாய் புறம்போக்கினை வகைமாற்றம் செய்து பட்டா வழங்கப்பட்டதைப் போல், மீதமுள்ள குடும்பங்களுக்கும் வகை மாற்றம் செய்து பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெங்குவார்பட்டி பிட்-I கிராமம், சர்வே எண் 2267/1-ல், 48.53.5 மற்றும் 2267/2-ல் 1.42.5 எக்டேர் நிலமானது பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைப் புறம்போக்காக இருப்பதால், இந்நிலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

65—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32319—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, ஜி.கல்லுப்பட்டி ஊராட்சி, சங்கிலியார்புரத்தில் ஓடைப் புறம்போக்கு நிலத்தில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு வகைமாற்றம் செய்து பட்டா வழங்க அரசு ஆவனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெங்குவார்பட்டி பிட்-I கிராமம், சர்வே எண் 1,443-ல், 2.35.0 எக்டேர் நிலமானது நீர்நிலைப் புறம்போக்க இருப்பதால், வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

[2014 ஜூலை 30

66—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 32324—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, கெங்குவார்பட்டி பேரூராட்சி, மண்ணைக்காட்டில் 50 ஆண்டுகளாக விவசாயம் செய்துவரும் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெங்குவார்பட்டி பிட்-1 கிராமம், சர்வே எண் 1,419/1-ல் 95.17.0 எக்டேர் தீர்வை ஏற்படாத சர்க்கார் தரிசு நிலத்தை வன நிலமாக மாற்ற தமிழ்நாடு வனச் சட்டம், 1882, பிரிவு 26-ன்கீழ் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்நிலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

67—

கிராம நிருவாக அலுவலர்களுக்கு பயிற்சி

வினா எண் 32604—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் கிராம நிருவாக அலுவலர்களுக்கு அனைத்துத் துறைகளிலும் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

கிராம நிருவாக அலுவலர்களுக்குத் தேவையான நில அளவை பயிற்சி ஒரு மாத காலத்திற்கும் கிராம நிருவாகம் குறித்த, பயிற்சி ஆறு வார காலங்களுக்கும் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. கிராம நிருவாகம் குறித்து அளிக்கும் 6 வார கால பயிற்சியில்,

2014 ஜூலை 30]

அனைத்துத் துறை சார்ந்த அலுவலர்களுக்கும், குறிப்பாக உள்ளாட்சித் துறை, விவசாயத் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, கால்நடைத் துறை, பொது சுகாதாரத் துறை, காவல் துறை போன்ற கிராம நிருவாகத்திற்குத் தேவையான அனைத்துத் துறைகளைப் பற்றியும் அந்தந்த துறை அலுவலர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட பயிற்சி, கிராம நிருவாக அலுவலர்கள் தங்களது பணியினை சிறப்பாகச் செய்யப் போதுமானதாக உள்ளதால், மற்ற துறைகளில் தனியாக பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம் இல்லை.

68—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 32932—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், பாப்பாகுளம் ஊராட்சி, ரெட்டிபாளையம் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு நிலுவையில் உள்ள பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், பாப்பாகுளம் ஊராட்சி, ரெட்டிபாளையம் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினரைச் சார்ந்த நிலுவையில் உள்ள மக்களுக்கு, இடம் தேர்வு செய்து, தகுதி முன்னுரிமை அடிப்படையில், விலையேதுமில்லா வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

69—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 33078—திரு. ஏ.எ. பாபு முருகவேல்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) ஆரணி தொகுதி, செய்யாறு ஒன்றியம், முனுகப்பட்டு மதுரா பலாம்பட்டில் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செய்யாறு வட்டம், முனுகப்பட்டு மதுரா பலாம்பட்டு கிராம சர்வே எண் 221-ல் தோப்பு புறம்போக்கில் 45 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மேற்படி குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

70—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 34757—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, சவண்டப்பூர் கிராமம், ஆண்டிக்காடு பகுதியில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் கிராமம், சவண்டப்பூர் கிராமம், "அ" கிராமம் நில அளவை எண் 414/1 3.44.5 எக்டேர் ஆகும். மேற்படி நிலம் பட்டா எண் 714-ன்கீழ் அருள்மிகு செல்வியாண்டியம்மன் திருக்கோவில் என்ற பெயரில் கிராம கணக்குகளில் தாக்கலாகியுள்ளது. இந்த நிலம், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் நிருவாகத்திற்குச் சொந்தமானது. இந்த நிலத்தில், சுமார் 200 நபர்கள் 3.5 ஆண்டுகளுக்கு மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து வருகிறார்கள். மேற்படி இடத்தில் வசிப்பவர்கள், முன்னர் பவானி

2014 ஜூலை 30]

ஆற்றங்கரை ஓரத்தில் வசித்து வந்தவர்களாவார்கள். 1972 ஆம் ஆண்டு பவானி ஆற்றில் ஏற்பட்ட பெரும் வெள்ளப் பெருக்கினால், இருப்பிடங்களை இழந்து, தற்போது வசிக்கும் இடத்தில் குடிபெயர்ந்தவர்களாவார்கள். சம்பந்தப்பட்ட துறைகள்மூலம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைக்கு உரிய தொகையினை செலுத்திவிட்டு, வருவாய்த் துறையினருக்கு கிரையம் செய்துவிட்டு, அதனை தனிப் பட்டாவாக வழங்கிட, அரசின் ஆணை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

71—

இலவச வீட்டுமனைப் பட்டா

வினா எண் 35028—திரு. டி. சுரேந்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், கரியமங்கலம் கிராமத்தில் இலவசப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) செங்கம் வட்டம், கரியமங்கலம் கிராமத்தில் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) மேற்படி கிராமத்தில், தகுதியான இடத்தில் அனுபோகதாரர்கள் வீடு கட்டியுள்ள இடத்திற்கு இலவச பட்டா வழங்க உடனே நடவடிக்கை எடுக்கப்படும்.

72—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 36349—திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, கல்லணை, சிறுவாலை மற்றும் சின்ன இலந்தைகுளம் கிராமங்களில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கல்லணை மற்றும் சின்ன இலந்தைகுளம் கிராமங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்க, தகுதியான கிராம நத்தம் காலியிடங்கள் எதுவும் இல்லை என்பதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

73—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 36659—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி, 4-வது வார்டு, காந்தியார் வீதியிலுள்ள ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி, 4-வது வார்டு, காந்தியார் வீதி, புல எண் 14-ல் 0.86.0 ஏர்ஸில் 71 குடிசைகளும், புல எண் 18–0.76.5 ஏர்ஸில் 35 குடிசைகளும், புல எண் 23-0.54.5 ஏர்ஸில் 56 குடிசைகளும் உள்ளன. இவை, கிராம கணக்கில் "வடவாறு" நீர்வழிப் புறம்போக்கு என உள்ளன. உச்ச நீதிமன்றத்தால் நீர்வழிப் புறம்போக்குகளில் ஒப்படை வழங்குதல், நில உரிமை மாற்றம் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளதால், மேற்படி இடத்தில் குடியிருந்து வரும் குடும்பங்களுக்கு மனைப் பட்டா வழங்க இயலாது.

2014 ஜூலை 30]

74—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 37651—திரு. டி. சுரேஷ்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, தனவநாய்க்கன்பேட்டையில் அனைத்து சமுதாய மக்களுக்கும் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கம் சட்டமன்றத் தொகுதி, தனவநாய்க்கன்பேட்டை பகுதியில் கீழ்க்காணும் விவரப்படி அனைத்து சமுதாய மக்களும் ஆக்கிரமணம் செய்து வீடு கட்டி வசித்து வருகிறார்கள்:

சர்வே எண்	புறம்போக்கின் வகை	மொத்த வீடுகள்
86	வாய்க்கால்	26
180	வாய்க்கால்	31
181	வாய்க்கால்	23
191	நெடுஞ்சாலை	35
194	சாலை	09
190/6பி	தோப்பு	04
	மொத்தம்	128

இவற்றில், நெடுஞ்சாலை, சாலை மற்றும் தோப்பு புறம்போக்குகளில் அரசின் ஒருமுறை வீட்டுமனைப் பட்டா வழங்கும் சிறப்புத் திட்டத்தின்கீழ் அரசு உத்தரவு வரப்பெற்றதும், தகுதியின் அடிப்படையில், வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். நீர்நிலைப் புறம்போக்கு இனங்களில் பட்டா வழங்க உச்ச நீதிமன்ற தடையாணை உள்ளதால், பட்டா வழங்க இயலாது.

[2014 ஜூலை 30

75—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 41502—திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, சோலூர் பகுதியில் வசிக்கும் 40 குறவர் இன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், சோலூர் கிராமம், புல எண் 103/4-ல் வசிக்கும் தகுதியான 37 நரிக்குறவர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன.

76—

நில அளவை செய்தல்

வினா எண் 43168—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் ஒன்றியம், இடுவாய் ஊராட்சி, இடுவாய் ஜெ.ஜெ. நகரில் 32 பேருக்கு பட்டா அளித்தும், நில அளவை செய்யப்படாமல் உள்ளதால் உடனடியாக நில அளவை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 2-1-2014 அன்று, திருப்பூர் ஒன்றியம், இடுவாய் ஊராட்சி, இடுவாய் ஜெ.ஜெ. நகரில் க.ச.156/2, 159 சாலையில் 32 நபர்களுக்கு

2014 ஜூலை 30]

பட்டா வழங்கிய வீட்டுமனைப் பட்டா இடம், திருப்பூர் ஆதி திராவிட நல தனி வட்டாட்சியர் அலுவலக சார் ஆய்வாளரால் அளவு செய்யப்பட்டு, அதனைத் தெரிந்து கொண்டது குறித்து தொடர்புடைய நபர்களது ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது.

77—

வறட்சி நிவாரணம் வழங்குதல்

வினா எண் 43453—திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் அரசு அறிவித்த வறட்சி நிவாரணம் முழுமையாக வழங்கப்படாத நிலையில், மறு கணக்கெடுப்பு முடித்து, விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) அரசாணை நிலை எண் 128, வருவாய் (பே.மே.3-1)-த் துறை, நாள் 25-4-2013-ன்படி, தருமபுரி மாவட்டத்திற்கு 2012 ஆம் ஆண்டு பருவ மழையினால் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் முழுமையாகக் கணக்கெடுக்கப்பட்டு, கணக்கெடுப்பின்படி இம்மாவட்டத்திற்கு நிவாரணத் தொகையாக ரூ.19,31,30,881/- ஒதுக்கீடு செய்யப்பட்டு, 73,785 பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.19,28,40,375.40/- வழங்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பாக, அரூர் வட்டத்தில் பாதிக்கப்பட்ட 16,376 விவசாயிகளுக்கு 14,407.65 ஏக்கர் நிலங்களுக்கு முழுமையாக நிவாரணத் தொகையாக ரூ.4,50,75,990/- ரூபாய் சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மல்பரி பயிர்களுக்கு மாவட்டம் முழுமைக்கும் பாதிக்கப்பட்ட 1,808.04 ஏக்கருக்கு, 1,743 பயனாளிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.54,24,120/- சம்பந்தப்பட்ட வங்கிகள் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

[2014 ஜூலை 30

78—

மீனவர்கள் ஓய்வு அறை

வினா எண் 28548—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை திருமூர்த்தி அணை மீன் பண்ணையில் மீனவர்களுக்கு ஓய்வு அறை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை திருமூர்த்தி அணை மீன் பண்ணையில் துணை மேலாளர் அலுவலகம் உள்ளது. இங்கு நீர்த்தேக்க மீன்பிடிப்பு, வண்ணமீன் வளர்ப்பு மற்றும் மீன் குஞ்சு வளர்ப்பு போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பங்கு மீனவர்கள் பகுதி நேரமாக மட்டுமே மீன்பிடிப்பினை செய்து வருகின்றனர். இவர்கள் துணை மேலாளர் அலுவலக வளாகத்தில் தற்காலிகமாகத் தங்கி மீன்பிடித்து வருவதுடன், பங்கு மீனவர்களின் வீடுகள் நீர்த்தேக்கத்திற்கு அருகிலேயே உள்ளதால், நிரந்தர ஓய்வு அறை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. எனினும், இத்திட்டம் தொடர்பாக, எதிர்காலத்தில் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

79—

படகுக் குழாம் அமைத்தல்

வினா எண் 29123—திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனை அருகில் உள்ள ஓசான் குளத்தில் உள்ள ஆகாயத் தாமரை செடிகளை அகற்றி சீரமைத்து, சிறுவர்களுக்குப் படகுக் குழாம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2014 ஜூலை 30]

விடை-

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் சேத்துப்பட்டு குளத்தினை புனரமைத்து, அங்கு பொழுதுபோக்கு தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் பசுமைப் பூங்கா அமைக்கப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து, இக்குளத்தினை புனரமைப்பு செய்திடவும், அங்கு பொழுதுபோக்கு அம்சங்களான படகு சவாரி, தூண்டில் மீன்பிடிப்பு, பல அடுக்கு வளாகத்தில் ஊர்திகள் நிறுத்துமிடம், திறந்தவெளி அரங்கங்கள், சிறுவர்கள் விளையாட்டுத் திடல் மற்றும் உணவகம் போன்ற வசதிகள் அமைப்பதற்கும் அரசால் ரூ.42 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டு, இத்திட்டத்தினைச் செயல்படுத்திட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

80—

மரத்தோட்டங்கள் அமைத்தல்

வினா எண் 29026—திரு. ரா. சதுகுமார்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதியில் மரத் தோட்டங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கும் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மாவட்டம், தென்காசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் 2012-2013 ஆம் ஆண்டில், 26,400 தேக்கு மரக்கன்றுகள் (சுமார் 60.81 எக்டர் பரப்பளவில்) தனியார் விவசாய நிலங்களில் நடவு செய்யப்பட்டுள்ளன.

81—

தடுப்பணைகள் அமைத்தல்

வினா எண் 33884—திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, குருமலையில் மரக்கன்றுகள், மூலிகைச் செடிகள் நடவும், தடுப்பணைகள் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தொகுதி, குருமலை காப்புக்காட்டில் தரங்குன்றிய வனப் பகுதிகளில் "நீர் பாதுகாப்பு மற்றும் மர அடர்த்தி மேம்பாடு" திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 200 எக்டர் பரப்பளவில் நீர்த்தேக்கக் குழிகள் அமைத்து 4,000 மரக்கன்றுகள் நடவு செய்திடவும், இரண்டு தடுப்பணைகள் அமைத்திடவும், உரிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

82—

தேக்குமரத் தோட்டங்கள் அமைத்தல்

வினா எண் 37300—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதியில் தேக்கு மரத் தோட்டங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பல்லுயிர்ப் பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கும் திட்டத்தின்கீழ் 2012-2013 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டம், தென்காசி சட்டமன்றத்

2014 ஜூலை 30]

தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் சுமார் 60.81 எக்டேர் பரப்பளவில் 26,400 தேக்கு மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

83—

காலிப் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 41391—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வனத் துறையில் களப்பணியாளர் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் வனத் துறையில் களப்பணியாளர் காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நேரடி நியமனம்மூலம் நிரப்பப்பட வேண்டிய வனச் சரக அலுவலர் காலிப் பணியிடங்களுக்கு தேர்வுகள் நடத்தப்பட்டு, முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அரசாணை (நிலை) எண் 157, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வ-2) துறை, நாள் 29-6-2012-ன்படி வனத் துறையில் காலியாக உள்ள வனவர்/வனக் காப்பாளர்/ ஓட்டுநர் உரிமத்துடன்கூடிய வனக் காப்பாளர்/வனக் காவலர் பணியிடங்களை நேரடி நியமனம்மூலம் "தமிழ்நாடு வனச் சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்" (Tamil Nadu Forest Uniformed Services Recruitment Committee) வாயிலாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு வனச் சார்நிலைப் பணி விதிகளில் திருத்தங்கள் வெளியிடுவதற்கு இன்னும் சிறிது காலம் ஆகும் என்பதால், தமிழ்நாடு வனச் சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் வாயிலாக நேரடி நியமனம்மூலம் நிரப்பப்பட வேண்டிய காலிப் பணியிடங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட வேலை வாய்ப்பகம் வாயிலாக நிரப்புவதற்கு மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2014 ஜூலை 30

2012-2013 ஆம் ஆண்டு வரை உள்ள வனவர்களுக்கு, வனச் சரக அலுவலராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டது. மேலும், காலிப் பணியிடங்கள் மிகுதியாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, விதிகளைத் தளர்வு செய்து, வனவர் பதவியில் ஆறு வருடம் பணி முடித்த வனவர்களில், தகுதிவாய்ந்த வனவர்களுக்கு வனச் சரக அலுவலராக பதவி உயர்வு வழங்கப்பட்டது. 2013-2014 ஆம் ஆண்டிற்கு வனச் சரக அலுவலராகப் பதவி உயர்வு வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2011-2012 ஆம் ஆண்டிற்கு வனக் காவலர் பதவியிலிருந்து வனக் காப்பாளராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டது. 2012-2013 ஆம் ஆண்டிற்கு வனக் காப்பாளராகப் பதவி உயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், மாநில முதுநிலைப் பட்டியலின்படி தோட்டக் காவலராகப் பணிபுரியும் நபர்களில், தகுதியுள்ள 134 நபர்களுக்கு வனக் காவலராக பணி நியமனம் செய்யப்பட்டது. மேலும், மாநில முதுநிலை பட்டியலின்படி, தோட்டக் காவலராகப் பணிபுரியும் நபர்களில், வனக் காவலர் மற்றும் மாலி பதவிகளுக்கு தகுதியுள்ள நபர்களின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு, வனக் காவலர் மற்றும் மாலியாகவும் நியமனம் செய்ய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

84—

மூட்செடிகளை அகற்றுதல்

வினா எண் 41528—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், முதுமலைக் காட்டில் பரவிவரும் முள் செடிகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், முதுமலைக் காட்டில் பரவிவரும் முள் செடிகளை அக்ற்றுவதற்கான கருத்துரு புலிகள் பாதுகாப்புத் திட்ட அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும்

2014 ஜூலை 30]

நிருவாகக் கொள்ளளவு, வன உயிரினங்களுக்கு இடையூறு ஏற்படாமை, வேலை ஆட்கள் குறைபாடு மற்றும் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தொடர்ந்து முன் செடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. இப்பணிகள் தொடர்பாக, கடந்த 2009-2010 ஆம் ஆண்டு முதல் 2012-2013 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டவை பின்வருமாறு:

வ. எண்	இட்டங்களின் பெயர்	2009—2010		2010—2011		2011—2012		2012—2013	
		பரப்பளவு ஹெக்டரில்	செலவுத் தொகை ரூபாய் லட்சத்தில்	பரப்பளவு ஹெக்டரில்	செலவுத் தொகை ரூபாய் லட்சத்தில்	பரப்பளவு ஹெக்டரில்	செலவுத் தொகை ரூபாய் லட்சத்தில்	பரப்பளவு ஹெக்டரில்	செலவுத் தொகை ரூபாய் லட்சத்தில்
1.	புலிகள் திட்டம்	200	10.00	200	10.00	200	32.00	200	8.00
2.	மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்	200	10.00	50	2.50	100	13.00	50	15.64
3.	இவன உற்பத்தித் திட்டம்	0	0.00	0	0.00	70	10.08	65	10.30
4.	புலிகள் பாதுகாப்பு அறக்கட்டளை	0	0.00	0	0.00	76	3.92	90	7.65
	மொத்தம்	400	20.00	250	12.50	446	59.00	405	41.59

மேலும், வருடந்தோறும் 1,000 எக்டர் வீதம் முட்செடிகளை அகற்றி, பத்து ஆண்டுகளில் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

85—

காலிப் பணியிடங்கள்

வினா எண் 5437—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் காலியாக உள்ள 27 பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டத்தில், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையில் காலியாகவுள்ள 26 பணியிடங்களில் 23 பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு விட்டன. தவிர, நேர்காணலில் பணி நாடுநர்கள் எவரும் கலந்து கொள்ளாததால் 3 சமையலர் பணியிடங்களை நிரப்ப திருப்பூர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

86—

சிறுபான்மையினருக்கான நிதியுதவி

வினா எண் 17972—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மறுவாழ்வு நிதி உதவித் திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு எவ்வளவு நிதியுதவி அளிக்கப்பட்டது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

மறுவாழ்வு நிதி உதவித் திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் நிதியாண்டில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த எவருக்கும் நிதியுதவி வழங்கப்படவில்லை. இருப்பினும், இதுவரை, மொத்தம் 14 நபர்களுக்கு தலா ரூ.10,000/- வீதம் மொத்தம் ரூ.1,40,000/- கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:

2014 ஜூலை 30]

ஆண்டு	பயனாளிகளின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை
2009-2010	5	ரூ.50,000/-
2010-2011	5	ரூ.50,000/-
2011-2012	—	—
2012-2013	2	ரூ.20,000/-
2013-2014	2	ரூ.20,000/-
மொத்தம்	14	ரூ.1,40,000/-

87—

முஸ்லீம் வியாபாரிகளுக்குக் கடனுதவி

வினா எண் 41578—திரு. அ. அல்லம் பாஷா: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதியிலுள்ள சிறுபான்மை முஸ்லிம் சிறு வியாபாரிகளுக்கு "டாம்கோ" (TAMCO) மூலம் கடன் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் டாம்கோமூலம் சிறுபான்மையின மக்களுக்கு சிறு கடன்கள் சில நிபந்தனைகளுக்குட்பட்டு கூட்டுறவு வங்கிகள்மூலம் வழங்குவது நடைமுறையில் உள்ளது. எனவே, ஆம்பூர் தொகுதி சிறுபான்மையின மக்களும் இக்கடன்களைப் பெற்று பயனடையலாம்.

[2014 ஜூலை 30

88—

அறிவிப்பு இசைக்கருவிகள் வழங்குதல்

வினா எண் 41749—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பள்ளி வாசல்களுக்கும், அறிவிப்பு இசைக்கருவி (டமாரம்) வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பள்ளி வாசல்களுக்கும், அறிவிப்பு இசைக்கருவி (டமாரம்) வழங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

89—

விலையில்லா மூலிகை நாற்றுகளை வழங்குதல்

வினா எண் 29367—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, மகுடஞ்சாவடி, எடங்கணசாலை, தாரமங்கலம், அரசிராமணி கிராமம், மோரூர் மேற்கு ஆகிய கிராமங்களுக்கு விலையில்லா மூலிகை நாற்றுகளை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) தற்சமயம் டாம்ப்கால்வசம் மூலிகைப் பண்ணைகள் எதுவும் பராமரிப்பில் இல்லை. மேலும், டாம்ப்கால் நிறுவனம் இந்திய மருந்துகளான சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகள்,

2014 ஜூலை 30]

மூலிகைக் கூந்தல் தைலம் போன்ற மருந்துகள் தயாரிப்பில் முழுக் கவனம் செலுத்தி வருவதால், விலையில்லா மூலிகை நாற்றுகளை வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எனவே, இக்கேள்வி எழவில்லை.

90—

மூலிகைச் செடிகள் வழங்குதல்

வினா எண் 29368—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதியில் தனியார் மூலிகைப் பண்ணைகள் அமைத்து மூலிகைச் செடிகளை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) தற்சமயம் டாம்ப்கால்வசம் மூலிகைப் பண்ணைகள் எதுவும் பராமரிப்பில் இல்லை. மேலும், டாம்ப்கால் நிறுவனம் இந்திய மருந்துகளான சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி மருந்துகள், மூலிகைக் கூந்தல் தைலம் போன்ற மருந்துகள் தயாரிப்பில் முழுக் கவனம் செலுத்தி வருவதால், சங்கரி தொகுதியில் தனியார் மூலிகைப் பண்ணைகள் அமைத்து மூலிகைச் செடிகள் வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எனவே, இக்கேள்வி எழவில்லை.

91—

பணியாளர்கள் நியமனம்

வினா எண் 30311—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கோட்டாரில் செயல்படும் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி தொடர்ந்து செயல்படவும், தேவையான பணியாளர்களை நியமிக்கவும், அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கோட்டாரில் செயல்படும் அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் வெற்றிடமாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்பும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) எனவே, இக்கேள்வி எழவில்லை.

92—

தனிக் கட்டடம் அமைத்தல்

வினா எண் 34395—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மாவட்ட அரசினர் தலைமை மருத்துவமனை, சித்த மருத்துவப் பிரிவில் மின்நடைப் பயிற்சி சாதனம், மின்சார மிதிவண்டி, தொக்கண மேடை (முசாஜ்), நீராவிக் குளியல் கருவிகளைப் பராமரிக்க தனிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மாவட்ட அரசினர் தலைமை மருத்துவமனையில் செயல்பட்டுவரும் சித்த மருத்துவப் பிரிவில்

2014 ஜூலை 30]

உள்ள மின்நடைப் பயிற்சி சாதனம், மின்சார மிதிவண்டி, தொக்கண மேடை (மசாஜ்), நீராவிக் குளியல் கருவிகள் போன்றவை போதுமான இடவசதியில் நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) எனவே, இக்கேள்வி எழவில்லை.

93—

மின்னாக்கியை இயக்கூடல்

வினா எண் 34505—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கோட்டார் அரசு ஆயுர்வேத கல்லூரியில் மின்னாக்கியை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்ட அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் ஜனவரி 2013 இல் புதிய மின்னாக்கி நிறுவப்பட்டு, தற்போது உபயோகத்தில் உள்ளது.

(ஆ) எனவே, இக்கேள்வி எழவில்லை.

94—

தனிக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 34520—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார் கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் அரசு மருத்துமவனையில் சித்தா மருத்துவப் பிரிவிற்கு தனிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவப் பிரிவிற்கு தனியாகக் கட்டடம் கட்ட போதிய இட வசதி உள்ளது. சட்டமன்ற உறுப்பினர், தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சித்த மருத்துவப் பிரிவிற்குத் தனியாகக் கட்டடம் கட்டித் தர தேவையான நிதியை வழங்க காட்டுமன்னார்கோவில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. கோரப்பட்ட நிதி ஒதுக்கிடு செய்யப்படும் பட்சத்தில், ஸ்ரீமுஷ்ணம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் செயல்படும் சித்த மருத்துவப் பிரிவிற்கு தனிக் கட்டடம் கட்டித் தரப்படும். மேலும், மத்திய அரசிடமிருந்து உரிய நிதியுதவி கிடைக்கப் பெற்றாலும், முன்னுரிமை அடிப்படையில் தனிக் கட்டடம் கட்டித் தரப்படும்.

(ஆ) எனவே, இக்கேள்வி எழவில்லை.

95—

சீரான குடிநீர் வழங்குதல்

வினா எண் 34529—திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கோட்டார் அரசு ஆயுர்வேத கல்லூரிக்கு சீரான குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்ட அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நகராட்சி குடிநீர் இணைப்புகள் மூன்று, கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இரண்டு, ஆழ்துளைக் கிணறு ஒன்று மற்றும் கிணறு ஒன்று ஆகியவை உள்ளன. இவற்றைக்

2014 ஜூலை 30]

கொண்டு, கல்லூரி மருத்துவமனை மற்றும் மாணவர் விடுதிகளுக்கு குடிநீர் தடைபடாமல் தொடர்ந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கல்லூரி வளாகத்தில் தண்ணீர் தட்டுப்பாடு இல்லை.

(ஆ) எனவே, இக்கேள்வி எழவில்லை.

96—

மருத்துவ அலுவலர்கள் நியமனம்

வினா எண் 34553—திரு. பொன். ராஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, தேவம்பட்டு, காட்டூர், அத்திப்பட்டு, ஏனம்பாக்கம் மற்றும் ஆரணி பகுதிகளின் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், பெரியபாளையம் மற்றும் பூதூர் நடமாடும் மருத்துவப் பிரிவுக்கும் மருத்துவ அலுவலர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள தேவம்பட்டு, அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட 2 மருத்துவ அலுவலர் பணியிடங்கள், காட்டூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட 2 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் மற்றும் அத்திப்பட்டு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட 2 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் ஆகிய அனைத்திலும் மருத்துவ அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். ஏனம்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட 2 மருத்துவ அலுவலர் பணியிடங்களில், ஒரு மருத்துவ அலுவலர் பணிபுரிந்து வருகிறார். மற்றொருவர் பணியிட மாறுதலில் சென்றுள்ளார். அதேபோல், ஆரணி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட இரண்டு மருத்துவ அலுவலர் பணியிடங்களில் ஒரு மருத்துவ அலுவலர் பணிபுரிந்து வருகிறார். மற்றொரு மருத்துவ அலுவலர் முதுகலை பட்டப் படிப்பு பயில சென்றுள்ளார். பெரியபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்த மருத்துவர்கள் சுழற்சி முறையில் நடமாடும் மருத்துவக்

[2014 ஜூலை 30

குழுவில் பணியாற்றி வருகின்றனர். அதேபோல், பூதூர் சுகாதார நிலையத்தில் பணிபுரியும் உதவி மருத்துவ அலுவலர் நடமாடும் மருத்துவக் குழுவில் பணியில் உள்ளார்.

97—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 37290—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், மித்திராவயல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள மித்திராவயல் துணை சுகாதார நிலையம் மற்றும் புதுவயல் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவை பீர்க்கலைக்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்தவை. மித்திராவயல் துணை சுகாதார நிலையத்தில் திருமதி கே. கல்யாணி என்ற கிராம சுகாதார செவிலியர் பணிபுரிந்து வருகிறார். அரசு விதிகளின்படி துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணியிடம் ஒப்பளிப்பு இல்லை. மேலும், புதுவயல் நடமாடும் மருத்துவக் குழு, மருத்துவ அலுவலர் தலைமையில் மித்திராவயல் கிராமத்திற்குச் சென்று, அங்குள்ள நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளித்து வருகின்றது.

98—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 37332—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், ஆம்பக்குடி ஊராட்சி, பெத்தாச்சி குடியிருப்பு சுகாதார நிலையத்திற்கு மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, சாக்கோட்டை ஒன்றியம், பெத்தாச்சி குடியிருப்பு துணை சுகாதார நிலையம், புதுவயல் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த பிர்க்கலைக்காடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்டதாகும். அத்துணை சுகாதார நிலையத்தில், கிராம சுகாதார செவிலியர் திருமதி ரஞ்சிதம் என்பவர் பணிபுரிந்து வருகிறார். அரசு விதிகளின்படி துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணியிடம் ஒப்பளிப்பு இல்லை. மேலும், புதுவயல் நடமாடும் மருத்துவக் குழு, மருத்துவ அலுவலர் தலைமையில் பெத்தாச்சி குடியிருப்பு கிராமத்திற்குச் சென்று நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளித்து வருகின்றது.

99—

மருத்துவர் நியமனம்

வினா எண் 39663—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, திருப்பூர் வட்டம், கண்டியன் கோவில் கிராமம், பூசாரிபாளையத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பொங்கலூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட கொடுவாய் ஆரம்ப சுகாதார் நிலையத்தின்கீழ் செயல்படும் பூசாரிபாளையத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அரசு விதிகளின்படி, துணை சுகாதார நிலையத்திற்கென மருத்துவர்களை நியமிப்பது இல்லை. மேலும், பொங்கலூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலைய நடமாடும் மருத்துவக் குழுவினர் மேற்படி பூசாரிபாளையத்திற்குச் சென்று மருத்துவ சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

100—

மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்துதல்

வினா எண் 40450—திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரியில் மாணவர்களின் வருடாந்திர சேர்க்கை எண்ணிக்கையை ஐம்பதிலிருந்து நூறாக உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) தற்போது மாநிலத்தில் அரசுத் துறையின்கீழ் மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இது தவிர, சுயநிதி ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகள் 8 செயல்பட்டு வருகின்றன. அரசுக், கல்லூரியில் 50 இடங்களும், சுயநிதிக் கல்லூரிகளில் 550 இடங்களும் உள்ளன. இதில் அரசுக் கல்லூரிகளில் உள்ள அனைத்து இடங்களும் ஆண்டுதோறும் நிரம்பிவிடுகின்றன. ஆனால், சுயநிதிக் கல்லூரிகளில் உள்ள அரசு

2014 ஜூலை 30]

ஒதுக்கீட்டிற்கான 330 இடங்களும் முழுமையாக நிரம்புவது இல்லை. எனவே, ஓமியோபதி மருத்துவக் கல்விக்கான தற்போதைய மாநிலத் தேவையைப் பூர்த்தி செய்ய இவ்விடங்கள் போதுமானவையாக உள்ளன என்பதால், திருமங்கலம் அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரியில் உள்ள மாணவர் சேர்க்கையை ஐம்பதிலிருந்து நூறாக உயர்த்தும் கருத்துரு ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) முதல் வினாவிற்கு அளிக்கப்பட்டுள்ள பதிலின் அடிப்படையில், தேவை எழவில்லை.

பட்டியல் 7

1—

தடுப்புப் பலகை அமைத்தல்

வினா எண் 33810—திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வேளூர் தொகுதி, திருக்கண்ணங்குடி வாய்க்கால் சேர்வாரியில் தடுப்புப் பலகை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கீழ்வேளூர் தொகுதி, திருக்கண்ணங்குடி வாய்க்காலின் பழைய தடுப்புப் பலகையை மாற்றி புதிதாக தடுப்புப் பலகை பொருத்தும் பணி செய்து முடிக்கப்பட்டுவிட்டது.

2—

குழல் விளக்குகள் வழங்குதல்

வினா எண் 16107—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) இந்திய அரசின் எரிசக்தி திறனூக்க செயலகம் (BEE) (பச்சத் லேம்ப் யோஜனா) என்ற திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் 15 ரூபாய் குழல் விளக்குகள் வழங்கப்பட்டன?

(ஆ) இவ்வாறு வழங்கிய குழல் விளக்குமூலம் மின் சேமிப்பு எட்டப்பட்டதா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 22 மின் பகிர்மான வட்டங்களில், இந்திய அரசின் எரிசக்தி திறனூக்க செயலாக்கத்தால் வடிவமைக்கப்பட்ட "பச்சத் லேம்ப் யோஜனா" திட்டத்தின்கீழ், மின் அளவி பொருத்தப்பட்டு மின் கணக்கீடு செய்யப்படும் வீட்டு மின் உபயோகிப்பாளர்களுக்கு, குமிழ் விளக்குகளுக்குப் பதிலாக சிறு குழல் விளக்குகள் மிகக் குறைந்த விலையில், விளக்கு ஒன்றிற்கு ரூ.15/- வீதம் வழங்கும் இத்திட்டத்தினை, சில்வர் பிர் அட்வைசர்ஸ் பி.லிட்., நொய்டா என்ற திட்ட மேம்பாட்டாளர்மூலம் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இத்திட்டமானது 12-9-2010 அன்று கடலூர் மாவட்டத்தில் உள்ள சிதம்பரத்தில் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பங்கேற்ற சிதம்பரம் கோட்டத்தைச் சார்ந்த முட்டம் கிராமத்தில், 296 நுகர்வோர்களுக்கு, 1,167 எண்ணிக்கையுள்ள 11 வாட் சிறு குழல் விளக்குகள் செப்டம்பர் 2010-ல் வழங்கப்பட்டன.

இத்திட்டம் துவக்கப்பட்ட முட்டம் கிராமத்தினைத் தவிர மற்ற ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கு இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு முன்வராமல், திட்ட மேம்பாட்டாளர் காலம் தாழ்த்திய காரணத்தினால், அந்நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இரத்து செய்யப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

(ஆ) 296 மின் இணைப்புகளுக்கு குழல் விளக்குகள் வழங்கியதின் மூலம் செப்டம்பர் 15 முதல் டிசம்பர் 15 வரையிலான காலத்திற்குள்

2014 ஜூலை 30]

சேமிக்கப்பட்ட மின்சாரத்தின் அளவானது 14,556 யூனிட்டுகள் என கணக்கிடப்பட்டுள்ளது.

3—

மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31218—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், வண்ணாங்குளம், பக்கிஸ் நகர் சாலைத் தெரு, குறுக்குத் தெரு மற்றும் 2-வது தெருவில் புதிய மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, வண்ணாங்குளம் ஊராட்சி, பக்கிஸ் நகர் சாலைத் தெருவில் 3 கையடக்க குழல் விளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. பக்கிஸ் நகர் சாலைத் தெருவில் இரண்டு புதிய தெரு விளக்குகள் கோரி விண்ணப்பம் பெறப்பட்டு, மதிப்பீட்டுத் தொகை ரூ.18,930/- பெறப்பட்டுள்ளது. மேலும், குறுக்குத் தெருவில் இரண்டு கூடுதல் தெரு விளக்குகள் மற்றும் பக்கிஸ் நகர் சாலைத் தெருவில் இரண்டு புதிய தெரு விளக்குகள் கோரி விண்ணப்பம் பெறப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டன. குறுக்குத் தெருவில் 29-6-2013 அன்றும், பக்கிஸ் நகர் சாலைத் தெருவில் 9-10-2013 அன்றும் மின் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

4—

மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31238—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், ஆகாரம் கலைஞர் நகர் சாலைத் தெரு, 1, 2 மற்றும் 3-வது தெருக்களில் புதிய மின் கம்பங்களுடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், ஆகாரம் கலைஞர் நகர் சாலைத் தெரு, 1, 2 மற்றும் 3-வது தெருக்களில் 2 கையடக்க குழல் விளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிக்கு கூடுதல் தெரு விளக்குகள் வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டு, மதிப்பீட்டுத் தொகை ரூ.8,890/- (5-4-2013) அன்று பெறப்பட்டு பணிகள் 4-5-2013 அன்று முடிக்கப்பட்டு புதிய தெரு விளக்குகள் அமைக்கப்பட்டன.

5—

மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31250—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், ஆகாரம் ஆதி திராவிடர் நகர், மாரியம்மன் கோயில் தெரு மற்றும் காலனி 3-வது தெருவில் புதிய மின் கம்பத்துடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், ஆதி திராவிடர் நகர், மாரியம்மன் கோயில் தெரு மற்றும் காலனி 3-வது தெருவில் ஏற்கெனவே 15 கையடக்க குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு ப்யன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிக்கு

2014 ஜூலை 30]

கூடுதல் தெரு விளக்குகள் வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டு மதிப்பீட்டுத் தொகை ரூ.8,890/- (5-4-2013) அன்று பெறப்பட்டுள்ளது. பணிகள் முடிக்கப்பட்டு, 4-5-2013 அன்று மின் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

6—

மின் விளக்குகள் அமைத்தல்

வினா எண் 31274—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், எஸ்.புத்தூர், மதுரா சின்னபுத்தூர், ஒத்தவாரை தெரு, பஜனை கோயில் தெரு, மாரியம்மன் கோயில் தெரு, பிள்ளையார்கோயில் தெரு மற்றும் குஞ்சாந்தாங்கல் பஜனை கோயில் தெரு ஆகிய தெருக்களில் புதிய மின் கம்பங்களுடன்கூடிய மின் விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஒன்றியம், எஸ்.புத்தூர், மதுரா சின்னபுத்தூர், ஒத்தவாரை தெருவில் 3 குழல் விளக்குகளும், பஜனை கோயில் தெருவில் 1 கையடக்க குழல் விளக்கும், 5 குழல் விளக்குகளும், 2 சோடியம் விளக்குகளும் உள்ளன. மாரியம்மன் கோயில் தெருவில் 2 கையடக்க குழல் விளக்குகளும், 6 குழல் விளக்குகளும் உள்ளன. பிள்ளையார்கோயில் தெருவில் 4 கையடக்கக் குழல் விளக்குகளும், 1 குழல் விளக்கும், 1 சோடியம் விளக்கும் உள்ளன. குஞ்சாந்தாங்கல் பஜனை கோயில் தெருவில் 1 குழல் விளக்கும், 3 கையடக்க குழல் விளக்குகளும் பயன்பாட்டில் உள்ளன. மேலும், குஞ்சாந்தாங்கல் பஜனை கோயில் தெருவில் கூடுதலாக இரண்டு தெரு விளக்குக் கோரி விண்ணப்பம் பெறப்பட்டு, ரூ.22,935/- மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. பணிகள் முடிக்கப்பட்டு, 29-6-2013 அன்று மின் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

[2014 ஜூலை 30

7—

புதிய மின்மாற்றிகள் வழங்குதல்

வினா எண் 31538—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சிறான மின் விநியோகத்திற்காக நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய புதிய மின்மாற்றிகளை வாங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 11 கி.வோ. மற்றும் 22 கி.வோ. மின் அமைப்புகளுக்கு வழக்கமான பல திறன் கொண்ட பகிர்மான மின்மாற்றிகள் 2010-2011 வரை கொள்முதல் செய்யப்பட்டன. பின்னர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மற்றும் மத்திய மின்சார ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, 110 கே.வி.ஏ/ 11 கி.வோ./443 வோ. மூன்று நட்சத்திர குறியிட்ட பகிர்மான மின்மாற்றிகள் கொள்முதல் செய்யப்பட்டன. 12-9-2011-லிருந்து கொள்முதல் ஆணைகள் வழங்கப்படுகின்றன.

தற்போது நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய மூன்று நட்சத்திர குறியிட்ட (3 star rated) மற்றும் செயல்திறன் மிக்க (Energy Efficient) பகிர்மான மின்மாற்றிகள் 11 கி.வோ. மற்றும் 22 கி.வோ. மின் அமைப்புகளுக்கு கொள்முதல் செய்யப்படுகின்றன. மேலும், சிறான மின் விநியோகத்திற்காக மாண்புமிகு தமிழக முதல்வரின் உத்தரவின் பேரில் பல்வேறு திறன் கொண்ட 20,000 மின்மாற்றிகள் கொள்முதல் செய்யப்பட்டு, மேற்கண்ட மின்மாற்றிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

2014 ஜூலை 30]

இ—

வேலி அமைத்தல்

வினா எண் 31541—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர்-ராதாபுரம் சாலையில் தெற்கு வள்ளியூர் விலக்கிற்கு முன்பாக உள்ள மின்மாற்றிக்கு வேலி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர்-ராதாபுரம் சாலையில் தெற்கு வள்ளியூர் விலக்கிற்கு முன்பாக சாலையின் ஓரமாக உள்ள மின்மாற்றிக்கு வேலி 19-6-2013 அன்று அமைக்கப்பட்டுவிட்டது.

10—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 32030—திரு. ஏ.எ. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பையூர் காலனி 3-வது தெரு மற்றும் பனையூர் காலனி டேங்க் தெருவில் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், பையூர் காலனி 3-வது தெரு மற்றும் பனையூர் காலனி டேங்க் தெருவில் மின் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

11—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 32088—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பட்டி அருந்ததிபாளையம், ரேணுகாம்பாள் 3-வது மற்றும் 4-வது தெருக்களில் மின் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், அரியப்பாடி அருந்ததிபாளையம், ரேணுகாம்பாள் 3-வது மற்றும் 4-வது தெருக்களில் 12 குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதியில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2014 ஜூலை 30]
12—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 32103—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு, காமராஜர் நகர், நாடகமேடை தெரு, குறுக்குத்தெரு, அண்ணா நகர் குறுக்குத்தெரு, மாரியம்மன் கோயில் தெரு, அண்ணா நகர் பழங்காமூர் சாலை, அண்ணா நகர் குறுக்குத் தெரு, காமராஜர் நகர் சாலை ஆகிய பகுதிகளில் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், இரும்பேடு, காமராஜர் நகரில் 2 குழல் விளக்குகளும், 6 கையடக்கக் குழல் விளக்குகளும், 2 சோடியம் ஆவி விளக்குகளும், நாடகமேடை தெருவில் 3 குழல் விளக்குகளும், குறுக்குத் தெருவில் 5 குழல் விளக்குகளும், 2 கையடக்கக் குழல் விளக்குகளும் 1 சோடியம் ஆவி விளக்கும், அண்ணா நகர் குறுக்குத் தெரு, மாரியம்மன் கோயில் தெரு, அண்ணா நகர் பழங்காமூர் சாலை, அண்ணா நகர் குறுக்குத் தெரு, காமராஜர் நகர் சாலை ஆகிய பகுதிகளில் 2 குழல் விளக்குகளும், 9 கையடக்கக் குழல் விளக்குகளும், ஒரு சோடியம் ஆவி விளக்கும் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்படி பகுதிகளில் கூடுதல் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2014 ஜூலை 30

13—

துணை மின் நிலையத்தை மாற்றியமைத்தல்

வினா எண் 34491—திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, மழையூரில் புதியதாக அமையவிருக்கும் 110 கே.வி. துணை மின் நிலையத்தை 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் நிலையமாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, மழையூரில் புதியதாக அமையவிருக்கும் 110/22 கே.வி. துணை மின் நிலையத்தில் எதிர்பார்க்கப்படும் உச்ச மின்பளு 7 எம்.வி.ஏ. மட்டுமே. ஆகவே, இத்துணை மின் நிலையத்தில் அமையவிருக்கும் 10 எம்.வி.ஏ. மின்மாற்றியே போதுமானதாகும். எனவே, 16 எம்.வி.ஏ. மின்மாற்றி அமைக்க தற்பொழுது அவசியம் எழவில்லை.

14—

மின் கம்பத்தை மாற்றியமைத்தல்

வினா எண் 34803—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், செலுகை ஊராட்சி, பாலக்குடி காளிகோயில் அருகில் சிவனூர் இராமம், கோயில்குடியிருப்பு, மருதனேந்தல் குடியிருப்பு, செலுகை, இடையகுடி மற்றும் செருக்கண் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள மின் கம்பத்தை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், செலுகை ஊராட்சி, பாலக்குடி காளிகோயில் அருகில் கடந்த 24-7-2013 அன்றும், சிவனூர் கிராமம், கோயில் குடியிருப்பில் 30-7-2013 அன்றும் 2 எண்ணம் மின்கம்பங்கள் மாற்றப்பட்டு விட்டன. மேலும், மருதனேந்தல் குடியிருப்பு, செலுகை, இடையகுடி மற்றும் செருக்கன் குடியிருப்பு ஆகிய பகுதிகளில் பழுதடைந்த மின்கம்பங்கள் தொடர்பாக இடத்தினை ஆய்வு செய்து மதிப்பீடு தயார் செய்து பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

15—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 35042—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், புதுக்குறிச்சி ஊராட்சிக்குட்பட்ட புதுக்குறிச்சி கிராமம் மற்றும் வாடிதன்னியூர் அரசமடையார் கோயில் ஆகிய கிராமங்களில் புதிய மின்கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை ஒன்றியம், புதுக்குறிச்சி ஊராட்சிக்குட்பட்ட புதுக்குறிச்சி கிராமம் மற்றும் வாடிதன்னியூர் அரசமடையார் கோயில் ஆகிய கிராமங்களில் புதிய மின்கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை.

[2014 ஜூலை 30

விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

16—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 35965—திருமதி ர. சுபா: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், சார்வாய் ஊராட்சி, புது காலனியில் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், சார்வாய் ஊராட்சி, புது காலனியில் கம்பத்துடன்கூடிய தெரு விளக்குகள் அமைக்கக் கோரி ஊராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால், தெரு விளக்குகள் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

17—

மின் கம்பங்களை மாற்றியமைத்தல்

வினா எண் 37704—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மாதவரத்தில் உள்ள பழுதான மின் கம்பங்களை மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, மாதவரத்தில் பழுதான மின் கம்பங்கள் கண்டறியப்பட்டு, அவற்றை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

18—

கம்பிவடம் பதித்தல்

வினா எண் 37705—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மாதவரத்தில் தாழ்வாகச் செல்லும் மின் கம்பங்களுக்குப் பதிலாக பூமிக்கு அடியில் கம்பிவடம் பதித்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாதவரத்தின் ஒரு பகுதியான வடபெரும்பாக்கத்தில் தாழ்வழுத்த மின் பாதைகளில் உள்ள மின் கம்பிகளை புதைவடமாக பூமிக்கடியில் அமைக்க RAPDRP திட்டத்தின்கீழ் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கூறிய பணிகள் 2014-2015 நிதியாண்டில் முடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள பகுதிகளில் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும். மேலும், மின்கம்பிகள் தகுந்த உயரத்தில்தான் அமைக்கப்பட்டுள்ளன.

19—

மும்முனை மின் இணைப்பு

வினா எண் 37720—திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை தொகுதிக்குட்பட்ட மீனாம்பாள்புரம், சத்தியமூர்த்தி தெருவில் மும்முனை மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மதுரை தொகுதிக்குட்பட்ட மீனாம்பாள்புரம், சத்தியமூர்த்தி தெருவில் ஏற்கெனவே பழமையான பி.வி.சி. மும்முனை மின் வயர்கள் இருந்தன. அந்த பழமையான பி.வி.சி. மும்முனை மின் வயர்களுக்குப் பதிலாக புதிதாக மும்முனை அலுமினிய மின்கம்பி மாற்றப்பட்டுள்ளது.

20—

குளங்களைத் தூர் வாருதல்

வினா எண் 19828—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சி சாலைகளை சீர்செய்திடவும், உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் உள்ள குளங்களைத் தூர் வாரிடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி, மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் 2010-2011 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் நான்கு கிராமச் சாலைகளும், 2010-2011 ஆம் ஆண்டு ஊரக உள்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.1.14 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கிராம சாலையும் மற்றும் 2011-2012 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் ஒரு கிராம சாலையும் ஆக மொத்தம் ஆறு எண்ணிக்கையிலான கிராம சாலைப் பணிகள் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.17.64 இலட்சத்தில் செய்து முடிக்கப்பட்டு அவை பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

2. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டில் ரூ.49.77 இலட்சம் மதிப்பீட்டு தொகையில் ஒன்பது குளங்களும், 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.60.06 இலட்ச மதிப்பீட்டு தொகையில் ஒன்பது குளங்களும் மற்றும் 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.45.50 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் பன்னிரெண்டு குளங்களும் ஆக மொத்தம் 30 எண்ணிக்கையிலான கிராம ஊராட்சி குளங்கள் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.155.33 இலட்சத்தில் தூர் வாரப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியில் ஊரகப் பகுதிகளில் அவ்வப்போது பழுதடைகின்ற கிராம ஊராட்சிச் சாலைகள் மற்றும் குளங்கள், அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

21—

உயர் மின் கோபுர விளக்குகள் அமைத்தல்

வினா எண் 21161—திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) பல்லடம் தொகுதி, அவினாசி, திருப்பூர், பல்லடம், பொள்ளாச்சி, சாலை சின்னக்கரை, அருள்புரம் ஆகிய இடங்களில் உயர் மின் கோபுர விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதிக்குட்பட்ட பல்லடம் பொள்ளாச்சி சாலை, பல்லடம் திருப்பூர் சாலை மற்றும் பல்லடம் நகராட்சிப், பகுதிகளில் 5 இடங்களில் சிறிய மின் கோபுர மின் விளக்குகளும், பொள்ளாச்சி சாலையில் ஓரிடத்தில் உயர் மின் கோபுர விளக்கும் அமைக்கப்பட்டுள்ளதால், மேலும் உயர் மின் கோபுர விளக்குகள் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

22—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 28946—திரு. கு. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், உளியம்பாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பயிலும் குழந்தைகளின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், உளியம்பாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், தற்போது 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டி அமைக்கப்பட்டு, குடிநீர்த் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, உளியம்பாக்கம்

2014 ஜூலை 30]

ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

23—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 29308—திரு. கூ. ரவி: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டை கிராமம், நரசிம்மன் தெருவில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, குருவராஜப்பேட்டை கிராமத்தின் மக்கள்தொகை 4,398 ஆகும். தற்போது, இக்கிராமத்திற்கென இரண்டு 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் ஒரு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மூன்று தனி மின்விசைத் திட்டங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. மேலும், இக்கிராமத்திற்கு உட்பட்ட நரசிம்மன் தெருவிற்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் குடிநீர் விநியோகம் நல்லமுறையில் செய்யப்பட்டு வருகிறது. இக்கிராமத்தின் தற்போதைய மக்கள்தொகைக்கு ஏற்ப குடிநீர்த் திட்டங்கள் நல்ல முறையில் செயல்பாட்டில் உள்ளதால், கூடுதலாக நரசிம்மன் தெருவிற்கென 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

24—

கை இறைப்பானை சிறுமின் விசை இறைப்பானாக மாற்றுதல்

வினா எண் 30581—திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி 9-வது வட்டம், முத்துமாரியம்மன் கோயில் தெரு மற்றும் ஒத்தவாடை தெருவில் உள்ள கை இறைப்பானை சிறு மின்விசை இறைப்பானாக மாற்றித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி 9-வது வட்டம், முத்துமாரியம்மன் கோயில் தெரு மற்றும் ஒத்தவாடை தெருக்களில் உள்ள கையிறைப்பான்கள் சிறு மின்விசை இறைப்பான்களாக மாற்றப்பட்டு தற்பொழுது பொதுமக்களின் பயன்பாட்டிலுள்ளன.

25—

குடிநீர் வழங்குதல்

வினா எண் 31142—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், வி.கே. புரம் நகராட்சியில் குடிநீர் சீராக வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விக்ரமசிங்கபுரம் நகராட்சியில், தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் மற்றும் சிறு மின்விசை குடிநீர்த் திட்டங்கள்மூலம் 47,163 மக்கள்தொகை கொண்ட இந்நகராட்சிக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 100 லிட்டர் வீதம் 47.00 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2012-2013-ன்கீழ் டாணா மற்றும் வம்பளந்தான்பாறை ஆகிய இடங்களில் மின் தட்டுப்பாட்டினை சமாளிக்கும்பொருட்டு, ரூ.8.60 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு ஜெனரேட்டர்கள் நிறுவும் பணி முடிவுற்று, தற்போது குடிநீர் சீரான முறையில் வழங்கப்பட்டு வருகிறது.

26—

பேருந்து நிலையத்தை விரிவாக்குதல்

வினா எண் 34222—முஸ்னவ் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகராட்சி, புதிய பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் நகராட்சியின் புதிய பேருந்து நிலையம் 2 ஏக்கர் பரப்பளவில் மதுரை—இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை மற்றும் திருச்சி—இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலைகளின் சந்திப்புப் பகுதியில் அமைந்துள்ளது.

[2014 ஜூலை 30

இப்பேருந்து நிலையம் 25 பேருந்து நிறுத்தங்களை (Bus Bays) கொண்ட "பி" பிரிவு பேருந்து நிலையமாகும். நாளொன்றுக்கு சுமார் 320 அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் இப்பேருந்து நிலையத்திற்கு வந்து செல்கின்றன. இப்பேருந்து நிலையத்திற்குள் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், இலவச மற்றும் கட்டண கழிப்பறை வசதிகளும், குடிநீர் வசதியும் நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பயணிகள் பாதுகாப்பிற்கென காவல் துறையினரின் வெளி காவல் சாவடி ஒன்றும் செயல்பட்டு வருகிறது. தற்பொழுது வந்து செல்லும் பேருந்துகளுக்கு இந்தப் பேருந்து நிலையத்தில் போதுமான இடவசதி உள்ளது.

எனவே, இராமநாதபுரம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்வது குறித்து திட்டம் ஏதும் இல்லை.

27—

ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம்

வினா எண் 35891—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் ரூ.1,550.47 இலட்சத்தில் கட்டுவதற்கு

2014 ஜூலை 30]

அரசாணை (நிலை) எண் 809, உள் துறை, நாள் 8-10-2013-ல் நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டு கட்டுமானப் பணிகள் குறித்து பொதுப் பணித் துறையினரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

28—

நீதிமன்றக் கட்டடப் பணிகள்

வினா எண் 37283—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடியில் நீதிமன்றக் கட்டடப் பணியை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடியில் நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டுவதற்காக ரூ.206.51 இலட்சம் வழங்கி, அரசாணை நிலை எண் 495, உள் துறை, நாள் 12-7-2013-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் குறித்து பொதுப் பணித் துறையினரால் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

29—

குடிநீர் வசதி

வினா எண் 37890—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மடிப்பாக்கம், புவனேஸ்வரி தெருவிற்கு குடிநீர் வசதி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னைக் குடிநீர் வாரியம், பகுதி-14 பணிமனை எண் 187-க்குட்பட்ட புவனேஸ்வரி தெருவில் 3,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு குடிநீர்த் தொட்டிகள் வைக்கப்பட்டு, வாரம் இருமுறை லாரிமூலம் குடிநீர் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், அந்தத் தெருவில் அமைந்துள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் தெய்வானை நகரில் உள்ள ஆழ்துளைக் குழாய்க் கிணற்றிலிருந்து மோட்டார்மூலம் தண்ணீர் நிரப்பப்பட்டு இரண்டு நாட்களுக்கொருமுறை குழாய்மூலம் விநியோகிக்கப்படுகிறது.

30—

பேருந்து நிலையத்தை பொதுவழியாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல்

வினா எண் 38922—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை, கீழ்க்கட்டளை பேருந்து நிலையத்தை இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் பொதுவழியாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்க்கட்டளை பேருந்து நிலையத்தை, இரண்டு மற்றும் நான்கு

2014 ஜூலை 30]

சக்கர வாகனங்கள் பொதுவழியாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் பொருட்டு பேருந்து நிலையத்திற்குள் "இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் உள்ளே செல்ல அனுமதி கிடையாது" என அறிவிப்புப் பலகை நிறுவப்பட்டு, இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் பொதுவழியாகப் பயன்படுத்தப்படுவது தவிர்க்கப்பட்டு தற்போது நடைமுறையிலுள்ளது.

31—

ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்

வினா எண் 39532—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2013 ஆம் ஆண்டில் சென்னை நகரில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தினால், வறட்சி நிவாரண, நடவடிக்கையாக ஏற்கெனவே பயன்பாட்டில் இருந்த 75 இந்தியா மார்க் 2 பம்புகளில் மின்சார பம்புகள் அமைத்தும், புதியதாக மின்சார பம்புகளுடன்கூடிய 181 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தும், புதியதாக 544 இந்தியா மார்க் 2 பம்புகள் அமைத்தும் குடிநீரல்லாத பிற தேவைகளுக்கான நீர் சென்னை நகர மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

[2014 ஜூலை 30

32—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 39764—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு பின்வரும் இரு கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும்:

(1) காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, திருச்சி மாவட்டத்திலுள்ள துறையூர், தாத்தயங்கார்பேட்டை மற்றும் உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 293 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். இத்திட்டத்தின்மூலம் சுமார் 1,91,284 மக்கள் பயன்பெறுவர்.

(2) காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, திருச்சி மாவட்டத்திலுள்ள மருங்காபுரி மற்றும் வையம்பட்டி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 135 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். இத்திட்டத்தின்மூலம் சுமார் 35,228 மக்கள் பயன்பெறுவர்.

மேற்காணும் இரு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2014 ஜூலை 30]

33—

கழிவுநீர் வடிகாலை சீரமைத்தல்

வினா எண் 39772—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, அயனாவரம், துரைசாமி தெருவிலுள்ள கழிவுநீர் வடிகாலை சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரம், அயனாவரம் பகுதி, 96-வது வட்டம், துரைசாமி தெருவில் உள்ள கழிவுநீர் அமைப்பு தூர் வாரும் இயந்திரம்மூலம் தூர் வாரி சுத்தம் செய்யப்பட்டுள்ளது. தகுந்த இடைவெளியில் தூர் வாரப்பட்டு வருவதால் கழிவுநீர் அமைப்பு சீராகச் செயல்படுகிறது.

34—

குடிநீர்க் குழாயினை சீரமைத்தல்

வினா எண் 39791—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, அயனாவரம், சக்கரவர்த்தி நகரிலுள்ள குடிநீர்க் குழாயினை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, அயனாவரம், சக்கரவர்த்தி நகரிலுள்ள குடிநீர்க் குழாயை பரிசோதித்துப் பார்த்ததில் அவை நல்ல நிலையில் உள்ளன. சக்கரவர்த்தி நகரில் உள்ள குடியிருப்புவாசிகளுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

35—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 43097—திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சி, 4-வது வார்டு காமராஜ் நகர், எஸ்.கே.ஆர். நகர், மகாலட்சுமிபுரம், பி.எம்.எஸ். நகர், டி.எம்.டி. நகர் பகுதிகளில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லடம் நகராட்சிக்குட்பட்ட 4-வது வார்டு, காமராஜ் நகர், எஸ்.கே.ஆர். நகர், மகாலட்சுமிபுரம், பி.எம்.எஸ். நகர் மற்றும் டி.எம்.டி. நகர் பகுதிகளில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க போதிய வடிகால் வசதிகள் (Disposal) ஏதும் இல்லையென்பதால் மேற்படி பகுதிகளில் கழிவுநீர்ச் கால்வாய் அமைக்க இயலாது.

2014 ஜூலை 30]

36—

நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 43413—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சி, 9-வது வார்டு, பழனியாண்டி குளத்தைத் தூர்வாரி, சுற்றுச்சுவர், படித்துறை அமைக்கவும், சலவைத் தொழிலாளர்களுக்கு குளம் அருகில் ஆழ்குழாய்க் கிணறுடன் கூடிய நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சி, 9-வது வார்டு, பழனியாண்டி குளம் நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது. குளத்திற்கு அருகில் சலவைத் தொழிலாளர்களுக்கு கைப்பம்பு அமைக்கப்பட்டுள்ளது.

37—

அச்சகத்திற்கு கான்கிரீட் கட்டடம் கட்டுதல்

வினா எண் 43252—திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, களியக்காவிளை பேரூராட்சி, படந்தாலுமூடு தொழில் துறை அரசு அச்சகத்திற்கு புதிய கான்கிரீட் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி, களியக்காவிளை பேரூராட்சிக்குச் சொந்தமான புதிய சர்வே எண் 418/9 (பழைய சர்வே எண் 1952-17/1-ல்) ஆறு சென்ட் நிலம் 25 வருட குத்தகைக்கு கன்யா தொழிற் கூட்டுறவு அச்சகத்திற்கு 2-12-1987 அன்று களியக்காவிளை பேரூராட்சி செயல் அலுவலரால் வழங்கப்பட்டது. மேற்கண்ட பதிவு செய்யப்பட்ட குத்தகை ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள இந்த நிலத்தில், சங்கம் தனது சொந்த செலவில் கட்டடம் கட்டி செயல்பட அனுமதி அளிக்கப்பட்டது. அதனடிப்படையில், தொழில் வணிகத் துறையில் செயல்பட்டு வந்த கட்டுமானப் பிரிவில் கட்டடம் கட்டப்பட்டு சங்கத்தின் பெயரில் மின் இணைப்பு பெற்று இயங்கி வருகிறது. சங்கம், களியக்காவிளை பேரூராட்சிக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை எதுவும் இல்லை. மேலும், குறிப்பிட்ட குத்தகை ஒப்பந்த ஆவணத்தில் குத்தகைக் காலம் முடிந்த பின்னர் மேற்கொண்டு குத்தகைக் காலத்தினை நீட்டிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சங்கத்தின் 25 வருட குத்தகைக் காலம் 2-12-2012-ல் முடிவடையும் முன்பே குத்தகைக் காலத்தை மேலும் 20 வருடங்கள் நீட்டித்துத் தர செயல் அலுவலர், களியக்காவிளை பேரூராட்சிக்கு சங்கத்தால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

2. இருப்பினும், ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சங்கக் கட்டடத்தில் உள்ள பழுதுகளை அகற்றிட ரூ438 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

3. மேலும், புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கான நிதி ஆதாரம் சங்கத்திடம் இல்லை என்றும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

4. மேற்குறிப்பிட்டுள்ள களியக்காவிளை பேரூராட்சிக்குச் சொந்தமான இடத்தில் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட நிலத்தில், கன்யா தொழிற்கூட்டுறவு அச்சங்கத்தினால் சொந்தமாகக் கட்டப்பட்ட கட்டடத்தில் பழுதுகளை அகற்றி, தொடர்ந்து இச்சங்கம் அதே இடத்தில் செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2014 ஜூலை 30]

38—

அங்கன்வாடி கட்டடம்

வினா எண் 31040—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், ஆழ்வானேரி ஊராட்சி, கோவைகுளத்தில் அங்கன்வாடிக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத்திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டாரம், ஆழ்வானேரி ஊராட்சி, கோவைகுளம் அங்கன்வாடி மையம் அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தின் பழுதுகளை சரி செய்வதற்கு 2013-2014 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால், இங்கு புதிய கட்டடம் கட்டும் தேவை எழவில்லை.

39—

அங்கன்வாடிக் கட்டடம்

வினா எண் 31065—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், ராஜாக்கமங்கலம் ஊராட்சி, வாகைக்குளத்தில் அங்கன்வாடிக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டாரம், ராஜாக்கமங்கலம் ஊராட்சி, வாகைக்குளத்தில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

40—

அங்கன்வாடிக் கட்டடம்

வினா எண் 31082—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், விஜயநாராயணம் ஊராட்சி, மேலபண்டாரபுரம் மற்றும் கடையன்குளத்தில் அங்கன்வாடிக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி வட்டாரம், மேலபண்டாரபுரம் கிராமப் பயனாளிகள் அனைவரும் அருகிலுள்ள விஜய அச்சம்பாடு தெற்கு அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருகிறார்கள். இம்மையம் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும், கடையன்குளம் கிராமத்தில் அங்கன்வாடி மையம் விஜய அச்சம்பாடு வடக்கு என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2014 ஜூலை 30]

41—

தொகையை உயர்த்தி வழங்குதல்

வினா எண் 31325—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற தொகையை உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அங்கன்வாடி மையங்களில் தற்போது குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் உணவூட்டுச் செலவினம் 56 காசுகள் ஆகும். இதனை உயர்த்தி கூடுதலாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதன் முதல் கட்டமாக விதவிதமாக புதிய வகை கலவை சாதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 32 மும்னோடி வட்டாரங்களில் குழந்தைகளின் உணவூட்டுச் செலவினம் 17-4-2013 முதல் பருப்பு பயன்படுத்தும் நாட்களுக்கு ரூ.1.13 ஆகவும், பருப்பு பயன்படுத்தாத நாட்களுக்கு ரூ.1.35 ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

42—

அங்கன்வாடிக்கு கட்டடம் கட்டுதல்

வினா எண் 31399—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி ஒன்றியம், வெங்கட்ராயபுரம் ஊராட்சி, வெங்கட்ராயபுரம் கிழரில் அங்கன்வாடிக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி வட்டாரம், வெங்கட்ராயபுரம் ஊராட்சி, வெங்கட்ராயபுரம் கீழூரில் உள்ள அங்கன்வாடி மையம் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இவ்வங்கன்வாடி மையத்தின் பழுதுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால், இங்கு புதிய அங்கன்வாடிக்கு கட்டடம் கட்டும் தேவை எழவில்லை.

43—

அங்கன்வாடியினைப் புதுப்பித்தல்

வினா எண் 31421—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், அழகப்பபுரம் ஊராட்சி, அழகப்பபுரத்திலுள்ள அங்கன்வாடியினைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, அழகப்பபுரம் ஊராட்சி, அழகப்பபுரம் கிராமத்தில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்தின் பழுதுகள் அனைத்தும் சரி செய்யப்பட்டு, மையம் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.

44—

அங்கன்வாடி மையம் அமைத்தல்

வினா எண் 31702—திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், நொச்சிகுளம் ஊராட்சி, நெசவாளர் காலனிக்கு அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை வட்டாரம், நொச்சிகுளம் ஊராட்சி, நெசவாளர் காலனியில் அங்கன்வாடி மையம் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், அங்கு புதிய மையம் அமைக்கும் தேவை எழவில்லை.

45—

சொந்தக் கட்டடம்

வினா எண் 35078—திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை வட்டத்திற்குட்பட்ட, வடக்கு போர்குடி, வசந்தனி, வாயுலானேந்தல், வாடிநன்னியூர், விலாவடியேந்தல், விஜயபுரம், விவேகானந்தபுரம், வெற்றியாலங்குலம், வெண்ணியூர் ஆகிய கிராமங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை வட்டம், வடக்கு போர்குடி, வசந்தனி, வாயுலானேந்தல், வாடிநன்னியூர், விலாவடியேந்தல், விஜயபுரம், விவேகானந்தபுரம்,

[2014 ஜூலை 30

வெற்றியாலங்குலம், வென்னியூர் ஆகிய கிராமங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

46—

சொந்தக் கட்டடம்

வினா எண் 37695—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, ஆவுடையானூர் ஊராட்சி, சாலையடியூர், லட்சுமிபட்டி, மாடியானூர் மற்றும் பொடியனூரில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, ஆவுடையானூர் ஊராட்சியிலுள்ள சாலையடியூர், லட்சுமிபட்டி, மாடியானூர் மற்றும் பொடியனூரில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

47—

சொந்தக் கட்டடம்

வினா எண் 38151—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ தென்காசி தொகுதி, குணராமநல்லூர் ஊராட்சி, காந்திபுரம், மகராஜபுரம், மேல்மெஞ்ஞானபுரம், புலிச்சிகுளம் ஆகிய கிராமங்களிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, குணராமநல்லூர் ஊராட்சி, காந்திபுரம், மகராஜபுரம், மேல்மெஞ்ஞானபுரம், புலிச்சிகுளம் ஆகிய கிராமங்களிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

48—

சொந்தக் கட்டடம்

வினா எண் 38153—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, திருச்சிற்றம்பலம் ஊராட்சி, அம்பேத்கர் நகர் ஆதி திராவிடர் காலனியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, திருச்சிற்றம்பலம் ஊராட்சி, அம்பேத்கர் நகர் ஆதி திராவிடர் காலனியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

49—

அங்கன்வாடி மையத்தை சீரமைத்தல்

வினா எண் 38154—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) தென்காசி தொகுதி, பட்டாகுறிஞ்சி ஊராட்சி, அங்கன்வாடி மையத்தை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, பட்டாகுறிஞ்சி ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையத்தின் சீரமைப்புப் பணிகள் முழுவதும் நிறைவு பெற்று மையம் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

50—

அங்கன்வாடி மையத்தின் சீரமைப்பு

வினா எண் 38156—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி ஒன்றியம், முத்துமாலைபுரம் அங்கன்வாடி மையத்தின் சீரமைப்புப் பணி எப்போது முடிவடையும்?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, முத்துமாலைபுரம் அங்கன்வாடி மையத்தின் சீரமைப்புப் பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டு, மையம் அதே இடத்தில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

2014 ஜூலை 30]

51—

வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

வினா எண் 37299—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கடையநல்லூர் ஒன்றியம், குலையநேரியில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குலையநேரி ஊராட்சியானது கடையநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கென அறிவிக்கையிடப்பட்ட பகுதியாகும். இங்குள்ள விவசாயிகள் விளைபொருட்களுக்கு வியாபாரிகளிடமிருந்து அதிக விலை பெற இயலாது என்பதால், இப்பகுதி விவசாயிகள் குலையநேரி ஊராட்சியிலிருந்து 5 கி.மீ. தூரமேயுள்ள உலர்களம் மற்றும் முழு கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய கடையநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினை பயன்படுத்திக்கொள்ளலாம்.

52—

வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

வினா எண் 40261—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, ராஜகோபாலபேரி ஊராட்சியில் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஜூலை 30

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராஜகோபாலபேரி ஊராட்சியானது, தென்காசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கென அறிவிக்கையிடப்பட்ட பகுதியாகும். இங்குள்ள விவசாயிகளின் விளைபொருட்களுக்கு வியாபாரிகளிடமிருந்து அதிக விலை பெற இயலாது என்பதால், இப்பகுதி விவசாயிகள் ராஜகோபாலபேரி ஊராட்சியிலிருந்து 10 கி.மீ. தூரமேயுள்ள உலர்களம் மற்றும் முழு கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தென்காசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினை பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, தனியாக ராஜகோபாலபேரி ஊராட்சிக்கென்று வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க வேண்டிய அவசியமில்லை.

53—

கத்திரிச் செடிகளைப் பாதுகாத்தல்

வினா எண் 40752—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் நோய், பூச்சி தாக்குதலிலிருந்து கத்திரி செடிகளைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தோட்டக்கலைத் துறைமூலம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம், துல்லிய பண்ணைத் திட்டம் மற்றும் நீர்வள நிலவள திட்டங்களின்கீழ் விவசாயிகளுக்கு காய்கறி சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் போன்றவற்றில் விரிவான பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேலும், 2012-2013 ஆம் நிதியாண்டில் மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் கத்தரி சாகுபடி 81 எக்டர் பரப்பில் விரிவாக்கம் செய்யப்பட்டு, கார்பன்டாசிம் + மான்கோசெப், ப்ரொபினேர்பாஸ் மற்றும் அசாடிராக்டின் ஆகிய பயிர்ப்

2014 ஜூலை 30]

பாதுகாப்பு மருந்துகள் மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் பருவநிலைக்கேற்ப, முன்னெச்சரிக்கையாக பூச்சி நோய் தாக்குதல் பற்றிய விவரத்தினையும், அதனைக் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும் தினசரி நாளிதழ்கள்மூலம் அறிவிக்கை செய்யப்படுகிறது. இத்தொகுதியில் தோட்டக்கலைத் துறையின் மேற்கண்ட செயல்பாடுகளால், கத்தரி பயிரில் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு உட்பட்டே இருந்து வருகிறது.

நடப்பாண்டில், மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் வட்டார வாரியாக காய்கறிப் பயிர்களுக்காக சாகுபடித் தொழில் நுட்பங்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் பற்றிய விவசாயிகள் பயிற்சி நடத்த செயல் திட்டம் வகுக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு எதிர்நோக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்ட உடன் பயிற்சி அளிக்க ஏதுவாக காய்கறி சாகுபடி விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதன் விவரம் கீழ்வருமாறு:—

வ. எண்	திட்டத்தின் பெயர்	வட்டாரம்	பயிற்சி நடைபெறும் இடம்	பயனாளிகளின் எண்ணிக்கை	தொகை ரூ
1.	ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்	இளையான்குடி மானாமதுரை திருப்புவனம்	திருப்புவனம் வேளாண்மைக் கல்லூரி, மதுரை	50 50	15,000 15,000
2.	தீர்வை நிலவரித் திட்டம்	மானாமதுரை இளையான்குடி	பெரும்பச்சேரி அரிமண்டபம் மீழ்நெட்டூர் மற்றும் முனைவென்றி	50 50 50	7,500 7,500 மாதிரி ரொக்கம்

கத்திரி பயிரில் பயிர்ப் பாதுகாப்பு செய்ய தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர்களால் வழங்கப்படும் ஆலோசனைகள், விதை மூலம் பரவும் நோய்களான வேர் அழுகல், தண்டு அழுகல் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்த ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோடெர்மா விரிடி (அல்லது) 10 கிராம் சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைப்பு செய்ய பரிந்துரை செய்யப்படுகிறது.

சாறு உறிஞ்சும் பூச்சிகள் தாக்குதலைக் கட்டுப்படுத்த இமிடோகிளோர்பிட் 0.5 மி.லி./லி. அல்லது டிரை அசோபாஸ் 2.5 மி.லி./லி. அல்லது டைமிதோயேட் 2 மி.லி./லி. இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்க அறிவுரை வழங்கப்படுகிறது.

[2014 ஜூலை 30

காய்ப் புழுக்களைக் கட்டுப்படுத்த டிரைகோகிராம்மா முட்டை ஒட்டுண்ணியை 1 ஏக்கருக்கு 2 சிசி வீதம் 10 நாட்களுக்கு ஒரு முறை பூ பூக்கும் தருவாயிலிருந்து தொடர்ந்து செடிகளில் கட்டுமாறு விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. காய்ப் புழு அதிகம் தென்பட்டால் கார்பரில் 2 மி.லி./லி. அல்லது பாசலோன் 1.5 மி.லி./லி. அல்லது ப்ரொபனோபாஸ் 1.5 மி.லி./லி. ஆகிய பூச்சி மருந்துகளில் ஏதேனும் ஒன்றைத் தெளித்து கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

54—

பூங்காவில் அடிப்படை வசதிகள்

வினா எண் 41482—திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், ஊட்டி தாவரவியல் பூங்கா (Botanical Garden) வில் அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், ஊட்டி தாவரவியல் பூங்கா (Botanical Garden) வில் அடிப்படை வசதிகள் செய்து தர அரசு உத்தேசித்து, அதற்குத் தேவையான நிதியினை தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை பண்ணை வரவின நிதியிலிருந்து வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

55—

நியாய விலைக் கடை அமைத்தல்

வினா எண் 19729—திரு. வீ.பி. நாகைமாலி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

கீழ்வேளூர் தொகுதி, வெண்மணி ஊராட்சி கிராம அங்காடியை இரண்டாகப் பிரித்து மேலகாவாலகுடி, கீழகாவாலகுடி, மானக்குடி, மயிலாங்குடி ஆகிய கிராமங்களுக்குத் தனியாக கிராம அங்காடி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

மேலகாவாலகுடி, கீழகாவாலகுடி, மானக்குடி, மயிலாங்குடி ஆகிய கிராமப் பகுதிகளிலுள்ள 180 குடும்ப அட்டைகளைப் பிரித்தால், தாய் அங்காடியில் 339 குடும்ப அட்டைகள் மட்டுமே இருக்கும். மேற்படி குடும்ப அட்டைகளைப் பிரித்த பின்னர், தாய்க் கடையில் குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பொருந்தாத நிலையில், மேலகாவாலகுடி, கீழகாவாலகுடி, மானக்குடி, மயிலாங்குடி ஆகிய கிராமங்களுக்கு நியாய விலைக் கடை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

56—

புதிய நியாய விலைக் கடை

வினா எண் 38403—திரு. ஏ. சரத்குமார்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, திருச்சிற்றம்பலம் ஊராட்சி, வார்டு-1-க்கு புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, திருச்சிற்றம்பலம் ஊராட்சி, 1-வது வார்டில் 190 குடும்ப அட்டைகள் உள்ளன. தாய்க் கடைக்கும், உத்தேச பகுதிநேரக் கடைக்கும் இடைப்பட்ட தூரம் 0.25 கி.மீ மட்டுமே ஆகும். தாய்க் கடைக்கும், பகுதிநேரக் கடை அமைக்கக் கோரப்படும் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 1.5 கி.மீ. இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகாத

[2014 ஜூலை 30

நிலையில், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, 1-வது வார்டுக்கு தனியாக நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

57—

பால் பண்ணைகளின் உள்கட்டமைப்பு

வினா எண் 30348—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவின் பால் பண்ணைகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் 2011-2012-ம் ஆண்டு ரூ.113 இலட்சம் செலவில் வேலூர் பால் பண்ணையிலும், ரூ.100 இலட்சம் செலவில் அம்பத்தூர் பால் பண்ணையிலும் பலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படுகிறது. மேலும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் துணைத் திட்டமான தேசிய புரதச் சத்து வழங்கும் திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டு ரூ.9.33 இலட்சம் செலவில் மாதவரம், அம்பத்தூர், சோழிங்கநல்லூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, விழுப்புரம் மற்றும் காஞ்சிபுரம்—திருவள்ளூர் ஒன்றியத்திலுள்ள காக்களூர் ஆகிய இடங்களில் உள்ள பால் பண்ணைகளை பலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

58—

வங்கிக் கடன்கள் தள்ளுபடி

வினா எண் 25694—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நலிவடைந்த நெசவாளர்களின் வங்கிக் கடன்களை தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு டாக்டர் க. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் நெசவாளர்கள், கூட்டுப் பொறுப்பு குழுக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் ஆகியோர் பயன்பெறும் வகையில், புத்துயிரூட்டுதல், சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்புத் திட்டம் நடப்பாண்டில் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்று, நீண்ட காலமாக நிலுவையிலுள்ள கடன் தொகையில் அசல் 100 விழுக்காடும், வட்டி 25 விழுக்காடும் தள்ளுபடி செய்யப்பட்டு, மறுநிதியுதவி வழங்கப்படுகிறது. அதனுடன் சங்கங்களில் ஓராண்டிற்கு மேற்பட்ட துணி சரக்கிருப்பு, நிலம் மற்றும் கட்டடத் தேய்மானத் தொகை, வாராக் கடன் போன்ற இனங்களில் மறு நிதியுதவி செய்யப்படுகிறது. தனியார் நெசவாளர்கள் கைத்தறி நெசவுக்காக வணிக வங்கிகளிடமிருந்து பெற்ற கடன் நிலுவைத் தொகையில் ரூ.50,000/- வரை தள்ளுபடி செய்யப்படுகிறது.

2012-2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.97.83 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 590 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) மற்றும் 520 தனியார் நெசவாளர்கள் ஆகியோர் பயன் அடைந்துள்ளனர். அதில் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு (கோ-ஆப்டெக்ஸ்) ரூ.32.13 கோடியும், 590 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 520 தனியார் கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.65.70 கோடியும் அடங்கும்.

59—

பக்தர்களுக்கு நவின கழிப்பிட வசதி

வினா எண் 32414—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

குளச்சல் தொகுதி, சுசீந்திரம் தாணுமாலயன் பெருமாள் கோயில் பக்தர்களுக்கு நவீன கழிப்பிட வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலயன் பெருமாள் திருக்கோயில் இந்து சமய அறநிலையங்கள் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிருவாகம் இணை ஆணையர்/செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக ஆண்களுக்கு 2 குளியலறைகள் மற்றும் 6 கழிவறைகள் மற்றும் பெண்களுக்கு 2 குளியலறைகள் மற்றும் 6 கழிவறைகள் ரூ.5.5 இலட்சம் மதிப்பீட்டில் 2002-2003 ஆம் நிதியாண்டில் கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. திருக்கோயிலுக்கு வரும் அணுகுசாலையில் சுசீந்திரம் பஞ்சாயத்து அலுவலகம் அருகில் பஞ்சாயத்து நிருவாகம் சார்பில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தலா 2 குளியலறைகள் மற்றும் 3 கழிவறைகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேற்குறிப்பிட்ட அடிப்படை வசதிகளே போதுமானதாகும். மேற்கொண்டு கழிவறைகள் மற்றும் குளியலறைகள் ஏதும் தற்போதைக்கு தேவையில்லை.

60—

ஊருணியை ஆழப்படுத்தி, தூர் வாருதல்

வினா எண் 36781—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, வாகவாசல் அருள்மிகு காமலாயி அம்மன் ஊருணியை ஆழப்படுத்தி தூர் வார அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை வட்டம், வாகவாசல் அருள்மிகு காமலாயி அம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே, இத்துறைமூலம் மேற்படி திருக்கோயிலில் ஊரணியை ஆழப்படுத்தி தூர் வார வழிவகை இல்லை.

61—

சிறிய நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 36786—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, முள்ளங்குறிச்சி ஊராட்சி, காரைக்குறிச்சி, முனியன் கோவிலுக்கு சிறிய நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை வட்டம், முள்ளங்குறிச்சி ஊராட்சி, காரைக்குறிச்சி கிராமத்தில் உள்ள அருள்மிகு முனியன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும். எனவே இத்துறை மூலம் மேற்படி திருக்கோயிலில் நீர்த்தேக்க தொட்டி அமைத்திட வழிவகை இல்லை.

[2014 ஜூலை 30

62—

தொல்லியல் வல்லுநர் குழுவை அமைத்தல்

வினா எண் 41399—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெறும் போது திருக்கோவிலிலுள்ள சான்றுகள், கல்வெட்டுகள் ஓவியம் போன்றவை சிதைக்கப்படாமல் தடுக்க தொல்லியல் வல்லுநர் குழுவை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் அமைச்சர்:

தமிழகத் திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெறும்போது திருக்கோவியிலிலுள்ள சான்றுகள், கல்வெட்டுகள், ஓவியம் போன்றவை சிதைக்கப்படாமல் தடுக்க, தொல்லியல் வல்லுநர் குழு அமைத்து, அரசாணை (நிலை) எண் 199, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 08-08-2013-ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதன் ஆலோசனை பெற்று திருப்பணிகள் செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

63—

அன்னதான மண்டபம் அமைத்தல்

வினா எண் 41127—திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஒன்றியம், வாராப்பூர் ஊராட்சியிலுள்ள ஸ்ரீ பெரிய ஐய்யனார் அருள்மிகு பாலையடி கருப்பண்ண சுவாமி திருக்கோயிலுக்கு அன்னதான மண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் வட்டம், வாராப்பூர், அருள்மிகு பாலையடி கருப்பண்ண சுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிருவாகம் நிலை-I செயல் அலுவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.67,342/- ஆகும். இத்திருக்கோயிலுக்கு நிலங்கள் ஏதும் இல்லை. மேற்காணும் திருக்கோயிலில் வருடத்தில் ஒரு முறை மட்டும் மாசி மகம் மற்றும் பங்குனி உத்திரம் திருவிழா நடைபெற்று வருகிறது. மற்ற நாட்களில் பக்தர்கள் யாரும் அதிகமாக வருவதில்லை. இத்திருக்கோயிலில் வருமானம் அதிகமாக ஏதும் இல்லை. எனவே, இத்திருக்கோயிலுக்கு அன்னதான மண்டபம் அமைக்க தேவையில்லை.

64—

மாளியத் தொகையை உயர்த்துதல்

வினா எண் 1732—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாடு உழவர் மேம்பாடு மற்றும் நலத் திட்டத்தின்கீழ் விவசாயி/குத்தகைதாரர் இறந்தால் வழங்கப்படும் மாளியத் தொகை 1.00 இலட்சம் ரூபாயை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண். 265 வருவாய்த் (நி.சீ.1(2)) துறை, நாள் 10-9-2011-இன்படி முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் 10-9-2011 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2014 ஜூலை 30

2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலத்தை அல்லது 5.00 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலத்தை சொந்தமாக வைத்திருந்து மற்றும் அந்த நிலத்தில் நேரடியாகப் பயிர் செய்யும் 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து சிறு/குறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலில் கூலி அல்லது குத்தகை அடிப்படையில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரும் இத்திட்டத்தின்கீழ் மூல உறுப்பினராகவும், சார்ந்து வாழும் பொருள் ஈட்டாத இதர குடும்ப உறுப்பினர்கள் இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாகவும் பதிவு செய்யப்படுவர்.

மூல உறுப்பினர்களுக்கு பண்பேறிய சிவப்புநிற அடையாள அட்டையும் (Maroon Colour Identity Card), சார்ந்த உறுப்பினர்களுக்கு சாம்பல்நிற அடையாள அட்டையும் (Grey Colour Identity Card) வழங்கப்படும்.

மரூன் நிற அட்டை பெற தகுதியுள்ள உறுப்பினர் ஒருவர் விபத்துக்குள்ளாக நேரிடும்பொழுது கீழ்க்குறிப்பிட்டவாறு உதவித்தொகை வழங்கப்படுகிறது.

(a) இறப்பு	ரூ.1,00,000/-
(b) முடியாத அளவிற்கு இழப்பு	
1. இரண்டு கைகள் அல்லது	
2. இரண்டு கால்கள் அல்லது	
3. ஒரு கை மற்றும் ஒரு கால் அல்லது	ரூ.1,00,000/-
4. மீட்கமுடியாத அளவிற்கு கண்கள் இரண்டிலும் பார்வை இழத்தல்	
(c) 1. ஒரு கை அல்லது	
2. ஒரு கால் அல்லது	ரூ.50,000/-
3. பக்கவாதம்	
(d) மேலே (b) மற்றும் (c) இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்புகள் அல்லாமல் கடுமையான காயங்களின் காரணமாக கை கால்களை இழத்தல்	ரூ.20,000/-

2014 ஜூலை 30]

எனவே, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவுபெற்ற மூல உறுப்பினராக உள்ள விவசாயி/குத்தகைதாரர் விபத்து காரணமாக இறந்தால் ரூ.1 இலட்சம் விபத்து நிவாரணமும், ஈமச்சடங்கு செலவுக்காக ரூ.2,500/-ம் வழங்கப்படுகிறது.

மேலும், விபத்து நிவாரணத் தொகையினை உயர்த்துவதற்கான பிரேரணை எதுவும் இவ்வலுவலகத்தில் தற்போது இல்லை.

65—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 17940—திருமதி ர. சுமா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, கெங்கவல்லி ஒன்றியம், மண்மலை, வேப்படிபாலகாடு பகுதியில் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், மண்மலை கிராமம், புல எண் 50 ஓடை புறம்போக்கு நிலத்தில் எட்டு நபர்கள் வீடுகட்டி குடியிருந்து வருகிறார்கள். மேற்படி பட்டா கோரும் பகுதி, நீர்நிலைப் புறம்போக்கு என்பதால் வீட்டு மனைப் பட்டா வழங்க இயலாது. வேப்படி கிராமம் பாலக்காடு கவியன் குன்று பகுதியில் புல எண்கள் 112, 114 மற்றும் 115/2-ல் இருபது நபர்கள் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள். மேற்படி பட்டா கோரும் புலம், தடையாணைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், ஒருமுறை வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் மீண்டும் அரசின் பரிசிலனையில் உள்ளதால், அப்பரிசிலனையின் முடிவில் கால நீட்டிப்பு தொடர்பாக அரசாணை வெளியிடும்பட்சத்தில், மேற்கண்ட புலத்தில் குடியிருந்துவரும் நபர்களுக்கு தகுதியின் அடிப்படையில் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

66—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 23017—திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், கடல் புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு பகுதிகளில் குடியிருக்கும் மீனவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வீட்டுமனைப் பட்டா கோரும் இடம் கடல் புறம்போக்கு ஆகும். உச்ச நீதிமன்ற உத்தரவின்படி நீர்வழிப் புறம்போக்கில் பட்டா வழங்க தடை உள்ளதால், மனைப்பட்டா வழங்க இயலாது.

67—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 29644—திரு. ஏ. லாசர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளத்தில் சர்வே எண்கள் 2031-1, 2033, 2034-ல் உள்ள 5.55 ஏக்கர் புறம்போக்கு நிலத்தினை ஆதி திராவிடர்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் நகராட்சி, நகரளவை எண்கள் 2031/1, 2033 மற்றும் 2034 ஆகிய புலங்களில், புல எண் 2031/1-ல் தற்போது பாதையாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. புல எண்கள் 2033, 2034-ல் நகராட்சியின் வருவாய் பெருக்கத்திற்காக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்மூலம் வீடுகள் கட்டுவதற்கு, நகராட்சிமன்ற தீர்மானம் எண் 735-ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நிலத்தை ஒப்படைப்பது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவ்வறிக்கையின் இறுதி முடிவு வரப்பெற்றபின், மேற்கண்ட புலத்தில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

68—

வட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல்

வினா எண் 29714—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தை, தேர்வு செய்யப்பட்ட இடத்தில் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டத்திற்கு புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்காக அரசாணை நிலை எண் 430, வருவாய், நாள் 30-10-2013-ல் ரூ.2.02 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

69—

ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 30164—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி பகுதியில் அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டத்தில் கடந்த 1-8-2011-லிருந்து நாளது வரை வருவாய்த் துறை மற்றும் பிற துறைகள் உட்பட மொத்தம் 701 ஆக்கிரமிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றின் மொத்த விஸ்தீரணம் 57.28.9 ஹெக்டேர் ஆகும். மேற்கண்டவாறு கண்டுபிடிக்கப்பட்ட ஆக்கிரமிப்புகளில் நாளது தேதி வரை 83 ஆக்கிரமிப்புகள் (விஸ்தீரணம் 7.48.8 ஹெக்டேர்) அகற்றப்பட்டுள்ளன. நிலுவையிலுள்ள 618 ஆக்கிரமிப்புகளை முன்னுரிமை மற்றும் அத்தியாவசியத் தேவை அடிப்படையில் சம்பந்தப்பட்ட துறைகள் மூலமாக அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

70—

நீர்நிலைகளைப் பாதுகாத்தல்

வினா எண் 31552—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆக்கிரமித்துள்ள குளம் மற்றும் ஆற்று புறம்போக்குகளை மீட்டு நீர்நிலைகளைப் பாதுகாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குளம் மற்றும் ஆற்று புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் இனம் கண்டு சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் (வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை) அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

71—

வரத்துவாரியை ஆழப்படுத்துதல்

வினா எண் 32765—திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, ஒனாங்குடி ஊராட்சி, சிராயன்பட்டி புதுக்கண்மாய், மரமடக்கி கண்மாய் வரத்துவாரியில் ஆக்கிரமிப்புகளை அகற்றி வரத்துவாரியை ஆழப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

திருமயம் வட்டம், ஒனாங்குடி ஊராட்சி, சிராயன்பட்டி கிராமம், புல எண் 42 மொத்தப் பரப்பு 12.13.5-இல் அமைந்துள்ள புதுக்கண்மாய் மற்றும் புல எண் 40 மொத்தப் பரப்பு 10.78.5-இல் அமைந்துள்ள மரமடக்கி கண்மாய் ஆகியவற்றில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. மேலும் மேற்படி கண்மாயின் வரத்துவாரியை ஆழப்படுத்த பொதுப் பணித் துறைமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

72—

கிராம நிருவாக அலுவலர் குடியிருப்பு

வினா எண் 34160—திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) கிராம நிருவாக அலுவலர்களுக்கு குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 12,614 கிராம நிருவாக அலுவலர்களில், 12,300 கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலக் கட்டட கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள 314 கிராம நிருவாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள் படிப்படியாகக் கட்டித் தரப்படும் அதன்படி அரசாணை (நிலை) எண் 476, வருவாய், நாள் 27-11-2013-ல் 114 கிராம நிருவாக அலுவலர்களுக்கு கிராம நிருவாக அலுவலகங்கள் மற்றும் அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்காக தலா ரூ.6.95 இலட்சம் வீதம் ரூ.7,92,34,300/- நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

73—

விட்டுமனைப் பட்டா

வினா எண் 34731—திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் தொகுதி, காட்டுமன்னார்கோயில் பேரூராட்சி, காந்தியார் தெரு மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வீட்டுமனைப் பட்டா கோரும் இடம் கிராமக் கணக்குகளில் "வடவாறு வண்டிப் பாதை" என உள்ளது. இங்கு 40 இருளர் குடும்பங்கள் வசிக்கின்றன. உச்ச நீதிமன்ற உத்தரவின்படி நீர்வழிப் புறம்போக்கில் பட்டா வழங்க தடை உள்ளதால் மனைப் பட்டா வழங்க இயலாது.

2014 ஜூலை 30]

74—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 35648—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ரி வட்டம், சின்னாக்கவுண்டனூர் கிராமம், கலியனூர் சர்வே எண் 621/11-ல், வசித்துவரும் அருந்ததியர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்ரி வட்டம், சங்ரி மேற்கு குறுவட்டம், சின்னாக்கவுண்டனூர் கிராம புல எண் 621/11 கிராம நத்தம் புலத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடு கட்டி குடியிருந்துவரும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா தற்போது வழங்கப்பட்டுள்ளது.

75—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 37272—திரு. ஏ.ஏ. கருப்பசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அவினாசி தொகுதியில் உள்ள அருந்ததியர்களுக்கு பூமிதானம் மூலமாக நிலம் பெற்று பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

அருந்ததியின மக்களுக்கு பூமிதான நிலம் விநியோகம் செய்வது தொடர்பாக மாவட்ட ஆட்சியரிடமிருந்து அறிக்கை வரப்பெற்றதும், தமிழ்நாடு பூமிதான வாரியக் கூட்டத்தின் அங்கீகாரத்திற்கு பொருள் வைக்கப்பட்டு, வாரியத் தீர்மானத்தின் அடிப்படையில் விநியோகப் பத்திரம் வழங்கப்படும்.

[2014 ஜூலை 30

76—

கோயில் நிலத்தை மீட்டல்

வினா எண் 38578—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, திப்பணம்பட்டி ஊராட்சி, பட்டனூர் அருகில் குற்றாலம் கோவிலுக்குச் சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி வட்டம், திப்பணம்பட்டி ஊராட்சியில் உள்ள புன்செய் நிலம் புல எண் 40/1, 40/2 ஆகிய திருக்கோயிலுக்கு பாத்தியப்பட்ட இடங்களுக்கு திருக்கோயில்மூலம் தீர்வை செலுத்தப்பட்டு வருவதாகவும், அப்பகுதியில் (1) திரு. மாடன், (2) திரு. சுப்பையா, (3) திரு. குமார், (4) திருமதி மாடத்தி ஆகிய 4 நபர்கள் மண் சுவர் வைத்து ஓட்டு வீடு கட்டியுள்ளதாகவும், மேற்படி நபர்கள் மீது இந்து சமய அறநிலைய சட்டப் பிரிவு 78-ன்படி துறை ரீதியாக ஆக்கிரமிப்பை வெளியேற்ற நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்றும் திருநெல்வேலி, இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர், அவர்கள் தெரிவித்துள்ளதாக திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

78—

மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணையை சீரமைத்தல்

வினா எண் 19141—திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, சாத்தையாறு அணையில் உள்ள மீன் குஞ்சு வளர்ப்பு நாற்றங்கால் பண்ணையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சாத்தையாறு அணையிலுள்ள மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணையை சீரமைத்திடவும், ஆழ்துளைக் கிணறு அமைக்கவும் தற்போது திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டவுடன் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, 2014-2015 ஆம் ஆண்டு மீன் விதைப் பண்ணை சீரமைக்கப்படும். தற்போது 14 அரசு மீன் விதைப் பண்ணைகளில் புதிய குளங்கள் கட்டுதல், பண்ணையை சீரமைத்தல் போன்ற பணிகள் NABARD/NADP நிதியுதவியுடன் நடைபெற்று வருவதால் இத்திட்டத்தினை 2014-2015 ஆம் ஆண்டில் செயல்படுத்திட அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

79—

கடல் பாசியை கொள்முதல் செய்தல்

வினா எண் 22057—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரையில் கட்டக்கோரை என்ற கடல் பாசியை அரசு சார்பில் கொள்முதல் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலோரங்களில் பாசி வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களிடமிருந்து கட்டக்கோரை பாசியை கொள்முதல் செய்யும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

80—

தார்ச் சாலைக்கு இடம் ஒதுக்கிடுதல்

வினா எண் 22218—திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 ஜூலை 30

(அ) காரைக்குடி தொகுதி, வீரை ஊராட்சி, எம்.புதூர் வழியாக ஐயனார் கோவிலுக்கு தார்ச் சாலை அமைக்க வனத் துறை 300 மீட்டர் இடம் ஒதுக்கித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், நெடுங்குளம் கிராமம் புல எண்கள் 107, 132 மற்றும் 269 ஆகியவற்றில் மொத்தம் 64.45.0 எக்டர் வன நிலம் நெடுங்குளம் தெற்கு காப்புக் காடாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

இக்காப்புக்காட்டில் வழங்கப்பட்டுள்ள வழி உரிமைகளின்படி அங்கீகரிக்கப்பட்ட பாதையின் நீளம் 4,087 லிங்ஸ்-(822.30 மீ) மற்றும் அகலம் 100 லிங்ஸ்-(20.20 மீ) ஆகும். வேலாயுதப்பட்டினம்-புலியடித்தம்பம் பிரதானச் சாலையிலிருந்து ஆவாரங்குடிக்குச் செல்லும் பிரிவுச் சாலையானது காப்பு வனத்திற்குக் குறுக்கே மேற்குப் பக்கமாகச் சென்று வன எல்லையை விட்டு வெளியேறுகிறது. இச்சாலை சிவகங்கை வட்டத்திலுள்ள ஆவாரங்குடி, எம்.புதூர் கிராமத்திற்கு ஐயனார் கோவில் வழியாகச் செல்கிறது. ஐயனார் கோவில், அங்கீகரிக்கப்பட்ட பாதையில் 300 மீ. தொலைவில் அமைந்துள்ளது. இந்த மண் சாலையை தார் சாலையாக மாற்றம் செய்வதால் வன உயிரினங்களுக்கோ, மரங்களுக்கோ சேதாரம் ஏதுமில்லை என்பதால், மேற்படி பாதையினை தார்ச் சாலையாக மேம்பாடு செய்யலாம். எனவே, சம்பந்தப்பட்ட பயனீட்டாளர் துறையினர், அங்கீகரிக்கப்பட்ட பாதையை மாற்றம் செய்யாமலும், அனுமதிக்கப்பட்ட அகலத்திற்கு மிகாமலும், நடைமுறையில் உள்ள வனச் சட்டங்களுக்கு உட்பட்டு மேம்படுத்த அனுமதி கோரும்பட்சத்தில், வனத் துறையின்மூலம் அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

81—

மா, பலா மரக்கன்றுகளை இலவசமாக வழங்குதல்

வினா எண் 25983—திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2014 ஜூலை 30]

(அ) மானாமதுரை தொகுதியில் தனியார் நிலங்களில் மா, பலா மரக்கன்றுகளை இலவசமாக வழங்க் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பல்லுயிர்ப் பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டத்தின்கீழ், ஏற்கெனவே தனியார் நிலங்களில் மரம் வளர்ப்புத் திட்டத்தின்படி, குறுகிய /நீண்ட கால சுழற்சி முறையில், தனியார் நிலங்களில் மரம் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், வனத் துறைமூலமாக தனியார் நிலங்களில் மா, பலா மரக்கன்றுகளை உற்பத்தி செய்து இலவசமாக வழங்கிட திட்டம் ஏதுமில்லை.

82—

சிறு பாலம் அமைத்தல்

வினா எண் 32484—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், தளிஞ்சி செட்டில்மென்ட்டுக்குச் செல்லும் பாதை கூட்டாற்றில் சிறு பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை வட்டம், தளிஞ்சி செட்டில்மென்ட்டுக்குச் செல்லும் பாதையின் குறுக்கே கூட்டாறு உள்ளது. கூட்டாற்றின் அகலம் 150 அடி ஆகும். மேற்படி கூட்டாறு செல்லுமிடம் அமராவதி காப்புக் காட்டிற்குள் வருகிறது. இதற்கு, காப்புக் காட்டு அறிவிக்கையில் அனுமதிக்கப்பட்ட பாதை உரிமம் வழங்கப்படவில்லை. இப்பகுதி புலிகள் காப்பகம் மற்றும் வன உயிரின சரணாலயப் பகுதியில் உள்ளதால் இதில் பாலம் அமைக்கப்பட வேண்டுமானால், தேசிய புலிகள் ஆணையம், உச்ச நீதிமன்றம், தேசிய வன உயிரினங்கள்

[2014 ஜூலை 30

பாதுகாப்பு வாரியம் மற்றும் வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்படி மத்திய அரசு ஆகியவற்றின் அனுமதி பெற வேண்டும்.

83—

புதிய பாதை அமைத்தல்

வினா எண் 35997—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, மேல் சோழங்குப்பத்திலிருந்து ஜமுனாமரத்தூர் வரை செல்ல புதிய பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

கலசப்பாக்கம் தொகுதி, மேல் சோழங்குப்பத்திலிருந்து ஜமுனாமரத்தூர் வரை செல்ல புதிய பாதை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

84—

மலைப் பாதை அமைத்தல்

வினா எண் 41087—திரு. சு. மாதேஸ்வரன்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, கீரிப்பட்டி பேரூராட்சி, மேல்தொம்பையிலிருந்து பைத்தூர் ஊராட்சிக்குச் செல்ல மலைப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, கீரிப்பட்டி பேரூராட்சி, மேல்தொம்பையிலிருந்து பைத்தூர் ஊராட்சிக்குச் செல்லும்

2014 ஜூலை 30]

பாதையானது கீழ்த்தொம்பை, கல்லுக்கூட்டு வழியாகச் செல்கிறது. கீழ்த்தொம்பையிலிருந்து கல்லுக்கூட்டு வரை செல்லும் பகுதியானது பைத்தூர் காப்புக் காட்டில் உள்ளது. இப்பாதையானது 1.61 கி.மீ. நீளம் மற்றும் 10 கெஜம் அகலத்தில் அனுமதிக்கப்பட்ட வழித்தடம் ஆகும். வனப் பகுதியில் அனுமதிக்கப்பட்ட வழித்தடம் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ளதால், புதிதாக பாதை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. மேலும், கல்லுக்கூட்டு முதல் பைத்தூர் வரை செல்லும் சாலை வனத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லை.

85—

கால்முறை ஊதியம் வழங்குதல்

வினா எண் 42967—திருமதி எஸ். விஜயதாரணி: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வனத் துறையின்கீழ் உள்ள அரசு ரப்பர் கழகங்களில் களப் பணியாளர்களாக இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர்களை பணி நிரந்தரம் செய்து, காலமுறை ஊதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேவையின் அடிப்படையில், பருவமழை பெய்யும் காலங்களிலும், புதிய ரப்பர் மரக்கன்றுகள் நடவு செய்யப்படும் காலங்களிலுமே அரசு ரப்பர் கழகத்தில் தற்காலிகமாக களப் பணியாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். எனவே, இத்தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரம் செய்ய இயலாது. மேலும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் அரசு ரப்பர் கழகத் தொழிலாளர்களை பணி நியமனம் செய்வதிலிருந்து அரசு விலக்களிக்கும் பட்சத்தில், படிப்படியாக தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2014 ஜூலை 30

86—

மாசினைக் கட்டுப்படுத்துதல்

வினா எண் 30018—திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, நல்லூர் ஒன்றியம், ஏ. சித்தூரில் ஆரூரான் சர்க்கரை ஆலையினரல் வரும் மாசுகளைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதி, நல்லூர் ஒன்றியம், ஏ. சித்தூரில் திரு. திரு ஆரூரான் சுகர்ஸ் லிமிடெட் எனும் சர்க்கரை ஆலையினால் வரும் மாசுகளைக் கட்டுப்படுத்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேற்கூறிய சர்க்கரை ஆலையானது ஒருங்கிணைந்த ஆலையாக (சர்க்கரை மற்றும் மின் உற்பத்தி) 2-1-2003 முதல் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணை பெற்று செயல்பட்டு வருகிறது.

இவ்வாலையில் முதன்மைப் பொருளாக சர்க்கரை நாளொன்றுக்கு 367.5 மெட்ரிக் டன்னும், உப உற்பத்திப் பொருளாக நாளொன்றுக்கு 1050 மெட்ரிக் டன் கரும்புச் சக்கையும், நாளொன்றுக்கு 175 மெட்ரிக் டன் கழிவு பாகும் மற்றும் நாளொன்றுக்கு 122.5 மெட்ரிக் டன் பில்டர் கேக் உற்பத்தியும் செய்ய வாரியம் இசைவாணை வழங்கி உள்ளது. இந்த ஆலையின் இசைவாணை 12-9-2013 அன்று புதுப்பிக்கப்பட்டு 31-12-2013 வரை செல்லத்தக்கதாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தில் அமைந்துள்ள சர்க்கரை ஆலையில் இருந்து நாளொன்றுக்கு 12 கிலோ லிட்டர் மனிதக் கழிவுநீரும், நாளொன்றுக்கு 448 கிலோ லிட்டர் தொழிற்சாலைக் கழிவுநீரும் வெளியேற்றப்பட்டு, ஒருங்கிணைந்த மின் உற்பத்தித் திட்டத்தில் நாளொன்றுக்கு 2.4 கிலோ லிட்டர் மனிதக் கழிவுநீரும்,

2014 ஜூலை 30]

நாளொன்றுக்கு 2376 கிலோ லிட்டர் தொழிற்சாலை கழிவுநீரும் வெளியேற்றப்படுகிறது. இக்கழிவுநீர் அனைத்தும் இத்தொழிற்சாலையால் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின்மூலம் சுத்திகரிக்கப்பட்டு, தொழிற்சாலைக்குச் சொந்தமான சுமார் 26 ஹெக்டேர் நிலப் பரப்பளவில் கரும்பு மற்றும் இதர பயிர்களுக்கான பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனிடையே இந்நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரினால் அப்பகுதியில் நிலத்தடி நீர் மாசுபடுவதாக புகார் வந்ததை அடுத்து, அப்பகுதியினை 24-7-2012 அன்று கள ஆய்வு செய்து, அப்பகுதியில் அமைந்துள்ள திறந்தவெளிக் கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்டது. அவ்வாறு செய்யப்பட்ட ஆய்வறிக்கையில் நீரின் தரம், வாரியம் நிர்ணயித்த அளவுக்குள் இருப்பது கண்டறியப்பட்டது. மேலும், இந்நிறுவனத்திற்கு 30-7-2012 தேதியிட்ட நடப்பாணையின்மூலம் முகாந்திரம் கேட்டு முகாந்திர கடிதம் அனுப்பப்பட்டது. இம்முகாந்திரக் கடிதத்திற்கு இந்நிறுவனத்தின் பதிலைப் பெற்ற தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், 14-11-2012 தேதியிட்ட நடப்பாணையின்மூலம் இந்நிறுவனத்திற்கு சில கட்டளைகளைப் பிறப்பித்து முறையாக தொழிற்சாலையை நடத்திட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும், இந்நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் ஒவ்வொரு மாதமும் சேகரிக்கப்பட்டு, அதன் தரத்தை ஆய்வு செய்து, அவ்வப்போது நிறுவனத்தை அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தைச் சுற்றியமைந்துள்ள திறந்தவெளிக் கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து மூன்று மாதத்திற்கு ஒரு முறை நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, தரத்தை ஆய்வு செய்து, கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த மின் உற்பத்தித் திட்டத்தில் அமைந்துள்ள கொதிகலனிலிருந்து வெளியேற்றப்படும் மாசு துகள்கள் Electrostatic Precipitator என்ற தொழில்நுட்ப முறையில் கட்டுப்படுத்தப்பட்டு, சுமார் 80 மீட்டர் உயரமுள்ள புகைபோக்கிமூலம் வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து முனைப்புடன் கண்காணித்து வருகிறது.

[2014 ஜூலை 30

87—

மாசினைக் கட்டுப்படுத்துதல்

வினா எண் 30019—திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், காணாதுகண்டான் கிராமத்தில் அமைந்துள்ள சாராய ஆலையின் மாசுகளைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தி/ள். ஸ்ரீ அம்பிகா சுகர்ஸ் லிமிடெட், சாராய வடிப்பக நிலையம், கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், காணாதுகண்டான் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ளது.

இந்நிறுவனம் 1-1-2009 முதல் இயக்கத்தில் உள்ளது. இந்நிறுவனம் சர்க்கரை ஆலை கழிவுப் பாகிலிருந்து நாளொன்றுக்கு 60 கிலோ லிட்டர் ரெக்டிபைடு ஸ்பிரிட்டும், (Rectified Spirit), நாளொன்றுக்கு நியூட்ரல் ஸ்பிரிட் ஈஎன்ஏ (Neutral Sprit ENA) 10 கிலோ லிட்டரும் உற்பத்திப் பொருளாகத் தயாரித்து வருகிறது. இந்நிறுவனத்திற்கு தொழிற்சாலையை இயக்குதல் இசைவாணை 6-1-2009-ல் வழங்கப்பட்டு, 31-12-2013 வரையில் சில நிபந்தனைகளுடன் இசைவாணை புதுப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திலிருந்து நாளொன்றுக்கு 4.5 கிலோ லிட்டர் அன்றாட மனிதக் கழிவுநீரும், நாளொன்றுக்கு 360 கிலோ லிட்டர் தொழிற்சாலைக் கழிவுநீரும் வெளியேற்றப்படுகிறது. இந்நிறுவனம் தொழிற்சாலைக் கழிவுநீருக்கு 3,600 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட 6 தொட்டிகளை அமைத்து கழிவுநீரைத் தேக்கி வைத்து, அதன் அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள 10 ஏக்கர் பரப்பளவில் கான்கிரீட்டினால் உருவாக்கப்பட்டுள்ள தளத்தில் சர்க்கரை ஆலையில் பிரஸ் மட்டை கொண்டு பையோ கம்போஸ் எனப்படும் இயற்கை உரம் தயாரிக்கப்படுகிறது.

2014 ஜூலை 30]

இத்தொழிற்சாலையில் ஒரு மணி நேரத்திற்கு 20 டன் திறனுள்ள கொதிகலன் அமைத்து இயக்கப்பட்டு, அதிலிருந்து வெளியேற்றப்படும் மாசுக்காற்று Electrosatic Precipitator (ECP) என்னும் தொழில்நுட்பத்தின்மூலம் சுத்திகரிக்கப்பட்டு, சுமார் 45 மீட்டர் உயரமுள்ள புகை போக்கியின்மூலம் வெளியேற்றப்பட்டு வருகிறது.

9-9-2012 அன்று, இந்நிறுவனம் அதன் கழிவுநீரை ஆங்காங்கே விளைநிலங்கள் மற்றும் இதர பகுதிகளில் கொட்டுவதாக புகார்கள் வரப்பெற்றன. இப்புகார்களில் தெரிவிக்கப்பட்ட பகுதிகள் அனைத்தும் 10-9-2012 அன்று ஆய்வு செய்யப்பட்டன. இதன்படி மேல்நடவடிக்கையாக, இந்நிறுவனத்திற்கு 11-9-2012 தேதியிட்ட நடப்பாணையின்மூலம் முகாந்திரம் கோரப்பட்டது. முகாந்திரக் கடிதத்தின் மீது பதில் பெறப்பட்டது. அதில் கழிவு நீர் விளைநிலங்களில் விவசாயிகளின் விருப்பத்தின் பேரில் விடப்படுவதாகவும், உரம் தயாரிக்க பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இந்நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் மற்றும் அதன் அருகே அமைத்துள்ள பயோ கம்போஸ்ட் (Bio compost) ஆழ்துளைக் கிணற்றிலிருந்து ஒவ்வொரு மாதமும் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, அதன் தரத்தை ஆராய்ந்து, இந்நிறுவனம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்தின் கழிவுநீரின் தரம், நீர் நிலைகள் மற்றும் நிலத்தில் விட அனுமதிக்கப்படும் காரணிகளின் அளவுகளை விட கூடுதலாக இருப்பதால், அதை பயோ கம்போஸ்ட் மட்டுமே செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து நீர் மாதிரிகள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை சேகரிக்கப்பட்டு, அதன் தரம் ஆராய்ந்து, கண்காணிக்கப்பட்டு வருகிறது. நிறுவனத்தின் உள்ளே மற்றும் சுற்றியுள்ள நான்கு ஆழ்துளைக் கிணறுகளின் நீர் மாதிரிகள் தொடர்ந்து சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மேற்படி ஆழ்துளைக் கிணறுகளின் நீரின் தரம் குடிநீருக்குண்டான தர அளவுகளுக்குள் (IS 10500:1991) உள்ளது அறியப்பட்டது.

மேலும், இந்நிறுவனத்தின் புகை போக்கியிலிருந்து வெளியேற்றப்படும் மாசுக் வாயுக்களின் தரம், வருடத்திற்கு

இரண்டு முறை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தால் ஆய்வு செய்யப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது. அவை வாரியம் நிர்ணயித்த அளவுக்குள் உள்ளது.

மேலும், இந்நிறுவனத்தை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து முனைப்புடன் கண்காணித்து வருகிறது.

88—

மருத்துவமனையைப் பராமரித்தல்

வினா எண் 24731—திருமதி ர. சுபா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், சிறுவாச்சூர் ஊராட்சியிலுள்ள அரசு மருத்துவமனையை பராமரித்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த சிறுவாச்சூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 2012-2013 ஆம் நிதியாண்டில் பராமரிப்புப் பணிகளுக்காகப் பெறப்பட்ட மதிப்பீட்டின்படி, ரூ.1,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நோயாளிகள் காத்திருப்பு கூடத்திற்கு பராமரிப்புப் பணிகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தண்ணீர் வசதி முதலிய பணிகள் பொதுப் பணித் துறையினரால் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

89—

அடையாள அட்டை வழங்குதல்

வினா எண் 29212—திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2014 ஜூலை 30]

(அ) அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் அவர்களுடைய உதவியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் கர்ப்பிணிப் பெண்கள் பிரசவத்தின்போது அக்கர்ப்பிணிப் பெண்களை அருகிலிருந்து கவனிக்க ஓர் உதவியாளரை (சொந்த குடும்பத்தில் (அ) பெண் நண்பர்கள்) வைத்துக் கொள்ள அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், அவ்வாறு உதவிடும் உதவியாளருக்கு உரிய பயிற்சியும், கலந்தாய்வும் சம்பந்தப்பட்ட மகப்பேறு பிரிவு செவிலியர்மூலம் அளிக்கப்படுகின்றது. மேற்கண்ட நிலை தற்போது தமிழக அரசு மருத்துவமனைகளில் நடைமுறையில் உள்ளதுடன், சீரிய முறையில் பின்பற்றிவருவதால், அடையாள அட்டை வழங்கும் அவசியம் தற்போது எழவில்லை.

90—

நாய்க்கடி மருந்து வழங்குதல்

வினா எண் 30394—திரு. ரா. சாத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு போதிய நாய்க்கடி மருந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் (திருநெல்வேலி மாவட்டம் உட்பட)

[2014 ஜூலை 30

மருந்துகளுக்கென 2013-2014-ல் ரூ.32,28,20,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், நாய்க்கடி மருந்திற்கென ரூ.4,04,25,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின்மூலம் அனைத்து மருந்துகளும், குறிப்பாக உயிர்காக்கும் மருந்துகளான நாய்க்கடி, பாம்புக்கடி மருந்துகளும் விநியோகம் செய்யப்பட்டு, போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

91—

இரத்த சோகையைத் தடுத்தல்

வினா எண் 30968—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் இளம் பெண்களுக்கு ஏற்படும் இரத்த சோகையைத் தடுக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

1. 10 வயது முதல் 19 வயது வரை உள்ள வளர் இளம் பெண்களுக்கு வாரம் ஒரு முறை இரும்புச் சத்து மாத்திரை (பெரியது) கொடுக்கப்பட்டு வருகிறது.

2. குடல் புழுக்களினால் உண்டாகும் இரத்த சோகை நோயினைத் தடுப்பதற்கு 1 வயது முதல் 19 வயது வரை உள்ளவர்களுக்கு அல்பெண்டசோல் மாத்திரை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது.

92—

மருத்துவமனையில் உணவகம் நடத்துதல்

வினா எண் 31791—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள மாவட்ட, வட்ட அரசு மருத்துவமனைகளில் தனியார் பங்களிப்புடன் உணவகம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

2014 ஜூலை 30]

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் மாவட்ட தலைமையிட மருத்துவமனை, தாலுகா மருத்துவமனை, வட்டம் சாரா அரசு மருத்துவமனைகளில், பொது தொலைபேசியகம், (பி.சி.ஓ. மற்றும் எஸ்.டி.டி.), பெட்டிக் கடைகள், ஆவின் பாலகம் மற்றும் சிற்றுண்டி விடுதி வைப்பதற்கு அனுமதி வழங்குவது குறித்து சில நிபந்தனைகள் மற்றும் வரன்முறைகள் விதித்து, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஜே1) துறையின் 20-3-2003 நாளிட்டப்பட்ட அரசாணை (நிலை) எண் 59-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வரசாணையின்படி ஏற்கெனவே மருத்துவமனைகளில் நடந்து கொண்டிருக்கும் சிற்றுண்டி விடுதியினைத் தொடர்ந்து நடத்த விண்ணப்பிப்பவர்களில் பொதுப் பணித் துறையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்பவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனைகளில் புதியதாக உணவகம் வைத்து நடத்த அனுமதி வழங்கப்படுவதில்லை.

93—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 31783—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீங்கள் நகரிலுள்ள அரசு சித்த மருத்துவமனையை தரம் உயர்த்தி மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 275, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (இம 2-1) துறை ஆணையின்படி ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் செயல்பட்டு வந்த 64 இந்திய மருத்துவப்

[2014 ஜூலை 30

பிரிவுகள் இத்துறையின்கீழ் ஏற்கப்பட்டபோது, பள்ளியாடி என்ற இடத்தில் செயல்பட்டு வந்த ஊரகப் பிரிவு, திங்கள் நகர்/ திங்கள் சந்தைக்கு மாற்றப்பட்டு, தற்போது நிரந்தரப் பிரிவாகச் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு ஊரகப் பிரிவிலிருந்து ஏற்கப்படும்போது, ஓர் உதவி மருத்துவ அலுவலர் பணியிடம் மட்டுமே இருந்ததால் அது மட்டும் ஏற்கப்பட்டு, ஓர் உதவி மருத்துவ அலுவலர் பணியிடத்துடன் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவினை தரம் உயர்த்தி புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

94—

செயற்கை உறுப்புகள் வழங்குதல்

வினா எண் 35590—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விபத்துக்களில் உடல் உறுப்புகளை இழந்தவர்களுக்கு உதவித் தொகையும், செயற்கை உறுப்புகளையும் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், விபத்துக்களில் சிக்கியவர்களுக்கு உடனடி முதலுதவி செய்யப்பட்டு வருவதுடன், தேவை ஏற்படின், அருகிலுள்ள மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் உரிய மேல் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், மத்திய/மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீட்டில் தேசிய நெடுஞ்சாலையில் விபத்துகள் அதிகம் ஏற்படும் இடங்களில், அப்பகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனைகளில் மேற்கண்ட விபத்துக்களுக்கென பிரத்யேகமாக, 24 மணி நேரமும் செயல்படக்கூடிய விபத்து மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, உரிய சிகிச்சைகள் துரிதமாக அளிக்கப்பட்டு, சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. மேலும், விபத்துகளில் உடல் உறுப்புகளை இழந்தவர்களுக்கு

2014 ஜூலை 30]

உதவித்தொகையும், செயற்கை உறுப்புகளையும் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை. எனினும், விபத்தின் தன்மை குறித்தும், இழப்பீடு குறித்தும் அரசு பரிசீலித்து, தேவையெனி, அரசுமூலமாகவும், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்மூலமாகவும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

95—

மின்னாக்கியை செயல்படுத்துதல்

வினா எண் 35731—திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ மதுரை, பாலரெங்காபுரம் அரசு மருத்துவமனையில் உள்ள மின்னாக்கியை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் *(ஆ)* மதுரை, பாலரெங்காபுரம் அரசு மருத்துவமனையில் உள்ள மின்னாக்கி செயல்பட்டு வருகிறது. மதுரை, பாலரெங்காபுரம் அரசு மருத்துவமனையில் ஜூன் 2013 முதல் பொதுப் பணித் துறைமூலம் முக்கிய இடங்களுக்கு Inverter வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், மருத்துவமனை அறுவை அரங்கிற்கு மட்டும் Honda EB K 2800 W போர்டபிள் ஜெனரெட்டர் இரண்டு அமைக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கிக் கொண்டு வருகிறது.

96—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 36598—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 30

(அ) குளச்சல் அரசு மருத்துவமனையில் மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் அரசு மருத்துவமனை 50 படுக்கை வசதியுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 45 உள்நோயாளிகளுடன், 300 வெளிநோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனைக்கு தலைமை குடிமை மருத்துவர், முதுநிலை குடிமை மருத்துவர், குடிமை மருத்துவர், உதவி மருத்துவர், 2 பொது மருத்துவர் என மொத்தம் 5 மருத்துவப் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, தற்போது 4 மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். காலியாக உள்ள ஒரு பணியிடத்தை எதிர்வரும் கலந்தாய்வு பணி நியமனம் வாயிலாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

97—

தோல் நோய் அறுவை சிகிச்சை அரங்கம் அமைத்தல்

வினா எண் 37141—திரு. ரா. சரத்குமார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் தோல் நோய் அறுவை சிகிச்சை அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் தோல் நோய் அறுவை சிகிச்சை அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

2014 ஜூலை 30]

(ஆ) சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் தோல் நோய் அறுவை சிகிச்சை அரங்கம் (Minor operation theatre) 10-10-2013 அன்று தொடங்கப்பட்டு தற்பொழுது நல்ல முறையில் இயங்கி வருகிறது.

98—

மருத்துவர்கள் நியமனம்

வினா எண் 37796—திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் போதுமான மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், வேதாரண்யம் அரசு மருத்துவமனை 59 படுக்கை வசதிகளுடன் இயங்கி வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 402 வெளிநோயாளிகளும், 44 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட 10 மருத்துவர்களில் தற்போது 6 மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். ஒரு பல் மருத்துவர் பணியிடம் ஒப்பளிக்கப்பட்டு அதில் பல் மருத்துவர் பணியிலுள்ளார். மேலும், இங்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கைகளை விட குறைந்த எண்ணிக்கையில்தான் உள்நோயாளிகளின் பயன்பாடு உள்ளது. எனவே, தற்போது பணியில் உள்ள மருத்துவர்களைக் கொண்டு நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், காலிப் பணியிடங்களை நிரப்ப மருத்துவப் பணிகள் தேர்வு வாரியம் வாயிலாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2014 ஜூலை 30

99—

மருத்துவர் பணியிடம்

வினா எண் 40635—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளச்சல் அரசு மருத்துவமனையில் மருத்துவப் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் அரசு மருத்துவமனை 50 படுக்கை வசதிகளைக் கொண்ட வட்டம் சாரா மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையின் செயல்பாட்டின் அடிப்படையில் மருத்துவர் மறுசீரமைப்பின்படி 3 உதவி மருத்துவர் பணியிடங்களும், தலைமை மருத்துவர் மற்றும் முதுநிலை குடிமை மருத்துவர் பணியிடங்களில் தலா 1 மருத்துவர் பணியிடங்களும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. இதில் 3 உதவி மருத்துவர் பணியிடங்களிலும், 1 தலைமை மருத்துவர் பணியிடத்திலும் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். காலியாக உள்ள 1 முதுநிலை குடிமை மருத்துவர் பணியிடத்தை நிரப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(பேரவைத் கூட்டத் தொடர் முடியும்வரை தொடர்புடைய உறுப்பினர்கள் நீக்கம் செய்யப்பெற்றுள்ளதால் வரிசை எண்கள் 9, 77, 100 தொடர்புடைய வினாக்கள்-விடைகள் இப்பட்டியலில் இடம் பெறவில்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2014 ஜூலை 30]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

நெல்லுக்கான ஊக்கத் தொகையை மாநில அரசு வழங்குதல் தொடர்பான மத்திய அரசின் கற்றறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாநில அரசு விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் நெல்லுக்கு ஊக்கத் தொகை வழங்குவதைத் தடுக்கும் மத்திய அரசின் அறிவிப்பு குறித்து தே.மு.தி.க. கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி.எச். சேகர், திரு. எஸ். வெங்கடேசன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்டு மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. பாலகிருஷ்ணன், திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. கே. தங்கவேல், திரு. ப. டில்லி பாபு அவர்களும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. கு. விங்கமுத்து அவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. கோபிநாத், திரு. என்.ஆர். ரெங்கராஜன், திரு. எஸ். ஜாண் ஜேக்கப், திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்களும் மனிதநேய மக்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. அ. அஸ்லம் பாஷா ஆகியோரும் சட்டப் பேரவை விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களில், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் தே.மு.தி.க. கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

***திரு. சி.எச். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதலில் கடந்த ஆண்டு மத்திய அரசு சன்ன ரகத்திற்கு ரூ.1,345/- என்றும், சாதாரண ரக நெல்லுக்கு ரூ.1,310/- என்றும், . . .

[2014 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அறிவிப்பில் எழுதிக் கொடுத்ததை மட்டும் படியுங்கள். மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்று மட்டும் சொல்லுங்கள். நீங்கள் எழுதிக் கொடுத்ததை மட்டும் படியுங்கள்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதலுக்கு மாநில அரசு கொடுக்கும் ஊக்கத் தொகையை வழங்கக்கூடாது என்ற மத்திய அரசின் சுற்றறிக்கையை திரும்பப் பெற வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களுக்கு மத்திய அரசு நியாயமான விலையைத் தீர்மானிக்காத சூழ்நிலையில், மாநில அரசு ஊக்கத் தொகை வழங்குவது என்பது ஒரு நிவாரணமாக இருந்து வந்தது. அதனை தற்போது மத்திய அரசு, மாநில அரசுகள் தரும் ஊக்கத் தொகையை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்துள்ளதை மட்டும் படியுங்கள். நீங்கள் விளக்கமாகச் சொல்ல வேண்டாம். அதன் உள்ளே போக வேண்டாம். நீங்கள் படியுங்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசுகள் ஊக்கத் தொகை வழங்கக்கூடாது என்று அறிவித்திருக்கிற அந்த அறிவிப்பை கண்டிக்க வேண்டுமென்றும், தொடர்ந்து தமிழக அரசு ஊக்கத் தொகையை அதிகரித்து வழங்க வேண்டுமென்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. குணசேகரன் அவர்கள்.

திரு. கு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக மத்தியில் பதவியேற்றிருக்கிற பாரதிய ஜனதா

2014 ஜூலை 30] [திரு. சு. குணசேகரன்]

கட்சி, நெல்லுக்கான கொள்முதல் விலையில் மாநில அரசு ஊக்கத் தொகையை வழங்கக்கூடாது, அப்படி மீறி வழங்கினால் முகவர்களின் உரிமை இரத்து செய்யப்படும் என்று மாநில சுயாட்சியின் அதிகாரத்தில் தலையிடுகிற ஒரு மோசமான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அறிவிப்பில் கொடுத்திருப்பதை மட்டும் படியுங்கள். அதுபோதும்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, மத்திய அரசினுடைய அந்த அறிவிப்பை இரத்து செய்து, மாநில அரசு ஏற்கெனவே கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய ஊக்கத் தொகையோடு, நெல்லுக்கான விலையைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு நெல்லுக்கான ஊக்கத் தொகையை மாநில அரசு வழங்கக்கூடாது என்று அறிவித்திருப்பது விவசாயிகள் மத்தியில் வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அமைகிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதலுக்காக வேண்டி மத்திய அரசு நிர்ணயித்திருக்கக்கூடிய ஆதார விலை விவசாயிகளுக்கு போதுமானதாக இல்லை. நீண்டகாலமாக தமிழக அரசு அவர்களுக்கு உபரியாக ஊக்கத் தொகையை வழங்குகிறது. அந்த ஊக்கத் தொகையை வழங்கினால் மானியம் இரத்து செய்யப்படும் என்று பாட்டாளி மக்களுக்கு எதிராக மத்தியிலே ஆளக்கூடிய பி.ஜே.பி. அரசு எடுத்துள்ள அந்த நடவடிக்கை குறித்து தமிழக அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

[2014 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதலுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை ஆண்டுதோறும் மத்திய அரசு நிர்ணயித்து வருகிறது. இதன்படி, நடப்பாண்டிற்கான சாதாரண ரக நெல்லுக்கான கொள்முதல் விலை குவிண்டாலுக்கு 1,310 ரூபாய் எனவும், சன்ன ரக நெல்லுக்கான கொள்முதல் விலை குவிண்டாலுக்கு 1,345 ரூபாய் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், நெல் பயிரிடும் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, சாதாரண நெல்லுக்கு குவிண்டால் ஒன்றிற்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,310 ரூபாயுடன் கூடுதலாக தமிழக அரசின் சார்பில் 50 ரூபாய் வழங்கவும், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றிற்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,345 ரூபாயுடன் கூடுதலாக தமிழக அரசின் சார்பில் 70 ரூபாய் வழங்கவும் நான் உத்தரவிட்டிருந்தேன். இதன்படி, சாதாரண நெல்லுக்கு குவிண்டால் ஒன்றிற்கு 1,360 ரூபாயும், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றிற்கு 1,415 ரூபாயும் 1-10-2013 முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதே கொள்முதல் விலை வரும் செப்டம்பர் மாதம் இறுதி வரையில் நடைமுறையில் இருக்கும்.

தற்போது, மத்திய அரசால் 2014-2015 ஆம் ஆண்டிற்கான நெல் கொள்முதல் விலை 7-7-2014 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 1-10-2014 முதல் ஒரு குவிண்டால் சாதாரண ரக நெல்லுக்கு 1,360 ரூபாயும், சன்ன ரக நெல்லுக்கு 1,400 ரூபாயும் கிடைக்கும். மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள இந்தக் குறைந்தபட்ச ஆதார விலை என்பது, காரீஃப் பருவத் துவக்கமான 1-10-2014 முதல் செயல்பாட்டுக்கு வரும் என்பதால், தமிழக அரசு வழங்கும் ஊக்கத் தொகை செப்டம்பர் மாத இறுதியில்தான் வெளியிடப்படுவது வழக்கம். ஊக்கத் தொகை வழங்குவது குறித்த அரசாணைகள் 2010-2011 ஆம் ஆண்டிற்கு 30-9-2010 அன்றும், 2011-2012 ஆம் ஆண்டிற்கு 30-9-2011 அன்றும், 2012-2013 ஆம் ஆண்டிற்கு 28-9-2012 அன்றும், 2013-2014 ஆம் ஆண்டிற்கு 26-9-2013 அன்றும் வெளியிடப்பட்டன.

இந்தச் சூழ்நிலையில், மத்திய அரசின் நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம், மாநிலங்களுக்கு 12-6-2014 தேதியிட்ட ஒரு சுற்றறிக்கையினை அனுப்பி உள்ளது.

2014 ஜூலை 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இந்தச் சுற்றறிக்கை 16-6-2014 அன்று தமிழக அரசுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்தச் சுற்றறிக்கையில், பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின்கீழ், 2014-2015 ஆம் ஆண்டிற்கான கரீஃப் மற்றும் 2015-2016 ஆம் ஆண்டுக்கான ரபி பருவ நெல் கொள்முதலுக்கான ஊக்கத் தொகையை மாநில அரசு அறிவித்தால், பொது விநியோகத் திட்டம் மற்றும் பிற மக்கள் நலத் திட்டத்திற்கென மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுக்கான நெல் கொள்முதலுக்கு மட்டுமே மத்திய அரசின் மானியம் வழங்கப்படும் என்றும், அதற்குக் கூடுதலாக கொள்முதல் செய்யப்பெறும் நெல்லை இந்திய உணவுக் கழகம் இருப்பு வைப்பதற்காக தேவைக்கேற்ப வாங்கிக்கொள்ளும் என்றும், ஆனால், அத்தகைய கூடுதல் கொள்முதலை வாங்கிக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயம் இல்லை என்றும், மத்திய அரசால் பொது விநியோகம் மற்றும் பிற நலத் திட்டங்களுக்கு என நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு மேல் கொள்முதல் செய்யப்படும் நெல்லை பயன்படுத்திக்கொள்வது என்பது மாநில அரசின் பொறுப்பே என்றும், அதற்கான செலவை மாநில அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவால் தமிழ்நாட்டிற்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது என்பதால்தான் இதுபற்றி எவ்வித கருத்தையும் இதுவரை நான் தெரிவிக்கவில்லை. எனது தலைமையிலான அரசும், இதுதொடர்பாக மத்திய அரசுக்கு எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

முற்பகல் 11-20

நெல் மற்றும் கோதுமை கொள்முதலுக்கு மாநில அரசுகள் வழங்கும் ஊக்கத் தொகை குறித்த மத்திய அரசின் இந்தக் கடிதம் பற்றி ஒரு சில பத்திரிகைகளில் செய்தி வெளிவந்ததுடன் தி.மு.க. தலைவரும், இந்த மாமன்றத்தின் உறுப்பினருமான திரு. மு. கருணாநிதி, வழக்கம்போல ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அந்த அறிக்கையில், நெல் கொள்முதலுக்கு மாநில அரசுகள் நீண்ட காலமாக வழங்கிவரும் ஊக்கத் தொகை வழங்கக்கூடாது என்றும், அப்படி ஊக்கத் தொகை வழங்கி கொள்முதல் செய்தால் மானியம் வழங்கப்பட மாட்டாது என்றும் மத்திய அரசு உத்தரவிட்டிருப்பதால் டெல்டா மாவட்ட விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர் என டெல்டா விவசாயிகளிடையே ஒரு தேவையற்ற பதற்றத்தை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஜூலை 30

கிளப்பிவிட்டதோடு, தமிழக அரசு இதுவரை விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கான இந்தப் பிரச்சினையில், மாநில அரசின் நிலைப்பாட்டைப் பற்றி வாய் திறக்காமல் உள்ளது என்று எனது தலைமையிலான தமிழக அரசின்மீது குற்றம் சுமத்தும் விதமாகக் கூறியுள்ளார். எந்தப் பிரச்சினையிலாவது எனது தலைமையிலான மாநில அரசின்மீது குற்றம் கண்டுபிடிக்க இயலாதா, குறை சொல்ல முடியாதா, என்று பார்த்துக்கொண்டிருந்த தி.மு.க. தலைவரும், இந்த மாமன்ற உறுப்பினருமாகிய திரு. கருணாநிதி, இந்தப் பிரச்சினை பற்றி எதுவும் சரியாகத் தெரிந்துகொள்ளாமல் அவசர அவசரமாக நீண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டம், அதாவது Decentralised Procurement Scheme என்பது 1997-1998 ஆம் ஆண்டு மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. 2001 ஆம் ஆண்டுவரை தி.மு.க. ஆட்சி அதிகாரத்தில் இருந்தபோது இதை நடைமுறைப்படுத்துவதற்கான எந்த நடவடிக்கையையும் திரு. கருணாநிதி எடுக்கவில்லை. எனது ஆட்சிக் காலத்தில், அதாவது 1-10-2002 முதல்தான் இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் குறைந்தபட்ச ஆதார விலையை விவசாயிகள் பெறுவதற்கு வழிவகை செய்கிறது. இதன்படி, இந்திய உணவுக் கழகம், அதாவது Food Corporation of India-ன் முகவராக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் செயல்பட்டு, இந்திய உணவுக் கழகத்தின் சார்பில் நெல் கொள்முதல் செய்கிறது. அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட நெல்லைப் பாதுகாத்து, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அரிசி ஆலைகள் மூலமும், தனியார் அரிசி ஆலைகள் மூலமும், நெல்லை அரிசியாக்கி, பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்குகிறது. இவ்வாறு வழங்கப்படும் அரிசியின் அளவு, மத்திய அரசு வழங்கிட வேண்டிய அரிசியின் பகுதியாகக் கணக்கிடப்பட்டு, எஞ்சிய அரிசி மத்திய அரசால் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்படி, விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் நெல்லை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்யலாம் அல்லது அவர்கள் விருப்பப்படி தனியாருக்கும் விற்பனை செய்யலாம். வெளிச் சந்தையில் நெல்லின் விலை அதிகமாக இருக்கும்போது, விவசாயிகள் தங்களின் நெல்லை தனியாருக்கு விற்பனை செய்வார்கள். வெளிச் சந்தையில் நெல்லின் விலை குறைவாக இருக்கும்போது, விவசாயிகள் தங்களின் நெல்லை நேரடி கொள்முதல் நிலையங்கள்மூலம் அரசுக்கு விற்பனை செய்வார்கள்.

2014 ஜூலை 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இதனால்தான் நேரடிக் கொள்முதல் நிலையங்களில் பெறப்படும் நெல்லின் அளவு ஆண்டுக்கு ஆண்டு வேறுபடுகிறது. 2011-2012 ஆம் ஆண்டு நேரடி கொள்முதல் நிலையங்கள்மூலம் 23.81 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. நடப்பாண்டில் 10.17 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 11-25

பொது விநியோகத் திட்டம் மற்றும் இதர மக்கள் நலத் திட்டங்களுக்கு என தமிழ்நாட்டிற்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள அரிசியின் அளவு ஆண்டிற்கு 35.58 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். நெல் என்று கணக்குப் பார்த்தால் இது 52.32 இலட்சம் மெட்ரிக் டன் நெல் ஆகும்.

தமிழ்நாட்டில் இதுவரை அதிகபட்சமாக 23.81 இலட்சம் மெட்ரிக் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு இருக்கிறது. இது 16.19 இலட்சம் மெட்ரிக் டன் அரிசிக்கு இணையானது ஆகும். தமிழ்நாட்டிற்கென மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட ஓர் ஆண்டிற்கான அரிசியைவிட குறைவாகவே நெல் கொள்முதல் செய்யப்படுவதால், மத்திய அரசின் தற்போதைய அறிவிப்பின்மூலம் தமிழ்நாட்டிற்கு எவ்விதப் பாதிப்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மீத்தேன் வாயு எடுக்கும் திட்டம், கெயில் குழாய் பதிக்கும் திட்டம், மரபணு மாற்று விதைகள் என பல்வேறு விவசாய விரோதத் திட்டங்களை முந்தைய மத்திய காங்கிரஸ் அரசு அறிவித்தபோது, அந்த ஆட்சியில் அங்கம் வகித்து வாய்மூடி மௌனியாக இருந்த தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி, வணிகர்களுக்கு எதிரான சில்லரை வணிகத்தில் அந்நிய முதலீட்டுக் கொள்கையை ஆதரித்த தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி, எனது தலைமையிலான மாநில அரசு தன்னுடைய நிலைப்பாட்டைத் தெரிவிக்கவில்லை என்று அவசர அவசரமாக அறிக்கை விடுவது நகைப்புக்கு உரியதாக உள்ளது. அதேசமயத்தில், இந்த மக்கள் விரோத, விவசாய விரோத நடவடிக்கைகளை தமிழகத்தில் தடுத்து நிறுத்தியது எனது தலைமையிலான அரசுதான் என்பதை பெருமிதத்துடன் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஜூலை 30

மக்களுக்காக திட்டங்கள், திட்டங்களுக்காக மக்கள் அல்ல என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏற்கெனவே தெளிவுபடுத்தி இருக்கிறேன். விவசாயப் பெருங்குடி மக்களின் நன்மைக்காக பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது. அந்த அடிப்படையிலேயே, நடப்பாண்டிலும் நெல்லுக்கான ஊக்கத் தொகை, குவிண்டால் ஒன்றுக்கு சன்ன ரகத்திற்கு 70 ரூபாய் வீதமும், சாதாரண ரகத்திற்கு 50 ரூபாய் வீதமும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலம், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 1,470 ரூபாயும், சாதாரண ரக நெல்லுக்கு 1,410 ரூபாயும் 1-10-2014 முதல் விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் விடிவெள்ளியாக எனது அரசு தொடர்ந்து விளங்கும் என்பதையும் உறுதிபட இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அரசின் கவனத்தை ஈர்த்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இதுகுறித்து கவலைகொள்ளத் தேவையே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

(அ) பள்ளிக் கல்வித் துறையில் ஆசிரியர் நியமனம், கட்டட வசதி மற்றும் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் புதிய திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் இரண்டு அறிக்கைகளை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செல்வத்துள் பெரும் செல்வம் ஆகிய கல்வியை அனைவரும் கற்று, கல்லாதவர்களே இல்லாத மாநிலம் தமிழகம் என்ற குறிக்கோளை அடையும் வகையில் எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்:

2014 ஜூலை 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

1. கல்வியின் அடித்தளமாக விளங்குவது தொடக்கக் கல்வி என்பதைக் கருத்தில்கொண்டு நடப்புக் கல்வியாண்டில், 25 மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அதிகம் உள்ள 128 குடியிருப்புப் பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்தக் குடியிருப்புப் பகுதிகளில், தலா ஒரு தொடக்கப் பள்ளி வீதம் 128 புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு தலைமை ஆசிரியர் மற்றும் ஓர் இடைநிலை ஆசிரியர் என மொத்தம் 256 ஆசிரியர்கள் பணியமர்த்தப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

இவ்வாறாக தொடங்கப்படும் தொடக்கப் பள்ளிகளில் மதிய உணவு சமைப்பதற்குத் தேவையான நவீன சமையலறை, குடிநீர் வசதியுடன்கூடிய கட்டடங்கள் மற்றும் கழிப்பிடங்கள் ஆகியவை ஏற்படுத்தித் தரப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு தோராயமாக 19 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

2. 2009 ஆம் ஆண்டைய குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின்படி, 3 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு ஒரு நடுநிலைப் பள்ளி அமைக்கப்படவேண்டும். அதன்படி கடந்த மூன்று ஆண்டுகளில் 65 தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, நடப்பாண்டில் 19 மாவட்டங்களில் 42 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு நிலை உயர்த்தப்படும் ஒவ்வொரு பள்ளிக்கும் 3 பட்டதாரி ஆசிரியர்கள் வீதம் 126 ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுவதோடு, ஒவ்வொரு பள்ளிக்கும் 3 கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தரப்படும். இதனால் ஆண்டொன்றுக்கு 9 கோடியே 28 இலட்சம் ரூபாய் அரசுக்கு செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. கடந்த மூன்று ஆண்டுகளில், 760 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. இதன் காரணமாக, சுமார் 1 இலட்சத்து 6 ஆயிரம் மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர். நடப்புக் கல்வியாண்டில், 50 அரசு நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஜூலை 30

என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உயர்நிலைப் பள்ளி ஒன்றுக்கு ஒரு தலைமையாசிரியர் பணியிடம் வீதம் 50 தலைமையாசிரியர் பணியிடங்களும், 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் என மொத்தம் 300 ஆசிரியர் பணியிடங்கள் பணி நிரவல்மூலம் நிரப்பப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

4. கடந்த மூன்று ஆண்டுகளில் 300 அரசு மாநகராட்சி மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன. நிலை உயர்த்தப்படும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய 5 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையை மாற்றி, கூடுதலாக தமிழ், வரலாறு, பொருளாதாரம் மற்றும் வணிகவியல் ஆகிய பாடங்களுக்கும் சேர்த்து 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக, நடப்புக் கல்வியாண்டில் 100 அரசு மாநகராட்சி மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு நிலை உயர்த்தப்படும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு ஒரு தலைமையாசிரியர் பணியிடம் வீதம் 100 தலைமையாசிரியர் பணியிடங்கள், ஒன்பது முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 900 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் என மொத்தம் 1,000 பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும் என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென ஆண்டொன்றுக்கு 31 கோடியே 82 இலட்சம் ரூபாய் அரசுக்கு செலவு ஏற்படும்.

5. வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்துவிட்டாலோ அல்லது நிரந்தர முடக்கம் அடைந்தாலோ, வருவாய் இன்மை காரணமாக பள்ளியில் கல்வி கற்கும் அவர்களது குழந்தைகள் கல்வியைத் தொடர்ந்து கற்க இயலாத நிலை ஏற்படும் சமயத்தில், அவர்களது குழந்தைகள் தங்களது கல்வியைத் தொடர்ந்து கற்கும் வகையில், அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு

2014 ஜூலை 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வரை கல்வி கற்கும் மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் 50,000 ரூபாய் நிதி வழங்கும் திட்டம், என்னால் 2005 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் தொகை இனி 75,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்நிதி அரசு நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டு, அதிலிருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை மற்றும் அதன் முதிர்வுத் தொகை ஆகியவை அந்த மாணவ, மாணவியரின் கல்விச் செலவுக்காகவும், பராமரிப்புக்காகவும் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தினால் அரசுக்கு 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் கூடுதலாக செலவு ஏற்படும்.

(முற்பகல் 11-35

6. அனைத்துப் பள்ளிகளிலும் 100 விழுக்காடு கழிவறை வசதி மற்றும் குடிநீர் வசதி இருக்க வேண்டும் என்பதற்காக கணக்கெடுப்புப் பணி எனது தலைமையிலான அரசால் மேற்கொள்ளப்பட்டு, கழிவறை வசதிகள் இல்லாத 2,057 பள்ளிகளுக்குக் கழிவறை வசதிகள் உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. கழிவறைகளைக் கட்டிக் கொடுத்தால் மட்டும் போதாது குழந்தைகளின் சுகாதாரம் கருதி, அக்கழிவறைகளை சுத்தமாகப் பராமரிப்பதும் மிகவும் இன்றியமையாத பணி என்பதால், முதன்முறையாக, கழிவறைகளைப் பராமரிப்பதற்காக 160 கோடியே 77 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம், 56 இலட்சத்து 55 ஆயிரம் மாணவ, மாணவியர் பயனடைவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

7. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குத் தரமான கட்டணமில்லா கல்வி வழங்குவதோடு, விலையில்லா பாடப் புத்தகம், நோட்டுப் புத்தகம், புத்தகப் பை, கணித உபகரணப் பெட்டி, வண்ணப் பென்சில்கள், கிரேயான்கள், வரைபடப் புத்தகம், மடிக் கணினி, மிதிவண்டி, பேருந்து பயண அட்டை, சீருடை, காலணி ஆகியவை விலையின்றி வழங்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மாணவ, மாணவியரிடையே அழுகாக எழுதும் பழக்கத்தை ஊக்குவிக்கும்பொருட்டு, 1 ஆம் வகுப்பு முதல் 7 ஆம் வகுப்பு வரை பயிலும் 45 இலட்சத்து 76 ஆயிரம் மாணவர்களுக்கு முதன்முறையாக கையெழுத்துப் பயிற்சி ஏடுகள்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஜூலை 30

வழங்கவும், 1 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் 63 இலட்சத்து 18 ஆயிரம் மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது கலைத் திறன் மற்றும் கற்பனை வளத்தை ஊக்குவிக்கும் வகையில், ஓவியப் பயிற்சி ஏடுகள் வழங்கவும், 9 மற்றும் 10 ஆம் வகுப்பில் பயிலும் 10 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு அறிவியல் பாடங்களுக்கான செயல்முறைப் பயிற்சி ஏடுகள் வழங்கிவும் நான் ஆணையிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கென அரசுக்கு 5 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. தொலைதூர மற்றும் மலைப் பகுதிகளில் வாழும் நலிவடைந்த வகுப்பினைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் கல்வி வழங்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில், நடப்பாண்டில் 500 குழந்தைகள் பயன்பெறும் வகையில், 5 உண்டி உறைவிடப் பள்ளிகள் நீலகிரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பள்ளிகளுக்கு 5 முழுநேர ஆசிரியர்கள் மற்றும் 3 பகுதிநேர ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். இதற்கென ஆண்டொன்றுக்கு 3 கோடியே 74 இலட்சம் ரூபாய் அரசுக்குச் செலவு ஏற்படும்.

9. சமூக விழிப்புணர்வினைக் குழந்தைகளிடம் கொண்டு செல்லும் வகையில், பள்ளிக் கல்வித் துறையும், காவல் துறையும் இணைந்து பள்ளிகளில் போட்டிகள், விழிப்புணர்வுப் பேரணி, கிராமக் கல்வித் திருவிழா, ஊடகம் மற்றும் தொடர் குழு நடவடிக்கைகள் ஆகியவற்றை நடத்தி வருகின்றன. நடப்புக் கல்வி ஆண்டிலும் இத்திட்டம் 9 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

10. குழந்தைகளுக்குத் தரமான கல்வி வழங்குவதோடு, கல்வி பயில்வதற்கேற்ற இனிய சூழல் தேவை என்பதைக் கருத்தில்கொண்டு தொடக்கக் கல்வித் துறையின்கீழ் இயங்கும், அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு 72 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் 1,175 கூடுதல் வகுப்பறைகளும், பெண் குழந்தைகளுக்கென தனியே 270 கழிப்பறைகளும் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2014 ஜூலை 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

11. 2013-2014 ஆம் ஆண்டு 46,737 பள்ளி செல்லாக் குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் 24,638 குழந்தைகளுக்கு சிறப்புப் பயிற்சி தேவைப்படுகிறது என்பதைக் கண்டறிந்து, அதன் அடிப்படையில் 22 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் 9,641 குழந்தைகளுக்கு உறைவிட வசதியுடன்கூடிய சிறப்புப் பயிற்சியும், 14,997 குழந்தைகளுக்கு உறைவிட வசதியின்றி சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-40

12. சிறப்புக் கவனம் தேவைப்படும் 1,26,641 குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்ற உள்ளடக்கிய கல்வியின் தொடர்ச்சியாக, 31 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் சிறப்புப் பயிற்சிகள், உதவும் உபகரணங்கள், அதாவது Assistive Devices ஆகியவை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

13. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு பள்ளி வேலை நாட்கள், தேர்வுகள் போன்றவற்றை மாணவர்களும், பெற்றோர்களும் அறிந்துகொள்ளவும், ஆசிரியர்கள் வழங்கும் முக்கிய குறிப்புகளை குறித்து வைத்துக்கொள்ளவும் முதன்முறையாக பள்ளி நாட்காட்டியுடன் இணைந்த குறிப்பேடு, அதாவது School Diary with Calendar 3 கோடி ரூபாய் செலவில் நடப்புக் கல்வி ஆண்டு முதல் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள், கல்லாதோர் இல்லாத மாநிலம் தமிழகம் என்ற இலக்கை அடைய வழிவகுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) மாவட்ட விளையாட்டு வளாகங்களைப் புனரமைத்தல், முதல்மைச்சரின் மாநில இளைஞர் விருது உருவாக்குதல், விளையாட்டு மற்றும் உடற்கல்வி பல்கலைக்கழகத்திற்குக் கட்டட வசதி, மாநில இளைஞர் கொள்கை வகுத்தல் குறித்த முதல்மைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டு என்பது பொழுதுபோக்கிற்காக*

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஜூலை 30

மட்டுமல்லாமல், உடல் நலம், மன நலம் பேணுவதாகவும், வாழ்க்கைக்குப் பயிற்சி அளிக்கும் களமாகவும் விளங்குகிறது. இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த விளையாட்டினை மேம்படுத்தும் வகையில் கடந்த மூன்றாண்டுகளில் எண்ணற்ற திட்டங்கள் எனது தலைமையிலான அரசால் தீட்டப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

மனதிற்கு மகிழ்ச்சி தரும் விளையாட்டுகளை ஊக்குவிக்கும் வகையில், கீழ்க்காணும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்:

1. வேலூர் மற்றும் திருப்பூர் தவிர, ஏனைய மாவட்ட தலைமையிடங்களில் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில், பெரும்பான்மையான விளையாட்டு வளாகங்கள் 15-20 ஆண்டுகள் பழமையானவை. சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகங்களில் முக்கிய புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ஒவ்வொரு வளாகத்திற்கும் ஒரு கோடி ரூபாய் வீதம் 4 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் பிற மாவட்டங்களில் உள்ள விளையாட்டு வளாகங்களில் அவசர பழுதுகள் சரிபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக 1 கோடி ரூபாய் என மொத்தம் 5 கோடி ரூபாய் ஒரு முறை சிறப்பு மானியமாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, தற்போது திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம் மற்றும் திண்டுக்கல்லில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகங்களில் முக்கிய புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள தலா 80 இலட்சம் ரூபாய் மற்றும் பிற மாவட்ட வளாகங்களில் அவசர பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள 80 இலட்சம் ரூபாய் என மொத்தம் 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தற்போது 23 மாவட்டங்களில் 25 நீச்சல் குளங்கள் இயங்கி வருகின்றன. பெரும்பான்மையான நீச்சல் குளங்கள் 15-லிருந்து 20 ஆண்டுகள் வரை பழமையானவை. தண்ணீரை சரிசமமாகப் பராமரித்தல் மற்றும் ஆரோக்கியமான சுற்றுச்சூழலைப் பேணுதல் ஆகியவை நீச்சல் குளங்களைப் பராமரித்தலின் மிக முக்கிய அம்சங்கள் ஆகும். பெரும்பான்மையான இடங்களில் நீரை சுத்தப்படுத்தும் நீர் வடிப்பான்கள் நிறைவான அளவிற்கு செயல்படுவதில்லை. பயன்பாடு மற்றும் தேய்மானம் காரணமாக,

2014 ஜூலை 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

குளங்களிலுள்ள தரைத் தளம் மற்றும் சுற்றுச் சுவர் உடைந்துள்ளன. எனவே, இந்த நீச்சல் குளங்கள் 3 கோடி ரூபாய் செலவில் புனரமைப்பு செய்து, புதுப்பித்து பராமரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-45

3. நீச்சல் குளத்திலுள்ள நீருக்கு ஓசோன் சுத்திகரிப்பு செய்யப்பட்டால் நீரின் தரம் அதிகமாக உயர்த்தப்படுவதுடன், அதற்காக ஆகும் செலவுகளையும் காலப்போக்கில் மிச்சப்படுத்தலாம் என்பதன் அடிப்படையில், வேளச்சேரி நீச்சல் குள வளாகம், சென்னை நேரு, மதுரை, திருச்சி மற்றும் தஞ்சாவூரில் உள்ள நீச்சல் குளங்களில் நிறுவப்பட்டுள்ள வடிகட்டும் நிலையங்களை மாற்றி தலா 15 இலட்சம் ரூபாய் வீதம் 75 இலட்சம் ரூபாய் செலவில் ஓசோன் சுத்திகரிப்புடன் கூடிய புதிய வடிகட்டும் நிலையங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும்பொருட்டு, முதலமைச்சர் மாநில இளைஞர் விருது என்ற புதிய விருது உருவாக்கப்படும். 15 முதல் 35 வயது வரை உள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர தினத்தன்று இவ்விருது வழங்கப்படும். இந்த முதலமைச்சர் மாநில இளைஞர் விருது, 50,000/- ரூபாய் ரொக்கம், பாராட்டுப் பத்திரம் மற்றும் பதக்கத்தை உள்ளடக்கியதாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. 2005 ஆம் ஆண்டு எனது ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட விளையாட்டு மற்றும் உடற்கல்விக்கான தனிப் பல்கலைக்கழகம் சென்னைக்கு அருகில் உள்ள மேலக்கோட்டையூரில் 125 ஏக்கர் பரப்பிலான பரந்த வளாகத்தில் இயங்கி வருகிறது. இந்தப் பல்கலைக்கழகத்தில் மாணாக்கர் மற்றும் ஆராய்ச்சி அறிஞர்களின் பயன்பாட்டிற்காக உலகத் தரம் வாய்ந்த வசதிகளை அளிக்கும் வகையில், 18 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் நூலக அறை, ஆய்வுக் கூடம், கூட்டரங்கம் மற்றும் பலநோக்கு உள் விளையாட்டரங்கம் ஆகியவை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமல்லாமல், பரந்து விரிந்த இந்தப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள நிருவாகக் கட்டடம், விடுதிகள்,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஜூலை 30

பணியாளர் குடியிருப்புகள், விளையாட்டு மைதானங்கள் ஆகிய இடங்களுக்கு மாணாக்கரும், பணியாளர்களும் சென்றுவர வசதியாக 2 கிலோ மீட்டர் இணைப்புச் சாலை அமைத்துத் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, சமூக மாற்றத்திற்கான முக்கிய காரணியாகவும், சமுதாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியின் பின்னணியில் இருப்பவர்களாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற இளைஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இளைஞர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு ஒருமித்த அணுகுமுறையை வழங்கும் வகையிலும், தேசிய வளர்ச்சியில் அவர்கள் முழுமையாகப் பங்காற்றும் வகையிலும், மாநிலத்திற்கென ஓர் இளைஞர் கொள்கை வகுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள்மூலம், இளைய சமுதாயத்தினரின் உடல் நலமும், மன நலமும் மேலும் உறுதி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

4. பள்ளிக் கல்வித் துறையில் ஆசிரியர் நியமனம் மற்றும் புதிய திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத், என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. கே. கோபிநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கல்வித் துறை குறித்து இன்றைக்கு அறிவித்த அறிவிப்பிற்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் மனமார்ந்த பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய மாவட்டத்திற்கு 5 உண்டி உறைவிடப் பள்ளிகளைக் கொடுத்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சார்பிலும், என் தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத், நீங்கள் நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு) விவாதம் எல்லாம் வேண்டாம். (குறுக்கீடு) நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள்.

திரு. கே. கோபிநாத்: (உறுப்பினர் தெலுங்கில் பேசினார்.)

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுபபினர், கோரிக்கை வேண்டாம். நன்றியோடு உரையை முடியுங்கள். (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் விவாதம் வேண்டாம். உட்காருங்கள்.

திரு. கே. கோபிநாத்: வேறு ஒன்றும் இல்லை. நன்றி மட்டும்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, நன்றிதான் சொல்லிவிட்டீர்களே, உட்காருங்கள்.

5. கவன ஈர்ப்பு

அரூர், பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூரில் உள்ள பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஜூலை 30

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

அரசாணை (நிலை) எண் 35, உயர் கல்வித் (ஜி1) துறை, நாள் 8-2-2011-ல் மற்றவற்றுக்கிடையில், தருமபுரி மாவட்டம், அரூரில் பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்க ஆணைகள் வெளியிடப்பட்டன.

மூலதனச் செலவுக்காக ரூபாய் ஒரு கோடி நிதி, கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதஎண் 34923/எச்3/2010, நாள் 22-3-2011-ன் மூலமாக பெரியார் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டது. தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தண்டே குப்பம் கிராம புல எண் 83-ல் அரூர் பாதுகாக்கப்பட்ட வனம் என வகைப்படுத்தப்பட்ட 8.12.0 எக்டேர் பரப்பளவு நிலம் மேற்காண் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்காக அம்மாவட்ட ஆட்சியர் அவர்களால் தெரிவு செய்யப்பட்டது.

வனப் பாதுகாவலர் (மத்திய அரசு), சுற்றுச்சூழல் மற்றும் வனம் அமைச்சகம், இந்திய அரசு, பெங்களூரு அவர்கள் அரூர் வன வட்டத்தில் மொரப்பூர் பகுதியில், அரூர் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் 1.20.23 எக்டேர் வன நிலத்தினை பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுவதற்கு ஒதுக்கீடு (Diversion) செய்வதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதனடிப்படையில், அரசாணை (நிலை) எண் 28, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (FR10) துறை, நாள் 20-2-2014-ல் மேற்குறிப்பிட்ட நிலத்தினை பெரியார் பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்கு ஆணை வெளியிடப்பட்டது. மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் மாநில அரசின் ஆணையின் அடிப்படையில், அரூர் மாவட்ட வன அலுவலர் உரிய அனுமதி ஆணைகள் வழங்கியுள்ளார்.

அரூரில் அமைந்துள்ள பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு மாநில அரசின் பங்காள ரூ.482.32 இலட்சத்தில் ஏற்கெனவே விடுவிக்கப்பட்ட ரூ.100.00 இலட்சம் போக மீதமுள்ள ரூ.382.32

2014 ஜூலை 30] [திரு. பி. பழனியப்பன்]

இலட்சம் தொகையினை பெரியார் பல்கலைக்கழகத்திற்கு ஒப்பளிப்பு செய்தல் குறித்த கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது. இத்தொகை விரைவில் விடுவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை விவரமாக, சுருக்கமாக வைத்திருப்பதை வரவேற்கிறேன். அரூர் அரசு கலைக் கல்லூரி, பெரியார் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியாக இவ்வாட்சியில் திறக்கப்பட்டது; வரவேற்கின்றேன், பாராட்டுகின்றேன். அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 2011 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட கல்லூரி, ஒரு செட் மாணவர்கள், அதாவது 2014 ஆம் ஆண்டு மூன்றாண்டுக் கால படிப்பை முடித்துவிட்டு வெளியே சென்றிருக்கிறார்கள். இப்போதுகூட 720 மாணவ, மாணவிகள் அந்தக் கல்லூரியில் படிக்கின்றனர். அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலே கல்லூரிக் கட்டடம் இருக்கிறது. குறிப்பாக 720 மாணவர்களில் 70 சதவிகிதம் மாணவிகள்; அதிலே 450 மாணவிகள் பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். இப்போதும் Botany, Computer Science, English Literature, Commerce ஆகிய நான்கே பாடப் பிரிவுகள் மட்டுமே நடத்தப்பட்டு வருகின்றன. அந்தப் பகுதி மாணவர்களும், அந்தப் பகுதி ஆசிரியர்களும், தமிழ் இலக்கியம், பௌதிகம், வேதியியல் மற்றும் மனித உரிமைக் கல்வி போன்ற பாடப் பிரிவுகளும் வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டில்லி பாபு, அறிக்கை தொடர்பாக இரண்டு கேள்விகளை மட்டும் கேளுங்கள்; விவாதம் போன்று பேசாதீர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசி முடித்துவிடுகிறேன். அறிக்கையில் 382.32 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், "பெரியார் பல்கலைக்கழகத்திற்கு மாநில அரசின் மீதமுள்ள பங்கை ஒப்பளிப்பு செய்தல் குறித்த கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது. இத்தொகை விரைவில் விடுவிக்கப்படும்" என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடிய விரைவில் இத்தொகையை விடுவிப்பதற்கான பணிகளை

[திரு. ப. டில்லி பாபு] [2014 ஜூலை 30

மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக அந்தக் கல்லூரியிலே படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு, கல்லூரியிலே படிக்கும் உணர்வுகூட இல்லாத சூழ்நிலைகளை மாற்றுவதற்கு, லேப் வசதி, நூலக வசதி செய்திட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைக் கேளுங்கள் என்றால், உங்கள் விருப்பம்போல் விவாதம் செய்கிறீர்கள். பலமுறை சொல்லிவிட்டேன், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பில் இரண்டு கேள்விகளை மட்டும்தான் கேட்கவேண்டும். நீங்கள், உங்கள் விருப்பம்போல் விவாதம் செய்து கொண்டிருந்தால், சரியாக இருக்காது. விதிகளுக்கு மாறாகப் பேசிக் கொண்டிருக்காதீர்கள். உட்காருங்கள்.

திரு. ப. டில்லி பாபு: பேசி முடித்து விடுகிறேன். காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று தங்கப் பதக்கம் பெற்ற வேலூரைச் சேர்ந்த விளையாட்டு வீரர் சதீஷ் என்பவரை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பாராட்டி, 50 இலட்சம் ரூபாய் கொடுத்திருப்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன், வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) விளையாட்டுக்கான உபகரணங்கள்கூட அரூர் கலைக் கல்லூரியில் இல்லை. வனத் துறையிடமிருந்து நிலத்தை மீட்டிருப்பதை ஒரு பெரிய சாதனையாக நான் கருதுகிறேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அளப்பரிய பணியை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே பாராட்டுகிறேன். ஆக, இந்தக் கல்வியாண்டிலாவது புதிய கட்டடத்தில் கல்லூரி மாணவர்கள் பயில்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-55

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்பு, 2011 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தாங்கள் சொல்லியிருக்கிற அரூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும்

2014 ஜூலை 30] [திரு. பி. பழனியப்பன்]

ஒன்று. அந்தக் கல்லூரியை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 18-7-2011 அன்று தங்களுடைய பொற்கரங்களால் துவங்கி வைத்தார்கள். இன்றைக்கு அந்தக் கல்லூரியில் மாணவர்களின் சேர்க்கை சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், அந்தக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்பதற்காக நல்ல இடத்தைத் தேர்வு செய்து, அமைத்துக் கொடுக்க வேண்டுமென்ற உத்தரவை வழங்கினார்கள். அதனுடைய அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கருத்து கேட்டு அங்கு நிலம் பார்க்கப்பட்டது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கூட சங்கிலிவாரி என்ற கிராமத்தில் கட்டினால் பரவாயில்லை என்று சொன்னார்கள். ஆனால் அந்த இடம் போதுமானதாக இல்லாததாலும், பஸ் போக்குவரத்து இல்லாததாலும், மாணவர்களுக்கு உகந்த இடமாக இல்லாததாலும், உறுப்பினரின் தொகுதியைச் சேர்ந்த ஊத்தங்கரைப் பகுதி, கோபிநாதம்பட்டு பகுதி, மொரப்பூர் பகுதி, தீர்த்தமலைப் பகுதி போன்ற நான்கு பகுதிகளிலும் இருக்கக்கூடிய மாணவர்களுக்கெல்லாம் அரூர் மையப் பகுதியிலே அமைந்தால்தான் வசதியாக இருக்கும் என்ற நோக்கத்தோடு மாவட்ட ஆட்சியருக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது. அது வனத் துறை சம்பந்தப்பட்ட இடம், அதனால் மைய அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெறுவதற்கு காலதாமதம் ஆகும் என்ற ஒரு கருத்தை உறுப்பினரேகூடச் சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மாணவர்களுக்கு உகந்த இடத்தில் கட்டித் தர வேண்டும் என்று உத்தரவு வழங்கியதன் அடிப்படையில், வனத் துறைக்குச் சம்பந்தப்பட்ட இடத்தை மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு செய்து, DFO மூலம் விண்ணப்பித்து, அவர்மூலம் Chief Conservator of Forests-க்கு அனுப்பப்பட்டு, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையினுடைய முதன்மைச் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும். மேலும், இந்த இடத்திற்கு நாம் அனுமதி பெற வேண்டும் என்று சொன்னால், கர்நாடக மாநிலம், பெங்களூரிலே உள்ள தெற்கு மண்டல அலுவலகத்தை அணுகி மத்திய அரசாங்கத்தினுடைய வனத் துறையின் அனுமதி பெற வேண்டும். அவர்கள் ஒப்புதல் அளித்து, அவர்கள் வந்து இந்த நிலத்தை ஆய்வு செய்து, அதற்கு உரிய மாற்று இடம் ஏதாவது இருக்கிறதா, காடுகளை வளர்ப்பதற்கு, வன விலங்குகளை பாதுகாப்பதற்கு நீங்கள் நிதியுதவி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார்கள். தற்போது அந்த

[திரு. பி. பழனியப்பன்] [2014 ஜூலை 30

இடம் மத்திய அரசாங்கத்திடமிருந்து கையகப்படுத்தப்பட்டு, கட்டடங்கள் கட்டுவதற்கு தயார் நிலையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசின் வனத் துறையிடமிருந்து நிலத்தை கையகப்படுத்துவது என்பது அவ்வளவு சாதாரண காரியம் அல்ல. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சிறந்த முறையில், (மேசையைத் தட்டும் ஒலி) விரைந்து செயல்படுகிறது என்பதற்கு இது நல்ல உதாரணம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்தான் அடிக்கடி சொல்வார்கள்

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

என்ற அந்தத் திருக்குறளுக்கு ஏற்ப மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு செயல்படுகிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறளைச் சொன்னவர் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அல்ல, திருவள்ளுவர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறாகச் சொல்லியதை திருத்தியதற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இந்த இடம் கையகப்படுத்தப்பட்டு, கட்டடம் கட்டுவதற்கு இன்றைக்குத் தயாராக உள்ளது. இந்த அவையிலே வைக்கப்பட்ட விவர அறிக்கையில், 'அரசின் ஆய்வில் உள்ளது' என்று சொல்லப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்கெனவே 1 கோடி ரூபாயை அளித்திருக்கின்றார்கள், இன்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களால் ரூ.3,82,32,000/- நிதி

2014 ஜூலை 30] [திரு. பி. பழனியப்பன்]

வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். விரைவில் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, கல்லூரி கட்டடப் பணி துவங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

6. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் Agenda-வின்படி அடுத்த அலுவலுக்குச் சென்று வெகு நேரம் ஆகிவிட்டது. எல்லோரும் எழுந்தால் எப்படி? ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டிருக்கின்றேன். காலையில்தான் கொண்டுவந்து கொடுத்தீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நிற்கின்றேன் அல்லவா? நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் நிற்கும்போது, நீங்கள் உட்கார வேண்டும். உட்காருங்கள், டாக்டர் க. கிருஷ்ணசாமி. Zero Hour முடிந்து நான் இரண்டு அலுவல்களை எடுத்தாகிவிட்டது. காலையில்தான் நீங்கள் முன்னறிவிப்புகளைக் கொடுத்திருக்கின்றீர்கள். நெல் கொள்முதல் குறித்து முக்கியமாக நீங்கள் கேட்டதற்கு காலையில் மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பில் பதில் சொல்லி இருக்கிறார்கள். காலையில் முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டு இப்போது கேட்டால் எப்படி? பதில் வந்தவுடன் அதைப்பற்றி பார்க்கலாம். பேரவை விதி 55-ன்கீழ் கொடுத்த முன்னறிவிப்புகளை இன்றும் எடுத்திருக்கின்றேன். (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் இன்றைக்கு எடுத்திருக்கின்றேன். கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும் இன்றைக்கு எடுத்திருக்கின்றேன். (குறுக்கீடுகள்) காலையில் 9-45 மணிக்குத்தான் கொண்டு வந்து கொடுத்தீர்கள். அதை உடனே எழுப்பினால் எப்படி? (குறுக்கீடு) இன்றைக்கு மொத்தம் 3 மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன; 2 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். நேரம் போதாது என்று நாம் பேசிக்கொண்டோம். (குறுக்கீடுகள்) இது முறை அல்ல. உட்காருங்கள். நீங்கள் கொடுத்தவற்றை ஒவ்வொன்றாக நான் எடுத்துக்கொண்டு வருகிறேன். எடுத்துக்கொண்டிருக்கும்போதே,

[பேரவைத் தலைவர்] [2014 ஜூலை 30

நீங்கள் காலையில் 9-45 மணிக்குக் கொடுத்துவிட்டு இப்போது எழுப்புவது அது சரியல்ல. பதில் வர வர நான் எடுத்துக்கொள்வேன். நீங்கள் உட்காருங்கள். பதில் வரட்டும், ஒவ்வொன்றாக நான் தினமும் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. சவுந்தரராசன், அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) இது Zero Hour இல்லை. இரண்டு நிகழ்வுகளை விவாதத்திற்கு எடுத்துக் கொண்டாகிவிட்டது. (குறுக்கீடுகள்) நீங்கள் திடீரென்று இப்படி எழுந்து நின்று எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) தினந்தோறும் வரிசையாக நான் கவன ஈர்ப்பை எடுத்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு அறிக்கை வர வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்த ஒரே நாளில் எல்லாவற்றையும் நான் எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்) தினமும் ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

நண்பகல் 12-00

என்னுடைய கவனத்திற்கு வருவதை, பதில் வருவதற்கேற்றபடி நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் ஏதோ ஒரு முடிவுடன் எழுந்து நின்று விவாதம் செய்து கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இது சரியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் Agenda-வின்படியான அலுவலுக்குச் சென்று வெகு நேரமாகிவிட்டது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஏதோ ஒரு முடிவுடன் வந்திருக்கும்பொழுது நான் ஒன்றும் பேச முடியாது. (குறுக்கீடுகள்) நான் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) தினம் ஒரு கவன ஈர்ப்பை எடுத்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) Zero Hour முடிந்த பின்பு இவ்வளவு நேரம் கழித்து எழுப்புவது நியாயமில்லை. (குறுக்கீடுகள்) Zero Hour-ல் நீங்கள் எழுப்பியிருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் எழுந்து நின்றால் நான் என்னவென்று கேட்பேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் எழுந்து நின்றால், நான் எப்படிக் கேட்க முடியும்? (குறுக்கீடுகள்) எல்லோரும் எழுந்து நின்றால் எப்படிக் கேட்பது? (குறுக்கீடுகள்) இது சரியில்லை, நாளையதினம் பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

2014 ஜூலை 30] [பேரவைத் தலைவர்]

நாளையதினம் பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் செய்வது முறையில்லை. (குறுக்கீடுகள்) இதுமாதிரியெல்லாம் செய்யாதீர்கள். (குறுக்கீடுகள்) தினமும் நீங்கள் கொடுக்கும் முறையான அறிவிப்புகளைத்தான் நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். தினமும் எடுத்துக்கொள்கிறேன். இதற்கு மேலும் நீங்கள் திருப்தி அடையவில்லையென்றால் நான் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) நீங்கள் திருப்தி அடையவில்லையென்றால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுப்பது முழுவதையும் நான் எடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுப்பது முழுவதையும் நான் எடுக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் ஒரு முடிவுடன்தான் வந்திருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆறுமுகம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களும், புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் ஆகியோரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (தடை செய்தல்) சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்), 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (தடை செய்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (தடை செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2014 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசைகளைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. மானியக் கோரிக்கைகள், 2014–2015, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 11—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

(இ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

\- - -

(அ) கோரிக்கை எண் 10—வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014-2015* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் *10*-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத்

2014 ஜூலை 30] [பேரவைத் தலைவர்]

துறை), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாண்டின் முத்திரையாய் முழுமையான வளர்ச்சி பெற்று, நாற்றிசையும் போற்றுகின்ற புகழாய், நான்மறையும் கொண்டாடும் புனிதமாய் நான்காம் ஆண்டு சாதனை படைத்துக் கொண்டிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) புறநானூற்றின் புது வடிவே; புகழ் மணக்கும் வெற்றிச் சுடரே; குறுமதியாளர் கொள்கைகளைக் கூர்மதியால் துளைத்தெடுக்கும் முழு மதியே! (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் விரோதிகளை, மக்கள் துரோகிகளைத் தூசியெனத் துடைத்தெடுத்து, தோல்வியைப் பரிசளித்த தூண்டா மணிவிளக்கே மாண்புமிகு அம்மா!

ஏழரை கோடி தமிழர்கள் உங்கள் இதயம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றரை கோடி தொண்டர்கள் உங்கள் விழிகள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) கண் இமையாய் தொண்டர்களைக் காத்து, இதயக் கருணையால் புதுப் புது திட்டங்களை வார்த்து, தமிழ்நாட்டைக் காத்திட தம் வாழ்வையே அர்ப்பணித்து வாழும் தங்கத் தாயே! தமிழ் அமுதே! . கழகம் என்னும் கோயிலின் மூலவராய், உற்சவராய், காலமெல்லாம் நாங்கள் தொழும் கண்கண்ட தெய்வமே, நானும், என் சந்ததிகளும் வாழ்கின்ற காலமெல்லாம் நன்றி சொல்வோம் என்று கூறி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.337,36,26,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1403, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

[பேரவைத் தலைவர்] [2014 ஜூலை 30

வெட்டுத் தீர்மானம் எண் 2600, திரு. சு. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2690, திரு. எம். ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3521, திரு. கே. உலகநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2304, திரு. பி.வி. கதிரவன்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.337,36,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3302, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3619, திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1905, திரு. அ. அஸ்லம் பாஷா.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆம்பூர் நகரில் உள்ள வணிக வரி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.337,36,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2333, திரு. ரா.ம. பாபு முருகவேல்.

2014 ஜூலை 30]

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டம், வாளையார் பகுதியில் உள்ள வணிக வரி சோதனைச் சாவடியில் கூடுதலாக Counters திறந்து போக்குவரத்து நெரிச்லைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.337,36,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2474, திரு. அ. சவுந்தரராசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2758, திரு. வி. முத்துக்குமார்.

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருத்தாசலம் நகரில் வணிக வரித் துறைக்கான கட்டடத்தை விரைந்து கட்டி முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.337,36,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2817, திரு. க. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2842, திரு. சி.எச். சேகர்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "Form K ஆண்டு விற்பனை ரூபாய் 25 இலட்சம் என்று இருப்பதை மாற்றி ரூபாய் ஒரு கோடியாக உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.337,36,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3092, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை மற்றும் தக்கலையில் அமைந்துள்ள வணிக வரி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.337,36,26,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3564, திரு. வெ. பொன்னுப்பாண்டி., இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3926, திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

(ஆ) கோரிக்கை எண் 11—முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 11-முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.292,82,04,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2305, திரு. பி.வி. கதிரவன்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,82,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3303, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3520, திரு. கே. உலகநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 295, திரு. ந. நஞ்சப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 432, திரு. கு. நல்லதம்பி.

திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எழும்பூர் தொகுதி பெரம்பூர் பேரக்ஸ் ரோட்டில் தனியார் கட்டடத்தில் இயங்கிவரும் பதிவுத் துறை அலுவலகத்தினை அரசுக் கட்டடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,82,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1075, திரு. சி.எச். சேகர்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் நிலம், வீடு வாங்குவோர் பத்திரப் பதிவு செய்வதற்குரிய கட்டணத்தைக் குறைக்க வேண்டியதன் அவசியம்

[திரு. சி.எச். சேகர்] [2014 ஜூலை 30

குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,82,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1397, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2338, திரு. ரா.ம. பாபு முருகவேல்.

திரு. ரா.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதியிலுள்ள தேவிகாபுரத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த சார் பதிவாளர் அலுவலகத்தை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,82,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2477, திரு. அ. சவுந்தரராசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2598, திரு. சு. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2691, திரு. எம்.. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2736, திரு. அ. அஸ்லம் பாஷா.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆம்பூர் நகரில் கட்டப்பட்டு வரும் சார் பதிவாளர் அலுவலகத்தை மேம்படுத்தி அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2014 ஜூலை 30] [திரு. அ. அஸ்லம் பாஷா]

"முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,82,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2759, திரு. வி. முத்துக்குமார்.

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருத்தாசலம் நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,82,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3102, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் முத்திரைத் தாள் விற்பனை செய்யும் vendors-க்கு 1964-க்குப் பிறகு கமிஷன் தொகை கூட்டவில்லை. எனவே, அனைத்துப் பத்திரங்களுக்கும் ஒரே மாதிரியான 3% கமிஷன் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.292,82,04,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3476, திரு. ஏ. லாசர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3562, திரு. வெ. பொன்னுப்பாண்டி., இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3915, திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

[2014 ஜூலை 30

(இ) கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 9- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னலம் கருதாமல் தமிழக மக்களின் நலன் ஒன்றையே தன் நலமாகக் கொண்டு தமிழும், தமிழ்ச் சமுதாயமும் மென்மேலும் உயர, ஒரு நாளைக்கு 20 மணி நேரத்திற்கு மேலாக உழைத்து, பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி தமிழக மக்களின் உள்ளங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.826,67,69,000/-, மூலதனக் கணக்கில் ரூ.160,29,96,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2306, திரு. பி.வி. கதிரவன்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.826,67,69,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

2014 ஜூலை 30] [திரு. பி.வி. கதிரவன்]

ரூ.160,29,96,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2693, திரு. எம். ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3298, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3577, திரு. ப. டில்லி பாபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 296, திரு. ந. நஞ்சப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1073, திரு. சி.எச். சேகர்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி வட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.826,67,69,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.160,29,96,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1395, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1904, திரு. அ. அஸ்லம் பாஷா.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக்

[திரு. அ. அஸ்லம் பாஷா] [2014 ஜூலை 30

கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.826,67,69,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.160,29,96,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2346, திரு. ர.ம. பாபு முருகவேல்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதியில் உள்ள தேவிகாபுரத்தில் முஸ்லிம் சமுதாய மக்களுக்கு கபர்ஸ்தான் எனும் கல்லரைத் தோட்டம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.826,67,69,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.160,29,96,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2467, திரு. அ. சவுந்தரராசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2566, திரு. இரா. அண்ணாதுரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2597, திரு. சு. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2784, திரு. வி. முத்துக்குமார்.

திரு. வி. முத்துக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருத்தாசலம் நகரில் இயங்கி வரும் திரு. கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர்களுக்கு அரசுமூலம் கட்டப்பட்ட விடுதி கட்டடம் அடிப்படை வசதி இல்லாமலும், பழுதடைந்த நிலையிலும் உள்ளது. மேற்கண்ட விடுதிக் கட்டடத்தை பழுது பார்த்து சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2014 ஜூலை 30] [திரு. வி. முத்துக்குமார்]

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.826,67,69,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.160,29,96,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2804, திரு. க. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3112, திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அரசு மாணவ, மாணவியர் விடுதிகளில் தரமான உணவு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.826,67,69,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.160,29,96,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3338, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் வழங்கப்பட்டுள்ள 3.5 சதவிகித இட ஒதுக்கீட்டை சரியாகக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.826,67,69,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.160,29,96,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2014 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3474, திரு. ஏ. லாசர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3522, திரு. கே. உலகநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3560, திரு. வெ. பொன்னுப்பாண்டி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3907, திருமதி எஸ். விஜயதரணி, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-10

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) மற்றும் முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

@ 705 முதல் 754 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

2014 ஜூலை 30]

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. அவற்றில், தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று மூன்று மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் மூன்று மானியக் கோரிக்கைகளின்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் தே.மு.தி.க. உறுப்பினர் மாண்புமிகு திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள்.

திரு. ஏ.கே.டி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரிகள், முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த எனது இதய தெய்வம் கேப்டன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் வருவாயை ஈட்டித் தரும் அரசுத் துறைகளில் மூன்றாவது இடத்தை பத்திரப் பதிவுத் துறை பெற்றிருப்பது என்பது மகிழ்ச்சியான விஷயமாகும். தமிழ்நாடு முழுவதும் 578 சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலான அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் எவ்வித வசதியும் இல்லாமல் இயங்கி வருகின்றன. பல ஆண்டுகளுக்குமேலான

@ 755 முதல் 816 வரையிலான பக்கங்களில் இணைப்பு-III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ஏ.கே.டி. ராஜா] [2014 ஜூலை 30

பழுதடைந்த கட்டடங்களில் அதிக அலுவலகங்கள் இயங்கி வருவதாகத் தெரிகின்றது. அவற்றிற்கு அரசுக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறையின்கீழ் உள்ள சார் பதிவாளர் அலுவலகக் கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, படிப்படியாக புதிய கட்டடங்களை கட்டித் தர வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். குறிப்பாக, 226 சார் பதிவாளர் அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றிற்கும் அரசின் சார்பாக இடங்களைத் தேர்வு செய்து, கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற ஓர் உயர்ந்த நோக்கோடு, 104.9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 11-6-2014 அன்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் காணொளிக் காட்சிமூலமாக 37 பத்திரப் பதிவு சார் பதிவாளர் அலுவலகக் கட்டடங்களும், (மேசையைத் தட்டும் ஒலி) ஒருங்கிணைந்த சார் பதிவாளர் அலுவலகக் கட்டடங்களும் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள்.

திரு. ஏ.கே.டி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு செய்ய வரும் பொதுமக்கள் பதிவு அலுவலகத்தில் பல மணி நேரம் காத்திருக்கின்றனர். அவர்கள் உட்காருவதற்கு வசதியில்லை. குடிநீர் வசதிகளும் சரியாக இல்லை. கழிப்பறை வசதியின்றியும் சிரமப்படுகின்றார்கள். இதனை உடனடியாக சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கட்டப்படுகின்ற சார் பதிவாளர் அலுவலகக் கட்டடங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ரூ.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, சாய்தள வசதி, மாற்றுத் திறனாளிகள் வந்து செல்வதற்குண்டான வசதி, இரண்டு கழிப்பிட வசதி, மின்விசிறி வசதியுடன் காத்திருப்போர் அலுவலகக் கூடம் ஒன்று சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியோடு செய்து தரப்பட உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள்.

திரு. ஏ.கே.டி. ராஜா: திருப்பரங்குன்றம், திருநகரம், திருநகர், செக்கானூரணி, எழுமலை, சிந்துபட்டி, ஆரப்பாளையம் மற்றும் மதுரை போன்ற இடங்களில் பத்திரப் பதிவு அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. உசிலம்பட்டி, மதுரை திருமலை நாயக்கர் மகாலில் உள்ள மாவட்ட பதிவாளர் அலுவலகம், பதிவுத் துறை துணைத் தலைவர் அலுவலகங்கள் பல ஆண்டுகளாக பழுதடைந்த கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 2013-2014 வருவாய் ஆண்டுக்குப் பதிவுத் துறை சுமார் 8,055 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது. ஓராண்டிற்கு இவ்வளவு வருவாய் இருக்கும்போது, பொதுமக்களுக்கு நியாயமான தேவைகளை நிறைவேற்றித்தர அரசு ஆவன செய்ய வேண்டும்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாண்டுகளுக்குள் புதிய சார் பதிவாளர் அலுவலகங்கள், மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் அனைத்தையும் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து படிப்படியாக நிறைவேற்றி வருகிறார்கள் என்பதை நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். பழமை வாய்ந்த கட்டடங்களாக

[திரு. எம்.சி. சம்பத்] [2014 ஜூலை 30

இருந்தாலும் அதன் உறுதிப்பாட்டை ஆய்வு செய்து, தேவைப்பட்டால் அவற்றை இடித்துவிட்டு, புதிய கட்டடங்கள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கேடி. ராஜா அவர்கள்.

திரு. ஏ.கேடி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறையை நவீனமயமாக்குவது, பதிவு செய்வதில் நடைபெறும் மோசடிகளைத் தடுப்பது போன்ற பல நல்ல திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆனால், கணினி பழுதாகிவிட்டால் சரிசெய்ய காலதாமதம் ஏற்படுகிறது. மேலும், வேலையாட்கள் புதிதாக நியமிக்கப்படாததால், ஆட்கள் பற்றாக்குறை காரணமாக பத்திரப் பதிவு செய்வதில், வில்லங்கச் சான்றிதழ் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, உதிரி பாகங்களை supply செய்து, கணினியில் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சரி செய்யவும், பற்றாக்குறையாக உள்ள அலுவலர் பணியிடங்களை உடனடியாக நிரப்பி மேற்படி குறைகளை நீக்குவதற்குப் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும் கடுமையான அறிவுரைகளை வழங்கியிருக்கிறோம். ஆவணப் பதிவுகள் பதிவு செய்யப்பட்டவுடன், பத்திரங்களைத் திரும்பக் கொடுக்கவேண்டுமென்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, படிப்படியாக அனைத்து பணிகளும் முழுவீச்சில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கேடி. ராஜா அவர்கள்.

2014 ஜூலை 30]

திரு. ஏ.கேடி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு செய்யும் நிலையிலே, பத்திரப் பதிவுக்கான சிடி. வழங்கப்படும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சிடிக்கான கட்டணம் பெறப்படுகிறது. ஆனால், பல்வேறு அலுவலகங்களில் சிடி. வழங்கப்படவில்லை. சிடி. பற்றாக்குறையை நீக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவணப் பதிவுக்குண்டான சிடி.-ஐ ரூபாய் 50/- பெற்றுக்கொண்டு வழங்கவேண்டுமென்று உத்தரவிட்டுள்ளோம். நிச்சயமாக எல்லா இடங்களிலும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எந்த அலுவலகத்தில் கொடுக்கவில்லை எனக் குறிப்பிட்டுச் சொன்னால், உடனடியாக ஆய்வு செய்து அதை வழங்குவதற்கு வழிவகை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கேடி. ராஜா அவர்கள்.

திரு. ஏ.கேடி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011-2012 ஆம் ஆண்டிற்கான பத்திரப் பதிவுமூலம் பெறப்படும் வருவாய் வளர்ச்சி விகிதம் அதிகமாக இருந்தது. ஆனால், 1-4-2012-லிருந்து சொத்து மதிப்பை 5 மடங்கு உயர்த்தியதன் விளைவாக, 2012-2013 மற்றும் 2013-2014 ஆம் ஆண்டுகளில் வருவாய் வளர்ச்சி விகிதம் மற்றும் பத்திரப் பதிவு எண்ணிக்கை முந்தைய ஆண்டைவிட குறைந்துவிட்டது. சாதாரண மனிதன் வீட்டுமனை வாங்கவேண்டுமென்றால், முத்திரைத்தாள் பதிவுக் கட்டணம் ** கிராமப்புறங்களில் வீட்டுமனை வாங்குவதற்கு ஏழை, எளிய மக்கள் முத்திரைத்தாள் மற்றும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Real Estate அபரிமித வளர்ச்சி அடைந்துள்ளது. அந்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எம்.சி. சம்பத்] [2014 ஜூலை 30

அடிப்படையிலே, தொடர்ச்சியாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1-4-2012 அன்று வழிகாட்டி மதிப்பை ஆய்வு செய்து, பதிவுத் துறைத் தலைவர் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட துணை கமிட்டி அமைக்கப்பட்டு, சந்தை மதிப்பை அனுசரித்துத்தான் வழிகாட்டி மதிப்பு இருக்கவேண்டுமென்று உத்தரவிடப்பட்டு, அந்த மதிப்பு இணையதளம் மூலம் பதிவுத் துறையால் வெளியிடப்பட்டது. 2013-2014 ஆம் ஆண்டுக்கு வழிகாட்டி மதிப்பில் எந்த மாற்றமும் வேண்டாம், 2012-ல் உள்ளதையே தொடரலாமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அந்த மதிப்போடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சில இடங்களில் முரண்பாடுகள் இருக்கின்றன. சுமார் 22,000 சர்வே எண்கள் உள்ள நிலங்களின் மதிப்பு குறைவு செய்யப்பட்டு, வழிகாட்டி மதிப்புகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன என்பதை நான் குறிப்பிட கடமைப்பட்டுள்ளேன். மேலும், சில இடங்களிலே சந்தை மதிப்பைக் காட்டிலும், வழிகாட்டி மதிப்பு மிகக் குறைவாக இருந்த 1,26,000 சர்வே எண்கள் உள்ள நிலங்களுக்கு சந்தை மதிப்பிற்கு நிகராக வழிகாட்டி மதிப்பு உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். Registration அதிகரித்துக்கொண்டுதானிருக்கிறது. பதிவுத் துறையினுடைய வளர்ச்சி கூடிக்கொண்டுதானிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கேடி. ராஜா அவர்கள்.

திரு. ஏ.கேடி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள்களை அதிக விலைக்கு வாங்க வேண்டியிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி, அதை குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாவம், ஏழைகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அதை செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,85,000 தெருக்களுக்கும், 3 கோடியே 97 இலட்சம் சர்வே எண்கள் உள்ள நிலங்களுக்கும் சந்தை மதிப்பை, வழிகாட்டி மதிப்பை இணையதளத்தில் வெளியிட்டுள்ளோம். எந்த இடத்தில் முரண்பாடு இருக்கிறது என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டால், மாவட்டத்திலுள்ள துணை கமிட்டி மூலமாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, உள்ளூர் விசாரணை செய்யப்பட்டு, அதற்குத் தீர்வுகாண வழிவகை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள்.

திரு. ஏ.கே.டி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான ஊராட்சி மன்றங்கள் நிதிப் பற்றாக்குறையில் இருக்கின்றன. இதனால், வளர்ச்சிப் பணிகளில் தடை ஏற்படுகிறது. ஊராட்சி மன்றங்களுக்கு முத்திரைத்தாள் நிலுவை வரி தற்போது 2 சதவிகிதம் வழங்கப்படுகிறது. இதனை வைத்துதான் நிறைய ஊராட்சி மன்றங்கள் அவற்றின் நிதிப் பற்றாக்குறையைச் சமாளித்து வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, முத்திரைத் தீர்வை 6 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள்.

[2014 ஜூலை 30

திரு. ஏ.கே.டி. ராஜா: முத்திரைத்தாள் சுட்டணை வருவாயில் 50 சதவிகிதம் ஊராட்சிகளுக்கும், 50 சதவிகிதம் அரசுக்கும் ஒதுக்கீடு செய்தால், வளர்ச்சிப் பணிகள் நடைபெறுவதற்கு உதவியாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் வாழக்கூடிய சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், 24 மனை செட்டி, தெலுங்கு செட்டி, சாலி செட்டி, தெலுங்கு பட்டி செட்டி என நான்கு பெயர்களில் அழைக்கப்படுவது வழக்கம். இதனை உறுதிப்படுத்தும் விதமாக, பல அரசாணைகள் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையால் வெளியிடப்பட்டுள்ளன. மேற்கண்ட நான்கு பிரிவுகளில், தெலுங்கு பட்டி செட்டியை மட்டும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதர மூன்று பிரிவுகளும் விடுபட்டுப் போனது. மேற்படி அரசாணையில் விடுபட்டுப்போன மூன்று பிரிவுகளின் பெயர்களையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திட வேண்டுமென்று பல முறை தமிழக அரசிடம் மனு செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல் குழு வழக்குகள் சம்பந்தமாக உச்ச நீதிமன்றம் பிறப்பித்த கட்டளைக்கு இணங்க எந்தவொரு வகுப்பினையும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் கோரிக்கை மற்றும் பட்டியல் இன வகுப்புகள் கூடுதலாக சேர்க்கப்பட்டது அல்லது சேர்க்கப்படாமல் விடுபட்டுள்ளது குறித்த புகார்களைப் பரிசீலித்து, அரசுக்குப் பரிந்துரை வழங்குவதற்கு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகிறது. மேற்படி ஆணையத்தின் பரிந்துரையின்றி, எந்தவொரு வகுப்பினையும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க இயலாது. இந்நிலையில், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரி 24 மனை தெலுங்கு செட்டியார் உட்பட 50 வகுப்புகளைச் சேர்ந்தவர்களின் கோரிக்கை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் பட்டியலில் இடம்பெறாத

2014 ஜூலை 30] [திரு. எஸ். அப்துல் ரஹீம்]

43 வகுப்புகளைச் சேர்ந்தவர்களின் கோரிக்கை, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரை வேண்டி அனுப்பப்பட்டுள்ளது. ஆணையத்தின் பரிந்துரை கிடைக்கப்பெற்றவுடன், அரசு அதனைப் பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள்.

திரு. ஏ.கே.டி. ராஜா: கல்வியிலும், பொருளாதாரத்திலும் அவர்கள் மிகவும் பின்தங்கியிருக்கிறார்கள். அதனால் அந்த மூன்று பிரிவினரையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்துக்கொண்டால், அவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். (குறுக்கீடு) மூன்று பிரிவுகளும் விடுபட்டுப்போனது, அதனால்தான் சொல்கிறேன்.

கள்ளர் சீரமைப்பு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், தமிழ்நாட்டில், மதுரை மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. தற்போது மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. அதன்கீழ் 208 தொடக்கப் பள்ளிகளும், 24 நடுநிலைப் பள்ளிகளும், 21 உயர்நிலைப் பள்ளிகளும், 32 மேல்நிலைப் பள்ளிகளும், 53 மாணவ, மாணவியர் விடுதிகளும் உள்ளன. இப்பள்ளிகளில் மூன்றாண்டு காலமாக ஆசிரியர் பணியிடம் காலியாக உள்ளது. 75 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும், 155 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 69 முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 169 துறை மாறுதல் உத்தரவு பெற்ற ஆசிரியர் பணியிடங்களும் என ஏறத்தாழ 500 ஆசிரியர் பணியிடங்கள் காலியாகவே உள்ளன.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு கல்விக் கட்டணத்தை அரசு வழங்கும் என 2005 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு அந்தக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஜூலை 30

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் நிரப்பப்பட வேண்டிய 75 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள், 140 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 37 முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் உட்பட 252 ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு மதிப்பீடுகள் ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. காலிப் பணியிடங்கள் நிரப்புவது குறித்து, பணி நாடுநர்களின் பட்டியல் கேட்டு, அனைத்துத் துறைகளுக்கும் கடிதம் அனுப்பப்படுவதாக ஆசிரியர் தேர்வு வாரியம் தெரிவித்துள்ளது. பணி நாடுநர்களின் பட்டியல் கிடைத்தவுடன், மேற்படி ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கிடு)

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. டில்லி பாபு, Clarification-ஐ உங்கள் கட்சி உறுப்பினர் திரு. பீம்ராவ் அவர்களிடம் சொல்லி, சொல்லச் சொல்லுங்கள். அவர் பேசும்போது சொல்வார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கேடி. ராஜா, நீங்கள் பேசுங்கள்.

திரு. ஏ.கேடி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

கல்வித் துறையில், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு நபார்டு வங்கி நிதியுதவியுடன் கட்டடம் மற்றும் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், கள்ளர் பள்ளிகளில் நபார்டு நிதியுதவியுடன் கட்டடங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்யப்படுவதில்லை. நபார்டு நிதியுதவியுடன் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும்.

கல்வித் துறையில் உள்ளதைப்போல, உதவி தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்கள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்குத் தோற்றுவிக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையால் அதற்கான அரசாணை வெளியிடப்பட்டது. இன்றுவரை அந்த அரசாணை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

2014 ஜூலை 30] [திரு. ஏ.கே.டி. ராஜா]

கல்வித் துறையில் முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு நேர்முக உதவியாளர்கள், தலைமை ஆசிரியர்கள் நிலையில் நேர்முக உதவியாளர்கள், மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் நிலையில் ஒரு நேர்முக உதவியாளரும் உள்ளனர். ஆனால், கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநர் பணியிடம், முதன்மைக் கல்வி அலுவலர் பணியிடத்தைக் காட்டிலும் உயர்வானது. இவருக்கு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் நிலையில் ஒரு நேர்முக உதவியாளர் பணியிடத்தை தோற்றுவித்து இதுவரை நியமிக்கப்படவில்லை. மேலும், உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் நிலையில் ஒரு பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

விடுதியில் தங்கிப் பயிலும் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு அரசு பரிசுத் தொகை முதல் பரிசு 10,000 ரூபாயும், இரண்டாம் பரிசு 7,000 ரூபாயும், மூன்றாம் பரிசு 5,000 ரூபாய் என உள்ளது. அதை 50,000 ரூபாயாக உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்தாம் மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில், கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு, சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் வழங்கப்படுவதைப்போல கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படவேண்டும். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை இயக்குநர், எழிலகம், சென்னை பணியிடம் மூன்று ஆண்டுகளாக காலியாக உள்ளது. இப்பதவி பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இயக்குநர் அவர்களின் கூடுதல் பொறுப்பில் உள்ளது.

மேலும், மதுரையில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் இணை இயக்குநர் அவர்களின் மேற்பார்வையில் உள்ளது. இப்பதவியை இரத்து செய்து, மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் அமைந்துள்ள கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை நிருவகிக்க I.A.S. அலுவலரை பணி நியமனம் செய்யவேண்டும்.

கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இளநிலை உதவியாளர்கள், பதிவுரு எழுத்தர், இரவுக் காவலர் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் நியமனம் செய்யப்படவேண்டும்.

[திரு. ஏ.கே.டி. ராஜா] [2014 ஜூலை 30

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் விடுதிகளில் இரவுக் காவலர்கள் நியமனம் செய்யப்படவேண்டும். மேற்படி விடுதிகளில் தற்சமயம் தண்ணீர் பற்றாக்குறை உள்ளது. தண்ணீருக்கு அலையும் மாணவ, மாணவியரின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஆசிரியர்கள், விடுதிக் காப்பாளர்கள் இட மாறுதலுக்கான Counselling 5-8-2014-ல் நடைபெறும் என 22-7-2014 பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டது. ஆனால், அதற்கு முன் கள்ளர் சீரமைப்பு விடுதியில் இல்லக் காப்பாளர்களுக்கு ஆசிரியர் மாறுதல் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் தேர்வு செய்யப்பட்டோர் பட்டியல் வரப்பெற்றவுடன், துறை மாறுதல் ஆணை பெற்ற ஆசிரியர்கள் அனைவரும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளிலிருந்து விடுவிக்கப்படுவர் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள்.

திரு. ஏ.கே.டி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் விடுதிகளில் பணிபுரியும் இல்லக் காப்பாளர்களின் மாறுதல் நெறிமுறைகள் அரசாணை வெளியிடப்பட்ட பின் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றப்பட வேண்டும். ஏற்கெனவே பணி புரிந்தவர்களை மீண்டும் பணி நியமனம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என அரசு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரை அரசின் உத்தரவு நடைமுறைப்படுத்தப்படவில்லை.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ளதால் மூன்று மாவட்ட கல்வி அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். 2014-2015 ஆம்

2014 ஜூலை 30] [திரு. ஏ.கேடி. ராஜா]

கல்வி ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ஐந்து மேல்நிலைப் பள்ளிகளும், 5 உயர்நிலைப் பள்ளிகளும் தரம் உயர்த்தப்பட வேண்டும். குறிப்பாக, எனது திருப்பரங்குன்றம் தொகுதியில் உள்ள தளக்கான்குளம் உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படவேண்டும்.

திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முத்துப்பேட்டையிலுள்ள உயர்நிலைப் பள்ளி 2014 ஆம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்டது. அப்பள்ளிக்கு அருகில் உள்ள நத்தம் புறம்போக்கு நிலத்தை, விளையாட்டு மைதானம் மற்றும் அறிவியல் ஆய்வகம் அமைப்பதற்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பிற்பகல் 12-30

பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக வழங்கப்படும் உதவித் தொகை ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை ரூபாய் 20/- ஆகவும், ஒன்பதாம் மற்றும் பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு ரூபாய் 25/- ஆகவும் உள்ளது. இதனை முறையே, ரூ.50/- மற்றும் ரூ.100/- ஆக உயர்த்திட வேண்டும். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளான சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணம் ஆகியவற்றை அரசே நிர்ணயிக்கும் என்ற நிலையில், இதனை முழுமையாக அரசே ஏற்க வேண்டும். தற்போது விலைவாசி உயர்ந்துள்ளதால், மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தித் தர வேண்டும். கிராமப்புறங்களிலிருந்து பயிலும் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகை ரூ.500/-ஐ ரூ.1,000/- ஆகவும், 6 ஆம் வகுப்பு முதல் 7 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ.1,000/- என்பதை ரூ.2,000/- ஆகவும் உயர்த்திக் கொடுக்கவேண்டும்.

பிற்படுத்தப்பட்டோர் நல வாரியம் 1924 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. ஆனால், அடித்தட்டு மக்கள் தன்னிறைவு பெறவில்லை. அவர்களுக்கு வழங்கப்படும் இட ஒதுக்கீடு படிப்படியாக உயர்ந்து, பல்வேறு போராட்டங்களுக்குப் பிறகு தற்போது பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோருக்கான இட ஒதுக்கீடு 69% ஆக உள்ளது. இந்த இட ஒதுக்கீட்டில், உள் ஒதுக்கீட்டை

[திரு. ஏ.கேடி. ராஜா] [2014 ஜூலை 30

மாற்றினால்தான் அதன் பலன் அடித்தட்டு மக்களை முழுமையாகச் சென்றடையும். தற்போது, விடுதியில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஆண்டுக்கு 4 செட் சீருடைகள் என்பதை 6 செட் சீருடைகள் என்று உயர்த்தி வழங்க வேண்டும். அரசு விடுதியில் பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களில், மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் மாணவர்களுக்கு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. அதை மாற்றி, மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் மாணவர்களுக்கு, மாவட்டவாரியாக பரிசுகளை வழங்க வேண்டும். அரசு வழங்கும் சலுகைகள் அனைத்தும் விடுதியில் பயிலும் மாணவர்களுக்கு சரிவர சென்றடைவதில்லை என்றும், விடுதிகளில் அடிப்படை வசதிகளே இல்லை என்பன போன்ற செய்திகளைப் பத்திரிகைகளில் படித்து வருகிறோம். இந்த நிலையை மாற்ற, அதிகாரிகளுக்கு சரியான விதிமுறைகளை அரசு ஏற்படுத்தித் தர வேண்டும். தற்போது அதிகரித்து வரும் பாலினக் குற்றங்களைத் தடுக்க, பெண்கள் தங்கும் விடுதிகளில் அரசு அதிகக் கவனம் செலுத்திட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளையெல்லாம் ஆதாரமாக வைத்துக்கொண்டு பேசக் கூடாது என்றும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் அந்தச் செய்தியைக் காண்பித்து, அது உண்மையா, இல்லையா என்பதைத் தெரிந்து கொண்ட பிறகுதான் பேச வேண்டும் என்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்த அவைக்கு பலமுறை அறிவுறுத்தி இருக்கிறார்கள். அதையும் மீறி, மாண்புமிகு உறுப்பினர் பொத்தாம்பொதுவாக தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கேடி. ராஜா, பேசி முடியுங்கள். நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) திரு. ஏ.கேடி. ராஜா, பேசி முடியுங்கள்.

2014 ஜூலை 30]

திரு. ஏ.கே.டி. ராஜா: தமிழ்நாட்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், 212 தொடக்கப் பள்ளிகள், 25 நடுநிலைப் பள்ளிகள், 25 உயர்நிலைப் பள்ளிகள், 27 மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 289 பள்ளிகள் உள்ளன. இந்தப் பள்ளிகளில் பயின்று வெளி வரும் மாணவ, மாணவியர் உயர் கல்வி பெற கல்லூரி இல்லை. இந்தக் குறையை நீக்க, அச்சமுதாய மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, கல்லூரி ஒன்றை இந்தக் கல்வியாண்டில் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். செக்கானூரணியில் மகளிருக்கென மேல்நிலைப் பள்ளி உள்ளது. அதேபோன்று, திருப்பரங்குன்றம் மற்றும் உசிலம்பட்டியில் மகளிருக்கென அரசு மேல்நிலைப் பள்ளியைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா, உரையை முடியுங்கள்.

திரு. ஏ.கே.டி. ராஜா: கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பல்வேறு பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. கணினி ஆசிரியர், யோகா ஆசிரியர் போன்ற சிறப்பு வகுப்பு ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. அவற்றை உடனே நிரப்புவதற்கு அரசு கவனம் செலுத்திட வேண்டும். அதேபோன்று, அந்தப் பள்ளிகளில் நிரப்பப்படும் பணியிடங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த கள்ளர் சமுதாயத்தினருக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். துப்புரவுப் பணியாளர்களுக்குத் தேவையான உபகரணங்களான கையுறை, காலணி, முகக் கவசம் போன்றவற்றை வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா, உரையை முடியுங்கள். நேரமாகிவிட்டது.

திரு. ஏ.கே.டி. ராஜா: கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் ஒவ்வொரு வருடமும் தரம் உயர்த்தப்படுகின்றன. ஆனால், அவற்றுக்குத் தேவையான கட்டடங்கள் கட்டித் தரப்படுவதில்லை. ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவதில்லை. கடந்த ஆட்சியில் 'சிறுபான்மையினர் நல வாரியம்' என்ற பெயரில் ஓர் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டது. ஆனால், இந்த ஆட்சியில் அந்த நல வாரியம் கலைக்கப்பட்டுவிட்டது. ஆகையால், புதிய சலுகைகளுக்கான அறிவிப்புடன் 'சிறுபான்மையினர் நல வாரியம்' மீண்டும் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[2014 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் நல வாரியத்தை மீண்டும் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா, உரையை முடியுங்கள்.

திரு. ஏ.கே.டி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்லாமிய மதத்தில் வட்டிக்குப் பணம் கொடுப்பது, வட்டிக்குப் பணம் வாங்குவது பாவம், குற்றம் என்று கருதப்படுகிறது. அதனால், இஸ்லாமிய சிறு வணிகர்கள் வங்கிகளில் கடன் பெறத் தயங்குகிறார்கள். எனவே, இஸ்லாமிய சிறு வணிகர்களுக்கு வட்டியில்லாத கடன் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். எனது தொகுதிக் கோரிக்கைகளை அவைக் குறிப்பில் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்

திருப்பரங்குன்றத்திலுள்ள தென்பரங்குன்றத்தின் குடைவரை கோயிலைப் பராமரிக்க கேட்டுக்கொள்கிறேன். அங்கு மயில்கள் சரணாலயம் அமைக்க வேண்டும்.

திருப்பரங்குன்றத்தில் விசாலமான பேருந்து நிலையம் அமைக்க வேண்டும்.

திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட வலையங்குளத்தில் மேம்பாலம் அல்லது தரைப்பாலம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

திருப்பரங்குன்றம் மலைமீது உள்ள காசி விஸ்வநாதர் ஆலயம் மற்றும் சிக்கந்தர் தர்காவிற்கு செல்ல மின்விசை இழுவை வண்டி (வின்ச்) அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதியில் சென்ட் தொழிற்சாலை அமைக்க வேண்டும்.

2014 ஜூலை 30] [திரு. ஏ.கேடி. ராஜா]

திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதி, மதுரை மாநகராட்சி விரிவாக்கத்தில் 13 வார்டுகள் உள்ளன. இந்தப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான பணிகள் அவனியாபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் திருப்பரங்குன்றத்தையும் இணைக்க வேண்டும்.

ஆஸ்டின்பட்டியில் உள்ள மருத்துவமனைக்கு, நோயாளிகளின் நலனைக் கருத்திற்கொண்டு போதிய நிதி ஒதுக்க வேண்டும்.

திருப்பரங்குன்றம் தொகுதியிலுள்ள கண்மாய்களைத் தூர் வார வேண்டும்.

திருப்பரங்குன்றம் நகரத்தில் மேம்பாலப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருப்பரங்குன்றம் தொகுதியில் கலைக் கல்லூரி ஒன்று துவக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கம்பிக்குடி கால்வாய்த் திட்டத்தில் வலையன்குளம், நெடுமதுரை, எலியார்பத்தி, வலையபட்டி, தொட்டியபட்டி ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் பயனடைவதற்கு துணைக் கால்வாய் நீட்டிப்பு செய்ய வேண்டும்.

திருப்பரங்குன்றத்தை மையமாக வைத்து தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டும்.

மதுரை, அவனியாபுரம், வெள்ளக்கல் பகுதியில் 60 ஆண்டுகளுக்கும் மேலாகக் குடியிருந்து வரும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட தென்பழஞ்சி, விளாச்சேரி, கூத்தியார்குண்டு ஆகிய ஊர்களுக்கு ஊரக கால்நடை மருத்துவமனைகள் ஏற்படுத்தித் தர வேண்டும்.

தனக்கன்குளத்தில் உள்ள அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[திரு. ஏ.கேடி. ராஜா] [2014 ஜூலை 30

விரகனூர் ஊராட்சியில் பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் மதகு அணை உள்ளது. அங்குள்ள பூங்காவைப் பராமரிக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

திருப்பரங்குன்றத்தில் உள்ள மயானத்தை நவீன மின் மயானமாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூத்தியார்குண்டு பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும்.

திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட அவனியாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டும்.

திருப்பரங்குன்றத்தில் அரசு விருந்தினர் மாளிகை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

திருப்பரங்குன்றத்தில் கால்நடைத் தீவன உற்பத்தித் தொழிற்சாலையை அரசு அமைக்க வேண்டும்.

திருப்பரங்குன்றம் தொகுதிக்குட்பட்ட சில கிராமங்களைத் தேர்வு செய்து, தீவனப் பெருக்குத் திட்டத்தின்கீழ் 50,000 ஏக்கர் பரப்பில் பசுந்தீவனம் உற்பத்தி செய்ய வேண்டும்.

திருப்பரங்குன்றத்தில் கோழி உற்பத்தி மற்றும் மேலாண்மை நிலையம் அமைக்க வேண்டும். மேலும், கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்றைத் துவங்க அரசு முன்வர வேண்டும்.

இத்தொகுதி வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளதால், இந்தியன் பொட்டர் நிறுவனத்திடமிருந்து வாங்கும் தீவனத்தை விவசாயிகளுக்கு மானிய விலைக்கு வழங்க வேண்டும்.

தோப்பூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும்.

தனக்கன்குளம் அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும்.

திருப்பரங்குன்றத்திலுள்ள தென்கால் கண்மாய், கூத்தியார்குண்டு கண்மாய், பனங்குளம் கண்மாய், விளாச்சேரி கண்மாய், கீழக்குடிக் கண்மாய்களில் மீன் வளர்ப்புப் பண்ணையை அரசு ஏற்படுத்தி, வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும்.

2014 ஜூலை 30] [திரு. ஏ.கேடி. ராஜா]

திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விராதனூரில் ரேஷன் கடை அமைத்துத் தர வேண்டும்.

திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எலியார்பத்தியில் உள்ள அரசு ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும்.

திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வலையபட்டியில் உள்ள ஆதி திராவிட மக்களுக்கு இலவச காலனி வீடுகள் கட்டித் தர வேண்டும்.

திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நிலையூர் கைத்தறி நகரிலிருந்து வண்டியூர் வரை அரசுப் பேருந்து இயக்க வேண்டும்.

தனக்கன்குளம் திருவள்ளுவர் நகரில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டட வசதி, ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

வடபழஞ்சி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கேடி. ராஜா, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. ஏ.கேடி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி.

பிற்பகல் 12-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பிட்டுச் சொல்லமுடியா உலகத்து அதிசயமாய், ஒன்றரை கோடி சிப்பாய் படைகொண்டு உச்சங்கள் எட்டுகிற ஓங்குபுகழ் சிம்மமே, அண்டியவர்க்கு ஆல்போல் நிழல் கொடுக்கும் அன்புச் சரணாலயமே, வீணர்கள் பிதற்றலையும், வீண்பழி சுமத்தலையும் தூள்தூளாக்கி, வெற்றிமேல் வெற்றி குவிக்கும் வீரத்திருமகளே, (மேசையைத் தட்டும் ஒலி) தீரத்தில் விளைந்திட்ட

[திரு. சோழன் சித. பழனிச்சாமி] [2014 ஜூலை 30

தியாகத் திருவுளமே, இல்லார்க்கு இன்னல் தீர்க்க, எல்லோர்க்கும் அல்லல் போக்க, அல்லும், பகலும் நில்லாது சுழல்கின்ற அம்மா என்னும் மூன்றெழுத்து மந்திரமே, வறுமையின் பிடிக்குள் கிடந்த தமிழ் மண்ணை செழுமையின் பிடியில் கிடத்திய ஆற்றல் பேரரசே, அணிவகுத்துவந்த எதிரியின் கணைகளை தனி ஒருவராய் சந்தித்து, அடுத்த தலைமுறை தமிழ் இனத்தை நோக்கியே சிந்தித்து கண் இமை சேராது உழைக்கின்ற கடமைக் காவியமே, காவல் தெய்வமே, ஏங்கி நிற்கும் ஏழைகள் கேட்கும் வரத்தையெல்லாம் கிஞ்சித்தும் குறையாது அள்ளி, அள்ளித் தருகின்ற ஆலயமே, ஆச்சரியம் பூச்சொரியும் அன்னத் திருமகளே, வாழத் தவிக்கும் வறியவர்க்கு தாலிக்கொடி தந்திட்ட தங்கத் தாரகையே, பெண் பசு ஈன்றால் மகிழ்ச்சி, பெண் சிசு ஈன்றால் அதிர்ச்சியா என அரசுத் தொட்டில் கட்டி, அன்னையர் குலம் காத்த ஆண்டவரே (மேசையைத் தட்டும் ஒலி) காலம்காலமாய் துண்டு விழுவதே பட்ஜெட் எனும் தொடர் விதி மாற்றி காவியத்தாயின் தூய தொண்டில் எழுந்த பட்ஜெட் எனும் புது விதி படைத்த முதல்வர்களுக்குள் முதல்வரே, முப்பொழுதும் மக்களுக்கே உழைக்கின்ற மூலவரே, வரியில்லா நிதிநிலை வாரித் தருவதிலோ குறைவில்லை, கைரேகை தேயத் தேய அள்ளி, அள்ளித் தருவதிலோ கருணைத் தாயின் திட்டங்களுக்கு காந்தி தேசத்தில் நிகரில்லை (மேசையைத் தட்டும் ஒலி) எனும் புரட்சி படைத்திட்ட புத்தொளியே, ஆமை புகுந்த வீடு ஆக்கம் கொள்ளாது என்பதாலே, கல்லாமை இல்லாமை, வேலை இல்லாமை, இவற்றோடு கருணா எனும் ஆமைக்கும், தாய் ஆளும் மண்ணில் தடைபோட்ட தனிமனித ராணுவமே, உயிர் வளர்க்கும் இல்லங்களுக்கு வெட் கிரைண்டர், உயிர் பறிக்கும் மிருகங்களுக்கு என்கவுண்டர் என்று தரமறிந்து தருகின்ற தாயுருவச் சாமியே, பின்புலம் இல்லாத என் போன்ற ஏழை சாமானியன் இலட்சத்திற்கும் மேற்பட்டோரை பச்சை மையில் கையெழுத்திடும் பாக்கியம் தந்திட்ட பாசப் பெட்டகமே, இட்ட கரத்தை வெட்ட நினைத்த நன்றி கெட்ட கோயம்பேட்டு கும்பலின் கொட்டம் அடக்கிய கொள்கைப் பேரரசே, காடு வெட்டி, கடிய நிலந்திருத்தி வீடு கட்டிக் கொண்டிருக்கும் வேழ்வணிகர் வீட்டிற்கு அன்றைக்கு வந்த எங்கள் அம்மா இலக்குமியே, என்றைக்கும் நீங்காதிரு என்று பாடிய செட்டிநாட்டுக் கவிஞன் பாடுவார், முத்தப்பர் பாட்டுப்போல, இந்த மண்ணை காலமெல்லாம் எங்கள் அன்னை ஆள வேண்டும். ஏழேகால் கோடி தமிழ் மக்கள் எல்லா வளங்களும் பெற்று எல்லையில்லா மகிழ்வோடு வாழ வேண்டும்

2014 ஜூலை 30] [திரு. சோழன் சித. பழனிச்சாமி]

எனை இறை வணங்கி, தாயின் பொற்பாதங்களில் என் தலைவணக்கத்தைச் சமர்ப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கனியிடை ஏறிய சுவையும், முற்றல் கழையிடை ஏறிய சாறும், பனிமலர் ஏறிய தேனும், காய்ச்சுப் பாகிடை ஏறிய சுவையும், நனி பசு பொழியும் பாலும், தென்னை நல்கிய குளிரிள நீரும் இனியது என்பேன், எனினும் தங்கத் தாயாம் புரட்சித் தலைவியை என்குல தெய்வம் என்பேன், ஏழு கோடி தமிழ் மக்கள் வாழ எழுந்த இமயமே, கடையேழு வள்ளல்களின் மொத்த வடிவமே, தமிழனின் நெஞ்சில் வாழும் காவியமே, உலகம் கைதொழும் உயிர் ஓவியமே, ஆயிரம் திறமை கொண்ட ஆட்சிப் பீடமே, மூவேந்தர் முன்மொழியும் நல்லாட்சித் தரமே, கோடி மக்களின் கொடையே, நாங்கள் கும்பிட்டு வணங்கும் சரஸ்வதியே, வீட்டுக்கும், நாட்டுக்கும் வெகுமதியே, நாங்கள் வீழ்ந்து வணங்கும் வெற்றிச் சந்நிதியே, அகிலம் காக்கும் அமிரம் கரமே, ஆண்டவன் தந்த திருவரங்கமே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீரமங்கை வேலுநாச்சியார் ஆண்ட சிவகங்கைச் சீமையில், வீர மறவர்கள் மருது பாண்டியர் வாழ்ந்த பூமியில் எங்கோ ஒரு சாதாரண குக்கிராமத்தில் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை ஒன்றிய கழகச் செயலாளராக்கி, மாவட்டக் கழகச் செயலாளராக்கி, கழக விவசாயப் பிரிவுச் செயலாளராக்கி, பல்வேறு பதவிகள் தந்து, மாபெரும் தலைவர்கள் பங்காற்றிய இந்த அவையில் எனக்கும் ஓர் இடம் அளித்து, வணிக வரிகள், முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த, பொருளில்லா ஏழைக்கு பொன் தந்து, விரல் நீட்டும் திசையெங்கும் வெற்றி தந்து, விண்ணோர விளிம்பில் புகழ்பதித்து அருள் காக்கும் தாயாம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி, என் உரைவீச்சைத் துவங்குகிறேன்.

[திரு. சோழன் சித. பழனிச்சாமி] [2014 ஜூலை 30 பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'கொம்புள்ளதற்கு 5 முழம்,
குதிரைக்கு 10 முழம்
வேம்புகரிக்கு ஆயிரம்தான் வேண்டுமே-வம்பு செய்
தீங்கினர்தம் கண்ணில் படாத தூரத்தில்
ஈங்கு நலம் இருப்பதினிது'

என்ற பாடலுக்கேற்ப, கொம்புள்ள விலங்குகளுக்கு அருகிலே நிற்கக் கூடாது. அவற்றிலிருந்து ஐந்து முழம் தள்ளி நிற்க வேண்டும். குதிரை தாவி வந்துவிடும் என்பதால், அதனிடமிருந்து பத்து முழம் தள்ளி நிற்க வேண்டும். வேம்புகரி என்பது யானை; அதனிடமிருந்து ஆயிரம் முழம் தள்ளி நிற்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, வம்பு செய்து தீங்கிழைப்பவர்கள் வந்தால் கண்ணில் படாதவாறு இருப்பதுதான் நல்லது என்பதுபோல, கயவர்களை, நாட்டைச் சுரண்டிய பாவிகளை விலக்கி வைத்ததன்மூலம் இச்சபை நல்லவர்களால் முழுமை பெறுகிறது. அதனால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருத்தன் போட்டான் வெள்ளரிக்காய்
காசுக்கு ரெண்டு விக்கச் சொல்லி
காகிதம் போட்டான் வெள்ளைக்காரன்'

என்று வெள்ளையரை எதிர்த்து இந்திய சுதந்திரத்திற்காக பாடப்பெற்ற பாடல் வரிபோன்று, கடந்த கால மைனாரிட்டி திமுக ஆட்சியில் கொள்ளை போன தமிழகத்தின் வரிப் பணத்தை மீட்டெடுத்து, வணிக வரி மற்றும் முத்திரைத் தாள், பத்திரப் பதிவுகள்மூலம் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக, மக்களின் நலனுக்காக அயராது பாடுபட்டுவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் வணிக வரியின்மூலம் பெறப்படும் வருவாய் ரூ.68,724.06 கோடி என்பது அனைத்து மக்களாலும் பாராட்டப்படுகிறது. இத்தொகை கடந்த காலங்களைக் காட்டிலும் 11 சதவிகிதம் கூடுதல் என்பது

2014 ஜூலை 30][திரு. சோழன் சித. பழனிச்சாமி]

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஒரு மைல் கல்லாகும்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பதவியில் இருந்தவர்களும், அரசுக்குக் கணக்குக் காட்டாத வணிகர்களும் அரசுக்கு வர வேண்டிய வரிப் பணத்தை களவாடிச் சென்றதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருத்தில் கொண்டு, VAT மூலம் இடைத்த வரிப் பணம் அனைத்தையும் அரசின் கருவூலத்தில் சேர்த்த பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முத்திரைத்தாள் மற்றும் பத்திரப் பதிவுத் துறையில் பல்வேறு சட்டங்களாலும், நலத் திட்டங்களாலும், 2014-2015 ஆம் ஆண்டில் ரூ.10,470.18 கோடியாக தமிழ்நாட்டின் வருவாயை உயர்த்தியிருக்கிறார்கள் என்ற செய்தி நாட்டின் வளர்ச்சிக்குப் பெரும் பங்கு வகிக்கிறது என்று அனைவரும் பாராட்டுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Real Estate வணிகத்தில் சொத்துகளின் சந்தை மதிப்பானது, வழிகாட்டி மதிப்பைவிட அதிகமாக இருக்கும்போது இடைத்தரகர்கள் அரசினை ஏமாற்றி, குறைவான பதிவுக் கட்டணத்தையே செலுத்தி வந்தார்கள். மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதனை மாற்றி, 1-4-2012 முதல் வழிகாட்டி மதிப்புகள் சந்தையின் மதிப்பை பிரதிபலிக்கும் வகையில், முத்திரைத் தீர்வு மற்றும் பதிவுக் கட்டணம் அனைத்தும் அரசின் கருவூலத்திற்குச் செல்லும்வகையில் மாற்றி அமைத்துள்ள செய்தி அனைத்துத் தரப்பினரின் பாராட்டைப் பெறும்வண்ணம் அமைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் வளர்ச்சியில் அதிக ஆர்வமும், அக்கறையும் கொண்டவராக இருப்பதால்தான், திட்டத்தின் பயன் மக்களுக்கு எளிதில் சென்றடையும்வண்ணம் ஒவ்வொரு திட்டத்திலும் புதுமையைப் புகுத்தியுள்ளார்கள். குறிப்பாக,

[திரு. சோழன் சித. பழனிச்சாமி] [2014 ஜூலை 30

முத்திரைத் தீர்வை நீதி சாரா முத்திரைத் தாள்கள், வங்கி வரைவோலைகள் மற்றும் மின்னணு முத்திரையிடும் முறை என்ற முறைகளைக் காட்டிலும் கூடுதல் முறையாக இணையதளம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வசூலிக்க 11 வங்கிகளுக்கு அங்கீகாரம் தந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ள செய்தியை அனைத்துத் தரப்பு மக்களும் வரவேற்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், தமிழ்நாட்டிற்குப் பொருந்தும்வகையில், இந்திய முத்திரைச் சட்டத்தில் திருத்தம் செய்துள்ளார்கள். குறிப்பாக, அடுக்குமாடிக் குடியிருப்புகளின் முதல் விற்பனையின்போது கட்டடப் பகுதியை விட்டுவிட்டு, பிரிக்கப்படாத அடிமனைப் பகுதியின் விற்பனை மட்டுமே பதிவு செய்யப்பட்டு, அதற்கான முத்திரைத் தீர்வு செலுத்தப்பட்டு வந்தது. இதன் காரணமாக ஏற்படும் முத்திரைத் தீர்வு ஏய்ப்பினைத் தடுக்கும்பொருட்டு, அடுக்குமாடிக் குடியிருப்பினை வாங்குபவருக்கும், அதனை கட்டிக் கொடுப்பவருக்கும் இடையே செய்து கொள்ளப்படும் கூட்டுமான உடன்படிக்கையின்மீது ஒரு சதவிகிதம் முத்திரைத் தீர்வை விதிக்க வழி செய்திருப்பதோடு, கட்டுமான உடன்படிக்கையைப் பதிவு செய்வதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இத்துறையில் தகவல் தொழில்நுட்பப் பயன்பாட்டினை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும்வகையில், பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான வில்லங்கச் சான்றிதழ்கள், திருமணப் பதிவுச் சான்றிதழ்களை இணையதளம் மூலமாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் செய்திருப்பதைப் பொதுமக்கள் பெரிதும் வரவேற்றிருப்பதை இந்த அவையில் பெருமையோடு கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறையில் முக்கியப் பங்காற்றுவது பொது அதிகார ஆவணம் ஆகும். இதில் பல்வேறு குற்றங்கள் மற்றும் தவறுகளால் பொதுமக்கள் பெரும் துன்பத்திற்கும், சிரமத்திற்கும் உள்ளானார்கள். இதனைக் களையும்பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு

2014 ஜூலை 30] [திரு. சோழன் சித. பழனிச்சாமி]

முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துள்ளதைக் கண்டு, பொது மக்கள் பெரிதும் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய முயற்சியால், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் கல்வியில் வளர்ச்சி அடையவும், பொருளாதாரத்தில் மேன்மை அடையவும், சமூக நிலையில் உயர்வடையவும் பல்வேறு சிறப்பான நலத் திட்டங்களை வகுத்து, அவற்றைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. இப்பிரிவினர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பயன்பெறும் வகையில், 69% இட ஒதுக்கீடு அளித்து, வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டத்தை இயற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) அதனை அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் இடம்பெற வைத்து, சமூக நீதி காத்த வீராங்கனையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார்கள் என்பதைப் பெருமையோடு இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டின் பெரும்பான்மையான, 50% மக்கள் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் அடைய முக்கியமானது கல்வி ஆகும். இந்த நோக்கத்தை எய்தும்பொருட்டு, மாணவ, மாணவியருக்குக் கல்வி உதவித் தொகை, சீருடைகள், புத்தகங்கள், மிதிவண்டிகள், மடிக்கணினி வழங்கப்பட்டுள்ளன. மாணவ, மாணவியர் தரமான கல்வி பெறுவதற்கு நல்ல சூழ்நிலையினை ஏற்படுத்தும்பொருட்டு, மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு நவீன வசதிகளுடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. பிரமலைக் கள்ளர் அதிக அளவில் வசித்துவரும் மதுரை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் 212 தொடக்கப் பள்ளிகள், 25 நடுநிலைப் பள்ளிகள், 25 உயர்நிலைப் பள்ளிகள், 27 மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 289 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை நடத்தி, மாண்புமிகு அம்மா அவர்கள் இம்மக்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டு, காப்பாற்றி வருகிறார்கள் என்ற செய்தி இம்மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. சோழன் சித. பழனிச்சாமி] [2014 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதல்மைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களின் அடிப்படைத் தேவைகளான உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் போன்றவற்றை பெறும் வகையில், வீடற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பினருக்கு 2,18,889 வீட்டு மனைகள் விலையேதுமின்றி வழங்கியுள்ளார்கள் என்பதையும், இத்திட்டத்திற்கு ரூ.525.02 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள் என்பதையும் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தானும், தன் குடும்பமும் செல்வத்தோடு, குபேர வாழ்க்கை நடத்த வேண்டுமென்று சாதியைக் கூர்தீட்டி, சதித் திட்டம் தீட்டி, மரத்தை வெட்டிப் பிழைப்பு நடத்திய நயவஞ்சகர்கள், தேர்தலுக்கு ஒரு கூட்டணி என்று ஓட்டுண்ணியாக மாறியவர்கள், இப்போது எவரும் கிடைக்காதபட்சத்தில் சாதிகளை ஒன்றுகூட்டி, சாதிக் கூட்டணி என்னும் சதிக் கூட்டணி நடத்தும் கோமாளிகளை தமிழ்நாடு இனம் கண்டு ஒதுக்கி வைத்துள்ளதை இந்த நாடறியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வன்னிய மக்களின் முன்னேற்றத்திற்காக பல வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு, வன்னியர் பொதுச் சொத்து நல வாரியம் ஒன்றினை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறார்கள் என்பதை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'தொண்டு செய்து பழுத்த பழம்
தூய தாடி மார்பில் விழும்
மண்டை சுரப்பை உலகம் தொழும்
மனக் குகையில் சிறுத்தை எழும்'

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் வரிகளுக்கொப்ப, திராவிட இயக்கத்தின் பிதாமகன் தந்தை பெரியார் அவர்கள் பெண்ணடிமைக்கும், சமூக நீதிக்காகவும் அரும்பாடுபட்டு நீதியை நிலைநாட்டியதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு

2014 ஜூலை 30] [திரு. சோழன் சித. பழனிச்சாமி]

முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதினை 1994 ஆம் ஆண்டு முதல் ஏற்படுத்தி, ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பிலான பொற்கிழியும், 1 சவரன் தங்கப் பதக்கமும் வழங்கிச் சிறப்பிக்கிறார்கள் என்பதை இம்மாமன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இயேசு பிரான் நாட்டிலுள்ள மக்களை தன் பக்கம் ஈர்த்து, மக்களிடம் சூழப்பம் விளைவிக்கிறார் என்று எதிரிகள் அவரைக் கொலை செய்யத் தேடும்போது, இயேசுவின் சீடர்களில் ஒருவரான யூதாஸ் என்பவன், 25 வெள்ளிக் காசுகளுக்காக இயேசுவை எதிரிகளிடம் காட்டிக் கொடுத்தான். அதுபோல, தன்மேல் உள்ள இலஞ்ச வழக்குகளுக்குத் தீர்வு காண, கருணாநிதி, காவேரி நதிநீர்ப் பங்கீட்டையும், கச்சத் தீவினையும் தாரை வார்த்தது நாடறிந்த வரலாறு. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், காவேரி நதிநீர்ப் பங்கீட்டாக இருந்தாலும் சரி, கச்சத் தீவாக இருந்தாலும் சரி, முல்லைப் பெரியாறாக இருந்தாலும் சரி, தன்னந்தனியாக நின்று, மாபெரும் சட்டப் போராட்டத்தின்மூலம் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டியுள்ளார்கள் என்பது நிகழ்கால வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிறிஸ்துவ சிறுபான்மையின மக்களின் மேல் அளவற்ற அன்பும், பாசமும் கொண்டிருப்பதால்தான், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கிறிஸ்துவப் பிரிவினரும் புனிதப் பயணமாக ஜெருசலேம் செல்வதற்காக, ஆண்டிற்கு 500 பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பி சிறப்பித்து வருகிறார்கள் என்பதனை இம்மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இஸ்லாமிய பெருமக்களின் நலனில் அக்கறைகொண்டு, புனித ரமலான் மாதத்தில் நோன்புக் கஞ்சி தயாரிக்க, தமிழகத்திலுள்ள 3,000-க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களுக்கு, 4,500 மெட்ரிக் டன் அரிசி வழங்கியும், பள்ளி வாசல்கள், தர்காக்கள் போன்ற வக்ஃபு நிறுவனங்களின் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக புதிதாக வக்ஃபு நிறுவன மேம்பாட்டு நிதி உருவாக்கப்பட்டு, 3 கோடி ரூபாய் நிதி வழங்கியும், உலமாக்களின்

[திரு. சோழன் சித. பழனிச்சாமி] [2014 ஜூலை 30

மாதாந்திர ஓய்வூதியத்தினை ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும், தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு வழங்கப்படும் ஆண்டு நிருவாக மானியத்தை ஒரு கோடி ரூபாய் உயர்த்தி வழங்கியும், இஸ்லாமிய மக்களைப் பெருமைப்படுத்தியுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இஸ்லாமிய மார்க்கத்தில் 5 முக்கிய கடமைகள் உண்டு. இறைவன் ஒருவனே என்ற நம்பிக்கை கொண்டு மனப்பூர்வமாகச் சொல்லும் கலிமா, தொழுகை, நோன்பு, ஜகாத் மற்றும் ஹஜ் ஆகிய 5 கடமைகள் ஆகும். இந்தக் கடமைகளைத் தன் வாழ்நாளில் நிறைவேற்றிட வேண்டும் என்று ஒவ்வொரு இஸ்லாமிய பெருமக்களும் எதிர்பார்ப்பார்கள். இந்தக் கடமைகளை நிறைவேற்றிடும்வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முனைப்போடு செயல்படுகிறது என்பதை இந்த அவையில் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுபோல, தமிழ்நாட்டிலுள்ள இஸ்லாமியர்கள் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஹஜ் கமிட்டி ஒன்றை உருவாக்கி அதன்மூலமாக கடந்த ஆண்டு 3,696 நபர்கள் தமிழகத்திலிருந்து ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்டுள்ளனர். இந்த ஆண்டு ஹஜ் புனிதப் பயணத்திற்கு விண்ணப்பங்கள் அதிக அளவில் வந்துள்ளதால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஹஜ் பயண ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் என்று பாரதப் பிரதமர் அவர்களிடம் வலியுறுத்தியுள்ளார்கள் என்ற செய்தி இஸ்லாமிய மக்களிடம் மிகுந்த வரவேற்பையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கிடு) நன்றி சொல்லி, உரையை முடித்துவிடுங்கள்.

திரு. சோழன் சித. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மனிதனின் நிலைகளையும்,

2014 ஜூலை 30] [திரு. சோழன் சித. பழனிச்சாமி]

குணங்களையும் தரப்படுத்துவதற்கு அல்லது தவிடு பொடியாக்குவதற்குத் தேவையான சக்தி நட்புக்கும், நல்ல நண்பர்களுக்கும் உண்டு. வானிலிருந்து விழுகின்ற மழைத் துளி ஒரு சிப்பிக்குள் விழும்போது சிப்பியின் சகவாசத்தால் விலை உயர்ந்த முத்தாகிவிடுகிறது. ஆனால், அதே மழைத் துளி கடலுக்குள் விழும்போது கடலின் சகவாசத்தால் உப்பாகி விடுகிறது. இந்த உதாரணம் நட்புக்கு மட்டுமல்ல, அரசியலுக்கும் பொருந்தும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிரேக்க நாட்டின் அலெக்ஸாண்டர், மங்கோலிய நாட்டின் செங்கிஸ்கான், பிரெஞ்சு நாட்டின் நெப்போலியன், ரோமானிய நாட்டின் ஜூலியஸ் சீஸர் போன்றவர்கள் உலக வரலாற்றில் வீரத்தை விதைத்த மன்னர்கள். அதுபோல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் வீரத்தையும், தீரத்தையும், பண்பையும், வெற்றியின் சூட்சமங்களையும் சொல்லாமல் இனி உலக வரலாறு எழுத முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல் ஆவின் பால் முழுவதும் கன்றுக்கில்லை; நறும்பூவின் மணம் முழுதும் சோலைக்கில்லை; நெல்லாகும் கதிர் முழுவதும் நிலத்துக்கில்லை; நிறைகின்ற நீர் முழுவதும் குளத்துக்கில்லை; பழுத்திருக்கும் கனி முழுவதும் மரத்துக்கில்லை, பண்ணரம்பின் இசை முழுவதும் யாழுக்கில்லை; எல்லாமே பிறருக்குப் பயன்படுவதுபோல தன்னலம் பாராமல் தமிழன் வாழ ஒற்றை மெழுகாய் உருகும் நம் தாயை வெல்ல எவரும் பிறக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

ஈரம் உள்ளவரை இலைகள் உதிர்வதில்லை. நம்பிக்கை உள்ளவரை வாழ்க்கை தோற்பதில்லை. பொங்கும் தர்ம வெள்ளம் குறைவதில்லை. தாயின் புகழும், பெருமையும் என்றும் தணிவதில்லை. தாய் உள்ளவரை இந்த அவையில் எதிரிக்கு இடமில்லை இடமில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி, எனது உரையை முடித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

எனது காரைக்குடி தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

[திரு. சோழன் சித. பழனிச்சாமி] [2014 ஜூலை 30

தொகுதிக் கோரிக்கைகள்

எனது தொகுதியில் ஏரிகள் தூர் வாரப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஆழ்குழாய்க் கிணறு அமைக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். கண்ணங்குடி காவல் நிலையம் மற்றும் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டுகிறேன். புதுவயலில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். எழுவன்கோட்டை முதல் ஈகரை வரை விருச்சுழி ஆற்றில் பாலம் கட்டித் தர வேண்டுகிறேன். அழகப்பா பல்கலைக்கழகத்தில் விவசாயக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். சங்கரபதி கோட்டையை புதுப்பித்து சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுகிறேன். தேவகோட்டையில் பெண்கள் பல்துறை கல்லூரி அமைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். தேவகோட்டையில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடியில் மாவட்டத் தலைமை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டுகிறேன். சிவகங்கை மாவட்டத்தில் மாண்புமிகு அம்மா அறிவித்த தொழிற்பேட்டைக்குத் தேவையான இடம் காரைக்குடியில் இருக்கிறது. அதனை தேர்வு செய்து தொழிற்பேட்டை அமைத்துத் தர வேண்டுகிறேன். சாக்கோட்டை ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கண்ணங்குடி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென வேண்டுகிறேன். காரைக்குடி தொகுதியில் ஏதேனும் ஓர் இடத்தில் குடிசை மாற்று வாரிய வீடுகள் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

காரைக்குடி வீட்டு வசதி வாரிய குடியிருப்பு முற்றிலும் சேதமடைந்துள்ளதால், அவற்றை அகற்றி புதிய அடுக்குமாடி வீடுகள் கட்டித் தருமாறு வேண்டுகிறேன். காரைக்குடி ஆர்டிஓ. அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கட்டடத்தைக் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். காரைக்குடியிலுள்ள பத்திரப் பதிவு அலுவலகம் No.1, No.2 மற்றும் மாவட்ட சார் பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருமாறு வேண்டுகிறேன். காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரியில் மாலை நேரக் கல்லூரி ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்டோர் மகளிர் விடுதி காரைக்குடியில் கட்டித்

2014 ஜூலை 30] [திரு. சோழன் சித. பழனிச்சாமி]

தருமாறு வேண்டுகிறேன். காரைக்குடி வட்டாட்சியர் விடுதி பாழடைந்த நிலையில் உள்ளது. இதற்கு புதிய கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதியக்குடியில் தென்திருப்பதி என்று அழைக்கப்படும் புகழ் பெற்ற ஸ்ரீ திருவேங்கடமுடையான் பெருமாள் கோயிலை ஆன்மிக சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அரியக்குடி இசை மேதை ஸ்ரீ இராமானுஜ அய்யங்காருக்கு மணிமண்டபம் அமைக்க அம்மா அவர்களின் அரசு ஆவன செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அரியக்குடியில் தரம் உயர்த்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் (upgraded PHC) அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்கள் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். காரைக்குடியில் கவியரசர் முடியரசனாருக்கு மணிமண்டபம் அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன். காரைக்குடிக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதாலும், நகரத்தாரின் ஒன்பது முக்கிய கோயில்கள் மற்றும் குன்றக்குடி பிள்ளையார்பட்டி போன்ற முக்கியத் திருத்தலங்கள் இருப்பதாலும், விருந்தினர் மாளிகை (பயணியர் விடுதி) அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

தேவகோட்டையில் ஏற்கெனவே உள்ள பயணியர் விடுதி பழுதடைந்த நிலையில் உள்ளதால், புதிதாக பயணியர் விடுதி அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன். சாக்கை ஸ்ரீ வீரசேகர உமையாம்பிகை திருக்கோயிலில் அன்னதானக் கூடம் அமைக்க வேண்டுகிறேன். கைக்குடி, விருசுழி ஆற்றின் குறுக்கே தளக்காவயலுக்கு தடுப்பணை கட்டித் தர அரசு ஆவன செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். சிவகங்கை மாவட்டத்தில் அதிக அளவில் வாழும் கள்ளர் இன மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

***திரு. க. பீம்ராவ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நீதியைக் காப்பதில் மற்ற மாநிலங்களைவிட தமிழகம் முதலிடத்தில் இருக்கிறது. திராவிட இயக்கங்களும் சரி, கம்யூனிஸ்டு கட்சிகளும் சரி, இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்காக

[திரு. க. பீம்ராவ்] [2014 ஜூலை 30

எண்ணற்ற போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அது மேலும், மேலும் தொடர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அதேபோல, 69% இட ஒதுக்கீடு பிரச்சினை வரும்பொழுது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு இட ஒதுக்கீட்டுக் கொள்கையினைப் பாதுகாத்திருக்கிறார்கள் என்பதை இந்த அவையில் குறிப்பிட வேண்டும்.

சாதாரண, ஏழை, எளிய மக்கள் அதிகம் வசிக்கின்ற புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் ஒரு பிரிவினரான 'வல்லம்பர்' என்று அழைக்கக்கூடியவர்கள், ஏற்கெனவே 'இந்து அம்பலக்காரர்' என்று அழைக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இவர்களை 'வல்லம்பர்' என்று அழைத்து, B.C. பட்டியலிலே சேர்த்திருக்கிறார்கள். அதனால், இவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பல சலுகைகள் தடைபடுகின்றன. எனவே, இவர்களை மீண்டும் 'இந்து அம்பலக்காரர்' என்று அறிவித்து, M.B.C. பட்டியலிலே சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதே வினாவை எழுப்பினார்கள். பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் உத்தரவுக்காக காத்திருக்கிறோம். அந்த உத்தரவு கிடைத்தவுடன், அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை ஏன் இங்கு சொல்கிறேன் என்றால் 24 மனை என்றால், 24 வகை செட்டியார் என்றுதான் எண்ணத் தோன்றும். ஆனால், இவர்கள் மொத்தம் 4 வகையினர்தான். எனவே, அந்த நான்கு வகையினரை ஏற்கெனவே நீங்கள் சொன்ன மாதிரி

2014 ஜூலை 30] [திரு. க. பீம்ராவ்]

M.B.C. பட்டியலில் சேர்ப்பதற்கு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கக்கூடிய 43 பிரிவினர்களில் இவர்களும் இருக்கிறார்களா, இல்லையா என்பதைத் தெளிவுபடுத்தினால், மக்கள் கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சு விடுவார்கள்.

பிற்பகல் 12-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நான்கு வகையினரையும் சேர்த்துதான் அனுப்பியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல்கிறார் என்பதை முழுமையாகக் கேளுங்கள். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 24 தெலுங்கு மனை செட்டியார் குறித்துச் சொல்கிறார். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திற்கு அனுப்பியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பட்டியலை விரைந்து இந்த ஆண்டே செயல்படுத்துவதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் சிறுபான்மையின மக்களுக்கு 3.5 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை உயர்த்துவதற்கு பரிசீலிப்போம் எனத் தெரிவித்தார்கள்.

[திரு. க. பீம்ராவ்] [2014 ஜூலை 30

சிறுபான்மையின மக்களான முஸ்லிம்களுக்கு 3.5 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சரின் கனிவான கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, சச்சார் கமிட்டி, ரங்கநாத் மிஸ்ரா கமிட்டி போன்ற கமிட்டிகளின் பரிந்துரைகள், . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இஸ்லாமியர், கிருஸ்வர் மற்றும் இதர சிறுபான்மையின மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் ஆய்வு எல்லை வரையறை குறித்து 1-3-2006-ல் ஆணைகள் வழங்கப்பட்டு, பின்னர் அமைக்கப்பட்ட ஆணையத்தின் ஆய்வு எல்லையில், 1-3-2006 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில் தெரிவிக்கப்பட்ட ஆய்வு எல்லையை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில் இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீடு 3.5 சதவிகிதம் வழங்கப்பட்டது. எனவே, இஸ்லாமியர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்ற இட ஒதுக்கீட்டிற்கு முதன் முதலாக அடித்தளமிட்டவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. ரங்கநாத் மிஸ்ரா அவர்களின் தலைமையின்கீழான குழு அளித்துள்ள பரிந்துரையின்படி, இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீட்டை உயர்த்தி வழங்கக் கோரி வரப்பட்ட மனுக்கள் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினத்தவரான முஸ்லிம் மக்களுக்கென தனியாக ஒரு துறை அமைக்கப்பட்டால், அது அவர்களின் முன்னேற்றத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மசூதி கட்டுவதற்கு சொந்தமான பட்டா நிலம் இருந்தும், சில நேரங்களில் அனுமதி மறுக்கப்படுகிறது. எனவே, பட்டா நிலத்தில் மசூதி கட்டுவது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் நிலுவையில் இருக்கின்ற மனுக்களை உடனடியாகப் பரிசீலித்து, மசூதி கட்ட அனுமதி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, துறை மூலமாக ஆய்வுசெய்யப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என் பக்கத்தில் இருக்கக்கூடிய காங்கிரஸ் உறுப்பினரும் church கட்டுவதற்கு அனுமதி மறுக்கப்படுவதாகக் கூறுகிறார். எனவே, church கட்டுவதற்கான கோரிக்கை மனுக்கள் வந்திருந்தால், அதனையும் உடனடியாகப் பரிசீலித்து, அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டவர்களுக்கு அரசு பல சலுகைகள் அளிக்கின்றது. Inter-caste திருமணம் செய்து கொண்ட ஒரு வருடக் காலத்திற்குள் பதிவு செய்ய வேண்டுமென்ற

[திரு. க. பீம்ராவ்] [2014 ஜூலை 30

விதி இருக்கிறது. Inter-caste திருமணம் செய்து கொண்டு, ஒரு வருடமாகியும் பதிவு செய்யாமல் இருப்பவர்களுக்காக One time opportunity ஆக G.O. போட்டு அவர்கள் உடனடியாக பதிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாணை வெளியிடப்பட்டால், அரசு அறிவித்துள்ள அந்த சலுகைகள் அவர்களுக்கும் கிடைக்கும். எனவே, அரசு இதனை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை, துறைமூலம் ஆய்வுசெய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆய்வு செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபின மாணவிகளுக்கு பெண் கல்வி ஊக்கத் தொகையாக தற்போது ரூ.500/- வழங்கப்பட்டு வருகிறது. அந்த ஊக்கத் தொகையை தொடர்ந்து பெறுவதற்கு தற்போது உள்ள ஆண்டு வருமான உச்ச வரம்பை ரூ.75,000/- அல்லது ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை, தேனி, திண்டுக்கல் போன்ற மாவட்டங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட பள்ளிகளில் வட மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து வருகின்றார்கள். பள்ளிக் கல்வித் துறையின் அரசாணையைப் பின்பற்றி அவர்களுக்கு பணியிட மாறுதல் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2014 ஜூலை 30] [திரு. க. பீம்ராவ்]

திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் M.M.D.A. காலனியில் மசூதிக்கு என ஒதுக்கப்பட்ட இடம், தற்போது பள்ளியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. அது அவ்வாறே பயன்படுத்தப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். 1992 ஆம் ஆண்டு வீட்டு வசதி வாரியத்தால் மசூதிக்கென ஒதுக்கப்பட்ட R 38, R 39 என்ற புல எண்ணுள்ள இரண்டு இடங்களைத் தந்தால் அவர்கள் மசூதி கட்டிக்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும்.

பிற்பகல் 1-00

அதேபோல, ஆர்.கே. பேட்டையில், திருத்தணி அருகே, பராமரிப்பின்றி இருக்கக்கூடிய கபர்தானை பராமரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். திருத்தணி தாலுகா, இஸ்லாம் நகர் மற்றும் அரிச்சந்திரா நகரில் அதிகமான முஸ்லிம்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்கென உருதுப் பள்ளி ஒன்றினை அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். உருதுப் பள்ளியிலே பயிலக்கூடிய மாணவிகள், 8 ஆம் வகுப்பு பயிலும்போது அவர்களுடைய பெற்றோர்கள் பள்ளிக்கு அனுப்புவதற்கு சிரமப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்குத் தனியாக Hostel வசதி ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உருதுப் பள்ளியில் படித்து +2-வில் ஒன்று, இரண்டு, மூன்றாம் நிலையில் மதிப்பெண் எடுக்கக்கூடிய மாணவ, மாணவிகளுக்கு அரசு உதவித் தொகை வழங்குகிறது. அந்த உதவித் தொகையை 50,000, 25,000, 10,000 ரூபாயாக உயர்த்தி, கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களின் பெயரில் விருதுகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் நடத்தப்படும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அங்கு படிக்கின்ற மாணவர்கள் பயன்பெற கூடுதல் வசதியுடன் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விடுதியில் தங்கிப் படிக்கும் B.C., M.B.C. மாணவர்களுக்கு உணவுக் கட்டணமாக 755 ரூபாயும், கல்லூரியில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு 875 ரூபாயும் தற்போது கொடுக்கப்படுகிறது. இதனை முறையே ரூ.1,000/-, ரூ.1,200/- என உயர்த்தி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பள்ளிகளில், கல்லூரிகளில் படிக்கக்கூடிய மாணவர்கள் வாலிப

[திரு. க. பீம்ராவ்] [2014 ஜூலை 30

பருவத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், அவர்களின் உடல்நலமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில், வாரத்தில் 4 நாட்கள் அசைவ உணவு வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். தற்போது வாரத்தில் 2 நாட்கள் தான் அசைவ உணவு வழங்கப்படுகிறது. மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி பழுதடைந்துள்ளது. இதனைப் பராமரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தம் 1,305 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகள் இருக்கின்றன. அவற்றைப் பராமரிப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 25 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த விடுதியைப் பராமரிப்பதற்கு மிக விரைவில் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து 9 நிமிடங்களாகிவிட்டன. (குறுக்கீடு) நீங்கள் 12-53-க்குப் பேச ஆரம்பித்தீர்கள். 9 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழவேற்காடு பகுதியில் M.B.C. hostel-க்கு பணம் ஒதுக்கப்பட்டு கட்டடம் கட்டப்படாமல் உள்ளது. அதனை விரைந்து கட்டி பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, திருவள்ளூர் மாவட்டம், காக்களூரில் Government hostel சுற்றுச் சுவரின்றி உள்ளது. மாலை நேரங்களில் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, அதனையும் சீர் செய்து உடனடியாக சுற்றுச் சுவர் அமைத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2014 ஜூலை 30] [திரு. க. பீம்ராவ்]

இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிறு குற்றங்களுக்காக சிறை சென்று விடுவிக்கப்பட்ட சிறுபான்மை மக்களின் குடும்பம் மறுவாழ்வு பெற தற்போது அரசு ரூ.10,000/- வழங்குகிறது. இதனை 50,000 ரூபாயாக உயர்த்தி அவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைந்திட வழிவகுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

ஹஜ் பயணிகளுக்கு வழிகாட்டு நூல்கள் தற்போது தமிழிலும், ஆங்கிலத்திலும் கொடுக்கப்படுகிறது. இதனை உருது மொழியிலும் கொடுத்தால், அவர்கள் புரிந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும். அதேபோல, கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 132-ல் முஸ்லிம் பெண்கள் (மணவிலக்கு உரிமை பாதுகாப்பு) சட்டம் 1986, பிரிவு 4 (2)-ன்படி, வக்ஃபு வாரியத்தால் வாழ்க்கைச் செலவுத் தொகையாக 2014-2015 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 1 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது ஒரு இலட்சமா, ஒரு கோடியா என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரூபாய் ஒரு இலட்சம்தான் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.

திரு. க. பீம்ராவ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின பெண்களுக்கு கூடுதலாக நிதி ஒதுக்கி அவர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்ட அமைப்பு மாநில அரசுக்கு தற்போது ரூபாய் ஒரு இலட்சம் கோடிக்கு மேல் கடன் தொகை இருக்கிறது. மத்திய அரசுக்கு வரி சம்பந்தமான பிரச்சினைகள் வரும்போது, அமைப்புச் சட்டம், பிரிவுகள் 268, 268-ஏ முதல் 281 வரை வரி வசூல் செய்வது

[திரு. க. பீம்ராவ்] [2014 ஜூலை 30

சம்பந்தமான ஏராளமான குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கோழிக்கு, ஆட்டுக்கு எல்லாம் வரி போடலாம் என்று சொல்கிறார்கள். ஆனால், கோழிக்கும், ஆட்டுக்கும் நாம் வரி போட்டால் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே, வரி வருவாய் என்பது ஒரு மாநில சர்க்காரை நடத்துவதற்கு அவசியமாகத் தேவைப்படுகிறது. எனவே, அந்த அடிப்படையில் தற்போது மாநில அரசுக்கு உள்ள கடன்களை இரத்து செய்ய வேண்டுமென்று இந்த அவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். ஏனென்று சொன்னால், மக்களோடு நெருங்கிய தொடர்பு, மக்கள் நலத் திட்டங்களை, கல்வி முதற்கொண்டு, சுகாதாரம் முதற்கொண்டு இன்னும் சொல்லப்போனால், சுடுகாடு முதற்கொண்டு அத்தனை பணிகளையும் கவனிப்பது மாநில சர்க்காரே. மத்திய அரசு கூடுதலாக நிதி ஒதுக்குவதற்குப் பதிலாக, மாநில அரசின்மீது மேலும், மேலும் சுமையை ஏற்றுகிறது. எனவே, மாநில சர்க்காரே கடன் வாங்கி நிருவாகத்தை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. எனவே, அமைப்புச் சட்டம் 268, 268-ஏ, 269 மற்றும் 270-வது பிரிவுகளுக்கு திருத்தம் செய்ய வேண்டிய அவசியமும், தேவையும், கட்டாயமும் இந்த நேரத்தில் இருக்கிறது. இது மாநில சுயாட்சி உரிமையைக் காப்பது சம்பந்தமான விஷயம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, மாநில சுயாட்சி சம்பந்தமாக பெருமைப்படக்கூடிய பல விஷயங்களைச் செய்திருக்கிறார்கள் என்றாலுங்கூட, இது தொடர்ந்து வலியுறுத்தப்பட வேண்டிய ஒன்று.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், Road tax உட்பட நாம் வருவாயாக எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். ஆனால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நாம் 118 கோடி ரூபாய் Road tax கட்டியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இந்த வருவாய் மாநில சர்க்காருக்கு வர வேண்டிய வருவாய். அரசியல் சட்டம், 270-வது பிரிவில் சாலை வரியை மாநில அரசே வசூலித்துக்கொள்ளலாம் என்றுள்ளது. ஆனால், 118 கோடி ரூபாயை மத்திய அரசே எடுத்துக்கொள்கிறது. அதேபோல VAT-லே நமக்கு backlog ஆக இருக்கக்கூடிய, மாநில அரசுக்குத் தர வேண்டிய 650 கோடியே 44 இலட்சம் ரூபாயை இதுவரையில் மத்திய அரசு கொடுக்கவில்லை. எனவே, கிட்டத்தட்ட கண்ணுக்குத் தெரிந்து 700, 800 கோடி ரூபாய் என்பது (குறுக்கீடு) நான் மாநில சுயாட்சி சம்பந்தமாகத்தான்

2014 ஜூலை 30] [திரு. க. பீம்ராவ்]

பேசிக்கொண்டிருக்கிறேன். மார்க்சிஸ்ட் கட்சி கோரிக்கையோடு சேர்த்து உங்கள் கோரிக்கையும்தான் அது. எனவே அதை நீங்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்கிறேன்.

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. க. பீம்ராவ், சிக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. க. பீம்ராவ்: அதேபோல மத்திய அரசுக்கு இராணுவம், வெளியுறவுக் கொள்கை அல்லது நாசிக்கில் பணம் அடிப்பது, இது மட்டும் இருந்தாலே அதற்குப் போதுமானது; அல்லது மத்திய அரசு ஊழியர்களுக்கான சம்பளம் கொடுப்பதற்கான நிதி மட்டும் இருந்தால் போதுமானது. எனவே, இதைத் தவிர்த்து மாநில அரசுக்கு கொடுக்க வேண்டிய தொகைகளை அது நிலுவையில் வைத்திருக்கிறது. எனவே, இதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிரயம் முதல் குத்தகை வரை ஐந்து இனங்களில் ஆவணங்களைப் பதிவு செய்யும்போது 2013-2014 ஆம் ஆண்டில் உள்ளாட்சி மன்றங்களுக்குச் சேர வேண்டிய மிகு வரியில் 97 சதவிகிதத்தை அதாவது ரூ.1,651.5 கோடியில் ரூ.1,601.62 கோடியை உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிரும்பக் கொடுத்துள்ளது. இன்னும் சொல்லப்போனால், 8 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மிகு வரியை நாம் வசூலிக்கிறோம். எப்படி மாநில அரசு மக்கள் நலனுக்குச் செய்கிறதோ, அதேபோல, சுற்றுச்சூழலை பாதுகாப்பது முதற்கொண்டு, அடிப்படை வசதிகளை ஊராட்சிகள் மேற்கொள்கின்றன. எனவே, ஊராட்சிகள் வசூலிக்கக்கூடிய Stamp duty-ஐ அந்தந்த ஊராட்சிகளுக்கே கொடுப்பதன் மூலமாக மேலும் அவை பல பணிகளைச் செய்யும். பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகளுக்கு, அவ்வப்போது நிதியைக் கொடுக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகு வரியாக வசூலிக்கப்படும் தொகை, அரசாணை நிலை எண் 64, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர்

[திரு. எம்.சி. சம்பத்] [2014 ஜூலை 30

வழங்கல் துறை, நாள் 28-2-2012-ன்படி மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் அனைத்து ஊராட்சிகளுக்கும் பிரித்து வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அமைச்சர் அவர்கள் நல்ல பதில் சொல்லி இருக்கிறார்கள். நன்றி கூறி, உரையை முடியுங்கள்.

திரு. க. பீம்ராவ்: நல்ல பதிலைச் சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. (குறுக்கீடு) இன்னும் இரண்டே இரண்டு விஷயங்கள். சிறு, குறு தொழிற்சாலைகளுக்கு நாம் மற்ற மாநிலங்களிலிருந்து raw materials வாங்குகிறோம். ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்து வாங்குகிறோம். 'C' form கொடுத்து 2% வரியை சிறு, குறு தொழில்களுக்குப் போடுகிறோம். அதேபோன்று raw materials, company-க்குள்ளே வரும்போது, Excise Duty 3% போடுகிறோம். அவ்வாறு 3 சதவிகிதம் போட்டால் அது இறுதியில் 5 சதவிகிதமாக வெளிவருகிறது. இதை பெரிய கம்பெனிகளுக்கு distribution செய்கிறார்கள். பெரிய கம்பெனிகளுக்கும் சரி, நடுத்தர, சிறு, குறு தொழில்களைப் பாதுகாக்க வேண்டும் என்று சொன்னால்—நம் அரசுகூட கிட்டத்தட்ட 9 இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறு, குறு தொழில்களில் மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கிறோம். அந்த Excise Duty-யோடு சேர்த்து 5% வரி வெளியில் வரும்போது வருகிறது. Multi-national companies என்ன செய்வார்கள் என்றால், 14.5 சதவிகிதம் அவர்கள் விற்பனைக்குக் கொண்டு வருகிறார்கள். அதில் நுகர்வோர்களுக்கு எந்த இலாபமும் கிடையாது. அந்த 5 சதவிகிதத்தை அவர்கள் குறைப்பதில்லை. எனவே, மாநில அரசு இந்த 2 சதவிகித வரி சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், MNC-கள் 120 நாட்கள் வரை அவர்களுடைய பணத்தை வைத்துக்கொள்ளலாம். ஆனால் சிறு, குறு தொழில் செய்பவர்கள் 5 அல்லது 20 நாட்களுக்குள் அந்தப் பணத்தைக் கட்ட வேண்டும். எனவே, நமது தமிழக அரசுக்கு fund generate செய்ய முடியாது; வேறு தொழில்களை அவர்கள் செய்ய முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு, குறு தொழிற்சாலை மற்றும் தொழிற்சாலை நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புப் பொருட்களை சந்தைப்படுத்தும்போது தேசிய சந்தையில் போட்டியிடும் அளவிற்கு விலை நிர்ணயம் செய்ய இயலவில்லை. அதன் காரணமாக தேசிய சந்தையில் அவர்களின் விற்பனை வெகுவாகப் பாதிக்கப்படுவதாகவும், இலாபம் குறைவதாகவும் முறையிட்டு, அதன் அடிப்படையில் பிரிவு 19/2 இ-பிற்சேர்க்கையின்படி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 3 சதவிகித உள்ளீட்டு வரி வரவு, மறுதலிப்பு நீக்கம் பெறுதல் வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையின் அடிப்படையில், சட்டப் பிரிவு தொழிற்சாலை உற்பத்தியாளர்களுக்குப் பொருந்துமா அல்லது பொருந்தாதா என்ற நிலை குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி ஒரு நிலைப்பாட்டினைத் தேர்வு செய்வது என்பது முதன்மைச் செயலாளர், வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை, முதன்மைச் செயலாளர், நிதித் துறை, முதன்மைச் செயலாளர், தொழில் துறை மற்றும் வணிக வரி ஆணையர் ஆகியோரிடம் கலந்தாலோசனை மற்றும் பரிசீலனையில் உள்ளது. அவர்களது கலந்தாலோசனை மற்றும் பரிசீலனையின் அடிப்படையில், முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் 16 நிமிடங்கள் ஆகிவிட்டன. நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) புது சப்ஜெக்ட்டுக்குப் போகாதீர்கள். (குறுக்கீடு) இன்னும் 6 உறுப்பினர்கள் பேச வேண்டும். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. க. பீர்காவ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உங்களிடம் argue செய்யவில்லை. வணிக வரி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைகளை தனித்தனியாக விவாதிப்பதற்கு நேரம் போதவில்லை. கருணைகூர்ந்து கூடுதல்

[திரு. க. பீம்ராவ்] [2014 ஜூலை 30

நேரம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். 120 நாட்கள் என்று வரும்போது சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் செய்பவர்கள் கூடுதலாக fund generate செய்ய முடியாத பிரச்சினை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. க. பீம்ராவ்: நான் அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போகாதீர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். நன்றியோடு நில்லுங்கள்.

திரு. க. பீம்ராவ்: அதுபோல், வணிக வரித் துறையில் அலுவலக உதவியாளர்கள் பணி வரன்முறை செய்யப்படாமல் திருச்சி கோட்டத்தில் 30 பேர்களும், கோவை கோட்டத்தில் 17 பேர்களும், வேலூர் கோட்டத்தில் 12 பேர்களும், பிற கோட்டங்களில் மொத்தமாக 91 பேர்களும் இருக்கின்றனர். இவர்களில் 50 பேர் நீதிமன்றத்திற்குச் சென்று பணப் பயன்களை அடைந்துவிட்டனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று மீதி உள்ளவர்களுக்கும் பணப் பயன் கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உதவியாளர் பணி நியமனம் என்பது டெக்ஸ்கோ மூலமாக எடுப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதற்கு மேலாக இணை ஆணையர், வணிக வரித் துறை மூலமாக மாவட்டப் பதிவாளர் பணிப் பதிவிலிருந்து வரப்பெற்றால் எடுத்துக்கொள்ளலாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை உடனடியாகக் கண்டறிந்து, ஆய்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் பேசுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் கூடத் தர முடியாது. (குறுக்கீடு) நன்றி மட்டும் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) நன்றி மட்டும் சொல்லுங்கள்.

2014 ஜூலை 30]

திரு. க. பீர்முகம்மது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் நலன் குறித்த பிரச்சினை. தொழிலாளர்கள் நல அரசுதான் இது. எனவே, தொழிலாளர் பிரச்சினையையும் நான் கொஞ்சம் பேசலாம் என்று நினைக்கிறேன், அவ்வளவுதான். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 6-5-2013 அன்று நடைபெற்ற வணிக வரித் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் 4,500-க்கும் மேற்பட்ட பணியிடங்கள் நிரந்தரப் பணியிடங்களாக (Permanent Establishment) மாற்றப்படும் என்று அறிவிப்பு செய்தார்கள். அதனை உடனடியாக செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நஞ்சப்பன், பேசுங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்தது. திரு. நஞ்சப்பன், பேசுங்கள். (குறுக்கீடு) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தானே பேசினார். அதில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ன இருக்கிறது? (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசினார். (குறுக்கீடு) திரு. நஞ்சப்பன், பேசுங்கள். (குறுக்கீடு) திரு. நஞ்சப்பன் அவர்கள் சொல்வார்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரைக்குப்பின் அனைவருக்கும் விளக்கம் கேட்க அனுமதி கொடுக்கப்படும். (குறுக்கீடு) சரி, உரையை முடியுங்கள்.

திரு. க. பீர்முகம்மது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன். சமூக சீர்திருத்தத் திருமணங்கள் அரசியல் தலைவர்கள் முன்னிலையில் மேடைகளில் நடத்தப்படுகின்றன. இதனை இந்தியாவில் முதன்முதலாக அறிஞர் அண்ணா அவர்கள்தான் கொண்டுவந்தார்கள். பீகாரில் திரு. கர்பூரி தாக்கூர் என்பவர் கொண்டுவந்தார். திருமணம் முடிந்த பிறகு பதிவுத் துறைக்கு பதிவு செய்யச் செல்லும்போது நிறைய ஆவணங்களைக் கேட்கிறார்கள். எனவே, பதிவுத் துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி, தலைவர்கள் நடத்தி வைக்கக்கூடிய அத்தகைய திருமணங்களை பதிவு செய்ய வேண்டும் என்றும், நிறைய ஆவணங்களை ** அறிவுறுத்துமாறு கேட்டுக்கொண்டு,

---

** மாண்புமிகு துணைத் பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க .. ஆகற்றப்பெற்றது.

[திரு. க. பீம்ராவ்] [2014 ஜூலை 30

இதுவரை பேச நேரம் அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கூறிய ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள், சிக்கல் இல்லாமல் கேள்வி கேளுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இளைஞர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு எந்த ஜாதி என்று போடாமல் பொதுவாக இந்தியன் என்று போட்டு பதிவு செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை கணக்கெடுப்பு நடத்தி, அவர்களுக்கு அரசினுடைய சலுகைகள் கிடைக்கக்கூடிய வகையில், புதிய திட்டம் தொடங்குவது குறித்து பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சிந்திக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நஞ்சப்பன், பேசுங்கள். (குறுக்கீடு) அதனை மாண்புமிகு அமைச்சருடைய பதிலுரைக்குப் பிறகு பார்க்கலாம். (குறுக்கீடு) திரு. ரெங்கராஜன், என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்குலத்தோர் இனத்தில், மறவர் இனத்தினர் M.B.C.-ஆக இருக்கின்றனர். அதுபோல் கள்ளர் இனத்தினைச் சார்ந்த, கந்தர்வக்கோட்டை கள்ளர்கள் மற்றும் பிரமலைக்கள்ளர்கள் M.B.C.-ஆக இருக்கின்றனர். மற்றவர்கள் B.C.-ஆக இருக்கிறார்கள். அகமுடையர்கள் B.C.-ஆக உள்ளனர். எனவே, மீதம் இருக்கக்கூடிய கள்ளர் மற்றும் அகமுடையர்களை M.B.C.-ஆக மாற்ற அரசு ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நஞ்சப்பன், பேசுங்கள். (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2014 ஜூலை 30] [பேரவைத் துணைத் தலைவர்]

செல்வி பாலபாரதி, இது கேள்வி நேரம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. நஞ்சப்பன், பேசுங்கள். (குறுக்கீடு) இது கேள்வி-பதில் நேரம் இல்லை. உட்காருங்கள்.

*திரு. **ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை), முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை), பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமூக நீதிக்கான போராட்டத்திலும், இட ஒதுக்கீட்டிற்கான போராட்டத்திலும் தமிழகம் நீண்ட நெடிய பாதையைக் கடந்து வந்துள்ளது. 69 விழுக்காடு இட ஒதுக்கீடு என்பதை உறுதிப்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைப் பாராட்டுகிறோம்.

2011 ஆம் ஆண்டு கணக்கின்படி, தமிழக மக்கள்தொகை 7,21,38,592 என அரசு குறிப்பு கூறுகிறது. அதில் தாழ்த்தப்பட்ட மக்கள் 18 விழுக்காடு, பழங்குடியினர் 1 விழுக்காடு என குறிப்பிடப்பட்டுள்ளது. மக்கள்தொகையில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 3-ல் 2 பகுதிக்கு மேல் உள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோரின் மக்கள்தொகையை தனித்தனியாக குறிப்பிட்டிருந்தால், இன்னும் கூடுதலான விவரங்களை அறிய வாய்ப்பாக அமைந்திருக்கும். பிற்படுத்தப்பட்டோருக்கு 26.5 விழுக்காடும், முஸ்லிம் மக்களுக்கு 3.5 விழுக்காடும் மொத்தம் 30 விழுக்காடு எனவும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்கு 20 விழுக்காடு எனவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்வி, சமூக, பொருளாதாரத்தில் இம்மக்களை மேம்படுத்தும் நோக்கத்தோடு, இட ஒதுக்கீட்டுக் கொள்கை அமல்படுத்தப்படுகிறது. அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் வேலை என்பதற்கு உத்தரவாதம் வேண்டும். அனைத்து மக்களுக்கும் சம உரிமையுடன், சம வாய்ப்பை உருவாக்க வேண்டும். இந்தச் சூழ்நிலையை உருவாக்கும் வரை, அடித்தட்டில் வாழும் பழங்குடியினர், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர்,

[திரு. ந. நஞ்சப்பன்] [2014 ஜூலை 30

சிறுபான்மையினர் ஆகியோருக்கு இட ஒதுக்கீடு செய்வதன்மூலம் அவர்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் வளர்ச்சிக்கு வழிகோல, பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. சிறுபான்மை மக்களின் வளர்ச்சிக்கு தனியாக மேம்பாட்டுக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் வளர்ச்சிக்கும் தனியாக பொருளாதார மேம்பாட்டுக் கழகம் அமைக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் நரிக் குறவர் நல வாரியம் உள்ளது. நீண்ட நெடிய போராட்டத்திற்குப் பின்னர், கடந்த ஆண்டு, பழங்குடியினர் பட்டியலில் அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இம்மக்களை அடையாளம் காண தமிழகத்தில் நரிக்குறவர் என்று அழைக்கப்படுகின்றனர். ஆனால், இந்திய நாடெங்கும் பல்வேறு பகுதிகளில், சிதறிய நிலையில் வாழும் இச்சமூகத்தினர் வாகிரி, சிக்காரி என்றுதான் அழைக்கப்படுகின்றனர். நரிக்குறவர் என அழைக்கப்படுவதை அம்மக்கள் விரும்பவில்லை. எனவே, தமிழகத்தில் சிக்காரி, வாகிரி என்று பெயர் மாற்றம் செய்ய மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோல, தமிழகத்தில் உள்ள 24 மனை தெலுங்கு செட்டியார் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து போராடி வருகிறார்கள். அதனை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபின மாணவர்கள் அரசின் உதவிகளைப் பெறுவதற்கு, ஆண்டு வருமானம் ஒரு இலட்சம் ரூபாய் என்று இருந்ததை 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தியது வரவேற்கத்தக்கது. மாணவர்களின் கற்பிப்புக் கட்டணம் மற்றும் உதவித்தொகை, ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய் வீதம் 10 மாதங்களுக்கு 200 ரூபாய் எனவும், ஒன்பது, பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மாதம் 25 ரூபாய் வீதம் 10 மாதங்களுக்கு 250 ரூபாய் எனவும் வழங்கப்படுகிறது. ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இத்தொகையை 10 மாதத்திற்கு 750 ரூபாய் என்றும், ஒன்பது, பத்தாம் வகுப்பு படிக்கும்

2014 ஜூலை 30] [திரு. ந. நஞ்சப்பன்]

மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாய் என்றும், பதினொன்று, பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு 1,500 ரூபாய் என்றும் உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உண்டி உறைவிட உதவித் தொகை, பள்ளி மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாயாகவும், கல்லூரி மாணவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாயாகவும் ஒதுக்கீடு செய்ய வேண்டும். இன்றைய விலைவாசி உயர்வில் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு இத்தொகையை உயர்த்துவது அவசியமாகிறது. பண்டிகை மற்றும் விழாக்கால உதவித்தொகை மிகக் குறைவாகவே உள்ளது. இதனை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலைக் கல்லூரி மாணவர்களுக்கென மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக விடுதிகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். கல்லூரி மாணவிகளுக்கென்று விடுதி ஏற்படுத்த அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. கல்லூரி அமைந்துள்ள இடம், வனம் சார்ந்த பகுதியாக இருப்பதால், தக்க பாதுகாப்புடன் விடுதி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

பெரியார் பல்கலைக்கழக உறுப்பு கலைக் கல்லூரியில் இறிய அறைகளில் வகுப்புகள் நடத்தப்பட்டு, ஐந்தாண்டுகளை முடித்துவிட்டார்கள். தற்போது புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு வகுப்புகளைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் பகுதியில் உள்ள தித்தியோப்பனஹள்ளி கிராமத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய, பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அந்தக் கல்லூரியை இடமாற்றம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைக்கின்றார்கள். கட்டடப் பணிகளைப் பொறுத்தவரையில், electrification பணியில் wiring

[திரு. பி. பழனியப்பன்] [2014 ஜூலை 30

மட்டும் நிலுவையில் உள்ளது. இன்னும் 10 நாட்களுக்குள் பணிகள் முடிந்துவிடும். பணிகள் முடிவடைந்த பின்பு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் அந்தக் கட்டடம் திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: பல மாணவர்கள் விடுதிகளில் தங்குவதற்கு இடம் கிடைக்காமல் இருக்கிறார்கள். தருமபுரி மாவட்டத்தில் உள்ள கலைக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு, விடுதிகளில் கூடுதலான இடம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெண்ணாகரம் மகளிர் மேல்நிலைப் பள்ளி விடுதி மாநில அளவில் சிறந்த விடுதி என பெயர் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருமபுரியில் இருக்கக்கூடிய அரசு மற்றும் கலைக் கல்லூரிக்கு விடுதிகள் கட்ட வேண்டுமென்று சொல்கிறார். தற்போது, கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. பணிகள் முடிவுற்ற பின்பு, மாணவர்களின் வசதிக்கு ஏற்றபடி அது திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தருமபுரி அரசுக் கல்லூரியில் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று கூறவில்லை. ஏற்கெனவே, அங்கு விடுதிக்கான கட்டடம் உள்ளது. தங்கிப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கூட்ட வேண்டுமென்றுதான் நான் கோரிக்கை வைத்தேன்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுதிகளில் அதிகமான் எண்ணிக்கையில் மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், ஒரு விடுதியில் 10 விழுக்காடு அளவிற்கு கூடுதலாக மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கின்றோம். ஆதலால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகி, கூடுதலாக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெண்ணாகரம் மேல்நிலைப் பள்ளி விடுதிக்கு 'தமிழகத்திலே சிறந்த விடுதி' என்று விருது வழங்கப்பட்டிருக்கிறது. சிறந்த காப்பாளனி என்ற விருது வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகளவில் வசிக்கின்றனர். வேறு விடுதிகளில் பல மாணவியர்களுக்கு இடம் கிடைக்காத சூழ்நிலை இருக்கின்றது. அதனால், இங்கு கூடுதலான இடம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தருமபுரி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியான பெண்ணாகரம் வட்டத்தில், ஏரியூர், நெருப்பூர், செல்லமுடி ஆகிய கிராமங்களில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் மகளிருக்கான விடுதிகள் இருக்கின்றன. ஆனால், மாணவர்களுக்கான விடுதி இல்லை. அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தில் பின்தங்கிய பகுதிகளில் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. ஆனால், விடுதிகள் இல்லை.

[2014 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த மூன்று நாட்களுக்கு முன்புதான் இதுகுறித்து வினா எழுப்பியிருந்தார். நான் அப்போதே இந்த வினாவிற்கு விடையளித்துவிட்டேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, நிச்சயமாக அங்கு விடுதிகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று தெரிவித்தேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதி கட்ட ஏற்பாடு செய்து தரப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெண்ணாகரம் ஒன்றியத்தில் வத்தலாபுரம், ஏரியூர், அத்திமரத்தூர், நிருமல்லைவாடி, கலப்பம்பாடி, சின்னம்பள்ளி, பெரியூர், கொல்லப்பட்டி, ஊட்டமலை போன்ற பகுதிகளில் உள்ள உயர்நிலைப் பள்ளிகள் வனம் சூழ்ந்த பகுதியில் இருக்கின்றன. ஆகவே, விடுதிகள் அமைப்பது அவசியம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாநிலத்திற்கு வருவாய் ஈட்டித் தரும் முக்கிய துறைகளில் ஒன்றாக வணிக வரி மற்றும் பதிவுத் துறை விளங்குகிறது. 2013-2014 ஆம் ஆண்டில், வருவாய் ரூ.56 ஆயிரத்து 852 கோடியாக உள்ளது. மாநிலத்தில் மொத்த வருவாயில் மூன்றில் ஒரு பங்கு நிதி ஆதாரத்தை ஈட்டி இருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் வருவாய் உயர்ந்துள்ளதை அரசின் குறிப்பு கூறுகிறது. 2009-2010-ல் 24 ஆயிரத்து 819 கோடியும், 2010-2011-ல் 31 ஆயிரத்து 117 கோடியும், 2011-2012-ல் 39 ஆயிரத்து 545 கோடியும், 2012-2013-ல் 47 ஆயிரத்து 885 கோடியும், 2013-2014-ல் ரூபாய் 56 ஆயிரத்து 852 கோடி என கூடுதலாகி இருப்பது வரவேற்கக்கூடிய அம்சம் ஆகும்.

அதேநேரத்தில், வரி ஏய்ப்பு செய்வோர்மீது உரிய நடவடிக்கை எடுப்பதன்மூலமாக கூடுதல் வருவாய் ஈட்டுவதற்கு வாய்ப்பாக

2014 ஜூலை 30] [திரு. ந. நஞ்சப்பன்]

அமையும். மத்திய அரசிடம் நாம் பெறவேண்டிய மதிப்புக் கூட்டு வரி இழப்பீட்டுத் தொகை ரூ.650.44 கோடி. மத்திய அரசு தர வேண்டிய விற்பனை இழப்பீட்டுத் தொகை ரூ.7,098.88 கோடி நிலுவையில் இருக்கிறது. அதைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிற்கு தொடர்ந்து கூடிதம் வாயிலாகவும், இதுதொடர்பான கூட்டம் நடைபெறும்போதும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வலியுறுத்திக் கேட்டுள்ளார்கள். கடந்த ஆட்சியாளர்கள் தர மறுத்தார்கள். தற்போது, மாண்புமிகு அம்மா அவர்களால் இதனை வலியுறுத்தி வாங்குவதற்குண்டான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி மாநில எல்லைப் பகுதிகளில் 28 சோதனைச் சாவடிகளும், மாநிலத்திற்குள் 13 சோதனைச் சாவடிகளும், 61 சுற்றுப் படைகளும் உள்ளன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொடர்ந்து பல்வேறு முயற்சிகளை எடுத்தாலும்கூட, * தவறுகள் நடைபெறுகின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், சமீப காலங்களிலே ஒரூர் சோதனைச் சாவடியிலே ஏராளமான பணம் கைப்பற்றப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. துறையைச் சேர்ந்தவர்கள் உறுதியான நடவடிக்கை எடுத்ததன் மூலமாக அது வெளிக்கொணரப்பட்டிருக்கிறது. இத்தகைய

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[திரு. ந. நஞ்சப்பன்] [2014 ஜூலை 30

செயல்களைக் கண்டறிந்து வருவாயைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பல்பொருள் சில்லறை வர்த்தகத்தில் 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்புப்படி 10 இலட்சத்துக்கு மேலுள்ள மக்கள்தொகை கொண்ட நகரங்களில் பல்பொருள் சில்லறை வர்த்தகத்தில் 51 விழுக்காடு நேரடி அன்னிய முதலீட்டை 2011 ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு அனுமதித்தது. இது, சில்லறை வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான குறு மற்றும் நடுத்தர வணிகர்களை பெரும் பாதிப்படையச் செய்யும் நடவடிக்கையாகும். காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான மத்திய அரசில் அங்கம் வகித்த திராவிட முன்னேற்றக் கழகம், வெளியில் கடுமையாக எதிர்த்து விமர்சனம் செய்து, கண்டனம் தெரிவித்து, நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் எடுத்த நிலைக்கு ஆதரவாக நின்றனர். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சரியான நிலை எடுத்து, உறுதியாகப் போராடியதால் (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசு, மாநிலங்களின் ஒப்புதலின்றி சில்லறை வர்த்தகத்தில் நேரடி அன்னிய முதலீட்டை அனுமதிப்பதில்லை என்று அறிவித்தது. இதனால், தமிழகத்தில் சிறு, நடுத்தர வணிகர்களின் நலன் பாதுகாக்கப்பட்டது. வருகிற காலத்திலும் இத்தகைய நிலைப்பாட்டில் தொடர்ந்து உறுதியாக நின்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மக்களின் நலன் காப்பார்கள் என்ற திடமான நம்பிக்கையில் தமிழக மக்கள் இருக்கின்றனர்.

தமிழகத்தில் 2013-2014 ஆம் ஆண்டில் பத்திரப் பதிவுத் துறையில் 26 கோடியே 53 இலட்சத்து 921 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இதன்மூலமாக 8,055.74 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் வந்துள்ளது. வணிக வரி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறைகளுக்கு அடுத்தபடியாக, பெரிய அள்வில் வருவாய் ஈட்டக்கூடிய மூன்றாவது துறையாக பத்திரப் பதிவுத் துறை உள்ளது. பத்திரப் பதிவுக்கான கட்டணம், முத்திரைத்தாள் கட்டணம் அதிகமாக உள்ளது. அதைக் குறைக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சொத்துகளை வாங்கவும், விற்கவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. ஆனால், அது, நாட்டின் நலனையும், மக்களின் நலனையும் பாதிப்படையச் செய்தால், அதனை பரிசீலிக்க வேண்டும். தற்போது ரியல் எஸ்டேட் தொழில்கள் அதிகமான அளவில் வளர்ந்துள்ளன.

2014 ஜூலை 30] [திரு. ந. நஞ்சப்பன்]

விளைநிலங்கள் எல்லாம் வீட்டுமனைகளாக மாற்றம் செய்யப்படுகின்றன. வீட்டுமனை தேவைப்படுவோர் வாங்குவதில்லை. வசதியும், வருவாயும், வாய்ப்பும் உள்ளவர்கள், தங்கத்தின்மீதும், வீட்டுமனைமீதும் முதலீடு செய்ய, அவற்றை விலைக்கு வாங்குகிறார்கள். இத்தகைய வீட்டுமனைகள் கைமாறிக் கொண்டே இருப்பதால், விலையும் கூடிக்கொண்டே போகிறது. பல ஆண்டுகளாக வீட்டுமனைகள் கட்டப்படாமல், விளைநிலங்கள் தரிசு நிலங்களாக இருக்கின்றன. தொடர்ந்து பல ஆண்டுகளாக வீடு கட்டாமல், நிலத்தைப் பயன்படுத்தாமல் இருந்தால், அதை அரசு முறைப்படுத்த அல்லது கையகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாசன ஆயக்கட்டுப் பகுதிகள், ஆற்றுப் படுகைகள், ஏரிப் பாசனம் உள்ள பகுதிகள், மலை, வனம் சார்ந்த பகுதிகளில் ரியல் எஸ்டேட் மூலம் வீட்டுமனை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடக மாநிலத்தில் நிலங்களை வகைப்படுத்தியிருப்பது போல, நாமும் சில விதிமுறைகளை உருவாக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைகள் நகர ஊரமைப்புத் திட்டத்தின்கீழ் வருகின்றன. எந்த மனையையும் விற்பவரோ, வாங்குபவரோ வந்தால், அதைப் பதிவு செய்துகொள்ள வேண்டியது பதிவுத் துறையினுடைய கடமை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல இடங்களில் விளைநிலங்களைக் குறைவான விலையில் வாங்கி, அரசு நிர்ணயித்த தொகைக்கும் பன்மடங்கு மதிப்புக் கூட்டி, கிரயம் செய்து, வங்கிகளில் கடன் பெறவும், ஒப்பந்த ஆவணங்களைத் தயாரிக்கவும் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இதனால் சாதாரண விவசாயிகளின் நிலம்,

[திரு. ந. நஞ்சப்பன்] [2014 ஜூலை 30

பன்மடங்கு விலை மதிப்பில் பதிவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், பெண்ணாகரம் பகுதியில்கூட இத்தகைய * தவறுகள் நடைபெற்றுள்ளன. இதற்கு பத்திரப் பதிவுத் துறையில் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. நான் தனிப்பட்ட முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அதை அளிக்கத் தயாராக இருக்கிறேன். எங்கள் ஊரிலேகூட, பள்ளிகளுக்கு நிலம் தானமாகக் கொடுத்தார்கள். நடுநிலைப் பள்ளிக்கு நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டது. ஆனால், அப்படி தானமாகக் கொடுத்த நிலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட அளவுக்குக் கட்டணம் செலுத்தப்பட்டுவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், நீங்கள் பேசும்போது ** என்று பேசினீர்கள். அது முறையல்ல. அதை தவறுகள் என்று சொல்லுங்கள். எனவே, அந்த வார்த்தை 'தவறுகள்' என்று மாற்றப்படுகிறது.

பிற்பகல் 1-30

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறான அந்தப் பத்திரத்திற்கு பதிவுத் துறை சுட்டிக்காட்டிய கட்டணத்தையும் கட்டிவிட்டார்கள். ஆனால், வாய்மொழி மூலமாக சொன்ன கட்டணத்தைக் கட்டவில்லை என்ற காரணத்திற்காக பள்ளி நிலத்தின்மீது பன்மடங்கு வரி விதித்து அதைக் கட்டவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறது. இத்தகைய தவறான செயல்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கு தானமாகக் கொடுத்த அந்த இடம் பத்திரப் பதிவுத் துறையின் மூலமாக பதிவு செய்யப்பட்டுள்ளது, இன்னும் பத்திரம் வழங்கப்படவில்லை என்று மாண்புமிகு சட்டமன்ற

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2014 ஜூலை 30] [திரு. எம்.ஜி. சம்பத்]

உறுப்பினர் குறிப்பிட்டார். நிச்சயமாக தகுந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதை உடனடியாக வழங்குவதற்குண்டான நடவடிக்கையை மாண்புமிகு முதல்மைச்சர் அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** அதற்குண்டான ஆதாரங்களைக் கொடுத்தால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். பொத்தாம்பொதுவாகப் பேசக்கூடாது. ** குறிப்பிட்டுச் சொன்னார் என்றால், நிச்சயமாக பதிவுத் துறையின் மூலமாக ** நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2014 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** எல்லாவற்றையும் ஆய்ந்து, அலசிப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும், மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடமும் புகார் கொடுக்கப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ** என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், அது வழக்கிலே இருக்கிறது. வழக்கிலே இருப்பதைப் பற்றி இங்கே பேசவேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் பத்திரப் பதிவு அலுவலகம் மிகப் பழைய கட்டடத்தில் இயங்குகிறது. அதற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிற்மரபினர் பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையையும், பணியாளர்கள் பற்றாக்குறையையும் பூர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2014 ஜூலை 30] [திரு. ந. நஞ்சப்பன்]

சாதி மறுப்புத் திருமணங்கள் பதிவு செய்தலில் உள்ள சிரமங்களைக் களைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களில் இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு சிறுபான்மை மக்களுக்கு ஒரு கல்லூரி அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். கல்வி, வேலைவாய்ப்பில் இஸ்லாமிய மக்களின் வளர்ச்சிக்குக் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுகிறேன்.

கடைசியாக, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,** என்று சொன்னார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இங்கே சுட்டிக்காட்டுவார்களேயானால், ** என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். ஆகவே, பொத்தாம் பொதுவாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்வது என்பதை ஏற்றுக்கொள்ள இயலாது. ஆகவே, ** என்பதைக் குறிப்பிட்டுச் சொல்வார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நஞ்சப்பன், நீங்கள் பேசுவதெல்லாம் அவைக் குறிப்பாகிறது என்பதால் இதுகுறித்து முன்னரே என்னிடம் ஆதாரத்தைக் காண்பித்துவிட்டு பிறகு பேச வேண்டும். நீங்கள் ஆதாரம் கொடுக்காததால் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டியிருக்கிறது. குற்றச்சாட்டுகள் முழுவதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. குற்றச்சாட்டு இல்லாமல் பேசி முடியுங்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2014 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுகுறித்து முன்னரே என்னிடம் காண்பித்திருக்க வேண்டும். ஆதாரம் இல்லாமல் அவைக்குள் எழுப்பாதீர்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில்தான் இல்லாத நிலங்களுக்கெல்லாம் பட்டா வழங்கி, அவர்களுடைய அரசின் சாதனையாகச் சொன்னார்கள். இரண்டு ஏக்கர் நிலம் வழங்குவதில்கூட, அந்த மாதிரி இல்லாத நிலங்களுக்கெல்லாம் பட்டா வழங்கிய அரசு கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உரிய ஆய்வுகளை மேற்கொண்டு, அதற்குரிய இடங்களை அங்கீகரித்து, அடையாளம் கண்டு, அதற்குப் பிறகுதான் வழங்குகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் உங்களுக்குப் பலமுறை சொல்லிவிட்டேன். நீங்கள் ஆதாரத்தை என்னிடம் காண்பித்துவிட்டுப் பேசினால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பதில் சொல்லச் சொல்வேன். நீங்கள், ஆதாரம் இல்லாமல் இப்படி திடீர் என்று பேசினால் எப்படி? ஆதாரம் இல்லாமல் பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. ந. நஞ்சப்பன்: சுட்டிக் காட்டியவை குற்றச்சாட்டுகள் இல்லை. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நஞ்சப்பன், நேரமாகிவிட்டது, உரையை முடியுங்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: நெசவாளர்களுக்குப் பசுமை வீடுகள் கட்டுவதுபோல், நரிக்குறவ மக்களுக்கும் பசுமை வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே.டி. ராஜா அவர்கள் பேசுகின்றபோது, முத்திரைத் தாள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2014 ஜூலை 30] [பேரவைத் தலைவர்]

பதிவுக் கட்டணம் ** என்று கூறிய அந்தக் குறிப்பு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தன்சிங் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, அது குற்றச்சாட்டு போன்றுதான் இருந்தது. (குறுக்கீடு) திரு. மோகன்ராஜ், ஏதாவது உதாரணம் சொல்லியிருக்க வேண்டும். (குறுக்கீடு) ** என்று சொன்னார். (குறுக்கீடு) அவையில் உதாரணத்தோடு பேச வேண்டும். (குறுக்கீடு) அது குற்றச்சாட்டுதான். (குறுக்கீடு) ** என்று குற்றச்சாட்டாகத்தான் சொன்னார். (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தன்சிங் அவர்கள்.

*திரு. ப. தன்சிங்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இனி பிறக்கின்ற ஒவ்வொருவரும், வளர்கின்ற பயிரும் மாண்புமிகு அம்மாவின் பெயர் சொல்லும். தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு "யாம் இருக்க பயமேன்" என்றார் முருகப் பெருமான். வாழும் மக்களுக்கும், வளரும் தலைமுறையினருக்கும் "நான் இருக்கிறேன்" என்கிறார் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தையும், தமிழ் இனத்தையும் காப்பது மட்டுமே தமது தலையாய கடமையாய், உயிர் மூச்சாகக் கொண்டு தமிழகத்தை எல்லா நிலைகளிலும் உன்னதமான நிலைக்குக் கொண்டுவர அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் எங்கள் குலதெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை), முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை), பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைகளின் மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் எனது உரையைத் தொடங்குகிறேன்.

நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்திற்கான எந்தவொரு உரிமையையும் விட்டுக்கொடுக்காமல், சமரசம் செய்துகொள்ளாமல், சட்டப் போராட்டம் நடத்தி உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று வெற்றி கண்டார். காவேரி பிரச்சினையாக இருக்கட்டும், முல்லைப் பெரியாறு அணையில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ப. தன்சிங்] [2014 ஜூலை 30

நீர் தேக்குவதாக இருக்கட்டும், தமிழகத்தின் வாழ்வாதாரத்தை மீட்டெடுத்து, தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-40

2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள், பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியின் குடிநீர்ப் பிரச்சினையை முழுவதுமாகத் தீர்ப்பேன் என்று உறுதியளித்தார்கள். இந்த வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக பல்லாவரம் நகராட்சிக்கு ரூ.99.50 கோடியும், பம்மல் நகராட்சிக்கு ரூ.43.50 கோடியும், ஆக மொத்தம் ரூ.143 கோடியில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து குடிநீர் வழங்கும் புதிய திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு, இன்றையதினம் பணிகள் மிகவும் வேகமாக நடைபெற்று வருகின்றன. இன்றைக்கு தமிழகத்தில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், கழகம் பெற்றுள்ள இந்த இமாலய வெற்றி மாண்புமிகு அம்மா அவர்களின் கடின உழைப்பிற்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களுக்காக கண் துஞ்சாமல் உழைத்திட்டு, அயராது பாடுபட்டு, தனது சீரிய நிருவாகத் திறமையினாலும், மக்களின் அடிப்படைத் தேவைகளை மட்டும் கருத்திற்கொண்டு செயல்பட்டதன் காரணமாகவும், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியால் தமிழர்கள் இழந்த உரிமைகளையும், தமிழர்களின் வாழ்வாதாரங்களையும் மீட்டுக் கொடுத்து தமிழினம் காக்கும் ஒரே தலைவியாக, ஒப்பற்ற தலைவியாக, உன்னதத் தலைவியாக மாண்புமிகு அம்மா அவர்களை தமிழக மக்கள் போற்றிக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தை வாழ வைக்கும் நிகழ்காலம் நீங்கள்தான் அம்மா. தமிழகத்தின் எதிர்காலமும் நீங்கள்தான் அம்மா. எங்கள் நம்பிக்கையே அம்மாதான் என்று தமிழகத்தின் எல்லாத் தரப்பு மக்களும் மகிழ்ச்சியோடு, மன நிறைவோடு இருக்கின்றார்கள். அம்மா, உங்களை எதிர்ப்பவர்களை மன்னிக்க மக்கள் தயாராக இல்லை. மக்கள் பக்கம் நீங்கள்தான் அம்மா. மக்கள் என்னும் மகாசக்தி உங்கள் பக்கம்தான் இருக்கின்றார்கள். அம்மா மீது நம்பிக்கையை தமிழக மக்கள் நெஞ்சில் வைத்திருக்கின்றார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் அம்மாவுக்குக் கிடைத்த வெற்றி மற்ற கட்சிகளுக்கு ஒன்றை உறுதிப்படுத்தி இருக்கின்றது. அது என்னவென்றால், அந்தக் கட்சிகளின் தலைவர்கள் ஓரணியில்

2014 ஜூலை 30] [திரு. ப. தன்சிங்]

இருக்கின்றார்கள். ஆனால் தமிழக மக்களோ அம்மா உங்கள் பக்கம் இருக்கின்றார்கள் என்பதைக் காட்டுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையை மட்டுமே விரும்பும் மக்களின் நலனையே என்றென்றும் நினைத்து திட்டங்களை அறிவித்து, திட்டங்களை வகுத்து செயல்படுத்துபவர் அம்மா. எல்லோரும் வாழ்ந்த பிறகுதான் வரலாறு, ஆனால் அம்மா நீங்கள் வாழும் காலத்திலேயே வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) 'தாய் என்னும் தெய்வத்தின் மீதுதான் உலகமே நம்பிக்கை வைத்திருக்கிறது' என்பதுதான் Samford என்பவரின் கருத்து. ஆம், அம்மா உங்கள்மீது மட்டும்தான் தமிழக மக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த 2014 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி உள்ளடங்கி இருக்கும் ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன் நிறுத்தப்பட்ட கழக வேட்பாளர் வெற்றி பெற்றார். இந்த வெற்றிக்குக் காரணம், தமிழகத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் செய்துள்ள எண்ணிலடங்கா வளர்ச்சித் திட்டங்களே; செம்பரம்பாக்கத்திலிருந்து, பல்லாவரம்-பம்மல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 143 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்தது மாண்புமிகு அம்மா அவர்கள்தான். வேங்கடமங்கலம் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு ரூ.100 கோடியை ஒதுக்கீடு செய்தது மாண்புமிகு அம்மா அவர்கள்தான். 5,700 குடும்பங்களுக்கு இலவசப் பட்டாக்களை வழங்க ஆணை பிறப்பித்தது மாண்புமிகு அம்மா அவர்கள்தான். ஜமீன் ராயப்பேட்டை, கீழ்கட்டளை, பெரிய ஏரி உட்பட இரண்டு ஏரிகள் மற்றும் 3 குளங்கள் புனரமைப்பிற்கு 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது மாண்புமிகு அம்மா அவர்கள்தான். குரோம்பேட்டை பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான நடைமேம்பாலம் நகரும் படிக்கட்டு வசதியுடன் அமைக்க ரூ.6.54 கோடி ஒதுக்கீடு செய்தது மாண்புமிகு அம்மா அவர்கள்தான். பயோகேஸ் கூடம் அமைத்திட ரூ.90 இலட்சம் ஒதுக்கீடு செய்தது மாண்புமிகு அம்மா அவர்கள்தான். பாதாளச் சாக்கடை அடைப்பைச் சரி செய்ய ரூ.72 இலட்சத்தில் இரண்டு ஜெட் ராடிங் இயந்திரங்களை ஒதுக்கீடு செய்தது மாண்புமிகு அம்மா அவர்கள்தான். பம்மல் நகராட்சிப் பகுதியில் உள்ள நாகல்கேணி ஆதி திராவிடர் நலப் பள்ளியில் 64 இலட்சம்

[திரு. ப. தன்சிங்] [2014 ஜூலை 30

ரூபாய் மதிப்பீட்டில் சமையல் அறையுடன்கூடிய பெண்கள் தங்கும் அறைகள் கழிப்பிட வசதிகளுடன் கட்டிக் கொடுக்க ஆவன செய்தது மாண்புமிகு அம்மா அவர்கள்தான். பல்லாவரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 4 இடங்களில், பம்மல் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட 2 இடங்களில், அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட 4 இடங்களில் ரூ.1.59 கோடி மதிப்பீட்டில் "நம்ப டாய்லெட்" கட்டிக் கொடுக்க ஆணை பிறப்பித்தது மாண்புமிகு அம்மா அவர்கள்தான். பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில், தன் வாழ்நாளில் சாதித் சான்றிதழைப் பெற முடியாமல் இருந்த 100 நரிக்குறவர்கள் மற்றும் 43 கணிகர்கள், ஆக மொத்தம் 143 மலைவாழ் பழங்குடியினருக்கு சாதிச் சான்றிதழ் வழங்கிட ஆணை பிறப்பித்தது மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.

பிற்பகல் 1-45

பல்லாவரம் தொகுதியில் இதுபோன்ற மக்கள் நலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, அதன்மூலம் மக்கள் பெற்ற நன்மைகள் காரணமாக, மக்கள் 'நாங்கள் என்றும் அம்மா பக்கம்தான்' என்று வாக்குகளை வாரி வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இறைவனே பிறக்க ஆசை கொண்ட நாடு, எங்கள் அம்மா அவர்கள் ஆட்சி செய்யும் தமிழ்நாடு. (மேசையைத் தட்டும் ஒலி) பல்லாவரம் தொகுதி மக்களின் கோரிக்கைகளை தங்களின் பொற்பாதம் பணிந்து சமர்ப்பிக்கின்றேன். **

தமிழகத்தில் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் மாநிலம் முழுவதும் தெலுங்கு செட்டி, 24 மனை தெலுங்கு செட்டி, தெலுங்கு பட்டிச் செட்டி, சாது செட்டி என்னும் பெயர்களில் வசித்து வருகின்றார்கள். 1989 ஆம் ஆண்டு, தெலுங்கு பட்டிச் செட்டி இனத்தினரை மட்டும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்துவிட்டு, மற்ற 3 பிரிவினரையும் சேர்க்காமல் விட்டுவிட்டனர். இந்த இன மக்கள் கல்வி, வேலைவாய்ப்புகளில் மிகவும் பின்தங்கியுள்ளனர். எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் மற்ற 3 பிரிவினரையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திட வேண்டுமாய் உங்கள் பொற்பாதம் தொட்டு பணிவோடு வேண்டுகிறேன் அம்மா.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2014 ஜூலை 30] [திரு. ப. தன்சிங்]

மேலும், பம்மல், அனகாபுத்தூர் நகராட்சி, பொழிச்சலூர் ஊராட்சி, திருநீர்மலை பேரூராட்சி ஆகிய பகுதிகளில் பாதாளச் சாக்கடை இல்லாததால், அந்தப் பகுதிகளில் வசித்துவரும் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். எனவே, பம்மல், அனகாபுத்தூர் நகராட்சி, பொழிச்சலூர் ஊராட்சி, திருநீர்மலை பேரூராட்சி ஆகிய பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டுவர ஆவன செய்யுமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன் அம்மா. இவைமட்டுமின்றி, அனகாபுத்தூர், பம்மல், பல்லாவரம் மற்றும் திருநீர்மலை நெடுஞ்சாலை, குரோம்பேட்டை ராஜேந்திர பிரசாத் நெடுஞ்சாலை, பல்லாவரம் தர்கா ரோடு நெடுஞ்சாலை ஆகிய பகுதிகளில் சாலைகளின் அகலம் குறைவாக உள்ளதால், பெருகிவரும் மக்கள்தொகை மற்றும் வாகனப் பெருக்கம் காரணமாக போக்குவரத்திற்கு பெரும் இடையூறாக இருப்பதால், மேற்கண்ட சாலைகளை அகலப்படுத்தித் தரவும் ஆவன செய்யுமாறு மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன் அம்மா.

பம்மல் நகராட்சி, திருநீர்மலை பேரூராட்சி பகுதி பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையான பொது சுகாதார மருத்துவமனை அமைத்துத் தர பணிவோடு கேட்டுக்கொள்கிறேன் அம்மா.

அரசுத் துறை அலுவலகங்கள், வட்டார்ட்சியர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம், கிராம நிருவாக அலுவலர் அலுவலகம், சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அலுவலகம் மற்றும் காவல் நிலையக் கட்டடம் ஆகியவற்றை ஒரே இடத்தில், சர்வே எண் 756 பாட்டை புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்ட இடத்தில் அமைத்துத் தர தாய் உள்ளத்தோடு ஆவன செய்யுமாறு பொற்பாதம் தொட்டு வணங்கி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லாவரம், திருநீர்மலை, திரிசூலத்தில் சில பகுதிகள் பாதுகாக்கப்பட்ட பகுதி என தொல்லியல் துறையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் வாழும் மக்கள் பல ஆண்டுகளாக நிரந்தரமாக அங்கே வசித்து வருகின்றனர். தொல்லியல் துறையின் அறிவிப்பால் பொதுமக்கள் பெரும் துயரத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்களுடைய துயரத்தைப் போக்கும்வகையில், அப்பகுதிவாழ்

[திரு. ப. தன்சிங்] [2014 ஜூலை 30

மக்கள் தொடர்ந்து அந்தப் பகுதிகளிலேயே வாழ்வதற்கு தொல்லியல் துறையின் உத்தரவினை இரத்து செய்ய ஆவன செய்ய வேண்டுமென மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் 4 இலட்சத்து 656 மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் வட்டாட்சியர் அலுவலகம் செல்ல ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட நங்கநல்லூர் சென்று வர வேண்டியுள்ளது. எனவே, அரசின் பல்வேறு நலத் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்திட பல்லாவரத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைத்திட பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன் அம்மா.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கண்ட சின்னம், இரட்டை இலை. அதை மீண்டும் மீட்டெடுத்துத் தந்தது மாண்புமிகு அம்மா அவர்கள். அது இரண்டைக் குறிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் முதன்மை மாநிலமாக மாற, மாண்புமிகு அம்மா அவர்களின் தாரக மந்திரமான அமைதி, வளம், வளர்ச்சி இது மூன்றைக் குறிக்கும். 4 என்பது 2016-ல் நடைபெறவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் வெற்றிபெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் எதிர்க் கட்சிகளே இல்லை என்கிற நிலையை உருவாக்கி, 4-வது முறையாக அன்னைத் தமிழகத்தின் நிரந்தர முதல்வராக அரியணையில் அமரப் போவதைக் குறிப்பதாகும். வாய்மை வென்று வள்ளல்தன்மை மாறாமல், தங்கள் பாதம் பட்டாலே துலங்கிடும் இம்மாநிலமே.

பிற்பகல் 1-50

அம்மா, எனக்கு இரண்டு உயிர்கள் வேண்டும். ஒன்று உங்களுக்குத் தருவதற்கு, மற்றொன்று உங்களுக்காக வாழ்வதற்கு என்று உங்களை வணங்கி, தமிழகம் தழைத்தோங்க, (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் வாழ்வாங்கு வாழ, எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

2014 ஜூலை 30] [திரு. ப. தன்சிங்]

**பேசியிருந்தேன். அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தன்சிங் கூறிய கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) கடைசியில் பேச வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரிகள், முத்திரைத்தாள் மற்றும் பத்திரப் பதிவு மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது காங்கிரஸ் கட்சி சார்பில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

புத்தம் புதிய திட்டங்களையெல்லாம் கொண்டு வருகிறீர்கள். ஆனால், மிக முக்கியமான பிரச்சினை; அதை, நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களோ, இல்லையோ என்று எனக்குத் தெரியாது. தமிழகத்தில் சாதாரண ஏழை மக்கள் வீடு கட்டுவதற்காக 2 சென்ட், 3 சென்ட், 5 சென்ட் நிலம் வாங்கும்போது, ** பத்திரப் பதிவுக் கட்டணத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து குறைக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் பேசியதை திரும்பப் பெற்றுக்கொண்டார். இப்போது அதையே நீங்கள் பேசினால் எப்படி? மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் கூறிய கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகச் சொல்லவேண்டும். ** என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகச் சொன்னால் நன்றாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பதில் சொல்லிக்கொண்டேயிருக்கிறார். தெளிவான நிலையில்லாமல்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திருமதி பா. வளர்மதி] [2014 ஜூலை 30

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப தவறான கருத்தை அவையில் பதிவு செய்யக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: ** என்பதை நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கருத்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. திரும்பத் திரும்ப அதைப் பற்றியே பேசினால் என்ன அர்த்தம்? உரையை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட அடித்தட்டு மக்களுக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.5,000/- ஆக இருந்த உச்ச வரம்பினை ரூ.25,000/- ஆக உயர்த்தித் தந்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தச் சலுகையில் ஆவணங்களைப் பதிவு செய்துகொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளின்மீது பேசுங்கள். உங்கள் உரையை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. நீங்கள் சம்பந்தமில்லாமல் பேசிக் கொண்டேயிருந்தால் நேரம்தான் குறையும்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மக்களுடைய பிரச்சினையை அவையில் சொல்லவேண்டும் இல்லையா? பத்திரப் பதிவுக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று சொல்கிறேன். இதில் என்ன தவறு இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்சினையில்லாமல் பேசி உரையை நிறைவு செய்யுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2014 ஜூலை 30]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: பத்திரப் பதிவுக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதை இந்த அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கேடி. ராஜா அவர்கள் இது குறித்து குறிப்பிட்டார்கள். சந்தை மதிப்பு, வழிகாட்டி மதிப்பு, இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சில முரண்பாடுகள் இருந்ததைக் குறிப்பிட்டார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, எங்கேயாவது முரண்பாடு இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் குழுக்கள் இருக்கின்றன. அவர்கள் உள்ளூர் விசாரணையை மேற்கொண்டபின், அவர்களிடமிருந்து பதிவுத் துறைத் தலைவருக்குப் பரிந்துரை வரப்பெற்றால், நிச்சயமாக அந்த முரண்பாடுகளைக் களைந்து, சந்தை மதிப்பை அனுசரித்து, வழிகாட்டி மதிப்புக்கு ஓப்பாக மாற்றுகிறார்கள். இதுபோன்று 22,600 சர்வே எண்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிறது.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தில் முரண்பாடுகள் இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டு தெரிவித்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள் கட்டணத்தைப் பொறுத்தவரையில், 6 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாகக் குறைத்து ஆணை வழங்கியிருப்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

[2014 ஜூலை 30

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையின மக்கள் ஜெருசலேம் செல்வதற்கு 20,000/- ரூபாயை இந்த அரசு கொடுத்து வருகிறது. இதற்கு 500 பேர்தான் தேர்வு செய்யப்படுகிறார்கள்; 1,000 பேர்களைத் தேர்வு செய்ய வேண்டும். அதற்குரிய 75 சதவிகிதம் செலவை அரசே ஏற்க வேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் வலியுறுத்தி கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஜெருசலேம் செல்வதற்கு ரூ.20,000/- வழங்குவதை 75,000/- ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று சொல்கிறார். இன்றைக்குத் தமிழகத்தில் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆண்டுதோறும் 500 கிறிஸ்துவர்கள் புனிதப் பயணமாக ஜெருசலேம் செல்வதற்கு ஒரு கோடி ரூபாயை வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதலிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். உங்களுடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நேரம் இல்லை. இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும். மாண்புமிகு அமைச்சர்களின் பதிலுரையும் இருக்கின்றது. உங்களுக்கு இன்னும் ஐந்து நிமிடம்தான். சரியாக 2-00 மணிக்கு முடித்துவிட வேண்டும்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: உரையை முடித்துவிடுகிறேன். அரசுப் பள்ளிகளில் ஆங்கில வகுப்பு ஆரம்பிக்கப்படுவது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். அதேபோல், சிறுபான்மையினர் நடத்தும் அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் ஆங்கில வகுப்பு ஆரம்பிக்க இந்த அரசு உதவிட வேண்டுமென இந்த நேரத்தில் பதிவு செய்யக்

2014 ஜூலை 30] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

கடமைப்பட்டிருக்கிறேன். சிறுபான்மையினர், பட்டா நிலத்தில் ஆலயம் கட்ட பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன.

குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆலயம் அமைக்க வேண்டுமானால், மாவட்ட ஆட்சியருடைய அனுமதி வேண்டும். அதுவும் சாதாரண பிரச்சினை அல்ல. 1983 ஆம் ஆண்டு மண்டைக்காட்டில் ஒரு கலவரம் ஏற்பட்டது. மதக் கலவரம் ஏற்பட்ட பிறகு, Justice Venugopal Commission நியமிக்கப்பட்டது. அந்த Venugopal Commission Report-னுடைய ஷரத்துக்களை, மாற்றியமைக்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு இலோ மீட்டருக்குள் எந்த வழிபாட்டுத் தலங்களும் வைக்கக்கூடாது என்ற பிரச்சினை இருக்கின்றது. அதை இந்த அரசு மாற்றி, பட்டா நிலங்களில் கிறிஸ்துவர்கள் தங்களுடைய வழிபாட்டுத் தலங்களை அமைத்துக்கொள்வதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத வழிபாட்டுத் தலங்களை அமைப்பதற்கு உரிய ஆவணங்களுடன் அந்தந்த மாவட்ட நிருவாகத்தை அணுகி, அனுமதியைப் பெற வேண்டும். மதக் கலவரம் நிகழாமல் இருப்பதற்காக இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது. எனவே, சம்பந்தப்பட்ட மாவட்ட நிருவாகத்தின் அனுமதி பெற்று, வழிபாட்டுத் தலங்கள் கட்டிக்கொள்ளும் முறை நடைமுறையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பிரின்ஸ், நீங்கள் உரையை முடிக்க மாட்டீர்களா? சப்ஜெக்ட்டை வலியுறுத்தி, தங்கள் உரையை முடியுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: Church கட்ட புதிதாகப் பட்டா நிலங்களைக் கொடுக்கவில்லை, அதைத்தான் நான் வலியுறுத்துகிறேன். என்னுடைய தொகுதிக்குட்பட்ட மண்டைக்காடு, புதூர் போன்ற இடங்களில் 2004 ஆம் ஆண்டு சுனாமி வந்தபோது, புதூரில்

[திரு. ஜே.ஜி. பிரின்ஸ்] [2014 ஜூலை 30

இருக்கின்ற கத்தோலிக்க Church பழுதாகிவிட்டது. அந்த Churchஐ மாற்றி பக்கத்தில் வைக்கக்கூட அரசு அனுமதிக்கவில்லை. அதற்கு அரசு அனுமதி தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சிறுபான்மையின மக்களுக்கு ஒரு கலையரங்கம்கூட கட்டிக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. அதற்கும் நீங்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வணிக வரித் துறையில் அரசுப் பணியாளர் தேர்வு வாரியத்தின்மூலமாக நியமனம் செய்யப்படும் பணியாளர்களின் முதுநிலை கணக்கெடுப்பின்போது, பணி நியமன மூப்பின் அடிப்படையில், முதுநிலை நிர்ணயம் செய்யப்படும் முறைக்கு மாறாக, தொகுதி-II இல் நியமனம் செய்யப்படும் துணை வணிக வரி அலுவலர்களுக்கு அவர்கள் தேர்வு எழுதிய நாளின் அடிப்படையில், பணிமூப்பு கணக்கிடப்பட்டு பதவி உயர்வு வழங்கப்படுகிறது. இதன் காரணமாக 2009 ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்த 80 துணை வணிக வரி அலுவலர்கள் நான்கு வருடங்களுக்கு முன்பாக பதவி உயர்வு பெற்று இன்னும், . . .

மாண்புமிகு போரவைத் தலைவர்: வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறையிலுள்ள பணியாளர்களது முதுநிலையை நிர்ணயம் செய்வது தொடர்பாக உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில், தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டு, பதவி உயர்வு வழங்கப்படுகின்றது. இதன்படி, பதவி உயர்வின்மூலம் பணியமர்த்தப்பட்டவரைவிட, நேரடி நியமனம்மூலம் நியமனம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு இடைக்கின்றது. எனவே, நேரடி நியமனம்மூலம் பணிக்கு வந்தவர்களுக்கும், பதவி உயர்வு பெற்றவர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைச் சரிசெய்ய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பாணையின்மீது தெளிவுரை கோருவது சம்பந்தமாக, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வது குறித்து தமிழ்நாடு அரசு தலைமை வழக்கறிஞர், A.G. அவர்களின் மேலான ஆலோசனை கோரப்பட்டுள்ளது. துறையில், முதுநிலைஞ்ய நிர்ணயம்

2014 ஜூலை 30] [திரு. எம்.சி. சம்பத்]

செய்யும்போது முரண்பாடுகளைக் களைய, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உரையை முடியுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறையில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளன. அவற்றை நிரப்பிட வேண்டுகின்றேன். வணிக வரித் துறையில் இணக்க வரி 5 சதவிகிதம் செலுத்துவோருக்கு ஆண்டு விற்பனைத் தொகை ரூ.50 இலட்சம் என்பது ரூ.1 கோடியாக உயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பிரின்ஸ், உரையை சீக்கிரம் முடியுங்கள். மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் மாநிலத்திலே வணிகம் செய்யும் வணிகர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் என்று நிர்ணயம் செய்யப்பட்டு, வரிச் சலுகை அவர்களுக்கு 0.50% தான். அதன் அடிப்படையில் ஒரு கோடி ரூபாய் என உயர்த்தினால், 350 கோடி ரூபாய் வரி வருவாய் இழப்பு ஏற்படும். மேலும், வரி ஏய்ப்பு ஏற்படுவதற்கும் அங்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து, இந்த 50 இலட்சம் ரூபாய் என்ற உச்சவரம்பே தொடரும் என்பதைக் குறிப்பிட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள். (குறுக்கீடு) திரு. அஸ்லம் பாஷா, பேசுங்கள். (குறுக்கீடு) இன்னும் இரண்டு அமைச்சர்கள்

[பேரவைத் தலைவர்] [2014 ஜூலை 30

பதில் சொல்ல வேண்டும். திரு. பிரின்ஸ், நிறையப் பேசிவிட்டீர்கள். பின்னர் பேசலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகர்கள் தங்கள் வங்கிக் கணக்குகளிலிருந்து கணினி வாயிலாக வரி செலுத்தும்போது அநேக நேரங்களில் சம்பந்தப்பட்ட துறை கணக்கில் வரவு வைக்கப்படாமல் உள்ளது. கணினி மூலமாகச் செய்யப்படும் இந்தகைய பணப்பரிமாற்றத்திலுள்ள குளறுபடிகள் முற்றிலுமாக நீக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, 5 நிமிடத்தில் உரையை முடியுங்கள். நேரமாகிவிட்டது. இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குளறுபடி என்று குறிப்பிட்டார்கள். எங்கும் குளறுபடியில்லை. வரி வருவாய் மின்னஞ்சல் மூலமாக, வங்கிக்கு அனுப்பப்பட்டு, அரசுக்கு உடனடியாகக் கொண்டு செல்ல வகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள். நீங்கள் ஒத்துழையுங்கள். இரண்டு அமைச்சர்களின் பதிலுரை இருக்கிறது. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரிகள், முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகிற வாய்ப்பளித்தமைக்கு மனிதநேய மக்கள் கட்சி சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மனிதநேய மக்கள் கட்சியின் பல்வேறு கருத்துகளையும், ஆலோசனைகளையும் நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு பேரவைத்

2014 ஜூலை 30] [திரு. அ. அஸ்லம் பாஷா]

தலைவர் அவர்களே, ஏற்றுமதியாளர்கள், குறிப்பாக, தோல் தொழிற்சாலையின் ஏற்றுமதியாளர்களுடைய VAT refund amount ஓராண்டுக்காலமாக இதுவரையிலும் திரும்பத் தராமல் காலம் கடத்தி வருகிறார்கள். ஆகவே அவர்களுடைய VAT refund amount-ஐ உடனடியாகத் திரும்பத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து மூன்று மாதங்கள் NIL return submit பண்ணினால், RC cancel செய்யப்படும் என்று ஒரு சூழல் இருக்கிறது. அதையும் இரத்து செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, VAT refund பற்றி இராணிப்பேட்டை, ஆம்பூர் பகுதிகளிலே 720 விண்ணப்பங்கள்தான் வரப்பெற்றுள்ளன. குறிப்பிட்ட ஆவணங்கள் கொடுக்கப்படவில்லை. 20 கோடி ரூபாய் VAT refund amount கொடுக்க வேண்டியிருக்கிறது. மேலும், 1-7-2014-ன்படி சுமார் 796 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. இவற்றில் உரிய ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு, சுமார் 20 கோடி ரூபாய் அளவிலான திருப்புத்தொகை இந்த ஆண்டு படிப்படியாக வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயத் திருமணப் பதிவுச் சட்டம் உள்ளிட்ட சிறுபான்மை முஸ்லிம்களுடைய சில கோரிக்கைகளை, தொடர்ச்சியாக இந்த ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே வலியுறுத்தி வருகிறோம். இந்து அறநிலையத் துறையின் ஆய்வாளர்கள் அளிக்கும் சான்றின் அடிப்படையில் பதிவாளர்கள் திருமணங்களைப் பதிவு செய்கின்றனர். இதேபோல் தமிழ்நாடு அரசு தலைமை காஜியால் வழங்கப்படும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு பதிவாளர்கள் முஸ்லிம்களின் திருமணங்களைப் பதிவு செய்ய உரிய சட்டத் திருத்தத்தைக் இந்தக் கூட்டத்தொடரில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[2014 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள். மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவுத் திருமணச் சட்டத்தின்படி முஸ்லிம் காஜியார் கொடுப்பது திருமண சர்டிபிகேட் அதை birth certificate, school leaving certificate உடன் முறைப்படுத்தி வழங்கினால், அந்த தினத்தில் 18 வயது நிரம்பியிருந்தால், அந்தத் திருமணத்தைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். 18 வயது நிரம்பாத சில நபர்களுக்கு காஜியார்கள் சர்டிபிகேட் கொடுத்திருந்தால், ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை, திருமணத்தையும் பதிவு செய்ய இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: ஆய்வாளர் கொடுக்கும் சான்றிதழ்போல, தலைமைக் காஜியால் கொடுக்கப்படுகின்ற சான்றிதழை வைத்து திருமணங்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்பதுதான் என் கோரிக்கையாகும். அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய சர்டிபிகேட் கொடுத்தால் நிச்சயமாக பரிசீலித்து ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, வேறு சப்ஜெக்ட் பற்றிப் பேசுங்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: அதேபோல, திருமணம் முடிந்து 90 நாட்களுக்குள் பதிவு செய்ய வேண்டுமென்ற ஒரு கட்டாயம்

2014 ஜூலை 30] [திரு. அ. அஸ்லம் பாஷா]

இருக்கிறது. அதனை ஓராண்டுக் காலமாக நீட்டித்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு வக்ஃபு வாரியம், ஏறத்தாழ 10,000-க்கும் மேற்பட்ட சொத்துகளைப் பராமரிக்கின்ற ஒரு வாரியம். இந்த வாரியத்தில் அனுமதிக்கப்பட்ட பணியாளர்களுடைய எண்ணிக்கை 127. அவர்களுடன் தற்போது வெறும் 55 பணியாளர்கள் மட்டுமே இருக்கிறார்கள். ஏறத்தாழ 85 பணியிடங்கள் பல வருடங்களாக காலியாக இருக்கின்றன. ஒரு வருடத்திற்கு முன்பு அதனை நிரப்ப வேண்டுமென்று நிர்மானம் செய்யப்பட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வக்ஃபு வாரியத்தில் பணியிடங்கள் நிரப்பப்படவில்லையென்று சொன்னார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மிக விரைவிலே அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃபு வாரியத்தினுடைய பெரும்பாலான சொத்துகள் ஆக்கிரமிப்பில் இருக்கின்றன. அந்தச் சொத்துகளை மீட்டெடுப்பதற்கு வருவாய்த் துறை மற்றும் காவல் துறையின் ஒத்துழைப்பு மிகவும் குறைவாக இருக்கின்றது. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எஸ். அப்துல் ரஹீம்] [2014 ஜூலை 30

அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய் அளவிலான வக்ஃபு வாரியத்தின் சொத்துகளை மீட்ட ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அந்தக் கோரிக்கைகளை, மிக விரைவாக மாண்புமிகு புரட்சித் தலைவி தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, என்னிடம் ஆதாரம் காட்டாமல் உங்கள் இஷ்டத்திற்குப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) ஆதாரமில்லாமல் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர், வேறு பாயின்ட்மீது பேசுங்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்யப்படாமலிருக்கிற நாகூர் தர்கா உள்ளிட்ட வக்ஃபுகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் உள்ள வக்ஃபு சொத்துகளை முழுமையாக அளவை செய்து கணக்கிடுவதற்கு, நில அளவை மற்றும் நில வரித் திட்ட ஆணையர் தலைமையில் நடைபெற்றுவரும் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2009-ல் பத்திரப் பதிவுச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் விதி 22ஏ-ன்படி, வக்ஃபு வாரியத்தின் தடையில்லாச் சான்று இல்லாமல் எந்தவொரு சொத்தையும் பதிவு செய்யக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், சில பதிவாளர்கள் இந்த விதிமுறையைப் பின்பற்றுவதில்லை. இந்த விதிமுறையைக் கட்டாயமாக நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வக்ஃபு வாரிய சொத்துகளை சில சார்-பதிவாளர்கள் விதிமுறையைப் பின்பற்றாமல் கிரயம் பண்ணுவதாகக் குறிப்பிட்டார்கள். அப்படி எங்கேயும் நடக்கவில்லை. எங்கேயாவது நடந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். வக்ஃபு வாரியத்தினுடைய சொத்துகள் வக்ஃபு வாரியத்திற்குத்தான் சொந்தம் என்ற அடிப்படையில்தான் பதிவுத் துறைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, குறுக்கீடு இல்லாமல் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரண்மனை குளத்தில் 70 ஏக்கர் நிலம் அப்படித்தான் பட்டா மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றது. உயர் நீதிமன்றம் அது வக்ஃபு வாரியத்திற்கு பட்டா மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று தீர்ப்பளித்தும்கூட, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பட்டா மாற்றம் செய்யப்படவில்லை. உதாரணத்திற்காகத்தான் இதைச் சொல்கிறேன். நிறைய சொத்துகள் இப்படித்தான் பட்டா மாற்றம் செய்யப்படாமல் இருக்கின்றன. வக்ஃபு வாரியச் சொத்துகளை மீட்டெடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பட்டா இடங்களிலே பள்ளிவாசல்களைக் கட்டுவது அரசின் கொள்கையாக இருக்கின்றது. ஆனால், இன்னும் பல மாவட்டங்களிலே பட்டா இடங்களிலே பள்ளி வாசல் கட்டுவதற்கு நிருவாகம் முறையாக அனுமதி கொடுப்பதில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், லால்பேட்டை அருகிலுள்ள குமணாட்சி என்ற பகுதியிலே முஸ்லிம்கள் பள்ளிவாசல் கட்டுவதற்கு முறையாக விண்ணப்பித்தும்கூட இதுவரையில் அனுமதி கொடுக்கப்படவில்லை.

[திரு. அ. அஸ்லம் பாஷா] [2014 ஜூலை 30

அதேபோன்று, வேலூர் மாவட்டம், ஆம்பூர் நகரில், பேபி காலனி என்ற பகுதியில் 300 முஸ்லிம் குடும்பங்கள் வசிக்கின்ற பகுதியில் பட்டா இருந்தும் விண்ணப்பித்தும்கூட, இதுவரையில் அங்கு மஸ்ஜித் கட்டுவதற்கு அனுமதி தரப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேலூர் மாவட்டத்திலே முஸ்லிம்களுக்கு பட்டா இடங்களிலே பள்ளிவாசல் கட்டுவதற்கு அனுமதி வழங்கவில்லையென்று சொன்னார்கள். இதுகுறித்து துறையின் மூலமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, வேறு சப்ஜெக்ட் பற்றி பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள் பேசுகின்றபோது, Nil Return கொடுத்தால் பதிவுச் சான்று இரத்து செய்யப்படுவதாகப் புகார் தெரிவித்தார். Nil return கொடுக்கும் வணிகர்களுக்கு Notice அனுப்பி, சம்பந்தப்பட்ட வணிகரின் பதில் பெறப்பட்டு, வணிகர் குறிப்பிட்ட இடத்தில் வணிகம் மேற்கொள்கிறாரா என்பதை ஆய்வு செய்த பின்னரே, முகவரியில் செயல்படாத வணிகர்களின் பதிவு மட்டுமே இரத்து செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அஸ்லம் பாஷா, நேரம் ஆகிவிட்டது, சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 30]

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கோ அல்லது மசூதியோ, அந்தப் பகுதியில் கட்டப்பட வேண்டுமென்றால், அந்தப் பகுதியிலுள்ள சூழ்நிலைகளை ஆய்ந்து, அறிந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் மட்டத்தில் முடிவு எடுக்கப்படுகின்ற வழிமுறைதான் இப்போது நடைமுறையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அந்த முன்மொழிவுகள் அரசுக்கு வராது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முனைவர் ஜவாஹிருல்லா, உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகிறார். (குறுக்கீடு) முனைவர் ஜவாஹிருல்லா, நேரமில்லை, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர் திரு. அஸ்லம் பாஷா பேசுவார், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அஸ்லம் பாஷா, நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை. இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேசி, இரண்டு அமைச்சர்களின் பதிலுரை இருக்கிறது.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் தயவுசெய்து நான் பேசுவதைப் புரிந்துகொள்ளவேண்டும். சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையில், அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்ற அடிப்படையிலே, எங்களுடைய உணர்வுகளை நாங்கள் இங்கே பதிவு செய்தே ஆகவேண்டும். எனவே, இன்னும் 5 நிமிடங்கள், எங்களுக்குப் பேச வாய்ப்புத் தாருங்கள். இந்த அவையில், முன்னாள் வருவாய்த் துறை அமைச்சராக மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் இருந்தபோது, நாங்கள் இதைப் பதிவு செய்திருக்கிறோம். சர்ச்சுகள் மற்றும் பள்ளிவாசல்கள் கட்டுவதற்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் 15 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். எனவே, சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நேரத்தை வீணாக்காமல் கருத்தை மட்டும் பேசி, சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஜூலை 30

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கைமீது தாம் பேசுவதாகக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு சிறுபான்மையினரைக் காத்கின்ற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த என்னையே அந்தத் துறைக்கு அமைச்சராக்கி, இன்றைக்கு சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் பேசுகின்ற வாய்ப்பை அளித்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அஸ்லம் பாஷா, சிக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முஸ்லிம்களாக மாறிய எஸ்.சி. பிரிவினரைப் பிற்படுத்தப்பட்டவராகக் கருத வேண்டும் என்று T.N.P.S.C-க்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும்கூட, அந்த உத்தரவை இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை. எனவே, அதை நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம் பொதுவாகப் பேசாமல், ** என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலே உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அஸ்லம் பாஷா, நீங்கள் ஆதாரமில்லாமல் அவையில் பேசக்கூடாது. ஆதாரமில்லாமல்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2014 ஜூலை 30] [பேரவைத் தலைவர்]

இம்மாதிரி திடீரென்று பேசக்கூடாது. ஆதாரத்தை என்னிடம் காட்டிவிட்டுத்தான் நீங்கள் பேசவேண்டும். எனவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் வேறு சப்ஜெக்ட் பற்றி பேசுகிறீர்களா இல்லையா? நேரமாகிவிட்டது. நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கவேண்டும்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்பதை அவையில் பதிவு செய்கின்றேன். ஆதாரமில்லாமல் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆதாரத்தை எனக்கு முன்பே காட்டியிருக்கவேண்டும். (குறுக்கீடு) ஆதாரத்தைக் காட்டி, என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் நீங்கள் அவையில் பேசியிருக்கவேண்டும். என்னுடைய அனுமதியில்லாமல் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. அஸ்லம் பாஷா, நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களிலே மக்களுக்கு பயன்படும் வகையிலே, வக்ஃபு வாரியத்தின் சார்பாக ஒரு கல்லூரி இருக்கின்றது. அதேபோல, வட மாவட்டத்து மக்களுக்குப் பயன்படும் வகையிலே, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் சார்பாக, கலை மற்றும் அறிவியல் கல்லூரியை இங்கே தொடங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையிலே, முஸ்லீம் மகளிருக்கென விடுதி கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், வெளிமாவட்டங்களிலே இருந்து இங்கு படிப்பதற்காகவும், பணி புரிவதற்காகவும் சென்னைக்கு வருகிறார்கள். அவர்கள் தங்குவதற்காக, வக்ஃபு வாரியத்தின் சார்பாக விடுதி கட்டிக்கொடுக்குமாறு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இட ஒதுக்கீடு சம்பந்தமாக ஒவ்வொரு முறையும் நான் கோரிக்கை வைக்கின்றபோதும், பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஒரே மாதிரியான பதிலைத்தான் சொல்கின்றார்கள். இதற்கு எப்போது விடிவுகாலம் பிறக்கும் என்பதை மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. அ. அஸ்லம் பாஷா] [2014 ஜூலை 30

அமைச்சர் அவர்களின் வாயிலாகத் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, சிறுபான்மையினர் நடத்தக்கூடிய கல்வி நிலையங்களுக்கு மைனாரிட்டி சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்து பல ஆண்டுகள் ஆகியும் இதுவரையும் அந்தச் சான்றிதழை வழங்காமல் இழுத்தடித்து வருகின்றனர்.

பிற்பகல் 2-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, உரையை முடியுங்கள். இன்றைக்குக் கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுங்கள். நேரமாகிவிட்டது, உரையை முடியுங்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக இரண்டு விஷயங்களை மட்டும் பதிவு செய்துவிட்டு, என் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, உரையை முடியுங்கள். இன்னும் இரண்டு அமைச்சர்களின் பதிலுரை இருக்கின்றது.

திரு. அ. அஸ்லம் பாஷா: இரண்டே இரண்டு கருத்துகளை மட்டும் பதிவு செய்துவிட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழும் ஏழை சிறுபான்மையின மக்களுக்கு 2013-2014 ஆம் ஆண்டில் 88,436 வீடுகள் கட்டித் தரப்படும் என்று செயல்முறை திட்டம் 254 ஆம் பக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், 11,202 வீடுகள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கீடுதான் செய்யப்பட்டுள்ளது. ஏன் இந்த அளவிற்குக் குறைந்த ஒதுக்கீடு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, உரையை முடியுங்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த வேலைவாய்ப்பற்ற சிறுபான்மையின சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு TAMCO மூலம் அளிக்கும் பயிற்சி பற்றிய விவரம் செயல்முறை திட்டம் பக்கம் 255-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், 2012-2013, 2013-2014-ல்,

2014 ஜூலை 30] [திரு. அ. அஸ்லம் பாஷா]

இத்திட்டத்தினால் பலன் பெற்றவர்கள் விவரம் ஏன் தெரிவிக்கப்படவில்லை என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, நீங்கள் உட்காருங்கள். உரையை முடிக்காமல் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். நீங்கள் 15 நிமிடங்களாக பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நேரமாகிவிட்டது. இன்னும் இரண்டு அமைச்சர்களின் பதிலுரை இருக்கிறது. தற்போது மணி என்ன? மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள் பேசி முடித்த பிறகு, இரண்டு அமைச்சர்களின் பதிலுரை இருக்கின்றது. பேசி முடியுங்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆம்பூர் தொகுதியில் சிறுபான்மையினர் மாணவர் விடுதி ஒன்றை அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், ஐந்து நிமிடங்களில் உரையை முடியுங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு திரு. நஞ்சப்பன் அவர்கள், சீட்டு நிறுவனங்கள் பற்றி குறிப்பிட்டு, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்கள். பதிவுத் துறை நிருவகிக்கும் பல்வேறு சட்டங்களில் மைய சீட்டு நிதிச் சட்டம், 1982 மிக முக்கியமான ஒன்றாகும். இச்சட்டத்தின்கீழ் சீட்டு நிறுவனங்கள் பதிவு, கண்காணிப்பு மற்றும் சீட்டு நடுவம் உள்ளடக்கிய செயல்பாடுகளுடன்கூடிய சேவைகளைச் செய்வதன்மூலம், சீட்டு நிறுவனங்கள் முறையாகச் செயல்படவும், பொதுமக்கள் செலுத்தும் நிதிக்கு பாதுகாப்பு அளிக்கவும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மைய சீட்டு நிதிச் சட்டம், பிரிவு 4-ன்கீழ், அனுமதி பெறாமல் சீட்டு நடத்துதல் தண்டனைக்குரிய குற்றமாகும். தமிழகத்தில் 1-4-2014-ல் 2,260 சீட்டு நிறுவனங்களும், அச்சீட்டு நிறுவனங்களால் 55,483 சீட்டுப் பிரிவுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. சீட்டு நிதிச் சட்டத்தின்கீழ், 2013-2014 ஆம் ஆண்டிற்கான வருவாய் 693.23 இலட்சம் ரூபாயாகும்.

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2014 ஜூலை 30

சீட்டு நடுவர்களின் தீர்ப்பாணைகளால் பாதிக்கப்படுவோர் அவ்வழக்கு குறித்து சீட்டு நிதிச் சட்டம், பிரிவு 70-ன்கீழ் அரசிடம் மேல்முறையீடு செய்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது, பொதுமக்களுக்கு விரைவான சேவை கிடைக்கவேண்டி, இப்பிரிவின்கீழ் அரசுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை துறைத் தலைவர் அவர்களுக்கு மாற்றி அளிக்க ஏதுவாக, சட்டப் பிரிவுத் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், எனக்கு கொஞ்சம் ஒத்துழைப்புக்கொடுங்கள். 5 நிமிடங்களில் உரையை முடியுங்கள். குறுக்கிடு இன்னும் இரண்டு அமைச்சர்களின் பதிலுரை இருக்கின்றது. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

•மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், நரிக்குறவர்களுக்கும், நெசவாளர்களுக்கும் பசுமை வீடுகளை வழங்க வேண்டும் என்று கோரியிருந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 10,000 பசுமை வீடுகள் நெசவாளர்களுக்கு கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழும், நரிக்குறவர்கள் அந்தந்தப் பகுதிகளில் வசித்தால், விதிமுறைகளுக்குட்பட்டு, பசுமை வீடுகள் வழங்கப்படும். அதன்படி, காஞ்சிபுரம் மாவட்டம், களக்காட்டூர் ஊராட்சியில் 2011-2012 ஆம் ஆண்டில் 26 நரிக்குறவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

•திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் வணிக வரிகள் மற்றும் முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் அகில இந்திய பார்வர்டு பிளாக்

2014 ஜூலை 30] [திரு. பி.வி. கதிரவன்]

கட்சியின் சார்பில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில், உச்ச நீதிமன்றம் 50 சதவிகிதத்திற்குமேல் இட ஒதுக்கீடு செய்யக்கூடாது என்று உத்தரவிட்ட காலத்தில்கூட, தமிழக மக்கள் தொகை கணக்குகளைப் பார்த்து 69 சதவிகிதம் இட ஒதுக்கீடு வேண்டும் என்று கூறி, தமிழகத்திற்கு இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்த, அதை இன்று வரை செயல்படுத்தி வருகின்ற, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தேனி, திண்டுக்கல், மதுரை மாவட்டங்களில் 285 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளும், 53 விடுதிகளும் இயங்கி வருகின்றன. அதிலே கிட்டத்தட்ட 504 காலிப் பணியிடங்கள் இருக்கின்றன. அதிலே, ஆசிரியரல்லாத 100 அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன. அவற்றை விரைவில் நிரப்பிடவேண்டுமென்ற கோரிக்கை, அந்தப் பகுதி மக்களிடையே நீண்டநாட்களாக இருந்து வருகின்றது. மேலும், காலிப் பணியிடங்களை நிரப்புவதற்காக T.E.T தேர்வுகள் நடத்தப்படுகின்றன. T.E.T தேர்வு-I-ன்மூலம் இடைநிலை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். 97 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருந்துவருகின்றன. அரசாணை எண் 7/99-ன்படி, அந்தச் சமுதாய மக்கள், குறிப்பாக, பிரமலைக் கள்ளர் சமுதாய மக்கள், தொடர்ந்து இடைநிலை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு வருவதை மீண்டும் தொடர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-20

அதேபோல், T.E.T.-2, மற்றும் T.R.B. தேர்வுகளின்மூலம் தேர்வு செய்யப்பட்டு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் அவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், அவர்களுடைய சொந்த மாவட்டத்திற்குச் செல்ல வேண்டுமென்று கேட்டு, உயர் நீதிமன்றத்திற்குச் சென்றதன் அடிப்படையில், அவர்களது சொந்த மாவட்டங்களுக்குச் செல்வதற்கு தமிழக அரசே உத்தரவு போட்டிருக்கிறது. அப்படி மாறுதல் உத்தரவு போடும்போது, பதிலி ஆசிரியர்கள் அந்தப் பதவியில் வந்து சேர்ந்தபின்பு, அவர்களது மாவட்டங்களுக்குச் செல்லலாம் என்று ஆணை

[திரு. பி.வி. கதிரவன்] [2014 ஜூலை 30

போடப்பட்டிருக்கிறது. மாறுதல் உத்தரவு போட்டு இரண்டாண்டுகளாகியும், பணி மாறுதல் பெற்றும் அவர்களால் சொந்த மாவட்டங்களுக்குச் செல்ல முடியவில்லை. அதனால், வெளி மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் தற்போது பணி மாற்றத்திற்காக நீதிமன்றத்தை நாடி, உத்தரவு பெற்று, வேறு மாவட்டங்களுக்குச் செல்கிறார்கள். பதிலி ஆசிரியர் இல்லாத நிலையில் செல்கிறார்கள். அவ்வாறு செல்வதால், அந்தப் பள்ளிகளில் காலிப் பணியிடங்கள் மிக அதிகமாகும். இதை உடனடியாக அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் தேர்வு வாரியத்திலிருந்து தேர்வு பெற்றோர் பட்டியல் வரப்பெற்றவுடன், துறை மாறுதல் ஆணை பெற்ற ஆசிரியர்கள் அனைவரும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளிலிருந்து விடுவிக்கப்படுவர் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு மாவட்டங்களுக்குச் சென்று விடுவதால், காலிப் பணியிடங்கள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்கும் பொருட்டு, T.E.T., T.R.B. தேர்வுகள் எழுதி தேனி, திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களிலிருந்து தேர்வு செய்யப்பட்டவர்களை அந்தந்த மாவட்டங்களிலே உள்ள பள்ளிகளிலேயே பணி அமர்த்தினால் அவர்கள் வேறு மாவட்டங்களுக்குச் செல்ல மாட்டார்கள். எனவே, வருங்காலங்களில் அவர்களை அங்கேயே ஆசிரியர்களாகப், பணியமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் தேர்வு செய்யப்படுபவர்கள், கலந்தாய்வு முறையிலே அவர்களுடைய சொந்த மாவட்டங்களிலேயே பணியமர்த்தப்படுகிறார்கள். கலந்தாய்வின்போது அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த மாவட்டப் பகுதிகளில் அல்லது சொந்த மாவட்டங்களில் காலிப் பணியிடங்கள் இருந்தால், அவர்களுக்கு அந்த வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. காலிப் பணியிடங்கள் இல்லாத நேரங்களில், அவர்களுக்கு வேறு மாவட்டங்களிலோ அல்லது அருகிலிருக்கக்கூடிய ஊர்களிலோ அந்தப் பணி வழங்கப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையில், ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் அவர்களுக்கு பணி உத்தரவை வழங்கவிருக்கின்றார்கள். Counselling நடைபெறும்போது அவர்களுடைய சொந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய காலிப் பணியிடங்கள் குறித்த விவரம் அவர்களுக்கு transparent ஆக காண்பிக்கப்படும். அவர்களுடைய சொந்த ஊர்களிலேயே பணியிடம் காலியாக இருக்குமேயானால், அந்தப் பணியிடங்களை அவர்களை வைத்து நிரப்புவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் கலந்தாய்வு முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் கேட்கக்கூடிய இடங்களில் காலிப் பணியிடங்கள் இருக்குமேயானால், அந்தப் பணியிடங்கள் அவர்களுக்கு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. கள்ளர் சீரமைப்புத் துறையிலே சில விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால், சில விதிமுறைகள் கள்ளர் சீரமைப்புத் துறையில் இல்லாத நேர்வில், பள்ளிக் கல்வித் துறையில் இருக்கின்ற விதிமுறைகளைக் கையாண்டு வருகிறார்கள். அப்படிக் கையாளும்போது, அந்த ஆசிரியர்கள் அவர்களுக்கு சாதகமான சட்டத்தை, விதிமுறைகளை வைத்து நீதிமன்றங்களுக்குச் செல்கிறார்கள். அவ்வாறு நீதிமன்றம் செல்லும்போது, அவர்களால் உடனடியாக தீர்வுகாண முடியவில்லை. அதனால், பள்ளிக் கல்வித்

[திரு. பி.வி. கதிரவன்] [2014 ஜூலை 30

துறைக்கும், கள்ளர் சீரமைப்புத் துறைப் பள்ளிக்கும் ஒரு குழு அமைத்து, சரியான விதிமுறைகளை உருவாக்க வேண்டுமென்று கடந்த நிதி ஆண்டிலேயே சொல்லியிருக்கிறேன். அதனால் பல பிரச்சினைகள் உருவாகின்றன. நீதிமன்றம் செல்வதனால், காலதாமதம் ஏற்படுகிறது. யாருக்கும் பதவி உயர்வும் உரிய நேரத்தில் கிடைப்பதில்லை. அதனால், இதற்கென ஒரு குழு அமைத்து, அதிகாரிகளெல்லாம் ஒன்று சேர்ந்து, சரியான முடிவை, விதிகளைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், சீர்மரபினர் ஒரு காலத்திலே D.N.T.-யாக இருந்தார்கள். அவர்கள் D.N.T.-ஆக இருந்தபோது அவர்களுக்கு நிறைய சலுகைகள் வழங்கப்பட்டன. ஆனால், 1979 ஆம் ஆண்டு அவர்கள் D.N.C. ஆக மாற்றப்பட்டிருக்கிறார்கள். Denotified Tribes என்பது Denotified Communities ஆக மாற்றப்பட்டிருக்கிறது. அதனால் அந்தப் பகுதி மக்களுக்கு, மாணவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை கிடைக்கவில்லை. மாணவர்கள் சேர்க்கையிலே முன்னுரிமை கிடைக்கப்பெறவில்லை. தங்களை மீண்டும் D.N.T.-யாக மாற்ற வேண்டுமென்று மாநாடு நடத்தி, அதில் தீர்மானம் நிறைவேற்றி ஏற்கெனவே அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்திருக்கிறார்கள். அரசு அதை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-25

பள்ளிக் கல்வித் துறையில் நபார்டு வங்கியின்மூலம் பள்ளிக் கட்டடங்கள் மற்றும் அடிப்படை வசதிகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டு, கட்டடங்கள் கட்டப்பட்டுவருகின்றன. ஆனால், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின்கீழ் செயல்பட்டு வருகின்ற கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு நபார்டு வங்கியின்மூலம் இதுவரை நிதி ஒதுக்கப்படவில்லை. வருங்காலத்தில் இந்தப் பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சீர்மரபினர் நல வாரியம் அமைத்திருந்தார்கள். அன்றையதினம் நாங்கள் பல முறை கேட்டோம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அன்றையதினம் ஓர் அறிக்கை விட்டது. கல்வி ரீதியாக, பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக அந்த மக்கள் பின்தங்கியிருக்கிறார்கள். அதனால், அவர்களுக்கு நல வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டோம்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரியத்தைத் திருத்தியமைப்பதற்கு உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று, மிக விரைவிலே சீர்மரபினர் நல வாரியம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் 2008 ஆம் ஆண்டு முதல் இன்று வரை வசூலிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், அந்தக் கட்டணத்தை அரசே வழங்கும் என்று அறிவிக்கப்பட்டும், இதுவரை அந்தப் பணம் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு வழங்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, 6 உதவி தொடக்கக் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்படுவதாக அரசாணை எண் 108, நாள் 9-12-2011 அன்று வெளியிடப்பட்டும், இதுவரையிலும் உதவி தொடக்கக் கல்வி அதிகாரிகள் நியமனம் செய்யப்படவில்லை. விரைவில் அவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அந்தப் பகுதியில் இருக்கின்ற கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் உடனடியாக திறக்கப்பட வேண்டும். ஏற்கெனவே உசிலம்பட்டியில் பெண்கள் கள்ளர் சீரமைப்புப் பள்ளி வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருந்தேன். சீர்மரபினர் நலத் துறையில் அதற்கான இடமும் இருக்கிறது. அதிலே கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[2014 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உசிலம்பட்டியில் பெண்கள் கள்ளர் சீரமைப்புப் பள்ளி வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அது தொடர்பாக கருத்துரு பெறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்று, மிக விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், சிக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. விக்கிரமங்கலத்தில் உள்ள பள்ளியில் 2,000 பேர் படித்து வருகிறார்கள். அதிலே பெண்கள் மட்டும் 900 பேர் படிக்கிறார்கள். அதனால், விக்கிரமங்கலத்திலும், பாப்பாப்பட்டியிலும், திண்டுக்கல் மாவட்டம், அணைப்பட்டியிலும் பெண்களுக்கென்று தனியாக பள்ளி வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கேட்டு வருகிறார்கள். உசிலம்பட்டியில் உள்ள இரண்டு கல்லூரிகளில், பெண்கள் சேர்ந்து படிப்பதற்கான தங்கும் விடுதிகள் இல்லை. இரண்டு கல்லூரிகளிலும் ஆண்களுக்கு நிகராக பெண்களும் படித்து வருகிறார்கள். அதனால், உசிலம்பட்டியில் பெண்களுக்கென கல்லூரி விடுதி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, திண்டுக்கல் மாவட்டம், அணைப்பட்டியிலே 1,600 மாணவ, மாணவியர் படித்துவருகிறார்கள். அவர்கள் தங்கிப் படிப்பதற்கான விடுதிகள் இல்லையென்று அந்தப் பகுதி மக்கள் சொல்கிறார்கள். எனவே, விடுதிகள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இரண்டாவது முறையாக முதல்வராக இருந்தபோது, 'கள்ளர், மறவர் மற்றும் அகமுடையார்' ஆகியோர் 'தேவர் இனத்தவர்' என அறிவிக்கப்பட்டு, அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டது. ஆனால், அந்த உத்தரவு இன்னமும்

2014 ஜூலை 30] [திரு. பி.வி. கதிரவன்]

அமல்படுத்தப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கண்ட 3 பிரிவினரையும் 'தேவர் இனம்' என அறிவித்து, அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், நேரமாகிவிட்டது, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: கடந்த ஆண்டே நான் தெலுங்கு செட்டியார் குறித்து கேட்டிருக்கிறேன். தமிழகத்தில் தெலுங்கு செட்டியார் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் இருப்பவர்கள். அவர்கள் கல்வி ரீதியாக, பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்கள். அவர்கள் அனைவரையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-30

அதேபோன்று, பத்திரப் பதிவுத் துறையில் வழிகாட்டி மதிப்பு என்று இருக்கிறது; சந்தை மதிப்பு என்று இருக்கிறது. பொதுவாக, பத்திரப் பதிவைப் பொறுத்தவரையில், கடந்த ஆண்டைக் காட்டிலும், இப்போது 50 சதவிகிதம் குறைந்திருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. அதே நேரத்தில் அரசுக்கு வருகின்ற வருமானமும் குறைந்திருக்கிறது. பல இடங்களில் அந்த முரண்பாடு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு வருமானம் குறைந்திருக்கிறது; பத்திரப் பதிவுகளின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்றெல்லாம் இல்லை. கடந்த ஆண்டைவிட 8,055 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் உயர்ந்திருக்கிறது. அதேபோன்று, 26 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு, அந்த எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், உரையை முடியுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அதாவது, விற்பனையின் மதிப்பு அதிகமாக இருக்கலாம். ஆனால், பதிவு செய்யப்படுகிற பத்திரங்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; மக்களிடையே பணப் புழக்கம் குறைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறையிலே பதிவு செய்யப்படுகிற ஆவணங்களின் எண்ணிக்கை குறையவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள், உரையை முடியுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. என்னுடைய உசிலம்பட்டி தொகுதியிலே, எங்களுடைய ஊரான விக்கிரமங்கலத்திலே பத்திரப் பதிவு அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேதான் 578 சார்பதிவாளர் அலுவலகங்கள் இருக்கின்றன. மத்தியப் பிரதேசத்தில் 226 சார்பதிவாளர் அலுவலகங்கள்தான் இருக்கின்றன; உத்தரப் பிரதேசத்தில் 355 சார்பதிவாளர் அலுவலகங்கள்தான் இருக்கின்றன; மகாராஷ்டிராவில் 466 சார்பதிவாளர் அலுவலகங்கள்தான் இருக்கின்றன. குறிப்பிட்ட அளவு ஆவணங்கள் பதிவு செய்யப்படாத கட்டத்தில், நிருவாகச் சுமையின் காரணமாக,

2014 ஜூலை 30] [திரு. எம்.சி. சம்பத்]

அந்த இடம் ஏற்புடைய இடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், உரையை முடியுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அது என்னுடைய ஊராக இருப்பதால், அதைக் கோரிக்கையாக வைக்கிறேன். எனவே, அதை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள், உரையை முடியுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். ஆம்னி பேருந்துகள் மற்றும் கூரியர் மூலமாக சரக்குகள் அனுப்பப்படுகின்றன. ஆனால், அந்தச் சரக்குகள் மூலமாக எந்த அளவிற்கு வரி அரசுக்கு வருகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஏனென்றால், அதை வணிக வரித் துறையினர் சரியாக ஆய்வு செய்ய முடிவதில்லை என்ற குறைபாடு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறையில், செயலாக்கப் பிரிவு என்ற ஒரு பிரிவு இருக்கின்றது. அந்தச் செயலாக்கப் பிரிவு ஆம்னி பேருந்துகள்மூலம் கொண்டு செல்லப்படும் எலக்ட்ரிக்கல் போன்ற அனைத்துப் பொருட்களையும் பரிசோதனை செய்து, அதற்குண்டான fine, வரி போன்றவற்றை வசூலிப்பதோடு, அனைத்து ஆவணங்களும் சரிபார்க்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு

[திரு. பி.வி. கதிரவன்] [2014 ஜூலை 30

நன்றி. மேலும், ஆன்-லைன் வர்த்தகம் தற்போது அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.வி. கதிரவன், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது.

திரு. பி.வி. கதிரவன்: ஆன்-லைன் வர்த்தகம் நடைபெறும்போது, வரி ஏய்ப்புக்கு வாய்ப்பு இருக்கிறது. பெரிய நிறுவனங்கள் ஆன்-லைன் வர்த்தகத்திலே ஈடுபடுகின்றன. அதன்மூலமாக அரசுக்கு வரவேண்டிய வருமானம் குறைகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வணிகம் பொதுவாக இணையதளம் மூலமாக இப்போது நடைபெறுவதுடன், இவ்வணிகம் கைபேசி, தொலைக்காட்சி மூலமாகவும் நடைபெறுகிறது. இவ்வணிகத்தில் பொருட்களின் விலை சுமார் 20 சதவிகிதம் குறைவு. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால், தற்போது பெருகிவரும் மின் குடிமக்கள் e-Citizens-ஐ குறிவைத்து, புதுப்புது மாடல்கள், பொருட்கள் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டு, மின் வணிகம் மூலமாக விற்பனைக்கு வருகின்றன. குறைந்த காலத்தில் அத்தனை பொருட்களும் விற்பனையாகி விடுகின்றன. இதனால், சிறு மற்றும் நடுத்தர வணிகர்களின் விற்பனை குறைந்து, பாதிப்புக்குள்ளாகின்றனர். பிற இடங்களில் உற்பத்தி செய்து, பிற மாநில நுகர்வோருக்கு விற்கப்பட்டால், மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்படி, உற்பத்தி செய்து அனுப்பிய மாநிலத்தில் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். மின் வணிகத்தில் விற்பனை மற்றும் கொள்முதல் இணையதளத்தின்மூலம் நடைபெறுவதால், பொருட்கள் அனுப்பும் இடம் மற்றும் இதர விவரங்களைக் கண்டுபிடிப்பதற்கு மிகவும் சிரமம் ஏற்படுகின்றது. இணையதளம் நடத்தும் நிறுவனங்களுக்கும் நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. மேலும், மின் வணிகர்களை வரி விதிப்பிற்கு உட்படுத்தும் நோக்கத்தில், VAT சட்டத்தில் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள், உரையை முடியுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. வணிக வரித் துறையில் அதிகாரிகளுக்கு பணிமூப்பு அடிப்படையில் வழங்கப்படுகின்ற பதவி உயர்வில் குளறுபடியிருப்பதாகச் சொல்கிறார்கள். சரியான முறையில், அவர்களுக்குப் பணிமூப்பு அடிப்படையில், பதவி உயர்வு வழங்கப்படுவதில்லை என்ற ஒரு குறைபாடு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது; உரையை முடியுங்கள். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். மணி இப்போதே 2-30 ஆகிவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

பிற்பகல் 2-35

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 150 பேர் ஏற்கெனவே வேலைபார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு இதுவரை பென்ஷன் தரப்படவில்லை. பென்ஷன் வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கதிரவன், போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) நேரம் இல்லை. மணி 2-35 ஆகிவிட்டது. (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. பி.வி. கதிரவன்: எனக்கு இந்த விவாதத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிலே தெளிவைக் காட்டி, அன்பிலே

[திரு. எஸ். அப்துல் ரஹீம்] [2014 ஜூலை 30

ஆழம் காட்டி, நெறியிலே முறையைக் காட்டி, நேர்மையில் விரிவைக் காட்டி, பார்வையில் ஞானம் காட்டி, பண்பினில் ஒழுக்கம் காட்டி, கருத்தினில் கனிவைக் காட்டி, வண்டமிழ்க் குறள் நெறியால் வாழ்வாங்கு வாழும் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) வான் புகழ் வெற்றித் தாயே, மக்களைக் காக்கும் தாயே, இமயமாய் நிமிர்ந்த எங்கள் இந்தியாவின் இரும்புத் தாயே, வஞ்சகரின் இருளருக்க வேலெடுக்கும் தெய்வத் தாயே, அம்மா, நீங்கள் செஞ்சொல் சரமெடுத்தால் செந்தமிழும் வரம் பெறுமாம்; அந்தச் செந்தமிழின் வரம் பெற்ற செங்கோலை வணங்குகிறேன், தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரி என்றால் முல்லையும்; பேகன் என்றால் மயிலும்; குமணன் என்றால் தலையும், அதியமான் நெடுமான் அஞ்சி என்றால் நெல்லியும் நினைவிற்கு வருவதுபோல், மாண்புமிகு அம்மா என்றால் தமிழ்நாடுதான் நினைவிற்கு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழகத்தையே அவருக்குத் தலைக் கிரீடமாய் தந்தார்கள் மக்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி முடிவுகள் வர, வர, தாயின் மாண்புகள் தரணியில் உயர்ந்தன.

மாண்புமிகு அம்மா அவர்கள் தன் கையை உயர்த்தி இரண்டு விரல்களைக் காட்டினால் இமயத்திற்கு அப்பால் உள்ள மக்கள்கூட ஓட்டுப் போடத் தயங்காத கம்பீரம் மிக்கவர் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) கேட்டுப் பெறும் அன்பு சிறந்தது; ஆனால், கேட்காமலேயே கொடுக்கப்படும் அன்பு இன்னும் சாலச் சிறந்தது என்கிறார் ஷேக்ஸ்பியர். அந்த அன்பை மக்களிடம் பெற்ற அன்புக்கரசியே, அம்மா அவர்களே, முழு வெற்றி பெற்ற முத்தமிழ் அரசியே. (மேசையைத் தட்டும் ஒலி)

சாதாரணக் குடும்பத்தில் பிறந்த என்னை ஆவடி நகர்மன்ற உறுப்பினராக்கி, இரண்டு முறை ஆவடி நகராட்சியின் துணைத் தலைவராக்கி, நகர இளைஞரணி செயலாளராக்கி, நகர கழகச் செயலாளராக்கி, முதன் முதலாக ஏற்படுத்தப்பட்ட ஆவடி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்து, ஆவடி சட்டமன்ற உறுப்பினராக்கி, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் தங்களது அமைச்சரவையில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சராக்கி, மானியக் கோரிக்கையின்மீது முதன்முதலாக

2014 ஜூலை 30] [திரு. எஸ். அப்துல் ரஹீம்]

பதிலுரை வழங்கிட அரிய வாய்ப்பு வழங்கிய எங்கள் வாழும் வள்ளல்; (மேசையைத் தட்டும் ஒலி) சிறுபான்மையின மக்களின் பாதுகாவலர், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, எனது பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால், மக்களுக்காக, மக்களுடைய என்பதுதான் உண்மையான மக்களாட்சி என்ற தத்துவத்தின்படி, மக்களுக்கு எண்ணற்ற நன்மைகளை அள்ளித் தந்து, உண்மையான மக்களாட்சி நடத்திவருகின்றார் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினருக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் செய்து வரும் சாதனைகளை வரிசைப்படுத்தினால், இங்கு காகிதத் தட்டுப்பாடே வரும். அந்த அளவிற்கு இங்கு சாதனையோ, சாதனைகள். மக்கள் நலன்களிலிருந்து விலகிப் போன சில விலாங்கு மீன்களைப் பார்த்து விளக்கெண்ணெய்கூட இன்று வெட்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புல்லாங்குழலின் பத்தாவது துளை, தேவராயரின் தெளிந்த அவையில் ஒன்பதாவது அறிஞர், இறைவனை அழைக்கும் ஆறாவது தொழுகை, உலகில் எட்டாவது அதிசயம், மாண்புமிகு அம்மா அவர்கள் தனி ஆள் அல்ல, அவர் ஒரு தமிழின் இயக்கம், தமிழ்நாட்டின் ஒரே இயக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரமலான் மாதத்தில் பள்ளி வாசல்களில் நோன்பு கஞ்சி தயாரிக்க 3,000-க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களுக்கு 4,500 மெட்ரிக் டன் அரிசியை நோன்பு திறக்கும் முன்பாக வழங்கி, முஸ்லிம் மக்களின் இதயத்தில் நீங்காத இடம் பிடித்திருக்கிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக தன் சொந்த செலவில் 'இப்தார்' நோன்பு திறப்பும் செய்து, அந்த மக்களைப் பெருமைப்படுத்தியிருக்கிறார் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும் எத்தனையோ தலைவர்கள் இட ஒதுக்கீட்டிற்காகப் போராடினாலும், அதற்கான சட்டத்தைத்

[திரு. எஸ். அப்துல் ரஹீம்] [2014 ஜூலை 30

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி, அதை அரசமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கச் செய்து, 69% இட ஒதுக்கீட்டினை உறுதி செய்து, சமூக நீதியை நிலைநாட்டிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இட ஒதுக்கீட்டில் உள்ள எந்தவொரு பிரிவினரையும் நீக்கம் செய்யத் தேவையில்லை எனவும், 2011-ல் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஆணை பிறப்பித்து சரித்திரத்தில் நீங்காத இடத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், அதுதான் தமிழகத்தின் வரலாற்றுப் பெட்டகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தாய்க்குத்தான் தன் பிள்ளைகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும். அதுபோல், ஒவ்வொரு துறைக்கும் எந்தெந்த விதத்தில் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தினால் மக்களுக்கு நன்மை பயக்கும் என்பதை உணர்ந்து, தமிழக மக்களுக்குத் தாயாக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் வளர்ச்சிக்கு கடந்த 3 ஆண்டுகளில் 1,944 கோடியும், இந்த நிதி ஆண்டிற்கு ரூ.987 கோடியும், ஆக மொத்தம் ரூ.2,931 கோடி தொகையை ஒதுக்கீடு செய்துள்ள ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கடந்த கால மைனாரிட்டி தி.மு.க.-வின் 5 ஆண்டு கால ஆட்சியில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.2,097 கோடி மட்டும்தான்.

பிற்பகல் 2-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் உதித்ததுதான் விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம். மேல்நிலை வகுப்பில் பயிலும் ஆதி திராவிடர் மாணவிகளுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள்தான் இந்தத் திட்டத்தை முதன்முதலில் 2001 ஆம் ஆண்டு துவக்கி வைத்தார்கள். பின்னர் 2005-2006 ஆம் ஆண்டு முதல் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் மேல்நிலை வகுப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் இவ்விலையில்லா மிதிவண்டிகளை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்கள் 2012 ஆம் ஆண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும்

2014 ஜூலை 30] [திரு. எஸ். அப்துல் ரஹீம்]

மாணவ, மாணவியர்களுக்கும் அதை நீட்டித்து வழங்கி, எல்லா தரப்பு மாணவர்களுக்கும் அதை விரிவுபடுத்தினார்கள்.

இந்தக் கல்வியாண்டில் பள்ளிகள் துவங்கியவுடன் 231 கோடி ரூபாய் செலவில் 6.44 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில், விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் 27-6-2014 அன்று தனது பொற்கரங்களால் துவக்கி வைத்து சாதனை புரிந்துள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு, உடை, உறைவிடம் இவைதான் அனைத்து மக்களின் முக்கிய தேவைகள். எனவே, ஏழையெளிய மாணவியர்களின் கல்வியானது உணவு, உடை, உறைவிடம் இல்லாமல் தடைபடக்கூடாது என்பதற்காக, இத்துறைமூலம் 1,305 விடுதிகள் இப்போது செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்களின் 2001-2006 வரையிலான ஆட்சிக்காலத்தில் 228.43 கோடி ரூபாய் செலவில் 730 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. தற்போது மாண்புமிகு அம்மா அவர்களின் மூன்று ஆண்டுக்கால ஆட்சியில் 217.46 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 218 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட ஆணையிட்டுள்ளார்கள். இதன்மூலம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் மட்டும்தான் 948 விடுதிகளுக்கு சுமார் 445.89 கோடி ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 இல் தொடங்க ஆணையிடப்பட்ட பத்து விடுதிகளுக்குக் கட்டடம் கட்ட இந்த நிதிநிலை அறிக்கையில் 16 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்துள்ளார்கள். இதுபோல் இந்த மூன்று ஆண்டுக்கால ஆட்சியில் புதிதாக 77 விடுதிகள் 16.53 கோடி ரூபாய் செலவில் துவங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எஸ். அப்துல் ரஹீம்] [2014 ஜூலை 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உணவுக் கட்டணத்தை பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு 20-9-2011 முதல் ரூ.450/-லிருந்து ரூ.650/- ஆக உயர்த்தியும், மீண்டும் அதை 1-3-2013 முதல் ரூ.755/- ஆக உயர்த்தியும் வழங்க ஆணையிட்டுள்ளார்கள் அதுபோல கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு 20-9-2011 முதல் ரூ.550/-லிருந்து ரூ.750/- ஆக உயர்த்தியும், மீண்டும் அதை ரூ750/-லிருந்து ரூ875/- ஆக உயர்த்தியும், விடுதி மாணவர்களுக்குத் தரமான உணவு வழங்கிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளில் இரண்டு முறை மாணவர்களுக்கான உணவுக் கட்டணத்தை உயர்த்திய ஒரே முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

விடுதிகளில் இடமின்மை காரணமாக ஏழையெளிய மாணவர்கள் அல்லல்படக்கூடாது என்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் 10 சதவீதம் வரை கூடுதலாக மாணவர்களைச் சேர்த்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்மூலம் ஒரு ஆண்டுக்குக் கூடுதலாக 8,100 மாணவ/மாணவிகள் அரசு விடுதிகளில் தங்கும் வசதியைப் பெறுகிறார்கள். 2014-2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 4.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து பத்து புதிய கல்லூரி விடுதிகளில் கூடுதலாக தங்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் ஆங்கிலப் பேச்சாற்றலை வளர்க்க, சிறப்புப் பயிற்சி அளிக்க ரூ.1 கோடியே 83 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதுபோல் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் பொது அறிவுத்திறன் மேம்பட, பொது அறிவு சம்பந்தமான புத்தகங்கள் ரூ.1 கோடியே 2 இலட்சம் செலவில் வாங்கி வழங்கிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு ரூ.3 கோடியே 71 இலட்சம் செலவில் இரண்டடுக்குக் கட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அனைத்து விடுதிகளிலும் விளையாட்டுப் பொருட்கள்,

2014 ஜூலை 30] [திரு. எஸ். அப்துல் ரஹீம்]

மாவரைக்கும் இயந்திரம், குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரம், இட்லி வேகவைப்பான்கள், தடையின்றி கல்வி பயில இன்வர்ட்டர்கள், சூரிய ஒளிமூலம் நீரைச் சூடுபடுத்தும் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டு முதல் விடுதிகளில் தங்கிப் பயிலும் நான்கு முதல் பத்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு நான்கு இணைச் சீருடைகள் வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மாணவியருக்கு 1.39 கோடி ரூபாய் செலவில் சுகாதார குட்டை தகரிகள் வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் விடுதிகளில் நிரப்பப்படாமல் இருந்த 1,155 காலிப் பணியிடங்களுக்கு நியமன ஆணையினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்கள் பண்டிகை நாட்களில் மகிழ்ச்சியடைய அவர்களின் சிறப்பு உணவிற்காக வழங்கப்பட்டு வந்த உணவுக்குரிய கட்டணம் ரூ.3/- என்பது மிகவும் குறைவு என்பதைத் தாயுள்ளத்துடன் உணர்ந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அதை ரூ.40/- ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளி விடுதிகளுக்கு ரூ.2/- என்பதை ரூ.20/- ஆகவும் 9-7-2013 முதல் உயர்த்தி வழங்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 2-45

விடுதி மாணவ, மாணவியரிடையே கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில், 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தை 2004-2005-ல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துவக்கி வைத்தார்கள். முதல் பரிசுத் தொகையான ரூ.3,000/-ஐ ரூ.10,000/- ஆகவும், இரண்டாம் பரிசுத் தொகையான ரூ.2,000/-ஐ ரூ.7,000/- ஆகவும், மூன்றாம் பரிசை ரூ.1,000/--லிருந்து ரூ.5,000/- ஆகவும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர்கள் ஓய்வு பெறும் காலத்தை ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்படுவதுபோல், கல்வி

[திரு. எஸ். அப்துல் ரஹீம்] [2014 ஜூலை 30

ஆண்டு இறுதிவரை பணி நீட்டிப்பு வழங்கி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். 2014 ஆம் ஆண்டு முதல், விடுதிகளில் மாணவ, மாணவியரின் வருகையைப் பதிவு செய்வதற்கு Bio Metric முறையை ரூ.25.66 இலட்சம் செலவில் செயல்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் பிரமலைக் கள்ளர்களின் கல்விக்காக கள்ளர் சீரமைப்புத் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் 289 பள்ளிகளின் கட்டடங்களில் உள்ள பழுதை நீக்கிடவும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகையான ரூபாய் 4 இலட்சம் என்பதை ரூபாய் ஒரு கோடியாக உயர்த்தி வழங்கிய ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் ரூபாய் 3 கோடி வழங்கப்பட்டுள்ளது. கடந்த மைனாரிட்டி தி.மு.க.-வின் 5 ஆண்டுகால ஆட்சியில் ரூபாய் 20 இலட்சம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும், பொதுப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 15 கள்ளர் சீரமைப்பு ஆரம்பப் பள்ளிகளில் புதிதாக ஆங்கில வழி மழலையர் வகுப்புகள் (LKG) 2013-2014 ஆம் கல்வியாண்டு முதல் துவங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் மூன்றாண்டு ஆட்சிக் காலத்தில் 4 கள்ளர் சீரமைப்பு தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 13 கள்ளர் சீரமைப்பு நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 8 கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் ஆக மொத்தம் 25 அரசு கள்ளர் பள்ளிகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன. ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க.-வின் 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் 19 அரசு கள்ளர் பள்ளிகள் மட்டும் தான் தரமுயர்த்தப்பட்டுள்ளன. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் 274 இலட்சம் செலவில் ஆய்வக உபகரணங்கள் மற்றும் குடிநீர் வசதி

2014 ஜூலை 30] [திரு. எஸ். அப்துல் ரஹீம்]

வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும், 52 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூபாய் 26 இலட்சம் செலவில் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் 10.40 இலட்சம் செலவில் நூலகப் புத்தகங்கள் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். 15 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.75.75 இலட்சம் செலவில் Smart Class Room என்ற புதிய கல்வி முறையைக் கற்பிக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு புதிதாக 51 தமிழாசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மையான எண்ணிக்கையில் வசித்துவரும் உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி மற்றும் செக்காணூரணி பகுதிகளில் உயர் கல்வி வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வகையில் 3 தொழில்நுட்ப பாலிடெக்னிக் கல்லூரிகளும், தேனியில் புதிதாக நர்சிங் கல்லூரி ஒன்றும் ரூ.51.64 கோடி செலவில் அமைத்திட ஆணையிட்டு, இதே கல்வியாண்டில் அதற்கான கட்டடம் கட்டவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதற்கு பெற்றோரின் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூபாய் ஒரு இலட்சமாக இருந்ததை 2013-2014 ஆம் ஆண்டு முதல் ரூபாய் இரண்டு இலட்சமாக உயர்த்தி, மாண்புமிகு அம்மா அவர்கள் பெருமளவு ஏழை, எளிய மக்கள் கல்வி பெற்றிட வழிவகை செய்துள்ளார்கள் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் மாணவ, மாணவியர் கூடுதலாகப் பயன் அடைந்துள்ளனர். மேலும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இரண்டாவது முறை மாற்றம் மற்றும் மாலை நேர வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மேற்படிப்பு திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகை கடந்த 30 ஆண்டுகாலமாக உயர்த்தப்படாமல் இருந்தது. இதை 2012-2013 ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள்

[திரு. எஸ். அப்துல் ரஹீம்] [2014 ஜூலை 30

ஆணையிட்டுள்ளார்கள். மேலும், கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் ரூ.411.56 கோடி கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. 5 ஆண்டுகால ஆட்சியில் ரூ.45.678 கோடி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் தற்போது மாதந்தோறும் வழங்கப்படும் உண்டி, உறையுள் கட்டணம் 8 ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் இருந்தது. அந்தக் கட்டணத்தைத் தொழிற்கல்வி படிப்புகளுக்கு ரூ.75/- முதல் ரூ.140/- என்று இருந்ததை ரூ.350/- ஆகவும், ஐ.டி.ஐ., பட்டயப் படிப்பு மற்றும் முதுநிலை படிப்புகளுக்கு ரூ.75/- முதல் ரூ.90/- என்று இருந்ததை ரூ.225/- ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) 11, 12 ஆம் வகுப்பு மற்றும் இளங்கலை படிப்புகளுக்கு ரூ.75/- முதல் ரூ.80/- என்று இருந்ததை ரூ.175/- ஆகவும் உயர்த்தி 2013-2014 ஆம் ஆண்டு முதல் வழங்க மாண்புமிகு அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக ரூ.9.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-50

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியரின் கல்வியினை ஊக்கப்படுத்தும் வகையில், +2 தேர்வில் மாநில அளவில் உயர் மதிப்பெண்கள் பெறும் 500 மாணவர்கள் மற்றும் 500 மாணவியருக்கு அவர்கள் பட்டப் படிப்பு முடிக்கும் வரை ஆண்டுதோறும் ரூ.3,000/- பரிசுத் தொகை வழங்கும் புதிய திட்டம் 2012-2013 ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் உயர் மதிப்பெண்கள் பெற்று தொழில்நுட்பம் மற்றும் தொழில் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா விருதுத் தொகைகளை ரூ.5,000/-லிருந்து ரூ.10,000/- ஆக 2012-2013 ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கியுள்ளார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத்

2014 ஜூலை 30] [திரு. எஸ். அப்துல் ரஹீம்]

தட்டும் ஒலி) இதன்மூலம் 2013-2014 ஆம் ஆண்டில் சுமார் 2,020 மாணவ, மாணவிகளுக்கு ரூ.2.02 கோடி பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை உரிய காலத்தில் சென்றடையும் வகையில், அவர்களுக்கான கல்வி உதவித் தொகையை அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக மின்னணுப் பரிமாற்றம்மூலம் வழங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்மூலம் 2013-2014 ஆம் ஆண்டில் சுமார் ரூ.120.04 கோடி மதிப்பில் கல்வி உதவித் தொகை 4,52,128 மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் இம்மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பைச் சார்ந்த இளைஞர்களுக்குப் பல்வேறு திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டங்களின்கீழ் பயிற்சிக் கட்டணம் முழுவதையும் அரசே செலுத்தி, பயிற்சி அளித்து வருகிறது. இத்திட்டத்தில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களின் போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாதந்தோறும் பயிற்சிக் கால உதவித் தொகையாக ரூ.400/- வழங்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் 2013-2014 ஆம் ஆண்டில் ரூ.382.15 இலட்சம் செலவில் 39 வகையான திறன் வளர்ப்புப் பயிற்சிகளில் சுமார் 2,477 இளைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்புப் பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில், விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2001-2002 ஆம் ஆண்டு

[திரு. எஸ். அப்துல் ரஹீம்] [2014 ஜூலை 30

அறிமுகப்படுத்தப்பட்டது. 2013-2014 ஆம் ஆண்டில் 2,418 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் ரூ.82.80 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கியும், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மேற்கண்ட வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கும் சிறப்பு வழிகாட்டி நூல்கள் ரூ.16 கோடி செலவில் ஒவ்வோர் ஆண்டும் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தொடங்கப்பட்ட நாள் முதல் இதுவரை 3,55,982 பயனாளிகளுக்கு சுமார் ரூ.360 கோடி அளவில் கடனை வழங்கி சாதனை படைத்த ஒரே முதலமைச்சர் மாண்புமிகு அம்மா மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 2014-2015 ஆம் ஆண்டில் இந்நிறுவனம்மூலம் ரூ.55 கோடி அளவில் பயனாளிகளுக்குக் கடன் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு சொந்த அலுவலகக் கட்டடம் கட்ட எழும்பூரில் 3 ground, 154 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் வழங்கப்படும் எனவும், அதில் ரூ.4 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்படும் எனவும், 2013-ல் விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதல்மைச்சர் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், அந்நிலம் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம்மூலம் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமூக நீதிக்காகப் போராடியவர்களுக்கு தந்தை பெரியார் விருது வழங்கும் திட்டம் 1994 ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஏற்படுத்தப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும்

2014 ஜூலை 30] [திரு. எஸ். அப்துல் ரஹீம்]

விருதும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் மற்றும் ஒரு இலட்சம் பொற்கிழியும் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தில் உள்ள சிறுபான்மையின மக்களின் சமுதாயக் கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அந்த வகையில் கல்வி மேம்பாட்டிற்காக அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில், ஒன்றாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கென பள்ளிப் படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இம்மாநிலத்தில் செவ்வனே செயல்படுத்தி வருகிறார்கள். இதன்மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 11,93,180 சிறுபான்மையின மாணவ, மாணவிகள் சுமார் 254.89 கோடி ரூபாய் அளவில் படிப்பு உதவித் தொகை பெற்றுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உருது மொழியினை முதல் அல்லது இரண்டாவது மொழிப் பாடமாகப் பயின்று, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பிடிக்கும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை முறையே ரூபாய் 3,000/-, ரூபாய் 2,000/- மற்றும் ரூபாய் 1,000/- என இருந்ததை, முறையே ரூபாய் 15,000/-, ரூபாய் 10,000/- மற்றும் ரூபாய் 5,000/- எனவும், 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பிடிக்கும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை, முறையே ரூபாய் 2,000/-, ரூபாய் 1,500/- மற்றும் ரூபாய் 1,000/- என இருந்ததை, முறையே ரூபாய் 10,000/-, ரூபாய் 5,000/- மற்றும் ரூபாய் 3,000/- என உயர்த்தி வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த ஆதரவற்ற, வயதான விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்ட முஸ்லிம் பெண்களுக்கு உதவிடும் வகையில், முஸ்லிம் மகளிர் உதவி

[திரு. எஸ். அப்துல் ரஹீம்] [2014 ஜூலை 30

சங்கங்கள்மூலம் திரட்டப்படும் நன்கொடை நிதி ஆதாரத்திற்கு இணையாக ஏற்கெனவே 1:1 என்ற விகிதாச்சாரத்தில் ஆண்டொன்றுக்கு ரூபாய் 10 இலட்சம் வரை வழங்கப்பட்டு வந்த அரசின் இணை மானியத் தொகையினை 2012-2013 ஆம் ஆண்டு முதல் இரு மடங்காக உயர்த்தி 1:2 என்ற விகிதாச்சாரத்தில், ஆண்டொன்றுக்கு ரூபாய் 20 இலட்சம் வரை வழங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் இந்த ஆண்டுக்கு மட்டும் ரூபாய் 1.62 கோடி அரசின் இணை மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்லாமிய மக்களின் ஹஜ் புனிதப் பயணத்திற்கு அரசு உதவி செய்வதைப் போன்று, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிறிஸ்துவப் பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனிதப் பயணம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் 2011-2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களால் துவங்கப்பட்டு, ஆண்டிற்கு 500 பயனாளிகளுக்கு தலா ரூபாய் 20,000/- வீதம் ரூபாய் 1 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 891 கிறிஸ்தவர்கள் இப்புனிதப் பயணம் மேற்கொண்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டும் புனிதப் பயணம் மேற்கொள்ள விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு 6-7-2014 இல் நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இப்புனிதப் பயணம் செப்டம்பர் 2014 முதல் நவம்பர் 2014 வரை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், புத்த மதத்தினர், சீக்கியர்கள் மற்றும் பார்சியர்கள் ஆகிய சிறுபான்மையின மக்கள் மேம்பாடு அடைவதற்காக தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தனி நபர் கடன், சுய உதவிக் குழுக்களுக்கு சிறு வணிகக் கடன், கறவை மாடுகள், ஆட்டோ வாங்குவதற்கு கடன் மற்றும் கல்விக் கடன் போன்றவற்றிற்கு மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

2014 ஜூலை 30] [திரு. எஸ். அப்துல் ரஹீம்]

தமிழ்நாடு சிறுபான்மையினர், பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலம், கறவை மாடுகள், ஆட்டோ வாங்குதல் போன்ற தனி நபர் கடன்கள் ஆண்டுக்கு 6 விழுக்காடு வட்டி விகிதத்திலும், சுய உதவிக் குழுக்களுக்கு சிறு வணிகக் கடன் 4 விழுக்காடு வட்டி விகிதத்திலும், கல்விக் கடன் 3 விழுக்காடு வட்டி விகிதத்திலும் வழங்கப்படுகின்றன. 2013-2014 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின்மூலம் 10 கோடி அளவில் கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர், கடந்த மூன்று ஆண்டுகளில் 400 கோடி ரூபாய் பெறுமானமுள்ள வக்ஃபு வாரியச் சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் வக்ஃபு வாரியத்தின் வருமானம் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால மைனாரிட்டி திமுக ஆட்சிக் காலத்தில் ஓய்வு பெற்ற வக்ஃபு வாரியப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குவதற்குக்கூட பணம் இல்லாமல் இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு அவர்களுக்கு ஓய்வூதியப் பயன்களை வழங்க வக்ஃபு வாரியத்திற்கு ரூபாய் 3 கோடி ஒதுக்கீடு செய்து, அவர்களின் கண்ணீரைத் துடைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், வக்ஃபு வாரியத்திற்கு வழங்கப்பட்டு வந்த நிருவாக மானியத்தை ரூபாய் 45 இலட்சத்திலிருந்து ரூபாய் 1 கோடியாக உயர்த்தி வழங்கவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிவாசல்கள், தர்காக்கள் போன்ற வக்ஃபு நிறுவனங்களின் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக புதியதாக வக்ஃபு நிறுவன மேம்பாட்டு நிதி ஒன்றை ஏற்படுத்தி, அதற்காக ரூபாய் 3 கோடி நிதியையும் ஒதுக்கித் தந்துள்ளார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், பள்ளிவாசல்கள் மற்றும் தர்காக்களைப் பெரிய அளவில் புனரமைக்கும்பொருட்டு பெரு மராமத்து மானியத்திற்கு ஒவ்வோர் ஆண்டும் ரூபாய் 60

[திரு. எஸ். அப்துல் ரஹீம்] [2014 ஜூலை 30

இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இதன்மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் சுமார் 107 வக்ஃபு நிறுவனங்கள் பயனடைந்துள்ளன என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வக்ஃபு வாரியத்தின் வருமானம் சரியாக வசூல் செய்யப்படவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சீரிய முயற்சியால் வக்ஃபு வாரியத்தின் வருமானம் ரூபாய் 4,11,31,579/- என, இரு மடங்கிற்கும் மேலாக உயர்ந்துள்ளது. இந்த நிதியாண்டில் அதனை ரூபாய் 7.62 கோடியாக உயர்த்தவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் காலியாக உள்ள 47 நுழைவுப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், 2014-2015 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வக்ஃபு வாரிய நான்கு மண்டல அலுவலகங்களுக்கு ரூ.21 இலட்சம் செலவில் கட்டடம் கட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-00

உலமா ஓய்வூதியத் திட்டம் 1981-ல் அப்போதைய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் துவங்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் 2005 ஆம் ஆண்டில் உலமா ஓய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.750/- ஆக உயர்த்தினார்கள். தற்போது, மாண்புமிகு அம்மா அவர்கள் கூடுதலாக 200 உலமாக்களுக்கு ஓய்வூதியம் அனுமதித்து, உலமா ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கையை 2,400-லிருந்து 2,600 ஆகவும் உயர்த்தியுள்ளார்கள். மேலும், ஓய்வூதியத்தை ரூ.750/-லிருந்து ரூ.1,000/- ஆகவும் உயர்த்தி ஆணையிட்டு, சிறுபான்மையின மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்குகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2014 ஜூலை 30] [திரு. எஸ். அப்துல் ரஹீம்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்களுக்கு அனைத்து வசதிகளையும் தன் நேரடிக் கவனிப்பில் சிறப்பாகச் செய்து கொடுத்து, ஹஜ் நிருவாக மானியத்தை 2012-ல் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாகவும், 2013-ல் ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாகவும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

வருடா வருடம் புனிதப் பயணம் மேற்கொள்ளும் ஹஜ் பயணிகளின் எண்ணிக்கையை உயர்த்தச் செய்தவர் உன்னதத் தாய் எங்கள் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். இதன்படி, 2013 ஆம் ஆண்டில் சுமார் 3,694 நபர்கள் ஹஜ் பயணம் மேற்கொண்டார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ள தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 2,772 இடங்களை மேலும் அதிகரித்துத் தரக் கோரி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் 26-7-2014 அன்று கடிதம் எழுதியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஹஜ் பயணிகளுக்கு சேவை செய்ய 300 ஹஜ் பயணிகளுக்கு ஒருவர் வீதம் 12 நபர்கள் அரசின் செலவில் அனுப்பி வைக்கப்படுகிறார்கள். இதற்காக இந்த ஆண்டு ரூ.10.29 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்ற வள்ளுவரின் குறளுக்கிணங்க, ஏழையெளிய மக்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி, அவற்றைச் செயல்படுத்தி, தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்கச்செய்து கொண்டிருக்கிறார்கள் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் இல்லாமை என்பது நீங்கவேண்டும் என்ற இலட்சியத்தோடு, தமிழ்நாட்டு மக்கள் எதற்காகவும் யாரிடமும் கையேந்தக்கூடாது என்ற உயரிய நோக்கத்தோடு, இன்று தமிழகமே

[திரு. எஸ். அப்துல் ரஹீம்] [2014 ஜூலை 30

தன் குடும்பம், தமிழ்நாட்டு மக்களே தன் பிள்ளைகள், தமிழக மக்களின் நலனே தன் நலன் என வாழ்ந்துவரும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழக மக்களின் நலனுக்காகச் செயல்படுத்திய திட்டங்களின் பயனாக "மக்கள் அம்மா பக்கம், அம்மா மக்கள் பக்கம்" என்பதைக் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 37 நாடாளுமன்ற உறுப்பினர்களை வெற்றிபெறச் செய்து நிரூபித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சாதனைகளையெல்லாம் கண்டு பொறுக்காதவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியைப் பார்த்து பாப்கார்ன் தயாரிக்கும் மெஷினில் பாப்கார்ன் குதிக்கின்ற மாதிரி குதித்துக்கொண்டிருக்கிறார்கள். குற்றம் சொல்லிக் கொண்டிருப்பதே இவர்களுக்குக் குலத்தொழிலாக இருக்கிறது; என்ன செய்ய? நுரையீரலைக் கழற்றி வைத்துவிட்டுக் காற்று வாங்கக் கடற்கரைக்குப் போகும் இந்த மனிதர்களைப் பார்த்தால் சிரிப்புதான் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக மக்களுக்கு இதுபோன்ற பல்வேறு நலத் திட்டங்களை வாரி, வாரி வழங்கி வருகிறார்கள். தமிழ்ச் சமுதாயம் உயர, பல்வேறு நன்மைகளை தமிழக மக்களுக்கு அளித்திட, எல்லாம் வல்ல இறைவனை வேண்டி, பல்லாண்டு வாழ்ந்து, அம்மா நீடித்த புகழோடு வாழ்க, வாழ்க என்று வாழ்த்தி, வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிடுகிறேன்:

1. விடுதி காப்பாளர்/காப்பாளினிகளுக்கு பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள அதிகாரம் வழங்குதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்காகச் செயல்பட்டுவரும் 1,305 விடுதிகளில் அவசரப் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள விடுதி காப்பாளர்/காப்பாளினிகளுக்கு அதிகாரம் வழங்கி, ஓர் விடுதிக்கு ஓராண்டிற்கு

2014 ஜூலை 30] [திரு. எஸ். அப்துல் ரஹீம்]

ரூ.15,000/- வீதம் மொத்தம் 1 கோடியே 95 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. புதிதாக தொழிற்கல்லூரி விடுதிகள் துவங்குதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தொழிற்கல்வி (Professional Course) பயிலும் மாணவ, மாணவியரின் நலனுக்காக மாநகரங்கள் மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் 5 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள், 3 மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள், 1 சீர்மரபினர் நல விடுதி மற்றும் 1 சிறுபான்மையினர் நல விடுதி என மொத்தம் 10 புதிய தொழிற் கல்லூரி விடுதிகள் 1,000 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில், 2 கோடியே 81 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் துவங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-05

3. மாணவர்களை 100 விழுக்காடு தேர்ச்சி பெறச் செய்யும் கள்ளர் சீரமைப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கு பரிசுத் தொகை வழங்குதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இயங்கிவரும் 54 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு பாடப் பிரிவிலும் மாணவ, மாணவியரை 100 விழுக்காடு தேர்ச்சி பெறச் செய்யும் முதுகலைப் பட்டதாரி மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ.5,000/- பரிசுத் தொகையாக மொத்தம் 10 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு மானியம் வழங்குதல்

தமிழ்நாடு வக்ஃபு வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டியது தொடர்பாக மத்திய வக்ஃபு கழகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கடன் தொகையான 48 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாயினை மத்திய வக்ஃபு கழகத்திற்கு திருப்பிச் செலுத்திட

[திரு. எஸ். அப்துல் ரஹீம்] [2014 ஜூலை 30

ஏதுவாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, இத்தொகை தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு மானியமாக வழங்கப்படும்.

5. சிறுபான்மையினர் விடுதி மாணவியருக்கு பரிசுகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, சிறுபான்மையின மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயின்று 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் சிறுபான்மையின மாணவியருக்கு முதல் பரிசாக ரூ.10,000/-மும், இரண்டாம் பரிசாக ரூ7,000/-மும் மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.5,000/-மும் என மொத்தம் 44 ஆயிரம் ரூபாய் செலவில் பரிசுகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. விடுதிகளில் பணிபுரியும் சமையலர்/உதவி சமையலர்களுக்கு பணியிடைப் பயிற்சி வழங்குதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்காகச் செயல்பட்டுவரும் விடுதிகளில் பணிபுரியும் 1,000 சமையலர்/உதவி சமையலர்களுக்கு ரூபாய் 80 இலட்சம் செலவில் பணியிடைப் பயிற்சி வழங்கப்படும்.

7. கல்வி உதவித் தொகை திட்டங்களுக்கான பணியிடங்கள் மறு சீரமைப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித் தொகை திட்டங்களுக்கு தற்போது ஆண்டிற்கு நான்கு மாத காலங்களுக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள பருவ கால பணியிடங்களான 32 வட்டாட்சியர், 32 உதவியாளர் மற்றும் 32 தட்டச்சர் பணியிடங்களுக்குப் பதிலாக ஒரு மாவட்டத்திற்கு ஓர் உதவியாளர் பணியிடம் வீதம் 32 உதவியாளர் பணியிடங்களும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல

2014 ஜூலை 30] [திரு. எஸ். அப்துல் ரஹீம்]

இயக்ககங்களுக்கு தலா ஒரு கணினி பகுப்பாய்வாளர் பணியிடம் வீதம் இரு கணினி பகுப்பாய்வாளர் பணியிடங்களும் (Computer Programmer) என மொத்தம் 34 முறையான பணியிடங்கள் கூடுதல் செலவினம் இல்லாமல் ஏற்படுத்தப்படும்.

8. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு கணினிகள் வழங்குதல்

மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் நலனுக்காக 289 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் புதிதாக தரம் உயர்த்தப்பட்ட 8 கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ஒரு பள்ளிக்கு 5 கணினிகள் மற்றும் உபகரணங்கள் வீதம் 40 கணினிகள் மற்றும் உபகரணங்கள் 22 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்திற்கு ஜீப்பு வழங்குதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்திற்கு ஓட்டுநர் பணியிடத்துடன் ஒரு ஜீப்பு (Jeep) 9 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துகளை எடுத்துரைத்தார்கள். அதற்கு வேண்டிய விளக்கங்களை அளித்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைகள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலைப் பெற்று, உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள

[திரு. எஸ். அப்துல் ரஹீம்] [2014 ஜூலை 30

வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் தங்கள் வாயிலாகக் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மானியக் கோரிக்கைக்கு பதிலை அளிக்கின்ற அரிய வாய்ப்பை வழங்கிய எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என்னுடைய கோடானு கோடி நன்றிகளைக் கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்மையின் உறைவிடம், ததும்பாத நிறைகுடம், வீரத் திருமகளின் விழியசைவில் கோடித் தொண்டர்களின் கொடி அசைவில் வெற்றிப் பூக்களை விளைவிக்கும் பூஞ்சோலை தமிழ்நாடு என்பதை பாராளுமன்ற வெற்றி, பார் முழுவதும் பறைசாற்றுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 'உனக்கு நீயே ஒளி' என்றார் புத்தர், 'தாயே! நீங்கள்தான் எங்களுக்கு ஒளி' என்று பாராளுமன்றத் தேர்தலில் பாசத்தோடு ஓட்டளித்தனர் தமிழக மக்கள். மக்கள் நலன் காக்க, அரசியல் களம் புகுந்து, அயராத உழைப்பால், விடா முயற்சியால், ஆயிரமாயிரம் தடைக் கற்களைத் தாண்டி, வஞ்சகர்களின் சூழ்ச்சிகளை வீழ்த்தி, எதிர்த்து நின்ற எதிரிகளின் திட்டங்களைத் தவிடு பொடியாக்கி, எங்கும் வெற்றி! எதிலும் வெற்றி! என வெற்றிமேல் வெற்றி வாகை சூடி (மேசையைத் தட்டும் ஒலி) கோடானு கோடி மக்களுக்கு இன்முகம் காட்டி, பல்லாயிரம் திட்டங்கள்மூலம், பலகோடி சேவைகள் புரிந்து, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற மகத்தான வாழ்வியல் தத்துவத்தை இந்த உலகிற்குத் தெரிவித்து, நல்லாட்சி புரியும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்ந்த இலட்சியத்தோடும், தெளிந்த சிந்தனையோடும், தொலைநோக்குப் பார்வையோடும், மக்களின் பேராதரவோடும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, இந்தியத் திருநாட்டின் மூன்றாவது தனிப் பெரும் கட்சியாக உயர்த்திக் காட்டியவர் என்று இந்திய நாடே புகழ்ந்து பேசிக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

2014 ஜூலை 30] [திரு. எம்.சி. சம்பத்]

பிற்பகல் 3-10

சட்டையில்லா சங்கரன், வேட்டியில்லா வேலன், சோப்பில்லா சொக்கி, புடவையில்லா பொம்மி, செருப்பில்லா சிங்காரம் என யாரும் இருக்கக்கூடாது என்றார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா. (மேசையைத் தட்டும் ஒலி) விண்முட்டும் புகழ் பெற்ற மண்ணாளும் மகராசி ஆட்சியில் அதற்கும் மேலே சென்று, மிக்ஸியில்லா மீனாட்சி, மின் விசிறியில்லா காமாட்சி, கிரைண்டர் இல்லா காசாம்பூ, மடிக்கணினி இல்லா விசாலாட்சி என யாரும் இல்லை என்ற நிலை நோக்கி நடக்கிறது நமது தமிழகம். (மேசையைத் தட்டும் ஒலி)

வறண்ட காவேரியை மீண்டும் அகண்ட காவேரியாக்கிட்ட அன்னையே, (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறுக்கு வந்திட்ட தொல்லையை இல்லையென்று ஆக்கிய சரித்திரமே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டுக்கென தொலைநோக்குத் திட்டம் தந்திட்ட பொருளாதார ஞானியே, (மேசையைத் தட்டும் ஒலி) கதியென்று கைதொழுதால் கணப்பொழுதில் கலி தீர்க்கும் கருணையே, வெற்றிகளின் பிறப்பே, விவேகத்தின் சிறப்பே, நீங்கள் எங்களுக்கோ தங்கம், எதிரிகளுக்கோ சிங்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ் வளர்த்தேன், தமிழ் வளர்த்தேன் என்று தமிழின் பெயரால் தன் குடும்பத்தை மட்டுமே வளர்த்துக் கொண்டு, தமிழ்நாட்டின் வளர்ச்சி கண்டு பொறுக்க மனமில்லாமல், கண்களை மூடிக்கொண்டு, கனவில் புலம்பிக் கொண்டிருந்த திருவாளர் சட்டமன்ற உறுப்பினரின் மைனாரிட்டி தி.மு.க.வை பூஜ்ஜியமாக்கி, இந்த ராஜ்ஜியத்தை ஆண்டு கொண்டிருக்கும் உலகம் போற்றும் உன்னதத் தாய் எங்கள் தாய் தமிழ்த் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்து, பாரம்பரியப் பெருமையும், பண்பாட்டுச் சிறப்பும் மிக்க இப்பேரவையில் வணிக வரிகள், முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு மானியக் கோரிக்கைகள் தொடர்பான என் பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தின் மொத்த வருவாயில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்கினை வணிக வரித் துறை ஈட்டித் தருகிறது. வரி விதிப்பு என்பதும் வரி

[திரு. எம்.சி. சம்பத்] [2014 ஜூலை 30

வசூல் என்பதும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றதாகும். திடமான வரி வசூலுக்கு திறன்மிக்க ஆளுமை மிக, மிக அவசியமானது ஆகும். இந்த அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான வழிகாட்டுதலின்படி, வரி விதிப்பு, தணிக்கை, மேல்முறையீடு மற்றும் செயலாக்கம் என்ற நான்கு முக்கிய பிரிவுகள்மூலம் வணிக வரித் துறை நிருவாகப் பணிகளை மிகத் திறம்பட செயலாற்றி வருகிறது. இதன்காரணமாக, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அதாவது, 2010-2011 ஆம் ஆண்டில் ரூபாய் 31,117/- கோடியாக இருந்த வரி வருவாய் மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், ஆண்டுக்கு ஆண்டு படிப்படியாக உயர்ந்து, 2013-2014 ஆம் ஆண்டில் ரூபாய் 56,852/- கோடியாக உயர்ந்துள்ளது என்பதை இம்மாமன்றத்தில் மிக்க பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், இந்தியத் துணைக் கண்டத்திற்கே கலங்கரை விளக்கமாகத் திகழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலினால் வணிக வரித் துறையின் வளர்ச்சி 18.93 விழுக்காடு அதிகரித்துள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கைகளின் காரணமாகவும், வரி ஏய்ப்பினைத் தடுத்து செயல்பாடுகளைச் செம்மைப்படுத்தியதன் வாயிலாகவும் துறையின் மொத்த வரி வருவாய் இந்த அளவுக்கு அதிகமாக உயர்ந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோல நடப்பாண்டில் வரி வருவாய் இலக்கான ரூபாய் 68,724 கோடியையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி நிச்சயமாக எட்ட முடியும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் முன்னோட்டமாக முதல் காலாண்டிலேயே ரூபாய் 13,475 கோடி வரி வருவாய் வரப்பெற்றுள்ளது என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வரி வருவாய் அதிகமானது மட்டுமல்லாமல், துறையின் நிருவாகத்திற்கான செலவும் வெகுவாகக் குறைந்து, கடந்த ஆண்டில் மொத்தமாக ஈட்டிய வருவாயில் 0.3 சதவிகிதம் மட்டுமே நிருவாகச் செலவு என்பதை மகிழ்ச்சியோடு இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

2014 ஜூலை 30] [திரு. எம்.சி. சம்பத்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நல்ல நல்ல நிலம் பார்த்து நாமும் விதை விதைக்கணும், நாட்டு மக்கள் மனங்களிலே நாணயத்தை வளர்க்கணும்' என்று டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு படத்தில் பாடுவார். வியாபாரத்தில் நாணயம் என்பது மிகவும் அவசியம். வியாபாரிகளின் வாக்கினிலே நாணயம் இருந்தால்தான் அவர்களது கல்லாப்பெட்டியில் நாணயம் தாராளமாய் நிரம்பும். அப்படி நாணயத்தை தங்களது உயிரென மதித்து வியாபாரம் செய்து வரும் வணிகர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி, ஆண்டுதோறும் மாநிலம் முழுவதுமுள்ள வணிகர் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

பிற்பகல் 3-15

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறும் இக்கூட்டங்களில் விவாதிக்கப்படும் கருத்துகள், வணிகர்களின் கோரிக்கைகள் மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையில் வரிக் குறைப்பு மற்றும் வரி விலக்கு அளிக்கப்படுவதுடன், 2006 ஆம் ஆண்டின் மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் அவ்வப்போது திருத்தங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி வணிகர்களின் நலனைக் கருத்தில்கொண்டு கோட்டங்கள்தோறும் வணிகர்களுக்கு விழிப்புணர்வு முகாம்கள் இணை ஆணையர்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் வணிகருக்கு வரிக் கணிப்பு ஆணையைக் கட்டாயம் பிறப்பிக்க வேண்டும் என்ற நடைமுறையைக் கைவிட வேண்டுமென்று வணிகர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் கோரிக்கை வைத்தனர். இக்கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வரி செலுத்தியதற்கான தகுந்த ஆதாரங்கள் மற்றும் தேவையான ஆவணங்களுடன் உரிய படிவத்தில் நமூனாக்கள் வணிகரால் சமர்ப்பிக்கப்பட்டால் அதைத் தொடர்ந்து வரும் ஆண்டில் அக்டோபர் 31 ஆம் தேதி அன்று அவர் வரிக் கணிப்பு

[திரு. எம்.சி. சம்பத்] [2014 ஜூலை 30

செய்யப்பட்டதாகக் கருதப்படுவார் என அறிவித்து, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் வரிக் கணிப்பு ஆணை கட்டாயம் பிறப்பிக்க வேண்டுமென்ற நடைமுறையைக் கைவிட ஆணையிட்டார்கள். அதன்படி, இந்தப் புதிய நடைமுறை 19-6-2013 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட வரி விதிப்பு வரம்பினைக் கடந்திடலாம் என எதிர்பார்த்து, வரி வசூலிக்கப்பட்டு, அவ்வரம்பினைக் கடக்காமல் இருக்கும் பதிவு பெற்ற சிறு வணிகர்களுக்கு உள்ளீட்டு வரி வரவு (Input Tax Credit) கிடைத்திடும் வசதி மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி 1-4-2012 முதல் செய்து தரப்பட்டுள்ளது என்பதை இந்தப் பேரவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இணக்க வரி செலுத்தும் முறையில் இருந்த இடர்பாடுகளைக் களையும்நோக்கத்தில், தற்போது 50 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட வணிகருடைய வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகையின்மீது மட்டும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வரி விகிதங்களின்படி வரி செலுத்தினால் போதுமானது என்ற எளிய நடைமுறை, வணிகர்களின் நலன் கருதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 1-4-2012 முதல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், துணை வணிக வரி அலுவலர்களின் (DCTO) வரி விதிப்பு அதிகார வரம்பு, விற்பனைத் தொகை ரூபாய் 75 இலட்சம் வரையில் உயர்த்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய மத்திய அரசின் தவறான கொள்கைகளால் விலைவாசி விஷம்போல் ஏறிக்கொண்டிருந்த நேரத்தில், முந்தைய மத்திய காங்கிரஸ் அரசும் சரி, அதில் அங்கம் வகித்த கருணாநிதி அரசும் சரி அந்த விலைவாசியை இறக்கவோ, குறைக்கவோ எள்ளளவும், எள்முனையளவும் சிந்திக்கவும் இல்லை, செயல்படவும் இல்லை. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விலைவாசி ஏற்றத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற துறைதோறும் பலப் பல திட்டங்களை வகுத்து, செயல்படுத்தி, விலைவாசிக் கொடுமையிலிருந்து தமிழக மக்களைக் காப்பாற்றி வருகிறார்கள்.

2014 ஜூலை 30] [திரு. எம்.சி. சம்பத்]

அந்த வரிசையில், மத்திய அரசு சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை ஏற்றியபோது, அந்த விலை ஏற்றச் சுமை மக்களைத் தாக்காது தடுக்க, சமையல் எரிவாயு சிலிண்டர்மீதான 4 விழுக்காடு வரியை முற்றிலுமாக விலக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள் என்பதை இந்தப் பேரவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் 1.68 கோடி மக்கள் பயனுற வைத்தது. மேலும், மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் பேட்டரியினால் இயங்கும் ஸ்கூட்டருக்கும் முற்றிலுமாக வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுமட்டுமின்றி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, 4-10-2012 முதல் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்திற்கான தொகுப்பு நிதி, ரூபாய் 2 கோடியிலிருந்து ரூபாய் 5 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை இந்தப் பேரவைக்கு மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, சிறந்தமுறையில் வரி வசூல் செய்வதற்காக வணிக வரி ஆணையரின் அலுவலகத்திலும், ஒவ்வொரு செயலாக்கக் கோட்டங்களிலும் வர்த்தகப் புலனாய்வுப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இப்பிரிவு, வணிகர்களின் நடமாக்கள், துறையின் சோதனைச் சாவடிகள், மத்திய, மாநில அரசுகளின் முகமைகள் போன்றவற்றிடமிருந்து பெறப்படும் தகவல்களைக் கூர்ந்தாய்வு செய்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான சில்லறை வியாபாரிகள், சிறு வணிகர் உள்ளனர். இச்சில்லறை வணிகர்கள் தங்கள் சேமிப்பின் மூலமோ அல்லது கடன் வாங்கியோ தங்களது சொந்த முதலீட்டில் வியாபாரம் செய்கின்றனர். சில்லறை வணிகத்தில் அன்னிய நேரடி முதலீட்டை அனுமதிப்பது இவர்கள் வாழ்க்கையை சீர்குலைப்பதாக அமையும் என்பதால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சில்லறை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டை

[திரு. எம்.சி. சம்பத்] [2014 ஜூலை 30

தமிழக அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்று உறுதிபட தெரிவித்தார்கள். அதற்கு மாறாக, நாடாளுமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர்களை, சில்லறை வணிகத்தில், அன்னிய முதலீட்டுக்கு ஆதரவாக வாக்களிக்க வைத்தவர்தான் திரு. கருணாநிதி அவர்கள். 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட சில்லறை வணிகர்களுக்கு துரோகம் இழைத்தவர் திருவாளர் சட்டமன்ற உறுப்பினர். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள், 'சில்லறை வணிகத்தில் நேரடி அன்னிய முதலீடு கூடாது என்றால் கூடாதுதான்' என்று ஆணித்தரமாக அடித்துச் சொன்னதால், முந்தைய மத்திய அரசு தனது நிலையினை மாற்றிக்கொண்டு, சம்பந்தப்பட்ட மாநில அரசின் ஒப்புதலின்றி, மாநிலத்தில் பல்பொருள் சில்லறை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீடு அனுமதிக்கப்படமாட்டாது என பணிந்து தெரிவித்தது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 3-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அளவில் சரக்கு மற்றும் சேவை வரியை அறிமுகப்படுத்துவது குறித்த கருத்துரு, 3-7-2014 அன்று அனைத்து மாநில நிதி அமைச்சர்கள், வணிக வரி அமைச்சர்கள் அடங்கிய அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் (Empowered Committee) கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, அக்கூட்டத்தில் கலந்துகொண்டு, சரக்கு மற்றும் சேவை வரியை அமல்படுத்தும்போது, மாநில அரசுகளுக்கு ஏற்படும் வரி வருவாய் இழப்பினை ஈடு செய்வதற்காக, பொதுவான தன்னாட்சி அதிகாரம் உள்ள அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பல்வேறு ஆலோசனைகள் எடுத்துரைக்கப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பை அமல்படுத்தும்பொருட்டு, 1-4-2007 முதல் மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாகவும், 1-6-2008 முதல் 2 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டதனால், மத்திய அரசு, நமது மாநில அரசுக்கு வழங்க வேண்டிய இழப்பீடான,

2014 ஜூலை 30] [திரு. எம்.சி. சம்பத்]

ரூ.9,735.38 கோடியில், ரூ.2,636.50 கோடி மட்டுமே இதுவரையில் விடுவிக்கப்பட்டுள்ளது. 31-3-2012 வரை நிலுவை இழப்பீடு ரூ7,098.88 கோடி மத்திய அரசிடமிருந்து பெறப்பட வேண்டியுள்ளது. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் 2012-2013 ஆம் ஆண்டில் பெற்ற நிகர வருவாய், முதன்மை மாநிலக் கணக்காயரால் ஒப்புதல் சான்றளிக்கப்பட்ட தொகையின் அடிப்படையில் இழப்பீட்டு கேட்புத் தொகையாக ரூ3,576.58 கோடி என கணக்கிடப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீனமயமாக்கத்தின்மூலம் நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, பதிவு செய்தல், நமூனாக்கள், மாதாந்திர/வருடாந்திரப் படிவங்கள் தாக்கல் செய்தல், ஏற்றுமதியாளர்கள் திருப்புத் தொகை வழங்கக்கோரும் விண்ணப்பங்கள் அளித்தல், படிவங்கள் 'C' மற்றும் 'F' உருவாக்கிக் கொள்ளுதல், இடைவழிச் சீட்டு பெறுதல் மற்றும் வரி செலுத்துதல் போன்ற அனைத்து வசதிகளையும் மின்னணுவழி சேவைகள்மூலம் வணிகர்கள் பெற தற்போது வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதை பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சோதனைச் சாவடிகளில் ஏற்படும் நெரிசலைக் குறைக்கவும், தவறுகள் ஏற்படாவண்ணம் தடுக்கவும், கால விரயம் ஏற்படாமல் தவிர்த்து விரைந்து செல்லவும், வாகனங்கள் விவரங்கள் கம்ப்யூட்டர்மூலம் சரிபார்க்கப்பட்டு சோதனைச் சாவடிகளில் விரைவு வழி அனுமதி முறை சிறப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு கூடுதல் வசதி செய்திடவும், பணி செய்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கவும், சொந்தக் கட்டடங்கள் தேவை என்பதைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, 2011 ஆம் ஆண்டு முதல் 64 வணிக வரி அலுவலகங்களுக்கு ரூ.45.11 கோடி செலவில் சூரிய மின்சக்திக் கூரைகளுடன் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்புதிய கட்டடங்கள் அனைத்தும், பார்வையாளர் பகுதி, போதிய கழிப்பறைகள், சுத்திகரிக்கப்பட்ட

[திரு. எம்.சி. சம்பத்] [2014 ஜூலை 30

குடிநீர், தீயணைப்பு ஏற்பாடுகள், மாற்றுத் திறனாளிகளுக்கான சாய்தளம் மற்றும் கைப்பிடி போன்ற அனைத்து வசதிகளுடன் வடிவமைக்கப்படவுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மாநில வணிக வரித் துறைகளிடையே தகவல் பரிமாற்றம் செய்து கொள்வதற்கு ஏதுவாகவும், மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகப் பரிமாற்றங்களைச் சிறந்த முறையில் கண்காணிப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட மாநில நிதி அமைச்சர்களைக் கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஓர் அமைப்பே வரித் தகவல் பரிமாற்ற அமைப்பாகும். இதன்மூலம் வணிகப் பெருமக்களும், துறை அலுவலர்களும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பெறப்பட்ட சட்டபூர்வ படிவங்கள் பற்றிய விவரங்கள் மற்றும் வணிகர்களின் நிலை பற்றிய விவரங்களை அறிந்துகொள்ள முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 28 சோதனைச் சாவடிகள் மற்றும் 8 சோதனை முனையங்கள் இயங்குவதில் இருந்த இடர்ப்பாடுகளைக் களையவும், சோதனைச் சாவடி மற்றும் சோதனை முனையங்களை நவீனப்படுத்தவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.33.36 கோடி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்தப் பேரவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, சென்னையிலுள்ள நான்கு வணிக வரிக் கோட்டங்களை மறு சீரமைத்து, அவற்றின் பணிகள் சீரமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக எதிர்கால வணிக வளர்ச்சி மற்றும் பதிவு பெற்ற முகவர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, சென்னை வணிக வரிக் கோட்ட எல்லையை மறு சீரமைத்து, 27-3-2014-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்காணும் மறு சீரமைப்பின் காரணமாக, நான்கு சென்னை வணிக வரிக் கோட்டங்களிலும், ஒவ்வொரு கோட்டத்திலும் தோராயமாக 29,000 வரி விதிப்புக்கு உட்படுத்தப்படுவோர் கொண்ட 25 வட்டங்கள் இருக்கும் என்பதை பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

2014 ஜூலை 30] [திரு. எம்.கி. சம்பத்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவார்ந்த ஆலோசனைகளின் படி பொதுமக்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கும் உண்மையாக, வசதியைக் கொடுக்கும் உழைப்பாக, உறுதியைக் கொடுக்கும் திறமையாக, வசந்தத்தைக் கொடுக்கும் வாழ்க்கையாக இருக்கும் பதிவுத் துறையானது 7-11-1864-ல் துவங்கப்பட்டு, இந்த ஆண்டு தனது 150-வது ஆண்டில் அடியெடுத்து வைத்து, 2 கோடி மக்களுக்கு பல வகையான வழிகளில் தனது சேவையைத் தொடர்ந்து செய்து, சிறப்புடன் செயல்பட்டு வருகிறது என்பதை பேரவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவணப் பதிவுகளுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம், இந்து திருமணம், சங்கம், சீட்டு மற்றும் கூட்டு வணிகம் ஆகியவற்றைப் பதிவு செய்தல், வில்லங்கச் சான்று, பிறப்பு மற்றும் இறப்புச் சான்று வழங்குதல் போன்ற சேவைகளின்மூலம் பதிவுத் துறை வருவாய் ஈட்டுகிறது. 2013-2014 ஆம் நிதியாண்டில் 26,53,291 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு, அதன்மூலம் ரூ.8,055.74 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான வருவாய் இலக்கு ரூ.10,145 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கினை அடைவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான வழிகாட்டுதலின்படி சீரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவுத் துறையில் சந்தை மதிப்பு வழிகாட்டி மதிப்புகளை அனுசரித்து, கிரயம் முதலான ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை கணக்கிட்டு வசூலிக்கப்படுகிறது. ரியல் எஸ்டேட் துறையில் ஏற்பட்ட அசாதாரண வளர்ச்சியால், சொத்துகளின் சந்தை மதிப்பு பல மடங்கு உயர்ந்துள்ள நிலையில், 1-8-2007 முதல் பின்பற்றப்பட்டு வந்த வழிகாட்டி மதிப்புகளைத் திருத்தி அமைக்கும் பணி முடிக்கப்பட்டு, புதிய சந்தை மதிப்பு வழிகாட்டி 1-4-2012 முதல் தமிழகம் முழுவதும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. தமிழகத்தின் சுமார் 1.85 இலட்சம் தெருக்களுக்கும், 3.97 கோடி சர்வே எண்களுக்கும் சந்தை மதிப்பு வழிகாட்டி, பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பதிவுத் துறையின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. புதிய சந்தை மதிப்பு வழிகாட்டியினை

[திரு. எம்.சி. சம்பத்] [2014 ஜூலை 30

நடைமுறைப்படுத்தும்போது, சொத்துகளுக்கு முரண்பாடான மற்றும் பொருத்தமற்ற மதிப்புகள் நிர்ணயிக்கப்பட்டிருப்பது கண்டறியப்படின், அவற்றைக் களைந்து, உரிய பொருத்தமான மதிப்புகள் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் ஆளுமையில் முதன்மை மாநிலமாக விளங்கும் தமிழ்நாட்டில் மேலும் ஒரு மைல் கல்லாக அலுவலகங்களில் தரகர்களின் நடமாட்டத்தினைத் தடுத்திடவும், மோசடி பதிவு மற்றும் ஆள்மாறாட்டத்தினைத் தடுத்திடவும் அனைத்து 578 சார் பதிவாளர் அலுவலகங்களிலும் புகைப்படக் கருவிகள் (IP camera) நிறுவிடவும், சார் பதிவாளர் அலுவலகங்களில் அளிக்கப்படும் சேவைகளை, 9 மண்டலம் மற்றும் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகங்களிலிருந்தும் தொலைக் கண்காணிப்பு செய்திடும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2012-2013 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்காக முதலீட்டுச் செலவினமாக ரூபாய் 3.47 கோடியும் மற்றும் தொடர் செலவினமாக ஆண்டொன்றுக்கு ரூபாய் 9.31 கோடியும் வழங்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, 6-11-2013 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை பேரவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவுத் துறையில் பொதுமக்களுக்கு எளிய மற்றும் தங்குதடையற்ற சேவைகளை அளித்திடும் நோக்கத்தில், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, பதிவுத் துறையின் செயல்பாட்டை மேம்படுத்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்காக ரூபாய் 117.34 கோடி வழங்கப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் இலவசமாக தங்களுடைய சொத்துகளின்மீது 1-1-1987 முதல் இன்றுவரை வில்லங்கம் உள்ளதா என்பதை அறிந்துகொள்ளும் வசதியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 11-6-2014 அன்று துவக்கி வைத்தார்கள். இதன்மூலம் 28-7-2014 வரை சுமார் 7

2014 ஜூலை 30] [திரு. எம்.சி. சம்பத்]

இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர் என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வசதியினைச் செயல்படுத்திட மையக் கணினிகள், உரிய மென்பொருள் கொள்முதல் போன்றவற்றிற்காக ரூ.58.33 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவணப் பதிவு மற்றும் திருமணப் பதிவுகளுக்கு முகூர்த்த தினங்களில், தூற்றுக்கணக்கான பொதுமக்கள் சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு வருகை புரிகின்றார்கள். இதனால் ஏற்படும் கூட்ட நெரிசலைக் குறைக்கவும், வீண் காத்திருப்பைத் தவிர்க்கவும் பொதுமக்கள் இணைய வழியாக தங்களுக்குத் தேவையான தேதி மற்றும் நேரத்தினை, ஒரு மாதத்திற்கு முன்பாகவே முன்பதிவு செய்ய இணைய வழி முன்பதிவு நேர ஒதுக்கீட்டு வசதி (e-Visit) திட்டமானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 6-11-2013 அன்று துவக்கி வைக்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவுத் துறை, மையச் சீட்டு நிதிச் சட்டம், 1982, இந்தியக் கூட்டு வணிகச் சட்டம் மற்றும் தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டம், 1975 போன்ற சட்டங்களைக் கையாள்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டம், 1975-ன்கீழ் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு அவற்றின் செயல்பாடுகள், மாவட்டப் பதிவாளரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. செயல்படாத சங்கங்களின்மீது நடவடிக்கை தொடர சங்கப் பதிவுச் சட்டம், பிரிவு 44-ன்கீழ் பதிவாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. சங்கங்கள் கோர்வை அறிக்கை தாக்கல் செய்வதில் காலம் கடத்தினால், சங்கங்கள்மீது நடவடிக்கை எடுக்க மாவட்டப் பதிவாளர் மற்றும் பதிவுத் துறைத் தலைவர் அவர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்காக, சட்டப் பிரிவு 49-க்கு 1-7-2013 அன்று சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவுத் துறையில் தலைமை அலுவலகம் உட்பட 635 அலுவலகங்கள் இயங்கி

[திரு. எம்.சி. சம்பத்] [2014 ஜூலை 30

வருகின்றன. அவற்றில் 9 துணை பதிவுத் துறைத் தலைவர் அலுவலகங்களும், 50 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களும், 578 சார் பதிவாளர் அலுவலகங்களும் அரசு மற்றும் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றில் தனியார் கட்டடங்களில் 2 துணை பதிவுத் துறைத் தலைவர் அலுவலகங்களும், 30 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களும், 226 சார் பதிவாளர் அலுவலகங்களும் இயங்கி வந்தன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைப்படி, இந்த அரசு பதவியேற்ற பின், 135 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும், 40 சார் பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 21 ஒருங்கிணைந்த வளாகங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டிக்கொள்வதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ரூ.104.9 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றில் 38 சார் பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எஞ்சியுள்ள அலுவலகங்களில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் உண்மை நகல்களின் பதிவேடுகள் நிரந்தரமாக பதிவறைகளில் 1864 ஆம் ஆண்டு முதல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தீ விபத்திலிருந்து, பதிவேடுகளைப் பாதுகாக்க மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், தீயணைப்பு சாதனங்கள் வாங்க ரூ.4.78 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களும் கணினிமயமாக்கப்பட்டுள்ள நிலையில், அனைத்து சேவைகளும் கம்ப்யூட்டர் மூலம் பொது மக்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. மின் தடை ஏற்படும் நேரங்களில் பொதுமக்களுக்குத் தொடர்ந்து சேவை செய்வதில்

2014 ஜூலை 30] [திரு. எம்.சி. சம்பத்]

ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்க சார் பதிவாளர் அலுவலகங்களுக்குத் தடையில்லாமல் மின்சாரம் வழங்க ஏதுவாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 317 அலுவலகங்களுக்கு ரூ.9.73 கோடிக்கு மின்னாக்கிகள் வாங்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதமுள்ள 261 அலுவலகங்களுக்கும் மின்னாக்கிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவுத் துறையில் உள்ள தற்காலிகப் பணியிடங்கள் நிரந்தரம் செய்யப்படும் என 6-5-2013 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. இத்துறையில் மொத்தமுள்ள 1,836 தற்காலிகப் பணியிடங்களில் 1970 முதல் 43 ஆண்டுகளாக, தற்காலிகமாக இருந்து வந்த 1,741 பணியிடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிரந்தரம் செய்ய ஆணை வெளியிட்டுள்ளார்கள் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் முத்திரைத் தீர்வை விதித்தல் தொடர்பாக, இந்திய முத்திரைச் சட்டம், 1899 பின்பற்றப்படுகிறது. இந்திய அரசியல் சாசனத்தின் ஏழாவது அட்டவணையின் பொதுப் பட்டியலில் உள்ள இச்சட்டம் தொடர்பாக மாநில அரசால் கொண்டு வரப்படும் திருத்தங்களுக்கு மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறவேண்டியுள்ளது. மாநிலத்தால் கொண்டு வரப்படும் சட்டத் திருத்தங்களை விரைவாக அமலாக்கம் செய்திட ஏதுவாக மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, கேரளா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இயற்றப்பட்டுள்ளதுபோல், தமிழ்நாட்டிற்கென தனி முத்திரைச் சட்டம் இயற்றப்பட கருத்துரு பதிவுத் துறைத் தலைவரிடமிருந்து பெறப்பட்டு, தமிழ்நாட்டுக்கான தனி முத்திரைச் சட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 7-5-2013 அன்று இயற்றப்பட்டு மேதகு குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எம்.கி. சம்பத்] [2014 ஜூலை 30

பிற்பகல் 3-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடித்தட்டு ஏழை மக்கள், தங்கள் வாழ்நாள் கனவாக, தங்களது சக்திக்கு உட்பட்டு, வீடோ, நிலமோ வாங்கும்போது ரூ.5,000/- வரையில் மதிப்புடைய சொத்து தொடர்பான கிரய ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் தள்ளுபடி மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவினால் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 5-7-2012 இல் இந்த உச்சவரம்பை ரூ.25,000/- என உயர்த்தி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவு பட்டா மாற்றம் செய்ய, ஆவணப் பதிவின்போது பெறப்படும் பட்டா மாற்றம் குறித்த மனுக்களை ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைதோறும் சார் பதிவாளர் அலுவலகப் பணியாளர்கள்மூலம் சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்து, துணை வட்டாட்சியரிடம் ஒப்புதல் பெற வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு பட்டா மாற்ற மனுவுடன் முன் பதிவு ஆவண நகல், வில்லங்கச் சான்று, சிட்டா மற்றும் தொடர்புடைய ஆவணங்களுடன், சொத்தினை விற்றவர் மற்றும் வாங்கியவர்களின் தொலைபேசி எண்களை எளிதில் தொடர்புகொள்ளும் வண்ணம் ஆவணப் பதிவின்போதே பெற்றனுப்ப அனைத்துப் பதிவு அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலி ஆவணப் பதிவு மற்றும் ஆள் மாறாட்டம்மூலம் நில அபகரிப்பைத் தடுத்திடும் நோக்கத்தில், இவை தொடர்பான புகார்கள் குறித்து உரிய விசாரணை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும், ஆவணச் சொத்தின் மீதான உரிமையை உறுதி செய்ய முன் பதிவு அசல் ஆவணங்கள், பட்டா, இதர வருவாய்த் துறை ஆவணங்களைப் பரிசீலித்த பின்னரே, ஆவணப் பதிவு மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் பதிவு அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

போலி ஆவணப் பதிவைத் தடுத்திட, அனைத்து அலுவலகங்களிலும் ஆவணப் பதிவின்போது புகைப்படக் கருவி

2014 ஜூலை 30] [திரு. எம்.கி. சம்பத்]

(Web Camera) மூலம் புகைப்படம் எடுத்தல் மற்றும் மின்னணு ரேகைப் பதிவு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, அனைத்து அலுவலகங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், ஒவ்வொரு அலுவலகத்திலும் I.P. Camera பொருத்தப்பட்டு, சார் பதிவாளர் அலுவலக நடவடிக்கைகள் அனைத்தும் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மணம் வீசும் மலர்களின் மகரந்த சேர்க்கைக்கு உறுதுணையாய் நின்று மலரைச் சிதைக்காமல் தேன் எடுத்து மக்களுக்குக் கொடுக்கும் தேனீயைப்போல; வணிகர்களை வதைக்காமல் வரி வருவாயைப் பெருக்கி; (மேசையைத் தட்டும் ஒலி) பழமையையும், புதுமையையும் ஆவணப்படுத்தி, போலியைத் தடுத்திட கணினிமயமாக்கி, தனி மனித உரிமைகளைப் பதிவுத் துறையால் பாதுகாத்து, விதி 110-ன்கீழ் பல்வேறு நலத் திட்ட உதவிகளை மக்களுக்கு வாரி வாரி வழங்கி; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் நல்லாட்சி செய்துவரும் அன்பின் உருவம்; கற்பகத் தரு, கருணைக் கடல், தமிழகமே எனது குடும்பம், தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள், தமிழக மக்களின் நலனே என் நலன் என்று வாழ்பவர்தான் நம் பொன்மனத் தாய். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் உயிர் எழுத்தில் 'அ' எடுத்து; மெய் எழுத்தில் 'ம்' எடுத்து; உயிர்மெய் எழுத்தில் 'மா' எடுத்து அழகுத் தமிழில் தமிழகமே உங்களை 'அம்மா' என்றழைக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) என்றுமே மக்களின் பக்கம் அம்மா; அதனால் இன்றும், என்றும் அம்மாவின் பக்கமே மக்கள் என்று கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி மலர்களை மீண்டும் ஒரு முறை காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கை தொடர்பான பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட துறையின் முதன்மைச் செயலாளர், வணிக வரி ஆணையர், பதிவுத் துறைத் தலைவர் மற்றும் துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியோடு அறிவிப்புகளை வெளியிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எம்.சி. சம்பத்] [2014 ஜூலை 30

வணிக வரித் துறை

1. சென்னையில் உள்ள வணிக வரி கோட்டங்கள் மறு சீரமைக்கப்பட்டதைத் தொடர்ந்து பிற வணிக வரி கோட்டங்களையும் மறு சீரமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 2013-2014 இல் சென்னை மண்டலத்தில் உள்ள நான்கு வணிக வரி கோட்டங்களின் எல்லைகள் மறு சீரமைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, பிற மண்டலங்களில் உள்ள வணிக வரி கோட்டங்களுக்குள்ளாகவே, வணிக வரி மாவட்டங்களுக்கு இடையேயான பணிப் பகிர்மானம் ஒரே சீராக இருக்கும்பொருட்டு, பணியாளர்கள் எண்ணிக்கை மற்றும் வேலைப் பளுவின் அடிப்படையில், மாவட்டங்கள் மற்றும் வணிக வரி சரகங்களின் எல்லை மறு சீரமைக்கப்படும்.

2. திருச்சிராப்பள்ளியிலுள்ள வணிக வரி பயிற்சி நிலையத்திற்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி., ரூ.250 இலட்சம் செலவில், திருச்சியில் வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலைய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, கடந்த 11-6-2014 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது. இப்பயிற்சி நிலையத்திற்குக் கூடுதல் வசதிகளை ஏற்படுத்த ரூ.25.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

பிற்பகல் 3-40

3. சென்னை தலைமைப் பயிற்சி நிலையம் மற்றும் மண்டல பயிற்சி மையங்களை மேம்படுத்துதல்

சென்னை தலைமைப் பயிற்சி நிலையம் மற்றும் மண்டல பயிற்சி மையங்களில் அலுவலர்களுக்குத் துறை சார்ந்த சட்டப் பிரிவுகள் மற்றும் விதிகள் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் பணியாளர்களிடம் மென்பொருள் பயன்பாட்டுத் திறன் மற்றும் தலைமைப் பண்பு ஆகியவற்றை மேம்படுத்தவும் பயிற்சி அளிப்பது அவசியமாகும். இதற்காக,

2014 ஜூலை 30] [திரு. எம்.சி. சம்பத்]

இணை ஆணையர்களுக்கு திருச்சிராப்பள்ளியிலுள்ள இந்திய மேலாண்மை நிறுவனத்திலும் (IIM, Tiruchirappalli), பிற அலுவலர்களுக்கு துறையின் பயிற்சி நிலையங்களிலும் பயிற்சி வழங்குவதற்காகத் தேவைப்படும் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் இதர வசதிகள் செய்து தருவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ரூ.154.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேகையைத் தட்டும் ஒலி)

4. சென்னையில் புதிதாக உருவாக்கப்பட்ட 11 வரி விதிப்பு வட்ட அலுவலகங்களுக்கு அறைகலன்கள் (Furniture) கொள்முதல் செய்தல்

சென்னையில் நான்கு கோட்டங்களிலும் உள்ள வரி விதிப்பு வட்டங்கள் மறு சீரமைக்கப்பட்டதன்மூலம் புதிதாக உருவாக்கப்பட்ட 11 புதிய வரி விதிப்பு வட்ட அலுவலகங்களுக்கு அறைகலன்கள் (Furniture) கொள்முதல் செய்வதற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ரூ.35.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. வணிக வரித் துறைக்கு புதிதாக 22 வாகனங்கள் வாங்குதல்

வணிக வரித் துறையின் செயல்பாடுகள் தடையில்லாமல் நடைபெறுவதற்கும், வரி வசூல் சிறப்பாக நடைபெறுவதற்கும், 18 பழைய வாகனங்களுக்குப் பதிலாக ரூ.107 இலட்சம் மதிப்பீட்டில் 18 புதிய வாகனங்களும், சென்னையில் வரி விதிப்பு வட்டங்களை மறு சீரமைத்ததின் காரணமாக, ஏற்கெனவே உள்ள இரண்டு மத்திய செயலாக்கக் குழுக்கள் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இரண்டு செயலாக்கக் குழுக்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ரூ.28 இலட்சம் செலவில், 4 புதிய வாகனங்களும் வாங்கப்படும். அத்துடன் மேற்படி வாகனங்களை இயக்குவதற்கு 4 புதிய ஓட்டுனர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்படும்.

6. வணிகர் குறை தீர்க்கும் நாள் கடைபிடித்தல்

ஒவ்வொரு மாவட்டத்திலும், வருடத்திற்கு இரு முறை வணிகர்களுக்கான விழிப்புணர்வு முகாம்கள் (Awareness Camps)

[திரு. எம்.சி. சம்பத்] [2014 ஜூலை 30

நடத்தப்படுவதன் தொடர்ச்சியாக, வணிகர்களுக்கும், வணிக வரித் துறை அலுவலர்களுக்கும் இடையே உள்ள தொடர்பு மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகியவற்றை மேம்படுத்தும்பொருட்டு, ஒவ்வொரு வணிக வரி மாவட்டத் துணை ஆணையர் மற்றும் கோட்ட இணை ஆணையர் அலுவலகங்களில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, திங்கட்கிழமைதோறும் வணிகர் குறை தீர்க்கும் நாள் கடைபிடிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. வரி ஏய்ப்பு குறித்த தகவல் அளிப்போருக்கு பரிசளிப்புத் தொகையை அதிகப்படுத்துதல்

வணிக வரி ஏய்ப்பைக் கட்டுப்படுத்தி, அரசு வருவாயை அதிகரிக்கும்பொருட்டு, வரி ஏய்ப்பு குறித்த தகவல் அளிப்போருக்கு, பெறப்பட்ட தகவலின் அடிப்படையில், முழுவதுமாக வசூலிக்கப்படும் வரித் தொகையில் 10 சதவிகிதம் அல்லது ரூ.25,000/- என்ற உச்சவரம்பானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பரிசளிப்புத் திட்டத்தின்கீழ் அதிக அளவிலான வரி ஏய்ப்பினைக் கண்டறிந்து வருவாய் ஈட்டித் தரும் துறை அலுவலர்களுக்கும், தனி நபர்களுக்கும் சில குறிப்பிட்ட இனங்களில் தகுந்த சன்மானம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கான திருத்திய விதிமுறைகள் தனியாக வெளியிடப்படும்.

பதிவுத் துறை

1. பொது அதிகார ஆவணங்கள் உரிய முத்திரைத் தீர்வையுடன் உள்ளதா என்பது குறித்து சான்றளிக்கும் அதிகாரத்தை சார் பதிவாளர்களுக்கு வழங்குதல்

ஒரு குறிப்பிட்ட ஆவணம் உரிய முத்திரைத் தீர்வை மதிப்புடன் உள்ளதா என்பதை, 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 31-ன்படி சான்றளிக்கும் அதிகாரம் (Adjudication) தற்போது மாவட்டப் பதிவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால், அயல் நாடுகளில் எழுதிக்கொடுத்து நமது மாநிலத்தில் பெறப்படும் பொது அதிகார ஆவணங்கள் (Instruments of Power of Attorney) போதிய முத்திரைத் தாளில் எழுதப்பட்டுள்ளதா என்பதைக்

2014 ஜூலை 30] [திரு. எம்.கி. சம்பத்]

கண்டறிந்து, சான்று பெறுவதற்காக பொதுமக்கள், மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. இந்நடைமுறையை எளிதாக்கும்வண்ணம், பொது அதிகார ஆவணங்களைப் பொறுத்தவரை, அவை உரிய முத்திரைத் தீர்வை மதிப்புடன் உள்ளதா என்பதைக் கண்டறிந்து சான்றளிக்கும் அதிகாரம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, அனைத்து சார் பதிவாளர்களுக்கும் வழங்கப்படும்.

2. நீதிசார முத்திரைத் தாள்களுக்குத் திருப்புத் தொகை வழங்கும் அதிகாரத்தை மாவட்டப் பதிவாளர்களுக்கு வழங்குதல்

1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரை சட்டப் பிரிவுகள் 52, 53 மற்றும் 54-ன்கீழ், பிழையாகப் பயன்படுத்தப்பட்ட (misused), கெட்டுப்போன (spoiled) மற்றும் பயனுறாத (not required for use) முத்திரைத் தாள்களுக்கான திருப்புத் தொகை வழங்கும் மாவட்ட ஆட்சியரின் அதிகாரம் அனைத்தும் துணைப் பதிவுத் துறைத் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி துணைப் பதிவுத் துறைத் தலைவர்கள் திருப்புத் தொகை அளிக்கும்போது முத்திரைத் தாள்களின் உண்மைத்தன்மை குறித்து மாவட்டப் பதிவாளர்களிடம் அறிக்கை பெற்றே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதனால், காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, இத்தகைய நேர்வுகளில் விரைவு நடவடிக்கை எடுக்க ஏதுவாகவும், பொது மக்களுக்குப் பயன் தரும் வகையிலும், இந்த அதிகாரம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, அனைத்து மாவட்டப் பதிவாளர்களுக்கும் வழங்கப்படும்.

3. அடமான உரிமை விடுவிப்பு ஆவணங்களுக்கான பதிவுக் கட்டணம் குறைப்பு

அடமான உரிமையை விடுவிக்கப்படுவதாக எழுதிக் கொடுக்கப்படும் ஆவணங்கள் இந்திய முத்திரைச் சட்டம், கூறு 55A-ன்கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வகை ஆவணங்களுக்கு சொத்தின் சந்தை மதிப்பு மீது ஒரு சதவிகிதம் முத்திரைத் தீர்வை, அதிகபட்சமாக ரூ.25,000/- என்ற உச்சவரம்புக்குட்பட்டு வசூலிக்கப்படுகிறது. எனினும், பதிவுக் கட்டணத்திற்கு உச்சவரம்பு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை என்பதால், சொத்தின் சந்தை

[திரு. எம்.சி. சம்பத்] [2014 ஜூலை 30

மதிப்புமீது ஒரு சதவிகிதம் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டியுள்ளது. இந்நிலை முத்திரைத் தீர்வையைவிட அதிக பதிவுக் கட்டணம் வசூலிக்கும் நிலையினை ஏற்படுத்துவதால், பதிவு செய்ய வரும் பொது மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, பதிவுக் கட்டணத்திற்கு ரூ.4,000/- என உச்சவரம்பு நிர்ணயிக்கப்படும் என்பதை பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளை எடுத்துரைத்தார்கள். அவற்றுக்கு வேண்டிய விளக்கங்களை அளித்திருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலைப் பெற்று, அதற்கு உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அன்போடு கேட்டு அமர்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் இருக்கின்ற கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பணியாற்றும் வட மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் பல ஆண்டுகளாக இடமாற்றம் கோரி விண்ணப்பம் கொடுத்து காத்திருக்கிறார்கள். பள்ளியின் தரமும், மாணவர்களின் நலனும் பாதிக்காமல், அவர்களுக்கு இடமாற்றம் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2014 ஜூலை 30] [திரு. சு. குணசேகரன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளில் ஒரு வருடம் என்ற அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது. ஆனால் மறு வருடம், தொடர்ந்து படிப்பதற்கு, காலியாக இருக்கக்கூடிய இடங்களில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி, அவர்களை சேர்க்காத காரணத்தால், அவர்களுடைய படிப்பு தடைபடுகிறது. எனவே, அவர்களை முன்னுரிமை அடிப்படையில் சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், சிவகங்கை மாவட்டத்தில் கிட்டத்தட்ட 150 நரிக்குறவர் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு பசுமை வீடு கட்டும் திட்டத்தில் பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறைகளில் பதிவு செய்யப்பட்டிருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்களுக்கு, அரசுத் துறையால் பணிகளைச் செய்வதற்கு வழங்கப்படும் சிமென்ட், கம்பி, தார் போன்றவற்றுக்கு ஏற்கெனவே VAT வரி செலுத்தப்பட்டிருந்தாலும்கூட, VAT வரிச் சட்டம், 2006-ன்படி exemption அந்தப் பதிவாளர்களுக்கு அரசுத் துறையின்மூலம் வழங்கப்படும்போது, சட்டத்தில் exemption இருக்கும்போது, செஞ்சி வணிக வரி அலுவலகத்தில் மட்டும் ஒப்பந்ததாரர்களுக்கு அரசால், அரசு வேலைக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய பொருட்களுக்கு VAT வரி விதிக்கப்பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்து, அதனை இரத்து செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் இயங்கக்கூடிய

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2014 ஜூலை 30

முஸ்லிம் மகளிர் சங்கம், விதவைகள் உட்பட, ஏழை, எளிய முஸ்லிம் மகளிருக்கு பல்வேறு நலத் திட்டங்களை வழங்கி வருகின்றது. அந்தச் சங்கம் பொது மக்களிடமிருந்து நன்கொடை வசூலிக்கின்றது. ஒவ்வொரு சங்கமும் வசூலிக்கக்கூடிய நன்கொடைக்கு இணையாக இரு மடங்குத் தொகையை அரசு இணை மானியமாக வழங்கி வருகிறது. கடந்த 2013-2014 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருப்பதைப்போன்று, 55.6 இலட்சம் ரூபாய் இணை மானியமாக வழங்கப்பட்டது. ஆனால், நடப்பாண்டிலே அந்த இணை மானியம் 26 இலட்சம் ரூபாயாகக் குறைந்துள்ளது. இதற்குக் காரணம், ஒவ்வொரு சங்கமும் நன்கொடையாளர்களிடம் பெறக்கூடிய தொகையை அரசாங்கத்திடம் ஒப்பளித்தவுடன், உடனடியாக அரசு இணை மானியம் கொடுத்தால், அந்த நன்கொடையாளர்களும் உற்சாகமடைவார்கள், அந்த உதவித் தொகையும் உடனடியாகக் கொடுக்கப்படும். எனவே, எதிர்காலத்தில் அந்த இணை மானியத்தினை ஒவ்வொரு சங்கமும் ஒப்பளித்தவுடனேயே வழங்குவதற்கு அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 10-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 10-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.337,36,26,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

2014 ஜூலை 30]

என்னும் மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பிற்பகல் 3-50

(ஆ) கோரிக்கை எண் 11–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 11-முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.292,82,04,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

[பேரவைத் தலைவர்] [2014 ஜூலை 30

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகின்றது.

(இ) கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.826,67,69,000/-, மூலதனக் கணக்கில் ரூ.160,29,96,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31-7-2014) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-52 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

2014 ஜூலை 30]

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

93. திருச்சிராப்பள்ளி, திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி ஆகிய மாநகராட்சி மன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை நிர்ணயித்தது குறித்தும், 11-6-1996 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில், பாகம் II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட II(2)/MW/1197(f-5)/96 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்தும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 28-6-2011 ஆம் நாளிட்ட 89 ஆம் எண் அரசாணையில் (i) முதல் (vi) வரை வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

94. அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நகராட்சிகளுக்கான சிற்றொகுதிகளுக்கு, தாழ்த்தப்பட்ட பழங்குடியினைச் சார்ந்த நபர்கள், தாழ்த்தப்பட்ட பழங்குடியினைச் சார்ந்த பெண்கள் மற்றும் பெண்களுக்கான இடஒதுக்கீட்டினை நிர்ணயம் செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 15-9-2011 ஆம் நாளிட்ட 141 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

95. விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மாநகராட்சிகளுக்கான மேயர் பதவிகளுக்கு, தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த பெண்கள் மற்றும் பெண்களுக்கான

[2014 ஜூலை 30

இடஒதுக்கீட்டினை நிர்ணயம் செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 16-9-2011 ஆம் நாளிட்ட 142 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு மற்றும் 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

96. (i) 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2012) 25-10-2011 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என்று நிர்ணயம் செய்தது குறித்தும் [1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (d) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. மற்றும் (ii) 2012 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2012) 25-10-2011 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என்று நிர்ணயம் செய்தது குறித்தும் [1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1978) 88(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 27-1-2012 ஆம் நாளிட்ட 11 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்.

97. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் முப்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

2014 ஜூலை 30]

98. 2012-2013 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

99. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

246. மானியக் கோரிக்கை எண் 10-வணிக வரிகள் (வணி கவரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

247. மானியக் கோரிக்கை எண் 11-முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

248. மானியக் கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

249. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

250. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

251. மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2014-2015. (தமிழ்)

[2014 ஜூலை 30

252. கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2014-2015. (தமிழ்)

253. பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2014-2015. (தமிழ்)

254. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

255. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

256. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

257. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

258. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

259. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

2014 ஜூலை 30]

இணைப்பு-I

(557 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015

முன்னுரை

முன்னேற்றப் பாதையில் உள்ள தமிழ்நாடு, பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் மேம்பாட்டுப் பணிகளைச் செயல்படுத்துவதில் ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இத்திட்டங்களில் பல, பிற மாநில அரசுகளாலும், மத்திய அரசாலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. மாநிலத்திற்கு வருவாய் ஈட்டித் தரும் முக்கிய துறைகளில் ஒன்றான வணிக வரித் துறை, தொலைநோக்குத் திட்டத்தை செயல்படுத்துவதற்குத் தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் தனக்குள்ள முக்கிய பொறுப்பினை முழுவதுமாக உணர்ந்துள்ளது. இத்துறை, வணிகத்தைச் சீரமைத்தல் மற்றும் வரி வசூலினைக் கவனிப்பது மட்டுமல்லாமல், வணிகர் நலனில் அக்கறையுடனும், நட்புடனும் செயல்பட்டு வருகிறது.

இந்தியப் பொருளாதாரத்தில் நிலவிய பொதுவான மந்த நிலை மற்றும் மாநிலத்தில் விவசாயம் நலிவடைந்த காலத்திலும், 2013-2014 ஆம் ஆண்டில் வணிக வரித் துறை ரூ.56,852 கோடி மொத்த வரி வருவாயினைத் திரட்டியுள்ளது. இது முந்தைய ஆண்டின் வருவாயைக் காட்டிலும் 1873 விழுக்காடு வளர்ச்சியாகும். வரி நிருவாகம் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டதன் காரணமாக இந்த வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது. வணிக வரித் துறை, மாநில அரசுக்கு அதிக அளவில் நிதி ஆதாரத்தினைத் திரட்டி தருவதோடு, மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பங்கினை ஈட்டித் தருகிறது. 2014-2015 ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீடுகளின்படி, வணிக வரியின் வாயிலாக இந்த ஆண்டு ரூ.68,724 கோடி ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. துறையின் செயல்பாடுகளை செம்மைப்படுத்துதல் மற்றும் வரி ஏய்ப்பினைத் தடுப்பதன்மூலம் நடப்பாண்டின் வருவாய் இலக்கினை எய்த முடியும்.

[2014 ஜூலை 30

இந்தியாவின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், வரி நிருவாகத்தில் தமிழ்நாடு பாரம்பரியமாக அதிகத் திறன் வாய்ந்துள்ளது என்பது மாநில மொத்த உற்பத்தியுடன் (Gross State Domestic Product) ஒப்பிடுகையில் வசூலிக்கப்பட்ட அதிக வரியின்மூலம் பிரதிபலிக்கப்படுகிறது. 2012-2013-ல் மாநில மொத்த உற்பத்தியில் மொத்த வணிக வரி வருவாய் 6.93 விழுக்காடாக இருந்தது. இது, 2013-2014 ஆம் ஆண்டில் 7.02 விழுக்காடாக வளர்ச்சியடைந்துள்ளது.

2. நிருவாக அமைப்பு

வரி விதிப்பு மற்றும் வரி வசூல் செய்தல் என்பது ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றதாகும். திடமான வரி வசூலுக்கு நல்ல மற்றும் திறன் மிக்க ஆளுமையானது அவசியமாகிறது. வணிக வரி ஆணையரை நிருவாகத் தலைமையாகக் கொண்டு மாநிலம் முழுவதும் உள்ள நன்கு இணைக்கப்பட்ட கட்டமைப்புடன்கூடிய சார்நிலை அலுவலகங்களால் இது சாத்தியமாகிறது. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட வணிக வரி ஆணையருக்கு உதவியாக, ஐந்து கூடுதல் ஆணையர்கள் மற்றும் ஓர் இணை ஆணையர் (நிருவாகம்) உள்ளனர். வணிகப் பெருமக்களுடனான தொடர்பினை எளிமையாக்கிடவும், நிருவாகத்தில் திறனை எய்திடவும், இத்துறை பணிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டு, அதன் பல்வேறு பொறுப்புகளை கீழ்க்கண்டவாறு நான்கு வெவ்வேறு பிரிவுகள் மூலம் மேற்கொள்கிறது:

2.1 வரிவிதிப்புப் பிரிவு

மாநிலம் முழுவதும் அமைந்துள்ள 319 வரி விதிப்பு வட்டங்கள் மாநிலத்தின் வரி வசூலிப்புக்கு முதுகெலும்பாகத் திகழ்கின்றன. பதிவுச் சான்று வழங்குதல் முதல் வரி வசூலிப்பு செய்தல் வரையிலான பன்முகச் செயல்களை ஆற்றும் இந்த வரி விதிப்பு வட்டங்களுக்கு, அந்தந்த வட்டத்தின் பரப்பளவு மற்றும் வரிவிதிப்பில் கடினத்தன்மையினைப் பொறுத்து துணை ஆணையர்கள்/உதவி ஆணையர்கள்/வணிக வரி அலுவலர்கள் தலைமை வகிக்கின்றனர். இந்த வரி விதிப்பு வட்டங்களின் செயல்பாடுகள் மாவட்ட/சரக அளவில் உள்ள 40 நிருவாக துணை ஆணையர்கள் மற்றும் கோட்ட அளவில் உள்ள 10 இணை ஆணையர்களின் நேரடிக் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன.

2014 ஜூலை 30]

துறையால் வசூலிக்கப்படும் வரியில் ஏறக்குறைய 60 விழுக்காடு அளவிற்கு வரி செலுத்தும் சென்னை மண்டலத்திலுள்ள 100 அதிக வரி செலுத்தும் வணிகர்களுக்கென சென்னையில் ஒரு அதிக வரி செலுத்துவோருக்கான பிரிவு (Large Tax Payers Unit) உள்ளது. இப்பிரிவு, ஓர் இணை ஆணையரின் கட்டுப்பாட்டின்கீழ் வரிவிதிப்பு மற்றும் பிற சட்டரீதியான பணிகளை மேற்கொள்ள நான்கு துணை ஆணையர்களுடன் இயங்கி வருகிறது.

மாதாந்திர நமூனாக்களைக் கூர்ந்தாய்வு செய்தல் வரி விதிப்பு அலுவலர்களின் முக்கியக் கடமையாகும். மேலும், 2008-2009, 2009-2010, 2010-2011 மற்றும் 2011-2012 ஆகிய வருடங்களுக்கு 5 விழுக்காடு வணிகர்களின் கணக்குகளை விரிவான முறையில் கூர்ந்தாய்வு செய்ய மார்ச், 2014 இல் வரி விதிப்பு அலுவலர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1-4-2014 முதல் தொடங்கப்பட்ட இந்த நடவடிக்கையின்மூலம் இனிவரும் 12 மாதங்களில் வரி வசூல் சிறந்த முறையில் மேம்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2.2 தணிக்கைப் பிரிவு

தணிக்கை என்பது எந்த ஒரு வரி நிருவாகத்திற்கும் உள்ளார்ந்த பகுதியாகும். ஏனெனில், சரியான வரித்தொகையைக் கண்டறிதல், வரிவிதிப்பில் ஏற்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டுதல், ஆவணங்களை சரிபார்ப்பதால் வரித் திருப்புகைமூலம் அரசின் நிதி வழிந்தோடாமல் தடுத்தல் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான செயல்களைத் தடுத்து நிறுத்துதல் போன்றவற்றை தணிக்கையின்மூலம் மேற்கொள்ளலாம்.

ஆற்றல் மிக்க தணிக்கைக்கு, ஒரு தெளிவான அணுகுமுறை மட்டுமின்றி, அறிவார்ந்த கண்ணோட்டம், திடமான தொழில்நுட்ப அறிவு, நல்ல முடிவெடுக்கும் திறன் மற்றும் சிறந்த கூர்ந்தாய்வு ஆகியன அவசியமானதாகும். துறையில் செயல்பட்டுவரும் உள் தணிக்கைக் குழுக்களிடம் இத்தகைய திறன்களை வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டம் / சரகத்திலும் ஓர் உதவி ஆணையர் மற்றும் ஒரு வணிக வரி அலுவலர் தலைமையில் ஓர் உள் தணிக்கைக் குழு உள்ளது. இந்த உள் தணிக்கைக் குழுக்கள் இணை ஆணையரால் வகுக்கப்படும் செயல்திட்டத்தின் அடிப்படையில் தொடர்ச்சியான தணிக்கையினை மேற்கொள்கின்றன. அனைத்து இணை ஆணையர்களும் தணிக்கை தொடர்பான காலாண்டு

[2014 ஜூலை 30

முன்னேற்பாடு செயல் திட்டங்கள் வகுத்து செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளனர். தணிக்கையின் தரத்தை உயர்த்துவதனால், வரிவிதிப்பு வட்டங்களில் வரிவிதிப்பு தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் சரியான முறையில் பின்பற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர, வரி விதிப்பு வட்டங்களில் மாநிலக் கணக்காயரால் வருடாந்திரத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மாநிலக் கணக்காயரால் சுட்டிக்காட்டப்படும் முக்கியத்துவம் வாய்ந்த தணிக்கைக் குறிப்புகள் வணிக வரி மற்றும் பதிவுத் துறை முதன்மைச் செயலாளர் அவர்களால் தொடர்ச்சியாக நடத்தப்படும் துறை அளவிலான தணிக்கைக் குழுக் கூட்டங்களில் விவாதிக்கப்படுகின்றன. இக்கூட்டங்களில், வணிக வரி ஆணையர் மற்றும் மாநில கணக்காயர் அலுவலகத்தின் உயர் அலுவலர்கள் கலந்துகொள்கின்றனர்.

மாநிலக் கணக்காயர் மற்றும் உள் தணிக்கைக் குழுவின் தணிக்கைக் குறிப்புகளின்மீது இறுதி முடிவெடுத்து வரி வசூலை மேம்படுத்த ஒரு சிறப்பு முயற்சி, ஏப்ரல் 2014 இல் தொடங்கப்பட்டுள்ளது.

2.3 மேல்முறையீட்டுப் பிரிவு

வரி விதிப்பு அலுவலரின் ஆணைக்கு எதிரான முதல் மேல்முறையீடு, அதிகார வரம்பிற்குட்பட்ட மேல்முறையீட்டு துணை ஆணையர் / இணை ஆணையரிடம் உள்ளது. மாநிலத்தில் 20 மேல்முறையீட்டு துணை ஆணையர்களும், 2 மேல்முறையீட்டு இணை ஆணையர்களும் விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் கட்டுப்பாட்டில் உள்ளனர். மேல்முறையீட்டு அதிகார அமைப்புகளிடம் துறையின் வழக்குகளை முன்வைத்திடும் பொருட்டு, உதவி ஆணையர் பணி நிலையில் துறைப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுகின்றனர். முதல் முறையீட்டு அதிகார அமைப்பினால், அதாவது, மேல்முறையீட்டு துணை ஆணையர் / இணை ஆணையரால் பிறப்பிக்கப்படும் ஆணைக்கு எதிராக விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் இரண்டாம் மேல்முறையீடு செய்யலாம்.

தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு சென்னையிலும், கூடுதல் அமர்வுகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரிலும்

2014 ஜூலை 30]

அமைந்துள்ளன. மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு, மாவட்ட நீதிபதி நிலையில் தலைவராகக் கொண்டுள்ளது. இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள் பணி / வருமான வரித் துறை / மத்திய கலால் துறை அல்லது சுங்கத் துறை அல்லது இரயில்வே கணக்குகள் துறை அல்லது பாதுகாப்புக் கணக்குகள் துறை அல்லது இந்திய பட்டயக் கணக்கர்கள் நிறுவனம் அல்லது இந்திய விலை மதிப்பீட்டு கணக்கர்கள் நிறுவனத்தின் உறுப்பினர் யாரேனும் ஒருவர் இரண்டாவது உறுப்பினராகவும் மற்றும் கூடுதல் ஆணையர் பணி நிலையில் உள்ள துறை அலுவலர் ஒருவர் துறை உறுப்பினராகவும் இத்தீர்ப்பாயத்தில் நியமிக்கப்படுகின்றனர்.

கூடுதல் அமர்வுகள், சார்நிலை நீதிபதி நிலையில் நீதித் துறை உறுப்பினர் ஒருவர் தலைமையிலும், இணை ஆணையர் பணி நிலையில் துறை சார்பாக கூடுதல் உறுப்பினர் ஒருவரைக் கொண்டும் அமைக்கப்படுகிறது. வழக்குகளில் துறையின் வாதத்தினை முன்வைத்திடும் பொருட்டு இணை ஆணையர் பணி நிலையில் ஒரு மாநிலப் பிரதிநிதியும், துணை ஆணையர் பணி நிலையில் ஒரு கூடுதல் மாநிலப் பிரதிநிதியும், முறையே முதன்மை அமர்வு மற்றும் கூடுதல் அமர்வுகளில் வாதிடுவர்.

வரி வழக்குகள் தொடர்பாக, துறையின் சார்பில் ஓர் அரசு சிறப்பு வழக்கறிஞர் உயர் நீதிமன்றத்திலும், தமிழ்நாடு பதிவு வழக்கறிஞர் ஒருவர் உச்ச நீதிமன்றத்திலும் வாதிடுவர்.

2.4 செயலாக்கப் பிரிவு

செயலாக்கப் பிரிவு மாநிலம் முழுவதும் எட்டு கோட்டங்களையும், சென்னையில் மாநிலங்களுக்கிடையேயான ஒரு புலனாய்வுக் குழுவையும் கொண்டுள்ளது. இந்த செயலாக்கப் பிரிவுகள் மற்றும் மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுக் குழுவும் இணை ஆணையர் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. போக்குவரத்து வாகனங்களில் சோதனை மற்றும் வணிக இடங்களில் ஆய்வு / தணிக்கை மேற்கொண்டு, வரி ஏய்ப்பினைக் கட்டுப்படுத்துதல், செயலாக்கப் பிரிவின் முதன்மைப் பணியாகும். ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநில எல்லைகளில் அமைந்துள்ள 28 சோதனைச் சாவடிகள், மாநிலத்திற்குள் முக்கியமான இடங்களில் அமைந்துள்ள 13 சோதனை முனையங்கள் மற்றும் 61 சுற்றும் படைகள்மூலம் மாநிலங்களுக்கிடையேயான சரக்குப் போக்குவரத்து

[2014 ஜூலை 30

கண்காணிக்கப்படுகிறது. சோதனைச் சாவடிகளும், சோதனை முனையங்களும் நிலையான இடத்தில் அமைந்துள்ளபோது சுற்றும் படைகள் (Roving squads) நடமாட்டத்தில் இருந்து வரும்.

இது தவிர, வணிகம் நடைபெறும் இடங்களில் வரி ஏய்ப்பினைக் கண்டறிவதற்கு தணிக்கைகள் மற்றும் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ள செயலாக்கப் பிரிவில் கூடுதலாக 144 குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இக்குழுவில் ஒரு வணிக வரி அலுவலர் மற்றும் ஒரு துணை வணிக வரி அலுவலர் உள்ளனர்.

இணை ஆணையர் தலைமையிலான மாநிலங்களுக்கிடையேயான புலனாய்வுக் குழு, மாநிலங்களுக்கிடையேயான வணிகப் பரிவர்த்தனைகளில் வரி ஏய்ப்பினைக் கட்டுப்படுத்த, பிற மாநில அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதுடன், வரி ஏய்ப்பினைத் தடுப்பதற்கான மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்காகத் தகவல்களை பரிமாற்றம் செய்து கொள்கிறது. இக்குழு, குறிப்பாக, மாநிலத்திற்கு உள்ளேயும் / வெளியேயுமான வரி ஏய்ப்புக்குள்ளாகும் பொருட்களின் நடமாட்டத்தினைக் கண்காணிக்கிறது.

3. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

புள்ளியியல் துறை இணை இயக்குநர் தலைமையிலான புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவில், ஓர் இணை ஆணையர் (புள்ளியியல்), இரு புள்ளியியல் அலுவலர்கள் மற்றும் இரு புள்ளியியல் ஆய்வாளர்களும் உள்ளனர்.

ஒவ்வொரு வணிக வரி மாவட்டத்திலும், இணை ஆணையருக்கு உதவியாக ஓர் இளநிலை ஆராய்ச்சி அலுவலரும், துணை ஆணையர்களுக்கு உதவியாக கோட்ட அலுவலகத்தில் ஒரு புள்ளியியல் ஆய்வாளரும் உள்ளனர்.

புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவால் கீழ்கண்ட அறிக்கைகள்/ வெளியீடுகள் தொடர்ச்சியாக வெளியிடப்படுகின்றன:

1. 'வணிக வரித் துறை—ஒரு கண்ணோட்டம்'—ஆண்டுதோறும்
2. 'வணிக வரித் துறையின் முக்கிய குறியீடுகள்'—ஆண்டுதோறும்
3. 'வணிக வரித் துறையின் புள்ளி விவரத்தொகுப்பு—காலமுறை அறிக்கை'—ஆண்டுதோறும்

2014 ஜூலை 30]

4. அனைத்து கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் 100 பெரு வணிகர்களின் வருவாய் பகுப்பாய்வு—மாதந்தோறும்

5. அனைத்து கோட்டங்கள் மற்றும் மாநிலத்தின் அதிக வருவாய் ஈட்டும் பொருட்கள் குறித்த வருவாய் பகுப்பாய்வு—மாதந்தோறும்

6. சட்டவாரியான மற்றும் கோட்ட வாரியான வருவாய் அறிக்கை—மாதந்தோறும்

7. கோட்டங்களின் செயல்பாடு குறித்த அறிக்கை—மாதந்தோறும்

4. வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலையம்

வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலையம் 1982 ஆம் ஆண்டு முதல் இணை ஆணையர் பணி நிலையில் உள்ள ஒரு இயக்குநரின் தலைமையில் சென்னையில் இயங்கி வருகிறது. வணிக வரித் துறையில் உள்ள அலுவலர்களுக்கு 'பணியிடைப் பயிற்சி' மற்றும் 'புத்தாக்கப் பயிற்சி' அளிப்பதே இதன் நோக்கமாகும். வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய கோட்டத் தலைமையிடங்களிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், துறையிலுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அடிப்படை கணக்கிடும் (basic computing) பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

5. துறையால் நிருவகிக்கப்படும் சட்டங்கள்

வணிக வரித் துறையால் பின்வரும் சட்டங்கள் நிருவகிக்கப்படுகின்றன:—

1. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் (31-12-2006 வரை)

2. 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் (31-12-2006 வரை)

3. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் (1-1-2007 முதல்)

4. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்

5. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம்

[2014 ஜூலை 30

6. 1935 ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம்

7. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பரங்கள் மீதான வரிச் சட்டம்

8. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவு மீதான வரிச் சட்டம்

9. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் சரக்குகள் நுழைவு மீதான வரிச் சட்டம் (சென்னை உயர் நீதிமன்றம் தனது 23-3-2007 நாளிட்ட தீர்ப்பின்படி இச்சட்டம் செல்லாது என ஆணையிட்டது. இதன்மீதான மேல்முறையீடு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது)

10. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச் சட்டம்

6. வரி வருவாய் வசூலின் போக்கு (Trend in Tax Revenue Collection)

இந்திய பொருளாதாரத்தில் பொதுவான மந்த நிலை ஏற்பட்ட போதிலும், வரி ஏய்ப்பினைத் தடுத்திட மேற்கொள்ளப்பட்ட சிறந்த கண்காணிப்பு மற்றும் தீவிரமான செயலாக்கத்தின் விளைவால், வரி வருவாய் வசூலில் ஒரு ஆரோக்கியமான வளர்ச்சியை துறை தக்க வைத்துள்ளது. மதிப்புக் கூட்டு வரி (Value Added Tax) அமல்படுத்தப்பட்டபின் கடந்த ஐந்தாண்டுகளில் துறையால் நிருவகிக்கப்படும் அனைத்துச் சட்டங்களின்கீழ் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் மற்றும் வளர்ச்சி விகித விவரங்கள் பின்வருமாறு:

ஆண்டு	வரி வருவாய் (ரூபாய் கோடியில்)	வளர்ச்சி விகிதம்
(1)	(2)	(3)
2009-2010	24,819	09.96%
2010-2011	31,117	25.37%
2011-2012	39,545	27.09%
2012-2013	47,885	21.09%
2013-2014	56,852	18.73%

2014 ஜூலை 30]

7. கடந்த ஐந்து ஆண்டுகளில் சட்ட வாரியான வருவாய்

கடந்த ஐந்து ஆண்டுகளில் சட்டவாரியான வருவாய் விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:—

(ரூபாய் கோடியில்)

	சட்டம்	2009–2010	2010–2011	2011–2012	2012–2013	2013–2014
1.	தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டம்	21,477	26,556	33,997	42,038	51,245
2.	மத்திய விற்பனை வரிச் சட்டம்	1,773	2,263	2,819	2,904	3,116
3.	தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம்	218	350	259	261	218
4.	கேளிக்கை வரிச் சட்டம்	13	16	59	70	68
5.	பந்தய வரிச் சட்டம்	7	6	7	6	6
6.	ஆடம்பர வரிச் சட்டம்	169	216	256	290	299
7.	நுழைவு வரிச் சட்டம்	1,162	1,708	2,148	2,316	1,900
	மொத்தம்	24,819	31,117	39,545	47,885	56,852

[2014 ஜூலை 30

8. வரி நிருவாகத்திற்கான செலவு

வணிக வரித் துறையின் வரி நிருவாகச் செலவு மிகவும் குறைவானது. இச்செலவினம் வணிக வரித் துறையின் மொத்த வரி வருவாயில் ஒரு விழுக்காட்டை எப்போதும் கடந்ததில்லை. 2013-2014 ஆம் ஆண்டிற்கான மொத்த வணிக வரி வருவாயில், வெறும் 0.30 விழுக்காடுதான் நிருவாகச் செலவு செய்யப்பட்டுள்ளது. வணிக வரித் துறையின் வருவாய் வரவுகள் மற்றும் செலவு விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

	2009–2010	2010–2011	2011–2012	2012–2013	2013–2014
1. வரவுகள்	24,819	31,117	39,545	47,885	56,852
2. செலவுகள்	205.10	196.45	224.05	214.73	173.89
3. வரவிற்கும் செலவிற்குமான விழுக்காடு	0.83%	0.63%	0.57%	0.45%	0.30%

9. வரி / மாநில மொத்த உற்பத்தியுடனான (Gross State Domestic Product) வருவாய் விகிதம்

தமிழ்நாடு, மாநில மொத்த உற்பத்தியின் அடிப்படையில் இந்தியாவில் நான்காவது பெரிய மாநிலமாக விளங்குகிறது. மாநில மொத்த உற்பத்தியின் பின்னணியில் காண்கையில், வருவாய் வசூலானது, அதன் ஆழம் (வரி வீதங்கள்) மற்றும் அகலத்தின் (வரி ஏய்ப்பினைத் தவிர்த்தல்) குறியீடாக செயல்படுகிறது. மதிப்புக் கூட்டு வரிக் காலத்தில் மாநிலத்தின் மொத்த உற்பத்தியுடன், துறையின் மொத்த வரி வருவாய் ஒப்பீட்டு விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

2014 ஜூலை 30]

(ரூபாய் கோடியில்)

ஆண்டு	மொத்த வணிக வரி வசூல்	மாநிலத்தின் மொத்த உற்பத்தி	சதவிகிதம்
(1)	(2)	(3)	(4)
2009–2010	24,819	4,73,519	5.24%
2010–2011	31,117	5,18,576	6.00%
2011–2012	39,545	5,81,635	6.79%
2012–2013	47,885	6,90,542	6.93%
2013–2014	56,852	8,08,766	7.02%

10. நிதிநிலை அறிக்கைக்கு முந்தைய கூட்டங்கள்

ஆண்டுதோறும், மாநிலம் முழுவதுமுள்ள வணிகம் மற்றும் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான கூட்டத்தை இத்துறை நடத்தி வருகிறது. 2011-லிருந்து 1-8-2011, 22-3-2012, 18-3-2013 மற்றும் 11-2-2014 ஆகிய தேதிகளில் இக்கூட்டம் நடத்தப்பட்டது. நிதி அமைச்சர் தலைமையேற்று நடத்தும் இக்கூட்டத்தில், வணிக வரித் துறை அமைச்சர், நிதித் துறை முதன்மைச் செயலர், வணிக வரித் துறை முதன்மைச் செயலர், வணிக வரி ஆணையர் மற்றும் துறையின் உயர் அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர். இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் கருத்துகளின் அடிப்படையில் கூர்மையாக ஆராய்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வணிகர்களின் கோரிக்கைகள் மற்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில், வரிக் குறைப்பு மற்றும் வரி விலக்கு அளிக்கப்படுவதுடன், 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் அவ்வப்போது திருத்தங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

11. வணிகர்கள் விழிப்புணர்வு முகாம்

வரிவிதிப்பு முறையில் அறிமுகப்படுத்தப்பட்ட சட்டத் திருத்தங்கள் மற்றும் புதிய நடைமுறைகள் போன்றவற்றை அறிந்துகொள்ளும் வகையில், வணிகர்களிடையே விழிப்புணர்வு

[2014 ஜூலை 30

முகாம்கள் ஏற்படுத்தப்படும் என 2013-2014 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அறிவிக்கப்பட்டது. அதனை நடைமுறைப்படுத்தும்பொருட்டு அரசாணை (நிலை) எண் 123, வணிக வரி மற்றும் பதிவுத் (டி.2) துறை, நாள் 25-9-2013-ல் ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது, வணிகர்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் விழிப்புணர்வு முகாம்கள் இணை ஆணையர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. அது மட்டுமின்றி, உள்ளூரில் ஏற்படக்கூடிய சிறு பிரச்சினைகளைத் தீர்க்கும்பொருட்டு, தொழில் மற்றும் வணிகப் பிரதிநிதிகளின் மாவட்ட அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுக் கூட்டம் மூன்று மாதங்களுக்கொருமுறை மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் கூட்டப்படுகிறது.

12. வரி சீரமைப்பு (Tax Reforms)

12.1 வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கருதுவதற்கு வழிவகை செய்தது (Provision for Deemed Assessment)

ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் வணிகருக்கான வரிக்கணிப்பு ஆணையை கட்டாயம் பிறப்பிக்க வேண்டும் என்ற நடைமுறை கைவிடப்பட்டுள்ளது. வரி செலுத்தியதற்கான தகுந்த ஆதாரங்கள் மற்றும் தேவையான ஆவணங்களுடன் உரிய படிவத்தில் நபரானர்கள் வணிகரால் சமர்ப்பிக்கப்பட்டால், அதைத்தொடர்ந்து வரும் ஆண்டின் அக்டோபர் மாதம் 31 ஆம் தேதியன்று அவர் வரிக்கணிப்பு செய்யப்பட்டதாக கருதப்படுவார். இந்த நடைமுறை 19-6-2012 முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

12.2 தெளிவுரை மற்றும் முன்தீர்வு முடிவு வழங்கும் அதிகார அமைப்பினை நிறுவியது (Constitution of clarification and Advance Ruling Authority)

வரி வீதம் தொடர்பான கூறு எதனையும் தெளிவாக்குவதற்கு தெளிவுரை மற்றும் முன்தீர்வு முடிவு வழங்கும் அதிகார அமைப்பினை மாநில அளவில் அரசு நிறுவியுள்ளது. வணிக வரி ஆணையர், கூடுதல் ஆணையர் (மக்கள் தொடர்பு) மற்றும் கூடுதல் ஆணையர் (சிராய்வு மனு) ஆகியோரைக் கொண்ட இந்த அதிகார அமைப்பு, தனது செயல்பாட்டினை 31-10-2011 முதல் துவங்கியுள்ளது. இவ்வமைப்பு 31-3-2014 வரையான காலத்தில் ஏறத்தாழ 238 இனங்களில் தெளிவுரை வழங்கியுள்ளது.

2014 ஜூலை 30]

12.3 சிறு வணிகர்கள் உள்ளீட்டு வரி வரவினைப் (Input Tax Credit) பெறுவதற்கு வழிவகை செய்தது

குறித்துரைக்கப்பட்ட வரிவிதிப்பு வரம்பினைக் கடந்திடலாம் என எதிர்பார்த்து வரி வசூலிக்கப்பட்டு, அவ்வரம்பினைக் கடக்காமல் இருக்கும் பதிவு பெற்ற சிறு வணிகர்களுக்கு உள்ளீட்டு வரி வரவு கிடைத்திடும் வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதற்கு முன்னர், இத்தகைய சிறு வணிகர்களால் வசூலிக்கப்பட்ட வரியானது, உள்ளீட்டு வரி வரவு எடுத்துக் கொள்வதற்கான பயனின்றி இழுக்க நேரிட்டது. இந்த நடைமுறை 01-4-2012 முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

12.4 இணக்க வரி (Compounding Tax) செலுத்தும் முறையிலுள்ள முரண்பாட்டைக் களைந்தது

இணக்க வரி செலுத்தும் முறையின்கீழ், வரி செலுத்தும் வணிகரின் வரி விதிக்கத்தக்க பொருட்கள் தொடர்பான விற்பனைத் தொகையானது, அந்த ஆண்டில் எப்பொழுது ஐம்பது இலட்சம் ரூபாய் என்ற அளவை எட்டுகின்றதோ, அத்தகைய வணிகர் ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட அவருடைய வரிவிதிக்கத்தக்க விற்பனைத் தொகையின்மீது மட்டும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வரிவீதங்களின்படி வரி செலுத்தினால் போதுமானது என்று 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் உரிய சட்டத் திருத்தத்தினை அரசு மேற்கொண்டது. இதற்கு முன்னர், வணிகர் தனது மொத்த வரிவிதிக்கத் தக்க விற்பனைத் தொகையின்மீது அட்டவணை வரிவீதங்களின்படி வரி செலுத்த வேண்டியிருந்தது. இந்த நடைமுறை 01-4-2012 முதல் அமலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

12.5 துணை வணிக வரி அலுவலர்களின் வரி விதிப்பு அதிகார வரம்பினை உயர்த்தியது

துணை வணிக வரி அலுவலர்களின் வரி விதிப்பிற்கான அதிகார வரம்பு, ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ.75 இலட்சத்திற்கு மிகாமல் (வரி விலக்களிக்கப்பட்ட இனங்கள் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழான விற்பனைத் தொகை உட்பட), வரித்தொகை மதிப்பீட்டு வரம்பின்றி இருக்கும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

13. வரி விலக்குகள் / குறைப்புகள்

13.1 வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் மீதான மதிப்புக் கூட்டு வரி விலக்கு (Removal of VAT on domestic LPG)

வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் மீதான 4 விழுக்காடு வரி 1-7-2011 முதல் முற்றிலுமாக விலக்கிக் கொள்ளப்பட்டு, அதன் மூலம் ஒரு சிலிண்டரின் விலை ரூ.14.73 குறைக்கப்பட்டது. இதன்மூலம் 1.68 கோடி குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

13.2 ஜென்செட்டுகள் மீதான வரிக் குறைப்பு (Reduction in rate of tax for Gensets)

ஜெனரேட்டர்கள் மீதான வரிவீதத்தை 1-4-2008 முதல் குறைத்த போதிலும் (11-7-2011 வரை 4% மற்றும் அதன் பிறகு 5%), ஜென்செட்டுகளின்மீதான உயர்ந்த வரிவீதம் (11-7-2011 வரை 12.5% மற்றும் அதன் பிறகு 14.5%) தொடர்ந்தது. இது தொழில் முனைவோர்களுக்கு இடர்பாடு ஏற்படுத்தியதோடு, இப்பொருட்களின் தவறான வகைப்பாட்டிற்கும் வழி வகுத்தது. இந்த வேறுபாட்டினைக் களையவும், மின் சக்தியினை பெருக்கிடவும் ஜென்செட்டுகள் மீதான வரி வீதம் 7-12-2012 முதல் 14.5 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

13.3 உயரழுத்த மின் நுகர்வோர்கள் (High Tension Consumers) பயன்படுத்தும் எரி உலை எண்ணெய் (Furnace oil) மீது வரி விலக்கு

பொதுவாக, எரி உலை எண்ணெய்மீது 5 விழுக்காடு மதிப்புக் கூட்டு வரி விதிக்கப்படுகிறது. மின் சக்தி உற்பத்திக்கு எரி உலை எண்ணெய்யினைப் பயன்படுத்திடும் உயரழுத்த மின் நுகர்வோர்களுக்கு நிவாரணம் வழங்கிடும்பொருட்டு, 1-2-2012 முதல் 30-9-2012 வரையிலான காலத்திற்கு உயரழுத்த மின் நுகர்வோர்களால் ஜென்செட்டுகளில் பயன்படுத்தப்பட்ட எரி உலை எண்ணெய்யின் விற்பனைக்கு, மதிப்புக் கூட்டு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இந்த வரி விலக்கு 1-10-2012 முதல் 31-5-2013 வரையிலான காலத்திற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த நீட்டிக்கப்பட்ட கால நடவடிக்கையின்மூலம் அரசுக்கு ரூ.97 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

2014 ஜூலை 30]

13.4 மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் பின்பக்கம் மோட்டார் பொருத்தப்பட்ட பேட்டரியினால் இயங்கும் ஸ்கூட்டர்களுக்கு (Battery Operated Motorised Retrofitted Scooters) வரி விலக்கு

பின்பக்கம் மோட்டார் பொருத்தப்பட்ட பேட்டரியினால் இயங்கும் ஸ்கூட்டர்களின்மீது 14.5 விழுக்காடு வரி விதிக்கப்பட்டு வந்தது. மாற்றுத்திறனாளிகளின் இடம் பெயரும் ஆற்றலை மேம்படுத்தும்பொருட்டு, பின்பக்கம் மோட்டார் பொருத்தப்பட்ட பேட்டரியினால் இயங்கும் ஸ்கூட்டர்களின் விற்பனையின்மீது செலுத்த வேண்டிய மதிப்புக் கூட்டு வரிக்கு 14-12-2012 முதல் விலக்களிக்கப்பட்டுள்ளது.

13.5 ஆடம்பர வரி (Luxury Tax) செலுத்துவதில் இருந்து விலக்கு பெறுவதற்கான உச்சவரம்பு உயர்வு

சாதாரண, நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில், 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிகள் மீதான வரிச் சட்டத்தின்கீழ் ஆடம்பர வரி செலுத்துவதில் இருந்து விலக்கு பெறுவதற்கான உச்சவரம்பு 199 ரூபாயிலிருந்து 499 ரூபாயாக 4-7-2013 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

14. சிறந்த முறையில் வரி வசூல் செய்வதற்கான நடவடிக்கைகள்

14.1 வர்த்தகப் புலனாய்வுப் பிரிவு (Business Intelligence Unit)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி வணிக வரி ஆணையரின் அலுவலகத்தில், அவருடைய நேரடி மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டில் வர்த்தகப் புலனாய்வு பிரிவு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. ஒரு இணை ஆணையர், ஒரு துணை ஆணையர், நான்கு உதவி ஆணையர்கள், ஒரு துணை வணிக வரி அலுவலர், ஒரு உதவி கணினி நிரலர் (Assistant Programmer) மற்றும் ஒரு புள்ளியியல் ஆய்வாளர் (Statistical Inspector) ஆகியோரைக் கொண்டு இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

மாநில வர்த்தகப் புலனாய்வுப் பிரிவு, வணிகர்களின் நமூனாக்கள், துறையின் சோதனைச் சாவடிகள், மத்திய மற்றும் பிற மாநில அரசுகளின் முகமைகள் போன்றவற்றிடமிருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கூர்ந்தாய்வு செய்கிறது. வரி ஏய்ப்பிற்குட்படும் பொருட்கள், வழக்கத்திற்கு மாறான உள்ளீட்டு வரி வரவு

[2014 ஜூலை 30

(Input Tax Credit) மற்றும் வரி திரும்பப் பெறுதல் தொடர்பான கோரிக்கைகள், அசாதாரண வெளிமாநில இருப்பு மாற்றம் (Stock transfer) போன்ற நேர்வுகளில் இப்பிரிவு சிறப்புக் கவனம் செலுத்துகிறது. ஒவ்வொரு செயலாக்கக் கோட்டங்களிலும் இணை ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டில் மாவட்ட வர்த்தகப் புலனாய்வுப் பிரிவுகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

14.2 பட்டயக் கணக்கர் (Chartered Accountant) / விலை மதிப்பீட்டுக் கணக்கர் (Cost Accountant) ஆகியோர்களைக் கொண்டு தணிக்கை செய்தல்

துறையுடனான வணிகப் பெருமக்களின் தொடர்பினை எளிதாக்கும்பொருட்டு, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டப் பிரிவு 22 (2)-க்கு திருத்தம் கொண்டு வரப்பட்டு, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும், ஒவ்வொரு வணிகருக்கும் வரிக்கணிப்பு ஆணை வரிவிதிப்பு அலுவலரால் கட்டாயம் பிறப்பிக்க வேண்டும் என்ற நடைமுறை கைவிடப்பட்டுள்ளது. தேவையான ஆவணங்களை இணைத்து சரியான முறையில் நமூனாக்களை தாக்கல் செய்திருந்து, நமூனாக்களின்படி உரிய வரியினை செலுத்தியிருந்தால், அதனைத் தொடர்ந்து வரும் ஆண்டின் அக்டோபர் மாதம் 31 ஆம் தேதியன்று வணிகர் வரிக்கணிப்பு செய்யப்பட்டதாக தற்போது கருதப்படுவர்.

இந்த வரிக்கணிப்பு செய்யப்பட்டதாகக் கருதப்படும் முறையில் வணிகர்களால் சமர்ப்பிக்கப்படும் கணக்குகள் சரியானவையா என்பதை உறுதி செய்வது அவசியமாகிறது. இதற்காக, வணிகரின் கணக்குகளை ஒரு பட்டயக் கணக்கர் (Chartered Accountant) அல்லது ஒரு விலை மதிப்பீட்டுக் கணக்கரைக் (Cost Accountant) கொண்டு தணிக்கை மேற்கொள்ள வழிவகை செய்வதற்கு, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டத்தில், 63-A என்னும் பிரிவினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. சிறு மற்றும் நடுத்தர வணிகர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளைக் களைவதற்கு வணிகர் ஒருவரின் பூஜ்ய வீத விற்பனை மற்றும் மாநிலங்களுக்கிடையேயான விற்பனை உள்ளடக்கிய மொத்த விற்பனைத் தொகையானது, ஆண்டு ஒன்றில் ரூபாய் ஒரு கோடிக்கு மேற்படும் நேர்வுகளில் மட்டுமே இந்த முறை பொருந்தும் என வரையறுக்கப்பட்டுள்ளது. ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளா, மகாராஷ்டிரம், குஜராத் போன்ற பிற மாநிலங்களின் மதிப்புக் கூட்டு வரிச் சட்டங்களில் இதே போன்ற வழிமுறை உள்ளது.

2014 ஜூலை 30]

பல்வேறு தொழில் மற்றும் வர்த்தக சங்கங்கள் மற்றும் வணிகர்களின் கோரிக்கையை ஏற்று, ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் தணிக்கை அறிக்கையை சமர்ப்பிக்கும் காலக்கெடு ஏழு மாதங்களிலிருந்து ஒன்பது மாதங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

15. தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் தொகுப்பு நிதியை (Corpus Fund) உயர்த்துதல்

வணிகர்களின் நலனுக்காக குடும்ப நல உதவி, மருத்துவ உதவி, கல்வி உதவி போன்ற பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்திட வணிகர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டது.

இத்திட்டங்கள், அரசால் வாரியத்துக்கு அளிக்கப்பட்ட தொகுப்பு நிதியிலிருந்து பெறப்படும் வட்டி மற்றும் உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் ஒருமுறை செலுத்தக்கூடிய சந்தாத் தொகைக்கு இணையான அரசு மானியத்தைக் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன. உறுப்பினர் புதுப்பித்தல் கட்டணமாக ஆண்டுதோறும் ரூ.100/- செலுத்துவதிலிருந்து விலக்களித்தும், 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெறாத, தொழில் வரி உச்ச வரம்புக்குக்கீழே உள்ள சிறு வணிகர்களும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெற்ற உரிய உரிமத்தின் அடிப்படையில் இவ்வாரியத்தில் உறுப்பினர் ஆகலாம் என்று வழிவகை செய்தும் அரசாணை (நிலை) எண் 69, வணிக வரி மற்றும் பதிவுத் (டி.2) துறை, நாள் 29-6-2011-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. வணிகர்களுக்கான நலத் திட்டங்களை செவ்வனே நிறைவேற்றிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி வாரியத்திற்கு அளிக்கப்பட்ட தொகுப்பு நிதியை ரூ.2 கோடியிலிருந்து ரூ.5 கோடியாக உயர்த்தி அரசாணை (நிலை) எண் 129, வணிக வரி (ம) பதிவுத் துறை, நாள் 4-10-2012-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

16. பலபொருள் சில்லறை வர்த்தகத்தில் (Multi-brand Retail Trade) அந்நிய நேரடி முதலீட்டிற்கு (Foreign Direct Investments) மறுப்பு

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 10 இலட்சத்திற்கு மேல் மக்கள்தொகை கொண்ட நகரங்களில் பலபொருள் சில்லறை வர்த்தகத்தில் 51 விழுக்காடு அந்நிய நேரடி

[2014 ஜூலை 30

முதலீட்டை, 2012 ஆம் ஆண்டில் முந்தைய மத்திய அரசு அனுமதித்தது. பெரிய பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டியிட இயலாத சிறிய மற்றும் நடுத்தர வணிகர்களுக்கு இது எதிர்விளைவை ஏற்படுத்திடும் என்பதால் முந்தைய மத்திய அரசின் இந்த முடிவிற்கு தமிழக அரசு தனது பலமான எதிர்ப்பினைப் பதிவு செய்தது. மத்திய அரசு இந்த முடிவினை உடனே கைவிட வேண்டும் என்றும், மாநிலத்தில் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டினை தமிழக அரசு ஒருபோதும் அனுமதிக்காது எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதிபட தெரிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு மற்றும் பிற மாநிலங்களின் பலமான எதிர்ப்பின் காரணமாக, முந்தைய மத்திய அரசு தனது நிலையினை மாற்றிட நேரிட்டு, சம்பந்தப்பட்ட மாநில அரசின் ஒப்புதலின்றி, மாநிலத்தில் பல்பொருள் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்படமாட்டாது என தெரிவித்தது. அதற்கிணங்க, மாநிலத்தில் பல்பொருள் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டிற்கு தமிழக அரசு தனது ஒப்புதலை வழங்கவில்லை என்பதால், கணிசமான மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கிடும் சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளின் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது.

17. துறையின் கட்டடங்களில் சூரிய சக்தியினை ஊக்குவித்தல்

2015 ஆம் ஆண்டுக்குள், சூரிய சக்தியின்மூலம் 3,000 மெகா வாட் மின்சாரத் திறனை எட்டி, உலக அளவில் தமிழ்நாடு தலைசிறந்து திகழ வேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு திட்டமாகும். இந்த இலக்கினை எய்தும் நோக்கில் "தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை 2012"-ஐ அரசு வெளியிட்டுள்ளது. அரசளவில் சூரிய மேற்கூரை அமைப்புகளை (Solar Rooftop Systems) ஊக்குவிக்க மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் இந்தக் கொள்கையில் விவரிக்கப்பட்டுள்ளன. இக்கொள்கைக்கு இணங்க வணிக வரித் துறையில் கட்டப்படவுள்ள புதிய கட்டடங்கள் அனைத்திற்கும் சூரிய மேற்கூரைகள் பொருத்தப்படும். துறையில் தற்போதுள்ள 41 அரசு கட்டடங்களுக்கு சூரிய மேற்கூரை அமைப்புகள் படிப்படியாக பொருத்தப்படும். இது துறையால் செலுத்தப்பட்டு வரும் மின்சாரக் கட்டணத்தினை குறைத்திட உதவும்.

2014 ஜூலை 30]

18. சரக்கு மற்றும் சேவை வரி (Goods and Services Tax)

தேசிய அளவில் சரக்கு மற்றும் சேவை வரியை அறிமுகப்படுத்துவது குறித்த பிரேரணை அனைத்து மாநில நிதி/வரி அமைச்சர்கள் அடங்கிய அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் பரிசீலனையில் உள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள சரக்கு மற்றும் சேவை வரி மாநிலங்களின் நிதி தன்னாட்சி மற்றும் தமிழ்நாடு போன்ற உற்பத்தி மற்றும் நிகர ஏற்றுமதி கொண்டுள்ள மாநிலத்திற்கு ஏற்படுத்தக்கூடிய பெரிய அளவிலான நிரந்தர வருவாய் இழப்பு தாக்கத்தினைப் பற்றி மாநிலம் கவலை கொண்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள சரக்கு மற்றும் சேவை வரி குறித்தான மாநிலத்தின் ஆழ்ந்த கவலைகள் தொடர்ந்து நேரடியாக இந்திய அரசு முன்பாகவும் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் முன்பாகவும் வைக்கப்பட்டு வருகின்றன.

19. மத்திய அரசிடமிருந்து பெறப்பட வேண்டிய வருவாய் இழப்பீடு

19.1 மதிப்புக் கூட்டு வரி இழப்பீடு

மதிப்புக் கூட்டு வரி இழப்பீட்டு நிலுவைத் தொகை ரூ.650.44 கோடி மத்திய அரசிடமிருந்து பெறப்பட வேண்டியுள்ளது. மேற்படி நிலுவைத் தொகையை பெறுவது தொடர்பாக தேவையான ஆவணங்கள் மற்றும் விளக்கங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

19.2 மத்திய விற்பனை வரி இழப்பீடு

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பை அமல்படுத்தும்பொருட்டு 1-4-2007 முதல் மத்திய விற்பனை வரி 4 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகவும், 1-6-2008 முதல் 2 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது. அதனால் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்யும் பொருட்டு, மத்திய அரசு பல்வேறு வருவாய்சாரா முறைகளை நடைமுறைப்படுத்தியும், நேரடியாக நிதி வழங்கிடவும் ஒப்புக் கொண்டுள்ளது. தமிழக அரசானது இழப்பீடு கோரிக்கைகளை தொடர்ந்து சமர்ப்பித்து கொண்டிருந்தும் உறுதியளிக்கப்பட்டபடி முழுவதுமாக இழப்பீட்டுத் தொகை பெற இயலவில்லை. 1-4-2007 முதல் 31-3-2012 வரை மாநில அரசுக்கு வழங்கப்பட வேண்டிய இழப்பீடான ரூ.9,735.38 கோடியில் ரூ.2,636.50 கோடி மட்டுமே மத்திய அரசால் விடுவிக்கப்பட்டது. 31-3-2012 வரையான நிலுவை இழப்பீடு ரூ.7,098.88 கோடி மத்திய அரசிடமிருந்து பெறப்பட

[2014 ஜூலை 30

வேண்டியுள்ளது. 2012-2013 ஆம் ஆண்டிற்கான இழப்பீட்டுத் தொகை மாநிலக் கணக்காயரால் சான்றளிக்கப்பட்ட தொகையின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

20. தகவல் தொழில்நுட்பம்

அரசு தகவல் மையத்தின் உதவியுடன் வணிக வரித் துறையின் கணினிமயமாக்கல் 1973 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. பின்னர், 1988 ஆம் ஆண்டில் வணிக வரித் துறையானது தனக்கென ஒரு தகவல் மையத்தினை அமைத்து, மாநிலம் முழுவதிலும் இருந்து பெறப்படும் மாதாந்திர நமூனாக்களை இத்தகவல் தொகுப்பு மையத்தில் பதிவு செய்து, அதனைப் பரிசீலினை செய்து மேலாண்மை தகவல் முறை அறிக்கைகளை (Management Information System Report) தயார் செய்தது.

2003 ஆம் ஆண்டில் துறையால் கள அலுவலகங்களின் கணினிமயமாக்கல் பெருமளவில் தொடங்கப்பட்டது. இதன்மூலம் சென்னையிலுள்ள மைய சேவையகத்துக்கு (Central Server) தகவல்கள் வழங்குவதற்காக, துறை அலுவலகங்களுக்கு கணினிகள் மற்றும் அதனுடனான இணைப்புகள் ஏற்படுத்தித்தரப்பட்டன.

தற்போது, துறையின் அனைத்து அலுவலகங்களுக்கும் கணினிகள் மற்றும் பன்செயல் கருவிகள் உட்பட புறக்கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. துறையின் அலுவலகங்கள் அமைந்துள்ள 215 இடங்களும் அந்தந்த அலுவலகங்களுக்கு அருகிலுள்ள தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் (TNSWAN), இருப்பு முனையின் (Point of Presence) மூலம் 2 Mbps வழித்தடங்களால் இணைக்கப்பட்டு, துறைக்கான பெரியதொரு பெரும்பரப்பு வலையமைப்பு (Wide Area Network) உருவாக்கப்பட்டுள்ளது.

பல்வேறு மின்னணு வழி சேவைகளை வணிகப் பெருமக்கள் உபயோகப்படுத்திட துறை www.tnvat.gov.in என்ற சொந்த வலைதளத்தினை கொண்டுள்ளது. மேலும் கூடுதலாக, பல்வேறு மென்பொருள் பிரிவுகளை உபயோகப்படுத்துவதற்கும், துறையின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பல்வேறு மேலாண்மை தகவல் முறை அறிக்கைகளை (Management Information System Report) அனைத்து துறை அலுவலர்களும் காண்பதற்கும் ஏதுவாக துறை http://www.tnct.gov.in என்ற அக இணைய வலைதளத்தினை (Intranet) கொண்டுள்ளது.

2014 ஜூலை 30]

21. வணிகர்களுக்கு வழங்கப்படும் மின்னணு சேவைகள் (Electronic Services provided to dealers)

தற்போது, வணிகர்கள் பயன்பாட்டிற்காக துறையுடன் தொடர்பு கொள்ள கீழ்க்கண்ட மின்னணு சேவைகள் வழங்கப்படுகின்றன:—

21.1 வணிகர்களின் பதிவு (Registration of Dealers)

ஒரு புதிய வணிகர் தனது பதிவு எண் பெறுவதற்கான விண்ணப்பத்தினை மின்னணு முறையில் பதிவு செய்யலாம். இந்த விண்ணப்பமானது வரிவிதிப்பு அலுவலகத்தில் பரிசீலிக்கப்பட்டு, வணிகர்களுக்கு பதிவுத் தபால்மூலம் பதிவுச் சான்றிதழ் அனுப்பி வைக்கப்படுகிறது.

21.2 மின்னணு முறையில் நமூனாக்கள் தாக்கல் செய்தல் (e-Filing of Returns)

அனைத்து வணிகர்களும், மதிப்புக் கூட்டு வரி மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டங்களின்கீழ் தாக்கல் செய்ய வேண்டிய மாதாந்திர நமூனாக்களை மின்னணு முறையில் தாக்கல் செய்ய வேண்டுமென நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, தற்போது சுமார் 3,30,000 வணிகர்கள் (மொத்த வணிகர்களில் 80 விழுக்காடு) மாதந்தோறும் நமூனாக்களை மின்னணு முறையில் தாக்கல் செய்து வருகிறார்கள். அனைத்து வணிகர்களும் (100%) மின்னணு முறையில் நமூனாக்கள் தாக்கல் செய்வதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

21.3 இணையதளம் வழியாக வங்கிகளில் நேரடியாக வரி செலுத்தும் வசதி (e-payment through net banking)

அரசாணை (நிலை) எண் 39, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 9-4-2013-ன்படி அங்கீகரிக்கப்பட்ட 19 பொதுத் துறை/ தனியார் வங்கிகளின்மூலம், இணையதளம் வழியாக வரி செலுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மின்னணு முறையில் தனியார் மற்றும் பொதுத் துறை வங்கிகளின்மூலம் கடந்த நிதியாண்டில் 2013-2014-ல் ரூ.34,018 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. இது மொத்த வரி வசூலில் 60 விழுக்காடு ஆகும். நடப்பாண்டு 2014-2015-ல் (ஜூன் மாதம் வரை) ரூ.9,210 கோடி வரி வசூலிக்கப்பட்டுள்ளது. இது நடப்பாண்டு மொத்த வரி வசூலில் 68 விழுக்காடாகும். இவ்வசதியின்மூலம் அரசுக் கணக்கில் வரி வருவாய் உடனடியாகச் சேருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

[2014 ஜூலை 30

21.4 மின்னணு வழி வரி செலுத்துதல் (e-payment through e-chalan)

வணிகர்கள் மின்னணு முறையில் இணையதளம் மூலமாக வரி செலுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டதுபோல் தற்பொழுது மின்னணு செலுத்துச் சீட்டுமூலம் நேரிடையாக வங்கிகளுக்குச் சென்று தங்களது வரியினை செலுத்துவதற்குரிய வசதியும் நடப்பாண்டில் நடைமுறைப்படுத்த வழிவகைகள் செய்யப்பட்டு வருகின்றன.

21.5 மின்னணு முறையில் 'C' மற்றும் 'F' படிவங்கள் உருவாக்கிக் கொள்ளுதல் (Online issue of 'C' & 'F' forms)

மின்னணு முறையில் சமர்ப்பிக்கப்படும் மாதாந்திர நமூனாக்களின் அடிப்படையில், வணிகர்கள் தாங்களே 'C' மற்றும் 'F' படிவங்களை உருவாக்கிக் கொள்ளும் வசதி 2012 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதியை பயன்படுத்துவதன்மூலம் வணிகர்கள் தங்களுக்கான 'C' மற்றும் 'F' படிவங்களைப் பெற வரி விதிப்பு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய தேவை குறைகிறது. சுமார் 20 இலட்சம் மின்னணுப் படிவங்கள் வணிகர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன.

31-10-2012-க்கு முந்தைய காலத்திற்கு நிலுவையிலுள்ள 'C' மற்றும் 'F' படிவங்களை பதிவிறக்கம் செய்து கொள்ள 13-2-2014 முதல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வசதியினை 15-8-2014 வரை வணிகர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

21.6 சோதனைச் சாவடிகளில் விரைவு வழி அனுமதி முறை (Fast Track Clearance System at the Checkposts)

இச்சேவையின் வாயிலாக வணிகர்கள் தங்கள் வாகனங்களில் கொண்டு செல்லும் பொருட்கள் பற்றிய விவரங்களை துறைக்கான இணையதளத்தில் பதிவேற்றம் செய்து, அதன்மூலம் பெறப்படும் ஒப்புகைச் சீட்டுடன் தங்கள் சரக்குகளை வாகனங்களில் கொண்டு செல்லலாம். வணிகர்கள் கொண்டுவரும் ஒப்புகைச் சீட்டில் உள்ள விவரங்கள் சோதனைச் சாவடி அலுவலர்களால் கணினிமூலம் சரிபார்க்கப்பட்டு, உரிய பதிவுகள் செய்யப்பட்டு, வாகனம் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படும். இச்சேவையினால் வாகனங்கள் சோதனைச் சாவடியில் விரைவு அனுமதி பெறுவதால்

2014 ஜூலை 30]

நேரம் சேமிக்கப்படுவதுடன், சோதனைச் சாவடிகளில் ஏற்படும் நெரிசலைக் குறைக்கவும், தவறுகள் ஏற்படாவண்ணம் இருக்கவும் உதவுகிறது.

21.7 மின்னணு முறையில் இடைவழிச் சீட்டு பெறுதல் (Online issue of Transit Pass)

வணிகர்கள், 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் 6-வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை பிற மாநிலங்களுக்குக் கொண்டு செல்வதற்கான இடைவழிச் சீட்டினை, வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு நேரில் செல்லாமலேயே எல்லா நாட்களிலும் மின்னணு முறையில் தயாரித்துக் கொள்ளும் முறை, நவம்பர் 2011 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வணிகர்கள் கொண்டு வரும் இடைவழிச் சீட்டில் உள்ள விவரங்கள் சோதனைச் சாவடி அலுவலர்களால் கணினிமூலம் சரிபார்க்கப்பட்டு, உரிய பதிவுகள் செய்யப்பட்டு, வாகனம் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படும்.

இந்த மின்னணு இடைவழிச் சீட்டு முறை, சமையல் எண்ணெய் மற்றும் இரும்பு (மீ) எஃகு ஆகிய பொருட்களுக்கும் 8-11-2013 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுவரை 2,50,000-க்கும் மேற்பட்ட மின்னணு இடைவழிச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

21.8 ஏற்றுமதியாளர்கள் வரி திருப்புகை பெறுதல் (Refunds to exporters)

பூஜ்ய வரி விற்பனையில் உள்ளீட்டு வரி திரும்பக் கோரும் ஏற்றுமதியாளர்களுக்கு, மின்னணு முறைமூலம் படிவம் 'W' தாக்கல் செய்யும் நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் அமல்படுத்தப்பட்டபின், தற்போதைய நடைமுறையைக் காட்டிலும் விரைவாக ஏற்றுமதியாளர்களுக்கு வரித் திருப்புகை கிடைக்கிறது. வரித் திருப்புகையின் அவ்வப்போதைய நிலையினை இணையதளத்தின் வாயிலாக அறியும் வசதி உள்ளது. மேலும், வணிகர்கள் அலுவலகத்திற்கு நேரடியாக வர வேண்டிய தேவை மிகக் குறைவாக உள்ளது. ஏற்றுமதி விற்பனையை செல்லத்தக்கதாக ஆக்க, அரசின் சார்பாக புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்காக (MoU) நியமிக்கப்பட்ட இணை ஆணையர் மற்றும் வெளிநாட்டு வர்த்தக இயக்குநருக்கிடையில் (Director General of Foreign Trade) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) கையொப்பமிடப்பட்டுள்ளது.

[2014 ஜூலை 30

21.9 மின்னணு முறையில் வருடாந்திரப் படிவங்கள் தாக்கல் செய்தல் (e-filing of Annual Returns)

மின்னணு முறையில் வருடாந்திரப் படிவங்களை தாக்கல் செய்யும் வசதியின்மூலம் இதுவரை சுமார் 12,600 வணிகர்கள் படிவங்களை மின்னணு முறையில் தாக்கல் செய்துள்ளனர். இந்த ஆண்டில் (2014-2015) சுமார் 2.25 இலட்சம் வணிகர்கள் இவ்வசதியினைப் பயன்படுத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

21.10 தகவல் மீட்பு ஆய்வகம் (Data Retrieval Lab)

மேம்பட்ட தகவல் தொழில்நுட்ப மென்பொருட்களின் உதவியால் வரி ஏய்ப்பு போன்ற செயல்களில் ஈடுபடும் வணிகர்களைக் கண்டறிய தகவல் மீட்பு ஆய்வகம் உதவி புரிகிறது.

வணிகர்களின் வணிகத் தலங்களிலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட சேமிப்பு உபகரணங்களான வன்தட்டு (Hard Disk) போன்றவை மீட்கப்பட்டு, தகவல் மீட்பு ஆய்வகத்தில் பகுத்தாய்வு செய்யப்பட்டு வருகிறது. தகவல் மீட்பு செய்வது குறித்த பயிற்சிகள் துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

21.11 இதர மின்னணு சேவைகள் (Other online Services)

வணிகப் பெருமக்களுக்காக கீழ்க்கண்ட வசதிகள் / சேவைகள் www.tnvat.gov.in என்ற வலைதளத்தில் செய்து தரப்பட்டுள்ளன:—

- சட்டங்கள், விதிகள், படிவங்கள், சுற்றறிக்கைகள், தெளிவுரைகள், அரசு ஆணைகள் மற்றும் அறிவிக்கைகள் வெளியிடப்பட்டவுடன் அறியும் வசதி
- வணிகர் பற்றிய விவரங்கள், செலுத்திய வரி போன்ற விவரங்களை அறிய வணிகர் பேரேடு (Dealer's Ledger) வசதி
- பொருட்களின் அட்டவணை மற்றும் வரிவிகிதம் தெரிந்து கொள்ளும் வசதி
- வரி செலுத்துவோர் அடையாள எண் அல்லது பெயர்மூலம் வணிகர்களின் முழு விவரங்களைத் தெரிந்துகொள்ளும் வசதி

மேலும், துறையின் அலுவலர்களுக்கு, அக இணைய வலைதளம் (Intranet) மூலம் கீழ்க்காணும் வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன:

2014 ஜூலை 30]

- வரி விதிப்பு வட்டம் முதல் மாநில் அளவில் வரை பல்வேறு சட்டங்களின்கீழ் வகுலிக்கப்பட்ட வரி வருவாய் பற்றிய உடனடி அறிக்கைகள்

- துறை அலுவலர்களின் செயல்திறன் குறித்த புள்ளிவிவர அறிக்கைகள்

- துறை வெளியிடும் சட்டம் மற்றும் விதிகள், அரசு ஆணைகள் மற்றும் அறிவிக்கைகள், படிவங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் தெளிவுரைகள்

- மாதாந்திர நுழைவாக்கள் தாக்கல் செய்தசெய்யாத வணிகர்கள் தொடர்பான அறிக்கை, மாதாந்திர நுழைவாக்கள்மீதான தணிக்கைகள், உள்வீடு மற்றும் வெளிவீடு வரிகளின் விவரங்கள் மற்றும் அதன்மீதான மேலாண்மை அறிக்கைகள் (MIS Reports)

- வணிகர்கள் தாக்கல் செய்த உள்வீட்டு வரி வரவு விவரங்களை மின்னணு (Online) குறுக்கு தணிக்கை செய்தல்

- மின்னணு முறையில், தவறான உள்வீட்டு வரி கோரிக்கைகள்மீதான அறிவிப்பு தயார் செய்தல்

- வரி விதிப்பு வட்டங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளுக்கான மென்பொருள் ஒருங்கிணைக்கப்பட்டு, அதன்மூலம் வரி விதிப்பு அலுவலர்கள் மாதாந்திர நுழைவாக்களில் பெறப்பட்ட விவரங்களை சோதனைச் சாவடியில் பதிவு செய்யப்பட்ட விவரங்களுடன் ஒப்பீடு செய்யும் வசதி

- மின்னஞ்சல் வசதி

மேற்காணும் வசதிகளைப் பயன்படுத்தி வரி ஏய்ப்பு செய்யும் வணிகர்களை, வணிக வரித் துறை அலுவலர்கள் எளிதில் இனங்கண்டு, வரி ஏய்ப்பைத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாகிறது.

21.12 வரித் தகவல் பரிமாற்ற அமைப்பு (Tax Information Exchange System)

வரித் தகவல் பரிமாற்ற அமைப்பு அனைத்து மாநில வணிக வரித் துறைகளிடையே தகவல் பரிமாற்றம் செய்து கொள்வதற்கு

[2014 ஜூலை 30

ஏதுவாக, மாநில நிதி அமைச்சர்களைக் கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட தீர்வாகும். இத்திட்டம், மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகப் பரிமாற்றங்களைச் சிறந்த முறையில் கண்காணிக்கப் பயன்படுகிறது. இதன்மூலம் வணிகப் பெருமக்களும், துறை அலுவலர்களும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பெறப்பட்ட சட்டபூர்வ படிவங்கள் பற்றிய விவரங்கள் மற்றும் வணிகர்களின் நிலை பற்றிய விவரங்களை அறிந்துகொள்ள முடியும்.

21.13 முழுமையான கணினிமயமாக்கல் (Total Solution Project)

வணிகர்களின் தேவைகளை மையப்படுத்தியும், வரி ஏய்ப்பினை கட்டுப்படுத்தவும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தின் உதவியுடன், துறையின் முழுமையான கணினிமயமாக்கலுடன் கூடிய ஒருமுகப்படுத்தப்பட்ட மின் ஆளுமைத் திட்டத்தினை வணிக வரித் துறை அறிமுகப்படுத்த உள்ளது. மேற்கண்ட குறிக்கோளை அடைவதற்கு உதவும் வகையில், துறையின் அனைத்து செயல்பாடுகளையும் ஆராய்ந்து முழுமையான தீர்வுக்கான வழிவகைகளை பரிந்துரைக்கும்பொருட்டு, ஆக்சென்சர் Accenture) என்ற தொழில்நுட்ப ஆலோசனை நிறுவனம் நியமிக்கப்பட்டது.

ஆக்சென்சர் (Accenture) நிறுவனம், ஏப்ரல் 2011 முதல் வணிக வரித் துறையின் நடைமுறைகள் மற்றும் உள் கட்டமைப்பு பற்றிய விரிவான ஆய்வினை மேற்கொண்டு, ஏனைய நாடுகளில் உள்ள நடைமுறைகளுடன் ஒப்பிட்டு, வணிக வரித் துறையின் குறிக்கோள்களை அடைய புதிய வடிவமைப்பினை உருவாக்கியுள்ளார்கள்.

துறையின் கணினிமயமாக்கலில் முழுமையான தீர்வு காண ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.230.96 கோடியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கான கணினி ஒருங்கிணைப்பாளரை தேர்வு செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, டாட்டா கன்ஸல்டன்சி சர்வீசஸ் என்ற நிறுவனம் இப்பணியை மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டது. அதற்கான ஒப்பந்தம் 9-12-2013 அன்று கையெழுத்திடப்பட்டது. செயல்பாட்டுத் தேவைகளுக்கான விவரக் குறிப்புகள் (Functional Requirement Specification) உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. செப்டம்பர்

2014 ஜூலை 30]

2014 முதல் சோதனை ஓட்டம் தொடங்கப்பட்டு, அக்டோபர் 2014 முதல் மாநில அளவிலான செயல்பாடுகள் இரண்டு கட்டங்களாகச் செயல்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை சிறந்த முறையில் செயல்படுத்திடவும், துறைக்கான மென்பொருள் மேம்படுத்துவதில் உள்ள தடைகளைக் களையவும் இத்திட்டமானது ஒரு முழுமையான மற்றும் சரியான திட்டமாக உருவாகிடவும் டாட்டா கன்ஸல்டன்சி சர்வீசஸ் நிறுவனத்துடன் இணைந்து செயல்பட துறை அலுவலர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட புதிய திட்டத்தினை செயல்படுத்தும் வகையில் வணிக வரித் துறையின் அனைத்து அலுவலகங்களிலும் புதிய கணினிகள் மற்றும் அதற்கான உபகரணங்கள் நிறுவப்பட உள்ளன. இதன்மூலம் துறையின் அனைத்துச் செயல்பாடுகளும் கணினிமயமாக்கப்படும். இதனால் வணிகர்கள், துறை அலுவலர்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளும் தேவை குறைகிறது. இதன்மூலம் வணிக வரித் துறையின் செயல்பாடுகள் எளிதாக்கப்படுவதுடன், வணிகர்களுக்கு பலவழிகளிலும் தரமான மின்னணு சேவைகள் வழங்கவும், தெளிவான வரி நிருவாக அமைப்பை உருவாக்கி, வரி ஏய்ப்பினை கட்டுப்படுத்தவும் ஏதுவாக இருக்கும்.

22 உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

22.1 சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

பொதுவாக, தனியார் கட்டடங்கள் அரசுத் துறை அலுவலகத்தின் தேவைக்கேற்ப வசதிகளுடன் இல்லாததால், இக்கட்டடங்களில் இயங்கிவரும் அரசு அலுவலகங்களை நாடி வரும் வணிகர்கள் மற்றும் அங்கு பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சிரமத்திற்குள்ளாகின்றனர். பணியாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு கூடுதல் வசதி செய்திடவும், பணி செய்வதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கவும் சொந்த கட்டடங்கள் தேவை என்பதைக் கருத்திற்கொண்டு 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.23 கோடி செலவில் 39 அலுவலகங்களை உள்ளடக்கிய 16 கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டது. இவற்றில் திருச்சியில் வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலையம், சேலம், திருவண்ணாமலை, மயிலாடுதுறை மற்றும் விழுப்புரம்

[2014 ஜூலை 30

ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகக் கட்டட வளாகம், பண்ருட்டி, நன்னிலம், லால்குடி மற்றும் கோவில்பட்டி ஆகிய இடங்களில் வணிக வரி அலுவலகக் கட்டடங்கள், ஈரோட்டில் வணிக வரி அலுவலக இணைப்புக் கட்டடம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் புழல் தணிக்கைச் சாவடிக் கட்டடம் ஆகிய அலுவலகக் கட்டடங்களின் பணிகள் நிறைவுற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11-6-2014 அன்று காணொலிக்காட்சிமூலம் திறந்துவைக்கப்பட்டது. இதரக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன. 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.11.18 கோடி செலவில், 16 வணிக வரி அலுவலகங்களுக்கு இராணிப்பேட்டை, விருத்தாசலம், அரியலூர், கள்ளக்குறிச்சி, செஞ்சி, அரூர், அம்பாசமுத்திரம், நாங்குநேரி, திருச்செந்தூர் மற்றும் திருப்பூர் ஆகிய 10 இடங்களில் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 4, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 22-1-2013-இல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அனைத்து இடங்களிலும் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பெரும்பாலான கட்டடங்கள் விரைவில் முடிக்கப்படும்.

வணிக வரித் துறை பணியாளர்கள் மற்றும் வணிகர்களின் தேவையினைக் கருத்திற்கொண்டு, தற்பொழுது கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள கட்டடங்கள், சாய்தளம் மற்றும் கைப்பிடிகள், பார்வையாளர் பகுதி, போதிய கழிப்பறை வசதிகளோடு, மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, தீயணைப்பு ஏற்பாடுகள் போன்றவற்றுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

13-5-2013 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சட்டப் பேரவை விதி எண் 110-ன்கீழ் ரூ.10.93 கோடி செலவில் 7 இடங்களில், 9 வணிக வரி அலுவலகங்கள் 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு சூரிய மின்சக்திக் கொள்கையின்படி சூரிய மின்சக்திக் கூரைகள் பொருத்தப்பட்டு கட்டப்படும் என அறிவித்தார்கள். அதற்கிணங்க, அரசாணை (நிலை) எண் 24, வணிக வரி மற்றும் பதிவுத் (டி.2) துறை, நாள் 26-2-2014-ல் நிருவாக ஒப்புதலும் நிதி ஒதுக்கீடும் அளிக்கப்பட்டு, பணிகள் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

2014 ஜூலை 30]

22.2 சோதனைச் சாவடிகள் மற்றும் சோதனை முனையங்களை நவீனமயமாக்குதல் (Modernisation of Checkposts and Check Points)

பணியாளர் பற்றாக்குறை, இணையதளங்களில் ஏற்படும் தடங்கல்கள், மின்தடை, அமைவிடங்கள் சரியாக அமையாமை, இடம் பற்றாக்குறை போன்ற பல்வேறு காரணங்களால் துறையிலுள்ள 28 சோதனைச் சாவடிகள் மற்றும் 8 சோதனை முனையங்களை இயங்குவதில் மிகுந்த சிரமம் இருந்தது. இந்த இடர்பாடுகளைக் களையவும், சோதனைச் சாவடி மற்றும் சோதனை முனையங்களை நவீனப்படுத்தவும், அரசாணை (நிலை) எண் 94, வணிக வரி மற்றும் பதிவுத் (அ1) துறை, நாள் 9-7-2012-இன்படி ரூ.33.36 கோடி (தொடரா செலவினம் - ரூ.28.95 கோடி, தொடர் செலவினம் - ரூ.4.41 கோடி) ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டது. இத்தொகையானது, நிலம் கையகப்படுத்துதல், புதிய கட்டடங்கள் கட்டுதல், கட்டடங்களைப் புதுப்பித்தல், வாகனங்கள் வாங்குதல், ஜென்செட்டுகள் வாங்குதல் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

22.3 சென்னை வணிக வரி கோட்டங்களின் எல்லையை மறு சீரமைத்தல் (Reorganisation of Chennai Commercial Taxes Divisions)

2013-2014 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, சென்னையிலுள்ள நான்கு வணிக வரிக் கோட்டங்களை மறுசீரமைத்து, அவற்றின் பணிகள் நெறிப்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேற்காணும் அறிவிப்பை செயல்படுத்துவது குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில், புவியியல் தொடர்ச்சி மற்றும் ஒவ்வொரு வரி விதிப்பு வட்டத்திலுள்ள வரி விதிப்பாளர்கள் மற்றும் வேலைப் பளுவினை சமமாக பகிர்ந்தளிக்கவும், மேலும் எதிர்கால வணிக வளர்ச்சி மற்றும் பதிவு பெற்ற முகவர்களின் எண்ணிக்கையை கருத்தில்கொண்டும் சென்னை வணிகவரிக் கோட்டங்களின் எல்லையை மறுசீரமைத்து அரசாணை (நிலை) எண் 23, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 27-3-2014-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்காணும் மறுசீரமைப்பின் காரணமாக நான்கு சென்னை வணிக வரி கோட்டங்களிலும் ஒவ்வொரு கோட்டத்திற்கும் தோராயமாக 29,000 வரி விதிப்புக்குட்படுத்தப்படுவோர் (Assessees) கொண்ட 2.5 வட்டங்கள் இருக்கும்.

[2014 ஜூலை 30

23. 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம்

அரசு அமைப்புகள் வெளிப்படையாக இயங்குவதற்காக, 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. வணிகப் பெருமக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ள வணிக வரித் துறை அதன் செயல்பாடுகள் எளிமையாகவும், வெளிப்படையாகவும் இருப்பதை உறுதி செய்கிறது. இக்குறிக்கோளை எய்திடும் நோக்கில், 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் பெறப்பட்ட அனைத்து மனுக்களுக்கும் இத்துறை சிறப்பு முக்கியத்துவம் அளித்து, உரிய தகவல்களை அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அளித்து வருகிறது.

24. 2014-2015 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டங்கள் (Part-II Scheme)

வ. எண்	திட்டத்தின் பெயர்	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
	வணிக வரித் துறை	
1.	3 கணிப்பொறிகள் வாங்குதல்	1.35
2.	கோயம்புத்தூர் செயலாக்கப் பிரிவு அலுவலகத்தில் வாகனங்கள் நிறுத்துவதற்கான கூரை (car shed for parking vehicles) அமைத்தல்	19.00
3.	சுற்றும் படைகள் வாகனத் தணிக்கை மற்றும் கண்காணித்தல் நடவடிக்கை மேற்கொள்ள உலக இடம் காட்டு அமைப்பு கொண்ட தொழில்நுட்பக் கருவி (online vehicles monitoring systems based on GPS technology) வாங்குதல்	29.50

2014 ஜூலை 30]

வ. எண்	திட்டத்தின் பெயர்	தொகை (ரூபாய் இலட்சத்தில்)
	தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம்	
4.	தீர்ப்பாய அலுவலகத்திற்கு 5 கணிப்பொறி (systems) ஒளி அச்சு நகல் (laser printer), தடையில்லா மின்சாதன கருவி (UPS) மற்றும் இதர துணைப் பொருட்கள் வாங்குதல்	2.60
5.	சென்னை, மதுரை மற்றும் கோவை தீர்ப்பாய அலுவலகங்களுக்கு மூன்று நகல் பெருக்கி (Xerox machine) வாங்குதல்	2.73
6.	சென்னை, மதுரை மற்றும் கோவை தீர்ப்பாய அலுவலகங்களுக்கு மூன்று நிகரி கருவிகள் (Fax machine) வாங்குதல்	0.40

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-II

(557 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 11-முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிகவரி மற்றும் பதிவுத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015

முன்னுரை

பதிவுத் துறை 1864 ஆம் ஆண்டு தனது செயல்பாடுகளைத் துவக்கி, தற்போது அதனுடைய செயல்பாட்டின் 150 ஆவது ஆண்டில் உள்ளது. இந்த இடைப்பட்ட காலத்தில், சொத்துப் பரிமாற்றங்களுக்கான ஆவணங்களைப் பதிவு செய்வது, திருமணங்களைப் பதிவு செய்வது, துறையினால் பாதுகாக்கப்பட்டு வரும் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவேடுகளிலிருந்து நகல்களை வழங்குவது, சங்கங்களின் பதிவு மற்றும் சீட்டுகளின் பதிவு போன்ற பொதுமக்களின் பல்வேறு நடவடிக்கைகளைப் பதிவு செய்வதன் மூலம், அவர்களின் வாழ்க்கையில் பதிவுத் துறை இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது. பதிவுத் துறை துவக்கப்பட்ட சமயத்தில் இரண்டு சட்டங்களை மட்டுமே நிருவகித்து வந்த நிலையில், காலப் போக்கில், துறை தனது நடவடிக்கைகளைப் பல்வேறு இனங்களில் பெருக்கிக்கொண்டு, தற்போது பதின்மூன்று சட்டங்களை, சிலவற்றை முழுமையாகவும், சிலவற்றைப் பகுதியாகவும், நிருவகித்து வருகின்றது. பதிவுத் துறையின் வளர்ச்சிக்குச் சான்றாக, துறை செயல்படத் துவங்கிய முதல் நிதியாண்டில் அதாவது 1865-66-ல் 1.26 இலட்சம் ஆவணங்களைப் பதிவு செய்து ரூ.1.43 இலட்சம் வருவாயை ஈட்டிய நிலையில், 2013-2014 ஆம் நிதியாண்டில் 26,53,921 ஆவணங்களைப் பதிவு செய்து ரூ.8,055.74 கோடி வருவாயை ஈட்டியுள்ளது. அரசுக்கு வருவாயை ஈட்டித் தருவதில் ஏற்பட்ட இந்த அபரிமிதமான வளர்ச்சி, வணிக வரி, மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறைகளுக்கு அடுத்தபடியாக மூன்றாவது பெரிய துறை என்னும் நிலையை' பதிவுத் துறைக்கு வழங்கியுள்ளது.

2014 ஜூலை 30]

2. துறையின் நிருவாக அமைப்பு

2.1 தலைமையிடம்

பதிவுத் துறைத் தலைவர் இத்துறையின் தலைவராவார் மற்றும் அவர் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ளார். துறையால் அதிக அளவில் சட்டங்கள் நிருவகிக்கப்படுவதால், இச்சட்டங்களின்படி பதிவுத் துறைத் தலைவருக்குப் பல்வேறு சட்டரீதியான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்படி முதன்மை வருவாய்க் கட்டுப்பாட்டு அதிகாரி, 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின்படி பதிவுத் துறைத் தலைவர், 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம் மற்றும் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் ஆகியவற்றின்படி பதிவாளர் ஆகியவை இவரால் ஆற்றப்படும் சில சட்டபூர்வமான பணிகளாகும். சட்டபூர்வமான பணிகள் மற்றும் அன்றாட நிருவாகம் ஆகியவற்றைச் செய்ய பதிவுத் துறைத் தலைவருக்கு உதவியாக பின்வரும் அலுவலர்கள் தலைமையிடத்தில் உள்ளனர்:-

(1) 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் மற்றும் 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் ஆகியவை தொடர்பான இனங்களைக் கவனித்துக் கொள்வதற்காக கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (முத்திரை மற்றும் பதிவு);

(2) வழிகாட்டி மதிப்புகளை நிர்ணயம் செய்வது, 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47ஏ(5) மற்றும் 56(2) ஆகியவற்றின்கீழ் பெறப்படும் மேல்முறையீடு மற்றும் நீதிமன்ற வழக்குகள் தொடர்பான இனங்களைக் கவனித்துக்கொள்வதற்காக கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி);

(3) துறையின் உள்கட்டமைப்பு மற்றும் தணிக்கை தொடர்பான இனங்களைக் கவனித்துக்கொள்வதற்காக கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு);

(4) சீட்டுகள் மற்றும் சங்கங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான சேவைகள் தொடர்பான இனங்களைக் கவனித்துக்கொள்வதற்காக கூடுதல் சீட்டுப் பதிவாளர் (கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில்).

[2014 ஜூலை 30

மேற்கண்ட இரண்டாம் நிலை அலுவலர்களைத் தவிர, துறையின் நிருவாகத்தினைக் கவனிக்க ஒரு நேர்முக உதவியாளர் (பொது) (துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையில்), தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, துறையை நவீனமயமாக்குவதைக் கவனிக்க ஒரு உதவி பதிவுத் துறைத் தலைவர் (கணினிமயமாக்கல்), துறையின் செயல்பாடுகள் குறித்து பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை விசாரிக்க ஒரு உதவி பதிவுத் துறைத் தலைவர் (விழிப்புப்பணி), வழிகாட்டி மதிப்புகளைத் தயாரிப்பதற்கு உதவியாக ஒரு மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி), சீட்டு மற்றும் சங்கங்கள் தொடர்பான பணிகளுக்கு உதவியாக ஒரு நேர்முக உதவியாளர் (சீட்டு), தணிக்கை தொடர்பான பணிகளில் உதவியாக ஒரு மாவட்டப் பதிவாளர் (ஆய்வு), கணினிமயமாக்கல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு உதவியாக ஒரு மாவட்டப் பதிவாளர் (கணினிமயமாக்கல்) ஆகியோர் உள்ளனர். வரவு செலவு கணக்கைத் தயாரித்தல் மற்றும் துறையின் கணக்குகளைப் பராமரித்தல் ஆகிய பணிகளுக்காக கருவூலக் கணக்குத் துறையிலிருந்து பகராண்மையில் ஒரு கணக்கு அலுவலரும் உள்ளார்.

பொது மக்களுடன் அதிக தொடர்புடைய காரணத்தினால், மாநிலம் முழுவதும் பரவியுள்ள துறையின் கள அலுவலகங்களின் விவரம் பின்வருமாறு:

2.2 மண்டல அலுவலகங்கள்

மாநிலத்தில், சென்னை, வேலூர், கடலூர், சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்ட 9 பதிவு மண்டலங்கள் உள்ளன. மண்டலத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பதிவு மாவட்டங்களின் அன்றாட நிருவாகத்தைக் கவனிக்கும் பொருட்டு ஒவ்வொரு மண்டலமும் ஒரு துணைப் பதிவுத் துறைத் தலைவரின்கீழ் செயல்படுகின்றது. வருவாய் வசூலைக் கண்காணிப்பது மற்றும் மண்டலத்திலுள்ள அலுவலகங்களைத் திடீர் ஆய்வு செய்வது ஆகியவை துணைப் பதிவுத் துறைத் தலைவரின் முதன்மைப் பணிகளாகும்.

2.3 வட்டார அலுவலகங்கள்

சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் உள்ள துணைப் பதிவுத் துறைத்

2014 ஜூலை 30]

தலைவரின் பணிகளில் அவருக்கு உதவியாக வட்டார அலுவலகங்கள் ஒவ்வொன்றும் ஒரு உதவி பதிவுத் துறைத் தலைவரின்கீழ் இயங்கி வருகின்றது.

2.4 மாவட்ட அளவிலான அலுவலகங்கள்

மாநிலம் முழுவதும் 50 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டங்கள் ஒரு நிருவாக மாவட்டப் பதிவாளரின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. வட சென்னை, மத்திய சென்னை, தென் சென்னை, வேலூர், சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை வடக்கு, மதுரை தெற்கு மற்றும் திருநெல்வேலி ஆகிய பதிவு மாவட்டங்களில், அவ்வலுவலகங்களிலுள்ள பணிப் பளுவின் காரணமாக, நிருவாக மாவட்டப் பதிவாளர் பணியிடம் உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலைக்கு நிலை உயர்த்தப்பட்டுள்ளன. மாவட்டப் பதிவாளர்கள் 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம், 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம், 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம் மற்றும் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் ஆகியவற்றின்கீழ் சில சட்டரீதியான பணிகளை ஆற்றுவதுடன், தங்களது பதிவு மாவட்டத்திலுள்ள சார் பதிவாளர் அலுவலகங்களைக் கண்காணிப்பது மற்றும் மாவட்டத்தின் பொதுவான நிருவாகத்தையும் கவனிக்கின்றனர். சீட்டுகள், சங்கங்கள் மற்றும் கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் ஆகியவை மாவட்டப் பதிவாளரிடம் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும். மற்றும் முத்திரைத் தாள் விற்பனையாளர்களுக்கு உரிமம் வழங்கும் அலுவலர்களாகவும் இவர்கள் உள்ளனர்.

2.5 தணிக்கை அலகுகள்

பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்யவும் மற்றும் அவற்றின்மீது சரியான முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்க்கவும் மாநிலம் முழுவதும் 45 தணிக்கை அலகுகள் ஒவ்வொன்றும் ஒரு மாவட்டப் பதிவாளரின்கீழ் இயங்குகின்றன. இவை, சார் பதிவாளர் அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களையும் தணிக்கை செய்து, முரண்பாடுகள் ஏதுமிருப்பின் அதனைக் கண்டறிகின்றன.

[2014 ஜூலை 30

2.6 சார் பதிவாளர் அலுவலகங்கள்

அதிக அளவில் பொது மக்களால் அணுகப்படுவதன் காரணமாக, நமது மாநிலத்தில் மொத்தம் 578 சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. இது ஒத்த மாநிலங்களை ஒப்பிடுகையில் அதிகமாகும். இவற்றில், குளத்தூர், கொல்லிமலை மற்றும் படுக்கப்பத்து ஆகிய இடங்களில் உள்ளவை முகாம் அலுவலகங்களாகும். 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, சார் பதிவாளர்கள் சொத்துப் பரிமாற்றம் தொடர்பான ஆவணங்களைப் பதிவு செய்து அவற்றின் மீது முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிக்கின்றனர். பல்வேறு வழக்கங்களின்படி நடைபெற்ற திருமணங்களையும் பதிவு செய்கின்றனர்: பேரூராட்சி மற்றும் கிராமப் பஞ்சாயத்துகளின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் சார் பதிவாளர் அலுவலகங்களில் பாதுகாக்கப்படுவதுடன், கோரப்படும் போது இவற்றிலிருந்து நகல்களையும் சார்பதிவாளர்கள் வழங்குகின்றனர். 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் உதவி பதிவாளர்களாகவும் இவர்கள் உள்ளனர்.

2.7 மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை)/தனித் துணை ஆட்சியர் (முத்திரை)

1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவு 47ஏ-ன்படி, கிரயம், பரிமாற்றம், தானம், பினாமி உரிமை விடுதலை மற்றும் ஏற்பாடு ஆகிய ஆவணங்களுக்கு அவற்றிலுள்ள சொத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும். மேற்கூறப்பட்ட ஆவணங்களைப் பதிவு செய்கையில், அவற்றிலுள்ள சொத்தின் சரியான சந்தை மதிப்பு குறிப்பிடப்படவில்லையென சார் பதிவாளர் கருதக் காரணமிருக்குமேயானால், மேற்கண்ட சட்டப் பிரிவின்கீழ் சரியான சந்தை மதிப்பு மற்றும் செலுத்தத்தக்க முத்திரைத் தீர்வையை நிர்ணயிக்க அந்த ஆவணத்தை ஆட்சியருக்கு அவர் அனுப்ப வேண்டும். 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவு 47ஏ-ன்கீழ் ஆட்சியருக்கு உண்டான அதிகாரத்தைச் செயல்படுத்த, சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரண்டு இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு மாவட்ட வருவாய் அலுவலரும் (முத்திரை) மற்றும் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், வேலூர், கடலூர், விருதுநகர்,

2014 ஜூலை 30]

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஒன்பது இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தனித் துணை ஆட்சியரும் (முத்திரை) ஆட்சியராக அறிவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள், தங்களுக்கு அனுப்பப்படும் ஆவணங்களில் உள்ள சொத்தின் சந்தை மதிப்பு மற்றும் செலுத்தத்தக்க முத்திரைத் தீர்வை ஆகியவற்றை நிர்ணயிக்கின்றனர்.

2013-2014 ஆம் ஆண்டில், 20794 ஆவணங்கள் இவ்வலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு, 20,489 ஆவணங்கள்மீது சந்தை மதிப்பு நிர்ணயம் செய்து ரூ.104.86 கோடி வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

2.8 புலனாய்வுப் பிரிவு

கட்டடத்துடன் சேர்ந்த சொத்துப் பரிமாற்றம் தொடர்பான ஆவணத்தின்மீது, கட்டடப் பகுதியின் மதிப்பின்மீதும் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும். கட்டடப் பகுதியை ஆவணங்களில் மறைத்து எழுதி, அதனால் அரசுக்கு வர வேண்டிய நியாயமான வருவாய் வராமல் போன நிகழ்வுகள் கண்டறியப்பட்டதால், இத்தகைய ஏய்ப்பை முற்றிலும் தடுத்திட, துறையில் கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் ஒருவரின் தலைமையில் புலனாய்வுப் பிரிவு ஒன்று செயல்படுகிறது. மேலும், தொழிற்சாலைகள், ஓட்டல்கள், வணிக வளாகங்கள் போன்ற தனி வகையான கட்டடங்களை மதிப்பீடு செய்வதற்காக பொதுப் பணித் துறையிலிருந்து பகராண்மைமூலம் உதவி செயற் பொறியாளர்கள் இருவர் சென்னை மற்றும் மதுரையில் பணியாற்றுகின்றனர்.

2.9 பதிவுத் துறை பயிற்சி நிலையம்

அதிக அளவில் சட்டங்களை நிர்வகிக்கும் பதிவுத் துறையில், அதன் பணியாளர்கள் அச்சட்டங்களின் பல்வேறு அம்சங்கள் குறித்து செம்மையாகத் தெரிந்து கொள்வது இன்றியமையாததாகையால், இது தொடர்பாக பயிற்சியளிக்க, 1996 ஆம் ஆண்டு முதல் பதிவுத் துறைப் பயிற்சி மையம் சென்னையில் செயல்பட்டு வருகின்றது. துணைப் பதிவுத் துறைத் தலைவர் ஒருவரின் கீழ் செயல்படும் இம்மையத்தில், இரண்டு விரிவுரையாளர்கள், ஒருவர் உதவி பதிவுத் துறைத் தலைவர் நிலையிலும், மற்றொருவர் மாவட்டப் பதிவாளர் நிலையிலும் உள்ளனர். இம்மையத்தில் பயிற்சி பெறும் பணியாளர்களின்

நலனுக்காக ரூ.49 இலட்சம் செலவில் புதியதாக தங்கும் விடுதி கட்டப்பட்டு 6-11-2013 அன்று திறக்கப்பட்டது. 2013-2014 ஆம் ஆண்டு முதல் பயிற்சி வசதிகளை மேம்படுத்துவதற்காக கூடுதலாக ரூ.30 இலட்சம் ஒதுக்கப்படுகின்றது. துறையால் வழங்கப்படும் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான சேவைகளிலும் பணியாளர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

3. துறையால் நிருவகிக்கப்படும் சட்டங்கள்

பதிவுத் துறையால் நிருவகிக்கப்படும் 13 சட்டங்களில், 4 முழுமையாகவும், 9 பகுதியாகவும் நிருவகிக்கப்படுகின்றன. இவற்றின் விவரம் பின்வருமாறு:

அ) முழுமையாக நிருவகிக்கப்படும் சட்டங்கள்

(1) 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899)

(2) 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 16/1908)

(3) 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 27/1975)

(4) 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982)

ஆ) பகுதியாக நிருவகிக்கப்படும் சட்டங்கள்

(1) 1872 ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 15/1872)

(2) 1886 ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு மறறும் திருமணங்கள் பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 6/1886)

(3) 1932 ஆம் ஆண்டு பார்சி திருமணம் மறறும் விவாகரத்துச் சட்டம் (மத்திய சட்டம் 2/1932)

(4) 1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம் (மத்திய சட்டம் 9/1932)

(5) 1954 ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 43/1954)

2014 ஜூலை 30]

(6) 1955 ஆம் ஆண்டு இந்துத் திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 25/1955)

(7) 1961 ஆம் ஆண்டு வரதட்சணைத் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 28/1961)

(8) 1969 ஆம் ஆண்டு பிறப்பு மற்றும் இறப்புச் சட்டம் (மத்திய சட்டம் 18/1969)

(9) 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/2009)

4. வருவாய் வசூல் மற்றும் ஆவணப் பதிவு

பதிவுத் துறை, ஆவணங்களைப் பதிவு செய்யும்போது, அவற்றின்மீது முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிப்பதுடன், வில்லங்கச் சான்று, பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல் ஆகியவை வழங்குதல் மற்றும் திருமணப் பதிவின்போது அதற்குரிய கட்டணத்தை வசூலிக்கின்றது. சில வகையான ஆவணங்களின்மீது, முத்திரைத் தீர்வையின் மீதான மிகு வரியையும், உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றுவதற்கு, பதிவுத் துறை வசூலிக்கின்றது. கடந்த 10 ஆண்டுகளில் துறையால் ஈட்டப்பட்ட வருவாய் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் பட்டியல் பின்வருமாறு:

ஆண்டு	வருவாய் (ரூ. கோடியில்)	வளர்ச்சி விகிதம் (%)	பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள்	வளர்ச்சி விகிதம் (%)
2004-05	1,881.53	8.58%	17,61,696	10.59%
2005-06	2,348.64	24.83%	20,11,566	14.18%
2006-07	3,407.50	45.08%	24,92,294	23.90%
2007-08	4,232.36	24.21%	26,91,002	7.97%
2008-09	4,099.54	-3.14%	28,32,686	5.27%
2009-10	3,818.25	-6.86%	27,31,026	-3.59%
2010-11	5,020.50	31.49%	32,80,503	20.12%
2011-12	6,619.98	31.86%	35,18,435	7.25%
2012-13	7,455.41	12.62%	26,90,351	-23.54%
2013-14	8,055.74	8.05%	26,53,291	-1.38%

[2014 ஜூலை 30

5. உள்ளாட்சி மன்றங்களின் சார்பாக வசூலிக்கப்படும் மிகுவரி

கிரயம், தானம், பரிமாற்றம், அனுபோக உரிமையுடன்கூடிய அடமானம் மற்றும் நிரந்தரக் குத்தகை ஆகிய ஆவணங்களைப் பதிவு செய்யும் போது, உள்ளாட்சி மன்றங்களுக்கு சேர வேண்டிய மிகுவரியை, முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்துடன் சேர்த்து பதிவுத் துறை வசூலிக்கின்றது. இவ்வாறு வசூலிக்கப்படும் மிகுவரியில், வசூலிப்புக் கட்டணமாக துறை 3 சதவிகிதத்தை இருத்திக் கொண்டு, எஞ்சிய 97 சதவிகிதத்தை உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றுகின்றது. உள்ளாட்சி மன்றங்களுக்கு இது முக்கிய வருவாய் ஆதாரமாக உள்ளது. 2013-2014 ஆம் ஆண்டில், மிகுவரியாக வசூலிக்கப்பட்ட ரூ.1,651.15 கோடியில், உள்ளாட்சி மன்றங்களுக்குச் சேர வேண்டிய பங்கு ரூ.1,601.62 கோடி மற்றும் ரூ. 49.53 கோடி துறை வசூலிப்புக் கட்டணமாக இருத்திக் கொண்டுள்ளது.

6. முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தை செலுத்தும் வழிகள்

1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்படி, முத்திரைத் தீர்வையை நீதி சாரா முத்திரைத் தாள்கள் மூலமாகவோ அல்லது சிறப்பு ஒட்டு வில்லைகள் (Special Adhesive Stamps) மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும். நீதி சாரா முத்திரைத் தாள்கள் (Non-Judicial Stamp Papers) கிடைக்காத தருணங்களில், முத்திரைத் தீர்வையை ரொக்கமாகச் செலுத்தவும் சட்டம் வழி வகுக்கின்றது. சார் பதிவாளர் அலுவலகங்களில் ரொக்க தொகையைக் கையாள்வதைக் குறைக்கும் பொருட்டு, ரூ.1,000/-க்கு மேலான முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வங்கி வரைவோலைகள் மூலமாக மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

இதுவன்றி, சென்னை மண்டலத்தைப் பொறுத்தவரை, முத்திரைத் தீர்வையை, மின்னணு முத்திரையிடும் முறை மூலமாகவும் செலுத்தலாம்.

மேலும், முத்திரைத் தீர்வை, பதிவுக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை வங்கிகள் மூலமாகச் செலுத்தும் வசதி விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

2014 ஜூலை 30]

7. இதர பணிகள்

7.1 சங்கங்கள் பதிவு

கல்வி, விஞ்ஞானம், சமயம், அறநிலையம் போன்ற நோக்கங்களைக் கொண்ட சங்கங்களைப் பதிவு செய்வதற்கு, 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம் வழிவகை செய்கின்றது. இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்ய வேண்டிய எந்தவொரு சங்கமும் சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளரிடம் பதிவு செய்ய வேண்டும். இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் ஆண்டுதோறும் மாவட்டப் பதிவாளரிடம் தங்களது ஆண்டுக் கணக்கைக் கோர்வை (file their annual accounts) செய்ய வேண்டும். ஆண்டுக் கணக்கைக் கோர்வை செய்வதில் ஏற்படும் தாமதத்தைப் பொறுத்தருள அரசுக்கு மட்டுமே அதிகாரம் இருந்தது. இந்த அதிகாரத்தைப் பரவலாக்கும் விதமாகவும், ஆண்டுக் கணக்கைத் தாமதமாகக் கோர்வை செய்யும் வழக்கத்தைத் தடுக்கும் விதமாகவும், சட்டத்திற்குத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, அதன்படி மூன்றாண்டுகள் வரையிலான காலத்திற்கு மாவட்டப் பதிவாளரும், ஐந்தாண்டுகள் வரையிலான காலத்திற்கு பதிவுத் துறைத் தலைவரும், உரிய அபராதத் தொகையைப் பெற்றுக் கொண்டு கால தாமதத்தைப் பொறுத்தருளி ஆணையிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஐந்தாண்டுகளுக்கு மேலான காலதாமதம் குறித்து அரசால் மட்டுமே ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும். தவறான நிருவாகம் அல்லது சட்டத்தின் நெறிமுறைகளுக்கு மீறி செயல்படும் சங்கத்தின் நிருவாகத்தைக் கலைக்க தனி அலுவலரை நியமிக்கும் அதிகாரம் அரசிற்கு உள்ளது. 31-3-2014 அன்றுள்ளபடி, மாநிலத்தில் மொத்தம் 1,58,405 பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் உள்ளன.

7.2 சீட்டுக்கள் பதிவு

1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்படி, சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளரிடம் சீட்டுக்களைப் பதிவு செய்ய வேண்டியது கட்டாயமாகும். அவ்வாறு பதிவு செய்யாமல் நடத்தப்படும் சீட்டுக்கள் சட்டத்திற்குப் புறம்பானதாகும். சீட்டுக்களின் பதிவாளராக உள்ள பதிவுத் துறைத் தலைவர்,

[2014 ஜூலை 30

மாநிலம் முழுவதிலும் சீட்டுக்களின் பதிவு மற்றும் அவற்றின் நடைமுறையைக் கண்காணிக்கும் அதிகாரம் பெற்றவராக உள்ளார். மாநிலம் முழுவதிலும் 47 சார் பதிவாளர்கள் தங்களின் எல்லைக்குள் நடைபெறும் சீட்டுக்கள் மற்றும் சங்கங்கள் தொடர்பான பணிகளைக் கவனித்து வருகின்றனர். சீட்டுக்கள் தொடர்பான வழக்குகளை விசாரித்து சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர்கள் ஆணை பிறப்பிக்கின்றனர். மத்திய சென்னை, வட சென்னை மற்றும் தென் சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இப்பணியைக் கவனிக்க மாவட்டப் பதிவாளர் நிலையில் 3 சீட்டு நடுவர்கள் உள்ளனர். மாவட்டப் பதிவாளர் / சீட்டு நடுவர் பிறப்பிக்கும் ஆணையை எதிர்த்து அரசிடம் மேல்முறையீடு செய்யலாம்.

31-3-2014 அன்றுள்ளவாறு 2,260 பதிவு செய்யப்பட்ட சீட்டு நிறுவனங்கள் மாநிலத்தில் உள்ளன.

7.3 கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் பதிவு

1932 ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டத்தின்படி, கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் எந்த மாவட்டப் பதிவாளரின் ஆட்சி எல்லைக்குள் நிறுவனம் அமைந்துள்ளதோ அவரிடம் பதிவு செய்யப்பட வேண்டும். 31-3-2014 அன்றுள்ளவாறு, மாநிலத்தில் 5,71,221 பதிவு செய்யப்பட்ட கூட்டுப் பங்காண்மை நிறுவனங்கள் உள்ளன.

7.4 திருமணப் பதிவு

திருமணங்களின் பதிவு, சார் பதிவாளரால் மேற்கொள்ளப்படும் ஒரு முக்கியமான பணி ஆகும். திருமணம் நடத்தப்படும் வழக்கத்தின் அடிப்படையில் பல்வேறு சட்டங்கள் அவற்றின் பதிவிற்கு வழி வகுக்கின்றன. அவை பின்வருமாறு:

7.4.1 1955 ஆம் ஆண்டு இந்துத் திருமணச் சட்டம்

இந்து சமயத்தைச் சார்ந்தவர்களிடையே நடைபெற்ற திருமணங்கள் இந்தச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றன. 2013-2014 ஆம் ஆண்டில் 46,844 திருமணங்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2014 ஜூலை 30]

7.4.2 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம்

பல்வேறு சமயங்களைச் சார்ந்தவர்களிடையே நடைபெறும் திருமணங்கள் இந்தச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றன. இச்சட்டத்தின்படி, திருமணம் செய்து கொள்ள உத்தேசித்துள்ளோர், அதுகுறித்து ஒரு விண்ணப்பத்தை தங்களது எல்லைக்குட்பட்ட சார் பதிவாளரிடம் அளிக்க வேண்டும். அவர் தனது அலுவலகத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள திருமணம் குறித்து ஓர் அறிவிப்பினைச் செய்வார். அவ்வாறு அறிவிப்பு செய்யப்பட்ட ஒரு மாதத்திற்குப் பின், எவரிடமிருந்தும் ஆட்சேபனை பெறப்படாத பட்சத்தில், திருமணம் பதிவு செய்யப்படும். 2013-2014 ஆம் ஆண்டில் 7,235 திருமணங்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

7.4.3 1872 ஆம் ஆண்டு இந்திய கிறிஸ்துவத் திருமணச் சட்டம்

கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்தவர்களிடையே நடைபெற்ற திருமணங்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றன. இச்சட்டத்தின்படி திருமணங்கள் அவற்றை நடத்தி வைக்க உரிமம் பெறப்பட்டோரால் நடத்தப்பட்டு, அதன் விவரங்கள் சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பப்படுகின்றன. மாவட்டப் பதிவாளரால் இவ்விவரங்கள் பதிவுத் துறைத் தலைவருக்கு அனுப்பப்பட்டு, பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேட்டில் அவை பதிவு செய்யப்படுகின்றன. திருமணத்திற்குச் சான்றாக இப்பதிவேட்டிலிருந்து நகல் வழங்கப்படுகின்றது.

7.4.4 தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், 2009

உச்ச நீதிமன்ற ஆணையைச் செயல்படுத்தும் விதமாக, மாநிலத்தில் நடைபெறும் அனைத்துத் திருமணங்களையும் பதிவு செய்வதைக் கட்டாயமாக்கி, 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. 2013-2014 ஆம் ஆண்டில் 62,836 திருமணங்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

[2014 ஜூலை 30

8. வழிகாட்டி மதிப்பு

1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின்படி, பரிமாற்றம் செய்யப்படும் சொத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட வேண்டும். பதிவு அலுவலர்கள் சொத்துகளின் சந்தை மதிப்பு குறித்து அறிந்துகொள்வதற்கு ஏதுவாக, கிராமவாரியான வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. வழிகாட்டி மதிப்புகளை நிர்ணயம் செய்யத் தேவையான வழிமுறைகளை வகுக்கவும் மற்றும் வழிகாட்டி மதிப்பில் திருத்தம் செய்வது தொடர்பாக முடிவெடுக்கவும் பதிவுத் துறைத் தலைவரைத் தலைவராகவும் பல்வேறு அரசுத் துறைகளைச் சார்ந்தவர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட மதிப்பீட்டுக் குழு ஒன்றினையும் இந்த வழிமுறைகளின்படி வழிகாட்டி மதிப்புகளை நிர்ணயம் செய்ய ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் மதிப்பீட்டுத் துணைக் குழுக்களையும் அரசு அமைத்துள்ளது. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்ட வழிகாட்டி மதிப்புகள் *1-4-2012* முதல் அமல்படுத்தப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. *2014* ஆம் ஆண்டில் வழிகாட்டி மதிப்புகளைத் திருத்தம் செய்ய வேண்டியதில்லையென மதிப்பீட்டுக் குழு முடிவு செய்துள்ளது. மாநிலம் முழுமைக்குமான வழிகாட்டி மதிப்புகள் துறையின் இணையதளமான www.tnreginet.net-ல் வெளியிடப்பட்டுள்ளது.

9. முத்திரைத் தீர்வை குறைப்பு

1-4-2012 முதல் திருத்தப்பட்ட வழிகாட்டி மதிப்புகள் அமல்படுத்தப்பட்ட பின்னர், பொது மக்களின் சுமையைக் குறைக்கும் பொருட்டு, விற்பனை ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை *6* சதவிகிதத்திலிருந்து *5* சதவிகிதமாக *1-4-2012* முதல் குறைக்கப்பட்டது. மேலும், ஏழை மக்களின் சிரமத்தைக் குறைக்கும் பொருட்டு, விற்பனை ஆவணங்கள்மீதான முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டண விலக்கு பெறுவதற்கான அப்போதிருந்த உச்சவரம்பான ரூ.*5,000*/- என்பதை ரூ.*25,000*/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது.

2014 ஜூலை 30]

10. உள்கட்டமைப்பு மேம்பாடு

10.1 கட்டடங்கள் கட்டுதல்

பதிவுத் துறையில் பல அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் செயல்பட்டு வருவதால், அனைத்து அலுவலகங்களுக்கும் 5 ஆண்டுகளுக்குள் சொந்த அரசுக் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். இந்த இலக்கை எய்துவதற்காக, 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.26 கோடி செலவில் 52 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும், 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.48.90 கோடி செலவில் 28 சார் பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 17 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்களும், தனியாக 48 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும் கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. 2013-2014 ஆம் ஆண்டில், ரூ.30 கோடி செலவில் 11 சார் பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 4 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்களும், தனியாக 35 சார் பதிவாளர் அலுவலகங்களுக்குக் கட்டடமும் கட்ட ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

10.2 மின்னாக்கிகள் (Generators) வழங்குதல்

பொது மக்களுக்குத் தடையில்லா சேவையை வழங்குவதற்கு ஏதுவாக, அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களுக்கும் படிப்படியாக மின்னாக்கிகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கேற்ப 2012-2013 ஆம் ஆண்டில் 150 அலுவலகங்களுக்கு ரூ.4.50 கோடி செலவில் மின்னாக்கிகள் வழங்கப்பட்டன. 2013-2014 ஆம் ஆண்டில் மேலும் 150 அலுவலகங்களுக்கு ரூ.4.82 கோடி செலவில் மின்னாக்கிகள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

10.3 தீ தடுப்பு உபகரணங்கள் வழங்குதல்

பதிவுத் துறை அலுவலகங்களால் கையாளப்படும் அதிக அளவிலான பதிவுருக்கள் நிரந்தரத் தன்மை கொண்டவையாகும். இந்தப் பதிவுருக்களை தீ விபத்துகளிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன், ரூ.4.78 கோடி செலவில் அனைத்துப் பதிவுத் துறை

[2014 ஜூலை 30

அலுவலகங்களுக்கும் தீ தடுப்பு உபகரணங்கள் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

11. புதிய நடவடிக்கைகள்

11.1 தமிழ்நாடு முத்திரைச் சட்டம்

1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்திலுள்ள வழிமுறைகளின்படி நமது மாநிலத்தில் முத்திரைத் தீர்வை விதிக்கப்பட்டு வருகின்றது. இச்சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டுள்ளதால், நமது மாநிலத்திற்கேற்றவாறு ஏதேனும் திருத்தம் செய்ய வேண்டுமெனில், அதற்கான சட்டமுன்வடிவு மாநில சட்டமன்றத்தில் இயற்றப்பட்டவுடன் இந்தியக் குடியரசுத் தலைவரால் இசைவு அளிக்கப்பட வேண்டும். இதனால் கால விரயமேற்படும். எனவே, இந்த நடைமுறையைத் தவிர்க்கும் பொருட்டு, நமது மாநிலத்திற்கென தனியாக முத்திரைச் சட்டம் ஒன்றினை இயற்ற முடிவு செய்யப்பட்டு அதற்கான சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் இயற்றப்பட்டு, இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவினைப் பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. குடியரசுத் தலைவரின் இசைவு பெற்றவுடன் நமது மாநிலத்திற்கான முத்திரைச் சட்டம் அமல்படுத்தப்படும். அதன் பின்னர் திருத்தம் ஏதும் தேவைப்படின் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெற்று செயல்படுத்தலாம்.

11.2 கட்டுமான உடன்படிக்கைகளுக்கு முத்திரைத் தீர்வை விதிப்பு

அடுக்கு மாடிக் குடியிருப்புகளின் முதல் விற்பனையின்போது, கட்டடப் பகுதியை விட்டு விட்டு, பிரிபடாத அடிமனைப் பகுதியின் விற்பனையை மட்டுமே பதிவு செய்யும் போக்கு நிலவி வந்தது. எனவே, பிரிபடாத அடி மனையின் மதிப்பிற்கு மட்டுமே முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்தப்பட்டு வந்தது. கட்டடப் பகுதியின் விற்பனையைத் தவிர்த்து வந்ததால், அரசுக்கு வர வேண்டிய வருவாயில் இழப்பு ஏற்பட்டது. அடுக்கு மாடிக் குடியிருப்புகளின் முதல் விற்பனையின்போது கட்டடப் பகுதியை விட்டு விடுவதால் ஏற்படும் முத்திரைத் தீர்வை ஏய்ப்பைத் தடுக்கும் பொருட்டு, பிரிபடாத அடி மனையில்

2014 ஜூலை 30]

கட்டடம் கட்டுவதற்காக செய்து கொள்ளப்படும் கட்டுமான உடன்படிக்கைகளுக்கு 1 சதவிகிதம் முத்திரைத் தீர்வை விதிக்கும் விதமாக, 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்திற்குத் திருத்தமும், இவற்றின் பதிவினைக் கட்டாயமாக்கி அதன்மீது 1 சதவிகிதம் பதிவுக் கட்டணம் வசூலிக்கும் விதமாக 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்திற்குத் திருத்தமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சட்டத் திருத்தம் 1-10-2013 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 1-10-2013 முதல் 31-3-2014 வரையிலான காலகட்டத்தில், கட்டுமான உடன்படிக்கைகளைப் பதிவு செய்ததன்மூலம் மாநிலம் முழுவதும் ரூ.41.64 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

11.3 இணைய நெறிமுறையிலான புகைப்படக் கருவிகள் நிறுவியது

சார் பதிவாளர் அலுவலகங்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு ஏதுவாக மாநிலம் முழுவதிலுமுள்ள அனைத்து அலுவலகங்களிலும் ரூ.3.46 கோடி செலவில் இணைய நெறிமுறையிலான புகைப்படக் கருவிகள் நிறுவப்பட்டு இவை 6-11-2013 முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளன.

11.4 பதிவுத் துறைக்கென உயர் நீதிமன்றத்தில் தனியாக வழக்கறிஞர் பிரிவு

பதிவுத் துறை அலுவலர்களின் ஆணையினை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்திலும் அதன் மதுரைக் கிளையிலும் அதிக அளவில் வழக்குகள் தொடரப்பட்டு வருகின்றன. இவ்வழக்குகளை நேர்த்தியாக எதிர்கொள்வதற்கு ஏதுவாக பதிவுத் துறைக்கென ஒரு சிறப்பு அரசு வழக்குரைஞரும் அவருக்கு உதவியாக சென்னை உயர் நீதிமன்றத்தில் இரண்டு அரசு வழக்கறிஞர்களும் அதன் மதுரைக் கிளையில் ஓர் அரசு வழக்கறிஞரும் கொண்ட வழக்கறிஞர் பிரிவு அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

11.5 ஆவணங்களைப் பதிவு செய்வதற்காக சார் பதிவாளர்களுடன் முன்பதிவு வசதி

ஆவணங்களைப் பதிவு செய்வதற்காக இணையதளம் மூலமாக சார் பதிவாளருடன் நேரத்தை முன்பதிவு செய்யும் வசதி 6-11-2013

[2014 ஜூலை 30

முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது பொது மக்கள் தங்களுக்கு சௌகரியமான நேரத்தில் ஆவணத்தைப் பதிவு செய்து கொள்ளும் வாய்ப்பை வழங்கியுள்ளது.

11.6 சொத்து தொடர்பான வில்லங்கம் குறித்த விவரங்களை இணையதளம் மூலம் அறிதல்

சொத்துகள் குறித்த வில்லங்கம் தொடர்பாக அறிவதற்காக தற்போது பொது மக்கள் சார் பதிவாளர் அலுவலகங்களை அணுகி வில்லங்கச் சான்றுகளைப் பெறுகின்றனர். பொது மக்களுக்கு இதனை எளிதாக்க, இணையதளம்மூலம் வில்லங்கம் தொடர்பான விவரங்களைப் பார்வையிடுவதற்கும் அதனைப் பிரதி எடுத்துக்கொள்வதற்குமான வசதி 11-06-2014 அன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

11.7 பதிவுத் துறையை சீரமைத்தல்

மாநிலத்தில் மொத்தம் 50 பதிவு மாவட்டங்கள் இருந்தாலும், சில வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் பதிவு மாவட்டத் தலைமையிடம் இல்லை. எனவே அனைத்து வருவாய் மாவட்டத் தலைநகரங்களிலும் பதிவு மாவட்டத் தலைமையிடம் இருக்கும் விதமாகப் பதிவுத் துறையை சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

11.8 பதிவுருக்களை நுண்ணிய படம் பிடித்து மின்னணுமயமாக்குதல் (Microfilming and Digitization of records)

பதிவுத் துறையால் பேணப்படும் பதிவுருக்கள் காகிதங்களால் ஆன நிரந்தரத் தன்மை கொண்டவை ஆகும். அவற்றை அடிக்கடிக் கையாள்வதால் காலப்போக்கில் அவை சிதிலமடைந்து விடுகின்றன. இந்தப் பதிவுருக்களைப் பாதுகாக்கும்வண்ணம் அவற்றை நுண்ணிய படம் பிடித்து மின்னணுமயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

11.9 இணைய புகைப்படக் கருவி மற்றும் விரல் ரேகை எடுக்கும் இயந்திரம் (Bio-Metric Device and Web Camera)

1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின்படி, ஆவணத்தைப் பதிவு செய்வோரின் விரல் ரேகையும் புகைப்படமும் ஆவணத்தில் பதிவு

2014 ஜூலை 30]

செய்யப்பட வேண்டும். இதற்காக ஆவணங்களைப் பதிவு செய்வோர் அவற்றில் தங்களின் புகைப்படத்தை ஒட்டியும், விரல் ரேகையைப் பதித்தும் வந்தனர். இதனை எளிதாக்கும் விதமாக, ஆவணத்தைப் பதிவு செய்வோரின் புகைப்படத்தை இணைய புகைப்படக் கருவிமூலம் படம் பிடித்தும் அவர்களின் விரல் ரேகையை இயந்திரம் மூலம் எடுக்கும் வசதியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் பொது மக்களுக்கு அதிக அளவில் கால விரையம் தவிர்க்கப்பட்டுள்ளது.

12. தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு (USAGE OF INFORMATION TECHNOLOGY)

பொது மக்களுடன் பதிவுத் துறை அதிக தொடர்பு கொண்டுள்ளதால், அவர்களுக்கு விரைவான சேவை வழங்குவது இன்றியமையாததாகின்றது. இந்த நோக்கத்துடன், கடந்த பத்தாண்டுகளில் துறையின் நடவடிக்கைகள் படிப்படியாக கணினிமயமாக்கப்பட்டன. இதனை மேலும் செம்மையாக்கும் விதமாக, இணைய அடிப்படையிலான மென்பொருள் மற்றும் தேவையான வன்பொருள் மற்றும் அதுதொடர்பான சாதனங்கள் வாங்குவதற்காக ரூ.117.34 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான மென்பொருள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இது விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவுள்ளது.

பதிவுத் துறையின் அலுவலர்களால் வழங்கப்படும் சான்றுகளை அத்தாட்சி செய்வதற்காக மின்னணு முறையிலான கையொப்பமிடும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

13. 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம்

பொது மக்களுடன் மிகுந்த தொடர்பு கொண்டுள்ள காரணத்தினால், பதிவுத் துறையில் அதிக அளவில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல் கோரி விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. 2013 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் 12,405 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவை அனைத்திற்கும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

[2014 ஜூலை 30

14. 2014–2015 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டங்கள்

பின்வரும் திட்டங்களுக்கு 2014-2015 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டங்களின்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன:

(1) ரூ.4.95 இலட்சம் செலவில் 161 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு சாய்வு மேசைகள் வழங்குதல்

(2) ரூ.4.25 இலட்சம் செலவில் குடிநீர்க் கருவிகள் வழங்குதல்

(3) ரூ.0.30 இலட்சம் செலவில் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திற்கு கட்டுமம் மற்றும் தாள் வெட்டும் இயந்திரங்கள் வழங்குதல்

(4) ரூ.20 இலட்சம் செலவில் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திற்கு கோப்புகள் வைக்கும் அலமாரிகள் வழங்குதல்

(5) ரூ.24 இலட்சம் செலவில் கைவிரல் ரேகை பதிவுமூலம் வருகையைப் பதிவு செய்யும் கருவிகள் வழங்குதல்.

இணைப்பு-III

(558 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015

முன்னுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திறன்மிகு தலைமையில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் நலன்களைப் பேணிக்காப்பதில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. கல்வி, சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் இவர்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் அவர்களுக்கு பல்வேறு திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும் இவ்வரசு முக்கியத்துவம் அளிக்கிறது. இடஒதுக்கீட்டுக் கொள்கை செயல்படுத்தப்பட்டதன் விளைவாக இம்மக்களின் வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இப்பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகைகள் வழங்குதல், விடுதி வசதிகள் ஏற்படுத்தித் தருதல், பாிசுகள் வழங்குதல், மிதிவண்டிகள் வழங்குதல், பிரமலைக் கள்ளர் இனத்தவர் மேம்பாட்டிற்காக கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்துதல், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலம் சுய தொழில் துவங்க கடனுதவி வழங்குதல், ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்ள நிதி உதவி வழங்குதல், இப்பிரிவு மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக சலவைப் பெட்டிகள், தையல் இயந்திரங்கள் வழங்குதல், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல், உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல், ஹஜ் புனிதப் பயணத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் ஆகிய பல திட்டங்கள் இத்துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[2014 ஜூலை 30

2. இடஒதுக்கீடு

இடஒதுக்கீடு கொள்கையினை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி. மாநிலமாகத் திகழ்கிறது. இவ்விட ஒதுக்கீட்டுக் கொள்கை 1921 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேற்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் என்ற மதிப்பீட்டின் அடிப்படையில், இடஒதுக்கீட்டின் அளவு பெரும்பான்மை மக்களின் தேவைக்கேற்ப படிப்படியாக உயர்ந்து, தற்போது 69 விழுக்காடு இடஒதுக்கீடு தமிழகத்தில் நடைமுறையில் இருந்து வருகிறது. (பிற்படுத்தப்பட்டோர் - 26.5%, பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு முஸ்லிம்கள் - 3.5%, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் 20%, ஆதி திராவிடர் - 18% மற்றும் பழங்குடியினர் - 1%)

இந்திரா சஹானி எதிர் மைய அரசு வழக்கில் (மண்டல் குழு வழக்குகள்) இடஒதுக்கீட்டினை 50 விழுக்காடு என்ற அளவிற்கு கட்டுப்படுத்தி இந்திய உச்சநீதிமன்ற அரசமைப்பு நீதியர் ஆயம் தீர்ப்பு அளித்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்கீழ், 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்தும்பொருட்டு 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு (கல்வி நிலையங்களில் இடங்களையும், மாநில அரசின்கீழ் வரும் பணிகளில் நியமனங்கள் அல்லது இடங்களை ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 45/1994) நிறைவேற்றியது. பின்னர், அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 31-பி-யின்கீழ் பாதுகாப்பு பெறும் பொருட்டு தமிழ்நாடு சட்டம் 45/1994 இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டம் 45/1994-ன் செல்லுந்தன்மையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின்மீது 13-07-2010 அன்று உச்ச நீதிமன்றம் எண்ணிக்கை அடிப்படையிலான விவரங்களை மாநில அரசு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு அளிக்க வேண்டும் என்றும், அவ்விவரங்களின் அடிப்படையில் மாநிலத்தில் உள்ள பல்வேறு பிரிவினருக்கும் வழங்கப்பட வேண்டிய இடஒதுக்கீட்டின் அளவினை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் முடிவு செய்ய வேண்டுமென்றும்

2014 ஜூலை 30]

தீர்ப்பளித்தது. மாநில அரசால் வழங்கப்பட்ட எண்ணிக்கை அடிப்படையிலான விவரங்களை ஆய்வு செய்த தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டின் அளவு சரியென பரிந்துரை அளித்தது.

ஆணையம் அளித்த பரிந்துரையினை அரசு ஏற்றுக் கொண்டு கல்வி நிலையங்களில் மாணவ, மாணவியர் சேர்க்கை மற்றும் மாநில அரசின்கீழ் வரும் பணிகளில் நியமனங்கள் ஆகியவற்றில் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை உறுதி செய்து 11-7-2014 அன்று அரசாணை வெளியிடப்பட்டது ஒரு வரலாற்றுச் சாதனை நிகழ்வாகும்.

3. கல்வி

நலிந்த பிரிவினரை சமூக, பொருளாதார நிலைகளில் ஏற்றம் பெறச் செய்வதற்கு கல்வி ஒரு முக்கியக் கருவி ஆகும். எனவே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் கல்வியில் ஏற்றம்பெற அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மொத்தத் தொகையில் பெருமளவிலான தொகை கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களுக்காகவே செலவிடப்படுகிறது.

இம்மக்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்த இவ்வரசு முனைப்பாக உள்ளது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர்களின் நலனுக்காக அனைத்து மாவட்டங்களிலும் விடுதி வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. ஏழை மாணவ, மாணவியர் கல்வியை தொடர ஏதுவாக பல்வேறு கல்வி உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. மாணவர்களை ஊக்குவிக்கவும், அவர்களிடம் போட்டி மனப்பான்மையை உருவாக்கும் விதத்திலும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. சீருடைகள் மற்றும் மிதிவண்டிகள் விலையேதுமின்றி வழங்கப்படுகின்றன. பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி முன்னேற்றத்திற்காக மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டித்தரும் மிகப் பெரும் திட்டத்தை இவ்வரசு மேற்கொண்டுள்ளது.

[2014 ஜூலை 30

4. கல்வி உதவித் தொகைத் திட்டங்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த ஏழை, எளிய மாணவ, மாணவியர் அவர்களது கல்வியை எவ்விதத் தடையுமின்றித் தொடர, பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் இலவசக் கல்வி ஆகிய மூன்று வகையான கல்வி உதவித் தொகைத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

2013-2014 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

4.1 பள்ளிப் படிப்பு கல்வி உதவித்தொகை

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்விப் பயிலும் மாணவ, மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு உத்தரவிட்டுள்ளதால், இவர்கள் எவ்விதச் சிறப்புக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.

தமிழ்வழிக் கல்வி பயிலும் 10 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலவழிப் படிப்பிற்கான கற்பிப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஈடுசெய்தல்

பிற்படுத்தப்பட்டோர்

பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2,00,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் பட்டதாரி எவருமிருக்கக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை ஆங்கிலவழிக் கல்வி பயிலும்

2014 ஜூலை 30]

பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.20/- வீதம் பத்து மாதங்களுக்கு ரூ.200/- என்ற அளவிலும், 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.25/- வீதம் பத்து மாதங்களுக்கு ரூ.250/- என்ற அளவிலும் வழங்கப்படுகிறது. மேலும் 10 ஆம் வகுப்பில் பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தேர்வுக் கட்டணமும் முழுமையாக ஈடு செய்யப்படுகிறது.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் எவ்வித நிபந்தனையுமின்றி பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் அளவிலேயே வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 1,00,997 மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.256.08 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை			செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
பிவ	மிபிவ/ சீம	மொத்தம்	பிவ	மிபிவ /சீம	மொத்தம்
49,523	51,474	1,00,997	130.85	125.23	256.08

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.158.44 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.129.93 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.288.37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தமிழ் மற்றும் ஆங்கிலவழிக்

[2014 ஜூலை 30

கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு உத்தரவிட்டுள்ளதால், இவர்கள் எவ்விதச் சிறப்புக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. மேலும், தமிழ்வழிக் கல்வி பயிலும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர்

பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2,00,000-க்கு மிகாமல் இருக்கவேண்டும் மற்றும் குடும்பத்தில் பட்டதாரி எவருமிருக்கக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் ஆங்கிலவழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50/- வீதம் 10 மாதங்களுக்கு ரூ.500/- கற்பிப்புக் கட்டணமாக வழங்கப்படுகிறது. மேலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பில் ஆங்கிலவழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தேர்வுக் கட்டணம் முழுமையாக ஈடு செய்யப்படுகிறது.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு ஆங்கிலவழிக் கல்விப் பயிலும் படிப்பிற்கான கற்பிப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படும் கட்டண அளவிலேயே எவ்வித நிபந்தனையுமின்றி வழங்கப்படுகிறது.

2011-2012 ஆம் ஆண்டு வரை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பட்டயப் படிப்பு, பட்டமேற்படிப்பு, தொழிற்பயிற்சிப் படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு பள்ளிமேற்படிப்பு கல்வி

2014 ஜூலை 30]

உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் சிறப்புக் கட்டணம், கற்பிப்புக் கட்டணம், புத்தகக் கட்டணம் ஆகியன கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட அளவிலும், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்பட்டு வந்தது.

இக்கட்டணங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு 2012-2013 ஆம் ஆண்டு முதல் பள்ளிமேற்படிப்பு திட்டத்தின்கீழ் அரசு கல்வி நிலையங்களில் நிர்ணயிக்கும் விகிதத்தில் சிறப்புக் கட்டணம் மற்றும் கற்பிப்புக் கட்டணம் முழுமையாக வழங்கப்படுகிறது. 2013-2014 ஆம் ஆண்டு முதல் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.1,00,000/-லிருந்து ரூ.2,00,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இரண்டாவது முறைமாற்றம் (Shift) மற்றும் மாலை நேர வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 1,89,559 மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.6,045.80 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை			செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
பிவ	மிபிவ/ சீம	மொத்தம்	பிவ	மிபிவ /சீம	மொத்தம்
1,10,161	79,398	1,89,559	3,694.59	2,351.21	6,045.80

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.4,638.16 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.2,848.38 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.7,486.54 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. இலவசக் கல்வி

5.1 பட்டப் படிப்பு

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப் படிப்புப்

[2014 ஜூலை 30

பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையும் இன்றி இலவசக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் சிறப்புக் கட்டணம், திரும்பப்பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவிலும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 1,57,816 மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.2,109.10 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை			செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
பிவ	மிபிவ/ சீம	மொத்தம்	பிவ	மிபிவ /சீம	மொத்தம்
88,479	69,337	1,57,816	1,199.81	909.29	2,109.10

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.1,200 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.915 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.2,115 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.2 பட்டயப் படிப்பு

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnics) பட்டயப் படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியரது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டய / பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவிலும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 18,659 மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.596.06 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2014 ஜூலை 30]

பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை			செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
பிவ	மிபிவ/ சீம	மொத்தம்	பிவ	மிபிவ /சீம	மொத்தம்
10,916	7,743	18,659	364.99	231.07	596.06

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.610.94 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.339.61 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.950.55 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.3 தொழிற்படிப்பு

அரசு கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின்கீழ் ஒற்றைச் சாளர முறையில் தேர்வு செய்யப்பட்டு தொழிற்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியரது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் அவர்களது குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ் கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவிலும், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 1,39,945 மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.7,129.56 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை			செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
பிவ	மிபிவ/ சீம	மொத்தம்	பிவ	மிபிவ/ சீம	மொத்தம்
81,180	58,765	1,39,945	4,355.97	2,773.59	7,129.56

[2014 ஜூலை 30

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.5,167.91 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.3,106.69 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.8,274.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2013-2014 ஆம் ஆண்டு முதல் கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு, கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் தற்போது வழங்கப்படும் உண்டி, உறையுள் கட்டணத்தை தொழிற்கல்வி படிப்புகளுக்கு ரூ.75/- முதல் ரூ.140/- என்பதை ரூ.350/- ஆகவும், ஐடிஐ/பட்டயப் படிப்பு மற்றும் முதுகலைப் படிப்புகளுக்கு ரூ.75/- முதல் ரூ.90/- என்பதை ரூ.225/- ஆகவும், 11, 12 ஆம் வகுப்பு மற்றும் இளங்கலை படிப்புகளுக்கு ரூ.75/- முதல் ரூ.80/- என்பதை ரூ.175/- ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

5. இணையதளம்மூலம் கல்வி உதவித் தொகை ஒப்பளிப்பு செய்தல்

கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகைகள் உரிய காலத்தில் சென்றடைவதை உறுதி செய்யும் வகையிலும், இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்யவும், பணி முன்னேற்றத்தினைத் தொடர்ந்து கண்காணிக்கும்பொருட்டும் மின்னாளுமை திட்டத்தின்கீழ் தேசிய தகவல் தொகுப்பு மையத்தால் மென்பொருள் உருவாக்கப்பட்டு இணையதளம்மூலம் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது (www.escholarship.tn.gov.in). இதன்மூலம் கல்வி உதவித்தொகைக் கேட்புகளை கல்லூரிகள் அனுப்புவதில் தொடங்கி மாணவ, மாணவியருக்கு உதவித்தொகைகள் வழங்கும் வரையிலான விவரங்களை அரசு, இயக்குநரகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இணையதளம் வாயிலாக துல்லியமாக கண்காணிக்கவும், பயன்பெறும் மாணவ, மாணவியர் கல்வி உதவித் தொகை ஒப்பளிப்பு செய்யப்படுவதை அறிந்துகொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், 2013-2014 ஆம் ஆண்டு முதல் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை அவர்களின் வங்கிக் கணக்கிற்கே நேரடியாக மின்னணு பரிமாற்றம் (ECS) மூலம் வழங்கப்படுகிறது.

2014 ஜூலை 30]

7. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத் தொகை வழங்குதல்

கிராமப்புற பகுதிகளில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர்கள் வறுமையின் காரணமாக ஆரம்பப் பள்ளி அளவிலேயே படிப்பை நிறுத்திவிடும் சூழ்நிலையை தவிர்த்திடும்பொருட்டும், இப்பெண் குழந்தைகளிடையே கல்வியை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவியர் ஒவ்வொருவருக்கும் வருடத்திற்கு ரூ.500/- என்ற வீதத்திலும், 6 ஆம் வகுப்பில் பயிலும் மாணவியர் ஒவ்வொருவருக்கும் வருடத்திற்கு ரூ.1,000/- என்ற வீதத்திலும் ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் ரூ7 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. அதிக எண்ணிக்கையில் கிராமப்புற மாணவியர் பயன்பெற ஏதுவாக 2012-2013 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு இருமடங்குக்கும் மேலாக உயர்த்தப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 2,34,828 மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.1,434.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2014-2015 ஆம் ஆண்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.1,434.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. விடுதிகள்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை எவ்வித இடையூறுமின்றி தொடர்வதற்கு ஏதுவாக இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 1,305 விடுதிகள் மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன. இதில், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் 716 விடுதிகளும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின்கீழ் 576 விடுதிகளும் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின்கீழ் 13 விடுதிகளும் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகளில்

[2014 ஜூலை 30

பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.1,00,000-க்கு மிகாமல் உள்ள மாணவ, மாணவியர் சேர அனுமதிக்கப்படுகின்றனர். இவ்விடுதிகளில் 81,164 மாணவ, மாணவியர் எவ்விதக் கட்டணமுமின்றி தங்கிப் படித்துப் பயனடைகின்றனர்.

2011-2012 ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியரின் எண்ணிக்கைக்கு கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகள் தங்கிப் பயிலும் வகையில், ஒவ்வொரு விடுதியிலும் தலா 5 இடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கேரள எல்லையோர பகுதிகளில் உள்ள தோட்டங்களில் பணிபுரியும் கூலித் தொழிலாளர்களது ஏழைக் குழந்தைகளுக்கு விடுதி வசதி அளிப்பதற்காக 2012-2013 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள தோட்டங்களில் பணிபுரிந்து வரும் கூலித் தொழிலாளர்கள் அவர்களது குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு இச்சான்றிதழ்களுக்குப் பதிலாக அவர்களின் பெற்றோர் அளிக்கும் உறுதிமொழியின் அடிப்படையில் விடுதிகளில் சேர்த்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு உணவுச் செலவினத்திற்காக அனுமதிக்கப்பட்ட உணவுக் கட்டணம் 20-09-2011 முதல் பள்ளி விடுதி மாணவருக்கு ரூ.450/-லிருந்து ரூ.650/- ஆகவும் கல்லூரி விடுதி மாணவருக்கு ரூ.550/-லிருந்து ரூ.750/- ஆகவும் உயர்த்தப்பட்டது. இதன் பின்னர் மாணவர்களின் நலன் கருதி மீண்டும் 1-03-2013 முதல் பள்ளி விடுதிகளுக்கான உணவுக் கட்டணம் ரூ.650/-லிருந்து ரூ.755/- ஆகவும் கல்லூரி விடுதிகளுக்கான உணவுக் கட்டணம் ரூ750/-லிருந்து ரூ.875/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல விடுதி மாணவ, மாணவியரின் பல்வகை செலவினங்களுக்காக வழங்கப்பட்டு வந்த பல்வகை செலவினமும் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.25/-லிருந்து ரூ.50/- ஆகவும் கல்லூரி விடுதி மாணவ,

2014 ஜூலை 30]

மாணவியருக்கு ரூ.35/-லிருந்து ரூ.75/- ஆகவும் 1-2-2012 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், 2013-2014 ஆம் ஆண்டு முதல் பண்டிகை நாட்களில் விடுதி மாணவர்களுக்கு சிறப்பு உணவு வழங்க ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட கட்டணம் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு பண்டிகை ஒன்றுக்கு ரூ.2/-லிருந்து ரூ.20/- ஆகவும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.3/-லிருந்து ரூ.40/- ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

2014-2015 ஆம் ஆண்டில் ரூ.2.80 கோடி செலவில் 10 கல்லூரி விடுதிகள் புதிதாகத் தொடங்கப்பட உள்ளன. தற்போது செயல்பட்டுவரும் 10 கல்லூரி விடுதிகளில் ரூ.4.5 கோடி செலவில் கூடுதல் தங்கும் வசதிகள் ஏற்படுத்தப்படும். மேலும், தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 10 கல்லூரி விடுதிகளுக்கு ரூ.16 கோடி செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு ரூ.17,253.73 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.12,267.48 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.9,143.70 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.21,411.18 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8.1 விடுதிகளில் தங்கி 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் எழுதும் மாணவ, மாணவியருக்கு மாநில அளவில் பரிசு வழங்கும் திட்டம்

பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பிற்கான பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியருக்கும், அதேபோன்று மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பிற்கான பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெறும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியருக்கும் 2011-2012 ஆம் ஆண்டு

[2014 ஜூலை 30

முதல் தனித்தனியே கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன:

பரிசு விவரம்	10 ஆம் வகுப்பு	12 ஆம் வகுப்பு
முதல் பரிசு	ரூ.10,000	ரூ.10,000
இரண்டாம் பரிசு	ரூ.7,000	ரூ.7,000
மூன்றாம் பரிசு	ரூ.5,000	ரூ.5,000

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.0.74 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.0.60 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.1.34 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8.2 சிறந்த காப்பாளர்கள்/காப்பாளினிகளுக்கு மாநில அளவிலான விருதுகள் வழங்குதல்

விடுதிகளை நன்முறையில் பராமரிக்கும் காப்பாளர்கள் / காப்பாளினிகளை ஊக்குவிக்கும்பொருட்டு, மாநில அளவில் சிறந்த காப்பாளர்கள்/காப்பாளினிகள் ஆண்டுதோறும் தேர்வு செய்யப்பட்டு முதல் பரிசாக ரூ.5000/- இரண்டாம் பரிசாக ரூ.3,000/- மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.2,000/- வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் ரூ.0.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விடுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள இதர வசதிகள்

1. விடுதிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, விளையாட்டுச் சாதனங்கள், நீர் சுத்திகரிப்புக் கருவி, புத்தக அலமாரிகள், மாவரைக்கும் இயந்திரம், நூலகப் புத்தகங்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி வழங்கப்பட்டுள்ளன. இவற்றுடன் கல்லூரி விடுதிகளுக்கு இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள் இரண்டடுக்கு கட்டில்கள் மற்றும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

2. விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் பொது அறிவினை மேம்படுத்தும்பொருட்டு ஓர் ஆங்கில நாளிதழ் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.

2014 ஜூலை 30]

3. விடுதிகளில் தங்கி நான்கு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு மதிய உணவு திட்டத்தின்கீழ் பயன் பெறும் மாணவ/மாணவியர்களுக்கு வழங்கப்படும் சீருடைகளைப் போன்றே அதே நிறத்தில் அதே எண்ணிக்கையிலான நான்கு இணை சீருடைகள் 2013-2014 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றன.

4. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு பன்னிரண்டாம் வகுப்பு வரை விலையில்லாமல் அனைத்துப் பாடப் புத்தகங்களும் கல்வித் துறைமூலம் வழங்கப்படுகின்றன.

5. விடுதிகளில் தங்கி 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர் அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றிட சிறப்பு வழிகாட்டி நூல்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

6. விடுதிகளில் மாணவ, மாணவியருக்கு பாய், போர்வை, எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வழங்கப்படுகின்றன. இவை தவிர, மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதிகளில் மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடை (உல்லன் ஸ்வெட்டர்) வழங்கப்படுகிறது. மேலும் பள்ளி விடுதி மாணவ, மாணவியர் அனைவருக்கும் ஆங்கிலம்—தமிழ் சொல்லகராதி மற்றும் உலக வரைபட புத்தகம் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

7. விடுதி மாணவ, மாணவியர் அனைவருக்கும் ஆண்டுதோறும் அவர்களின் உடல்நிலையினைக் கண்காணிக்கும்பொருட்டு மூன்று கட்டங்களாக மருத்துவப் பரிசோதனை முகாம்கள் நடத்தப்படுகின்றன.

8. விடுதி மாணவ, மாணவியருக்கு வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேகவைத்த முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாத மாணவ, மாணவியருக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

9. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் வாரத்தில் ஒருநாள் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் வாரத்தில் ஒருநாள் கோழி இறைச்சியும் விடுதி மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுகிறது.

[2014 ஜூலை 30

10. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி/தேநீர் வழங்கப்படுகிறது.

11. 2013-2014 ஆம் ஆண்டில் 642 விடுதிகளுக்கு மின் அரைப்பான் இயந்திரங்கள் ரூ.38.52 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

12. 2013-2014 ஆம் ஆண்டில் 50 விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரங்கள் ரூ.6.25 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

13. 2013-2014 ஆம் ஆண்டில் 476 விடுதிகள் மற்றும் 77 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கும் சுகாதாரக் குட்டை தகளிகள் ரூ.1.39 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

14. 2013-2014 ஆம் ஆண்டில் 300 விடுதிகளுக்கு பல்நோக்கு தீ அணைப்பான் கருவிகள் ரூ.18 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

15. 2013-2014 ஆம் ஆண்டில் 1,294 விடுதிகளுக்கும் இட்லி வேகவைப்பான்கள் ரூ.101 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

16. 2013-2014 ஆம் ஆண்டில் 1,266 விடுதிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் ரூ.39 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

17. 2013-2014 ஆம் ஆண்டில் விடுதிகளில் ஏற்கெனவே அமைந்துள்ள நூலகங்களை வலுப்படுத்தும் வண்ணமாக, 1,110 பள்ளி விடுதிகளுக்கு தலா ரூ.5,000/- மதிப்பில் புதிய புத்தகங்களும், 184 கல்லூரி விடுதிகளுக்கு தலா ரூ.25,000/- மதிப்பில் பார்வைக் குறிப்பு புத்தகங்களும் என மொத்தம் ரூ.101.50 இலட்சம் இத்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ளது.

18. 2013-2014 ஆம் ஆண்டில் 1,266 விடுதிகளில் தங்கிப் பயிலும் 77,264 மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்கு கோரைப் பாய்கள் ரூ46.36 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இவ்விடுதி மாணவ, மாணவியருக்கு கோ-ஆப்டெக்ஸ்மூலம் போர்வைகள் ரூ.1.48 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

19. 2013-2014 ஆம் ஆண்டில் 10 மாணவியர் விடுதிகளுக்கு சுற்றுச் சுவர் கட்ட உத்தரவிடப்பட்டு, பொதுப் பணித் துறையின்மூலம் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2014 ஜூலை 30]

9. விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல்

இத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் புதியதாக திறக்க உத்தரவிடப்பட்ட II விடுதிகளையும் (10 கல்லூரி விடுதிகளும், 1 பள்ளி விடுதியும்) சேர்த்து மொத்தம் 1,305 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 1,028 விடுதிகள் அரசு கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 277 விடுதிகள் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றில் 2013-2014 ஆம் ஆண்டில் கட்டடம் கட்ட உத்தரவிடப்பட்ட 68 விடுதிகளையும் சேர்த்து மொத்தம் 266 விடுதிகளுக்கு பொதுப் பணித் துறைமூலம் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

மேலும், புதிதாகக் கட்டப்பட்டு வரும் விடுதிக் கட்டடங்களில் சூரிய ஒளியின்மூலம் மின்சாரம் தயாரிக்கும் கருவி மற்றும் சூரிய ஒளிமூலம் நீரை சூடாக்கும் கருவி ஆகியன பொருத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் விடுதிகளுக்குக் கட்டடம் கட்ட ரூ.5,664.82 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.4,823.79 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.6,255.49 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.11,079.28 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9.1 விடுதி கட்டடங்களுக்கான பராமரிப்பு

2013-2014 ஆம் ஆண்டில் அரசு கட்டடத்தில் இயங்கிவரும் விடுதிகளின் சிறப்பு பராமரிப்பு செலவிற்காக ஒரு முறை ஒதுக்கீடாக ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு சிறப்பு பராமரிப்புப் பணிகள் பொதுப் பணித் துறையின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

10. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம்

அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் உள்ள பிற்படுத்தப்பட்டோர்,

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.550 வீதம் 10 மாதங்களுக்கு உணவு மானியத் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 1,622 மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.104.57 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை			செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
பிவ	மிபிவ/ சீம	மொத்தம்	பிவ	மிபிவ/ சீம	மொத்தம்
868	754	1,622	56.46	48.11	104.57

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.72.22 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.54.41 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.126.63 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்

பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் நலனில் சிறப்பு கவனம் செலுத்துவதுடன் அவர்களது கல்வி நிலையினை மேம்படுத்தும்பொருட்டு, அவ்வகுப்பினர் பெருமளவில் வாழும் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை இத்துறை நடத்தி வருகிறது. தற்போது 289 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் (212 தொடக்கப் பள்ளிகள், 23 நடுநிலைப் பள்ளிகள், 22 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 32 மேல்நிலைப் பள்ளிகள்) இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் 31,463 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் பொதுப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்குவது போன்று சிறப்பு ஊக்கத் தொகை, விலையில்லா காலணி, மடிக்கணினி, புத்தகப் பை, கணித உபகரணப் பெட்டி (ஜியாமெட்ரி பாக்ஸ்), வண்ணப் பென்சில்கள்

2014 ஜூலை 30]

மற்றும் உலக வரைபடப் புத்தகம் ஆகியன பள்ளிக் கல்வித் துறையின்மூலம் வழங்கப்படுகின்றன.

2011-2012 ஆம் ஆண்டில் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 5 பள்ளிகள் வீதம் 15 ஆரம்பப் பள்ளிகளில் புதியதாக ஆங்கில வழி மழலையர் வகுப்புகள் (LKG) தொடங்கப்பட்டன. தற்போது அப்பள்ளிகளில் UKG வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. இவ்வகுப்புகளில் 166 மாணவர்கள் மற்றும் 173 மாணவிகள் என மொத்தம் 339 மாணவ, மாணவியர் பயின்றுவருகின்றனர்.

2013-2014 ஆம் கல்வியாண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் படித்து தேர்ச்சி அடைந்த மாணவ, மாணவியரின் விழுக்காடு முறையே 84% மற்றும் 86% ஆகும்.

2013-2014 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் செயல்பாட்டிற்காக ரூ.6,081.38 இலட்சம் செலவிடப்பட்டது.

2014-2015 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் செயல்பாட்டிற்கு ரூ.7,833.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11.1 கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் கல்வித் தரத்தினை உயர்த்தும்பொருட்டும், அங்கு பயிலும் மாணவ, மாணவியரிடையே அதிக மதிப்பெண்கள் பெறும் உணர்வினை ஊக்குவிக்கும் நோக்கத்திலும் பரிசுகள் வழங்கும் திட்டம் 1995 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2011-2012 ஆம் கல்வியாண்டு முதல் பரிசுத் தொகை உயர்த்தப்பட்டு 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் முதலாவது மற்றும் இரண்டாவது மதிப்பெண்கள் பெறும் மாணவ / மாணவியருக்கு முறையே ரூ.10,000/- மற்றும் ரூ.7,000/- ஆகவும், மூன்றாவது மதிப்பெண்கள் பெறும் 3 மாணவ / மாணவியருக்கு தலா ரூ.5,000/- ஆகவும் வழங்கப்படுகிறது.

[2014 ஜூலை 30

11.2 அதிக தேர்ச்சி பெறச் செய்யும் அரசு கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்

அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியரை அரசுப் பொதுத் தேர்வில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாக தேர்ச்சி பெறச்செய்யும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ.10,000/- பரிசுத்தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கும் திட்டம் 2011-2012 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

11.3 கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களில் உள்ள பெரும் பழுதுகளை நீக்கிட மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு உயர்த்தி வழங்குதல்

அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களில் உள்ள பெரும் பழுதுகளை நீக்கிடவும் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் 2011-2012 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2013-2014 ஆம் ஆண்டு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் மேம்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டங்கள்

1. 5 அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.145.30 இலட்சம் செலவில் ஆய்வக வசதிகள் அமைத்துத் தர ஆணையிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2. 52 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூ.26 இலட்சம் செலவில் விளையாட்டுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

3. 52 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.10.40 இலட்சம் செலவில் நூலகப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

4. 7 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் (2 - நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 5 - உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும்) ரூ.189.14 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

2014 ஜூலை 30]

5. கள்ளர் சீரமைப்பு கல்வி அலுவலருக்கு ஓட்டுநர் பணியிடத்துடன்கூடிய வாகனம் ரூ.7.97 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது.

12. சீருடைகள் வழங்குதல்

(அ) கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 2013-2014 ஆம் ஆண்டு முதல் சமூகநலத் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் மதிய உணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படுவது போன்று வண்ணம், வடிவமைப்பு கொண்ட நான்கு இணைச் சீருடைகள் சமூக நலத் துறை மூலமாகவே வழங்கப்படுகின்றன.

(ஆ) விடுதிகள்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் சீருடையினை அவர்கள் பள்ளி சீருடைகளாக உபயோகிக்கும் வகையில் சீருடைகளின் வண்ணம் மற்றும் வடிவமைப்பில் மாற்றம் செய்யப்பட்டு நான்கு இணை சீருடைகளாக 2013-2014 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன. சீருடைத் துணிகள் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு சமூக நலத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் மாவட்ட மகளிர் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் மாணவ, மாணவியரின் உடலமைப்பிற்கு ஏற்ப தைத்து வழங்கப்படுகின்றன.

2013-2014 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 19,572 மாணவ, மாணவியருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 13,518 மாணவ, மாணவியருக்கும் ஆக மொத்தம் 33,090 மாணவ, மாணவியருக்கு சீருடைகள் ரூ.388.42 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.245.73 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.174.73 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.420.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2014 ஜூலை 30

13. பரிசுத் திட்டங்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த மாணவ, மாணவியர் அதிக மதிப்பெண்கள் பெறுவதை ஊக்குவிக்கும்பொருட்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில மற்றும் மாவட்ட அளவில் பின்வருமாறு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன:

13.1 மாநில அளவிலான பரிசுகள்

12 ஆம் வகுப்பு

12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் உயர் மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு முதல் பரிசுகள் தலா ரூ.50,000/- என்ற அளவிலும், இதேபோன்று நான்கு இரண்டாம் பரிசுகள் தலா ரூ.30,000/- என்ற அளவிலும், நான்கு மூன்றாம் பரிசுகள் தலா ரூ.20,000/- என்ற அளவிலும் வழங்கப்படுகின்றன.

10 ஆம் வகுப்பு

10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் உயர் மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு முதல் பரிசுகள் தலா ரூ.25,000/- என்ற அளவிலும், இதேபோன்று நான்கு இரண்டாம் பரிசுகள் தலா ரூ.20,000/- என்ற அளவிலும், நான்கு மூன்றாம் பரிசுகள் தலா ரூ.15,000/- என்ற அளவிலும் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 04-7-2014 அன்று 2013-2014 ஆம் கல்வி ஆண்டில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் உயர் மதிப்பெண்கள் பெற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு பரிசுகளை வழங்கினார்கள்.

2014 ஜூலை 30]

13.2 மாவட்ட அளவிலான பரிசுகள்

12 ஆம் வகுப்பு

12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் உயர் மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு முதல் பரிசுகள் தலா ரூ.6,000/- என்ற அளவிலும், இதேபோன்று நான்கு இரண்டாம் பரிசுகள் தலா ரூ.4,000/- என்ற அளவிலும், நான்கு மூன்றாம் பரிசுகள் தலா ரூ.2,000/- என்ற அளவிலும் வழங்கப்படுகின்றன.

10 ஆம் வகுப்பு

10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் உயர் மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு முதல் பரிசுகள் தலா ரூ.3,000/- என்ற அளவிலும், இதேபோன்று நான்கு இரண்டாம் பரிசுகள் தலா ரூ.2,000/- என்ற அளவிலும், நான்கு மூன்றாம் பரிசுகள் தலா ரூ.1,000/- என்ற அளவிலும் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 1,188 மாணவ, மாணவியருக்கு ரூ.39.19 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை			செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
பிவ	மிபிவ/ சீம	மொத்தம்	பிவ	மிபிவ/ சீம	மொத்தம்
643	545	1,188	22.27	16.92	39.19

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.22.51 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.17.60 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.40.11 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2014 ஜூலை 30

14. பேரறிஞர் அண்ணா நினைவு விருது

பேரறிஞர் அண்ணா நினைவு விருது வழங்கும் திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியரை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவில் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதலாவது மற்றும் இரண்டாவது மதிப்பெண்கள் பெற்று தொழிற்படிப்புப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினைச் சார்ந்த 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவிகளுக்கும் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவிகளுக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.10,000/- வீதம் 4/5 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 1,208 மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.120.80 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை			செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
பிவ	மிபிவ/ சீம	மொத்தம்	பிவ	மிபிவ/ சீம	மொத்தம்
610	598	1,208	61.00	59.80	120.80

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.55.60 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.56.60 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.112.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

15. தந்தை பெரியார் நினைவு விருது

தந்தை பெரியார் நினைவு விருது வழங்கும் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப் படிப்பில் சேர்ந்து பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியரில் 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ள பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினைச் சார்ந்த 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவிகளுக்கும்

2014 ஜூலை 30]

மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவிகளுக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.0 000/- வீதம் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 812 மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.81.20 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை			செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
பிவ	மிபிவ/ சீம	மொத்தம்	பிவ	மிபிவ/ சீம	மொத்தம்
420	392	812	42.00	39.20	81.20

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.39.20 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.43.40 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.82.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

18. முதலமைச்சரின் தகுதி பரிசுத் திட்டம்

2012-2013 ஆம் ஆண்டு முதல் 12 ஆம் வகுப்பில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர்களை ஊக்கப்படுத்தும்வகையில் முதலமைச்சரின் தகுதி பரிசுத் திட்டம் என்ற புதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் / சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த முதல் 500 மாணவர்களுக்கும் மற்றும் 500 மாணவியர்களுக்கும் (மொத்தம் 1,000 மாணவ, மாணவியர்கள்) அவர்கள் பட்டப்படிப்பு / பட்டயப் படிப்பு / தொழிற்படிப்பு முடிக்கும் காலம் வரை ஆண்டொன்றுக்கு ரூ.3,000/- வீதம் அதிகபட்சம் 5 ஆண்டுகளுக்கு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக 2013-2014 ஆம் ஆண்டில் ரூ.62.43 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

[2014 ஜூலை 30

2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.89.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17. சிறந்த தனியார் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயில்வதற்கு நிதியுதவி வழங்குதல்

ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுப் பள்ளிகளில் படித்து 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் 10 மாணவ, மாணவியர் (பிற்படுத்தப்பட்டோர் வகுப்புகளிலிருந்து மூன்று மாணவர்கள், மூன்று மாணவிகள் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்புகளிலிருந்து இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவிகள்) தங்கள் விருப்பப்படி தமிழகத்தில் உள்ள சிறந்த தனியார் பள்ளிகளில் மேல்நிலை கல்வி பயில நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு உயரளவாக ரூ.28,000/- வீதம் இரண்டாண்டுகளுக்கு ரூ.56,000/- நிதி உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 599 மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.143.69 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை			செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
பிவ	மிபிவ/ சீம	மொத்தம்	பிவ	மிபிவ/ சீம	மொத்தம்
352	247	599	87.96	55.73	143.69

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.107.52 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.67.20 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.174.72 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

18. மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர்,

2014 ஜூலை 30]

மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள விடுதியில் தங்கியுள்ளோர் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளி மாணவ, மாணவியர் விலையில்லா மிதிவண்டிகள் பெறத் தகுதியற்றவர் ஆவர்.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 4,50,364 மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.15,369.05 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை			செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
பிவ	மிபிவ/ சீம	மொத்தம்	பிவ	மிபிவ/ சீம	மொத்தம்
2,51,875	1,98,489	4,50,364	8,496.53	6,872.52	15,369.05

இத்திட்டத்தின்கீழ் 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.8,397.81 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.6,492.21 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.14,890.02 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2014-2015 ஆம் ஆண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 27-6-2014 அன்று துவங்கப்பட்டது. மாணவ, மாணவியருக்கு கல்வியாண்டின் துவக்கத்திலேயே மிதிவண்டிகள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

18.1 இணையதளம்மூலம் மிதிவண்டிகள் வழங்குதலைக் கண்காணித்தல்

மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் உரிய காலத்தில் வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையிலும், மிதிவண்டிகள் விநியோகம் செய்யப்படாத இனங்களை துரிதப்படுத்தி, மிதிவண்டிகளை உடன் வழங்க ஏதுவாகவும் இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்து அரசு, இயக்குநரகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் துல்லியமாக

[2014 ஜூலை 30

ஆய்வு செய்யும் வகையில் மென்பொருள் உருவாக்கப்பட்டு, மிதிவண்டிகள் விநியோகம் குறித்த விவரங்கள் இணையதளம் (www.agaram.tn.gov.in/freecycles) வாயிலாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

19. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக விலையில்லா தையல் இயந்திரங்கள் மற்றும் விலையில்லா சலவைப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன.

19.1 தையல் இயந்திரங்கள் வழங்குதல்

ஆண்டு வருமானம் கிராமப்புறங்களைப் பொறுத்தவரை ரூ.40,000/-க்கு மிகாமலும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை ரூ.60,000/-க்கு மிகாமலும் இருக்கும் ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன.

2013-2014 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த 1,168 பயனாளிகளுக்கும் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த 1,250 பயனாளிகளுக்கும் ஆக மொத்தம் 2,418 தையல் இயந்திரங்கள் ரூ.82.60 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.40 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.42.80 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.82.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

19.2 சலவைப் பெட்டிகள் வழங்குதல்

ஆண்டு வருமானம் கிராமப்புறங்களைப் பொறுத்தவரை ரூ.40,000/-க்கு மிகாமலும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை ரூ.60,000/-க்கு மிகாமலும் இருக்கும் ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

2014 ஜூலை 30]

சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த விலையில்லா சலவைப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 2,007 பயனாளிகளுக்கு சலவைப் பெட்டிகள் ரூ.85 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

19.3 திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டங்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த இளைஞர்கள் தங்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாகவும், சுயதொழில்மூலம் வருமானம் ஈட்டக்கூடிய வகையில் தங்களது திறனை வளர்த்துக் கொள்ள ஏதுவாகவும் மைய/மாநில அரசுப் பயிற்சி நிறுவனங்கள்மூலம் பல்வேறு வேலைவாய்ப்பு மிக்க பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சிக்கான கட்டணத் தொகை முழுவதையும் அரசே ஏற்கிறது.

2012-2013 ஆம் ஆண்டு முதல் அனைத்து துறைகளின்மூலம் செயல்படுத்தப்படும் திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டங்களை தமிழ்நாடு திறன் மேம்பாட்டு குழுமத்தின்மூலம் செயல்படுத்திட உத்தரவிடப்பட்டு, 2013-2014 ஆம் ஆண்டில் இத்துறையால் ரூ.382.15 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்ட 36 வகையான திறன் வளர்ப்புப் பயிற்சிகளில் சுமார் 2,711 இளைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இத்திட்டத்தின்கீழ் அதிக வேலைவாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய பயிற்சிகளான கனரக வாகனம் ஓட்டுதல், காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரித்தல், ஆடை தயாரித்தல், ஆடை வடிவமைத்தல், மின்தையல் இயந்திரம் இயக்குதல், கணினி தொழில்நுட்பம் போன்ற பல்வேறு தொழில் பிரிவுகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் பயிற்சிபெற பயிற்சியாளர்களின் பெற்றோர் / பாதுகாவலர்களின் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

[2014 ஜூலை 30

19.4 திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டத்தில் பயிற்சி பெறும் பயனாளிகளுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்குதல்

2012-2013 ஆம் ஆண்டு முதல் திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டத்தில் பல்வேறு பயிற்சிகளைப்பெறும் பயனாளிகளுக்கு மாதாந்திர பயிற்சிக்கால உதவித்தொகையாக ரூ.400/- வழங்கிட உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து, 2013-2014 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு பயிற்சிகளைப் பெற்ற 2,711 இளைஞர்களுக்கு ரூ.33.49 இலட்சம் செலவில் மாதாந்திர பயிற்சிக்கால உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

20. வீட்டுமனைகள் வழங்குதல்

ஆண்டு வருமானம் கிராமப்புறங்களைப் பொறுத்தவரை ரூ.40,000/-க்கு மிகாமலும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை ரூ.60,000/-க்கு மிகாமலும் உள்ள வீடற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு வீட்டுமனைகள் விலையேதுமின்றி வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 2,20,296 வீட்டுமனைப் பட்டாக்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 1,407 பயனாளிகளுக்கு ரூ.262.47 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ரூ.200.01 இலட்சமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைக்கு ரூ.100 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.300.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

21. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

1982 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தவரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக இம்மக்கள் சிறு தொழில்கள், வியாபாரம் துவங்க குறைந்த வட்டியில் கடன் உதவி வழங்கி வருகிறது.

2014 ஜூலை 30]

1993-1994 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் முகவராக பணியாற்றி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு கடன் திட்டங்களின்கீழ் கடன் தொகை வழங்க தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் நிதி உதவி செய்து வருகிறது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தனிநபர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு துணை முகவர்களாக செயல்படும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள்/நகர கூட்டுறவு வங்கிகள்/தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள்/தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கழகம் (ஆவின்)/தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி/தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின்மூலம் கடன் தொகை வழங்கி வருகிறது.

1993-1994 ஆம் ஆண்டு முதல் இதுவரை இக்கழகத்திற்கு, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம், ரூ.*35,955.97* இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தந்துள்ளது. இதுவரை *3,55,982* பயனாளிகளுக்கு ரூ.*38,170.41* இலட்சம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்களிப்புடன் வழங்கப்பட்டுள்ளது.

21.1 பொது காலக் கடன் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூபாய் இரண்டு இலட்சம் வரை ஆண்டுக்கு *6* விழுக்காடு வட்டியில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடன் தொகை திரும்பச் செலுத்தும் காலம் *3/5* ஆண்டுகள்.

21.2 பெண்களுக்கான புதிய பொற்காலத் திட்டம்

இத்திட்டம் பெண்களின் சுயசார்பு நிலையினை தொடர்ந்து வலியுறுத்தும் நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூபாய் ஒரு இலட்சம் வரை ஆண்டுக்கு *5* விழுக்காடு வட்டியில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடன் தொகை திரும்பச் செலுத்தும் காலம் *3/5* ஆண்டுகள்.

[2014 ஜூலை 30

21.3 மகிளா சம்ரிதி யோஜனா

தொழில்முனைவோர் மகளிருக்கு சிறு கடன் வழங்கும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுக்களாகவோ சிறுதொழில்/வணிகம் செய்வதற்கு 'சிறுகடன்' வழங்கப்படுகிறது. ஒரு சுய உதவிக் குழுவில் அனுமதிக்கப்படும் அதிகபட்ச உறுப்பினர்கள் எண்ணிக்கை 20. இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.50,000/- கடனுதவி வழங்கப்படுகிறது. கடன் தொகை ஆண்டிற்கு 4 விழுக்காடு வட்டியுடன், 3 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

21.4 சிறு கடன் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் ஆண்கள் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுக்களாகவோ சிறு தொழில்/வணிகம் செய்வதற்கு 'சிறு கடன்' வழங்கப்படுகிறது. ஒரு சுய உதவிக் குழுவில் அனுமதிக்கப்படும் அதிகபட்ச உறுப்பினர்கள் எண்ணிக்கை 20. இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.50,000/- கடனுதவி வழங்கப்படுகிறது. கடன் தொகை ஆண்டிற்கு 5 விழுக்காடு வட்டியுடன், 3 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

21.5 புதிய கடன் திட்டங்கள்

தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் புதிய கடன் திட்டங்களாக 2012-2013 ஆம் ஆண்டு முதல் சிறு விவசாயிகள் மற்றும் காய்கறிகள் பயிரிடுவோருக்கான சிறு கடன் திட்டம், மரபுசார் கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கான சுய தொழில் காலக் கடன் திட்டம், இளம் தொழிற் பட்டதாரிக்கான காலக் கடன் திட்டம், கல்விக் கடன் திட்டம் ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் கடன் திட்டங்களின்கீழ் கடனுதவி பெற நிர்ணயிக்கப்பட்டிருந்த அதிகபட்ச குடும்ப ஆண்டு வருமான வரம்பினை 6-11-2012 முதல் கிராமப்புறங்களில் ரூ.40,000/-லிருந்து ரூ.81,000/- ஆகவும், நகர்ப்புறங்களில் ரூ.55,000/-லிருந்து ரூ.1,03,000/- ஆகவும் உயர்த்தி மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. மாநில

2014 ஜூலை 30]

அரசின் முகவராகச் செயல்படுவதால், இந்நிறுவனம் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி கழகம் நிர்ணயித்துள்ள நிதி பங்களிப்பு முறை, வட்டி விகிதம் மற்றும் ஆண்டு வருமான வரம்பினை பின்பற்றுகிறது.

இந்நிறுவனம் 2013-2014 ஆம் ஆண்டில் மகிளா சம்ரிதி யோஜனா மற்றும் சிறு வணிகக் கடன் திட்டங்களின்கீழ் 24,651 பயனாளிகளுக்கு, ரூ.6,695.34 இலட்சமும், பொதுக் கடன் திட்டத்தின்கீழ், அவின் நிறுவனம்மூலம், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களின் 540 உறுப்பினர்களுக்கு, கறவை மாடுகள் வாங்குவதற்காக, ரூ.153.90 இலட்சமும், இதர சுயதொழில்களுக்கு கூட்டுறவு வங்கிகள்மூலம் 178 பயனாளிகளுக்கு ரூ.94.84 இலட்சமும், மகளிர் புதிய பொற்கால திட்டத்தின்கீழ் 202 பயனாளிகளுக்கு ரூ.100.01 இலட்சமும் ஆக மொத்தம் 25,566 பயனாளிகளுக்கு ரூ7,044.09 இலட்சம் கடன் உதவி வழங்கியுள்ளது.

2014-2015 ஆம் ஆண்டில் சுமார் 30,000 பயனாளிகள், பயனடையும் வகையில் ரூ.55 கோடி அளவில் பல்வேறு கடன் திட்டங்களின்கீழ் கடனுதவி வழங்க இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது. அதற்கேற்றவாறு நிதியுதவி பெறுவதற்கான "ஆண்டு செயலாக்கத் திட்டம்" தயாரிக்கப்பட்டு புதுடில்லியிலுள்ள, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

21.6. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு அலுவலக கட்டடம் கட்டுதல்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு சொந்த அலுவலகக் கட்டடம் கட்ட எழும்பூர் வட்டத்தில், சர்வே எண் 465/10 (பகுதி) பிளாக் எண் 29-ல், மூன்று கிரவுண்ட் மற்றும் 154 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம், நில கிரயமின்றி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு வழங்கப்படும் எனவும், அந்நிலத்தில் ரூ.400 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடம் கட்டப்படும் எனவும் அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து வருவாய் துறையால் மேற்குறிப்பிட்ட நிலத்தை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு மாற்றம் செய்ய அரசாணை வெளியிடப்பட்டது. இதைத்

[2014 ஜூலை 30

தொடர்ந்து இக்கழகத்திற்கு நிலம் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகம், சென்னைமூலம் இந்நிறுவனத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட உள்ளது.

21.7 சிறு, குறு விவசாயிகளுக்கான மானியம் மற்றும் கடன் திட்டம்

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகள் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள மானியத்துடன்கூடிய கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கடன் பெறும் பயனாளிகளை மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்டக் கூர்ந்தாய்வுக் குழு தேர்வு செய்கிறது. தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு கூட்டுறவு வங்கிகள்/ தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் உயர் அளவாக ரூ.1,00,000/- வரை 50 விழுக்காடு மானியத்துடன்கூடிய கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அதிகபட்சம் ரூ.50,000/- அரசு மானியமாக வழங்கப்படுகிறது. இதுவரை 1,136 சிறு, குறு விவசாயிகள் ரூ.552.93 இலட்சம் அரசு மானியமாகப் பெற்று பயனடைந்துள்ளனர்.

22. சீர்மரபினர் நல வாரியம்

சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக அரசு செயல்படுத்தும் பல்வேறு நலத்திட்டங்களின் பயன்கள் அவர்களுக்குச் சென்று சேர்வதை உறுதிசெய்யும் பொருட்டு "சீர்மரபினர் நல வாரியம்" அமைக்கப்பட்டுள்ளது. அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் நல வாரியங்கள்மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு "விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம்" ஆகிய நலத்திட்டங்களின்கீழ் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

31-3-2014 வரை இவ்வாரியத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு ரூ.37.86 இலட்சம் அளவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாரியத்திற்கென இதுவரை ரூ.200 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2014 ஜூலை 30]

சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்

1. விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ்			
	அ)	விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை	ரூ.1,00,000
	ஆ)	விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப	ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை
2.		இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை	ரூ.15,000
3.		ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை	ரூ.2,000
4. கல்வி உதவித்தொகை			
	அ)	10 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு	ரூ.1,000
	ஆ)	10 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு	ரூ.1,000
	இ)	11 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு	ரூ.1,000
	ஈ)	12 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு	ரூ.1,500
	உ)	12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	ரூ.1,500
	ஊ)	(i) முறையான பட்டப் படிப்புக்கு	ரூ.1,500
		(ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப் படிப்பிற்கு	ரூ.1,750
	எ)	(i) முறையான பட்டமேற்படிப்புக்கு	ரூ.2,000
		(ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு	ரூ.3,000
	ஏ)	(i) தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு	ரூ.2,000
		(ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு	ரூ.4,000

[2014 ஜூலை 30

	ஐ)	(i) தொழிற்கல்வி பட்ட மேற் படிப்புக்கு	ரூ.4,000
		(ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்புக்கு	ரூ.6,000
	ஒ)	(i) ஐ.டி.ஐ. அல்லது தொழிற்பயிற்சிப் படிப்புக்கு	ரூ.1,000
		(ii) மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ. அல்லது தொழிற்பயிற்சிப் படிப்புக்கு	ரூ.1,200
5.		திருமண உதவித்தொகை	ரூ.2,000
6. மகப்பேறு உதவித்தொகை			
	அ)	மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் 6 மாதங்களுக்கு	ரூ.6,000
	ஆ)	கருச்சிதைவு கருக்கலைப்பு	ரூ.3,000
7.		மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல்	ரூ.500 வரை
8.		முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும்	ரூ.1,000

23. தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்

நரிக்குறவர்களுக்கு கல்வி, மாற்றுத் தொழில் புரிவதற்கான உதவி மற்றும் அவர்களுக்கு பல்வேறு நல உதவிகள் வழங்குவதற்காகவும், இத்திட்டங்களின் செயலாக்கத்தை கண்காணித்து நரிக்குறவர்களின் மேம்பாட்டினை உறுதி செய்யவும் "தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்" இயங்கி வருகிறது.

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் நல வாரியங்கள்மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு "விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம்" ஆகிய நலத்திட்டங்களின்கீழ் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

நரிக்குறவர்கள் தனியாகவோ, கூட்டாகவோ சுயதொழில் தொடங்கி தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளும்

2014 ஜூலை 30]

வகையில் தனிநபர் தொழில் துவங்குவதற்காக ரூ.7,500/- மானியமாகவும், கூட்டாகத் தொழில் தொடங்குவதற்கு அதிகபட்ச மானியமாக ரூ.1,25,000/- பின்நிகழ்வாக (Back ended subsidy) வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்

1. விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ்			
	அ)	விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை	ரூ.1,00,000
	ஆ)	விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப	ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை
2.		இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை	ரூ.15,000
3.		ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை	ரூ.2,000
4. கல்வி உதவித்தொகை			
	அ)	ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு	ரூ.500
	ஆ)	6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு	ரூ.1,000
	இ)	10 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு	ரூ.1,000
	ஈ)	10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	ரூ.1,000
	உ)	11 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு	ரூ.1,000
	ஊ)	12 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு	ரூ.1,500

	எ)	12 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு	ரூ.1,500
	ஏ)	(i) முறையான பட்டப் படிப்புக்கு	ரூ.1,500
		(ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப் படிப்பிற்கு	ரூ.1,750
	ஐ)	(i) முறையான பட்ட மேற்படிப்புக்கு	ரூ.2,000
		(ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டமேற்படிப்பிற்கு	ரூ.3,000
	ஒ)	(i) தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு	ரூ.2,000
		(ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு	ரூ.4,000
	ஓ)	(i) தொழிற்கல்வி பட்ட மேற் படிப்புக்கு	ரூ.4,000
		(ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்புக்கு	ரூ.6,000
	ஔ)	(i) ஐ.டி.ஐ. அல்லது தொழிற்பயிற்சிப் படிப்புக்கு	ரூ.1,000
		(ii) மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ. அல்லது தொழிற்பயிற்சிப் படிப்புக்கு	ரூ.1,200
5.		திருமண உதவித்தொகை	ரூ.2,000
6.		மகப்பேறு உதவித்தொகை	
	அ)	மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000/– விதம் 6 மாதங்களுக்கு	ரூ.6,000
	ஆ)	கருச்சிதைவு/கருக்கலைப்பு	ரூ.3,000

2014 ஜூலை 30]

7.		மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல்	ரூ.500 வரை
8.		முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும்	ரூ.1,000
9.		தொழில் தொடங்க மானியம்	
	அ)	தனிநபர் தொழில் தொடங்க முழுமானியம்	ரூ.7,500
	ஆ)	குழுவாகத் தொழில் தொடங்க மானியம்	ரூ.10,000 தனிநபருக்கு (அல்லது) ரூ.1,25,000 அதிகபட்–சமாக குழுவிற்கு

31-3-2014 வரை இவ்வாரியத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு ரூ.534.61 இலட்சம் அளவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாரியத்திற்கென இதுவரை ரூ.540 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2014-2015 ஆம் ஆண்டிற்கு ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

24. வன்னியர் பொதுச் சொத்து நல வாரியம்

தமிழகத்தில், வன்னியர் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக, பல வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு, அவற்றை ஒருங்கிணைத்து, அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தின் பலன்கள் முழுவதும் உரியவர்களுக்குச் செல்வதற்கான வழிவகைகளைக் காண்பதற்காக, வன்னியர் பொதுச் சொத்து நல வாரியம் செயல்பட்டு வருகிறது. இதுவரை இம்மாநிலத்தில் 18 மாவட்டங்களில் உள்ள 79 வன்னியர் பொதுச் சொத்துக்கள்/ அறக்கட்டளைகள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

[2014 ஜூலை 30

25. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

இந்திரா சஹானி மற்றும் பிறர் - எதிர் - இந்திய யூனியன் மற்றும் பிறர் (J.T. 1992 (6) SC 273) என்கிற மண்டல் வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கூறு 16(4)ன்கீழ், கூறு 340 உடன் படிக்கப்பட்டு, ஒரு நிலையான அமைப்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு, 15-3-1993 அன்று முதல் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகள் நீதிமுறை-சார்புடைய (quasi-judicial) தன்மை வாய்ந்தது. இவ்வாணையத்தின் செயல் வரம்புகளாவன:—

(i) பிற்படுத்தப்பட்டோர்/மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோருதல் தொடர்பான மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாக சேர்க்கப்பட்டிருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்தான முறையீடுகள் ஆகியவற்றைப் பெற்று, ஆய்வு செய்து மற்றும் அதன்மீது பரிந்துரைகளை ஆணையம் வழங்கும்;

(ii) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்யும்;

(iii) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) மற்றும் இதர பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும், இப்பொருள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் எடுத்துள்ள பல்வேறு முடிவுகளையொட்டியும் ஆணையத்தின் பரிந்துரைகள் அமையவேண்டும்;

(iv) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருள்கள் பிறவற்றையும் ஆய்வு செய்து பரிந்துரை வழங்கும்.

இவ்வாணையம் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்கள் தலைமையில் 8 உறுப்பினர்களுடன் 28-12-2012 முதல் 3 ஆண்டுகள் பதவிக்காலத்துடன் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

2014 ஜூலை 30]

26. சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது

தமிழ்நாட்டில் சமூக நீதிக்காகப் போராடியவர்களை சிறப்பு செய்யும் பொருட்டு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது 1994 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு, 1995 ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படும் ஒருவருக்கு வழங்கப்படுகிறது. இவ்விருது ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ரூ.1 இலட்சம் பொற்கிழியும் கொண்டதாகும். 2013 ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது திருமதி ஈ.வெ.கி. சுலோச்சனா சம்பத் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் 2014-2015 ஆம் ஆண்டில் ரூ.1.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

27. சிறுபான்மையினர் நலன்

சிறுபான்மையின மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. இவ்வரசு இச்சமுதாய மக்களின் பின்தங்கிய நிலைமையை பெரும்பான்மையினருக்கு நிகராக உயர்த்திடும் நோக்கில் பல்வேறு நலத் திட்டங்களை முனைப்போடு செயல்படுத்தி வருகிறது.

28. தனி இட ஒதுக்கீடு

பிற்படுத்தப்பட்டோர் இனத்தவர்களுக்கான 30 விழுக்காடு இட ஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர்களுக்கென 3.5 விழுக்காடு தனி இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

29. கல்வி உதவித்தொகை

அரசு, அரசு உதவிபெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கல்வி நிலையங்களிலும் ஒன்றாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி/ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் கிறிஸ்தவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்தமதத்தினர், பார்சி மற்றும் ஜெய்ன மதங்களைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ/மாணவியர்களுக்கு மைய அரசின் கீழ்க்கண்ட கல்வி உதவித்தொகை திட்டங்களை இவ்வரசு தொடர்ந்து செவ்வனே செயல்படுத்தி வருகிறது:

1. பள்ளிப் படிப்பு கல்வி உதவித் தொகை திட்டம்
2. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டம்
3. தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டம்

[2014 ஜூலை 30

பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு, பள்ளிப் படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்திற்கு ரூ.1 இலட்சத்திற்கு மிகாமலும், பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டத்திற்கு ரூ.2 இலட்சத்திற்கு மிகாமலும், தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டத்திற்கு ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமலும் இருக்கவேண்டும். முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காட்டிற்குக் குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருக்கும் மாணவ/மாணவியர்கள் இத்திட்டங்களின்கீழ் பயன்பெறுவர்.

இத்திட்டங்களின்கீழ் மொத்தப் பயனாளிகளில் 30 விழுக்காடு மாணவியர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்படும்.

29.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை

ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ/மாணவியர்களுக்கு மைய மற்றும் மாநில அரசுகளின் நிதி பங்களிப்புகளுடன் (75:25) இக்கல்வி உதவித் தொகை ஒப்பளிக்கப்படுகிறது.

2014-2015 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மைய அரசின் 100 விழுக்காடு நிதியுதவியுடன் வழங்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயில்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு சேர்க்கை கட்டணம் ரூ.500/- வரையிலும், கற்பிப்புக் கட்டணம் ரூ.3,500/- வரையிலும் வழங்கப்படுகிறது. தவிர, பராமரிப்பு கட்டணமாக, 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு மாதம் ரூ.100/- வீதமும், 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப் பயில்பவர்களுக்கு மாதம் ரூ.600/- வீதமும், ஓர் ஆண்டில் அதிகபட்சமாக 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 4,06,324 மாணவ, மாணவியருக்கு ரூ.61.95 கோடி கல்வி உதவித்தொகை ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டை காட்டிலும் எண்ணிக்கையில் 65,677 அதிகமாகும். மதிப்பில் ரூ.11.33 கோடி அதிகமாகும்.

இத்திட்டத்திற்காக 2014-2015 ஆம் ஆண்டிற்கு ரூ.44.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2014 ஜூலை 30]

29.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை

பதினோராம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு மைய அரசின் 100 விழுக்காடு நிதியுதவியுடன் இக்கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் பாடப் பிரிவிற்கு ஏற்றவாறு சேர்க்கை மற்றும் கற்பிப்புக் கட்டணத்திற்காக ரூ.3,000/- முதல் ரூ.10,000/- வரையிலும், பராமரிப்புக் கட்டணத்திற்காக விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு ரூ.3,800/- முதல் ரூ.12,000/- வரையிலும், விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு ரூ.2,200/- முதல் ரூ.5,500/- வரையிலும் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 55,152 மாணவ, மாணவியருக்கு ரூ.30.57 கோடி கல்வி உதவித்தொகை ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டை காட்டிலும் எண்ணிக்கையில் 11,627 அதிகமாகும். மதிப்பில் 7.41 கோடி ரூபாய் அதிகமாகும்.

இத்திட்டத்திற்காக 2014-2015 ஆம் ஆண்டிற்கு ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

29.3 தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகைத் திட்டம்

தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர்கள் அதிக அளவில் மதிப்பெண்கள் பெற்று கல்வி பயிலுவதை ஊக்குவிக்கும் நோக்கில் மைய அரசின் 100 சதவீத நிதியுதவியுடன் இக்கல்வி உதவித் தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்லூரிகளில் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு அவர்கள் உண்மையிலே செலுத்தும் கல்விக் கட்டணம் அல்லது ரூ.20,000/- இவற்றில் எது குறைவோ அத்தொகை மீள வழங்கப்படும். மேலும், பராமரிப்புக் கட்டணமாக விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.10,000/-மும், விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு ரூ.5,000/-மும் வழங்கப்பட்டு வருகிறது.

[2014 ஜூலை 30

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 4,481 மாணவ, மாணவியருக்கு ரூ.12.08 கோடி கல்வி உதவித்தொகை ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டை காட்டிலும் எண்ணிக்கையில் 582 அதிகமாகும். மதிப்பில் ரூ.1.82 கோடி அதிகமாகும்.

இத்திட்டத்திற்காக 2014-2015 ஆம் ஆண்டிற்கு ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

30. சிறுபான்மையின மாணவியர் விடுதிகள்

சிறுபான்மையினர் வகுப்பைச் சேர்ந்த பள்ளி/கல்லூரிகளில் பயிலும் மாணவியர்கள் பயன்பெறும் வகையில் எவ்வித கட்டணமும் இன்றி உணவு மற்றும் உறைவிட வசதிகளுடன் வேலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், கோயம்புத்தூர், மதுரை, கிருஷ்ணகிரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், சென்னை, கன்னியாகுமரி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 13 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையில் சிறப்பு வழிகாட்டி, கணினிகள், அச்சு இயந்திரங்கள் பாடக்குறிப்பு புத்தகங்கள், நூலக வசதிகள், விளையாட்டுச் சாமான்கள், வண்ணத் தொலைகாட்சிப் பெட்டிகள் மற்றும் சுகாதாரக் குட்டை தகளி ஆகியவை வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரி மாணவியருக்கும் மாதாந்திர உணவுக் கட்டணமாக முறையே ரூ.755/- மற்றும் ரூ.875/- செலவிடப்படுகின்றன.

வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் சிறுபான்மையின மாணவியர் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு ஆணைகள் வழங்கப்பட்டு தகுதி வாய்ந்த நிலங்கள் பொதுப் பணித் துறை வசம் ஒப்படைக்கப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றது.

மேற்கண்ட விடுதிகளின் பராமரிப்புக்காக 2013-2014 ஆம் ஆண்டில் ரூ.121.37 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2014-2015 ஆம் ஆண்டிற்கு ரூ.175.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2014 ஜூலை 30]

31. சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கான பரிசுகள் வழங்கும் திட்டம்

சிறுபான்மையின மாணவ, மாணவியர்களின் கல்வி கற்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் 10 மற்றும் 12 ஆம் வகுப்புக்கான அரசு பொதுத் தேர்வுகளில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவியர்களுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

31.1 மாநில அளவிலான பரிசுகள்

மாநில அளவில், 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் முறையே ரூ.50,000/-, ரூ.30,000/- மற்றும் ரூ.20,000/- வழங்கப்படுகின்றன. 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும ஒரு மாணவிக்கு பரிசுகள் முறையே ரூ.25,000/-, ரூ.20,000/- மற்றும் ரூ.15,000/- வழங்கப்படுகின்றன.

31.2 மாவட்ட அளவிலான பரிசுகள்

மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும், 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் முறையே ரூ.6,000/-, ரூ.4,000/-, ரூ.2,000/- வழங்கப்பட்டு வருகின்றன. அதே போன்று 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் முறையே ரூ.3,000/-, ரூ.2,000/-, ரூ.1,000/- வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் மாவட்ட மற்றும் மாநில அளவில் 448 சிறுபான்மையின மாணவ, மாணவியர்கள் பயனடையும் வகையில் ரூ.14.96 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2014-2015 ஆம் ஆண்டில் ரூ.17.66 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2014 ஜூலை 30

32. உருதுமொழி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான பரிசுத் திட்டம்

மாநில அளவில் உருது மொழியினை முதல் அல்லது இரண்டாம் மொழியாக பயின்று 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில், முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு உருதுமொழி பரிசுகள் முறையே ரூ.3,000/-, ரூ.2,000/- மற்றும் ரூ.1,000/- ஆகவும், 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுத் தொகை முறையே ரூ.2,000/-, ரூ.1,500/- மற்றும் ரூ.1,000/- ஆகவும், 2012-2013 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டு வந்தது. இப்பரிசுத் தொகை 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து 12 ஆம் வகுப்பிற்கு ரூ.15,000/-, ரூ.10,000/- மற்றும் ரூ.5,000/- ஆகவும், 10 ஆம் வகுப்பிற்கு ரூ.10,000/-, ரூ.5,000/- மற்றும் ரூ.3,000/- ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 13 சிறுபான்மையின மாணவ, மாணவியர்கள் பயனடையும் வகையில் ரூ.99,000/- செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2014-2015 ஆம் ஆண்டில் ரூ.0.96 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

33. முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்

இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த ஆதரவற்ற, வயதான முஸ்லிம் விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லிம் மகளிர் ஆகியோர்களுக்கு உதவிடும் வகையில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவரை பதவி வழி தலைவராக கொண்டு மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் நன்கொடைமூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப 2011-2012 ஆம் ஆண்டு வரை 1:1 என்ற விகிதாச்சாரத்தில் ஆண்டொன்றுக்கு ரூ.10 இலட்சம் வரை இணை மானியத்தொகை அரசால் வழங்கப்பட்டு வந்தது. இந்த இணை மானியத்தொகை 2012-2013 ஆம் ஆண்டு முதல் இருமடங்காக உயர்த்தப்பட்டு 1:2 என்ற விகிதாச்சாரத்தில் ஆண்டிற்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

2014 ஜூலை 30]

இத்திட்டத்தின்மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லிம் விதவைகள், மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லிம் மகளிர் ஆகியோர்களுக்கு உதவிடும் வகையில், தையல் பூ-வேலைபாடுகள், காலணிகள், கைவினைப் பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

2013-2014 ஆம் ஆண்டில் அரசின் இணை மானியமாக ரூ.55.06 இலட்சம் இச்சங்கங்களுக்கு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2014-2015 ஆம் ஆண்டில் ரூ.26 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

34. பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம்

சிறுபான்மையினர்களின் மக்கட் தொகைக்கேற்ப பொருளாதார மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களின்கீழ் நியாயமான பங்கு சிறுபான்மையின மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் நம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறுபான்மையின மக்களுக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட சேவைகளின் பயன், வேலைவாய்ப்புகள், கல்வி உதவித்தொகை வழங்குதல், சுய வேலைவாய்ப்புத் திட்டம், தொழில்நுட்பப் பயிற்சிகள்மூலம் திறனை மேம்படுத்துதல், மாநில மற்றும் மைய அரசின்கீழ் வேலைவாய்ப்பு, சிறுபான்மையினர் வசிக்கும் குடிசைப் பகுதிகளின் நிலையை மேம்படச் செய்தல், இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு உதவி வழங்குதல், இனக் கலவரங்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் சீரிய நோக்கங்கள் ஆகும்.

இத்திட்டம் முறையாகச் செயலாக்கப்படுவதைக் கண்காணிக்க மாநில அளவில் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

35. மறுவாழ்வு நிதி உதவித் திட்டம்

இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிறு குற்றங்களுக்காக சிறை சென்று விடுவிக்கப்பட்ட சிறுபான்மையினத்தைச் சார்ந்தவர்கள் சமுதாய நோக்கர்களின்

[2014 ஜூலை 30

பார்வையில் கண்ணியத்துடன் வாழ்க்கை நடத்துவதற்காக சிறு வணிகம் செய்து மறுவாழ்வு பெற நிதி உதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு குடும்பத்திற்கு ரூ.10,000/- வரை நிதி உதவி வழங்கப்படுகிறது.

36. உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியம்

இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள், மதரசாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள்/ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் தர்காக்கள், ஆஷூர்கானாக்கள், அடக்கத்தலங்கள், தைக்காக்கள், முஸ்லிம் அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் பொருளாதாரம் மற்றும் கல்வி நிலைகளில் முன்னேற்றம் அடைவதற்காக உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

31-3-2014 வரை இவ்வாரியத்தில் 13,464 உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாரியத்தின்மூலம் 31-3-2014 வரை 2,254 பயனாளிகளுக்கு ரூ.45.50 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாரியத்தின்மூலம் உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்ட நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன

	வழங்கப்படும் உதவிகள்	உதவித் தொகை (ரூ.)
1.	விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ்	
	(அ) விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை	1,00,000
	(ஆ) விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப	10,000 முதல் 1,00,000 வரை
2.	இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை	15,000
3.	ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை	2,000
4.	கல்வி உதவித்தொகை	
	(அ) 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு	1,000
	(ஆ) 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு	1,000

2014 ஜூலை 30]

	(இ) 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு	1,000
	(ஈ) 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு	1,500
	(உ) 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு	1,500
	(ஊ) முறையான பட்டப் படிப்பு	1,500
	மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப் படிப்பு	1,750
	எ) முறையான பட்ட மேற்படிப்புக்கு	2,000
	மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு	3,000
	ஏ) தொழிற்கல்வி பட்ட படிப்புக்கு (Professional Courses in Under Graduate level)	2,000
	மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட படிப்பு (Professional Courses in Under Graduate level)	4,000
	(ஐ) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு (Professional Courses in Post Graduate level)	4,000
	மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு (Professional Courses in Post Graduate level)	6,000
	(ஒ) ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு	1,000
	மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு	1,200
5.	திருமண உதவித்தொகை	2,000
6.	மகப்பேறு உதவித்தொகை	
	(அ) மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் (6 மாதங்களுக்கு)	6,000
	(ஆ) கருச்சிதைவு/கருக்கலைப்பு	3,000
7.	மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடு செய்தல்	500 (அதிகபட்சம்)
8.	முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும்	1,000

இத்திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டிற்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2014 ஜூலை 30

37. ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கான நிதியுதவி

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறிஸ்துவ பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனிதப் பயணம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் 2011-2012 ஆம் ஆண்டில் இவ்வரசால் துவங்கப்பட்டு ஆண்டிற்கு 500 பயனாளிகளுக்கு தலா ரூ.20,000/- வீதம் ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 891 கிறிஸ்துவர்கள் இப்புனிதப் பயணம் மேற்கொண்டு இதற்கென ரூ.1.78 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2014-2015 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தினை செயல்படுத்திட ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

38. தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், மதவழி மற்றும் மொழிவழி சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும்பொருட்டு அமைக்கப்பட்ட சட்டப்பூர்வமான அமைப்பாகும்.

இந்த ஆணையம் சிறுபான்மையினத்தவரை பாதுகாத்திட இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மாநில அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களின்மூலம் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் செயல்படும் விதத்தை ஆய்வு செய்தல், கண்காணித்தல், சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நலத் திட்டங்கள் குறித்து உரிய கருத்துக்களைத் தெரிவித்தல், மாநிலத்தில் மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதலுக்கான வழிவகைகளை அரசுக்குப் பரிந்துரைத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

தற்போதைய ஆணையம், பேராயர் டாக்டர். எம். பிரகாஷ் அவர்களை தலைவராகக் கொண்டு 6 உறுப்பினர்களுடன் 11-2013 முதல் மூன்றாண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

39. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள இஸ்லாமியர், கிறித்தவர், புத்த மதத்தினர், சீக்கியர், பார்சி மற்றும் ஜெய்ன மதத்தினர்

2014 ஜூலை 30]

ஆகிய மதவழி சிறுபான்மையின மக்கள் சமூக மற்றும் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும்படி பல நலத் திட்டங்களை தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் செயல்படுத்தி வருகின்றது.

இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.5 கோடி மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.2.05 கோடி ஆகும்.

39.1 தனிநபர் கலைக் கடன் திட்டம்

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின மக்கள் தாங்கள் சுயமாக தொழில்/வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும்பொருட்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலம் ரூ.50,000/- வரையில் ஆண்டிற்கு 5 விழுக்காடு என்ற குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்பட்டு வருகிறது. ரூ.50,001/-விருந்து ரூ.10 இலட்சம் வரை ஆண்டிற்கு 6 விழுக்காடு என்ற குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்பட்டு வருகின்றது. இக்கடன்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

சிறுபான்மையினர் ஒன்று சேர்ந்து தொழில் வணிகத் துறையின்மூலம் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அதன்மூலம் ஆட்டோ ரிக்ஷாக்களை வாங்கிட ஆண்டிற்கு 6 விழுக்காடு என்ற வட்டி விகிதத்தில் தாய்கோ வங்கி (TAICO BANK) மூலம் ஆட்டோ கடன் வழங்கப்படுகிறது.

ஆவின் மூலமாக இரண்டு கலப்பினப் பசுக்கள் வாங்குவதற்கு கடனாக ரூ.50,000/- அல்லது இரண்டு உயர்ரக எருமைகள் வாங்குவதற்கு கடனாக ரூ.70,000/- ஆண்டிற்கு 6 விழுக்காடு என்ற வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 650 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.2.59.31 இலட்சம் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

39.2 சுய உதவி குழுக்கள்மூலம் சிறு கடன் திட்டம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம், சுய உதவி குழுக்களில் அங்கத்தினர்களாக உள்ள

[2014 ஜூலை 30

சிறுபான்மையினர் ஆண்/பெண் அங்கத்தினர்களுக்கு பலகாரக்கடை, காலணி விற்பனை செய்தல், சிற்றுண்டி, ஜவுளி வியாபாரம், ஊறுகாய் மற்றும் அப்பளம் தயாரித்து விற்பனை செய்தல், கூடை பின்னுதல் போன்ற சிறு வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தினை உயர்த்திட நபர் ஒருவருக்கு ரூ.50,000/- வரை ஆண்டிற்கு 6 விழுக்காடு என்ற குறைந்த வட்டி விகிதத்தில் கூட்டுறவு வங்கிகள்மூலம் சிறு கடன் வழங்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் 3,649 பயனாளிகளுக்கு சுய உதவிக் குழுக்கள்மூலம் ரூ.906.17 இலட்சம் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

39.3 கல்விக் கடன்

குறுகிய கால உயர்திறன் வளர்ச்சி கல்வி, தொழிற் கல்வி (இளங்கலை/முதுகலை) பட்டப் படிப்பு, வேலைவாய்ப்பு பட்டப்படிப்புகள் பயிலும் சிறுபான்மையின மாணவ/மாணவியர்களுக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.2 இலட்சம் வீதம் 3 விழுக்காடு குறைந்த வட்டி விகிதத்தில் கல்விக் கடன் வழங்கப்படுகிறது.

மேலும், வெளிநாடுகளில் "வெளிநாட்டுக் கல்வி" பயிலும் சிறுபான்மை மாணவ/மாணவியர்களுக்கும் ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.4 இலட்சம் வீதம் 3 விழுக்காடு வட்டியில் கல்விக் கடன் வழங்கப்படுகிறது. அதிகபட்சம் கல்வி பயிலும் காலம் 5 ஆண்டுகளாகும்.

40. தமிழ்நாடு வக்ஃபு வாரியம்

வக்ஃபு சொத்துக்களை சரியான முறையில் பராமரிப்பதற்காகவும், வக்ஃபு தொடர்பான அலுவல்களை நிருவகிப்பதற்காகவும் 1995 ஆம் ஆண்டு வக்ஃபு சட்டம் (மத்திய அரசு சட்டம் 43/1995) இயற்றப்பட்டு 1-1-1996 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தில் உள்ள அறிவுரைகளின்படி தமிழ்நாடு வக்ஃபு வாரியம் அமைக்கப்பட்டு முறையாக 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படுகிறது. தற்போதைய வாரியம் 31-8-2012 முதல் 13 உறுப்பினர்களுடன் திருத்தி அமைக்கப்பட்டது. வாரியம் திரு. அ. தமிழ்மகன் உசேன் அவர்கள் தலைமையில் தற்போது இயங்கி வருகிறது.

2014 ஜூலை 30]

வக்ஃபுகள் மற்றும் வக்ஃபு சொத்துகள் தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஏதுவாக 25 மாவட்டங்களில் சார்பு நீதிமன்றங்கள் வக்ஃப் தீர்ப்பாயங்களாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாட்டில் உள்ள சுமார் 6,700 வக்ஃபு சொத்துக்களை முழுமையாக அளவை செய்து கணக்கிடுவதற்கு நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆணையர் தலைமையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

40.1 நிருவாக மானியம்

வக்ஃபு நிறுவனங்களிலிருந்து சகாயத் தொகையில் பெறப்படும் வருவாயிலிருந்து தமிழ்நாடு வக்ஃபு வாரிய நிருவாகச் செலவுகளை எதிர்கொள்ள இயலாமல் பற்றாக்குறை ஏற்படுகிறது. தமிழக அரசு இப்பற்றாக்குறையை ஈடு செய்ய ஒவ்வொரு ஆண்டும் நிருவாக மானியம் வழங்கி வருகிறது. தமிழக அரசு 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து நிருவாக மானியத்தை ரூ.45 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடியாக உயர்த்தி வழங்கி வருகிறது. 2014-2015 ஆம் ஆண்டிற்கு நிருவாக மானியமாக ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

40.2 உலமா ஓய்வூதியத் திட்டம்

உலமா ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள வக்ஃபு நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற வறிய நிலையில் உள்ள பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இவ்வுலமா ஓய்வூதியத் திட்டம் 1981 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் உலமா ஓய்வூதியம் பெறுவதற்கு 60 வயது நிரம்பிய மற்றும் 20 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் தகுதியுள்ளவர்களாவர். 2010-2011 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தில் பயனாளிகள் எண்ணிக்கை 2,400 ஆக இருந்தது. 2011-2012 ஆம் ஆண்டில் இத்திட்ட பயனாளிகள் எண்ணிக்கை 2,600 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. உலமா ஓய்வூதியத் தொகையும் மாதம் ரூ.750/-லிருந்து மாதம் ரூ.1,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2014-2015 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.312 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2014 ஜூலை 30

40.3 மணவிலக்குப் பெற்ற முஸ்லிம் பெண்களுக்கான வாழ்க்கைச் செலவு

முஸ்லிம் பெண்கள் (மணவிலக்கு உரிமை பாதுகாப்பு) சட்டம், 1986 பிரிவு 4 (2)-ன்படி, மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்களுக்கு நீதிமன்ற தீர்ப்பின்படி தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தால் வாழ்க்கைச் செலவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் வழங்கப்படும் இத்தொகையினை வாரியத்திற்கு மானியமாக அரசு வழங்கி வருகிறது. 2014-2015 ஆம் ஆண்டிற்கு இவ்வகையில் ரூ.1 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

40.4 பெரிய அளவிலான பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு மானியம்

மசூதிகள் மற்றும் தர்காக்கள் பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக தமிழ்நாடு அரசு 2014-2015 ஆம் ஆண்டில் மானியமாக ரூ.60 இலட்சத்தினை தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

40.5 வக்ஃபு நிறுவனங்கள் மேம்பாட்டு நிதி

இவ்வரசு 2012-2013 ஆம் ஆண்டில் புதிதாக "வக்ஃபு நிறுவனங்கள் மேம்பாட்டு நிதி" ஒன்றினை ஆரம்பித்து நன்கொடை வசூலித்து, வக்ஃபு நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டடங்களில் பழுதுகள் நீக்கவும், சீரமைக்கவும் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிதிக்கு அரசின் மானியமாக 2012-2013 ஆம் ஆண்டில் ரூ.3 கோடி வழங்கப்பட்டது.

41. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு

குழுவின் அமைப்பு

ஹஜ் புனிதப் பயணம் சிறப்புடன் அமைய அதற்குத் தேவையான ஏற்பாடுகளை இந்திய ஹஜ் குழு மற்றும் புதுதில்லி, வெளிவிவகாரத் துறை அமைச்சகம் ஆகியவற்றின் வழிகாட்டுதலுடன் சிறப்பாகச் செய்வதற்கும் மற்றும் ஹஜ் பயணிகளின் நலன் குறித்த பணிகளை மேற்கொள்வதற்கும் ஹஜ் குழு சட்டம், 2002 (மத்திய சட்டம் 35/2002)-ன்படி மூன்றாண்டு காலத்திற்கு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மாநில அரசால் அமைக்கப்படுகிறது. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூன்றாண்டு காலத்திற்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படுகிறது. இக்குழு 2012 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28 ஆம் நாளன்று குழுவின்

2014 ஜூலை 30]

செயல் அலுவலர் உள்ளிட்ட 16 உறுப்பினர்களுடன் திருத்தி அமைக்கப்பட்டது. மாநில ஹஜ் குழு திரு. அ. முஹம்மத்ஜான் அவர்கள் தலைமையில் தற்போது இயங்கி வருகிறது.

41.1 குழுவின் பணிகள்

இக்குழுவின் முக்கியப் பணிகள் பின்வருமாறு:

1. தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளிடமிருந்து ஹஜ் பயணத்திற்கான விண்ணப்பங்களைப் பெறுதல், ஹஜ் பயணத்திற்கான நபர்களை கணினி மென்பொருளைப் பயன்படுத்தி குலுக்கல் முறையில் தேர்வு செய்தல்.

2. இந்திய ஹஜ் குழு, மும்பைக்கு செலுத்தவேண்டிய ஹஜ் முன்பணக் கட்டணம், மீதமுள்ள ஹஜ் தொகை, விமானக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் குறித்த அறிவுரைகளை அவ்வப்போது பயணிகளுக்கு அளித்தல்.

3. மக்கா மற்றும் மதீனாவில் இந்திய உதவித் தூதரகத்தின் ஒருங்கிணைப்போடு தகுந்த தங்குமிடங்களை தெரிவு செய்வதற்காக அலுவலர்களை கட்டாயத் தேர்வுக் குழுவில் சவூதி அரேபியாவிற்கு அனுப்புதல்.

4. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹாஜிகள் சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும் காலத்தில், ஹஜ் பயணிகளின் நலன்களைக் கவனிக்கும்பொருட்டு ஹஜ் தொண்டர்களை அனுப்புதல்.

5. ஹஜ் பயணிகளுக்கு கடவுச் சீட்டுகளைப் பெறுவதற்காக மண்டல கடவுச் சீட்டு அலுவலகங்களுடன் தேவைப்படும்போது ஒன்றிணைந்து பணிபுரிதல்.

6. ஒவ்வொரு வருடமும் தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் ஹஜ் வழிகாட்டி நூல்களையும், தமிழ் மொழியில் "ஹஜ்ஜும் உம்ராவும்" என்ற கையேட்டையும் அச்சிட்டு ஹஜ் பயணிகளுக்கு விலையேதுமின்றி வழங்குதல்.

7. சென்னை-ஜித்தா/மதீனா-சென்னைக்கு ஹஜ் விமானங்கள் இயக்கத்தின்போது வெளிமாவட்டப் பயணிகளுக்கு தற்காலிகத் தங்கும் வசதி ஏற்படுத்துதல் மற்றும் தங்குமிடத்திலிருந்து விமான நிலையம் மற்றும் திரும்பி வருவதற்கு போக்குவரத்து வசதி அளித்தல் முதலியன.

8. ஹஜ் பயணத்தின்போது பின்பற்ற வேண்டிய பயண நடைமுறை மற்றும் செயல்முறைகள் குறித்து தேர்ந்தெடுக்கப்பட்ட பயணிகளுக்கு பயிற்றுவிக்க பல்வேறு மாவட்ட/தாலுக்கா தலைமையகங்களில் புத்தறிவுப் பயிற்சி முகாம்களை நடத்துதல்.

9. மூளைக்காய்ச்சல் தடுப்பூசி போடுவதற்கான நிகழ்ச்சிகளை ஹஜ் பயணிகளின் எண்ணிக்கைக்கேற்ப பல்வேறு மாவட்டங்களில் நடத்துதல்.

10. மக்கா மற்றும் மதினா நகரங்களில் ஹஜ் பயணிகளுக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்துதல்.

11. ஹஜ் விமானங்கள் இயக்கம் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் அமைய மத்திய அரசு, மாநில அரசு, இந்திய ஹஜ் குழு, மும்பை முதலான பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களான ஏர் இந்தியா, இந்திய விமானங்களின் ஆணைக் குழு, சுங்கம், குடியேற்றம், விமான போக்குவரத்து பாதுகாப்பு நிறுவனம் ஆகியவற்றுடனும் மற்றும் இதர தொண்டு நிறுவனங்களுடனும் சேவைகளை ஒருங்கிணைத்தல்.

12. ஹஜ் பயணம் தொடர்பான இதர இடைநிகழ்வு பணிகள்.

41.2 குழுவிற்கான நிருவாக மானியம்

ஒவ்வோராண்டும் மாநில ஹஜ் குழுவிற்கு ஆண்டு நிருவாக மானியத்தை தமிழக அரசு வழங்கி வருகிறது. பணியாளர்களுக்கு ஊதியம் அளித்தல், சொத்து வரி, மின்சார செலவினம், குடிநீர் மற்றும் வடிகால் வரி முதலிய நிருவாக செலவினங்களை தமிழக அரசால் அளிக்கப்படும் மானியத்திலிருந்து தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மேற்கொள்கிறது. இவ்வரசு இம்மானியத்தை 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி வழங்கியது. மீண்டும் இம்மானியம் 2013-2014 ஆம் ஆண்டு முதல் ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், 2014-2015 ஆம் ஆண்டிற்காக ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2014 ஜூலை 30]

41.3 ஹஜ் தொண்டர்கள் மற்றும் கட்டடத் தேர்வு குழுவில் அலுவலர்களை அனுப்புவதற்கு மானியத்தை ஒப்பளிப்பு செய்தல்

ஹஜ் பயணிகளுக்கு சேவையாற்ற ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், ஹஜ் பயணிகளுக்கு தங்குமிடங்களை அளிக்க கட்டடங்களைத் தெரிவு செய்ய கட்டடத் தேர்வுக் குழுவில் பிரதிநிதிகளை அனுப்புவதற்குண்டான செலவினத்தை மேற்கொள்ளவும், அரசு, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு மானியங்களை அளிக்கிறது. இத்திட்டத்திற்கென, 2014-2015 ஆம் ஆண்டில் ரூ.10.29 இலட்சத்தை அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2014 ஜூலை 30

பகுதி II திட்டங்கள் 2014–2015

தொகுதி – I

வ. எண்	திட்டப் பணிகளின் விவரம்	2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)
	பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம்	
1.	பழைய வாகனங்களுக்கு மாற்றாக 3 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்களுக்கு 3 புதிய ஈப்புகள் வாங்குதல்	18.00
2.	பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இயக்குநரகங்களுக்கு 2 சுருள் கட்டு இயந்திரங்கள் (Spiral Binding Machines) வாங்குதல்	0.50
3.	பழையப் பாத்திரங்களுக்கு மாற்றாக 500 பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர்/ சிறுபான்மையினர் நல விடுதிகளுக்கு புதிய பாத்திரங்கள் வாங்குதல்	50.00
4.	7 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு நீராவி சமையல் கலன் வழங்குதல்	14.00
	பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம் மொத்தம்	**82.50**

2014 ஜூலை 30]

	மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம்	
1.	7 மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்கு நீராவி சமையல் கலன் வழங்குதல்	14.00
2.	15 பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர்/ சிறுபான்மையினர் நல மாணவியர் விடுதிகளுக்கு கற்றுச் கவர் கட்டுதல்	141.41
3.	இயக்குநரகங்களுக்கு 10 கணினிகள் வாங்குதல்	5.20
4.	67 கல்லூரி விடுதிகளுக்கு இரும்பு பத்தக அலமாரிகள் வழங்குதல்	7.91
5.	5 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணினி மற்றும் உபகரணங்கள் வாங்குதல்	24.00
	மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம் மொத்தம்	192.52
	தமிழ்நாடு வக்ஃபு வாரியம்	
1.	தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு நான்கு மண்டல அலுவலக கட்டடங்கள் கட்டுவதற்கு மானியம்	21.00
2.	தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு தகவல்களை பராமரிப்பதற்காக சர்வர் வாங்குவதற்கு மானியம்	1.50

வ. எண்	திட்டப் பணிகளின் விவரம்	2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்)
3.	தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு 5 கணினிகள் மற்றும் துணைக் கருவிகள் வாங்குவதற்காக மானியம்	2.00
	தமிழ்நாடு வக்ஃபு வாரியம் மொத்தம்	**24.50**
	தமிழ்நாடு மாநில ஹஜ் குழு	
1.	தமிழ்நாடு மாநில ஹஜ் பயணக் குழுவிற்கு 2 மடிக்கணினிகள் வாங்குதல்	0.80
	தமிழ்நாடு ஹஜ் குழு மொத்தம்	**0.80**
	பெரு மொத்தம்	**300.32**

தொகுதி – II

வ. எண்	திட்டப் பணிகளின் விவரம்	2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்)
	பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம்	
1.	அலுவலர்கள்/கண்காணிப்பாளர்களுக்கு நெருங்கிய நண்பர் வட்டத் திட்டத்தின்கீழ் (CUG) 57 செல்லிட தொலைபேசி மற்றும் சிம் கார்டுகள் வழங்குதல்	3.22

2014 ஜூலை 30]

வ. எண்	திட்டப் பணிகளின் விவரம்	2014-2015 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்)
2.	1,304 பிற்படுத்தப்பட்டோர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர்/ சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு தலையணைகள் வழங்குதல்.	162.13
	பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம் மொத்தம்	165.35
	மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம்	
1.	15 கள்ளர் சீரமைப்பு மேனிலைப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அறிமுகப்படுத்துதல்.	75.75
	மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம் மொத்தம்	75.75
	பெரு மொத்தம்	241.10

முடிவுரை

இவ்வரசு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மக்களின் கல்வி, பொருளாதார மற்றும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. இம்மக்களின் மேம்பாட்டிற்காக இவ்வரசு தொடர்ந்து பாடுபடும்.

[2014 ஜூலை 30

இணைப்பு

2014–2015 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

துறை	வருவாய்	மூலதனம்	கடன்	மொத்தம்
தலைமைச் செயலகம்	324.74	--	0.01	324.75
வக்ஃபு மற்றும் ஹஜ் குழு	542.40	--	--	542.40
பிற்படுத்தப்பட்டோர் நலன்	38,024.94	6,238.92	--	44,263.86
மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்	35,917.29	8,725.02	--	44,642.31
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்	83.06	--	--	83.06
மாநில சிறுபான்மையினர் ஆணையம்	40.01	--	--	40.01
சிறுபான்மையினர் நலன்	7,735.34	1,066.02	--	8,801.36
மொத்தம்	**82,667.78**	**16,029.96**	**0.01**	**98,697.75**